உ

श्री गुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्


ஸ்ம்ருதிமுக்தாபலம்

आह्निककाण्डम् - उत्तरभागः - द्रविडानुवादयुतः

மூன்றாவது பாகம்

ஆஹ்நிக காண்டம் உத்தரபாகம்





श्री गुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्

श्री वैद्यनाथदीक्षितविरचितम्

तृतीयो भागः

आह्निककाण्डम् - उत्तरभागः

द्रविडानुवादयुतः

ஸ்ம்ருதி முக்தாபலம்

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் இயற்றியது

மூன்றாவது பாகம்

ஆஹ்நிக காண்டம் உத்தரபாகம்

(தமிழ் உரையுடன்)

தொகுத்தளிப்பவர் :
வைத்ய S.V. *ராதாகிருஷ்ண சாஸ்திரீ*

வெளியிடுபவர் :
வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை
(கும்பகோணம்) சார்பில்
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்
1, சாலைத் தெரு, காஞ்சீபுரம் - 631 502.

கர - 2011

SMRITI MUKTA PHALAM
AHNIKA KANDAM -PART-3
with Tamil Translation

Khara - 2011 - II Edition

Edited by :
Vaidya S.V. Radhakrishna Sastri.
Srirangam

Published on behalf of :
Veda Dharma Sastra Paripalana Sabha
Regd. Office : Kumbakonam

by
Sri Kanchi Kamakoti Peetam,
Srimatam, Samsthanam
1, Salai Street,
Kancheepuram - 631 502.

Lasertypeset & Printed at :
V.K.N. Enterprises
Mylapore, Chennai-4, Cell: 98402 17036

Phone : 044-2722115 e:mail:skmkanci@md3.vsnl.net.in
Fax : 044-27224305, 37290060

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhagavazdpadacharya
Paramaparagatha Moolamnaya Sarvagnapeeta:
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samasthanam
No.1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

मङ्क्त्वा सत्स्मृतिसागरे सुगहने लब्ध्वा वरं मौक्तिकं
श्रुत्यम्बागलभूषणं समतनोत् श्रीवैद्यनाथो महान् ।
भूयस्तद्द्रविडानुवादकनकैस्तन्वन् स्रजं सुन्दरीं
राधाकृष्णसुधीस्सदा विजयतां श्रीचन्द्रमौलीक्षणात् ॥

अक्षैर्मा दीव्येति आम्नायामृताम्बुधिबिन्दुभिः निखिलस्मृतिनिचयेन च प्रभुसम्मिततया, इतिहासपुराणबृन्दमाक्षिकधारया सुहृत्सम्मिततया, काव्यरसानुभूतीक्षुसारवर्षैः कान्तासम्मिततया च प्रतिपादितः धर्मकलापः सूक्ष्मगतिको विलसति । धर्म एव विशिनष्टि समाजं समजात् । मनीषिमनोगोचरस्य तस्य धर्मस्यावगतये परमकारुणिका ऋषयः स्मृतिग्रन्थान् विलिख्य महदुपकारमतानिषुः । धर्मकलापापकलनकलापटौ कलौ मानवानां बोधनाय वैद्यनाथदीक्षिताख्यो विद्वदग्रेगण्यः स्मृतिसागारं निर्मथ्य

पीयूषमाचिन्वन् स्मृतिमुक्ताफलाख्यं ग्रन्थमरीरचत् । सोऽयं ग्रन्थः वर्णाश्रमधर्मकाण्डः, आह्निककाण्डः, आशौचकाण्डः, श्राद्धकाण्डः, तिथिनिर्णयकाण्डः तथा प्रायश्चित्तकाण्डश्चेति काण्डषट्केन निखिलमपि धर्मं प्रतिपादयति । यं वै रक्षसि धर्मं त्वं धृत्या च नियमेन च । स वै राघवशार्दूल धर्मस्त्वामभि-रक्षत्विति श्रीमद्रामायणवचनेन धर्मो रक्षति रक्षित इति सुष्ठु अवगम्यते । लोकानां धारणाद्धर्म इति सार्थाभिधां बिभ्रतो धर्मस्य सेवनं लोकव्यवस्थायाः स्थिरीकरणमिति न संशीतिः । सोऽपि धर्मः अनेन ग्रन्थरत्नेन सुष्ठ्ववगम्यते । तस्यैतस्य ग्रन्थस्य वर्णाश्रमधर्मकाण्डादिः भागशः **वैद्यश्री शिवे. राधाकृष्णशास्त्रिभिः** द्रविडानुवादेन सह परिष्कृत्य वेदधर्मशास्त्रपरिपालनसभाद्वारा प्रकाश्यते इति ज्ञात्वा भृशं मोदामहे । सोऽयं यत्नः श्रीमहात्रिपुरसुन्दर्यम्बा-समेत श्रीचन्द्रमौलीश्वरकृपया सफलो भवत्विति ग्रन्थ-सम्पादकः एवमेव ग्रन्थरत्नानि प्रकाशयन्नैहिकामुष्मिकश्रेयो-विलासैः समेधतामिति प्रकाशने साहाय्यकर्तारश्च समस्त-मङ्गलानि अवाप्नुयुः पठितारश्च धर्मसेवनेन निखिलश्रेयांस्यधि-गच्छन्त्विति चाशास्महे ।

शङ्करसंवत्सरः २५२०

काञ्चीपुरम्

नारायणस्मृतिः ।

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஆந்ஹிக (ஆஹ்நிக) காண்டம்

அறிமுகம்

இரு பிறப்பாளரால் தினந்தோறும் வாழ்நாள் முழுவதும் தேசகால நிலைக் கேற்பவும் அவரவர் நிலைக்கேற்பவும் அவசியம் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள் பலவற்றை ஆஹ்நிக காண்டம் வரிசைப்படுத்தித் தந்துள்ளது. அவரவர் தான் பிறந்த சூழ் நிலைக்கேற்பக் கட்டுபாட்டுடன் வாழ சௌசம் - ஆசௌசம் என்ற நிலைகளையும் தெளிவாக உணர்வது இன்றியமையாதது. மற்ற இரு பிரிவினரைவிட அந்தணரின் வாழ்க்கையை இந்தப் பண்பாட்டிற்கும் கட்டுப்பாட்டிற்கும் சிறிதும் குறையின்றி அமைத்துக் கொள்ளுதல் பெரிதும் எதிர் பார்க்கப்படுகிறது.

இரவு உறக்கத்தில் உடல் தன் நிலையுணர்வை இழக்கிறது. விழித்தெழுந்த அடுத்த கணம் முதல் இரவு மறுபடி உறங்கும்வரை தான் இன்னார் என்ற உணர்வைச் சிறிதும் இழக்காமல் கடமைகளை ஆற்ற நேர்கிறது. மூன்று வர்ணங்களுக்கும் பொதுவானதாயினும் அந்தணர் தான் அந்தணர் என்று வாழ்ந்து காட்டுவது அவச்யமாகிறது. அதனால் ஆஹ்நிக காண்டத்தின் பெரும் பகுதி அந்தணரை முன்னிட்டே அமைந்துள்ளது.

பேராராய்ச்சியுடன் இந்நூலைத் தொகுத்த ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் பெருமானின் நூலமைப்பு தனிச் சிறப்புள்ளது. ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் தன் வழி என்றோ ஸம்பிரதாயமென்றோ வாழ்க்கை முறைகளை அவர் தொகுக்கவில்லை. அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களில் ஒவ்வொரு தலைப்பிலும் காட்டப்பட்டுள்ள முறைகளை ஆராய்ச்சித் தொகுப்பின் ஆதாரமாகக் காட்டி, தன் ஆராய்ச்சியின் முடிவு இது என எதிலும் முனைப்புடன்

கருத்தை இவர் நூல் முழுவதிலும் எந்தச் சிறு விஷயத்திலும் வற்புறுத்தவில்லை. வேறுபட்ட கருத்துகளை முனை மழுங்காமல் அப்படியே கூறி நடைமுறையை நிர்ணயிக்கிற பொறுப்பைச் சிஷ்டர்களிடமும் முன்னோர்களின் வழிமுறைகளிடமும் ஒப்புடைத்துள்ளார். அதனால் ஒவ்வொரு சிறு விஷயத்திலும் பல பெரியோர்களின் கருத்தை அப்படியே எழுதியதால், நூல் மிக விரிவடைந்து விட்டது. 10 வரிகளில் அடங்குகிற விஷயத்திற்கு நூறுயிரம் வரிகள் விளக்கம் தருகிறார். பல்வேறு மஹான்களின் கருத்துகளை அறிந்துகொள்ள இது பெரிதும் உதவுகிறது. நூல் விரிவு பொருட்படுத்தத்தக்கல்ல என்று உணர முடிகிறது.

ஆத்ம சுத்தி பெரும்பாலும் வைதிகமான மந்த்ரங்களின் மூலமே பெற முடியும் என்று முடிவு. ஆதிபௌதிகம், ஆதி தைவிகம், ஆத்யாத்மிகம் என்ற மூன்றும் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் தொடர்வதை உணரமுடிகிறது. ஆதி தைவிகத்தின் உதவியால் ஆத்யாத்மிக ஆதிபௌதிகங்களின் மேன்மை உறுதிப்படுகிறது. ஆஹ்நிகப் பணியில் ப்ரஹ்ம முகூர்த்தம் என்ற தெய்விக நேரத்தில் விழித்ததும் வலது உள்ளங்கை பார்த்தல், சிரஞ்ஜீவிகளை - தெய்விகப் பிறவிகளை நினைத்து மனத்தால் வணங்குதல் என்று தொடங்கி இறைவனின் பல்வேறு நிலைகளை நினைத்து அவற்றின் உதவியால் தனது அன்றைய வாழ்வு நலமாக முடிந்தது என்று நினைவுடன் உறங்கச் சொல்கிறோம்.

ஒவ்வொரு கணமும் தெய்விக சக்திமிக்க மந்த்ரங்களும் தெய்வ உணர்வுமிக்க வாக்கு மனம் உடல் என மூன்றால் நலன் தரும் செயல்களும் வாழ்வின் உயர்விற்கு உதவுகின்றன. ஓம் சிவ சங்கர நாராயண தாயே என உள்ளத்தால் மட்டுமே உணரக் கூடிய தெய்வத்தை ஒவ்வொரு கணமும் உணர்கிறோம். இச்சொற்களே அவற்றிற்கேற்ற தெய்விக ஒழுங்கு முறையுடன் உச்சரிக்க அது மந்த்ரமாகிறது. அந்த மந்த்ரமும் தெய்விக உணர்வு

மிக்க ருஷிகள் என்ற பெரியோர்களால் ஜ்ஞானக் கண்களால் அவர்கள் கண்ட தெய்வத்தின் உருவமாகக் காணப்பட்டது.

மந்த்ரத்தைச் சொல்ல ஒருமுறை உண்டு. மந்த்ரத்தைப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். மந்திரம் நம்மளவில் எழுத்து - சொல் வடிவம். ஆனுல் அதன் உண்மை நிலே ஒலி வடிவம். ஒலியை நமக்கு உருவகப்படுத்துவது அக்ஷரம். (எழுத்து). ஒவ்வொரு அக்ஷரமும் ஒலிவடிவிலும் ஒளி வடிவிலும் த்யானிக்கிற வழக்கில் ध्यायेत् தியானிக்க வேண்டும் என்று கூறுவர். அதனே ध्यायामि என்று சொல்வது உசிதம். அதனுல் ध्यायामि த்யானிக்கிறேன் எனச் சொல்வதும் குறையுள்ளதே. தியானம் என்பது செயலல்ல. உள்ளத்தில் உருவகப்படுத்தியதன் அநுபவம். இதற்குச் சொல்லேது? शुक्लाम्बरधरं विष्णुं - प्रसन्नवदनं ध्यायेत् என்றே தலேயில் குட்டிக்கொள்வர். தியானிக்க வேண்டும் என யாரைத் தூண்டுவது? தானே தனக்கு உணர்த்துவது பயனற்றது. வெண்ணிற ஆடையுடுத்திய எங்கும் நீக்கமற நிரம்பிய பெருமானே அனுபவிக்கும் உணர்வு தியாயேத் என்ற சொல்லில் இல்லே. वन्दे எனச் சிலர் மாற்றிக் கூறுவர். நமஸ்காரம் செய்ய வேண்டுமே தவிர, நமஸ்கரிக்கிறேன் என்று வாயால் சொல்வதும் பகட்டே தவிர உளமார்ந்ததல்ல. ஆஹ்நிகத்தில் சொல்லப்பட்ட மந்திரங்கள் அனேத்தையும் உணர்ந்து உள்ளமாற அதாகவே ஆகிய அநுபவ அளவிற்குக் கொண்டுவர வேண்டியதவசியம். அதுவே பண்படுத்தலாகும்.

மந்திரங்கள் நம் நிலேக்குக் கிட்டியது அதனே முதல் ஞானதிருஷ்டியால் கண்டுபிடித்த ருஷிகளின் அருள். அந்த மந்திரத்தின் உச்சரிப்பு சந்தஸ் என்ற சொற்கட்டிற்கு உட்பட்டது. ஒவ்வோர் எழுத்தும் முழு மந்திரமும் அது உணர்த்துகிற தேவதையின் வடிவம். அதனுல் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ருஷி, சந்தஸ், தேவதை அதற்கான பீஜம்,

சக்தி, ஹ்ருதயம் கீலகம் என்ற பல நிலைகள் இவற்றை உருவகப்படுத்தி நினைவில் வைத்துக் கொள்வது அவச்யமாகிறது. அதற்கான செயல்முறையை ந்யாஸம் என்பர். ருஷி நியாஸம், சந்தஸ் நியாஸம் தேவதா நியாஸம் என்றவாறு உடலின் பகுதிகளைத் தொடுவர். ருஷி - குருவானதால் சிரஸில், சந்தஸ் - மொழியானதால் வாயில், தேவதை த்யானிக்கப்படுவதால் உள்ளத்தின் இடமான இதயத்தில் தொட்டு அனுபவிப்பர். இதனையே விரிவு படுத்தும் போது மந்திரத்தை ஜபம் செய்வதை எண்ணப் பயன்படுகிற விரல்களில் கர நியாஸம், தியானிக்கிற வடிவாகவே தன் உடலும் ஆனதை உணர அங்க நியாஸம், அவ்வுணர்வு த்யான காலத்தில் தன்னைவிட்டு வெளியேறுதிருக்க திக்பந்தம், தியானத்திலிருந்து விடுபட்டு வெளி உலகின் உணர்வு துலங்க திக்விமோகம் என்று நியாஸங்கள் விரிவடையும்.

ஒவ்வொரு மந்திரத்திற்கும் இத்தனையும் என்ற நம் ஆர்வம் அக்கரை ஈடுபாடு இதுவே வாழ்வின் இலட்சியம் என்ற தேர்வு இவை வளர இவ்வனுபவம் பேராநந்தம் தரும். இதற்கான வழியையே ஆஹ்நிக காண்டம் பல வாறு விளக்குகிறது. எல்லா மந்திரங்களும் இந்த நியாஸ முறை கொண்டவையே. ஸந்த்யா வந்தனம், காயத்ரீ ஜபம் தேவதாவந்தனம் என்ற மூன்று பகுதிகளில் காயத்ரிக்கு மட்டும் விரிவின்றி மிக சுருக்கமாகச் சில ந்யாஸங்கள் மட்டும் இன்று நடைமுறையிலுள்ளன என்பது வருந்தத்தக்கதே. பொருளை உணராமல் மந்திரம் தியானத்திற்குப் பயன்படாது. உடற் செயலாலோ வாக்காலோ மட்டும் மந்திர விதானம் பலன் தருவதல்ல. மந்திரத்தின் மூலம் வெளிப்படுகிற ஆதி தைவிக சக்தியை ஆத்ம சக்தியாக உணர்கிற அநுபவமே இவற்றின் குறிக்கோள். அதனால் மந்திரத்தின் ஒவ்வொரு அக்ஷரத்திலுள்ள தேவதா சக்தியை உணரவே ஹோமம், பிரும்ம யஜ்ஞம், தேவ ரிஷி பித்ரு தர்பணம், வைச்வ தேவம், பஞ்ச மஹாயஜ்ஞங்கள், தேவதா பூஜை, அதிதி

ஸத்காரம், பிராம்ஹண போஜநம் என்று பல சடங்குகள் தேவைப்படுகின்றன.

இவற்றிற்கான தகுதி பெற வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு கணமும் பயன்பாட்டிற்கு உகந்ததே. முன்னோர்கள் நன்கொடையாகவும் உரிமைப் பொருளாகவும் மனமுவந்து அக்கரையுடன் நம்மிடம் அளித்த தாயம் என்ற சொத்தே ஸம்-ப்ர-தாயம் ஆக நம்வரை வந்துள்ளது. அததனைச் சிதற விடாமல் நாமும் பயன்படுத்தி நம் ஸந்ததியினரிடம் அதே அக்கரையுடன் அளிக்க வேண்டியதே இந்த தார்மிக வாழ்க்கைமுறை எனும் சிஷ்ட ஸம்ப்ரதாயம். ஆஹ்நிக காண்டத்தின் கடைசியில் அனுபந்தமாக இணைக்கப்பட்டுள்ள பகுதி, நீதி சாஸ்திரம் எனத் தனித்துக் கற்றுப் பழகக் கூடியது. மிக அரிய எங்கும் காணக் கிடைக்காத நீதித் தொகுப்பு. (அறத்துப்பால்).

இதனை ஒவ்வொரு கோணத்திலும் ஆராய்ந்து விளக்கம் தந்த ஸ்ம்ருதி முக்தாபலத்தின் ஆசிரியர் பிரும்மஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் பலகோடி வணக்கத்திற்கும் நன்றியுரைக்கும் உரித்தானவர். அதனைத் தமிழாக்கித் தந்த உரையாசிரியர், அதனை வெளியிடுகிற வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபையோர், இவர்களும் நம் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவராவர். இவ்வரிய நூலை நமக்கும் நம் பிற்கால ஸந்தயினருக்கும் வழி காட்டியாக அளிக்க முன்வந்த ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய பரம பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதீ ஸ்ரீ சரணர்களுக்கும் பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதீ ஸ்ரீ சரணர்களுக்கும் நம் அனைவரின் அனந்த கோடி நமஸ்காரங்களை ஸமர்ப்பித்து இவனுக்கு இதற்கான அரிய வாய்ப்பையும் தகுதியையும் தம் அருளால் வழங்கியதற்கு அனந்தகோடி நமஸ்காரங்களை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம்

23.2.2011 வைத்ய S.V.ராதாகிருஷ்ண சாஸ்திரீ

உ

आह्निककाण्डः - उत्तरभागः

ஆஹ்நிக காண்டம் - உத்தர பாகம்

विषयानुक्रमणिका - பொருடளக்கம்.

गुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्

आह्निककाण्डः

ஸ்ம்ருதிமுக்தாபலம்

ஆஹ்னிக காண்டம்

उत्तरभागः

(உத்தர பாகம்)

गायत्रीजप विधिः

तत्र मनुः - आचम्य प्रयतो नित्यमुभे सन्ध्ये समाहितः । शुचौ देशे जपन् जप्यमुपासीत यथाविधीति ।। शङ्खः – कुशबृस्यामासीनः कुशोत्तरायां वा कुशपवित्रपाणिरुदङ्मुखः सूर्याभिमुखो वा मालामादाय देवतां ध्यायन् मन्त्रजपं कुर्यादिति ।।

காயத்ரீ ஜபவிதி

மனு:- ஆசமனம் செய்து, சுத்தனாய், கவனமுள்ளவனாய், இரண்டு ஸந்த்யா காலங்களிலும், சுத்தமான ஸ்தலத்தில் ஜபிக்க வேண்டிய மந்த்ரத்தை ஜபிப்பவனாய், விதிப்படி நித்யமும் உபாஸிக்க வேண்டும். சங்கர்:- குசாஸனத்திலாவது, குசத்தைப் பரப்பியுள்ள பூமியிலாவது உட்கார்ந்து, குச பவித்ரத்தைக் கையில் தரித்து, வடக்கு நோக்கி, அல்லது ஸூர்யனை நோக்கி, ஜபமாலையை எடுத்துக் கொண்டு, தேவதையை த்யானித்து மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும்.

मन्त्रजपशब्दयोर्निर्वचनमुक्तं स्मृतिरत्ने – मकारं मन इत्याहुस्त्रकारं त्राणमेव च । मनस्त्राणसमायुक्तो मन्त्र इत्यभिधीयते ।। जकारो जन्मविच्छेदः पकारः पापनाशनः । जन्मकर्महरो यस्मात् तस्माज्जप इति स्मृतः इति ।। आसीन इति वचनं सायं मध्यन्दिनजपविषयम् । तथा च मनुः – पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठेत् सावित्रीमार्कदशनात् । पश्चिमां तु समासीनः सम्यगार्क्षविभावना-दिति । आर्क्षविभावनात् इति पदच्छेदः । आनक्षत्रदर्शनादित्यर्थः ।। स एव – पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठन् नैशमेनो व्यपोहति । पश्चिमां तु समासीनो मलं हन्ति दिवाकृतमिति च ।।

மந்த்ரம், ஜபம் என்ற பதங்களின் பொருள் சொல்லப்பட்டுள்ளது ஸ்ம்ருதிரத்னத்தில்:- 'ம' என்பது மனதையும் 'த்ர' என்பது காப்பாற்றுதலையும் சொல்லும். மனதைக் காப்பாற்றுவதால் 'மந்த்ரம்' எனப்படுகிறது. 'ஜ' ஜன்மத்தைப் போக்குவது 'ப' பாபத்தை போக்குவது. ஜன்மம், கர்மம் இவைகளைப் போக்குவதால் ஜபம் எனப்படுகிறது. சங்கவசனத்தில்:- ஆஸீந: என்பது, மாலையிலும், மத்யாஹ்னத்திலும் செய்யும் ஜபத்தைப் பற்றியது. அவ்விதமே மனு சொல்கிறார் - 'காலை ஸந்த்யையில் ஸுர்யோதயம் வரையில் காயத்ரியை ஜபித்துக் கொண்டு நிற்க வேண்டும். மாலை ஸந்த்யையில் காயத்ரியை ஜபித்துக் கொண்டு நன்றாய் நக்ஷத்ரங்கள் தெரியும் வரையில் உட்கார்ந்திருக்க வேண்டும்' என்று. மனுவே:- ப்ராதஸ் ஸந்த்யையில் நின்று கொண்டு ஜபிப்பவன் ராத்ரியில் செய்த பாபத்தைப் போக்குகிறான். ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்து ஜபிப்பவன் பகலில் செய்த பாபத்தைப் போக்குகிறான்.

स्थानासनयोरकरणे प्रत्यवायमाह स एव – न तिष्ठति तु यः पूर्वा मुपास्ते न तु पश्चिमाम् । स शूद्रवद्बहिष्कार्यः सर्वस्माद्द्विजकर्मण इति ।। माधवीये – तथा मध्यमसन्ध्यायामासीनः प्राङ्मुखो जपेत् । स्थितो

जपेत् सदाकालमादित्याभिमुखो द्विजः इति ।। आदित्याभिमुखश्चेत् सदा प्रातर्मध्याह्ने च स्थित एव जपेदित्यर्थः ।। याज्ञवल्क्यः – जपन्नासीत सावित्रीं प्रत्यगातारकोदयात् । सन्ध्यां प्राक् प्रातरेवं हि तिष्ठेदासूर्यदर्शनादिति ।।

காலையில் நிற்காமலும், மாலையில் உட்காராமலும் ஜபம் செய்வதில் தோஷம் சொல்கிறார் **மனுவே:-** *ப்ராதஸ் ஸந்த்யையில் நின்று கொண்டும், ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்து கொண்டும் ஜபிக்காதவன் எவனோ, அவனை, ப்ராம்ஹண கர்மங்கள் எல்லாவற்றினின்றும் வெளிப்படுத்த வேண்டும்.* **மாதவீயத்தில்:-** *மத்யாஹ்ன ஸந்த்யையில் கிழக்கு நோக்கி உட்கார்ந்தவனாய் ஜபிக்க வேண்டும். ஸூர்யனை நோக்கியவனாய் ஜபித்தால், காலையிலும் மத்யாஹ்னத்திலும், நின்று கொண்டே ஜபிக்க வேண்டும் என்று பொருள்.* **யாக்ஞவல்க்யர்:-** *ஸாயங்காலத்தில் மேற்கு முகமாய், நக்ஷத்ரோதயம் வரையில் காயத்ரியை ஜபிப்பவனாய் உட்கார்ந்திருக்க வேண்டும். காலையில் கிழக்கு முகமாய் ஜபிப்பவனாய், ஸூர்யோதயம் வரையில் நிற்க வேண்டும்.*

शौनकोऽपि–ऋष्यादीनि च संस्मृत्य सायमासीत वाग्यतः । प्रातस्तु प्राङ्मुखस्तिष्ठेत् मध्याह्ने सूर्यदिक्स्थितः इति ।। गौतमः – तिष्ठेत्पूर्वामासीतोत्तरां सज्योतिष्याज्योतिषो दर्शनाद्वाग्यत इति ।। यस्त्वापस्तम्बेनोक्तं – सन्ध्ययोश्च बहिर्ग्रामादासनं वाग्यतश्चेति, तत्र आसनं स्थितेरप्युपलक्षणम् । वाग्यमनं च लौकिक वाङ्नियमनम् । अन्यथा मन्वादिबहुस्मृतिव्याकोपप्रसङ्गात् । मन्वादिस्मृतिषु विहितस्य स्थानस्य प्रकरणात् ब्रह्मचारिविषयत्वकल्पने ब्रह्मचारिण-मनधिकृत्य द्विजमात्रमधिकृत्य प्रवृत्तानां स्थानासनविशिष्ट जपविधायकश्रुतिस्मृतीनामनन्वयप्रसङ्गः ।।

சௌனகரும்:- ருஷி முதலியதை அனுஸந்தித்து ஸாயங்காலத்தில் மௌனியாய் உட்கார்ந்திருக்க வேண்டும். காலையில் கிழக்கு முகமாய் நின்று கொண்டிருக்க வேண்டும். மத்யாஹ்னத்தில் ஸூர்யனிருக்கும் திக்கை நோக்கியவனுய் நின்றிருக்க வேண்டும். **கௌதமர்:-** ப்ராதஸ் ஸந்த்யையில் மௌனியாய் ஸூர்யோதயம் வரையில் நிற்க வேண்டும். ஸாயம் ஸந்த்யையில் மௌனியாய் நக்ஷத்ரம் காணப்படும் வரையில் உட்கார்ந்திருக்க வேண்டும். **ஆபஸ்தம்பர்:-** இரண்டு ஸந்த்யைகளிலும் க்ராமத்திற்கு வெளியில் உட்கார்ந்திருக்க வேண்டும். மௌனியாய் இருக்க வேண்டும் என்கிறுர் எனில், இவர் வசனத்திலுள்ள 'ஆஸநம்' என்ற பதம் உட்காருவது என்பதைச் சொல்வதாயினும், நிற்பதையும் சொல்வதாகும். மௌனமென்பது லௌகிக வார்த்தைகளை நிவர்த்திப்பது என்பதாகும். இவ்விதம் சொல்லாவிடில் மனு முதலியவரின் அநேக ஸ்ம்ருதிகளுக்கு விரோதம் நேரிடும். மன்வாதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்படும் ஸ்தானத்திற்கு (நிற்பது என்பது) ப்ரகாரண பலத்தால், ப்ரம்ஹசாரி விஷயத்வத்தைக் கற்பிப்பிக்கலாமெனில், ப்ரம்ஹ சாரிகளைப் பற்றி இல்லாமல், பொதுவாய் ப்ராம்ஹணர்களைக் குறித்து ப்ரவர்த்தி உள்ளதும், நின்றும், உட்கார்ந்தும் ஜபத்தை விதிப்பதுமான ச்ருதி ஸ்ம்ருதி வசனங்களுக்குப் பொருத்தமில்லாமை இருக்க நேரும்.

तथा छान्दोग्ये श्रूयते – कस्माद् ब्राह्मणः सायमासीनः सन्ध्यामुपास्ते कस्मात् प्रातस्तिष्ठन् यत्सायमासीनः सन्ध्यामुपास्ते तया वीरस्थानं जयति यत्प्रातस्तिष्ठन् तया स्वर्गं लोकं जयति इति। अखण्डादर्शे – वाग्यतः प्राङ्मुखस्तिष्ठेद्गायत्र्या जपमाचरन् इति ॥ योगयाज्ञवल्क्योऽपि – प्रातस्तिष्ठन् द्विजः सन्ध्याजपं कुर्यात् इति। मनुरपि – उत्थायावश्यकं कृत्वा कृत्वा शौचं समाहितः। पूर्वां सन्ध्यां जपेत् तिष्ठन् स्वकाले चापराह्निकमिति। अत्र सर्वत्र तिष्ठन् जपेदिति

व्यत्ययेनान्वयः । जपस्यैव प्रधानत्वात् तदङ्गत्वात् स्थानासनयोरिति चन्द्रिकायां व्याख्यातम् ॥ अत एव - शङ्खः – पूर्वां सन्ध्यां जपेत्तिष्ठन् आसीनः पश्चिमां तथा इति ।

அவ்விதமே சாந்தோக்ய ச்ருதியில்:- *ப்ராம்ஹணன், ஏன் மாலையில் உட்கார்ந்தவனுயும், காலையில் நின்றவனுயும் ஸந்த்யோபாஸனம் செய்கிறுன்? (இதற்கு உத்தரம்) ஸாயங்காலத்தில் உட்கார்ந்து ஸந்த்யையை உபாஸிப்பதால் வீரஸ்தானத்தை ஜயிக்கிறுன். காலையில் நின்று கொண்டு உபாஸிப்பதால் ஸ்வர்க்கலோகத்தை ஜயிக்கிறுன்.* **அகண்டாதர்சத்தில்:-** *காயத்ரியை ஜபிப்பவன் கிழக்கு முகமாய் மௌனியாய் நின்று கொண்டிருக்க வேண்டும்.* **யோகயாக்ஞவல்க்யர்:-** *ப்ராம்ஹணன் காலையில் நின்றவனுய் ஸந்த்யாஜபம் செய்ய வேண்டும்.* **மனு:-** *உஷ:காலத்திலெழுந்து, ஆவச்யகமான மல மூத்ர விஸர்ஜனம் செய்து, சௌசமும் செய்து, கவனமுள்ளவனுய், நின்று கொண்டு காலையில் காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். மாலையிலும் உரியகாலத்தில் ஸந்த்யா ஜபம் செய்ய வேண்டும். இங்கு முன் சொல்லிய எல்லா வசனங்களிலும் 'ஜபிப்பவனுய் நிற்க வேண்டும்' என்றிருப்பதை 'நின்றவனுய் ஜபிக்க வேண்டும்' என்று மாற்றிச் சொல்ல வேண்டும். ஜபம் ப்ரதானமானதால், நிற்பதும் உட்காருவதும் ஜபத்திற்கு அங்கமானதால், என்று சந்த்ரிகை என்னும் க்ரந்தத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது. ஆகையால்தான்.* **சங்கர்:-** *ப்ராதஸ் ஸந்த்யையில் நின்றவனுய் ஜபிக்க வேண்டும். ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்தவனுய் ஜபிக்க வேண்டும் என்றுர்.*

गृह्यपरिशिष्टेऽपि – देवीमावाह्य तिष्ठन्नर्धनक्षत्रेष्वामण्डल-दर्शनान्मन्त्रार्थमनुसन्दधानः प्रणवव्याहृतिपूर्विकां सावित्रीं जपेदिति ॥ स्मृत्यर्थसारेऽपि – आसूर्यदर्शनात्तिष्ठन् प्राङ्मुखो गायत्रीं

जपेत् । आनक्षदर्शनात् सायमासीनः प्रत्यङ्मुखो जपेदिति ॥ चन्द्रिकायाम् – प्रातः सन्ध्यां सनक्षत्रामुपक्रम्य यथाविधि । गायत्रीमभ्यसेत् तिष्ठन् यावदादित्यदर्शनमिति ॥

க்ருஹ்யபரிசிஷ்டத்திலும்:- காயத்ரியை ஆவாஹனம் செய்து, நின்று கொண்டு, பாதி நக்ஷத்ரங்கள் தெரிவது முதல் ஸூர்ய மண்டலம் தெரியும் வரையில் மந்த்ரத்தின் அர்த்தத்தை த்யானிப்பவனாய், ப்ரணவம் வ்யாஹ்ருதி இவைகளை முன்னுடைய காயத்ரியை ஜபிக்க வேண்டும். **ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்திலும்:-** ஸூர்யோதயம் வரையில் கிழக்கு முகமாய் நின்று கொண்டு காயத்ரியை ஜபிக்க வேண்டும். மாலையில் மேற்கு முகமாய் உட்கார்ந்தவனாய் நக்ஷத்ர தர்சனம் வரையில் ஜபிக்க வேண்டும். **சந்த்ரிகையில்:-** ப்ராதஸ் ஸந்த்யையில் நக்ஷத்ரங்கள் இருக்கும்போதே ஆரம்பித்து நின்று கொண்டு விதிப்படி ஸூர்யோதயம் வரையில் காயத்ரியை ஜபிக்க வேண்டும்.

व्यासोऽपि – तिष्ठन् प्रातर्जपेद्देवीमासीनः पश्चिमां तथेति ॥ एवञ्च गायत्रीजपस्य प्रधानत्वात् तदनुवर्तित्वादङ्गस्य उदयानन्तरं गौणकाले जपं कुर्वन्नपि तिष्ठन्नेव कुर्यात् । 'तिष्ठन्नासूर्यदर्शनादिति वचनं तु गायत्रीजपस्य मुख्यकालविधिपरम् । न तु उदयानन्तर-मासनविधिपरम् । अग्निकार्यं ततः कुर्यादित्युदयानन्तरं होमविधानात् उदयानन्तरं आसीतेति वचनाभावाच्च । न च तिष्ठेदासूर्यदर्शनादिति वचनात् उदयानन्तरमर्थसिद्धमासनमिति वाच्यम् । आसीनः पश्चिमां सन्ध्यामिति पश्चिमायामेव आसनविधानात् अन्यत्र स्थितेरर्थसिद्धेः । न च प्रातः सूर्यदर्शनपर्यन्तं स्थानस्य सायं नक्षत्रोदयपर्यन्तमासनस्य विधानात् तदन्तरालकाले स्थानमासनं वा वैकल्पिकमिति वाच्यम् । कालविशेषाभिधायिवचननिचयेन व्यवस्थासिद्धेः ॥

வ்யாஸரும்:- காலையில் நின்றுகொண்டும், மாலையில் உட்கார்ந்து கொண்டும் காயத்ரியை ஜபிக்க வேண்டும். இவ்விதமிருப்பதால், காயத்ரீ ஜபம் ப்ரதானமானதால், அங்கம் ப்ரதானத்தை அனுஸரிக்குமானதால், உதயத்திற்குப் பிறகு கௌணகாலத்தில் காயத்ரீ ஜபம் செய்தாலும் நின்று கொண்டு தான் செய்ய வேண்டும். तिष्ठन्नासूर्यदर्शनात् என்ற வசனமோவெனில், காயத்ரீ ஜபத்தின் முக்ய காலத்தை விதிப்பதில் தாத்பர்யம் உள்ளதேயன்றி உதயத்திற்குப் பிறகு உட்கார்ந்து ஜபிக்க வேண்டும் என்பதை விதிப்பதில் தாத்பர்யம் உள்ளதல்ல. 'பிறகு அக்னி கார்யம் செய்ய வேண்டும்' என்று, உதயத்திற்குப் பிறகு ஹோமத்தை விதித்திருப்பதாலும், 'உதயத்திற்குப் பிறகு உட்கார்ந்து ஜபிக்க வேண்டும்' என்ற வசனம் இல்லாமையாலும். तिष्ठेदासूर्यदर्शनात् என்ற வசனத்தால் ஸூர்யோதயத்திற்குப் பிறகு உட்காரவேண்டும் என்பது அர்த்தத்தால் ஸித்திக்கின்றது என்றும் சொல்லக் கூடாது. 'ஸாயம் ஸந்த்யையில் உட்கார்ந்து ஜபிக்க வேண்டும்' என்று ஸாயம் ஸந்த்யையில் மட்டும் உட்காருவதை விதித்திருப்பதால் ப்ராதஸ் ஸந்த்யையில் நிற்க வேண்டும் என்பது அர்த்தத்தால் ஸித்திப்பதால். 'காலையில் ஸூர்யோதயம் வரையில் நிற்பதையும், மாலையில் நக்ஷத்ரோதயம் வரையில் உட்காருவதையும் விதித்திருப்பதால், இவைகளுக்கு நடுவிலுள்ள காலத்தில் நிற்பதும் உட்காருவதும் விகல்பிக்கப்படுகிறது' என்று சொல்வதும் கூடாது. காலவிசேஷத்தைச் சொல்லும் வசனங்களால், ஸ்தாநாஸனங்களின் வ்யவஸ்தை ஸித்திக்கின்து.

तथा च भरद्वाजसंवर्तव्यासाः – सहस्रपरमां देवीं शतमध्यां दशावराम् । गायत्रीं वै जपेत् प्रातः प्राङ्मुखः प्रयतः स्थितः इति ।। योगयाज्ञवल्क्योऽपि – प्रातस्तिष्ठन् जपेदिति । मनुरपि – पूर्वां सन्ध्यां जपंस्तिष्ठन् नैशमेनो व्यपोहति इति । एतेषु वचनेषु उदयात् पूर्वापरभाव

विवेकविरहात् प्रातःकालस्थितिपरत्वात् असति विशेषोपस्थापके सामान्यसङ्कोचस्य अयुक्तत्वात्। सूर्योदयानन्तरमासनस्य कल्पने सायं नक्षत्रोदयानन्तरं गौणकालजपे स्थितेरपि कल्पनाप्रसङ्गात्। तस्मात् प्रातस्तिष्ठन् सायमासीन इत्याहुः ॥

பாரத்வாஜ, ஸம்வர்த்த, வ்யாஸர்கள்:- *ப்ராத:காலத்தில் சுத்தனாய் கிழக்கு முகமாய் நின்று கொண்டு காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஆயிரம் ஆவ்ருத்தி உத்தமம். நூறு மத்யமம். பத்து அதமம்.* **யோகயாக்ஞவல்க்யர்:-** *காலையில் நின்று கொண்டு ஜபிக்க வேண்டும்.* **மனுவும்:-** *ப்ராதஸ் ஸந்த்யையில் நின்று கொண்டு ஜபிக்கின்றவன், இரவில் செய்த பாபத்தை போக்குகிறான். இந்த வசனங்களில் உதயத்திற்கு முன், பின் என்ற பிரிவு இல்லாததால், காலையில் நிற்க வேண்டும் என்பதை மட்டில் சொல்வதால், விசேஷ வசனம் இல்லாவிடில் ஸாமான்ய வசனத்தை ஸங்கோசப்படுத்துவது யுக்தம் இல்லாததால், ஸூர்யோதயத்திற்குப் பிறகு உட்கார்ந்து செய்யலாமென்று கல்பித்தால், ஸாயங்காலத்தில் நக்ஷத்ரோதயத்திற்குப் பிறகு கௌண காலத்தில் செய்யும் ஜபத்தில் நின்று கொண்டு செய்யலாமென்றும் கல்பிக்க நேரிடுமாகையால் 'காலையில் நின்று கொண்டும், மாலையில் உட்கார்ந்து கொண்டும் ஜபிக்க வேண்டும்' என்கின்றனர்.*

यमः – सहस्रपरमां देवीं शतमध्यां दशावराम्। गायत्रीं तु जपेन्नित्यं सर्वपापप्रणाशिनीमिति ॥ बोधायनस्तु विशेषमाह – दर्भेष्वासीनो दर्भान् धारयमाणस्सोदकेन पाणिना प्रत्यङ्मुखः सावित्रीं सहस्रकृत्व आवर्तयेत्। प्राणायामशो वा शतकृत्वः। उभयतःप्रणवां ससव्याहृतिपूर्विकां मनसा वा दशकृत्वस्त्रिभिश्च प्राणायामैस्तान्त एवं प्रातः प्राङ्मुखस्तिष्ठन्निति । योगयाज्ञवल्क्योऽपि –

सहस्रकृत्वस्सावित्रीं जपेदव्यग्रमानसः । शतकृत्वोऽपि वा सम्यक् प्राणायामपरो यदि । ससव्याहृतिपूर्वां चेदाद्यन्तप्रणवान्विताम् । मनसा वा जपेच्चैव दशकृत्वोऽवरः स्मृतः इति ॥

யமன்:- ஸகல பாபங்களையும் விலக்கும் காயத்ரியை ப்ரதி தினமும் ஜபிக்க வேண்டும். ஆயிரம் தடவை ஜபிப்பது உத்தமம். நூறு தடவை மத்யமம். பத்து தடவை குறைந்த பக்ஷம். **போதாயனர்:-** தர்ப்பங்களில் உட்கார்ந்தவனாய், ஜலத்துடன் கூடிய கையினால் தர்ப்பங்களை தரித்தவனாய், (மாலையில்) மேற்கு நோக்கியவனாய், காயத்ரியை ஆயிரம் தடவை ஜபிக்க வேண்டும். அல்லது ப்ராணா யாமத்துடன் நூறு தடவை ஜபிக்கலாம். (மூச்சை அடக்கிக் கொண்டு ஜபித்தால் ப்ராணாயாமத்துடன் ஜபிப்பதென்பதாம். மூச்சை அடக்கிய காலத்தில் எவ்வளவு கூடுமோ அவ்வளவு ஜபித்து, மறுபடி மூச்சை விட்டு, மறுபடி மூச்சை அடக்கி ஜபிக்க வேண்டும். மூச்சு விடும் காலத்தில் ஜபிக்கக் கூடாது. இந்த அர்த்தத்தை ஆபஸ்தம்ப தர்மஸூத்ர வ்யாக்யானத்தில் காணலாம்.) அல்லது, இருபுறமும் ப்ரணவமுடையதும், ஏழு வ்யாஹ்ருதிகளை முன்னுடையதுமான காயத்ரியை மனதால் பத்து தடவை ஜபிக்கலாம். மூன்று ப்ராணா யாமங்களால் சோர்ந்தவனாய் ஜபிக்க வேண்டும். காலையிலும் இவ்விதமே கிழக்கு நோக்கி நின்று கொண்டு ஜபிக்க வேண்டும். **யோக யாக்ஞவல்க்யரும்:-** வேறிடத்தில் மனதில்லாதவனாய் காயத்ரியை ஆயிரம் தடவை ஜபிக்க வேண்டும். அல்லது ப்ராணா யாமத்துடன் ஜபித்தால் நூறு தடவை ஜபிக்கலாம். அல்லது, இருபுறமும் ப்ரணவத்துடன் கூடியதும், ஏழு வ்யாஹ்ருதிகளை முன்னுடையதுமான காயத்ரியை மனதால் பத்து தடவை ஜபிக்கலாம். இது கடைசி பக்ஷம்.

व्यासः – सहस्रपरमां नित्यं शतमध्यां दशावराम् । सावित्रीं वै जपेद्विद्वान् प्राङ्मुखः प्रयतश्शुचिरिति । अत्र चन्द्रिकायां व्यवस्था कृता

– दशावरामित्यापद्विषयम् । आशौचविषयं च । आपन्नश्चाशुचिः काले तिष्ठन्नपि जपेद्दशेत्याश्वलायनेनोक्तत्वात् । सहस्रपरमामिति सहस्रकृत्व इति वचनं वानप्रस्थादिविषयम् । 'शतमष्टोत्तर' मित्यनुदितहोमिगृहस्थब्रह्मचारिविषयम् । ब्रह्मचारिणोऽपि सन्ध्ययोरग्निकर्म चेति प्रागुदयादग्निकार्यस्मरणात् । उदितहोमिनस्तु सावित्रीमार्कदर्शनादिति मन्वाद्युक्तं द्रष्टव्यमिति ॥ तथा च योगयाज्ञवल्क्यः – ब्रह्मचार्याहिताग्निश्च शतमष्टोत्तरं जपेत् । वानप्रस्थो यतिश्चैव सहस्रादधिकं जपेदिति ॥ तयोरनग्निकत्वेन, होमकालानतिपत्तेरिति भावः ॥ आहिताग्निग्रहणमेकाग्नेरप्युपलक्षणम् ।

வ்யாஸர்:- *அறிந்தவன், அடக்கம் சுத்தி இவைகளுடையவனாய், கிழக்கு நோக்கியவனாய் காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஆயிரம் தடவை ஜபிப்பது உத்தமம். நூறு மத்யமம். பத்து தாழ்ந்தது. இது விஷயத்தில் சந்த்ரிகையில் வ்யவஸ்தை செய்யப்பட்டுள்ளது 'தசாவராம்' என்றது ஆபத்காலத்தைக் குறித்ததும், ஆசௌசம் உள்ளவர்களைக் குறித்ததும். 'ஆபத்துடைய வனும், ஆசௌசம் உடையவனும், ஸந்த்யா காலத்தில் நின்றவனாய் பத்து தடவை ஜபிக்க வேண்டும்' என்று ஆச்வலாயனர் சொல்லி இருப்பதால். 'ஆயிரம் தடவை ஜபிப்பது உத்தமம்' 'ஆயிரம் தடவை ஜபிக்க வேண்டும்' என்று சொல்வது வானப்ரஸ்தர் முதலியவரைக் குறித்தது. 'நூற்றெட்டுத் தடவை ஜபிக்க வேண்டும்' என்பது உதயத்திற்கு முன்பு ஹோமம் செய்யும் க்ருஹஸ்தர், ப்ரம்ஹசாரிகள் இவர்களைக் குறித்தது. இரு ஸந்த்யைகளிலும் அக்னி கார்யம் செய்ய வேண்டும்' என்று, ப்ரம்ஹசாரிக்கும் உதயத்திற்கு முன் அக்னி கார்யம் விதிக்கப்பட்டிருப்பதால். 'ஸூர்ய தர்சனம் வரையில் காயத்ரியை ஜபிக்க வேண்டும்' என்று மனு முதலியவர் சொல்லியது உதயத்திற்குப் பிறகு ஹோமம் செய்பவனைப்*

பற்றியது. அவ்விதமே யோகயாக்ஞவல்க்யர்:- ப்ரம்ஹசாரியும் ஆஹிதாக்னியும் 108-முறை ஜபிக்க வேண்டும். வானப்ரஸ்தனும் ஸன்யாஸியும் 1000 -க்கு அதிகமாய் ஜபிக்க வேண்டும். அவ்விருவரும் அக்னி இல்லாதவரானதால், ஹோமகாலம் அதிக்ரமிக்கும் என்பதில்லாததாலென்று பொருள். ஆஹிதாக்னி என்றது ஒரு அக்னியை உடைய க்ருஹஸ்தனையும் குறிக்கின்றது.

तथा च संवर्तः – गृहस्थो ब्रह्मचारी च शतमष्टोत्तरं जपेत्। वानप्रस्थो यतिश्चैव जपेदष्टसहस्रकम् इति ।। स्मृत्यर्थसारे – ब्रह्मचारी गृहस्थश्च शतमष्टोत्तरं जपेत्। वानप्रस्थो यतिश्चैव सहस्रादधिकं जपेत्। दशापत्सु जपेद्देवीमष्टाविंशतिमष्ट वा इति । ननु सावित्रीमार्कदर्शनादिति उदयपर्यन्तं जपविधानात्, 'न चान्तरा व्याहरेत्तु विरमेद्वा कथंचन' नान्तरा विरमेत् क्वचिदिति व्यासशौनकाभ्यां जपमध्ये विरमणस्य च प्रतिषिद्धत्वादुदितहोमिन आहिताग्नेर्विहरणलोपप्रसङ्गः । मैवम्। श्रुतिविरोधे सति मध्ये विरमणे अविरोधात् ।। अत एवापस्तम्बः – विप्रतिषेधे श्रुतिलक्षणं बलीयः इति ।।

அவ்விதமே ஸம்வர்த்தர்:- க்ருஹஸ்தனும், ப்ரம்ஹசாரியும் 108-முறை ஜபிக்க வேண்டும். வானப்ரஸ்தனும் யதியும் 1008 முறை ஜபிக்க வேண்டும். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்- ப்ரம்ஹசாரியும், க்ருஹஸ்தனும் 108 -முறை ஜபிக்க வேண்டும். வானப்ரஸ்தனும், யதியும் 1000 க்கு அதிகமாய் ஜபிக்க வேண்டும். ஆபத்காலங்களில் பத்து அல்லது 28 அல்லது 8 முறை ஜபிக்க வேண்டும். 'காயத்ரியை ஸூர்யோதய தர்சனம் வரையில் ஜபிக்க வேண்டும்' என்று உதயம் வரையில் ஜபம் விதிக்கப் பட்டிருப்பதால், 'நடுவில் எவ்விதத்திலும் பேசக்கூடாது, ஜபத்தை நிறுத்தவும் கூடாது' என்று வ்யாஸர், சௌனகர் இவர்கள் ஜபமத்யத்தில் நிறுத்துவதைத் தடுத்திருப்பதால்,

உதித ஹோமியான ஆஹிதாக்னிக்கு விஹரணம் செய்வது லோபிக்க வாகுமே' எனில், இவ்விதமல்ல. ச்ருதிக்கு விரோதம் வருமாகில், நடுவில் நிறுத்துவதால் விரோதமாகாது. ஆகையாலேயே ஆபஸ்தம்பர் - 'ச்ருதிக்கும் ஸ்ம்ருதிக்கும் விரோதம் வருமாகில் ச்ருதியிற் சொல்லியது அதிக பலமுள்ளது' என்றார்.

शङ्खः – स्वरवर्णपदैर्वाक्यं शुद्धमावर्तयन् जपेत् । न कम्पयेच्छिरो ग्रीवां दन्तान्नैव प्रघट्टयेदिति ॥ तच्च वाक्यं मनुनोक्तम् - 'एतदक्षरमेतां च जपन् व्याहृतिपूर्विकाम् । सन्ध्ययोर्वेदविद्विप्रो वेदपुण्येन युज्यते इति ॥ एतदक्षरं - प्रणवम् । एतां - गायत्रीम् ॥ व्यासोऽपि – प्रणवव्याहृतियुतां गायत्रीं तु ततो जपेत् । समाहितमनास्तूष्णीं मनसाऽपि विचिन्तयेत् इति । पितामहः – प्रणवं व्याहृतीस्तिस्रो गायत्रीं च जपेत् क्रमात् । प्रणवव्याहृतियुता स्वाहान्ता होमकर्मणि । शुद्धा वाऽत्र प्रयोक्तव्या व्याहृतिप्रणवैर्विना इति ॥

சங்கர்:- ஸ்வரம், வர்ணம், பதம் இவைகளால் சுத்தமாயுள்ள 'வாக்யத்தை ஆவ்ருத்தி செய்து கொண்டு ஜபிக்க வேண்டும். தலையையும், கழுத்தையும், அசைக்கக் கூடாது. பற்களை கடிக்கக் கூடாது. அந்த வாக்யம் எதுவெனில், அது மனுவினால் சொல்லப்பட்டிருக்கிறது. 'இந்த அக்ஷரத்தையும் (ப்ரணவத்தையும்) வ்யாஹ்ருதிகளை முன்னுடைய இதையும் (காயத்ரியையும்) ஸந்த்யைகளில் ஜபிக்கின்ற வேதமறிந்த ப்ராம்ஹணன் மூன்று வேதங்களோதிய புண்யத்துடன் சேருகிறான். வ்யாஸரும்:- பிறகு ப்ரணவத்துடனும், வ்யாஹ்ருதிகளுடனும் கூடிய காயத்ரியை ஜபிக்க வேண்டும். மௌனமாய் கவனமுள்ளவனாய் மனதினாலும் சிந்திக்க வேண்டும். பிதாமஹர்:- ப்ரணவத்தையும், 3-வ்யாஹ்ருதிகளையும், காயத்ரியையும் முறையே ஜபிக்க வேண்டும். ஹோமகர்மத்தில், ப்ரணவ வ்யாஹ்ருதிகளை முன்னுடைய காயத்ரியை, 'ஸ்வாஹா' என்பதைக்

கடைசியிலுள்ளதாய் உச்சரிக்க வேண்டும். அல்லது, ப்ரணவ வ்யாஹ்ருதிகளைச் சேர்க்காமல் சுத்தமாகவும் ஹோமத்தில் உச்சரிக்கலாம்.

स्मृतिरत्ने – शुद्धयैव तु होतव्यं गायत्र्या होमकर्मणि । त्रिकेणैव जपः कार्यो जपयज्ञप्रसिद्धय इति । प्रणवः व्याहृतयः गायत्री चेति त्रिकम् । बोधायनः – प्रणवो व्याहृतयस्तिस्रः सावित्री चेत्येते पञ्चब्रह्मयज्ञाः अहरहर्ब्राह्मणं किल्बिषात् पावयन्त इति ॥ यत्तु योगयाज्ञवल्क्य आह – ओङ्कारं पूर्वमुच्चार्य भूर्भुवःस्वस्तथैव च । गायत्रीं प्रणवं चान्ते जप एवमुदाहृतः ॥ एषा सम्पुटगायत्री सर्वपापप्रणाशिनीति ॥ यदपि बोधायनः – उभयतःप्रणवां सव्याहृतिकां जपेदिति, यदपि वृद्धमनुः – षडोङ्कारां जपेद्विप्रो गायत्रीं मनसा शुचिः । अनेकजन्मजैः पापैः मुच्यते नात्र संशयः ॥ तिस्रो व्याहृतयः पूर्वं पृथगोङ्कारसंयुताः । पुनस्संहृत्य चोङ्कारं मन्त्रस्याद्यन्तयोस्तथेति, तत्सर्वं गृहस्थब्रह्मचारिव्यतिरिक्तविषयम् ॥

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ஹோம கார்யத்தில் சுத்த காயத்ரியினாலேயே ஹோமம் செய்ய வேண்டும். ஜப யஜ்ஞம் ஸித்திப்பதற்கு ப்ரணவம், வ்யாஹ்ருதிகள், காயத்ரி இம்மூன்றையும் சேர்ந்தே ஜபிக்க வேண்டும். **போதாயனர்:-** ப்ரணவம், மூன்று வ்யாஹ்ருதிகள், காயத்ரீ என்ற இந்த ஐந்தும் ப்ரம்ஹயக்ஞங்கள் எனப்படும். இவை ஒவ்வொரு நாளும் ப்ராம்ஹணனை பாபத்தினின்றும் விலக்குகின்றன. **யோக யாக்ஞவல்க்யர்:-** "ஓங்காரத்தை முதலில் உச்சரித்து, பிறகு வ்யாஹ்ருதிகளையும், பிறகு காயத்ரியையும், முடிவில் ப்ரணவத்தையும் உச்சரித்து ஜபிக்க வேண்டும். இந்த ஸம்புட காயத்ரீ ஸகல பாபங்களையும் போக்கக் கூடியது" என்று சொல்லியதும், **போதாயனர்:-** "ஆதியிலும், அந்தத்திலும் ப்ரணவமுடையதாயும், வ்யாஹ்ருதிகளுடன் கூடியதாயும் ஜபிக்க வேண்டும்" என்று சொல்லியதும், **வ்ருத்தமனு:-**

''ப்ராம்ஹணன் சுத்தனாய், 6- ஓங்காரங்களுடையதான காயத்ரியை மனதால் ஜபிக்க வேண்டும். அனேக ஜன்மங்களில் உண்டாகிய பாபங்களால் விடுபடுகிறான். ஸம்சயமில்லை. முதலில் ஒரு ஓங்காரம், வ்யாஹ்ருதிகள் மூன்றுக்கும் ஆதியில் தனித்தனி ஓங்காரம், காயத்ரியின் ஆதியில் ஒன்று, முடிவில் ஒன்று ஆக ஆறு ஓங்காரங்கள்'' என்று சொல்லியதும், இதெல்லாம் க்ருஹஸ்தன் ப்ரம்ஹசாரி இவர்களைத் தவிர்த்த மற்றவரின் விஷயமாம்.

तथा च स्मृतिरत्नावल्याम् – सम्पुटैकषडोङ्कारा गायत्री त्रिविधा मता । तत्रैकप्रणवा ग्राह्या गृहस्थैर्जपकर्मणि ।। गृहस्थवत्तु जप्तव्या सदैव ब्रह्मचारिभिः । सम्पुटा च षडोङ्कारा भवेतामूर्ध्वरेतसाम् इति । स्मृतिसारसमुच्चयेऽपि – गृहस्थो ब्रह्मचारी च प्रणवाद्यामिमां जपेत् । अन्ते यः प्रणवं कुर्यान्नासौ वृद्धिमवाप्नुयात् इति । वृद्धमनुः – सोङ्कारा चतुरावृत्त्या विज्ञेया सा शताक्षरा । शताक्षरां समावर्त्य सर्ववेदफलं लभेत् । एतया ज्ञातया नित्यं वाङ्मयं विदितं भवेत् । उपासितं भवेत्तेन विश्वं भुवनसप्तकमिति ।। अस्यार्थः चन्द्रिकायामभिहितः – सोङ्कारेत्यनेन व्याहृतीनां सङ्ख्यानानुप्रवेश उच्यते । एवं च ओङ्कारेण सह पञ्चविंशत्यक्षरा सम्पद्यते । मन्त्रे तु व्याहृतित्रयस्यानुप्रवेशोऽस्त्येवेति ।।

அவ்விதமே, ஸ்ம்ருதி ரத்னாவளியில்:- ஸம்புடை என்றும், ஒரு ப்ரணவம் உள்ளதென்றும், ஆறு ப்ரணவமுள்ளதென்றும், காயத்ரீ மூன்று விதமாய் சொல்லப்பட்டுள்ளது. அவையுள் ஒரு ப்ரணவமுள்ளதை க்ருஹஸ்தர்கள் ஜபத்தில் க்ரஹிக்க வேண்டும். எப்பொழுதுமே ப்ரம்ஹசாரிகள் க்ருஹஸ்தர்களைப் போலவே ஜபிக்க வேண்டும். ஸம்புட காயத்ரியும், ஷடோங்கார காயத்ரியும் ஊர்த்வரேதஸ்ஸுகளுக்கு (வானப்ரஸ்தருக்கும், யதிகளுக்கும்) விதிக்கப்பட்டதாம். ஸ்ம்ருதி ஸாரஸமுச்சயத்திலும்:- க்ருஹஸ்தனும்,

ப்ரம்ஹசாரியும் ப்ரணவத்தை ஆதியிலுடையதாய் காயத்ரியை ஜபிக்க வேண்டும். எவன் முடிவில் ப்ரணவத்தைச் சேர்த்து ஜபிக்கின்றானோ இவன் வ்ருத்தியை அடையமாட்டான். வ்ருத்தமனு:- ஓங்காரத்துடன் கூடிய காயத்ரியை நான்கு தடவை ஆவ்ருத்தி செய்தால், அது நூறு அக்ஷரங்களுடையதாய் ஆகிறது என்று அறியவும். சதாக்ஷர காயத்ரியை ஜபிப்பதால் ஸர்வ வேதங்களையும் ஜபித்த பலனை அடைவான். இதை அறிந்ததால் ஸகல சாஸ்த்ரங்களும் அறியப்பட்டதாகும். அவனால் ஏழு உலகங்களும் உபாஸிக்கப்பட்டதாகும். இதற்கு அர்த்தம் சந்த்ரிகையில் சொல்லப்பட்டுள்ளது. 'ஓங்காரத்துடன் கூடிய' என்றதால், வ்யாஹ்ருதிகள் ஸங்க்யையில் சேர்க்கப்படவில்லை என்பது சொல்லப்படுகிறது. இவ்விதம் இருப்பதால், ஓங்காரத்துடன் 25 அக்ஷரமுள்ளதாகிறது. ஆனாலும் மந்த்ரத்தில் மூன்று வ்யாஹ்ருதிகளுக்கும் சேர்க்கை உண்டு' என்று.

अत एव विश्वामित्रः – प्रणवोऽप्यत्र मन्त्रादौ व्याहृतित्रितयं ततः । जपे प्रशस्ता सावित्री प्रणवेन समन्विता ॥ अतिप्रशस्ता तेनापि व्याहृतित्रितयेन चेति ॥ संवर्तोऽपि – प्रणवाद्यां तु सन्ध्यायां जपेद्व्याहृतिभिस्सह इति ॥ व्यासः – त्रिसन्ध्यं तु जपेद्देवीं विच्छिद्यैव पदत्रयम् । अविच्छिन्नं जपेद्यस्तु रौरवं नरकं व्रजेदिति ॥ विष्णुः – अच्छिन्नपादा गायत्री ब्रह्महत्यां प्रयच्छति । छिन्नपादा तु गायत्री ब्रह्महत्यां व्यपोहति । तस्मात् पादत्रयं छित्वा जपयज्ञं समाचरेदिति ॥

ஆகையால்தான் விச்வாமித்ரர்:- 'இங்கு மந்த்ரத்தின் ஆதியில் ப்ரணவமும் பிறகு மூன்று வ்யாஹ்ருதிகளும் சேர்க்கப்பட வேண்டும். ப்ரணவத்துடன் கூடியதால் காயத்ரீ சுத்தமாயாகிறது. மூன்று வ்யாஹ்ருதிகளுடன் கூடியதால் மிகவும் ச்லாக்யமாய் ஆகிறது. ஆகையால் ஸந்த்யா காலத்தில் காயத்ரியை ப்ரணவத்தை

முன்னுடையதாய் வ்யாஹ்ருதிகளுடன் கூடியதாய் ஜபிக்க வேண்டும்' என்றார். ஸம்வர்த்தரும்:- ப்ரணவத்தை முன்னுடையதும், வ்யாஹ்ருதிகளுடன் கூடியதுமான காயத்ரியை ஸந்த்யாகாலத்தில் ஜபிக்க வேண்டும். **வ்யாஸர்:**- மூன்று ஸந்த்யைகளிலும், காயத்ரியின் மூன்று பாதங்களையும் பிரித்தே ஜபிக்க வேண்டும். பிரிக்காமல் ஜபிப்பவன் ரௌரவமெனும் நரகத்தை அடைவான். **விஷ்ணு:**- காயத்ரியின் பாதங்களைப் பிரிக்காமல் ஜபிப்பது ப்ரம்ஹஹத்யா தோஷத்தைக் கொடுக்கும். பிரித்து ஜபிப்பது ப்ரம்ஹஹத்யா தோஷத்தையும் போக்கும். ஆகையால் மூன்று பாதங்களையும் பிரித்தே ஜபயக்ஞம் செய்ய வேண்டும் **ஸ்ம்ருதி ரத்னாவளியில்:**- எந்த ப்ராம்ஹணர்கள் பாதங்களைப் பிரிக்காமல் காயத்ரியை ஜபிக்கின்றனரோ அவர்கள், நரகத்தில் அநேககோடி கல்பகாலம் வரை தலைகீழாக இருக்கின்றனர்.

जपयज्ञस्य भेदोऽभिहितो माधवीये – वाचिकाख्य उपांशुश्च मानसश्च त्रयः स्मृताः । त्रयाणां जपयज्ञानां श्रेयान् स्यादुत्तरोत्तर इति । एतेषां लक्षणं तत्रैवोक्तम् – यदुच्चनीचस्वरितैः स्पष्टैः स्पष्टपदाक्षरैः । मन्त्रमुच्चारयेद्वाचा जपयज्ञः स वाचिकः । शनैरुदीरयेन्मन्त्र मीषदोष्ठौ प्रचालयेत् । किञ्चिच्छब्दं स्वयं विद्या दुपांशुः स जपः स्मृतः ॥ धिया यदक्षरश्रेण्या वर्णाद्वर्णं पदात्पदम् । मन्त्रार्थचिन्तनं भूयः कथ्यते मानसो जपः ॥ उत्तमं मानसं जप्य मुपांशु मध्यमं स्मृतम् । अधमं वाचिकं प्राहुः सर्वमन्त्रेषु वै द्विजाः ॥ वाचिकस्यैकमेकं स्यादुपांशु शतमुच्यते । सहस्रं मानसं प्रोक्तं मन्वत्रिभृगुनारदैः इति ॥

ஜபயக்ஞத்தின் பேதம் சொல்லப்பட்டுள்ளது. **மாதவீயத்தில்:**- வாசிகம், உபாம்சு, மானஸம் என மூன்று விதமாய் ஜபயக்ஞங்கள் சொல்லப்பட்டுள்ளன. இம்மூன்று ஜபயக்ஞங்களுள் முந்தியதை விடப் பிந்தியது

சிறந்ததாகும். இவைகளின் லக்ஷணம் அங்கேயே சொல்லப்பட்டுள்ளது:- உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் இவைகளையும், பதங்கள் அக்ஷரங்கள் இவைகளையும் ஸ்பஷ்டமாய் உச்சரித்து ஜபிப்பது வாசிகஜப யஜ்ஞமாம். மந்த்ரத்தை மெதுவாய் உச்சரிக்க வேண்டும். உதடுகளைக் கொஞ்சமாய் அசைக்க வேண்டும். உச்சரிக்கும் சப்தம் தன்னால் மட்டும் கேட்கப்பட வேண்டும். இவ்விதம் ஜபிப்பது உபாம்சு ஜபமாம். ஒவ்வொரு அக்ஷரத்தையும் பதத்தையும் மனதினால் த்யானித்து மந்த்ரார்த்தத்தையும் த்யானிப்பது மானஸ ஜபம் எனப்படுகிறது. மானஸ ஜபம் உத்தமம், உபாம்சு ஜபம் மத்யமம் எனப்படுகிறது. வாசிக ஜபம் அதமம் எனப்படுகிறது. எல்லா மந்த்ரங்களுக்கும் இது பொதுவான விதி. வாசிக ஜபத்திற்கு ஒரு பங்கு பலன். உபாம்சு ஜபத்திற்கு நூறு பங்கு பலன் சொல்லப்படுகிறது. மானஸ ஜபத்திற்கு ஆயிரம் மடங்கு பலனென்று மனு, அத்ரி, ப்ருகு, நாரதர் இவர்களால் சொல்லப்பட்டுள்ளது.

हारीतः – मन्त्रमुच्चारयेद्वाचा जपयज्ञः स वाचिकः । स उपांशुजपोऽशब्दश्चलज्जिह्वादशच्छदः ।। मानसस्त्वचलज्जिह्वादशनच्छद ईरितः । उच्चैस्त्वेकगुणः प्रोक्तोऽध्वानो दशगुणः स्मृतः । उपांशुः स्याच्छतगुणः सहस्रो मानसः स्मृतः । मुक्तिदो मानसो ज्ञेय उपांशुस्सर्वसिद्धिदः । त्रिविधो जपयज्ञस्स्यात् वाचिकः क्षुद्रकर्मणीति । वैयाघ्रपादः – त्रिविधो जपयज्ञः स्यात् मानसोपांशुभाषिकः । परश्रवणयोग्यो यः स भाषिक उदीरितः ।। उपांशुरोष्ठसंस्पर्शमात्रः स्वश्रुतिगोचरः । यो भवेदच लज्जिह्वादशनावरणो जपः ।। मानसः सः समाख्यातो जपः श्रुतिविभूषणैः । उच्चैर्जपाद्विशिष्टस्स्यादुपांशुर्दशभिर्गुणैः ।। जिह्वाजपः शतगुणः सहस्रो मानसः स्मृतः । मानसः सिद्धिकामानां पुष्टिकामैरुपांशुकः ।। वाचिको मारणे चैव प्रशस्तो जप ईरितः इति ।।

यत्तु व्यासेनोक्तम् – मनसैव जपं कुर्यात् सावित्र्यास्तु विशेषत इति, तत् मानसजपप्रशंसाभिप्रायम्, न पुनरुपांशुत्वनिषेधार्थम्। तथात्वे उपांशुजपयुक्तस्य शंसाच्छतगुणो भवेत् इत्यादिवचनविरोधः स्यात्। शंसः - उच्चैर्जपः ॥

ஹாரீதர்:- மந்த்ரத்தை வாக்கினுல் உச்சரிக்க வேண்டும். அது வாசிக ஜபம் எனப்படும். சப்தமில்லாமல் நாக்கும் உதடுகளும் அசையும்படி உச்சரிப்பது உபாம்சு ஜபம் எனப்படும். நாக்கும் உதடுகளும் அசையாமல் ஜபிப்பது மானஸ ஜபம் எனப்படும். சப்தத்துடன் ஜபிக்கும் ஜபம் ஒரு மடங்கு பலனை அளிக்கும். சப்தமில்லாது ஜபிக்கும் ஜபம் 10- மடங்கு பலனை யளிக்கும். உபாம்சு ஜபம் 100- மடங்கு பலனை அளிக்கும். மானஸ ஜபம் 1000 - மடங்கு பலனை அளிக்கும். மானஸ ஜபம் முக்தியை அளிக்கும். உபாம்சு ஜபம் ஸகல ஸித்தியையுமளிக்கும். வாசிக ஜபத்தை க்ஷுத்ரமான (அபிசார) கர்மத்தில் உபயோகிக்க வேண்டும். இவ்விதம் ஜபயக்ஞம் மூன்று விதமாகும். வையாக்ரபாதர்:- ஜபயக்ஞம் மானஸம், உபாம்சு, பாஷிகம் என மூன்றுவிதம் உடையது. பிறர் கேட்கும்படி ஜபிப்பது பாஷிகம். உதடு ஒன்றுக்கொன்று ஸம்பந்தித்து, தன்காதிற்கு மட்டில் கேட்கும்படி உச்சரித்து ஜபிப்பது உபாம்சு. நாக்கும் உதடுகளும் அசையாமல் ஜபிப்பது மானஸம் என்று வேதமறிந்தவர்கள் சொல்லுகின்றனர். சப்தத்துடன் ஜபிப்பதைவிட உபாம்சு ஜபம் 10- மடங்கு சிறந்தது. நாக்கினுல் ஜபிப்பது 100- மடங்கு சிறந்தது. மானஸ ஜபம் 1000 - மடங்கு சிறந்தது. ஸித்தியை விரும்பியவர்களுக்கு மானஸமும், புஷ்டியை விரும்பியவர்களுக்கு உபாம்சுவும், அபிசார கர்மத்தில் வாசிகமும் சிறந்ததெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு, ''காயத்ரீ ஜபத்தை மனதினுலேயே செய்ய வேண்டும். அது விசேஷமானது'' என்று வ்யாஸர் சொல்லி இருப்பது, மானஸ ஜபத்தைப் புகழ்வதில் அபிப்பிராயம் உடையதேயன்றி உபாம்சு ஜபத்தை நிஷேதிப்பதற்கல்ல.

நிஷேதிப்பதற்கென்றால், உபாம்சுவாய் ஜபிப்பவனுக்கு, உரக்க வாசிக ஜபத்தைவிட 100- மடங்கதிகமாகும்'' என்பது முதலான வசனங்களுக்கு விரோதம் நேரிடும்.

जपनियममाह – शौनकः । कृत्वोत्तानौ करौ प्रातः सायं चाधोमुखौ तथा । मध्ये स्तब्धकराभ्यां तु जप एव मुदाहृतः इति ।। व्यासोऽपि – प्रातरुत्तानपाणिभ्यां स्तब्धाभ्यां दिनमध्यमे । अधोमुखाभ्यां पाणिभ्यां सायं संलक्षितो जपेत् ।। प्रातर्नासासमौ कुर्यात् मध्याह्ने तूरसा समौ । सायङ्काले नाभिसमौ करौ कुर्यादतन्द्रितः । अपवित्रकरोऽशुद्धः प्रलपन्न जपेत् क्वचित् । अप्रावृतकरो वाऽपि शिरसि प्रावृतोऽपि वेति ।।

ஜபத்தில் நியமத்தைச் சொல்லுகிறார் சௌனகர் - காலையில் கைகளை நிமிர்த்திக் கொண்டும், மாலையில் கீழ்நோக்கியதாய்ச் செய்து கொண்டும், மத்யாஹ்னத்தில் நடுநிலைமையாய் வைத்துக்கொண்டும் ஜபிக்க வேண்டும். வ்யாஸரும்:- காலையில் உயர்த்தப்பட்ட கைகளோடும் மத்யாஹ்னத்தில் ஸ்தப்தமான (விறைத்த) கைகளோடும், மாலையில் கீழ்நோக்கிய கைகளோடும் ஜபிக்க வேண்டும். காலையில் மூக்குக்குச் சமமாகவும், மத்யாஹ்னத்தில் மார்புக்குச் சமமாகவும், மாலையில் நாபிக்குச் சமமாகவும் கைகளை வைத்துக் கொள்ள வேண்டும். கையில் பவித்ரமணியாமலும், அசுத்தனாயும் பேசிக் கொண்டும், கைகளை மூடிக் கொள்ளாமலும், தலையை மூடிக்கொண்டும் ஒருபோதும் ஜபிக்கக் கூடாது.

शौनकः – मनस्सन्तोषणं शौचं मौनं मन्त्रार्थचिन्तनम् । अव्यग्रत्वमनिर्वेदो जपसंपत्तिहेतव इति ।। व्यासः – न प्रकाशं न च हसन् न पार्श्वमवलोकयन् । नापाश्रितो न जल्पंश्च न प्रावृतशिरास्तथा । न पदा पदमाक्रम्य न चैव हि तथा करौ । न चासमाहितमना न च संश्रावयन् जपेत् ।। अपाश्रितः - स्तम्भादिश्रितः । जपकाले न भाषेत

व्रतहोमादिकेषु च ।। एतेष्वेवावसक्तस्तु यद्यागच्छेत् द्विजोत्तमः । अभिवाद्य ततो विप्रं योगक्षेमं च कीर्तयेदिति ।।

ஶௌனகர்:- மனதில் ஸந்தோஷம், சுத்தி, மௌனம், மந்த்ரார்த்தத்தைச் சிந்தித்தல், கவலை இல்லாதிருத்தல், உத்ஸாஹம் இவை ஜபத்தின் ஸித்திக்குக் காரணங்களாகும். **வ்யாஸர்:-** ப்ரகாசமாயும், சிரித்துக் கொண்டும், பக்கத்தைப் பார்த்துக் கொண்டும், தூண் முதலியதில் சாய்ந்து கொண்டும், பேசிக் கொண்டும், தலையை மூடிக்கொண்டும், காலின் மேல் காலை வைத்துக் கொண்டும், கையின் மேல் கையை வைத்துக் கொண்டும், கவனமில்லாத மனதுடையவனும், பிறருக்குக் கேட்கும்படி உச்சரிப்பவனும், ஜபிக்கக் கூடாது. ஜபகாலத்திலும், வ்ரதம், ஹோமம் முதலியவைகளிலும் பேசக்கூடாது. ஜபாதிகளை அனுஷ்டிக்கும் பொழுது சிறந்த ப்ராம்ஹணன் வந்தால், ஜபத்தை நிறுத்தி அவனை நமஸ்கரித்து யோக க்ஷேமங்களைப் பற்றிப் பேசவேண்டும்.

बोधायनः – विरमेत् ब्राह्मणे प्राप्ते कामं तेन च संवदेत् । शूद्रं दृष्ट्वा तु संप्राप्तं नाधीयीत कथञ्चन ।। शूद्रं दृष्ट्वा विरमेदेव, न संवदेदित्यर्थः । लोकवार्तादिकं श्रुत्वा स्पृष्ट्वा दृष्ट्वा प्रभाषिणम् । सङ्ख्यां विना च यज्जप्तं तत् सर्वं निष्फलं भवेत् ।। प्रभाषिणं - बहुभाषिणम् । प्रभाषणं च तन्द्रां च परुषं बहुभाषणम् । क्रोधं माद्यं क्षुतं निद्रां ष्ठीवनं च विजृम्भणम् ।। दर्शनं च श्वनीचानां वर्जयेज्जपकर्मणि । आचामेत् सम्भवे चैषां स्मरेत् विष्णुं सुरार्चितम् ।। ज्योतींषि च प्रपश्येद्वा कुर्याद्वा प्राणसंयमम् ।। ज्वलनं गाश्च विप्रांश्च यतीन्वाऽपि विशुद्धये इति ।।

போதாயனர்:- ஜபகாலத்தில் ப்ராம்ஹணன் வந்தால் ஜபத்தை நிறுத்த வேண்டும். அவனுடன் பேசவேண்டும். சூத்ரனைக் கண்டால், ஜபத்தை நிறுத்த வேண்டும்.

எவ்விதமும் அவனுடன் பேசக்கூடாது. உலகவார்த்தை முதலியதைக் கேட்டுக் கொண்டும், பிறனைத் தொட்டுக் கொண்டும், அதிக வார்த்தை பேசுகிறவனைப் பார்த்துக் கொண்டும், எண்ணிக்கை இல்லாமலும் செய்த ஜபம் முழுவதும் பலனற்றதாகும். வீண்பேச்சு, சோம்பல், கடுமை, அதிகப்பேச்சு, கோபம், மதம், தும்மல், தூக்கம், துப்புதல், கொட்டாவி, நாய், நீசர் இவர்களைப் பார்ப்பது இவைகளை ஜபகாலத்தில் வர்ஜிக்க வேண்டும். இவைகளிலேதாவது நேர்ந்தால் ஆசமனம் செய்ய வேண்டும். அல்லது தேவர்களால் பூஜிக்கப்படும் விஷ்ணுவை த்யானிக்க வேண்டும். அல்லது ஸூர்யன் முதலிய தேஜஸ்ஸுகளைப் பார்க்க வேண்டும். அல்லது ப்ராணுயாமம் செய்ய வேண்டும். அல்லது அக்னி, பசுக்கள், ப்ராம்ஹணர், யதிகள் இவர்களையாவது சுத்திக்காகப் பார்க்க வேண்டும்.

रत्नावल्याम् – चण्डालाशुद्धपतितान् दृष्ट्वाऽऽचम्य पुनर्जपेत्। तैरेव भाषणं कृत्वा स्नात्वाऽऽचम्य जपेत् पुनः ॥ असत्यभाषणं जिह्मभाषणं वर्जयेत् सदा। सत्यैरपि न भाषेत जपहोमार्चनादिषु इति। नारदः – श्वशूद्रपतितांश्चैव रासभं च रजस्वलाम्। दृष्ट्वा तोयमुपस्पृश्याभाष्य स्नात्वा पुनर्जपेत्॥ मार्जारं कुक्कुटं क्रौञ्चं श्वानं गृध्रं खरं कपिम्। दृष्ट्वाऽऽचम्याचरेत् कर्म स्पृष्ट्वा स्नानं विधीयते इति॥

ரத்னுவளியில்:- சண்டாளன், அசுத்தன், பதிதன் இவர்களைப் பார்த்தால் ஆசமனம் செய்து மறுபடி ஜபிக்க வேண்டும். அவர்களுடன் பேசினுல் ஸ்நானம் செய்து ஆசமனம் செய்து மறுபடி ஜபிக்க வேண்டும். பொய் பேசுவதையும், வக்ரமாய் பேசுவதையும் எப்பொழுதும் வர்ஜிக்க வேண்டும். ஜபம், ஹோமம், தேவபூஜை முதலியவைகளில் ஸத்யமான வார்த்தைகள் கூடப் பேசக்கூடாது. நாரதர்:- நாய், சூத்ரன், பதிதன், கழுதை, ரஜஸ்வலை இவர்களைப் பார்த்தால், ஆசமனம் செய்து பிறகு

ஜபிக்க வேண்டும். இவர்களுடன் பேசினால், ஸ்நானம் செய்து மறுபடி ஜபிக்க வேண்டும். பூனை, கோழி, க்ரௌஞ்சம், நாய், கழுகு, கழுதை, குரங்கு இவைகளைப் பார்த்தால் ஆசமனம் செய்து பிறகு கர்மத்தைச் செய்ய வேண்டும். ஸ்பர்சித்தால் ஸ்நானம் விதிக்கப்படுகிறது.

बोधायनः – सन्ध्ययोरुभयोर्जप्ये भोजने दन्तधावने। पितृकार्ये च दैवे च तथा मूत्रपुरीषयोः ॥ गुरूणां सन्निधौ दाने यागे चैव विशेषतः ॥ एतेषु मौनमातिष्ठन् स्वर्गं प्राप्नोति मानवः इति । योगयाज्ञवल्क्यः – यदि वाग्यमलोपः स्यात् जपादिषु कदाचन । व्याहरेद्वैष्णवं मन्त्रं स्मरेद्वा विष्णुमव्ययम् । तद्विष्णोरिति मन्त्रोऽयं स्मर्तव्यस्सर्वकर्मसु । गायत्री वैष्णवी ह्येषा प्रोक्तेदं विष्णुरित्यपि इति । प्रजापतिः – प्रमादात् कुर्वतां कर्म प्रच्यवत्यध्वरेषु यत् । स्मरणादेव तद्विष्णोः सम्पूर्णं स्यादिति श्रुतिः इति । अध्वरेषु - जपादियज्ञेषु ॥

போதாயனர்:- இரு ஸந்த்யைகளிலும், ஜபத்திலும், போஜனத்திலும், தந்ததாவனத்திலும், பித்ரு கார்யத்திலும், தேவகார்யத்திலும், மலமூத்ர விஸர்ஜனத்திலும், குருக்கள் ஸன்னிதியிலும், தானத்திலும், யாகத்திலும் மௌனத்தை அனுஷ்டிக்கும் மனிதன் ஸ்வர்க்கத்தை அடைவான். **யோக யாக்ஞவல்க்யர்:-** ஜபம் முதலியவைகளில் எப்பொழுதாவது மௌனத்திற்கு லோபம் நேர்ந்தால் விஷ்ணு தேவதாகமான மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். அல்லது விஷ்ணுவை ஸ்மரிக்க வேண்டும். எல்லாக் கர்மங்களிலும், तद्विष्णोः என்ற இந்த மந்த்ரத்தை ஸ்மரிக்க வேண்டும். இது விஷ்ணு காயத்ரீ எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதம் விஷ்ணு: என்ற மந்த்ரமும் அப்படியே. **ப்ரஜாபதி:-** அத்வரங்களில் கர்மங்களை அனுஷ்டிப்பவர்களுக்குக் கவனமின்மையால் ஏதாவது தவறுதல் நேர்ந்தால், அது விஷ்ணுவின் ஸ்மரணத்தினாலேயே ஸம்பூர்ணமாகிவிடும் என்கிறது வேதம். இங்கு 'அத்வரங்களில்' என்ற பதத்திற்கு ஜபம்

முதலிய யக்ஞங்களில் என்பது பொருளாம்.

बोधायनः – नाभेरधः संस्पर्शं कर्मयुक्तो वर्जयेदिति ।। यमोऽपि – नाभेरधः स्वकायं तु स्पृष्ट्वा प्रक्षालयेत् करौ । दक्षिणं वा स्पृशेत् कर्णं स्मरेद्वा विष्णुमव्ययमिति ।।

போதாயனர்:- கர்மங்களை அனுஷ்டிப்பவன் தொப்புளுக்குக் கீழுள்ள அங்கங்களை ஸ்பர்சிக்கக் கூடாது. **யமனும்:-** நாபிக்குக் கீழுள்ள தன் தேஹத்தை ஸ்பர்சித்தால் கைகளை அலம்ப வேண்டும். அல்லது வலது காதைத் தொட வேண்டும். அல்லது அழிவற்ற விஷ்ணுவை ஸ்மரிக்க வேண்டும்.

सुमन्तुः – नान्यथोक्तिर्नान्यमना न च व्यत्यस्तपत्करः । न जपेत् प्रलपन्वाऽपि कृतं निष्फलमुच्यते इति ।। व्यासः – होमः प्रतिग्रहो दानं भोजनाचमने जपः । न बहिर्जानु कार्याणि साङ्गुष्ठानि समाचरेत् ।। उष्णीषी कञ्चुकी नग्नो मुक्तकेशो गलावृतः । चिन्ताव्याकुलचित्तो वा भ्रान्तः क्रुद्धो बुभुक्षितः ।। अनासनः शयानो वा गच्छन्नुद्धृत एव वा । रथ्यायामशिवस्थाने न जपेत्तिमिरावृते ।। उपानद्गूढपादो वा यानशय्यागतस्तथा । प्रसार्य न जपेत् पादावुत्कटासन एव वा ।। जपेन्न प्रौढपादश्च नावष्टब्धोऽलसोऽशुचिः । नासंव्यानो ह्यदर्भश्च नाशिखाकच्छबन्धनः इति ।।

ஸுமந்து:- வேறு பேச்சுக்கள் பேசிக் கொண்டும், வேறிடத்தில் மனதுடனும், கால் கைகளை மாற்றி வைத்துக் கொண்டும், வீண்வார்த்தை பேசிக் கொண்டும் ஜபிக்கக் கூடாது. அப்படி ஜபித்தல் வீணுகுமெனச் சொல்லப்படுகிறது. **வ்யாஸர்:-** ஹோமம், ப்ரதிக்ரஹம், தானம், போஜனம், ஆசமனம், ஜபம் இவைகளை, முழங்காலுக்கு வெளியில் கைகளை வைத்துக் கொண்டு செய்யக் கூடாது. பெருவிரலைச் சேர்த்துக் கொண்டு செய்ய வேண்டும். தலைப்பாகை தரித்தவனும், சட்டை

அணிந்தவனும், வஸ்த்ரம் இல்லாதவனும், அவிழ்ந்த மயிருடையவனும், கழுத்தை வஸ்த்ரத்தால் சுற்றிக் கொண்டு, சிந்தையால் கலக்க முடையவனும், ப்ராந்தனும், கோபம் உடையவனும், பசியுள்ளவனும், ஆஸனமில்லாதவனும், படுத்தவனும், நடப்பவனும், விறைப்புடையவனுமாய் ஜபிக்கக் கூடாது. வீதியிலும் அசுத்த ஸ்தலத்திலும் இருட்டுள்ள விடத்திலும் ஜபிக்கக் கூடாது. பாதரக்ஷை தரித்தவனும், வாஹனம், படுக்கை இவைகளில் இருப்பவனும், கால்களை நீட்டியவனும், உயர்ந்த ஆஸனம் உடையவனும், கால்களைத் தூக்கிக் காட்டுபவனும், தூண் முதலியதில் சாய்ந்து கொண்டும், சோம்பலுடையவனும், அசுத்தனும், உத்தரீயம் இல்லாதவனும், தர்ப்பம் தரியாதவனும், குடுமி கச்சம் இவைகளைக் கட்டாதவனுமாய் ஜபிக்கக் கூடாது.

भरद्वाजः – निष्ठीवजृम्भणे क्रोधनिद्रालस्यक्षुधो मदः । पतितश्वान्त्यजालोका दशैते जपवैरिणः इति ।। शाण्डिल्यः – प्रदक्षिणे प्रणामे च पूजायां हवने जपे । न कण्ठावृतवस्त्रस्स्यात् दर्शने गुरुदेवयोः ।। आचार्यं भगवद्भक्तं भगवन्मन्दिरं जलम् । अश्वत्थमग्निमर्कं च पृष्ठीकृत्य जपेन्न तु ।। आर्द्रवासास्तु यः कुर्यात् जपं होमं प्रतिग्रहम् । सर्वं तद्राक्षसं विद्यात् बहिर्जानु च यत्कृतम् इति ।। आर्द्रवासा इति स्थलविषयम् ।। यदाह व्यासः – यदि स्यात् क्लिन्नवासा वै वारिमध्यगतो जपेत् । अन्यथा तु शुचौ भूम्यां दर्भेषु सुसमाहितः ।। न क्लिन्नवासाः स्थलगो जपादीनाचरेत् बुधः । व्रतादिके नार्द्रवासा आचरेन्नैकवाससा ।। न जीर्णेन न नीलेन परिक्लिष्टेन वा जपेत् इति ।। यदि स्यात् क्लिन्नवासा इति चापद्विषयम्, गायत्रीजपव्यतिरिक्तविषयं वा । मतिमान् न कदाचित्तु गायत्रीमुदके जपेत् । गायत्र्यग्निमुखी प्रोक्ता तस्मादुत्तीर्य तां जपेत् इति गोभिलस्मरणात् ।।

பரத்வாஜர்:- துப்புதல், கொட்டாவி, கோபம், நித்ரை, சோம்பல், பசி, மதம், பதிதனைப் பார்ப்பது, நாயைப் பார்ப்பது, சண்டாளனைப் பார்ப்பது என்ற இந்தப் பத்தும் ஜபத்திற்கு விரோதிகளாம். சாண்டில்யர்:- ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், பூஜை, ஹோமம், ஜபம், குருதர்சனம், தேவதர்சனம் இவைகளில் கழுத்தில் வஸ்த்ரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது. ஆசார்யன், பகவத் பக்தன், பகவதாலயம், ஜலம், அச்வத்த வ்ருக்ஷம், அக்னி, ஸூர்யன் இவர்களைப் பின்புறத்தில் இருக்கச் செய்து ஜபிக்கலாகாது. ஈரவஸ்த்ரத்துடன் ஜபம், ஹோமம், ப்ரதிக்ரஹம் இவைகளைச் செய்தால் அது முழுவதும் ராக்ஷஸர்களைச் சேர்ந்ததாகும். முழங்கால் களுக்கு வெளியில் கைகளை வைத்துக் கொண்டு செய்வதும் ராக்ஷஸமாகும். இங்கு ஈரவஸ்த்துரத்துடன் என்றது ஸ்தலத்தில் செய்யும் ஜபத்தை நிஷேதிப்பதாம். ஏனெனில், வ்யாஸர்:- ஈரவஸ்த்ரத்துடன் இருப்பவனுகில் ஜலத்தின் நடுவில் இருந்து ஜபிக்க வேண்டும். உலர்ந்த வஸ்த்ரம் உடையவனுகில் ஸ்தலத்தில், தர்ப்பத்தின் மேல், கவனமுடையவனுய் ஜபிக்க வேண்டும். அறிஞன் ஈரவஸ்த்ரம் உடையவனுய் ஸ்தலத்திலிருந்து ஜபம் முதலியவைகளைச் செய்யக் கூடாது. வ்ரதம் முதலியதிலும் ஈரவஸ்த்ரத்துடன் ஒன்றும் செய்யக் கூடாது. ஒரு வஸ்த்ரத்துடனும், ஜீர்ணமானதும், கறுப்பானதும், கசங்கியதுமான வஸ்த்ரத்துடனும் ஜபிக்கக் கூடாது. 'ஈரவஸ்த்ரத்துடன் உடனிருந்தால் ஜலத்திலிருந்து ஜபிக்க வேண்டும்' என்ற வ்யாஸ வசனம் ஆபத் விஷயம், அல்லது காயத்ரீ ஜபம் தவிர்த்த மற்ற மந்த்ர ஜப விஷயமாகவாவது ஆகலாம். ஏனெனில், ''அறிவுடையவன் ஒருகாலும் ஜலத்திலிருந்து காயத்ரியை ஜபிக்கக் கூடாது. காயத்ரியை 'அக்னிமுகி' என்று சொல்லுகிருர்கள். ஆகையால் ஜலத்திலிருந்து வெளியேறி ஸ்தலத்தில் காயத்ரியை ஜபிக்க வேண்டும்'' என்று கோபிலர் சொல்லிகிருர்.

सुमन्तुः – खण्डवस्त्रावृतस्यैव वस्त्रार्धालम्बिनस्तथा । उत्तरीयव्यतीतस्य समस्ता निष्फलाः क्रियाः ॥ सङ्ख्या चैवोपवीतेन जपहोमादि निष्फलम् इति ॥ गौतमः – गच्छतस्तिष्ठतो वाऽपि स्वेच्छया कर्म कुर्वतः । अशुचेर्वा विना सङ्ख्यां तत्सर्वं निष्फलं भवेत् इति ॥ तिष्ठत इति वचनं गायत्रीव्यतिरिक्तमन्त्रविषयम् ॥

ஸுமந்து:- துண்டு வஸ்த்ரத்தைத் தரித்தவனும், பாதி வஸ்த்ரம் தரித்தவனும், உத்தரீயம் தரியாதவனும் செய்யும் கர்மங்களெல்லாம் பலனற்றவை ஆகும். பூணூலினுல் கணக்குச் செய்து கொண்டு செய்யும் ஜபம் ஹோமம் முதலியதும் நிஷ்பலமாகும். கௌதமர்:- தன்னிஷ்டப்படி நடந்து கொண்டும், நின்று கொண்டும், அசுத்தனுயும், கணக்கில்லாமலும் கர்மத்தை அனுஷ்டிப்பவனின் கர்மம் முழுவதும் நிஷ்பலமாகும். இங்கு நிற்பதை நிஷேதித்தது காயத்ரியை தவிர்த்த மந்த்ரங்களின் ஜபத்தைப் பற்றியதாம்.

जपाङ्गभूतामक्षमालामाह हारीतः ॥ शङ्खरूप्यमयी माला काञ्चनी निम्बजैः फलैः । पद्माक्षजैश्च रुद्राक्षैः विद्रुमैर्मणिमौक्तिकैः ॥ रजतेन्द्राक्षकैर्माला तथैवाङ्गुलिपर्वभिः । पुत्रजीवमयी माला शस्ता वै जपकर्मणि इति ॥ योगयाज्ञवल्क्यः – स्फटिकेन्द्राक्षरुद्राक्षैः पुत्रजीवसमुद्भवैः । अक्षमाला तु कर्तव्या ह्युत्तमा ह्युत्तरोत्तरा इति ॥ चन्द्रिकायाम् – अक्षसूत्रं तु कर्तव्यं मुक्तामणिमयं शुभम् । सौवर्णं राजतं ताम्रं स्फाटिकं वाऽथ कारयेत् इति ॥

ஜபத்திற்கு அங்கமான அக்ஷமாலையைப் பற்றி ஹாரீதர்:- சங்கு, வெள்ளி, பொன், வேம்பின் கொட்டை, தாமரைக் கொட்டை, ருத்ராக்ஷம், பவளம், ரத்னம், முத்து, வெள்ளி, இந்த்ராக்ஷம், புத்ர ஜீவம் இவைகளாலுள்ள மாலை ஜபத்திற்குச் சிறந்ததாம். விரல்களின் ரேகைகளாலும் ஜபிக்கலாம். யோக யாக்ஞவல்க்யர்:-

ஸ்படிகம், இந்த்ராக்ஷம், ருத்ராக்ஷம், புத்ர ஜீவம் இவைகளால் ஜபமாலை செய்து கொள்ளலாம். இவைகளில் முந்தியதைவிடப் பிந்தியது ச்லாக்யமாகும். **சந்த்ரிகையில்:-** முத்துக்களால் ஜபமாலை செய்ய வேண்டும். அல்லது பொன், வெள்ளி, தாம்ரம், ஸ்படிகம் இவைகளிலொன்றினால் செய்யலாம்.

स्मृत्यर्थसारेऽपि – हस्तेनावर्तयेद्देवीमक्षसूत्रैरथापि वा। सौवर्णै राजतैस्ताम्रैः स्फाटिकै रत्नजैस्तथा ।। अरिष्टैः पुत्रजीवोत्थैरिन्द्राक्षैः शङ्खसम्भवैः। रुद्राक्षैरपि पद्माक्षैः कुशग्रन्थिभिरेव वा ।। मणिभिस्त्वक्षसूत्रं स्यात् तदष्टशतसङ्ख्यया। चतुःपञ्चाशता वाऽपि सप्तविंशतिरेव वा इति ।। प्रजापतिरपि – अष्टोत्तरशतं कुर्याच्चतुःपञ्चाशतं तथा। सप्तविंशतिका कार्या ततो न्यूनान्न कारयेत् इति ।। स्मृत्यन्तरेऽपि – अष्टोत्तरशतैर्माला पञ्चाशच्चतुरुत्तरैः । सप्तविंशतिभिः कार्या सर्वसाधारणे जपे ।। अष्टोत्तरशतैर्माला ह्युत्तमा परिकीर्तिता। चतुःपञ्चाशता माला मध्यमा परिकीर्तिता ।। अधमा प्रोच्यते माला सप्तविंशतिसङ्ख्यया इति ।।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்திலும்:- *கையினால் எண்ணி, காயத்ரியை ஜபிக்க வேண்டும். அல்லது ஜபமாலையினால் ஜபிக்கலாம். பொன், வெள்ளி, தாம்ரம், ஸ்படிகம், ரத்னம், வேம்பு, புத்ர ஜீவம், இந்த்ராக்ஷம், சங்கு, ருத்ராக்ஷம், பத்மாக்ஷம், குசமுடிப்பு, மணி இவைகளிலொன்றினால் ஜபமாலை செய்ய வேண்டும். 108- அல்லது 54- அல்லது 27- மணிகளால் செய்யலாம்.* **ப்ரஜாபதியும்:-** *108- மணிகளால் ஜபமாலை செய்யலாம். அல்லது 54, 27-க்குக் குறைத்துக் செய்யக் கூடாது.* **வேறு ஸ்ம்ருதியில்:-** *எல்லா மந்த்ரங்களுக்கும் பொதுவான ஜபத்தில் ஜபமாலையை 108, 54, 27 மணிகளால் செய்யலாம். 108- உத்தமம். 54- மத்யமம், 27- அதமமாம்.*

गौतमः – अङ्गुल्या जपसङ्ख्यानमेकमेकमुदाहृदम् । रेखयाऽष्टगुणं पुत्रजीवैर्दशगुणाधिकम् ।। शतं स्याच्छङ्खमणिभिः प्रवालैश्च सहस्रकम् । स्फटिकैर्दशसाहस्रं मौक्तिकैर्लक्षमुच्यते ।। पद्माक्षैर्दशलक्षं तु सौवर्णैः कोटिरुच्यते । कुशग्रन्थ्या च रुद्राक्षैरनन्तफलमश्नुते ।। तुलसीकाष्ठघटितैर्मणिभिर्जपमालिका । सर्वकर्मणि सर्वेषामीप्सितार्थफलप्रदा ।। तत्राङ्गुलिजपं कुर्वन् साङ्गुष्ठाङ्गुलिभिर्जपेत् । अङ्गुष्ठेन विना कर्म कृतं तदफलं यतः ।। अङ्गुलीर्न नियुञ्जीत किञ्चिदाकुञ्चिते तले । अङ्गुलीनां नियोगात्तु छिद्रेषु स्रवते जपः इति ।।

योगवासिष्ठे – संसारान्मोक्षमिच्छन् यः स सन्त्यज्यैषणात्रयम् । सर्वदा पौरुषं सूक्तं मनसैव जपेच्छुचिः इति ।। शौनकः – पुरुषस्य हरेः सूक्तं सर्वपापप्रणाशनम् । यस्तु पौरुषसूक्तस्य जानात्यर्थं यथातथम् ।। स जन्मनीह मुक्तस्स्यात् पुरुषेषु च दर्शनात् । विष्णुः पुरुषसूक्तार्थः पुरुषोऽध्यवसीयते इति ।।

யமன்:- விரஜாமந்த்ரங்களை இருமுறை ஜபித்தால் அன்றே சுத்தனாகிறான். புருஷ ஸூக்தத்தை இருமுறை ஜபித்தால் ஸகல பாபங்களாலும் விடுபடுகிறான். **ஸம்வர்த்தர்:-** நியமத்துடனும், ஆஹார நியமத்துடனும், ஆறு, அல்லது ஐந்து மாஸங்கள் புருஷ ஸூக்தத்தை ஜபித்தால் ஸகல பாபங்களாலும் விடுபடுகிறான். **சதுர்விம்சதி மதத்தில்:-** பாவமான மந்த்ரங்கள், ருத்ரம், புருஷஸூக்தம், மாதுச்சந்தஸம் இவைகளை ஜபித்தால் பாபங்களால் விடுபடுவான். **யோகவாஸிஷ்டத்தில்:-** ஸம்ஸாரத்தினின்றும் மோக்ஷத்தை விரும்பியவன் மூன்று ஏஷணைகளையும் விட்டு, சுத்தனாய் எப்பொழுதும் புருஷஸூக்தத்தை மனதினாலேயே ஜபிக்க வேண்டும். **சௌனகர்:-** புருஷனெனும் ஹரியின் ஸூக்தம் ஸகல பாபங்களையுமகற்றக் கூடியது. புருஷஸூக்தத்தின் பொருளை எவன் நன்கு அறிகின்றானோ அவன் இந்த ஜன்மத்திலேயே முக்தனாகிறான். புருஷர்களுள் காணப்படுவதால் விஷ்ணுவே புருஷஸூக்தத்தின் பொருளான புருஷனென நிச்சயிக்கப்படுகிறது.

काम्यानि जप्यानि

अथ काम्यानि जप्यानि ।। तत्र पुलस्त्यः – ''कामः कामप्रदः कान्तः कामपालस्तथा हरिः । आनन्दो माधवश्चैव कामसंसिद्धये जपेत् ।। एतानि नामानीत्यर्थः ।। रामः परशुरामश्च नृसिंहो विष्णुरेव च । त्रिविक्रमश्चेत्येतानि जप्यान्यरिजिगीषुभिः ।। विद्यामभ्यस्यता नित्यं जप्तव्यः पुरुषोत्तमः । दामोदरं बन्धगतः नित्यमेव जपेन्नरः ।।

केशवं पुण्डरीकाक्षमनिशं हि तथा जपेत्। नेत्रबाधासु सर्वासु हृषीकेशं भयेषु च ।। अच्युतं चामृतं चैव स्मरेदौषधकर्मणि। सङ्ग्रामाभिमुखो नित्यं संस्मरेदपराजितम्। नित्यं संस्मरेदपराजितम्।। चक्रिणं गदिनं चैव शार्ङ्गिणं खड्गिनं तथा। क्षेमार्थी प्रवसन्नित्यं दिक्षु प्राच्यादिषु स्मरेत् ।। अजितं चाधिपं चैव सर्वं सर्वेश्वरं तथा। संस्मरेत् पुरुषो भक्त्या व्यवहारेषु सर्वदा ।।

காம்ய ஜப்யங்கள்

இனி காம்ய ஜப்யங்கள் சொல்லப்படுகின்றன. **புலஸ்த்யர்:**- *காமன், காமப்ரதன், காந்தன், காமபாலன், ஹரி, ஆனந்தன், மாதவன் என்ற நாமங்களை விருப்பம் ஸித்திப்பதின் பொருட்டு ஜபிக்க வேண்டும். ராமன், பரசுராமன், ந்ருஸிம்ஹன், விஷ்ணு, த்ரிவிக்ரமன் என்ற நாமங்களைச் சத்ருஜயத்தை விரும்பியவர்கள் ஜபிக்க வேண்டும். புருஷோத்தமன் என்ற நாமத்தை, வித்யையை அப்யஸிப்பவன் எப்பொழுதும் ஜபிக்கவேண்டும். தாமோதரன் என்ற நாமத்தைக் கட்டிலிருப்பவன் ஜபிக்க வேண்டும். கண்களில் தொந்தரைகளில், கேசவன், புண்டரீகாக்ஷன் என்பவற்றையும், பயகாலங்களில் ஹ்ருஷீகேசனையும், ஔஷதஸேவையில் அச்யுதன், அம்ருதன் என்பதையும், யுத்தத்தை நோக்கியவன் அபராஜிதன் என்பதையும் ஜபிக்க வேண்டும். தூரதேசம் செல்பவன் க்ஷேமத்தை விரும்பி, கிழக்கு முதலிய நான்கு திசைகளிலும், முறையே சக்ரீ, கதீ, சார்ங்கீ, கட்கீ என்ற நாமங்களை ஸ்மரிக்க வேண்டும். வ்யவஹாரங்கள் எல்லாவற்றிலும் அஜிதன் அதிபன், ஸர்வன், ஸர்வேச்வரன் என்ற நாமங்களைப் பக்தியுடன் எப்பொழுதும் ஸ்மரிக்க வேண்டும்.*

नारायणं सर्वकालं क्षुतप्रस्खलनादिषु । ग्रहनक्षत्रपीडासु देवबाधासु सर्वदा । दस्युवैर्यादिरोधेषु व्याघ्रसिंहादिसङ्कटे। अन्धकारे महाघोरे नरसिंहमनुस्मरेत् ।। तरत्यखिलदुर्गाणि तापार्तो

जलशायिनम् । गरुडध्वजानुस्मरणात् विषवीर्यं प्रशाम्यति ॥ स्नाने देवार्चने होमे प्रणिपाते प्रदक्षिणे । कीर्तयेद्भगवन्नाम वासुदेवेति तत्परः । स्थापने वित्तधान्यादेरपध्याने च दृष्टिजे । कुर्वीत तन्मना भूत्वा अनन्ताच्युतकीर्तनम् ॥ नारायणं शार्ङ्गधरं श्रीधरं पुरुषोत्तमम् । वामनं खड्गिनश्चैव दुःस्वप्नेषु सदा स्मरेत् ॥ एकार्णवादौ पर्यङ्कशायिनं च सदा स्मरेत् । बलभद्रं समृद्ध्यर्थी सीरकर्मणि कीर्तयेत् ॥ जगत्पतिं त्वपत्यार्थी स्तुवन् भक्त्या न सीदति । श्रीशं सर्वाभ्युदयिके कर्मण्याशु प्रकीर्तयेत् ॥ अरिष्टेष्वप्यशेषेषु विशोकं च सदा जपेत् ॥ मरुत् प्रवाताग्निजलबन्धनादिषु मृत्युषु ॥ स्वतन्त्रपरतन्त्रेषु वासुदेवं जपेद्बुधः । सर्वार्थशक्तियुक्तस्य देवदेवस्य चक्रिणः । यद्वाऽभिरोचते नाम तत् सर्वार्थेषु कीर्तयेत् ॥ सर्वार्थ सिद्धिमाप्नोति नाम्ना सर्वार्थदायिनः इति ।

தும்மல், கால்தடுக்குதல் இவைகளில் நாராயணனை ஸ்மரிக்க வேண்டும். நவக்ரஹ நக்ஷத்ர பீடைகளிலும், தேவர்களின் பாதைகளிலும், திருடர், சத்ரு இவர்களால் தடைகளிலும், புலி, சிங்கம் முதலியவற்றால் ஸங்கடத்திலும், பயங்கரமான இருளிலும் நரஸிம்ஹனை ஸ்மரிக்க வேண்டும். தாபத்தால் வருந்தியவன் ஜலசாயியை ஸ்மரிக்க வேண்டும். ஸகல கஷ்டங்களையும் தாண்டுவான். கருடத்வஜனை ஸ்மரிப்பதால் விஷத்தின் வீர்யம் நசிக்கும். ஸ்நானம், தேவார்ச்சனம், ஹோமம், நமஸ்காரம், ப்ரதக்ஷிணம் இவைகளில் வாஸுதேவன் என்னும் பகவந்நாமத்தைப் பக்தியுடன் உச்சரிக்க வேண்டும். தனம், தான்யம் இவைகளை ஸ்தாபித்தலிலும், த்ருஷ்டி தோஷத்தால் உண்டாகும் கெடுதியிலும், அனந்த அச்யுத நாமங்களை சலிக்காத மனதுடையவனாய் ஜபிக்க வேண்டும். நாராயணன், சார்ங்கதரன், ஸ்ரீ தரன், புருஷோத்தமன், வாமனன், கட்கீ என்ற நாமங்களை துஷ்டஸ்வப்னங்களில் எப்பொழுதும் ஸ்மரிக்க

வேண்டும். கடலில் பர்யங்கசாயீ என்ற நாமத்தை ஜபிக்க வேண்டும். கலப்பையாலுழும் கார்யத்தில் வ்ருத்தியை விரும்பியவன் பலபத்ரனின் நாமத்தை ஜபிக்க வேண்டும். குழந்தையை விரும்பியவன் பக்தியுடன் ஜகத்பதி என்ற நாமத்தால் ஸ்துதித்தால் குறைவை அடையான். நன்மையளிக்கும் எல்லாக் கர்மத்திலும் ஸ்ரீசன் என்ற நாமத்தை உச்சரிக்க வேண்டும். எவ்விதமான அமங்களங்கள் நேர்ந்தாலும் விசோகன் என்ற நாமத்தை ஜபிக்க வேண்டும். காற்று, புயல், நெருப்பு, ஜலம், கட்டுதல், ஸ்வாதீனமாயும், பராதீனமாயுமுள்ள மரணகாரணங்கள் இவைகளில் வாஸுதேவ நாமத்தை ஜபிக்க வேண்டும். ஸகல விஷயஸாதன சக்தியுடன் கூடியவனும், தேவர்களுக்குத் தேவனுமான சக்ராயுதனின் நாமங்களுள் இஷ்டமான எந்த நாமத்தையாவது எந்தக் கார்யத்திலும் ஜபிக்கலாம். ஸகல புருஷார்த்தங்களை அளிக்கும் ஹரியின் நாமத்தால் ஸர்வ கார்யஸித்தியையும் அடைவான்.

जाबालिः – हरेर्नाम परं जप्यं ध्येयं गेयं निरन्तरम्। कीर्तनीयं च सततं निर्वृतिं बहुधेच्छता इति ।। विश्वामित्रः – विश्रुतानि बहून्येव तीर्थानि विविधानि च। कोट्यंशेनापि तुल्यानि हरिनामजपेन वै ।। श्रीरामनाम नियतं परिचिन्तनीयं वृत्तं हि निष्ठितमिदं सततं द्विजेषु। जन्मार्जितानि विविधान्यपहाय दुःखान्यत्यन्त धर्मनिचयं हरिलोकमेति इति ।। बोधायनः – इष्टापूर्तानि कर्माणि सुबहूनि कृतान्यपि। भवहेतूनि तान्येव हरेर्नाम तु मुक्तिदम् इति ।। कात्यायनः – अर्थवादं हरेर्नाम्नि संभावयति यो नरः। स पापिष्ठो मनुष्याणां नरके पतति ध्रुवम् इति ।।

ஜாபாலி:- ஹரியின் நாமம் சிறந்தது. பலவிதமாயும் ஸந்தோஷத்தை விரும்பிகின்றவனால் அது ஜபிக்கத் தகுந்தது, த்யானிக்கத் தகுந்தது, பாடத்தகுந்தது, இடைவிடாது கீர்த்தனம் செய்யத் தகுந்தது. விச்வாமித்ரர்:-

பலவிதங்களான அநேக தீர்த்தங்கள் ப்ரஸித்தங்களாகவேயுள்ளன. அவைகளெல்லாம், ஹரிநாம ஜபத்தின் கோடியிலொரு பாகத்துடனும் ஸமமாகாது. ஸ்ரீ ராமநாமத்தை அவச்யம் சிந்திக்க வேண்டும். இந்த ஆசாரம் ப்ராம்ஹணர்களிடத்தில் எப்பொழுதுமுள்ளது. ஜபிப்பவன் இப்பிறப்பில் செய்யப்பட்டுள்ள ஸகல (துக்க) பாபங்களையும் விடுத்து, விசேஷ புண்யங்களாலடையக் கூடிய விஷ்ணுலோகத்தை அடைவான். **போதாயனர்:-** இஷ்டங்களையும் (யாகங்கள்) பூர்த்தங்களையும் (குளம் வெட்டுவது முதலியவை) வெகுவாய்ச் செய்தாலும் அவையெல்லாம் ஸம்ஸாரத்திற்குக் காரணங்களேயாம். ஹரிநாமமே தான் முக்தியைக் கொடுப்பதாகும். **காத்யாயனர்:-** எந்த மனிதன் ஹரிநாமத்தில் அர்த்தவாதத்தைச் சங்கிக்கின்றானோ அவன் மனிதர்களுள் மஹாபாபியாவான். அவச்யம் நரகத்தில் விழுவான்.

वसिष्ठः – हित्वा सकलपापानि लब्ध्वा सुकृतसञ्चयम्। सुपूतो जायते धीमान् मुरजिन्नामकीर्तनात्। कृष्ण कृष्णेति रामेति सञ्जपन् हरितत्परः । राजसूयसहस्राणां फलं प्राप्नोति मानवः । नित्यकर्माविरुद्धेषु कालेषु जप इष्यते इति ।। भृगुः – कोटिशो मनुजानां वै भीतिदं समुपस्थितम्। राम रामेति सङ्कीर्त्य तन्नाशयति मानवः इति । गालवः – सर्वक्लेशयुतो वाऽपि सर्वरोगादिसंयुतः । सर्वपापयुतो यस्तु नृहरेर्नामकीर्तनम्।। कृत्वा विमुच्य दुःखानि याति ब्रह्म सनातनम् इति ।। च्यवनः – श्रुतिस्मृतिपुराणेषु रामनाम समीरितम् । तन्नामकीर्तनं भूयस्तापत्रयविनाशनम् ।। सर्वेषामेव पापानां प्रायश्चित्तमिदं स्मृतम्। नातः परतरं पुण्यं त्रिषु लोकेषु विद्यते इति ।।

வஸிஷ்டர்:- புத்திமான் விஷ்ணு நாமங்களை உச்சரிப்பானாகில், ஸகல பாபங்களையும் விட்டு, மிகுந்த புண்யத்தையடைந்து மிகப் பரிசுத்தனாகிறான். மனிதன்

ஹரிபக்தனுய், க்ருஷ்ண க்ருஷ்ண என்றும் ராம என்றும் நன்ருய் ஜபித்தால் ஆயிரம் ராஜஸூய யாகங்கள் செய்த புண்யத்தை அடைவான். நித்ய கர்மங்களுக்கு விரோதமில்லாத காலங்களில் பகவந் நாமஜபம் விதிக்கப்படுகிறது. ப்ருகு:- மனிதர்களுக்குப் பயத்தைக் கொடுக்கும் காரணம் கோடிக்கணக்காய் ஸமீபத்திலேயே இருக்கிறது. மனிதன் ராம ராம என்று நன்ருய் ஜபித்தால் அதைப் போக்கிக் கொள்வான். காலவர்:- ஸகல கஷ்டங்களுடன் கூடியவனுயினும், ஸர்வ ரோகங்களுடன் கூடியவனுயினும், ஸகல பாபங்களுடன் கூடியவனு யினும், நரஸிம்ஹனின் நாமத்தை ஜபித்தால் துக்கங்களை விட்டு, சாச்வதமான ப்ரம்ஹத்தை அடைகிருன். ச்யவனர்:- வேதங்கள், ஸ்ம்ருதிகள், புராணங்கள் இவைகளில் ராமநாமம் சொல்லப்பட்டுள்ளது. அந்த ராமநாம கீர்த்தனம் மூன்று தாபங்களையும் போக்கக் கூடியது. இது ஸகல பாபங்களுக்கும் ப்ராயச் சித்தமாக விதிக்கப்பட்டுள்ளது. இதைவிடச் சிறந்த புண்யமாகியது மூன்று உலகங்களிலுமில்லை.

माण्डव्यः —— सुरापो ब्रह्महा स्तेयी रोगी भग्नव्रतोऽशुचिः । स्वाध्यायवर्जितः पापो लुब्धो नैकृतिकश्शठः ॥ सोऽपि मुक्तिमवाप्नोति विष्णुनामजपाद्ध्रुवम् इति । योगयाज्ञवल्क्यः – न तावत् पापमेधीत यन्नाम्ना न हतं हरेः । अतिरेकभयादाहुः प्रायश्चित्तान्तरं वृथा इति ॥ वसिष्ठः – हरिपूजापरो यस्तु हरिनामपरायणः । स स्नातः सर्वतीर्थेषु सर्वयज्ञेषु दीक्षितः ॥ श्रीशब्दपूर्वं जयशब्दमध्यं जयद्वयादुत्तरतस्तथैव । त्रिः सप्तकृत्वो रघुनाथनाम जप्तं विहन्याद्द्विजकोटिहत्याम् इति ॥ श्री शब्दः पूर्वः यस्य रघुनाथनाम्नः रामशब्दस्य सम्बुध्यन्तस्य, सः श्रीशब्दपूर्वः श्रीरामेति शब्दः । ततः मध्ये जयशब्दः यस्य रामशब्दस्य, सः जयरामशब्दः । ततो जयजयेति शब्दः । ततो रामेति । 'श्रीराम जयराम जयजयराम' इति त्रयोदशाक्षरः ।

மாண்டவ்யர்:- மத்யபானம் செய்தவன், ப்ராம்ஹணவதம் செய்தவன், ஸ்வர்ணத்தைத் திருடியவன், விசேஷ ரோகமுள்ளவன், வ்ரதங்களை விட்டவன், அசுத்தன், வேதாத்யயனம் இல்லாதவன், பாபி, லோபி, வஞ்சகன், சடன், இவர்களுள் யாராயினும் விஷ்ணுநாமத்தை ஜபித்தால், நிச்சயமாய் முக்தியை அடைவான். **யோகயாக்ஞவல்க்யர்:-** ஹரியின் நாமத்தால் போக்கப்படாமல் உள்ள பாபமெதுவும் இல்லை. ஒருகால் இருக்குமோவென்ற பயத்தால் (முன்னோர்கள்) வேறு ப்ராயச் சித்தங்களை வீணாய்ச் சொல்லுகின்றனர். **வஸிஷ்டர்:-** எவன் ஹரிபூஜையிலும், ஹரிநாம கீர்த்தனத்திலும் ஈடுபட்டள்ளவனோ அவன் ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவனும், ஸகல யாகங்களிலும் தீக்ஷிதனுமாகிறான். 'ஸ்ரீ ராம ஜயராம ஜயஜயராம' என்ற பதின்மூன்று அக்ஷரங்களுள்ள மந்த்ரத்தை இருபத்தொருமுறை ஜபித்தால் அது கோடி ப்ரம்ஹஹத்யா தோஷத்தையும் போக்கக் கூடியது.

पैठीनसिः — सर्वपापप्रसक्तोऽपि ध्यायन्निमिषमच्युतम् । पुनस्तपस्वी भवति पङ्क्तिपावनपावनः ॥ यस्येदं जन्म पाश्चात्यं यो भवेच्छङ्करः स्वयम् । तेनैषा लभ्यते विद्या श्रीमत्पञ्चदशाक्षरी ॥ आदौ तु शिवरामेति गोविन्देति ततः परम् । नारायण महादेवेत्येषा पञ्चदशाक्षरी ॥ महादेव महादेव महादेवेति यो वदेत् । एकेनैव लभेन्मुक्तिं द्वाभ्यां शम्भुः ऋणी भवेत् इति ॥

பைடீநஸி:- எல்லாப் பாபங்களுடனும் கூடியவனாயினும், ஒரு நிமிஷம் அச்யுதனை த்யானித்தால், அவன் மிகுந்த தபஸ்ஸுடையவனாகவும், பங்க்தி பாவனர்களுக்கும் பாவனனாகவும் ஆகிறான். எவனுக்கு இந்த ஜன்மமே கடைசி ஜன்மமோ. எவன் தான் ஈச்வரனாக இருக்கக்கூடுமோ அவனே, மேல் சொல்லப் போகும் பதினைந்து அக்ஷரங்களுடைய மந்த்ரத்தை அடையக்கூடும். ஆதியில் சிவ ராம என்றும், பிறகு கோவிந்த என்றும், பிறகு

நாராயண மஹாதேவ என்றும் பதினைந்து அக்ஷரங்கள் கூடிய இது பஞ்சதசாக்ஷரீ மந்த்ரமாம். (சிவராம கோவிந்த நாராயண மஹாதேவ என்பதாம்) மஹாதேவ மஹாதேவ என்று உச்சரிப்பானாகில், அவனுக்கு ஒரு பதத்தாலேயே மோக்ஷமுண்டாகும். பாக்கியமான இரண்டு பதங்களுக்கு பலனிக்க முடியாததால் ஈச்வரன் கடனாளியாகிறார்.

नारदः —— महादेव विरूपाक्ष गङ्गाधर मृडाव्यय। इतीरयन्ति ये नित्यं ते कृतार्था न संशयः ॥ गोसहस्रप्रदानस्य त्वश्वमेधक्रतोरपि। फलं यद्विद्यते तद्धि प्रोक्तं रुद्रेति कीर्तनात् इति ॥ ब्रह्मकैवर्ते – महापातकयुक्तोऽपि कीर्तयन्ननिशं हरम्। शुद्धान्तःकरणो भूत्वा जायते पङ्क्तिपावनः इत्यादीनि वचनानि हरिहरनामवैभवप्रतिपादकानि स्मृतिपुराणेषु सहस्रशस्सन्ति । तानीह ग्रन्थविस्तरभीत्या न लिख्यन्ते ।

நாரதர்:- மஹாதேவ, விரூபாக்ஷ, கங்காதர, ம்ருட, அவ்யய என்ற நாமங்களை எவர் நித்யமும் ஜபிக்கின்றனரோ அவர்கள் க்ருதார்த்தர்கள், ஸம்சயமில்லை. 'ருத்ர' என்று ஜபிப்பதால், ஆயிரம் கோதானத்திற்கும், அச்வமேத யாகத்திற்கும் எந்தப் பலனோ அந்தப் பலனுண்டாகுமெனச் சொல்லப்பட்டுள்ளது. ப்ரம்ஹகைவர்த்தத்தில்:- மஹா பாபங்களுடன் கூடியவனாயினும் எப்பொழுதும் ஹர என்ற நாமத்தை ஜபித்தால், அவன் சுத்தமான மனமுடையவனாகி, பங்க்தி பாவனனாகிறான். இது முதலாகிய வசனங்கள் விஷ்ணு சிவ நாமங்களில் மேன்மையைச் சொல்லுகின்றனவாய் ஸ்ம்ருதிகளிலும் புராணங்களிலும் ஆயிரக்கணக்காய் இருக்கின்றன. அவைகளை முழுவதும் எழுதுவதானால் க்ரந்தம் விரிவையடையும் என்ற பீதியால் இங்கு எழுதவில்லை.

—*—

जपयज्ञप्रशंसा

जपयज्ञप्रशंसामाह वसिष्ठः— ये पाकयज्ञाश्चत्वारो विधियज्ञसमन्विताः । सर्वे ते जपयज्ञस्य कलां नार्हन्ति षोडशीम् ॥ पाकयज्ञाः - देवयज्ञादयः । विधियज्ञः - ज्योतिष्टोमादिः । यथाऽग्निर्वायुना धूतो हविषा चैव दीप्यते । एवं जप्यपरो नित्यं मन्त्रयुक्तः सदा द्विजः इति ॥ मनुरपि – विधियज्ञात् जपयज्ञो विशिष्टो दशभिर्गुणैः । उपांशुः स्याच्छतगुणः सहस्रो मानसः स्मृतः ॥ जप्येनैव तु संसिध्येद्ब्राह्मणो नात्र संशयः । कुर्यादन्यन्न वा कुर्यान्मैत्रो ब्राह्मण उच्यते इति ॥ सर्वानुकूल्यं मैत्री । तस्मान्मैत्रत्वेन हिंसानुबन्धिनो विधियज्ञात् जपयज्ञो ब्राह्मणस्य विशिष्टतर इत्यर्थः ॥ हारीतः – जपेन देवता नित्यं स्तूयमाना प्रसीदति । प्रसन्ने विपुलान् भोगान् प्राप्नुवन्ति मनीषिणः ॥ यक्षरक्षःपिशाचाश्च ग्रहाः सर्वे विभीषणाः । जापिनं नोपसर्पन्ति दूरादेवापयान्ति ते इति ॥

ஜபயக்ஞப்ரசம்ஸை

ஜபயக்ஞத்தின் ப்ரசம்ஸையைச் சொல்லுகின்றார். **வஸிஷ்டர்:-** *தேவயக்ஞம் முதலிய நான்கு பாகயக்ஞங்களும், ஜ்யோதிஷ்டோமம் முதலிய விதியக்ஞங்களும், ஜபயக்ஞத்தின் பதினாறிலொரு பாகத்திற்குச் சமமாவதில்லை. அக்னியானது எப்படி காற்றினால் வீசப்பட்டு, நெய் முதலிய ஹவிஸ்ஸினால் ஜ்வலிக்கின்றதோ அவ்விதமே மந்த்ரத்துடன் கூடிய ப்ராம்ஹணன் ஜபயக்ஞத்தால் விசேஷமாய் ப்ரகாசிக்கின்றான்.* **மனுவும்:-** *விதியக்ஞத்தை (தர்ச பௌர்ணமாஸாதிகளை) விட ஜபயக்ஞம் பத்துமடங்கு சிறந்ததாகும். உபாம்சு ஜபம் நூறு மடங்கு சிறந்தது. மாநஸ ஜபம் ஆயிரம் மடங்கு சிறந்தது. (ஸமீபத்தில் இருப்பவனும் கேட்க முடியாமல் ஜபிப்பது உபாம்சு ஜபம். நாக்கும் உதடுகளும் அசையாமல் ஜபிப்பது மானஸ ஜபம்.)*

ப்ராம்ஹணன் ஜபயக்ஞத்தினலேயே ஸித்தியை (மோக்ஷத்தை) அடைகிறான், மற்ற யாகம் முதலியதைச் செய்தாலும் செய்யா விடினும், எல்லோருக்கும் மித்ரனுயிருப்பவன் ப்ரம்ஹ ஸம்பத்தியையடைகிற னென்று (வேதங்களில்) சொல்லப்படுகிறது. (எல்லோருக்கும் அனுகூலமாயிருத்தல் மைத்ரீ. ஆகையால் ஜபயக்ஞம் செய்பவன் எல்லோருக்கும் மித்ரனு யிருப்பதால், பசு பீஜாதி ஹிம்ஸையுடன் கூடிய விதியக்ஞத்தைவிட ஜபயக்ஞம் ப்ராம்ஹணனுக்கு மிகச் சிறந்ததென்பது பொருளாம்.) ஹாரீதர்:- ப்ரதிதினமும் ஜபத்தினல் ஸ்துதிக்கப்படும் தேவதை ப்ரஸன்னமாகிறது. தேவதை ப்ரஸன்னமானல் பக்தர்கள் மிகுந்த போகங்களை அடைகின்றனர். பயங்கரர்களான யக்ஷர், ராக்ஷஸர், பிசாசர், க்ரஹங்கள் இவர்களெல்லோரும் ஜபசீலனுக்குச் சமீபத்திற்கூட வருவதில்லை. தூரத்திலேயே போய்விடுகிறார்கள்.

—*—

अभ्युक्षणाहरणविधिः

अथाभ्युक्षणाहरणविधिः ॥ तत्र शाट्यायनिः – ततः सूर्यमुपस्थाय सम्यगाचम्य च स्वयम् । अभ्युक्षणं समादाय संयतात्मा गृहं व्रजेत् इति ॥ आचम्य द्विरिति शेषः ॥ तथा च वृद्धमनुः – ततः सम्यग्द्विराचम्य अभ्युक्षणमुदाहरेत् । न विनाऽभ्युक्षणं जातु विधिज्ञः किञ्चिदाचरेत् ॥ अभ्युक्षणं - प्रोक्षणार्थं जलम् । तद्विना अप्रोक्षिते गृहे न किञ्चित् कर्माचरेदिति यावत् ॥ स एव – नाहरेदेकवस्त्रस्तु नाव्रतो न च कन्यका । न पाणिना न वस्त्रेण तोयमभ्युक्षणाय वै ॥ प्रोक्षणग्रहणं पात्रं निदधद्गृहमागतः । अकृत्वाऽऽचमनं (भूमौ) पूर्वमाचान्तः प्रयतो भवेत् इति ॥ पुलस्त्यः – तेन द्रव्याण्यशेषाणि प्रोक्ष्याचम्य पुनर्गृहे । ततः कर्माणि कुर्वीत सत्क्रियाश्च द्विजोत्तमः इति ।

அப்யுக்ஷணம் (ப்ரோக்ஷணத்திற்குரிய ஜலம்) கொண்டுவருவதின் விதி

இனி ப்ரோக்ஷண ஜலம் கொண்டு வரும் விதி சொல்லப்படுகிறது. அதில் சாட்யாயனி:- பிறகு ஸூர்யோபஸ்தானம் செய்து விதிப்படி ஆசமனமும் செய்து, தானே ப்ரோக்ஷண ஜலத்தை எடுத்துக் கொண்டு, சுத்தனுய் வீட்டிற்குச் செல்ல வேண்டும். இங்கு ஆசமனம் என்றதில் இருமுறை என்று சேர்க்க வேண்டும். அவ்விதமே வ்ருத்தமனு:- பிறகு விதிப்படி இருமுறை ஆசமனம் செய்து அப்யுக்ஷண ஜலத்தைக் கொண்டு போகவேண்டும். விதியை அறிந்தவன் அந்த ஜலமின்றி, ஒருபொழுதும், எக்கர்மத்தையும் செய்யக் கூடாது. (அந்த ஜலத்திஞல் ப்ரோக்ஷிக்கப்படாத க்ருஹத்தில் ஒரு கர்மாவையும் செய்யக்கூடாதென்பது பொருள்.) **வ்ருத்தமனு**:- ஒரு வஸ்த்ரத்துடன் இருப்பவனும், அனுபநீதனும், விவாஹமாகாத பெண்ணும், அப்யுக்ஷணம் கொண்டு வரக்கூடாது. கையிஞலும், வஸ்த்ரத்திஞலும் கொண்டு வரக்கூடாது. ப்ரோக்ஷண ஜல பாத்ரத்தைக் கொண்டு வந்து வீட்டில் வைப்பதற்கு முன் ஆசமனம் செய்யாவிடில், பிறகு ஆசமனம் செய்து சுத்தஞகிருன். **புலஸ்த்யர்**:- அந்த ஜலத்திஞல் வீட்டில் ஸகல த்ரவ்யங்களையும் ப்ரோக்ஷித்து மறுபடி ஆசமனம் செய்து, பிறகு வீட்டிற்குரிய கார்யங்களையும் நற்கார்யங்களையும் செய்ய வேண்டும்.

प्रचेताः — सङ्गृह्याभ्युक्षणं यायात् सोपानत्को गृहं प्रति । तदत्यक्त्वा गृहं प्राप्य आचामेत् परिचारकात् इति ।। गार्ग्यायणिः – सोपानत्कः सदर्भश्च पात्रस्थं सदशोत्तरः इति । जलमाहरेदिति शेषः । सदशमुत्तरीयं यस्य स तथोक्तः ।। प्रचेताः – नाहरेदेकजातिस्तु न शिशुर्न च कन्यका । नानुपेतो नैकवस्त्रस्तोयमभ्युक्षणाय वै इति ।। यमः – पात्राद्भिरहितं तोय मुद्धृतं सव्यपाणिना । न तेन प्रोक्षणं कुर्याद्वस्त्रनिष्पीडितेन च इति ।। शाट्यायनिः – (आश्मं अब्जं

हिरण्मयं रौप्यं दारवं मृन्मयं दृढम्। ताम्रं पत्रपुटं रम्यं पात्रमभ्युक्षणाय वै इति ॥

ப்ரசேதஸ்:- அப்யுக்ஷணத்தை எடுத்துக் கொண்டு பாதரக்ஷையுடன் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அந்த ஜலபாத்ரத்தைக் கீழே வைக்காமல், அன்யனால் கொடுக்கப்பட்ட ஜலத்தால் ஆசமனம் செய்ய வேண்டும். **கார்க்யாயணீ:-** பாதரக்ஷை தரித்தவனும், தர்ப்பை தரித்தவனும், தலைப்புடன் கூடிய உத்தரீயம் தரித்தவனுமாய், பாத்ரத்திலுள்ள ஜலத்தைக் கொண்டு வரவேண்டும். **ப்ரசேதஸ்:-** சூத்ரன், குழந்தை, விவாஹமாகாத பெண், அனுபநீதன், ஒரு வஸ்த்ரமுடையவன் இவர்கள் ப்ரோக்ஷணத்திற்குரிய ஜலத்தைக் கொண்டு வரக்கூடாது. **யமன்:-** பாத்ரமில்லாமல் கொண்டு வந்ததும், இடது கையினாலெடுக்கப்பட்டதும், வஸ்த்ரத்தைப் பிழிந்தெடுக்கப்பட்டதுமான ஜலத்தினால் ப்ரோக்ஷணம் செய்யக் கூடாது. **சாட்யாயனி:-** (கல்) ஜலத்தில் உண்டாகும் சங்கு முதலியது, தங்கம், வெள்ளி, மரம், மண், தாம்ரம், இலை இவைகளிலொன்றினால் ஏற்பட்ட பாத்ரம், ப்ரோக்ஷண ஜலம் கொண்டு வருவதற்குரியதாகும்.

योगयाज्ञवल्क्यः – सौवर्णं राजतं ताम्रं मुख्यं पात्रं प्रकीर्तितम्। तदलाभे स्मृतं पात्रं स्रवते यन्न दारितम् इति ॥ शातातपः – शैवालतृणपर्णाद्यैरसंस्काराम्बुभाजनैः । सिकतावस्त्रले(ा)पेन न कुर्यात् प्रोक्षणं बुधः इति ॥ आपस्तम्बः – नालिकाभिन्नपात्रेण कांस्यपात्रेण चैव हि। प्राण्यङ्गफलजेनापि कुर्यान्नाभ्युक्षणं द्विजः ॥ शैवालवालुकादूर्वातृणपर्यायसैरपि । अभ्युक्षणं न गृह्णीयादापस्तम्बोऽब्रवीन्मुनिः इति ॥ नालिका - वेणुमयी । प्राण्यङ्गं - शङ्खशुक्त्यादि। फलजं - नालिकेरादि॥

யோகயாக்ஞவல்க்யர்:- பொன், வெள்ளி, தாம்ரம் இவைகளால் உண்டாகிய பாத்ரம் முக்யமாகும். அது கிடைக்காவிடில், பிளவையில்லாததும், ஒழுகாததுமான பாத்ரம் எதையாவது உபயோகிக்கலாமென விதிக்கப்பட்டுள்ளது. **சாதாதபர்:**- நீர்ப்பாசி, புல், இலை இவைகளாலும், சுத்தியில்லாத ஜல பாத்ரங்களாலும் கொண்டு வந்ததும், மணலுடனுள்ளதும், வஸ்த்ர ஸம்பந்தமுள்ளதுமான ஜலத்தினுல் ப்ரோக்ஷணம் செய்யக் கூடாது. (இங்கு 'லோபேன' என்று பாடபேதங்கொண்டு, சிலர் மணமில்லாமலும், உத்தரீயமில்லாமலும் ப்ரோக்ஷணம் கூடாதென்கின்றனர்.) **ஆபஸ்தம்பர்:**- மூங்கில் பாத்ரம், உடைந்த பாத்ரம், வெண்கலப் பாத்ரம், ஜந்துவின் அங்கமாகிய சங்கு முதலியது, தேங்காய் ஓடு முதலிய பழங்களின் அவயவங்கள், நீர்ப்பாசி, மணல், அறுகு, புல், இலை, இரும்பு இவைகளால் ப்ரோக்ஷண ஜலம் கொண்டு வரக்கூடாதென்று ஆபஸ்தம்பமுனி விதித்தார்.

गर्गः – त्रिसन्ध्यं वाग्यतो वारि गुप्तमाहृत्य शोधयेत्। आहृत्य वारिणा प्रोक्ष्य द्रव्यं शोध्यं च शोधयेत् इति ॥ उशना – तेनोदकेन द्रव्याणि प्रोक्ष्याचम्य पुनर्गृहे। ततः कर्माणि कुर्वीत नित्यं वैतानिकानि च इति ॥

கர்கர்:- கொண்டு வந்த ஜலத்தை மறைத்து வைத்து, அதனால் மூன்று ஸந்த்யைகளிலும் ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும். சுத்தம் செய்ய வேண்டிய த்ரவ்யங்களையும் சுத்தி செய்ய வேண்டும். **உசநா:**- அந்த ஜலத்தால் த்ரவ்யங்களை ப்ரோக்ஷித்து, மறுபடி ஆசமனம் செய்து, பிறகு வீட்டில் கார்யங்களையும், நித்ய கர்மங்களையும், ச்ரௌத கர்மங்களையும் செய்ய வேண்டும்.

अभ्युक्षणाहरणासमर्थं प्रत्याह शाट्यायनिः – नद्यादौ सम्यगाचान्तः संयतो गृहमागतः । उद्धृत्य मणिकात्तोयं तथाऽभ्युक्षणमाचरेत् ॥ आत्मीयं प्रथमं प्रोक्तं विप्रहस्ताद्द्वितीयकम्।

तृतीयमुदकस्थानात् चतुर्थं मणिकात्स्मृतम् ।। मणिके सर्वतीर्थानि वह्नौ वै सर्वदेवताः । मन्त्राश्च प्रणवे सर्वे सर्वं सत्ये प्रतिष्ठितम् ।। बृहज्जलभाण्डं - मणिकः । गृहे वा समुपस्पृश्य कृत्वा स्वर्णकुशोदकम् । कृत्वाऽऽचमनमाचान्तः पुनः प्रोक्षणामाचरेत् इति ।। प्रचेताः – वैश्वानरेण यत् किञ्चित् कुरुते प्रोक्षणं द्विजः । गङ्गातोयसमं सर्वे वदन्ति ब्रह्मवादिनः इति ।। वैश्वानरेण - वैश्वानरोऽजीजनदिति मन्त्रेण ।। स्मृत्यर्थसारे – गुप्तमग्र्याम्बु नीत्वाऽथ होमं कुर्याद्यथाविधि इति ।।

அப்யுக்ஷணம் கொண்டு வரச் சக்தியற்றவனைப் பற்றி, **சாட்யாயனி:-** நதி முதலியதில் விதிப்படி ஆசமனம் செய்து, சுத்தனுய் வீட்டையடைந்து, மணிகத்தினின்றும் ஜலத்தை எடுத்து, அதனுல் ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும். தன்னுல் கொண்டு வரப்பட்ட ஜலம் முதன்மையாகும். ப்ராம்ஹணன் கையிலிருந்து வாங்கியது இரண்டாவதாகும். ஜலமிருக்கும் இடத்திலிருந்து எடுக்கப்பட்டது மூன்ருவதாகும். மணிகத்திலிருந்து எடுக்கப்பட்டது நான்காவதாகும். மணிகத்தில் ஸகல தீர்த்தங்களும், அக்னியில் ஸகல தேவர்களும், ப்ரணவத்தில் ஸகல மந்த்ரங்களும், ஸத்யத்தில் ஸகலமும் நிலைபெற்றுள்ள. (பெரிய ஜலபாத்ரம் (குடம் - தோண்டி) மணிகமெனப் படுகிறது.) அல்லது வீட்டில் ஆசமனம் செய்து, ஸ்வர்ணத்துடனும் குசத்துடனும் சேர்ந்த ஜலத்தை க்ரஹித்து, இருமுறை ஆசமனம் செய்து புரோக்ஷணம் செய்ய வேண்டும். **ப்ரசேதஸ்:-** 'வைச்வாநர' மந்த்ரத்தினுல், ப்ராம்ஹணன் ப்ரோக்ஷணம் செய்தால், அது எந்த ஜலமாயினும் கங்காஜல ஸமமென்று வேதமறிந்த எல்லோரும் சொல்லுகின்றனர். வைச்வாநர மந்த்ரமென்பது 'வைச்வாநரோஜீஜநத்' என்பதை முதலாகவுடைய மந்த்ரம். **ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:-** அக்ர்யோதகத்தை (ப்ரோக்ஷண ஜலத்தை) மறைத்து வீடுசேர்த்துப் பிறகு விதிப்படி ஹோமம் செய்ய வேண்டும்.

—*—

होमविधिः

अथ होमविधिः ।। तत्र व्यासः — अथागम्य गृहं विप्रः समाचम्य यथाविधि । प्रज्वाल्य वह्निं विधिवत् जुहुयात् जातवेदसम् इति ।। दक्षः – सन्ध्याकर्मावसाने तु स्वयं होमो विधीयते । स्वयं होमे फलं यत् स्यात् तदन्येन न लभ्यते इति ।। हारीतः – उपास्य विधिवत् सन्ध्यामुपस्थाय दिवाकरम् । सायं प्रातरुपासीत विवाहाग्निं द्विजोत्तमः इति ।

ஹோமவிதி

*இனி ஹோமவிதி சொல்லப்படுகிறது. அதில், **வ்யாஸர்:**- பிறகு ப்ராம்ஹணன் வீட்டிற்கு வந்து விதிப்படி ஆசமனம் செய்து, அக்னியை வளர்த்து, விதிப்படி ஹோமம் செய்ய வேண்டும். **தக்ஷர்:**- ஸந்த்யா வந்தனம் செய்த பிறகு, ஹோமத்தைத் தானே செய்ய வேண்டும். தான் ஹோமம் செய்வதாலுண்டாகும் பலன் பிறர் செய்வதால் அடையப்படுவதில்லை. **ஹாரீதர்:**- ப்ராம்ஹணன், விதிப்படி ஸந்த்யா வந்தனம் உபஸ்தானம் இவைகளைச் செய்து ஔபாஸனாக்னியில் காலையிலும் மாலையிலும் ஹோமம் செய்ய வேண்டும்.*

आपस्तम्बः – सायंप्रातरत ऊर्ध्वं हस्तेनैते आहुती तण्डुलैर्यवैर्वा जुहुयात् स्थालीपाकवद्दैवतं सौरी पूर्वाहुतिः प्रातरित्येके, उभयतः परिषेचनं यथा पुरस्तात् इति ।। स एव – यत्र क्वचाग्निमुपसमाधास्यन् स्यात्तत्र प्राचीरुदीचीश्च तिस्रस्तिस्रो रेखा लिखित्वाऽद्भिरेवोक्ष्याग्नि-मुपसमिन्ध्या दुत्सिच्यैतदुदक मुत्तरेण पूर्वेण वाऽन्यदुपदध्यात् इति । स्मृत्यन्तरे च – प्राचीः पूर्वमुदक्संस्थं दक्षिणारम्भमालिखेत् । अथोदीचीः पुरस्संस्थं पश्चिमारम्भमालिखेत् ।। अवोक्ष्याग्निं प्रतिष्ठाप्य ज्वलयेदग्निमिन्धनैः । उत्सिच्यावोक्षणाच्छिष्टं पूर्वत्रोत्तरतोऽपि वा । पात्रस्थमन्यदुदकमग्नेः पूर्वत्र निक्षिपेत् इति ।।

ஆபஸ்தம்பர்:- ஆக்னேய ஸ்தாலீ பாகத்திற்குப் பிறகு இந்த இரண்டு ஆஹுதிகளையும் அரிசியாலாவது, யவையாலாவது கையினுல் ஹோமம் செய்ய வேண்டும். ஸ்தாலீ பாகத்திற் போல் தேவதைகள். காலையிலும் முதலாஹுதி ஸூர்யனைக்குறித்தென்று சிலர். ஆஹுதிகளுக்கு முன்னும் பின்னும் பரிஷேசனம், முன் சொல்லியது போல். ஆபஸ்தம்பரே:- எந்தக் கர்மத்திலாலவது, எந்த இடத்தில் அக்னியை ப்ரதிஷ்டை செய்யப் போகின்ருேணு அந்த இடத்தில், கிழக்கில் முடிவதும் வடக்கில் முடிவதுமான மூன்று மூன்று கோடுகளைக்கீறி, ஜலத்தால் ப்ரோக்ஷித்து, அவ்விடத்தில் அக்னியை வைத்து ஜ்வலிக்கச் செய்ய வேண்டும். ப்ரோக்ஷித்த ஜலத்தின் மீதியை அக்னிக்கு வடக்கில் அல்லது கிழக்கில் கொட்டிவிட்டு, அந்த இடத்தில் வேறு ஜலத்தை வைக்க வேண்டும். மற்ருெரு ஸ்ம்ருதியில்:- ஆரம்பத்தில் கிழக்கில் முடியும் மூன்று ரேகைகளைத் தெற்கிலாரம்பித்து வடக்கில் முடியும்படி கீறவேண்டும். பிறகு வடக்கில் முடியும் மூன்று ரேகைகளை மேற்கிலாரம்பித்து கிழக்கில் முடியும்படி கீறவேண்டும். அந்த இடத்தை ப்ரோக்ஷித்து, அதில் அக்னிப்ரதிஷ்டை செய்து சகலங்களால் ஜ்வலிக்கச் செய்ய வேண்டும். ப்ரோக்ஷித்த மீதி ஜலத்தைக் கிழக்கிலாவது வடக்கிலாவது கொட்டிவிட்டு, பாத்ரத்திலுள்ள வேறு ஜலத்தை அக்னிக்குக் கிழக்கில் வைக்க வேண்டும்.

बोधायनः — यस्मिन्नग्नावुपनयनं तस्मिन् ब्रह्मचर्यं तस्मिन् व्रतचर्या, तस्मिन् समावर्तनं, तस्मिन् पाणिग्रहणं, तस्मिन् गार्ह्याणि कर्माणि क्रियन्ते, तस्मिन् काम्यानि तस्मिन् प्रजासंस्कारा इत्येके। स एष उपनयनप्रभृति व्याहृतीभिः समिद्भिर्हूयत आसमावर्तनात्। समावर्तनप्रभृत्याज्येन व्याहृतीभिरेव हूयत आपाणिग्रहणात्। पाणिग्रहणप्रभृति व्रीहिभिर्यवैर्वा हस्तेनैते आहुती जुहोति इति ॥ हिरण्यकेशी — पाणिग्रहणादिरग्निस्तमौपासनमित्याचक्षते तस्मिन् गार्ह्याणि कर्माणि इति ॥

போதாயனர்:- எந்த அக்னியில் உபநயன ஹோமம் செய்யப்பட்டதோ அதில் ப்ரம்ஹசர்யம், அதில் வ்ரதானுஷ்டானம், அதில் ஸமாவர்த்தனம், அதில் விவாஹம், அதில் க்ருஹயத்தில் சொல்லிய கர்மங்கள், அதில் காம்ய கர்மங்கள் செய்யப்பட வேண்டும். தன் ப்ரஜையின் உபநயனாதி ஸம்ஸ்காரங்களும் அதிலேயே எனச் சிலர் சொல்லுகின்றனர். அவ்விதமான இந்த அக்னியில், உபநயனம் முதல் ஸமாவர்த்தனம் வரையில் வ்யாஹ்ருதிகளால் ஸமித்துகளால் ஹோமம் செய்ய வேண்டும். ஸமாவர்த்தனம் முதல் விவாஹம் வரையில் வ்யாஹ்ருதிகளாலேயே ஆஜ்யத்தால் ஹோமம் செய்யப்பட வேண்டும். விவாஹம் முதல் நெல் அல்லது யவைகளால், கையில் இந்த இரண்டு ஆஹுதிகளைச் செய்ய வேண்டும். **ஹிரண்யகேசீ:-** விவாஹம் முதலாக உள்ள அக்னியை ஒளபாஸனமென்று சொல்லுகிறார்கள். க்ருஹ்யத்தில் சொல்லிய கர்மங்களெல்லாம் அந்த ஒளபாஸனாக்னியிலேயே செய்யப்பட வேண்டும்.

गौतमस्तु — भार्यादिरग्निर्दायादिर्वा तस्मिन् गृह्याणि इति ।। भार्याशब्देन विवाहो लक्ष्यते । तदाऽग्निपरिग्रहः । यदा पित्रा भ्रातृभिर्वा विभक्तः, तदा वाऽग्निपरिग्रह इत्यर्थः ।। याज्ञवल्क्योऽपि – कर्म स्मार्तं विवाहाग्नौ कुर्वीत प्रत्यहं गृही । दायकालाहृते वाऽपि श्रौतं वैतानिकाग्निषु इति । स्मार्तं - औपासनादि । अपिशब्दात् प्रेते वा गृहपतावाहृते संस्कृत एव । ततश्च कालत्रयव्यतिक्रमे प्रायश्चित्तीयते इति विज्ञानेश्वरः ।। शौनकः – स्मार्तोऽग्निर्द्विविधो ज्ञेयो गृह्यः पौरुष इत्यपि । यस्मिन् विवाहः क्रियते सोऽपि गृह्यो हुताशनः ।। जातकर्मादिसिद्ध्यर्थं यश्चाहुतिभिराहुतः । सोऽग्निः पौरुष इत्युक्तः शालाग्निर्लौकिकः स्मृतः ।। केचिद्वैश्यस्य भवनादाहृतो जातकः स्मृतः इति ।।

கௌதமரானல்:- விவாஹம் முதல் அக்னியைப் பரிக்ஹித்து ஹோமம் செய்ய வேண்டும். அல்லது பிதாவுடனோ, ப்ராதாவுடனோ விபாகம் செய்து கொள்வது முதல் அக்னியைப் பரிக்ஹித்து ஹோமம் செய்து வரவேண்டும். அந்த அக்னியில் க்ருஹ்யத்திற் சொல்லிய கர்மங்களைச் செய்ய வேண்டும். யாக்ஞவல்க்யர்:- க்ருஹஸ்தன் ப்ரதிதினமும் ஸ்மார்த்த கர்மங்களை விவாஹாக்னியில் செய்ய வேண்டும். குடும்பத்தில் விபாகமான காலம் முதல் பரிக்ஹித்த அக்னியிலாவது செய்ய வேண்டும். ச்ரௌதகர்மங்களை த்ரேதாக்னியில் செய்ய வேண்டும். இங்கு ஸ்மார்த்தம் என்பதற்கு ஔபாஸன ஹோமம் முதலியவை என்பது பொருள். 'அபி' என்ற சப்தத்தால் க்ருஹஸ்தன் இறந்து விட்டால் ஆஹ்ருதமான அக்னிக்கு ஸம்ஸ்காரம் செய்து அதில் கார்யத்தைச் செய்ய வேண்டும். மூன்று காலம் தாண்டி விட்டால் ப்ராயச் சித்தம் செய்ய வேண்டும் என்கிறார் விஜ்ஞானேச்வரர். சௌனகர்:- ஸ்மார்த்தாக்னி, க்ருஹ்யம். பௌருஷம் என இரண்டு விதமுள்ளது. எந்த அக்னியில் விவாஹம் செய்யப்படுகிறதோ அது 'க்ருஹ்யாக்னி' எனப்படும். ஜாதகர்மம் முதலியவை ஸித்திப்பதற்காக எதில் ஹோமம் செய்யப்பட்டதோ அது 'பௌருஷம்' எனப்படும். வீட்டில் உள்ள அக்னி லௌகிகம் எனப்படும். வைச்யனுடைய க்ருஹத்திலிருந்து கொண்டு வந்த அக்னியை 'ஜாதகாக்னி' எனச் சிலர் சொல்லுகின்றனர்.

सङ्ग्रहे — आत्मार्थमपि दारार्थ मुभयार्थं सुतार्थकम्। इत्येषां कर्मणां होमचातुर्विध्यं प्रचक्षते ॥ आत्मार्थं सान्ध्यकर्मादि सीमन्तादिक्रियाः स्त्रियाः । पार्वणाद्युभयार्थं स्यात् जातकादि सुतार्थकम् ॥ सुतार्थकर्मणां होमो लौकिकाग्नौ विधीयते । इतरेषां त्रयाणां तु नित्याग्नाविति निश्चयः ॥ भार्याद्वयं यस्य भवेत्तु तस्य संसृष्टवह्नौ सुवनं तु कुर्यात्। तत्रैव सीमन्तमपि प्रशस्तं वदन्ति वह्नेर्न विभाग इष्टः इति।

ஸங்க்ரஹத்தில்:- தனக்கும், பத்னிக்கும், இருவருக்கும், புத்ரர்களுக்கும் எனக் கர்மங்களை நான்கு விதமாய்ச் சொல்லுகின்றனர். ஸந்த்யா கர்மம் முதலியது தன்னுடைய கர்மம். ஸீமந்தம் முதலியது பத்னியினுடையது. ஸ்தாலீபாகம் முதலியது இருவருடையது. ஜாதகர்மம் முதலியது புத்ரர்களுடையது. புத்ரனைச் சேர்ந்த ஜாதகர்மாதி ஹோமங்களை லௌகிகாக்னியில் செய்ய வேண்டும். மற்ற மூன்று விதமான கர்மங்களின் ஹோமங்களை நித்யாக்னியில் செய்ய வேண்டும் என்பது நிர்ணயம். ஒருவனுக்கு இரண்டு பார்யைகளிருந்தால், அவர்களுள் ஒருத்திக்குப் பும்ஸவனம் செய்ய வேண்டுமானால், முன் ஸம்ஸர்க்கம் செய்யப்பட்ட அக்னியிலேயே பும்ஸவனத்தைச் செய்ய வேண்டும். அதிலேயே ஸீமந்தமும் செய்வது ப்ரசஸ்தமெனச் சொல்லுகின்றனர். ஸம்ஸ்ருஷ்டமான அக்னியைப் பிரிப்பதென்பது சாஸ்த்ரகாரர்களுக்கு இஷ்டமல்ல. ஆகையால் ஸம்ஸர்க்கமாகாமலிருந்தால் கர்ப்பிணியின் ஒளபாஸனத்திலேயே பும்ஸவன ஸீமந்தங்களைச் செய்ய வேண்டும். அக்காலத்தில் ஸம்ஸர்க்கம் செய்து அதில் செய்ய வேண்டுமென்பதில்லை. விவாஹ காலத்திலோ பிறகோ ஸம்ஸர்க்கமாயிருந்தால் இதற்காக விபாகம் செய்ய வேண்டாமென்பது பொருள்.

विष्णुः — स्मार्तमौपासने कुर्यात् श्रौतं वैतानिके गृही । लौकिके विधुराणां तु विधिरेष पुरातनः ।। बहवो यत्र होतारः शान्तिके पौष्टिके तथा । लौकिकेऽग्नौ तदा कुर्यात् गृह्याग्नौ न कदाचन ।। चौलजातकगोदानस्नानोपनयनादिषु । लाजहोमे समित्कार्ये लौकिकोऽग्निर्विधीयते । होमं वैतानिकं हुत्वा स्मार्तं कुर्याद्विचक्षणः । स्मृतीनां वेदमूलत्वात् स्मार्तं केचित् पुरा विदुः इति ।

விஷ்ணு:- க்ருஹஸ்தன் ஸ்மார்த்தகர்மங்களை ஒளபாஸனக்னியில் செய்ய வேண்டும். ச்ரௌத கர்மங்களை த்ரேதாக்னிகளில் செய்ய வேண்டும். விதுரர்கள்

(பத்னியில்லாதவர்) லௌகிகாக்னியில் செய்ய வேண்டும். இந்த விதி புராதனமாகியது. சாந்திகம் அல்லது பௌஷ்டிகமான கர்மத்தில் அநேகம் ருத்விக்குகள் ஹோமம் செய்வதாயிருந்தால், அதை லௌகிகாக்னியில் செய்ய வேண்டும். ஔபாஸனுக்னியில் ஒருகாலும் செய்யக் கூடாது. சௌளம், ஜாதகர்மம். கோதானம், ஸ்நானம், உபநயனம் முதலியவைகளிலும், லாஜஹோமம், ஸமிதாதானம் இவைகளிலும் லௌகிகாக்னி விதிக்கப்படுகிறது. ச்ரௌத ஹோமத்தை முன்பு செய்து பிறகு ஸ்மார்த்த ஹோமத்தைச் செய்ய வேண்டும். ஸ்ம்ருதிகளுக்கு வேதம் மூலமாகியதால். சிலரோவெனில் ஸ்மார்த்தத்தை முந்திச் செய்ய வேண்டுமென்கின்றனர்.

सत्यां वैदिकानुष्ठानशक्तौ न स्मार्तमात्रेण परितुष्येत्। तदाह गर्गः – यो वैदिकमनादृत्य कर्म स्मार्तेतिहासिकम्। मोहात्समाचरेद्विप्रो न स पुण्येन युज्यते ॥ श्रौतं कर्म न चेच्छक्तः कर्तुं स्मार्तं समाचरेत्। अत्राप्यशक्तः करणे सद(म)ाचारं लभेद्बुधः इति। मनुः – वेदोदितं स्वकं कर्म नित्यं कुर्यादतन्द्रितः। तद्धि कुर्वन् यथाशक्ति प्राप्नोति परमां गतिम् ॥ अग्निहोत्रं च जुहुयात् आद्यन्ते द्युनिशोस्सदा। दर्शेन चार्धमासान्ते पौर्णमासेन चैव हि इति ॥

வைதிக கர்மங்களை அனுஷ்டிக்கச் சக்தியிருக்கும் பொழுது ஸ்மார்த்த கர்மங்களை மட்டிலனுஷ்டிப்பதால் ஸந்தோஷிக்கக் கூடாது. அதைச் சொல்லுகிறுர் கர்கர்:- எவன் வைதிக கர்மங்களை ஆதரியாமல் ஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸங்களிலும் சொல்லப்பட்டுள்ள கர்மங்களை மட்டில் அறியாமையால் அனுஷ்டிக்கின்றுனோ அவன் புண்யத்துடன் சேருவதில்லை. ச்ரௌத கர்மத்தை அனுஷ்டிக்கச் சக்தனுகாவிடில் ஸ்மார்த்த கர்மத்தை யனுஷ்டிக்க வேண்டும். ஸ்மார்த்த கர்மத்தைச் செய்வதிலும் சக்தியற்றவன் (ஸ்நான ஸந்த்யாதி)

ஸதாசாரத்தை அனுஷ்டிக்க வேண்டும். மனு:- வேதத்தினால் சொல்லப்பட்டதும் தன்னுடையதுமான கர்மத்தைச் சோம்பலற்றவனாய் நித்யமும் செய்ய வேண்டும். சக்திக்கியன்றபடி அதைச் செய்பவன் சிறந்த உலகத்தை (மோக்ஷத்தை) அடைகிறான். பகலின் ஆரம்பத்திலும் ராத்ரியின் ஆரம்பத்திலும் அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்ய வேண்டும். (இது உதிதஹோமிகளுக்கு) அல்லது பகலின் முடிவிலும் ராத்ரியின் முடிவிலும் செய்ய வேண்டும். (இது அனுதிதஹோமிகளுக்கு) க்ருஷ்ணபக்ஷத்தின் முடிவில் தர்சேஷ்டியையும், சுக்லபக்ஷத்தின் முடிவில் பௌர்ணமாஸேஷ்டியையும் செய்ய வேண்டும்.

दक्षः— होमे च फलमुद्दिष्टं जुह्वतः स्वयमेव तु । हूयमानं तदन्येन फलमर्धं प्रपद्यते ॥ ऋत्विक्पुत्रो गुरुर्भ्राता भागिनेयोऽथ विट्पतिः । एतैरपि हुतं यत् स्यात् तद्धुतं स्वयमेव तु इति ॥ विट्पतिः - जामाता ॥ स्वयं होम एव मुख्यः । तदभावे ऋत्विगादिहोमः । तत्र विशेषो व्यासेन दर्शितः – 'ऋत्विक्पुत्रोऽथ वा पत्नी शिष्यो वाऽपि सहोदरः । प्राप्यानुज्ञां विशेषेण जुहुयाद्वा यथाविधि ॥ पवित्रपाणिः पूतात्मा शुक्लाम्बरधरो नरः । अनन्यमानसो वह्निं जुहुयात् संयतेन्द्रियः इति ॥

தக்ஷர்:- தானாகவே ஹோமம் செய்பவனுக்குப் பூர்ணமான பலம் சொல்லப்பட்டுள்ளது. பிறனால் ஹோமம் செய்யப்பட்டால் பாதிபலனென்று சொல்லப்பட்டுள்ளது. ருத்விக், புத்ரன், குரு, ப்ராதா, மருமான், மாப்பிள்ளை இவர்களால் செய்யப்பட்ட ஹோமம் தன்னால் செய்யப்பட்டதாகவே ஆகின்றது. தானாகவே ஹோமம் செய்வது முக்யபக்ஷம். அதில்லாவிடில் ருத்விக்கு முதலியவர்கள் ஹோமம் செய்யலாம். இதில் விசேஷத்தைத் தெரிவிக்கின்றார். வ்யாஸர்:- ருத்விக், அல்லது, புத்ரன், பத்னீ, சிஷ்யன், ஸஹோதரன் யாராவது,

யஜமானனின் உத்தரவுபெற்று, விதிப்படி, பவித்ரம் கையிலுடையவனாய், சுத்தனாய், வெளுப்பு வஸ்த்ரம் தரித்தவனாய், வேறிடத்தில் மனமில்லாதவனாய், புலன்களை அடக்கியவனாய் ஹோமம் செய்ய வேண்டும்.

शौनकः—पाणिग्रहणादि गृह्यं परिचरेत् स्वयं पत्न्यपि वा पुत्रः कुर्यादन्तेवासी वा इति ।। ऋत्विगाद्यभावे गोभिलः – गृह्याग्नौ जुहुयात् पत्नी सायं प्रातश्च होमयोः इति ।। मनुः – अग्निहोत्रस्य शुश्रूषा सन्ध्येपासनमेव च । कार्यं पत्न्या प्रतिदिनं बलिकर्म च नैत्यकम् इति । सन्ध्यौपासनं - सायं प्रातर्होमः ।। स्मृत्यर्थसारे – होमे मुख्यो यजमानः पत्नी पुत्रश्च कन्यका । ऋत्विक्छिष्यो गुरुर्भ्राता भागिनेयः सुतापतिः ।। एतैरेव हुतं यत्तु तद्धुतं स्वयमेव तु । पर्युक्षणं विना पत्नी जुहुयात् कन्यकाऽपि वा इति ।।

சௌனகர்:- விவாஹம் முதல் ஔபாஸனாக்னியில் தானே ஹோமம் செய்ய வேண்டும். அல்லது பத்னீ, புத்ரன், சிஷ்யன் இவர்களுள் யாராவது செய்யலாம். ருத்விக் முதலியவர் இல்லாவிடில் **கோபிலர்:-** ஔபாஸனாக்னியில் காலை மாலைகளில் பத்னீ ஹோமம் செய்யலாம். **மனு:-** அக்னிஹோத்ரத்திற்குரிய பணிவிடை, காலை மாலைகளில் ஹோமம், ப்ரதிதினமும் செய்ய வேண்டிய பலிதானம் இவைகளைப் பத்னீ ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும். **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:-** ஹோமத்தில் யஜமானன் முக்யன், பிறகு பத்னீ, புத்ரன், பெண், ருத்விக், சிஷ்யன், குரு, ப்ராதா, மருமான், மாப்பிள்ளை இவர்களுள் யார் செய்தாலும் யஜமானன் தான் செய்தது போலாகும். பத்னீ, பெண் இவர்கள் செய்தால் பரிஷேசனமின்றிச் செய்ய வேண்டும்.

भारद्वाजः—अपि वा स्त्री जुहुयान्मन्त्रवर्जम् इति ।। गौतमः – पत्नी जुहुयादित्येके इति ।। मनुः – नैव कन्या न युवतिर्नाल्पविद्यो न बालिशः । होता स्या दग्निहोत्रस्य नार्तो नासंस्कृतस्तथा । नरके हि

पतन्त्येते जुह्वतः स च यस्य तत् । तस्माद्वैतानकुशलो होता स्याद्वेदपारगः इति ।। शातातपः – श्रौतं यत्तत् स्वयं कुर्यादन्योऽपि स्मार्तमाचरेत् । अशक्तौ श्रौतमप्यन्यः कुर्यादाचमनं ततः इति ।। याज्ञवल्क्यः – दुहित्रा स्नुषया वाऽपि विहारो न विरुध्यते। निर्णेजनं च पात्राणामुपलेपनमर्चनम् इति ।

பரத்வாஜர்:- *அல்லது பத்னீ, மந்த்ரமில்லாமல் ஹோமம் செய்யலாம்.* **கௌதமர்:-** *பத்னீ, ஹோமம் செய்யலாமென்றனர் சிலர்.* **மனு:-** *கன்னிகை, யுவதி, அல்பவித்யையுடையவன், மூர்க்கன், வ்யாதியுள்ளவன், (உபநயனம் முதலிய) ஸம்ஸ்காரமில்லாதவன் இவர்கள் அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்யக் கூடாது. செய்தால் நரகத்தில் விழுவார்கள். அந்த யஜமானனும் நரகத்தில் விழுவான். ஆகையால் ச்ரௌத கர்மங்களில் ஸமர்த்தனும், வேதத்தின் முடிவை அடைந்தவனுமாகியவனே ருத்விக்காக இருக்க வேண்டும்.* **சாதாதபர்:-** *ச்ரௌத கார்யமெதுவோ அதை யஜமானன் தானே செய்ய வேண்டும். ஸ்மார்த்த கர்மத்தைப் பிறனும் செய்யலாம். சக்தி இல்லாவிடில் ச்ரௌத கர்மத்தையும் பிறன் செய்யலாம். முடிவில் யஜமானன் ஆசமனம் செய்ய வேண்டும்.* **யாக்ஞவல்க்யர்** *பெண், அல்லது நாட்டுப் பெண் ப்ரணயனம் செய்வதும், பாத்ரங்களைச் சுத்தம் செய்வதும், மெழுகுவதும், அக்னிகளைப் பூஜிப்பதும் சாஸ்த்ர விருத்தமாகாது.*

आपस्तम्बः—अहरहर्यजमानः स्वयमग्निहोत्रं जुहुयात् पर्वणि वा । ब्रह्मचारी वा जुहुयात् । ब्रह्मणा हि स परिक्रीतो भवति । क्षीरहोता वा जुहुयाद्धनेन हि स परिक्रीतो भवतीति बह्वृचब्राह्मणं, पर्वण्यपीत्यपरम् इति । ब्रह्मचार्यत्र अन्तेवासी । ब्रह्मणा हि स परिक्रीत इति लिङ्गात् । यः अग्न्याधेये ऋत्विक्त्वेन परिगृहीतः सः क्षीरहोता । धनेन हि स परिक्रीत इति लिङ्गात्, योऽस्याग्नीनाधत्ते स क्षीरहोता इति

हारीतस्मरणाच्च ॥ आश्वलायनोऽपि – स्वयं पर्वणि जुहुयादृत्विजामेक इतरं काल मन्तेवासी वा इति। ऋत्विजामेक इति यः कर्मणि कर्मणि व्रियते, यश्च कुले परम्पराप्राप्तः, यश्चैकस्य पुरुषस्य सर्वकर्माणि कर्तुं व्रियते, तेषां त्रिविधानां ऋत्विजां मध्ये एक इत्यर्थः ॥ बोधायनः – पुत्रोऽन्तेवासी इति।

ஆபஸ்தம்பர்:- யஜமானன் ப்ரதிதினம் தானுகவே அக்னி ஹோத்ர ஹோமம் செய்ய வேண்டும். பர்வகாலத்திலாவது தானுகவே செய்ய வேண்டும். மற்றக் காலத்தில் ப்ரம்ஹசாரியாவது (சிஷ்யன்) செய்யலாம். வேதத்திஞல் அவன் வாங்கப்பட்ட வனுகிருனல்லவா. க்ஷீரஹோதாவாவது செய்யலாம். தனத்திஞலவன் வாங்கப்பட்டவனுகிருனல்லவா என்று பஹ்வ்ருச ப்ராம்ஹணம். பர்வகாலத்திலும் இவர் செய்யலாமென்று சிலர் மதம். 'ப்ரம்ஹசாரி' யென்பதற்கு தன்னிடம் அத்யயனம் செய்யும் சிஷ்யன் என்பது பொருள். அடுத்த வாக்யம் அவனைக் குறிப்பதால் க்ஷீரஹோதா என்பதற்கு அக்ன்யாதான காலத்தில் ருத்விக்காய் க்ரஹிக்கப்பட்டவன் என்று பொருள். அடுத்த வாக்யம் அவனைக் குறிக்கிறது. 'இவனுடைய அக்னிகளை ஆதானம் செய்பவன் க்ஷீரஹோதா எனப்படுவான்' என்று ஹாரீதர் சொல்லி இருக்கிருர். **ஆச்வலாயனரும்:-** யஜமானன் பர்வகாலங்களில் தானே ஹோமம் செய்ய வேண்டும். மற்றக் காலத்தில் ருத்விக்குகளுள் ஒருவனுவது, அந்தேவாஸி (சிஷ்யன்) யாவது செய்யலாம். 'ருத்விக்குகளுக்குள் ஒருவன்' என்பதற்கு, எவன் ஒவ்வொரு கர்மத்திலும் வரிக்கப்படுகிருனே, எவன் குலத்தில் பரம்பரையாய் ருத்விக்காய் வந்தவனே, எவன் ஒரு புருஷனுடைய எல்லாக் கர்மங்களிலும் வரிக்கப்படுகின்றுனே, அந்த மூன்று விதமான ருத்விக்குகளுக்குள் ஒருவன் என்பது பொருள். **போதாயனர்:-** புத்ரன், அல்லது அந்தேவாஸி செய்யலாம்.

होतृतारतम्यं दर्शयति छान्दोग्यश्रुतिः — अन्यैश्शतहुताद्धोमात् एकः शिष्यहुतो वरम्। शिष्यैः शतहुताद्धोमा देकः पुत्रहुतो वरम्॥ पुत्रैः शतहुताद्धोमा देको ह्यात्महुतो वरम्। स्वयं होता स्वयं दोही स्वयमेवोपतिष्ठेताग्निहोत्रं होमशेषं दक्षिणा सर्वैर्हवा एतस्य यज्ञक्रतुभिरिष्टं भवति य एवं विद्वानग्निहोत्रं जुहोति इति ॥

ஹோமம் செய்பவர்களுடைய தாரதம்யத்தைச் சொல்லுகிறது சாந்தோக்யச்ருதி:- பிறர் நூறு தடவை செய்யும் ஹோமத்தை விட, சிஷ்யன் ஒரு தடவை செய்யும் ஹோமம் சிறந்ததாகும். சிஷ்யர்கள் நூறு தடவை செய்யும் ஹோமத்தைவிட, தன் புத்ரன் ஒருதடவை செய்யும் ஹோமம் சிறந்ததாகும். புத்ரர்கள் நூறு தடவை செய்யும் ஹோமத்தைவிட, தான் ஒரு தடவை செய்யும் ஹோமம் சிறந்ததாகும். தானே ஹோமம் செய்ய வேண்டும். தானே பசுவைக் கறக்க வேண்டும். தானே உபஸ்தானம் செய்ய வேண்டும். மீதியுள்ள ஹோமத்ரவ்யம் தக்ஷிணையாம். எவன் இவ்விதமறிந்து அக்னிஹோத்ர ஹோமம் செய்கின்றானோ அவன் ஸகலமான யக்ஞக்ரதுக்களைச் செய்தவனாகிறான்.

ऋत्विगादिहोमे विशेषमाह कात्यायनः — असमक्षं तु दम्पत्योर्होतव्यं नर्त्विगादिना । द्वयोरप्यसमक्षं तु भवेद्धुतमनर्थकम् इति । तयोः सन्निधानं मुख्यम्। तदभावे त्वन्यतरसन्निधानेनापि होतुं शक्यम्। तथा च स एवाह – निक्षिप्याग्निं स्वदारेषु परिकल्प्यर्त्विजं तथा। प्रवसेत् कार्यवान् विप्रो वृथैव न चिरं वसेत् इति। पैठीनसिः – प्रस्खलीकृतधर्मस्य पीड्यमानस्य शत्रुभिः । मासद्वयं प्रवासोऽस्ति परतोऽनाहिताग्निवत् इति ॥ विष्णुः – श्रौतं स्मार्तं च यत् किञ्चिद्विधानं सर्वमादरात्। गृहे निवसता कार्य मन्यथा दोषमृच्छति इति।

ருத்விக்கு முதலியவர் ஹோமம் செய்யும் விஷயத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறுர் காத்யாயனர்:- தம்பதிகள் எதிரிலில்லாவிடில், ருத்விக்கு முதலியவர்கள் ஹோமம் செய்யக் கூடாது. இருவரும் எதிரிலில்லாத பொழுது செய்த ஹோமம் பயனற்றதாகும். தம்பதிகளிருவரும் எதிரிலிருப்பது முக்யம். அதில்லாவிடில், ஒருவர் எதிரிலிருந்தாலும் ஹோமம் செய்யலாம். அவ்விதம், காத்யாயனரே சொல்லுகிறுர்:- ப்ராம்ஹணன் இதர தேசத்தில் கார்யமுள்ளவனுகில், தன் பத்னியிடம் அக்னியை வைத்து விட்டு, ஹோமம் செய்யும் ருத்விக்கையும் ஏற்படுத்திவிட்டு அயல் தேசத்திற்குப் போகலாம். அங்கு (கார்யமில்லாமல்) வீணுக வெகுகாலம் வஸிக்கக் கூடாது. பைடீநஸி:- தர்மானுஷ்டானம் தவறியிருப்பவனுக்கும், சத்ருக்களால் பீடிக்கப் படுகிறவனுக்கும் இரண்டு மாதம் முழுவதும் ப்ரவாஸமுண்டு. அதற்கு மேல் தங்கினுல் அனுஹிதாக்னி போல் ஆவான். விஷ்ணு:- வேதத்திலும் ஸ்ம்ருதியிலும் சொல்லப்படும் கர்மங்களெல்லாவற்றையும் வீட்டில் வஸிக்கும் க்ருஹஸ்தன் ஆதரவுடன் செய்ய வேண்டும். செய்யாவிடில் பதிதனுவான்.

अग्नेरपरित्यागमाह गर्गः — कृतदारो न वै तिष्ठेत् क्षणमप्यग्निना विना। तिष्ठेत चेद्विजो व्रात्यः तथा च पतितो भवेत्।। यथा स्नानं यथा भार्या वेदस्याध्यायनं यथा। तथैवौपासनं दृष्टं न तिष्ठेत् तद्वियोगतः इति ।। व्यासः – यो हि हित्वा विवाहाग्निं गृहस्थ इति मन्यते । अन्नं तस्य न भोक्तव्यं वृथापाको हि स स्मृतः इति । याज्ञवल्क्यः – द्वादशाहमनग्निस्तु सन्ध्याहीनस्तथैव च । शूद्र एव भवेत् द्विप्रश्चतुर्वेदेषु पारगः इति ।।

அக்னியை விடக்கூடாதென்பதைச் சொல்லுகிறுர். கர்கர்:- விவாஹமாகியவன் ஔபாஸனம் இல்லாமல் ஒருக்ஷணம் கூட இருக்கக் கூடாது. இருப்பானுகில் அவன்

வ்ராத்யன், பதிதனுவான், ஸ்நானம் போலும், பார்யை போலும், வேதாத்யயனம் போலும் ஒளபாஸனம் நித்யமென விதிக்கப்பட்டிருக்கிறது. அதை விட்டு இருக்கக் கூடாது. **வ்யாஸர்:-** எவன் ஒளபாஸனுக்னியை விட்டு, க்ருஹஸ்தனென்று தன்னை நினைக்கின்றானோ அவன் அன்னத்தை (ஸாதுக்கள்) புஜிக்கக் கூடாது. அவன் 'வ்ருதாபாகன்' எனப்படுகிறான். (அவன் அன்னத்தைத் தேவர்களும் பித்ருக்களும் க்ரஹிப்பதில்லை என்பர்.) **யாக்ஞவல்க்யர்:-** பன்னிரண்டு நாள் ஒளபாஸன மில்லாமலும் ஸந்த்யா வந்தனம் இல்லாமலிருக்கும் ப்ராம்ஹணன், நான்கு வேதங்களை முழுவதும் அறிந்தவனாகினும் சூத்ரனாகவேயாவான்.

स्मृतिरत्ने— हतं वित्तमदानेन हता नारी निरङ्कुशा । ब्रह्मस्वेन हतो राजा निरग्निर्ब्राह्मणो हतः ।। देशान्तर गतो वाऽपि मृतपत्नीक एव वा । वैवाहिकाग्नौ जुहुयात् सायंप्रातर्यथाविधि इति ।। बृहस्पतिः – सूतके मृतके चैव अशक्तौ श्राद्धभोजने । प्रवासादिनिमित्तेषु हावयेन्न तु हापयेत् इति ।। शाट्यायनिः – यावत्कालमहोमी स्यात् तावद्द्रव्यं त्वशेषतः । तद्दानं चैव विप्रेभ्यो यथा होमस्तथैव तत् ।। यावन्त्यब्दान्यतीतानि निरग्नेर्विप्रजन्मनः । तावन्ति कृच्छ्राणि चरेत् होम्यं दद्यात्तथैव इति ।। –

ஸ்ம்ருதிரத்னத்தில்:- தானமில்லாத பணம் அழிந்து விடும். அடக்கு வாரில்லாத ஸ்த்ரீ அழிவாள். ப்ராம்ஹணன் தனத்தை அபஹரித்தால் அரசன் அழிவான். ஒளபாஸனத்தை விட்டால் ப்ராம்ஹணன் அழிவான். தேசாந்தரத்தில் இருப்பவனும், பத்னியை இழந்தவனும், ஒளபாஸனுக்னியில் காலையிலும் மாலையிலும் விதிப்படி ஹோமம் செய்ய வேண்டும். (தேசாந்தரத்தில் இருப்பவன் அன்யனால் ஹோமம் செய்விக்க வேண்டும். பத்னியில்லாதவன் அக்னி விபாகம் செய்து கொண்டிருந்தால் விபக்தாக்னியில் ஹோமம் செய்ய வேண்டும்.) **ப்ருஹஸ்பதி:-** ஜனனுசௌசம்,

ம்ருதாசௌசம், சக்தியின்மை, ச்ராத்த போஜனம், ப்ரவாஸம் முதலிய காரணங்களில் அன்யனுல் ஹோமம் செய்விக்க வேண்டும். விடக்கூடாது. சாட்யாயனி:- எவ்வளவு காலம்வரை ஹோமம் செய்யாமல் இருந்தானோ அவ்வளவு காலம் வரையிலுள்ள ஹோமத்ரவ்யம் முழுவதையும் ப்ராம்ஹணர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். அது ஹோமம் செய்வது போலவேயாகும். ப்ராம்ஹணனுக்கு ஒளபாஸன ஹோமமில்லாமல் எவ்வளவு வருஷங்கள் சென்றனவோ அவ்வளவு க்ருச்ரங்களை அனுஷ்டிக்க வேண்டும். அவ்வளவு ஹோமத்ரவ்யத்தையும் ப்ராம்ஹணர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

व्यासः – यदि मासमहोमी स्यात् विप्राय गुणशालिने। पञ्चप्रस्थं प्रदद्यात्तु यावत्तण्डुलमेव च इति ।। कात्यायनः - षष्टिप्रस्थमितं धान्यं त्रिप्रस्थप्रमितं घृतम्। औपासनाग्नौ नष्टे तु वत्सरस्य विधीयते इति ।। मनुः — अग्निहोत्र्यपविध्याग्नीन् ब्राह्मणः कामकारतः। चान्द्रायणं चरेन्मासं वीरहत्यासमं हि तत् इति ।। शातातपः — अग्न्युत्सादी कृच्छ्राब्देन शुध्यति इति ।। स्मृत्यर्थसारे — सन्निधौ यजमानः स्यादुद्देशत्यागकारकः। असन्निधौ तत्पत्नी स्यात् पुत्रादिस्तदनुज्ञया ।। उन्मादे प्रसवे चर्तौ कुर्वीतानुज्ञया विना। सर्वथा यजमानो वा त्यजेत्तद्दिङ्मुखः शुचिः ।। प्रवासी नोपवासी स्यात् पत्नी धारयते व्रतम् इति ।।

வ்யாஸர்:- ஒருமாஸம் முழுவதும் ஹோமம் செய்யாமல் இருந்தால், ஐந்து படி அளவுள்ள அரிசியை, நற்குணமுள்ள ப்ராம்ஹணனுக்குத் தானம் செய்ய வேண்டும். **காத்யாயனர்:-** ஒருவருஷ காலம்வரை ஒளபாஸனுக்னி ஹோமம் இல்லாமல் இருந்தால், அறுபதுபடி அளவுள்ள தான்யமும். மூன்றுபடி அளவுள்ள நெய்யும் கொடுக்கப்பட வேண்டுமென்று

விதிக்கப்படுகிறது. மனு:- அக்னிஹோத்ரியான ப்ராம்ஹணன் ஸ்வேச்சையாய் அக்னிகளை விட்டுவிட்டால் ஒருமாதம் முழுவதும் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஏனெனில், அப்படி அக்னிகளை விடுவது வீரனை (புத்ரனை) க்கொல்வதற்கு ஸமமாகும். சாதாதபர்:- அக்னிகளை விட்டவன் முப்பது க்ருச்ரங்களால் சுத்தனாகிறான். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- ஸன்னிதியில் யஜமானன் உத்தேச த்யாகம் செய்து கொண்டிருக்க வேண்டும். யஜமானன் இல்லாவிடில் அவன் பத்னீ இருக்க வேண்டும். புத்ரன் முதலியவர் அவர்களின் உத்தரவினால் ஹோமம் செய்ய வேண்டும். உன்மாதத்திலும் (சித்தம் ஸ்வாதீனமில்லாத காலத்திலும்) ப்ரஸவ காலத்திலும், ருது காலத்திலும் உத்தரவில்லாமலே செய்யலாம். எவ்விதத்திலும் யஜமானன் அந்தத் திக்கை நோக்கியவனாய், சுத்தனாயிருந்து உத்தேசத்யாகம் சொல்ல வேண்டும். வேறு தேசத்தில் இருப்பவன் உபவாஸம் இருக்க வேண்டியதில்லை. வீட்டிலிருக்கும் பத்னீ நியமங்களை அனுஷ்டிக்க வேண்டும்.

होमकालः

अथ होमकालः ॥ तत्र विहरणकालमाहापस्तम्बः — अधिवृक्षसूर्य आविस्सूर्ये वा इति ॥ समुच्चयार्थो वा शब्दः ॥ सूर्यशब्देनोभयत्रापि रश्मिलक्षणा । सायं भूमेरुत्थिता रश्मयोऽधिवृक्षमेव निविशन्ते यस्मिन् काले सोऽधिवृक्षसूर्यः । तथा प्रातः प्राच्यां दिशि रश्मय आविर्भूता यस्मिन् काले स आविः सूर्यः । तस्मिन् काले प्रणयनमित्यर्थः ॥

ஹோமகாலம்

இனி ஹோமகாலம் சொல்லப்படுகிறது. அதில், ப்ரணயன காலத்தைச் சொல்லுகிறார், ஆபஸ்தம்பர்:- 'அதிவ்ருக்ஷஸூர்யே ஆவிஸ்ஸூர்யே வா' என்பது ஸூத்ரம். இதிலுள்ள 'வா' என்பது ஸமுச்சயத்தைச்

சொல்லுகிறது. இரண்டு இடத்திலுமுள்ள 'ஸூர்ய' சப்தம் ஸூர்யகிரணங்களைச் சொல்லுகிறது. மாலையில் பூமியினின்றும் மேலே கிளம்பிய ஸூர்யகிரணங்கள் வ்ருக்ஷங்களின் மேல் நிற்கின்ற காலமெதுவோ அது 'அதிவ்ருக்ஷஸூர்ய:' எனப்படுகிறது. அவ்விதமே காலையில் கிழக்கில் ஸூர்யகிரணங்கள் ப்ரகாசமாகும் காலமெதுவோ அது 'ஆவிஸ்ஸூர்ய:' எனப்படுகிறது. அந்தக் காலத்தில் ப்ரணயனம் செய்ய வேண்டும் என்பது பொருள்.

कात्यायनोऽपि — सूर्येऽस्तशैलमप्राप्ते षट्त्रिंशद्भिरिवाङ्गुलैः। प्रादुष्करणमग्नीनां प्रातर्भासां च दर्शने इति ॥ आश्वलायनस्तु — अपराह्णे प्रातर्व्युष्टायाम् इति ॥ सायं होमार्थमपराह्णे - अह्नश्चतुर्थभागे, प्रातरुदयात् पूर्वं विहरेत् इति वृत्तौ ॥ गृह्यपरिशिष्टे — अनस्तमित आदित्ये सायमग्नेः प्रादुष्करण मनुदिते प्रातः इति ॥ संवर्तः — कपालैर्भिन्नपात्रैर्वा आयसैर्गोमयेन वा। नाग्निप्रणयनं कुर्याद्यजमान-भयावहम् इति ॥ स्मृतिरत्ने — शरावे भिन्नपात्रे च कपाले चोल्मुके च वा। नाग्निप्रणयनं कुर्यात् व्याधिहानिभयावहम् ॥ अग्नौ न प्रक्षिपेदग्नि मद्भिर्न शमयेत्तथा इति ॥

காத்யாயனர்:- மாலையில் ஸூர்யன் அஸ்தமய பர்வதத்தை அடையாமல் இருக்கும் போது அஸ்தமயத்திற்கு 36- அங்குலம் போல் இடைவெளி இருக்கும் போது அக்னிகளை ப்ரணயனம் செய்ய வேண்டும். காலையில் ஸூர்யகிரண ப்ரகாசத்தின் போதே ப்ரணயனம் செய்ய வேண்டும். **ஆச்வலாயனர்:-** மாலையில் அபராஹ்ணத்திலும், காலையில் விடிந்த பிறகும் ப்ரணயனம் செய்ய வேண்டும். இதற்கு வ்ருத்தி என்னும் க்ரந்தத்தில் ''மாலை ஹோமத்திற்காக அபராஹ்ணத்தில் பகலின் நான்காவது பாகத்திலும், காலையில் ஸூர்யோதயத்திற்கு முன்பும் ப்ரணயனம் செய்ய வேண்டும்'' என்ற அர்த்தம் சொல்லப்பட்டுள்ளது. **க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:-**

மாலையில் ஸூர்யன் அஸ்தமிக்காத போதும், காலையில் உதிக்காமல் இருக்கும் போதும் அக்னிப்ரணயனம் செய்ய வேண்டும். ஸம்வர்த்தர்:- ஓடுகளாலும், உடைந்த பாத்ரங்களாலும், இரும்புப் பாத்ரங்களாலும், கோமயத்தாலும், (பசுவின் சாணம்) ப்ரணயனம் செய்யக் கூடாது. இவைகளால் செய்வது யஜமானனுக்குப் பயத்தைச் செய்வதாயாகும். ஸ்ம்ருதிரத்னத்தில்:- வாணையிலும், உடைந்த பாத்ரத்திலும், ஓட்டிலும், கொள்ளிக் கட்டையிலும் (எடுத்து) அக்னி ப்ரணயனம் செய்யக் கூடாது. செய்வது, வ்யாதி, குறைவு, பயம் இவைகளைக் கொடுக்கக் கூடியதாம். அக்னியில் மற்றொரு அக்னியைப் போடக் கூடாது. அக்னியை ஜலத்தால் அணைக்கக் கூடாது.

होमकालमाहापस्तम्बः — समुद्रो वा एष यदहोरात्रस्तस्यैते गाधे तीर्थे यत् सन्धी तस्मात्सन्धौ होतव्यमिति शैलालिब्राह्मणं भवति नक्षत्रं दृष्ट्वा प्रदोषे निशायां वा सायम् इति ।। समुद्रत्वेन निरूपितस्याहोरात्रस्य सन्धिद्वयं सुप्रवेशं तीर्थद्वयम्। तस्मात्सन्धौ होमो मुख्यः । नक्षत्रदर्शनादयस्त्रयः कालाः सन्धिना सह विकल्प्यन्ते । एकनक्षत्रोदयो नत्रक्षंदर्शनम् । प्रदोषः - प्रथमयामः । निशा - निद्राकालः ।

ஹோமகாலத்தைச் சொல்லுகிறார், ஆபஸ்தம்பர்:- அஹோராத்ர (பகலும் ராத்ரியும்) மென்பது ஸமுத்ரமாம். அந்த ஸமுத்ரத்தின் அதிக ஜலமில்லாத இரண்டு துறைகளாம் இரண்டு ஸந்த்யைகளும். ஆகையால் ஸந்த்யைகளில் ஹோமம் செய்ய வேண்டுமென்று சைலாலிப்ராம்ஹணம் இருக்கிறது. நக்ஷத்ரம் தெரிந்தவுடன், அல்லது ப்ரதோஷத்தில், அல்லது நிசையில் ஸாயங்கால ஹோமம் செய்ய வேண்டும். ஸமுத்ரத் தன்மையுடன் சொல்லப்பட்ட அஹோராத்ரத்திற்கு இரண்டு ஸந்த்யைகளும் ஸுகமாய்

இறங்கக் கூடிய இரண்டு துறைகளாம். ஆகையால் ஸந்த்யைகளில் ஹோமம் முக்யம். நக்ஷத்ரதர்சனம் முதலிய மூன்று காலங்கள் ஸந்தியுடன் விகல்பிக்கப்படுகின்றன. ஒரு நக்ஷத்ரத்தின் உதயம் நக்ஷத்ரதர்சனம் எனப்படும். ப்ரதோஷமென்பது முதல்யாமம். நிசையென்பது நித்ராகாலம்.

प्रातर्होमकालोऽपि चतुर्विधस्तेनैव दर्शितः— उषस्युपोदयं समयाविषित उदिते वा प्रातः इति ।। उषसि - प्राच्यां प्राप्तप्रकाशायाम् । उपोदयं - उदयात् पूर्वस्मिन् समये । समयाविषिते - ईषदाविर्मण्डले । प्रातः उदिते वा सूर्य इत्यर्थः ।।

காலையில் நான்கு விதமாக ஹோமகாலம் ஆபஸ்தம்பராலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது - உஷ:காலத்தில், அல்லது உபோதய காலத்தில், ஸமயாவிஷித காலத்தில், உதயத்திற்குப் பிறகும் காலை ஹோமத்தைச் செய்யலாம். உஷ:காலத்தில் என்பதற்குக் கிழக்குத் திக்குப்ரகாசமான பிறகு என்றும், உபோதயம் என்பதற்கு உதயத்திற்கு முந்திய ஸமயத்திலென்றும், ஸமயாவிஷிதமென்பதற்குக் கொஞ்சம் ஸூர்யமண்டலம் ப்ரகாசிக்கும் பொழுது என்றும், ப்ராத: என்பதற்கு ஸூர்யோதயத்திற்கு பிறகு என்றும் பொருள்.

मनुस्तु प्रथमद्वितीयावेकीकृत्य कालत्रयमाह — उदितेऽनुदिते चैव समयाविषिते तथा । सर्वथा वर्तते यज्ञ इतीयं वैदिकी श्रुतिः इति ।। एतेषां लक्षणमाह व्यासः — रात्रेष्षोडशमे भागे ग्रहनक्षत्रभूषिते । काले त्वनुदितं प्राहुर्होमं कुर्याद्विचक्षणः ।। तथा प्रभातसमये नष्टे नक्षत्रमण्डले । रविर्यावन्न दृश्येत समयाविषितस्तु सः ।। रेखामात्रस्तु दृश्येत रश्मिभिस्तु समन्वितः । उदितं तं विजानीयात् तत्र होमं प्रकल्पयेत् इति । सङ्ग्रहोऽपि — ग्रहर्क्षयुक्तोऽनुदितो नक्षत्रार्कविवर्जितः । समयाविषितस्सार्क उदितस्त्रिषु होमयेत् इति ।।

மனு:- முதல் இரண்டாவது காலங்களை ஒன்றாக்கி மூன்று காலங்களைச் சொல்லுகிறார் - உதித காலத்திலும், அனுதித காலத்திலும், ஸமயாவிஷித காலத்திலும் ஹோமம் விகல்பமாய் விதிக்கப்படுகிறது என்றது வேதத்தின் வாக்யமாம். இவைகளுக்கு லக்ஷணத்தைச் சொல்லுகிறார். வ்யாஸர்:- ராத்ரியின் 16 - ஆவது பாகம், க்ரஹங்கள் நக்ஷத்ரங்கள் இவைகளுடன் ப்ரகாசிக்கும்பொழுது அக்காலத்தை அனுதிதமென்பர். அப்பொழுது ஹோமம் செய்ய வேண்டும். அவ்விதமே விடியற் காலத்தில் நக்ஷத்ரங்களெல்லாம் மறைந்த பிறகு, ஸூர்யன் புலப்படாமலிருக்கும் காலம் ஸமயாவிஷிதமென்பதாம். பிறகு கோடு அளவுற்றவனாய், கிரணங்களுடன் கூடியவனாய் ஸூர்யன் காணப்படும் காலம் உஷிதமாம். அப்பொழுது ஹோமம் செய்ய வேண்டும். ஸங்க்ரஹத்திலும்:- க்ரஹங்களும் நக்ஷத்ரங்களும் கூடியகாலம் அனுதிதமாம். நக்ஷத்ரங்களும் ஸூர்யனுமில்லாத காலம் ஸமயாவிஷிதமாம். ஸூர்யனுடன் கூடியகாலம் உதிதமாம். இம்மூன்று காலங்களிலும் ஹோமம் செய்யலாம்.

मरीचिः — द्विरश्मिमत्यां सन्ध्यायां सूर्यनक्षत्ररश्मिभिः । होमकालः स विज्ञेयो ह्यग्निगर्भा तदा मही इति ।। कात्यायनः — यावत्सम्यङ्ग भाव्यन्ते नभस्यृक्षाणि सर्वतः । लोहितत्वं च नापैति तावत् सायं तु हूयते ।। हस्तादूर्ध्वं रविर्यावत् भुवं हित्वा न गच्छति ।। तावद्धोम विधिः पूज्यो नान्यो ह्युदितहोमिनाम् इति ।। उशनाः – अर्धमण्डलसंप्राप्ते भानावनुदिते हुतम् । तस्मिन्नस्तं गते होमो भवेदुदितहोमिनः इति ।। हुतं - होमः ।। आश्वलायनः — प्रदोषान्तो होमकालः सङ्गवान्तः प्रातः इति ।।

மரீசி:- ஸூர்யகிரணங்களுடனும், நக்ஷத்ர கிரணங்களுடனும் கூடிய ஸந்த்யையில் ஹோமகாலமென அறியவேண்டும். அப்பொழுது பூமி, அக்னியை

கர்ப்பத்தில் உடையதாயிருக்கின்றது. காத்யாயனர்:- எதற்குள் ஆகாயத்தில் எல்லாவிடத்திலும் நக்ஷத்ரங்கள் நன்றாய்க் காணப்படவில்லையோ, ஆகாயத்திலுள்ள சிவப்பு நிறமும் மறையவில்லையோ அக்காலத்திற்குள் ஸாயங்காலத்திய ஹோமம் செய்ய வேண்டும். காலையில், உதித்த ஸூர்யன் பூமியை விட்டு ஒரு முழத்திற்கு மேல் போகாமலிருக்கும் காலத்திற்குள் காலையில் ஹோமம் செய்வது சிறந்தது. உதிதஹோமிகளுக்கு வேறு விதியில்லை. உசநஸ்:- காலையில் ஸூர்யன் பாதிமண்டலம் உதித்தும் பாதிமண்டலம் தெரியாமலுமிருக்கும் பொழுது ஹோமம் செய்ய வேண்டும். மாலையில் ஸூர்யன் அஸ்மித்த பிறகு ஹோமம் செய்ய வேண்டும். இது உதிதஹோமியின் விஷயம். ஆச்வலாயனர்:- மாலையில் ஹோமகாலம் ப்ரதோஷம் வரை. காலையில் ஸங்கவம் வரை.

स्मृत्यर्थसारे — प्रातर्होमे सङ्गवान्तः कालस्तूदितहोमिनः। सायमस्तमिते होमकालस्तु नवनाडिकाः इति ।। स्मृतिसारसमुच्चये — मुहूर्ते चतुरर्धे तु प्रातर्होमो विधीयते । सायङ्काले तथैव स्यात् भानोरस्तमयात् परम् इति ।। प्रदीपिकायाम् — निशायां तु व्यतीतायां सायं होमोऽतिपद्यते। तथैव सङ्गवेऽतीते प्रातर्होमोऽप्यनापदि इति ।। सङ्ग्रहोऽपि — निशा व्यतीयाद्यदि सङ्गवो वा सङ्कल्पितो वा समयो न चापदि इति ।। यद्यनापदि नवनाडिकाभ्यन्तरे सायंहोमो न क्रियते, द्वादशनाडिकाभ्यन्तरे यदि प्रातर्होमो न क्रियते, सङ्कल्पिते वा सन्ध्यादिकाले यद्युभयत्र न क्रियते, तदा कालातिपत्तिप्रायश्चित्तं कर्तव्यम् । आपदि तु वक्ष्यमाणगौणकालेऽपि न प्रायश्चित्तमित्यर्थः ।। भास्करः — कालातिपत्तिर्नवनाडिकोर्ध्वं सङ्कल्पिते वा समये व्यतीते । कालात्ययः सङ्गवतः परस्तात् सङ्कल्पिते वा समये व्यतीते इति ।।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- உதிதஹோமிக்குக் காலையில் ஹோமகாலம் ஸங்கவம் முடியும்வரை. மாலையில் ஸூர்யாஸ்தமயத்திற்குப் பிறகு ஒன்பது நாழிகை

முடியும்வரை. ஸ்ம்ருதிஸாரஸமுச்சயத்தில்:- காலையில் ஒன்பது நாழிகைக்குள் ஹோமம் செய்ய வேண்டும். மாலையில் அஸ்தமயத்திற்குப் பிறகு ஒன்பது நாழிகைக்குள் ஹோமம் செய்ய வேண்டும். ப்ரதீபிகையில்:- மாலையில் 9-நாழிகை அதிக்ரமித்தால் ஸாயங்கால ஹோமம் அதிபன்னமாகிறது. அவ்விதமே காலையில் ஸங்கவகாலம் அதிக்ரமித்தால் காலைஹோமம் அதிபன்னமாகிறது. இது ஆபத்தில்லாத விஷயத்தில். ஆபத்திலானல் அதிபன்னமாவதில்லை. ஸங்க்ரஹத்திலும்:- நிசை அதிக்ரமித்தாலும், ஸங்கவமதிக்ரமித்தாலும், ஸங்கல்பம் செய்த ஸமயம் அதிக்ரமித்தாலும், அதிபத்தியாகும். இது ஆபத்விஷயத்திலில்லை. ''ஆபத்தில்லாத காலத்தில் ஒன்பது நாழிகைக்குள் மாலை ஹோமம் செய்யப்பட்டாவிடினும், பன்னிரண்டு நாழிகைக்குள் காலை ஹோமம் செய்யப்படாவிடினும், இரு காலங்களிலும் ஸங்கல்பம் செய்து கொண்ட ஸந்த்யாதி காலத்தில் செய்யப் படாவிடினும், காலாதிபத்தி ப்ராயச் சித்தம் செய்ய வேண்டும். ஆபத்காலத்திலோவெனில் சொல்லப் போகும் கௌணகாலத்திலும் ப்ராயச் சித்தமில்லை'' என்பது பொருள். பாஸ்கரர்:- மாலையில் ஒன்பது நாழிகைக்குமேல் காலாதிக்ரமம். ஸங்கல்பம் செய்த ஸமயம் அதிக்ராந்தமானலும் அதிக்ரமம். காலையில் ஸங்கவத்திற்குப் பிறகும், ஸங்கல்பம் செய்த ஸமயம் அதிக்ரமித்தாலும் அதிக்ரமம். (காலாதிக்ரம ப்ராயச்சித்தம் செய்ய வேண்டும்)

सर्व एवैते कालविशेषाः सन्ध्यादयो यथाशाखं मुख्यतया व्यवतिष्ठन्ते ।। यदा तु कथञ्चिन्मुख्यकालातिक्रमः, तदा गोभिलोक्तं द्रष्टव्यम् — अथ यदि गृह्येऽग्नौ सायं प्रातर्होमयोर्दर्शपूर्णमासयोर्वा हव्यं होतारं नाधिगच्छेत् कथं कुर्यादिति । आसायमाहुतेः प्रातरा हुतिर्नात्येत्याप्रातराहुतेः सायमाहुतिराऽमावास्यायाः पौर्णमासी नात्येत्या-पौर्णमास्या अमावास्या इति ।।

இவ்விதம் சொல்லிய காலபேதங்களெல்லாம், அந்தந்தச் சாகைக்குத் தக்கப்படி முக்யமென வ்யவஸ்தையை அடைகின்றன (ஸமவிகல்பமல்ல என்பதாம்) எப்பொழுது முக்யகாலம் முழுவதும் அதிக்ரமித்ததோ அப்பொழுது கோபிலர் சொல்லியதை அறிந்து கொள்ளவும். கோபிலர்:- சொல்லுவதாவது:- "ஔபாஸனக்னியில் செய்ய வேண்டிய மாலை, காலை ஹோமங்களிலோ, தர்சபூர்ணமாஸங்களிலோ ஹோமத்ரவ்யம் யஜமானனுக்குக் கிடைக்காவிடில் என்ன செய்வதெனில், ஸாயங்காலாஹுதி வரையில், ப்ராத:காலாஹுதி அதிக்ராந்தமாகாது. ப்ராத:காலாஹுதி வரையில் ஸாயங்காலாஹுதி அதிக்ராந்தமாகாது. அமாவாஸ்யை வரையில் பௌர்ணமாஸீ அதிக்ராந்தமாகாது, பௌர்ணமாஸீ வரையில் அமாவாஸ்யை அதிக்ராந்தமாகாது" என்பதாம்.

बोधायनोऽपि— उक्तयोः कालयोः कर्तुमशक्ता सायमाहुतिम्। रात्रौ कुर्वीत कृत्स्नायां कृत्स्नेऽह्नि प्रातराहुतिम् ॥ आसायकर्मणः प्रातराप्रातः सायकर्मणः। आहुतिर्नातिपद्येत पार्वणं पार्वणान्तरात् इति ॥ भारद्वाजोऽपि — आसायमाहुतिकालात् प्रातराहुतिर्नातीयादाप्रातराहुतिकालात् सायमाहुतिकालः इति ॥ आपदि गौणकालस्याप्यनुग्राहकं ब्राह्मणं दर्शयत्यापस्तम्बः — यदुदिते जुहोत्यग्निष्टोमं तेनावरुन्धे यन्मध्यन्दिने जुहोत्युक्थ्यं तेनावरुन्धे यदपराह्णे जुहोति षोडशिनं तेनावरुन्धे यत् पूर्वरात्रे जुहोति प्रथमं तेन रात्रिपर्यायमाप्नोति यन्मध्यरात्रे जुहोति मध्यमं तेन रात्रिपर्यायमाप्नोति यदपररात्रे जुहोति जघन्यं तेन रात्रिपर्यायमाप्नोति इति ॥ उदिते पूर्वाह्ण इत्यर्थः। रात्रिपर्यायैः क्रत्वधिकारादतिरात्रो लक्ष्यते। एतेषु कालेषु जुह्वदेतैर्यज्ञैरिष्टवान् भवति। एवं च सर्वमहः सर्वा रात्रिश्च होमकाल इत्युक्तं भवति॥

போதாயனரும்:- விதிக்கப்பட்ட காலங்களில் செய்வதற்கு முடியாவிடில் மாலையாஹுதியை ராத்ரி முழுவதிலும் செய்யலாம். ப்ராதராஹுதியை பகல் முழுவதிலும் செய்யலாம். ஸாயங்கால ஹோமம் வரையில் ப்ராதராஹுதியும், ப்ராதர் ஹோமம் வரையில் ஸாயமாஹுதியும் அதிக்ராந்தமாகாது. அடுத்த பர்வஹோமம் வரையில் பூர்வபர்வ ஹோமமும் அதிக்ராந்தமாவதில்லை. பரத்வாஜரும்:- ஸாயமாஹுதி காலம் வரையில் ப்ராதராஹுதி காலமும், ப்ராதராஹுதி காலம் வரையில் ஸாயமாஹுதி காலமும் அதிக்ராந்தமாவதில்லை. ஆபத்காலத்தில் கௌண காலத்தைச் சொல்லும் வேதவாக்யத்தை உதாஹரிக்கின்றார் ஆபஸ்தம்பர்:- ஸூர்யோதயத்திற்குப் பிறகு ஹோமம் செய்தால் அக்னிஷ்டோமபலனை அடைகிறான். மத்யாஹ்னத்தில் செய்வதால் உக்த்ய பலனையடைகிறான். பிற்பகலில் செய்வதால் ஷோடசிபலனை அடைகிறான். பூர்வராத்ரியில் செய்வதால் (அதிராத்ரத்தில் உள்ள) முதலாவது ராத்ரி பர்யாயத்தின் பலனை அடைகிறான். மத்யராத்ரத்தில் ஹோமம் செய்வதால் நடுவான ராத்ரி பர்யாயத்தின் பலனை அடைகிறான். அபாராத்ரியில் ஹோமம் செய்வதால் கடைசியான ராத்ரி பர்யாயத்தின் பலனை அடைகிறான்'' என்று. இக்காலங்களில் ஹோமம் செய்பவன் இந்த யாகங்களைச் செய்தவனாகிறான் என்று பொருள். இவ்விதம் இருப்பதால் முழுப்பகலும் முழுராத்ரியும் ஹோமகாலமென்று சொல்லியதாகிறது.

न चैवं पूर्वोक्तैः सन्ध्यादिकालैः सह एषां तुल्यविकल्पता भ्रमितव्या इत्याह स एव — स न मन्येत सर्वेष्वेतेषु कालेषु होतव्यमापदि हुतमित्येव प्रतीयादिति विज्ञायते इति ।। सोऽयं प्रतिपत्ता नैवं मन्येत, सर्वेऽमी होमकाला इति। किन्तु आपदि अगत्या अमीषु कालेषु हुतमपि हुतं भवतीत्येतावदेव प्रतीयादित्यर्थः ।।

இவ்விதம் இருப்பதால், முன் சொல்லிய ஸந்த்யை முதலிய காலங்களுடன் இக்காலங்களுக்கும் ஸமவிகல்பத்தன்மை (ஏற்படுகிறது என்று) ப்ரமிக்கத் தகுந்ததில்லை என்கிறார் ஆபஸ்தம்பரே:- 'இந்தக் காலங்கள் எல்லாவற்றிலும் ஹோமம் செய்யலாமென்று எண்ணக் கூடாது. ஆபத்கால விஷயத்தில் இது என்று அறியவேண்டும் எனத்தெரிகிறது' என்பதால். இந்த ஸூத்ரங்களைப் பார்த்து நிச்சியிப்பவன், இவையெல்லாம் ஹோம காலங்கள் என்று நிச்சயிக்கக் கூடாது. ஆனால், ஆபத்காலத்தில் கதியில்லாததால் இந்தக் காலங்களில் ஹோமம் செய்தாலும், ஹோமம் செய்ததாகவே ஆகின்றது, என்று இவ்வளவையே நிச்சயிக்க வேண்டும் என்பது பொருள்.

स्मृत्यर्थसारे— दिवोदितानि कर्माणि प्रमादादकृतानि तु। शर्वर्याः प्रथमे यामे तानि कुर्यादतन्द्रितः ॥ रात्रावुक्तानि कर्माणि प्रमादादकृतानि वै। दिनस्य प्रथमे यामे तानि कुर्यादतन्द्रितः ॥ कालातीषु होमेषु ह्युत्तरेष्वागतेषु च। कालातीतानि हुत्वैव उत्तराणि समापयेत्॥ यस्त्वतीतान्यतिक्रम्य उत्तराणि समारभेत्। न देवान्नैव च पितॄन् हविस्तदुपतिष्ठते इति ॥ स्मृत्यन्तरे — रात्रौ प्रहरपर्यन्तं दिवाकृत्यानि कारयेत्। ब्रह्मयज्ञं च सौरं च वर्जयित्वा विशेषतः इति ॥

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- பகலில் விதிக்கப்பட்ட கர்மங்கள், கவனம் இன்மையால் பகலில் செய்யப்படாவிடில், அவைகளை இரவின் முதல் யாமத்தில் சோம்பல் இல்லாதவனாய்ச் செய்ய வேண்டும். ராத்ரியில் விதிக்கப்பட்ட கர்மங்கள் கவனமின்மையால் ராத்ரியில் செய்யப்படாவிடில், அவைகளைப் பகலின் முதல் யாமத்தில் சோம்பலில்லாதவனாய்ச் செய்ய வேண்டும். பூர்வஹோமங்கள் காலாதீதங்களாயிருக்கும்போது உத்தர கால ஹோமங்களும் சேர்ந்து விட்டால், காலாதீத ஹோமங்களைச் செய்து விட்டே உத்தர ஹோமங்களை

முடிக்க வேண்டும். எவன் அதீதங்களைச் செய்யாமல் உத்தரங்களைச் செய்கின்றானோ, அவனின் அந்த ஹவிஸ் தேவர்களையும் பித்ருக்களையும் சேருவதில்லை. மற்றொரு ஸ்ம்ருதியில்:- பகலில் விதிக்கப்பட்ட கார்யங்களை இரவின் முதல் யாமம் வரையில் செய்யலாம். ப்ரம்ஹயக்ஞம், ஸூர்யனை உத்தேசித்த நமஸ்காரம் முதலியவைகளைச் செய்யக் கூடாது.

स्मृतिरत्ने — एकेऽभ्युदितहोमाः स्युरन्येऽनुदितहोमिनः । अन्ये भोजनहोमाश्च पक्षहोमास्तथैव च इति ॥ बृहस्पतिः — सायं प्रातस्तनौ होमावुभौ सायं समस्य तु । आपन्नो जुहुयात् तस्य समिदेकाऽथवा द्वयम् । सायं होमस्य मुख्यत्वात् तदीयं तन्त्रमिष्यते । चतस्र आहुतीः कुर्यात् तत्र द्वे सायमाहुती ॥ द्वे प्रातराहुती चैव उपस्थानं सकृत्तथा इति ॥ आपन्नस्याहिताग्नेः पक्षहोममाह मरीचिः — शरीरापद्भवेद्यत्र भयाद्वाऽऽर्तिः प्रजायते । तथाऽन्यास्वपि चापत्सु पक्षहोमो विधीयते इति ।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- சிலர் உதிதஹோமிகளாவும், சிலர் அனுதிதஹோமிகளாகவும், சிலர் போஜனஹோமிகளாகவும், சிலர் பக்ஷஹோமிகளாகவும் இருக்கின்றனர். ப்ருஹஸ்பதி:- ஆபத்தை அடைந்தவன், மாலையிலும், காலையிலும் செய்ய வேண்டிய ஹோமங்கள் இரண்டையும் சேர்த்து ஸாயங்காலத்தில் ஹோமம் செய்யலாம். அதற்கு ஸமித்து ஒன்று, அல்லது இரண்டு. ஸாயங்கால ஹோமம் முக்யமானதால் அதன் விதியே விதிக்கப்படுகிறது. நான்கு ஆஹூதிகளைச் செய்ய வேண்டும். அவைகளில் இரண்டு ஸாயங்காலத்தினாஹூதிகள். இரண்டு ப்ராத:காலாஹூதிகள். உபஸ்தானம் ஒரு தடவை. ஆபத்தையடைந்த ஆஹிதாக்னிக்குப் பக்ஷஹோமத்தைச் சொல்லுகிறார் மரீசி :- எக்காலத்தில் சரீரத்திற்கு ஆபத்து நேரிடுகிறதோ, அல்லது பயத்தால் தொந்தரை உண்டாகிறதோ, வேறுவிதமான ஆபத்துக்கள்

நேருகின்றனவோ அப்பொழுது பக்ஷஹோமம் விதிக்கப்படுகிறது.

रत्नावल्याम् — प्रवासिनोऽग्निहोत्रस्य त्रिपञ्चाहादि सप्त च। दातव्यो होम एकाहे सायं प्रातः पृथक् पृथक् इति ॥

ரத்னாவளியில் :- அயல்தேசம் செல்பவனின் அக்னி ஹோத்ரத்திற்கு, பதினைந்துநாள் ஹோமங்களையும் சேர்த்து ஒரேநாளில், மாலையில் ஸாயமாஹுதிகளையும், காலையில் ப்ராதராஹுதிகளையும் தனித்தனியாய்ச் செய்ய வேண்டும்.

आपस्तम्बः — यायावरा ह वै पुरा नामर्षय आसंस्तेऽध्वन्य श्राम्यंस्तेऽर्धमासायार्धमासायाग्निहोत्रं जुहुवुस्तस्माद्यायावरधर्मेणा मयाव्यार्तो वा जननमरणयोरध्वन्यापत्सु वाऽर्धमासायाग्निहोत्रं जुहुयात् प्रतिपदि सायं चतुर्दश चतुर्गृहीतान्युन्नयत्येका समित् सकृद्धोमः सकृत् पाणिनिर्मार्जनं सकृदुपस्थानमेवं प्रातरेतावान् विकारः शेषं प्रकृतिवत् पक्षत्रये पुनराधेयमग्नीन् समारोपयते धारयते वौपवसथा दौपवसथ्येऽहनि निर्मन्थ्यौपवसथादि कर्म प्रतिपद्यते इति । भारद्वाजोऽपि — जननमरणयोरापत्सु वाऽर्धमासायाग्निहोत्रं जुहुयादूर्ध्वं द्वादशाहान्निर्मन्थ्यः इति ॥ पक्षहोमिनस्तत्पक्षमध्ये आपन्निवृत्तौ तदाप्रभृति पुनर्होमः कर्तव्यः ॥ तदाह मरीचिः — पक्षहोमानथो हुत्वा मध्येऽकस्मान्निवर्तितः। होमं पुनः प्रकुर्यात्तु न चासौ दोषभाग्भवेत् इति ॥ स्मृत्यर्थसारेऽपि — समस्येदग्निहोत्राणि यथासम्भवमापदि । प्रतिपद्युन्नयेत् सायमापद्यन्यत्र वा दिने ॥ यावन्त्यौपवसथ्याहात् प्राग्दिनानि भवन्ति हि। तावन्ति परिगृह्णीयात् चतुरुन्नयनानि तु ॥ प्रातर्होमान् समस्यैव जुहुयाच्च परेऽहनि । सर्वथौपवसथ्याहे सायं होमः पृथग्भवेत् ॥ तथैव यजनीयाहे प्रातर्होमो भवेत् पृथक्। उपवासेन शून्यं चेत् औपवसथ्यमहर्यदा ॥ तदा तत्सायं होमोऽपि पूर्वैः सह समस्यते। एवं प्रतिपदोऽन्यत्र यत्रापदुपजायते। तन्नाशेऽपि पुनर्होमः प्रागौपवसथादपि इति ॥

ஆபஸ்தம்பர்:- முற்காலத்தில் யாயாவரர்களென்ற சில ருஷிகளிருந்தனர். அவர்கள் வழியில் ச்ரமத்தை அடைந்தனர். அவர்கள் 15 - நாட்களுக்கு 15- நாட்களுக்கு ஒருமுறை அக்னி ஹோத்ரஹோமம் செய்தனர். ஆகையால் யாயாவர தர்மத்தின் படி, வ்யாதியுள்ளவனாயினும், தொந்தரையுடையவனாயினும், ஜனன மரணா சௌசங்களிலும், வழியிலும், ஆபத்துகளிலும் 15- நாட்களுக்கொரு முறை அக்னிஹோத்ர ஹோமம் செய்யலாம். ப்ரதமையில் ஸாயங்காலத்தில் பதினான்கு சதுர்க்ருஹீதங்களை க்ரஹிக்க வேண்டும். ஸமித்து ஒன்றே. ஹோமம் ஒரு தடவை. இவ்விதம் மறுநாள் காலையிலும். இவ்வளவுதான் விசேஷம். மற்றது ப்ருக்ருதி ஹோமம் போல். மூன்று பக்ஷங்கள் கடந்தால் புனராதானம் செய்ய வேண்டும். அக்னிகளை ஸமாரோபணம் செய்விக்கலாம். அல்லது தாரணம் செய்யலாம், பர்வதினம் வரையில். பர்வதினத்தில் மதனம் செய்து அன்வாதானம் முதலிய கார்யத்தைச் செய்ய வேண்டும். **பாரத்வாஜரும்:-** ஜனனாசௌசம், மரணாசௌசம், ஆபத்துக்கள் இவைகளில் பக்ஷஹோமம் செய்யலாம். பன்னிரண்டு நாளைக்கு மேல் மதனம் செய்து செய்ய வேண்டும். பக்ஷஹோமம் செய்தவன், அந்தப் பக்ஷத்தின் நடுவில் ஆபத்து நீங்கிவிட்டால் அதுமுதல் மறுபடி செய்ய வேண்டும். அதைச் சொல்லுகிறார் **மரீசி:-** பக்ஷஹோமம் செய்து வெளியிற் சென்றவன் பக்ஷமத்யத்தில் திடீரெனத் திரும்பி வந்தால் மறுபடி ஹோமம் செய்ய வேண்டும். இவன் தோஷத்தை அடையமாட்டான். **ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில் :-** ஆபத்காலத்தில் அக்னிஹோத்ர ஹோமங்களை நேர்ந்த படி சேர்க்க வேண்டும், ப்ரதமையின் ஸாயங்காலத்தில், ஆபத்காலமானால் வேறு திதியின் ஸாயங்காலத்தில். பர்வதினத்திற்கு முன் எவ்வளவு நாட்கள் கணக்காகின்றனவோ அவ்வளவு சதுர்க்ருஹீதங்களை க்ரஹித்து ஒரே தடவையாய் ஹோமம் செய்ய வேண்டும். மறுநாள் காலையில் ப்ராதர்

ஹோமங்களைச் சேர்த்து ஹோமம் செய்ய வேண்டும். எவ்விதமானாலும் பர்வதினத்தின் ஸாயம் ஹோமம் தனியாகவே செய்யப்பட வேண்டும். அவ்விதமே இஷ்டிதினத்தில் ப்ராதர் ஹோமம் தனியாகவே செய்யப்பட வேண்டும். பர்வதினத்தின் ஸாயங்கால ஹோமமும் தனியாகச் செய்யமுடியாது என்றிருந்தால் அதையும் முன் ஹோமங்களுடன் சேர்த்து விடலாம். இவ்விதம் ப்ரதமைக்குப் பிறகு ஆபத்து நேர்ந்த காலத்திலும் சேர்ந்து ஹோமம் செய்யலாம். நடுவில் ஆபத்து நிவ்ருத்தியானால் பர்வத்திற்கு முந்தியும் மறுபடி ஹோமங்களைச் செய்யலாம்.

होमयोग्यसमिधः स्मृत्यर्थसारे दर्शिताः — पलाशखदिराश्वत्थशम्युदुम्बरजा समित् । अपामार्गार्कदूर्वाश्च कुशाश्चेत्यपरे विदुः ॥ सत्वचः समिधः कार्या ऋज्व्यः श्लक्ष्णाः समास्तथा । शस्ता दशाङ्गुलास्तास्तु द्वादशाङ्गुलिकास्तथा ॥ आर्द्राश्शुष्काः समच्छेदास्तर्जन्यङ्गुलवर्तुलाः । अपाटिताश्चाद्विशिखाः कृमिदोषविवर्जिताः ॥ समित् पवित्रं वेदश्च त्रयं प्रादेशसंमितम् । इध्मस्तु द्विगुणः कार्यः परिधिस्त्रिगुणः स्मृतः ॥ स्मार्ते प्रादेश इध्मो वा द्विगुणः परिधिः स्मृतः इति ।

ஹோமத்திற்கு யோக்யமான ஸமித்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன - ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில் :- புரசு, கருங்காலி, அரசு, வன்னி, அத்தி இவைகளிலுண்டான ஸமித்துக்களும், நாயுருவி, எருக்கு, அறுகு இவைகளும் ஹோமயோக்யங்களாம், ஸமித்துக்கள் தோலுடன் இருக்க வேண்டும். கோணல் இல்லாததுகளும், மழமழப்புள்ளதும், ஒரே மாதிரியாயும் இருக்க வேண்டும். அவை பத்து அல்லது பன்னிரண்டு அங்குலமளவுள்ளவை சிறந்ததாம். அவை ஈரமாயும், அல்லது உலர்ந்ததாயும், ஸரியாய் வெட்டப்பட்டதாயும், ஆள்காட்டிவிரலளவு வர்த்துளமாயும், பிளக்கப்

படாததாயும், இருகிளை இல்லாததாயும், புழுவெட்டு இல்லாததாயும் இருக்க வேண்டும். ஸமித்து, பவித்ரம், வேதம் இம்மூன்றும் ஒட்டையளவுள்ளதாய் இருக்க வேண்டும். இத்மம் இரண்டு மடங்கும், பரிதி மூன்று மடங்கும் நீளமுள்ளதாய் இருக்க வேண்டும். (இது ச்ரௌத கர்மங்களில்) ஸ்மார்த்தத்தில் இத்மம் ஒட்டையளவும், பரிதி இரண்டு ஒட்டையளவுள்ளதாய் இருக்கலாம் விகல்பம்.

कात्यायनः — पालाश्यः समिधः कार्याः खादिर्यस्तदलाभतः । शमीरौहितकाश्वत्थास्तदलाभेऽर्कवेतसौ ॥ प्रदेशिन्यधिका नात्र समित् स्थूलतया क्वचित् । न सपर्णा न निर्वीर्या न सकीटा न पाटिता ॥ कोविदारं करञ्जं च शिरीषं व्याधिघातजम् । श्लेष्मातकमकर्मण्यं वर्जयेदिन्धनं बुधः ॥ समित्पुष्पकुशादीनि श्रोत्रियः स्वयमाहरेत् । शूद्राहृतैः क्रयक्रीतैः कर्म कुर्वन् व्रजत्यधः इति । स्मृत्यर्थसारे — पालाशः खादिरो वेध्मो मुख्यस्स्यात्तदलाभतः । शमीवटोदुम्बरजा अश्वत्थास्तदलाभतः ॥ वनस्पतीनां सर्वेषामिध्मः कार्यो विशेषतः । तत्रैतान् वर्जयेद्वृक्षान् कोविदारविभीतकौ । कपित्थामलकौ राजवृक्षं शाकद्रुमं तथा । नीपं निम्बं करञ्जं च तिलकं शल्मलीमपि । श्लेष्मातकमपि त्यक्त्वा ग्राह्योऽन्यः सकलो द्रुमः । तुलसीकाष्ठयुक्तेऽग्नौ जुह्वतामक्षयं फलम् इति ।

காத்யாயனர்:- ஸமித்துக்கள் புரசினுடையவைகளாய் இருக்க வேண்டும். அவை கிடைக்காவிடில் கருங்காலி, வன்னி, அத்தி, அரசு இவைகளுடையதாய் இருக்க வேண்டும். அவைகளும் கிடைக்காவிடில் எருக்கு, நொச்சி இவைகளினுடையதாய் இருக்கலாம். ஆள்காட்டி விரலைவிட அதிகப் பருமனுள்ளதாய் இருக்கக் கூடாது. இலையுள்ளதும், வீர்யமற்றதும், புழுவுடையதும், பிளக்கப்பட்டதும் கூடாது. மலையகத்தி, புங்கு, வாகை, கொன்றை, நருவிளி இவைகளினுடையதும் கூடாது.

ஸமித்து, புஷ்பம், குசம் முதலியவைகளை ச்ரோத்ரியன் தானகவே கொண்டு வரவேண்டும். சூத்ரர்கள் கொண்டு வந்ததும், க்ரயத்திற்கு வாங்கியதுமான ஸமித்து முதலியவைகளால் கர்மத்தைச் செய்பவன் பதிதனுவான். **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:-** புரசு அல்லது கருங்காலியின் ஸமித்து முக்யமாம். அது கிடைக்காவிடில், வன்னி, ஆல், அத்தி, அரசு இவைகளின் ஸமித்தையும் அவைகள் கிடைக்காவிடில், எல்லா வ்ருக்ஷங்களின் ஸமித்தையும் க்ரஹிக்கலாம். அவைகளுள் இனி சொல்லப்படும் வ்ருக்ஷங்களை வர்ஜிக்க வேண்டும். மலையகத்தி, தானி, விளா, நெல்லி, கொன்னை, பாலை, கடம்பு, வேம்பு, புங்கு திலகம், முள்ளிலவு, நறுவிளி இவைகளின் ஸமித்துக்கள் கூடாது. துளஸிக் கட்டையுடன் கூடிய அக்னியில் ஹோமம் செய்கின்றவர்களுக்கு அழிவற்ற பலனுண்டாகும்.

दक्षः — पूर्वं प्रादेशिकां दत्वा ततो होमो विधीयते। द्वितीया पृष्ठतो देया ततोऽग्निमुपतिष्ठते इति ॥ पृष्ठतः - होमान्ते। प्रादेशिका - समित् ॥ आपस्तम्बः – नाप्रोक्षितमिन्धनमग्नावादध्यात् इति ॥ अयोग्यसमिधो होमे दोषमाह व्यासः — विशीर्णाऽऽयुः क्षयं कुर्या द्विदला व्याधिसम्भवम्। ह्रस्वया मृत्युमाप्नोति वक्रा विघ्नकरी तथा ॥ स्थूला च हरते लक्ष्मीं कृशा वै बान्धवक्षयम्। द्विशाखा नेत्ररोगं च कीटजुष्टाऽर्थनाशनम् ॥ द्वेष्यं प्रकुरुते दीर्घा प्राणघ्ना वित्वचः स्मृताः इति ॥

தக்ஷர்:- முதலில் ஒரு ஸமித்தை வைத்துப் பிறகு ஹோமம் செய்ய வேண்டும். பிறகு இரண்டாவது ஸமித்தை வைக்க வேண்டும். பிறகு அக்னியினு பஸ்தானத்தைச் செய்ய வேண்டும். **ஆபஸ்தம்பர்:-** ப்ரோக்ஷிக்கப்படாத இந்தனத்தை அக்னியில் வைக்கக் கூடாது. (இந்தனம் - ஸமித், விறகு முதலியவை.) நிஷித்தமான ஸமித்தை ஹோமம் செய்வதில்

தோஷத்தைச் சொல்லுகிறுர். வ்யாஸர்:- சிதறிய ஸமித்து ஆயுளைக் குறைக்கும். பிளந்தது வ்யாதியைக் கொடுக்கும். குட்டையாயுள்ளது ம்ருத்யுவைக் கொடுக்கும். வக்ரமாயுள்ளது விக்னத்தைச் செய்யும். பருமனுயுள்ளது ஸம்பத்தைப் போக்கும். மெல்லியது பந்து நாசத்தைச் செய்யும். இரண்டு கிளையுள்ளது கண்ரோகத்தைக் கொடுக்கும். புழுவுள்ளது தனநாசத்தைச் செய்யும். நீளமாயுள்ளது சத்ருவையுண்டாக்கும். தோலில்லாதவைகள் ப்ராணனைக் கொல்லும்.

हविर्लक्षणमुक्तं कात्यायनेन — हविस्तु त्रिविधं ज्ञेयं कृतं चैव कृताकृतम् । अकृतं च क्रमादेषां लक्षणं सम्यगुच्यते ।। कृतमोदन-सक्त्वादि तण्डुलादि कृताकृतम् । व्रीह्यादि चाकृतं प्रोक्तमिति हव्यं त्रिधा बुधैः इति ।। आपस्तम्बः – पयसा पशुकामस्य जुहुयाद्दध्नेन्द्रियकामस्य यवाग्वा ग्रामकामस्यौ दनेनान्नाद्यकामस्य तण्डुलैरोजस्कामस्य बलकामस्येत्येके मांसेन यशस्कामस्य सोमेन ब्रह्मवर्चसकामस्याज्येन तेजस्कामस्य इति ।। पयसो नित्यस्यैव सति कामे फलवचनम् ।। तथा चाश्वलायनः – पयसा नित्यहोमो यवागूरोदनो दधि । सर्पिर्ग्रामकामान्नाद्यकामेन्द्रियकामतेज-स्कामानाम् इति ।

ஹவிஸ்ஸின் லக்ஷணம் சொல்லப்பட்டுள்ளது-காத்யாயனரால்:- க்ருதம், க்ருதாக்ருதம், அக்ருதம் என மூன்று விதமாயுள்ளது ஹவிஸ் என்று அறியவும். இவைகளுக்கு லக்ஷணம் முறையே சொல்லப்படுகிறது. அன்னம், மாவு முதலியவை க்ருதமெனப்படும். அரிசி முதலியது க்ருதாக்ருதம். நெல் முதலியது அக்ருதமெனச் சொல்லப்பட்டது. இவ்விதம் மூன்று விதமாய் வித்வான்களால் சொல்லப்பட்டுள்ளது. ஆபஸ்தம்பர் :- பசுக்களை விரும்புகிறவனுக்குப் பாலினுலும், இந்த்ரியகாமனுக்குத் தயிரினுலும், பந்து ஸம்ருத்தியை விரும்புகிறவனுக்குக் கஞ்சியினுலும், அன்னத்தை

விரும்புகிறவனுக்கு அன்னத்தினுலும், ஓஜஸ்ஸை விரும்புகிறவனுக்கு (பலத்தை விரும்புகிற வனுக்கும்) அரிசியினுலும், புகழை விரும்புகிறவனுக்கு மாம்ஸத்தினுலும், ப்ரம்ஹ வர்ச்சஸத்தை விரும்புகிற வனுக்கு ஸோமத்தினுலும், தேஜஸ்ஸை விரும்புகிற வனுக்கு ஆஜ்யத்தினுலும் ஹோமம் செய்யப்பட வேண்டும். பால் நித்யமாஞலும் காமமிருந்தால் பலனும் சொல்லப்பட்டது. அவ்விதமே, **ஆச்வலாயனர்:-** நித்யஹோமம் பாலினுல் செய்யப்பட்ட வேண்டும். கஞ்சி, அன்னம், தயிர், நெய் இவைகள், முறையே க்ராமகாமன், அன்னுத்யகாமன், இந்த்ரியகாமன், தேஜஸ்காமன் இவர்களுக்கு ஹோமத்ரவ்யங்களாம்.

व्यासः — कपिलायास्तु पयसा येऽग्निहोत्राण्युपासते । आदित्यमण्डलं भित्वा यान्ति ब्रह्म सनातनम् इति ।। गृह्यपरिशिष्टे— येन सायं जुहुयात्तेन प्रातः इति ।। चन्द्रिकायाम्— तैलं दधि पयः सोमो यवागूरोदनं घृतम् । तण्डुला मांसमापश्च दश द्रव्याण्यकामतः इति ।। पयोहोमप्रशंसामाह श्रुतिः— तद्यदिदमाहुः संवत्सरं पयसा जुह्वदप पुनर्मृत्युं जयतीति न तथा विद्याद्यदहरेव जुहोति तदहः पुनर्मृत्युमप- जयत्येवं विद्वान् इति ।। पुनर्मृत्युं - पुनर्मरणम् ।। पुनर्मरणाय परिच्छिन्नं शरीरं न गृह्णातीत्यर्थः ।।

வ்யாஸர்:- காராம்பசுவின் பாலினுல் எவர்கள் அக்னி ஹோத்ர ஹோமம் செய்கின்றனரோ அவர்கள் ஸூர்ய மண்டலத்தைப் பிளந்து கொண்டு சாச்வதமான ப்ரம்ஹத்தை அடைகின்றனர். **க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:-** எந்த த்ரவ்யங்களால் மாலையில் ஹோமம் செய்தானே அதனுலேயே மறுநாள் காலையிலும் ஹோமம் செய்ய வேண்டும். **சந்த்ரிகையில்:-** எண்ணெய், தயிர், பால், ஸோமம், கஞ்சி, சாதம், நெய், அரிசி, மாம்ஸம், ஜலம் இந்தப் பத்து த்ரவ்யங்களும் நித்யமான ஹோமத்ரவ்யங்களாம். பாலால் செய்யப்படும் ஹோமத்தின் ப்ரசம்ஸையைச் சொல்லுகிறது- **வேதம்:-**

ஒருவருஷம் பூராவும் க்ஷீரத்தாலக்னி ஹோத்ரம் செய்பவன் மறுபடி மரணத்தை ஜயிக்கிறான் என்றிவ்விதம் சொல்கிறார்களே அது அவ்விதம் என்றறிய இயலாது. அறிந்தவன் இவ்விதம் என்றைய தினத்தில் ஹோமம் செய்கிறானோ அன்றே மறுபடி மரணத்தை ஜயிக்கிறான். (அவன் மறுபடி இறப்பதற்காக அளவுள்ள சரீரத்தை அடைவதில்லை என்பது பொருள்.)

स्मृत्यर्थसारे—शालिश्यामाकनीवारा व्रीहिगोधूमयावकाः । एतेषां तण्डुला होम्या यावनालाः प्रियङ्गवः ।। नीवाराः शालयश्चैव गोधूमा व्रीहयो यवाः । स्वरूपेणैव होम्याः स्यु : स्वरूपेणैव वै तिलाः ।। द्रवं स्रुवेण होतव्यं पाणिना कठिनं हविः । पयो दधि यवागूश्च सर्पिरोदनतण्डुलाः ।। सोमो मांसं तैलमापो दशैतान्यग्निहोत्रके । स्यादग्निहोत्रवद्धार्ह्ये मांसमौपासने न च । यद्यग्निहोत्रहोमार्थं पयो न स्यात् कदाचन ।। तदा व्रीहियवौ ग्राह्यावोषध्यन्तरमेव वा । यद्वा यज्ञियवृक्षस्य कन्दं मूलं फलं जलम् । सत्यं वा हविरेतेषु यथासंभवमाचरेत् । प्रतिनिध्यन्तरं सत्यं विज्ञेयं हविरत्यये । न ग्राह्यं सर्वथा माषवरकोदार-कोद्रवम् इति ।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- செந்நெல், சாமை, நீவாரம், சம்பாநெல், கோதுமை, யாவகம் இவைகளின் அரிசிகள் ஹோமார்ஹங்கள், யாவநாளம், ப்ரியங்கு, நீவாரம், சாலி, கோதுமை, வ்ரீஹி, யவை இவைகளை உள்ளபடியே ஹோமம் செய்ய வேண்டும். எள்ளையுமப்படியே. த்ரவமாயுள்ளதை ஸ்ருவத்தினால் செய்ய வேண்டும். கடினமான ஹவிஸ்ஸைக் கையினால் ஹோமம் செய்ய வேண்டும். பால், தயிர், கஞ்சி, நெய், அன்னம், அரிசி, ஸோமம், மாம்ஸம், எண்ணெய், ஜலம் இந்தப் பத்தும் அக்னி ஹோத்ர ஹோமத்திற்கு விஹிதங்களாம். அக்னிஹோத்ர ஹோமத்திற்போல் ஔபாஸனத்திலும் மந்த்ரமில்லாமல் ஹோம த்ரவ்யங்களுக்கு ஸம்ஸ்காரம். அல்லது, அவைகளை

மூன்றுமுறை ப்ரோக்ஷிக்க வேண்டும். ஒளபாஸனத்தில் மாம்ஸத்தை ஹோமம் செய்யக் கூடாது. அக்னி ஹோத்ர ஹோமத்திற்குப் பால் கிடைக்காவிடில் நெய் அல்லது யவையை க்ரஹிக்கலாம். வேறு ஓஷதியையாவது க்ரஹிக்கலாம். அல்லது, யக்ஞார்ஹமான வ்ருக்ஷத்தின் கிழங்கு, வேர், பழம், ஜலம், ஸத்யம் இவைகளிலொன்றைக் கிடைத்ததை க்ரஹிக்கலாம். ஹவிஸ் கிடைக்காவிட்டால் முக்ய த்ரவ்யத்திற்கு ஸமமான வேறு த்ரவ்யத்தை (ஸத்யத்தை) க்ரஹிக்கலாம். எவ்விதத்திலும் உளுந்து, காட்டுப் பயறு, நாய்த்தினை, கேழ்வரகு இவைகளை க்ரஹிக்கக் கூடாது.

कात्यायनः — हविष्येषु यवा मुख्यास्तदनु व्रीहयः स्मृताः । अभावे व्रीहियवयोर्दध्ना च पयसाऽपि वा । तदभावे यवाग्वा वा जुहुयादुदकेन वा ।। यथोक्तवस्त्वसंप्राप्तौ ग्राह्यं तदनुसारि च । यवानामिव गोधूमा व्रीहीणामिव शालयः ।। यवाभावे तु गोधूमास्ततो वेणुयवादयः । फलं वा यज्ञवृक्षस्य तत्पत्रमथवा भवेत् ।। आज्यं हव्यमनादेशे जुहोतिषु विधीयते । मन्त्रस्य देवतायास्तु प्रजापतिरिति स्थितिः इति ।।

காத்யாயனர்: - ஹவிஸ்ஸுக்கு யோக்யமானவைகளுள் யவை முக்யம். பிறகு நெல். இவ்விரண்டு இல்லாவிடில், தயிர், பால், அவைகளுமில்லாவிடில் கஞ்சி, ஜலம் இவைகளாலாவது ஹோமம் செய்யலாம். முக்யமாய் விதிக்கப்பட்ட வஸ்து கிடைக்காவிடில், அதற்கு ஸமமானதை க்ரஹிக்க வேண்டும். யவைகளுக்குக் கோதுமைபோலும், சம்பா நெல்லுக்குச் செந்நெல் போலவும். யவம் கிடைக்காவிடில் கோதுமை, பிறகு மூங்கிலரிசி முதலியவை. அல்லது யக்ஞார்ஹமான வ்ருக்ஷத்தின் பழம், அல்லது இலை இவைகளை க்ரஹிக்கலாம். ஹோமத்தை விதித்து த்ரவ்யத்தை விதிக்காத ஸ்தலங்களில் ஆஜ்யம் விதிக்கப்பட்டதாகும். மந்த்ரத்தின் தேவதை சொல்லப்படாவிடில், ப்ரஜாபதி தேவதை என்பது முறையாகும்.

व्यासः — हव्यार्थे गोघृतं ग्राह्यं तदभावे तु माहिषम्। आजं वा तदभावे तु साक्षात्तैलं ग्रहिष्यते॥ तैलाभावे ग्रहीतव्यं तैलं जर्तिलसम्भवम्। तदभावेऽतसीस्नेहः कौसुम्भः सर्षपोद्भवः॥ वृक्षस्नेहोऽथवा ग्राह्यः पूर्वाभावे परःपरः। तदभावे यवव्रीहिश्यामाकान्यतरोद्भवम्॥ पिष्टमालोड्य तोयेन घृतार्थे योजयेत् सुधीः। वृक्षतैलेषु पुन्नाग निम्बैरण्डोद्भवं त्यजेत्॥ यद्वाऽलाभे गोघृतादेः क्रमात् क्षीरं विधीयते। तदलाभे दधि ग्राह्यमलाभे तैलमिष्यते॥ येषां केषांचिदन्येषां हविषामप्यसम्भवे। सर्वत्राज्यमुपादेयं भरद्वाजमुनेर्मतात् इति॥ स्मृतिभास्करे — शिष्टस्याभावतस्तुल्यं द्रव्यं प्रतिनिधीयते। कन्दैः पुष्पैः फलैर्मूलै रूपैः सदृशमिष्यते इति। शिष्टस्य - विहितस्य॥

வ்யாஸர்:- ஹோமத்திற்குப் பசுவின் நெய்யை க்ரஹிக்க வேண்டும். அதில்லாவிடில் எருமை நெய், அல்லது ஆட்டு நெய், அல்லது எள்ளெண்ணெய், அல்லது காட்டெள்ளின் எண்ணெய், காசாம் விதையின் எண்ணெய், சணலெண்ணெய், கடுகெண்ணெய், மரத்தினெண்ணெய் இவைகளிலொன்றை க்ரஹிக்கவும். முந்தியது இல்லாவிடில் பிந்தியதை க்ரஹிக்க வேண்டும். இவைகளில் ஒன்றுமே கிடைக்காவிடில், யவை, சம்பாநெல், ச்யாமாகம் இவைகளில் ஒன்றின் மாவை ஜலத்துடன் கலந்து நெய்யின் ஸ்தானத்தில் உபயோகிக்கலாம். மர எண்ணெய்களிலும் புங்கை, வேம்பு, ஆமணக்கு இவைகளின் எண்ணெய்யை க்ரஹிக்கக் கூடாது. அல்லது, பசுநெய் முதலியவை கிடைக்காவிடில் முறையே பால், தயிர், எள்ளெண்ணெய் இவைகளை க்ரஹிக்கலாம். விஹிதமான ஹவிஸ்ஸுகள் ஏதாயினும் கிடைக்கா விட்டால் அவைகளின் ஸ்தானத்தில் ஆஜ்யத்தை க்ரஹிக்கலாம். பரத்வாஜ முனிதுள்ளார். அவ்விதம் விதித்திருப்பதால். **ஸ்ம்ருதி பாஸ்கரத்தில்:-** விதிக்கப்பட்ட வஸ்து கிடைக்காவிடில், கிழங்கு, பூ, பழம், வேர், உருவம் இவைகளால் விஹித த்ரவ்யத்திற்கு ஸமமான வேறு த்ரவ்யத்தை க்ரஹிக்கலாம்.

स्मृतिरत्ने —— कार्यै रूपैस्तथा वर्णैः क्षीरैः पुष्पैः फलैरपि। गन्धै रसैस्सदृक् ग्राह्यः पूर्वाभावे परः परः ।। नापि प्रतिनिधातव्यं निषिद्धं वस्तु कुत्रचित् ।। श्रोत्रियाणामभोज्यं यत् द्रव्यं हि तदशेषतः । ग्राह्यं प्रतिनिधित्वेन होमकार्येषु न क्वचित् ।। काम्ये प्रतिनिधिर्नास्ति नित्ये नैमित्तिके हि सः । काम्ये तूपक्रमादूर्ध्वं मन्ये प्रतिनिधिं विदुः ।। न च प्रतिनिधिर्मन्त्रस्वामिदेवाग्निकर्मसु। स देशकालयोर्नास्ति ह्यरण्यामग्निरेव सा ।। समारूढां च समिध मरणिं ब्रुवते बुधाः ।। नाभावस्य प्रतिनिधिरभावान्तरमिष्यते । नापि प्रतिनिधातव्यं निषिद्धं वस्तु कुत्रचित् । द्रव्यं वैकल्पिकं किञ्चिद्यत्र सङ्कल्पितं भवेत्। तदभावे सति ग्राह्यं न तु वैकल्पिकान्तरम् इति ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- வடிவமைப்பு, ரூபம், வர்ணம், பால், புஷ்பம், பழம், கந்தம், ரஸம் இவைகளால் ஸமானமான வஸ்துவை க்ரஹிக்க வேண்டும். முந்தியது கிடைக்காவிடில் பிந்தியதை க்ரஹிக்க வேண்டும். நிஷித்தமான வஸ்துவை எவ்விதத்திலும் பதிலாக க்ரஹிக்கக் கூடாது. ச்ரோத்ரியர்களுக்குப் புஜிக்கத்தகாததென்று நிஷித்தமான வஸ்துக்கள் எவையோ அவை முழுவதையும் ஹோமகார்யங்களில் ப்ரதிநிதியாய் ஒருகாலும் க்ரஹிக்கக் கூடாது. காம்ய கர்மத்தில் ப்ரதிநிதியை க்ரஹிக்கக் கூடாது. நித்ய கர்மத்திலும், நைமித்திக கர்மத்திலுமே ப்ரதிநிதி க்ரஹிக்கலாமெனச் சிலர் சொல்லுகின்றனர். மந்த்ரம், யஜமானன், தேவதை, அக்னி, கர்ம, தேசம், காலம், அரணி இவைகளிலும் ப்ரதிநிதி கிடையாது. அரணி என்பது அக்னியேயாகும். அக்னியால் ஆரூடமான ஸமித்தையும் அரணி என்று அறிந்தவர் சொல்லுகின்றனர். முக்ய த்ரவ்யத்திற்கு ப்ரதிநிதியாய் க்ரஹித்த த்ரவ்யத்திற்கு வேறு ப்ரதிநிதி விதிக்கப்படுவதில்லை. நிஷித்தமான வஸ்துவை எதிலும் ப்ரதிநிதியாய் செய்யக் கூடாது. விகல்ப ப்ராப்தமான த்ரவ்யத்தைக் கொண்டு ஆரம்பித்த கர்மத்தில்

அந்த த்ரவ்யம் நஷ்டமானால் வேறு விகல்ப த்ரவ்யத்தை க்ரஹிக்கக் கூடாது.

स्मृत्यर्थसारे — संस्काराणामयोग्योऽपि मुख्य एव हि गृह्यते। न हि संस्कारयोग्योऽन्यो गृह्यते प्रतिरूपकः ।। कार्यनिर्वृत्तिपर्याप्त-मुख्यद्रव्यस्य सम्भवे । पुरोडाशमहत्त्वार्थं न नीवारपरिग्रहः । कृष्णव्रीह्यादिके द्रव्ये शिष्टे प्रचरिते सति । ग्राह्योऽकृष्णोऽपि स व्रीहिर्नाव्रीहिः कृष्ण इत्यपि ।। अथ व्रीहियवाभावे तुषतण्डुलयोगिनीः । ओषधीः प्रतिगृह्णीयात् कोद्रवादिविवर्जिताः ।। उपात्ते तु प्रतिनिधौ मुख्यार्थो लभ्यते यदि । तदा मुख्यमनादृत्य गौणेनैव समापयेत् । मुख्यालाभे तु सदृशद्रव्यलाभो विधीयते । यावद्यावत् सुसदृशं तत्तदेव हि गृह्यते ।। उपात्ते यस्मिन् कस्मिन्वा मुख्ये प्रचरिते सति । अन्यत् द्रव्यं सजातीयं विजातीयमथापि वा ।। उपादाय प्रयुञ्जानो यदि पूर्वमवाप्नुयात् । उपात्तत्वाद्विशेषेण पूर्वं त्यक्त्वा परं श्रयेत् ।। मुख्यालाभे यदा गौणमुपात्तं सद्विनश्यति । तत्र मुख्योपमं गौणं ग्राह्यं गौणोपमं न तु ।। प्रभुः प्रथमकल्पस्य योऽनुकल्पेन वर्तते । स नाप्नोति फलं तस्य परत्रेति श्रुतिस्मृती इति ।।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- *ப்ரதிபத்தி ஸம்ஸ்காரம் முதலியவைக்குப் போதாமல் இருந்தாலும் முக்ய த்ரவ்யத்தையே க்ரஹிக்க வேண்டும். ஸம்ஸ்காரங்களுக்குப் போதுமானதாய் உள்ளதென்று முக்ய த்ரவ்யத்திற்கு ப்ரதிநிதியான த்ரவ்யத்தைப் பரிக்ரஹிக்கக் கூடாது. முக்ய கார்யம் முடிவதற்குப் போதுமான முக்யத்ரவ்யம் இருக்கும் பொழுது, புரோடாசம் பெரிதாக விருக்க வேண்டுமென்பதற்காகக் கௌணமான நீவாரதான்யத்தைப் பரிக்ரஹிக்கக் கூடாது. கறுப்பு நெல்லினால் செய்யும் கார்யத்தில் அதற்கு அபாவமானால், அந்த ஜாதியிலுள்ள நெல் கறுப்பாய் இல்லாததாயினும் அதையே க்ரஹிக்க வேண்டும்.*

கறுப்பாயிருப்பதைக் கொண்டு நெல்லல்லாத வேறு தான்யத்தை க்ரஹிக்கக் கூடாது. பிறகு, நெல் யவை இவைகள் கிடைக்காவிடில் உமி, அரிசி இவைகளுடன் கூடிய தான்யங்களை க்ரஹிக்கலாம். வரகு முதலியது கூடாது, முக்ய த்ரவ்யம் கிடைக்காததால் கௌண த்ரவ்யத்தைப் பரிக்ரஹித்த பிறகு, முக்ய த்ரவ்யம் கிடைத்தால் அப்பொழுது முக்யத்தை உபேக்ஷித்து கௌணத்தாலேயே கார்யத்தை முடிக்க வேண்டும். முக்ய த்ரவ்யம் கிடைக்கா விடில் அதற்கு ஸமானமான த்ரவ்யம் விதிக்கப்படுகிறது. அதிகமான ஸாத்ருச்யம் எதிலுள்ளதோ அதுவே க்ரஹிக்கப்பட வேண்டும். முக்ய த்ரவ்யமொன்றை க்ரஹித்து நடத்தும் பொழுது அதன் அபாவத்தால், அதற்கு ஸமானஜாதீயமோ அல்லது விஜாதீயமோ வேறு த்ரவ்யத்தைப் பரிக்ரஹித்துச் செய்யும் பொழுது, முக்யத்ரவ்யமே கிடைத்து விட்டாலும் அதை உபேக்ஷித்து, மறுபடி க்ரஹிக்கப்பட்டதாலேயே செய்ய வேண்டும். முக்யத்ரவ்யம் கிடைக்காமல் கௌணத்ரவ்யத்தை க்ரஹித்துச் செய்யும் பொழுது அது நஷ்டமானல், அங்கு முக்ய த்ரவ்யத்திற்கு ஸமமான கௌணத்ரவ்யத்தையே க்ரஹிக்க வேண்டும். கௌணத்ரவ்யத்திற்கு ஸமமான வேறு த்ரவ்யத்தை க்ரஹிக்கக் கூடாது. முக்ய கல்பத்தை அனுஷ்டிக்கச் சக்தியுள்ளவன் அனுகல்பத்தை அனுஷ்டித்தால் அவன் அதன் பலத்தைப் பரலோகத்தில் அடையமாட்டான் என்று ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் சொல்லுகின்றன.

आहुतिपरिमाणमाह बृहस्पतिः — प्रस्थधान्यं चतुःषष्टेराहुतेः परिकीर्तितम्। तिलानां तु तदर्धं स्यात्तदर्धं स्याद्धृतस्य तु इति। बोधायनः — व्रीहीणां वा यवानां वा शतमाहुतिरिष्यते। ओदनो द्विगुणो ग्राह्यो मयूराण्डाकृतिस्तथा ॥ कुक्कुटाण्डप्रमाणस्तु पिण्ड इत्यभिधीयते। अङ्गुष्ठपर्वमात्रं स्यादवदानं ततोऽपि च ॥ ज्यायः स्विष्टकृदाद्यं तु चतुरङ्गुलसंमितम् इति ॥

ஆஹுதிகளின் அளவைச் சொல்லுகிறார்:- ப்ருஹஸ்பதி:- ஒரு படி தான்யம் அறுபத்து நான்கு ஆஹுதிகளுக்குப் போதுமானதாகும். எள் அரைப்படியும், நெய் கால்படியும் 64- ஆஹுதிகளுக்குப் போதுமானதாகும். போதாயனர்:- நெல், அல்லது யவை, 100- கொண்டது ஒரு ஆஹுதியாகும். அன்னமானால் இரண்டு மடங்கு, மயில்முட்டை அளவு. கோழியின் முட்டையளவுள்ளது பிண்டமெனப்படும். அவதான மென்பது பெருவிரலின் கணுவளவுள்ளது. ஸ்விஷ்டக்ருத் முதலியது அவதானத்தை விடப் பெரிதாய் நாலு அங்குலமளவுள்ளதாய் இருக்க வேண்டும்.

चन्द्रिकायाम् — तीर्थायतनसंपूर्णं प्रातरुत्तानपाणिना । द्व्यङ्गुलं समिधोऽतीत्य वाग्यतो जुहुयाद्धविः ॥ पाण्याहुति द्वादशपर्वपूरिता स्रुवाहुतिश्चेत् स्रुवमात्रपूरिता । स्वङ्गारिणि स्वर्चिषि चैव पावके दैवेन तीर्थेन च हूयते हविः इति ॥ वृद्धहारीतः — देवानां तर्पणं होमं बलिकर्म च भोजनम् । अर्चनं मार्जनं कुर्यात् देवतीर्थेन सर्वदा इति । स्मृतिरत्ने तु — अङ्गुल्यग्रैर्न होतव्यं न कृत्वाऽङ्गुलिभेदनम् । अङ्गुल्युत्तरपार्श्वे तु होतव्यमिति हि स्मृतिः इति ॥

சந்த்ரிகையில்:- காலையில், நிமிர்ந்த கையினால், தேவதீர்த்த ஸ்தானம் நிறைந்துள்ள ஹவிஸ்ஸை, ஸமித்தின் இரண்டங்குலத்தைத் தாண்டி மௌனியாய் ஹோமம் செய்ய வேண்டும். கையினால் செய்யுமாஹுதி நான்கு விரல்களின் 12-கணுக்கள் நிறைந்துள்ளதாய் இருக்க வேண்டும். ஸ்ருவத்தினால் செய்யுமாஹுதியானால் ஸ்ருவம் நிறைந்ததாய் இருக்க வேண்டும். நல்ல தணல்களுள்ளதும், நல்ல ஜ்வாலையுள்ளதுமான அக்னியில் தேவதீர்த்தத்தால் ஹவிஸ்ஸை ஹோமம் செய்ய வேண்டும். வ்ருத்தஹாரீதர்:- தேவதர்ப்பணம், ஹோமம், பலிதானம், போஜனம், பூஜை, துடைப்பது இவைகளை எப்பொழுதும் தேவதீர்த்தத்தால் செய்ய வேண்டும்.

ஸ்ம்ருதிரத்னத்திலானல்:- விரல்களின் நுனிகளால் ஹோமம் செய்யக் கூடாது. விரல்களைப் பிரித்தும் ஹோமம் செய்யக் கூடாது. விரல்களின் வடபுறத்தால் ஹோமம் செய்ய வேண்டும் என்றது ஸ்ம்ருதி. (என்றிருக்கிறது.)

गृह्यपरिशिष्टे — उत्तानेन तु हस्तेनाथाङ्गुष्ठाग्रनिपीडितम् । संहताङ्गुलिपाणिस्तु वाग्यतो जुहुयाद्धविः इति ॥ कात्यायनः — जुहूषुश्च हुते चैव पाणिशूर्पास्यदारुभिः । न कुर्यादग्निधमनं न कुर्याद्व्यजनादिना इति ॥ देवलः – वस्त्रेण वाऽथ पर्णेन पाणिशूर्पास्यदारुभिः । व्यजनेनाग्निधमनं न कुर्यादिति हि स्मृतिः ॥ पर्णेन वै भवेद्व्याधिः शूर्पेण धननाशनम् । पाणिना मृत्युमाप्नोति चायुःक्षीणं मुखाद्धमे इति ॥ यत्तु मनुराह – नाग्निं मुखेनोपधमेत् नग्नां नेक्षेत च स्त्रियम् । नामेध्यं प्रक्षिपेदग्नौ न च पादौ प्रतापयेत् ॥ अधस्तान्नोपदध्याच्च न चैनमतिलङ्घयेत् । न चैनं पादतः कुर्यात् न प्राणाबाधमाचरेत् इति, तद्धमन्यादिरहित धमनविषयम् ।

க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- நிமிர்ந்த கையினுல், பெருவிரலின் நுனியால் பிடிக்கப்பட்டுள்ள ஹவிஸ்ஸை, எல்லா விரல்களும் சேர்ந்துள்ள கையையுடையவனுய் மௌனியாய் ஹோமம் செய்ய வேண்டும். **காத்யாயனர்**:- ஹோமம் செய்வதற்கு முந்தியும், பிந்தியும், கை, முறம், வாய், கட்டை, விசிறி முதலியவை இவைகளால் அக்னியை வ்ருத்தி செய்யக் கூடாது. **தேவலர்**:- வஸ்த்ரம், இலை, கை, முறம், வாய், கட்டை, விசிறி, இவைகளால் அக்னியை வ்ருத்தி செய்யக் கூடாதென்பது சாஸ்த்ரமுறை. இலையினுல் வ்ருத்தி செய்தால் வ்யாதி உண்டாகும், முறத்தினுல் தனம் நசிக்கும். கையால் விசிறினுல் ம்ருத்யுவை அடைவான். வாயால் ஊதினுல் ஆயுள் க்ஷயிக்கும். ஆனுல், **மனு**:- ''அக்னியை வாயினுலூதக் கூடாது. வஸ்த்ரமில்லாத ஸ்த்ரீயைப் பார்க்கக் கூடாது. அக்னியில் அசுத்த வஸ்துவைப் போடக்கூடாது. அக்னியில்

கால்களைக் காய்ச்சக் கூடாது. அக்னியைக் கட்டில் முதலியவையின் கீழே வைக்கக் கூடாது. அக்னியைத் தாண்டக் கூடாது. அக்னியைக் கால்களுக்கெதிரில் வைக்கக் கூடாது. ப்ராணனை வருத்தக் கூடிய கார்யத்தைச் செய்யக் கூடாது'' என்று சொல்லியிருப்பது, தமனி (ஊதுகுழல்) முதலியதில்லாமல் ஊதுவதைப் பற்றியது.

तथा च देवलः—धमनीमन्तरे कृत्वा तृणं वा काष्ठमेव वा। मुखादग्निं समिन्धीत मुखादग्निरजायत इति।। विष्णुः – अप्रबुद्धेऽविधूमे वा जुहुयाद्यो हुताशने। यजमानो भवेदन्धः सोऽमुत्रेति हि नः श्रुतम्।। योऽनर्चिषि जुहोत्यग्नौ व्यङ्गारिणि च मानवः। मन्दाग्निरामयावी च दरिद्रश्चोपजायते।। बहुशुष्केन्धने चाग्नौ सुसमिद्धे हुताशने। विधूमे लेलिहाने च होतव्यं कर्मसिद्धये।। अग्निकर्णे हुतं रोगं नासिकायां धनक्षयम्। चक्षुषोर्निन्दनं कुर्यात् केशे दारिद्र्यकृद्भवेत्।। हुतं शिरसि पापं स्यात् तस्माज्जिह्वासु होमयेत्। यत्र काष्ठं तु तच्छ्रोत्रं यत्र धूमस्तु नासिका।। यत्राल्पज्वलनं नेत्रं यत्र भस्मानि तच्छिरः। यत्रैव ज्वलितो वह्निर्जिह्वा तत्रैव कीर्तिता।। इति।

அவ்விதமே தேவலர்:- ஊதுகுழல், புல், கட்டை இவைகளிலொன்றை நடுவில் வைத்துக் கொண்டு, வாயினால் ஊதி அக்னியை ஜ்வலிக்கச் செய்ய வேண்டும். விராட் புருஷனின் வாயிலிருந்து அக்னி உண்டானார். விஷ்ணு:- ஜ்வாலை இல்லாததும், புகையுடன் கூடியதுமான அக்னியில் எவன் ஹோமம் செய்கின்றானோ அந்த யஜமானன் மறுபிறப்பில் கண்ணில்லாதவன் ஆகிறான், என்று நமக்குக் கேள்வி. எந்த மனிதன் ஜ்வாலையில்லாததும், தணல் இல்லாததுமான அக்னியில் ஹோமம் செய்கின்றானோ அவன், மந்தமான ஜடராக்னியுள்ளவனும், வ்யாதியுள்ளவனும், தரித்ரனுமாய் ஆகிறான். உலர்ந்த அநேகம் கட்டைகளையுடையதும், நன்றாய் ஜ்வலிக்கின்றதும்,

புகையில்லாததும், சலிக்கும் ஜ்வாலையுடையதுமான அக்னியில் கர்மம் ஸித்திப்பதற்கு ஹோமம் செய்ய வேண்டும். அக்னியின் காதில் ஹோமம் செய்வது ரோகத்தைக் கொடுக்கும். மூக்கில் செய்வது தனநாசத்தையும், கண்களில் செய்வது நிந்தையையும், கேசத்தில் செய்வது தரித்ரத் தன்மையையும் கொடுக்கும். தலையில் செய்வது பாபத்தைக் கொடுக்கும். ஆகையால் அக்னியின் நாக்குகளில் ஹோமம் செய்ய வேண்டும். கட்டையுள்ள இடம் அக்னிக்குக் காதாகும். புகையுள்ளது மூக்காகும். அல்பமாய் ஜ்வலிக்குமிடம் கண்ணாகும். சாம்பல்களுள்ளவிடம் தலையாகும். எந்த இடத்தில் அக்னி ஜ்வலிக்கின்றதோ அங்கேயே அக்னியின் நாக்கு என்று சொல்லப்பட்டுள்ளது.

आपस्तम्बः—शरोऽङ्गारा अध्यूहन्ते ततो नीलोपकाशोऽर्चि-रुदेति ब्रह्मणि हुतं भवति इति ।। शरः - भस्म । अङ्गाराः भस्मना सूक्ष्मेण संयोगमापद्यन्ते । ततः तेभ्यः नीलप्रकाशोऽर्चिश्च उदेति । तस्यामवस्थायां हुतं ब्रह्मणि हुतं भवतीत्यर्थः ।। स एव — यदङ्गारेषु व्यवशान्तेषु लेलाय(द्वी)तीव भाति तद्देवानामास्यं तस्मात् तथा होतव्यं यथाऽऽस्येऽपि दधात्येवं तदिति विज्ञायते इति ।।

ஆபஸ்தம்பர்:- அக்னியிலுள்ள தணல்கள் மெல்லியதான சாம்பலுடன் சேருகின்றன. அவைகளி லிருந்து நீலப்ரகாசமும் ஜ்வாலையும் உண்டாகிறது. அக்காலத்தில் ஹோமம் செய்வது ப்ரம்ஹத்தினிடத்தில் ஹோமம் செய்ததாயாகிறது. ஆபஸ்தம்பரே:- தணல்கள் தணிந்த பொழுது கொஞ்சமாய் சலிப்பதுபோல் காணப்படுவது தேவர்களின் வாயாகும். ஆகையால் அப்பொழுது ஹோமம் செய்ய வேண்டும். வாயில் கொடுப்பது எப்படியோ அதுபோலது எனத் தெரிகிறது.

श्रुतिरपि—सर्व एव सर्वश इद्ध्म आदीप्तो भवति । विश्वेदेवास्त-र्ह्यग्निः । तस्मिन् यस्य तथाविधे जुह्वति । विश्वेष्वेवास्य देवेष्वग्निहोत्रꣳ हुतं

भवति। नितरामर्चिरुपावैति लोहिनीकेव भवति। इन्द्रस्तर्ह्यग्निः। तस्मिन् यस्य तथाविधे जुह्वति। इन्द्र एवास्याग्नि-होत्रꣳ हुतं भवति। अङ्गारा भवन्ति। तेभ्योऽङ्गारेभ्योऽर्चिरुदेति। प्रजापतिस्तर्ह्यग्निः। तस्मिन् यस्य तथाविधे जुह्वति। प्रजापतावेवास्याग्निहोत्रꣳ हुतं भवति। शरोऽङ्गारा अध्यूहन्ते। ब्रह्म तर्ह्यग्निः। तस्मिन् यस्य तथाविधे जुह्वति। ब्रह्मन्नेवास्याग्निहोत्रꣳ हुतं भवति। वसुषु रुद्रेष्वादित्येषु विश्वेषु देवेषु। इन्द्रे प्रजापतौ ब्रह्मन्। अपरिवर्गमेवास्यैतासु देवतासु हुतं भवति इति॥ सर्व इध्मः सर्वशः - सर्वप्रदेशे आदीप्तो भवति यदा, तर्हि - तस्मिन् काले विश्वेदेवा अग्निः - विश्वैर्देवैरेकीभूतस्तिष्ठति। तस्मिंस्तथाविधे - तादृक् प्रकारे अग्नौ यस्य जुह्वति विश्वेषु देवेष्वेवास्य हुतं भवति। विश्वेदेवास्तर्पिता अनेन भवन्ति। नितरां - नीचैस्तरां अर्चिरुपावैति - स्वल्पा भवति। लोहिनीकेव - रक्तेव भवति। वर्णादनुदात्तदिति ङीप्। संज्ञायां कन्। अङ्गारभूतेषु काष्ठेषु यदर्चिरुदेति तदग्र्यास्यस्य जिह्वास्थानीयम्। शृणातेरसुनि शरः - भस्म। तदङ्गारा अध्यूहन्ते उपरि वहन्ति। अपरिवर्गं - काञ्चिदपि देवता अवर्जयित्वा एतासु देवतासु हुतं भवतीत्यर्थः॥

ச்ருதியும்:- அக்னியில் வைக்கப்பட்ட எரிபொருள் முழுவதும் எல்லா இடத்திலும் ஜ்வாலையுள்ளதாகும் பொழுது, அக்னி விச்வே தேவர்களுடன் சேர்ந்ததாயிருக்கிறது. அவ்விதமான அக்னியில் ஹோமம் செய்தால் விச்வேதேவர்களிடத்திலேயே அக்னி ஹோத்ரம் ஹோமம் செய்யப்பட்டதாகின்றது. விச்வே தேவர்கள் இதனால் த்ருப்தி செய்விக்கப்பட்டவர்களாகின்றனர். ஜ்வாலை மிகவும் குறைந்து விடுகிறது; அது சிவப்பு நிறமுள்ளது போலவுமிருக்கிறது; அப்பொழுது அக்னி இந்த்ரனுடன் சேர்ந்துள்ளது. அதில் ஹோமம் செய்வது இந்த்ரனிடத்திலேயே ஹோமம் செய்யப்பட்டதாகிறது. தணல்களாகின்றன; அவைகளிடமிருந்து ஜ்வாலை

உண்டாகிறது; அப்பொழுது அக்னி ப்ரஜாபதியுடன் சேர்ந்துள்ளது. அதில் ஹோமம் செய்வது ப்ரஜாபதி இடத்திலேயே ஹோமம் செய்ததாகிறது. தணலாயிருக்கும் எரிபொருளில் உண்டாகும் ஜ்வாலையானது அக்னியின் முகத்திலுள்ள நாக்காகவாகிறது. தணல்கள் மெல்லிய சாம்பலைத் தன்னிடத்தில் வஹிக்கின்றன. அப்பொழுது அக்னி ப்ரம்ஹத்துடன் சேர்ந்துள்ளது. அதில் ஹோமம் செய்வது ப்ரம்ஹத்தினிடத்திலேயே ஹோமம் செய்ததாகிறது. வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள், விச்வேதேவர்கள், இந்த்ரன், ப்ரஜாபதி, ப்ரம்ஹம் என்ற இந்தத் தேவதைகளில் ஒருவரையும் விடாமல் எல்லாத் தேவதைகளிடம் ஹோமம் செய்யப்பட்டதாகிறது.

स्मृतिरत्ने—सुवर्णा कनका रक्ता कृष्णा चैव तु सुप्रभा। अतिरक्ता बहुरूपा च सप्त जिह्वाः प्रकीर्तिताः। सुवर्णा वारुणी जिह्वा मध्यमा कनका स्मृता। रक्ता चैवोत्तरा जिह्वा मध्यमा कनका स्मृता। रक्ता चैवोत्तरा जिह्वा कृष्णा याम्यदिशि स्मृता॥ सुप्रभा पूर्वदिग्जिह्वा अतिरक्ताऽग्निगोचरा। ऐशान्ये बहुरूपा च जिह्वास्थानान्यनुक्रमात्॥ विवाहे वारुणी जिह्वा मध्यमा यज्ञकर्मसु। उत्तरा चेपनयने दक्षिणा पितृकर्मसु॥ पूर्वदिक्सर्वकाम्येषु आग्नेयी शान्तिकर्मसु। ऐशानी चोग्रकाम्येषु ह्येतद्धोमस्य लक्षणम्॥ अज्ञात्वा सप्त जिह्वास्तु होमं यः कुरुते द्विजः। होमो निष्फलतां याति होमी च नरकं व्रजेत् इति॥

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ஸுவர்ணா, கனகா, ரக்தா, க்ருஷ்ணா, ஸுப்ரபா, அதிரக்தா, பஹுரூபா என்று ஏழு நாக்குகள் (அக்னிக்கு) சொல்லப்பட்டுள்ளன. மேற்கிலுள்ள (ஜ்வாலை) ஸுவர்ணையென்றும், நடுவிலுள்ளது கனகா என்றும், வடக்கிலுள்ளது ரக்தா என்றும், தெற்கிலுள்ளது க்ருஷ்ணா என்றும், கிழக்கிலுள்ளது ஸுப்ரபா என்றும், அக்னிதிக்கிலுள்ளது அதிரக்தா என்றும், ஈசானத்திக்கிலுள்ளது பஹுரூபா என்றும் சொல்லப்பட்டுள்ளன. விவாஹத்தில் மேற்கிலும்,

யாககர்மங்களில் நடுவிலும், உபநயனத்தில் வடக்கிலும், பித்ரு கார்யங்களில் தெற்கிலும், காம்ய கர்மங்கள் எல்லாவற்றிலும் கிழக்கிலும், சாந்தி கர்மங்களில் ஆக்னேயதிக்கிலும், உக்ரகாம்ய கர்மங்களில் ஈசானதிக்கிலும் ஹோமம் செய்ய வேண்டும். இது ஹோமத்தின் லக்ஷணமாம். ஏழு நாக்குகளையும் அறியாமல் எவன் ஹோமம் செய்கின்றானோ அவனது ஹோமம் நிஷ்பலமாகின்றது. ஹோமம் செய்தவனும் நரகத்தை அடைவான்.

होमप्रकारः स्वगृह्योक्तविधिना द्रष्टव्यः । तदुक्तं गृह्यपरिशिष्टे – स्वगृह्योक्तेन विधिना होमं कुर्यात् यथाविधि इति ।। स्मृतिरत्नेऽपि – उपावरोहणं कृत्वा प्राणायाममनन्तरम् । स्वगृह्योक्तप्रकारेण वह्नेरर्चनमाचरेत् ।। अदितेऽन्वादिमन्त्रैस्तु चतुर्भिः परिषेचयेत् । अदितेऽनुमन्यस्वेति वामदेव ऋषिः स्मृतः ।। देवी तु जगती छन्दो ह्यदितिर्देवता स्मृता । अनुमतेऽनुमन्यस्व वामदेव ऋषिः स्मृतः ।। प्राजापत्या तु गायत्री देवताऽनुमतिस्तथा । सरस्वतेऽनुमन्यस्व वामदेव ऋषिः स्मृतः ।। प्राजापत्या तु गायत्री मन्त्रोक्ता देवता स्मृता । देवसवितः प्रसुव वामदेवऋषिः स्मृतः ।। प्राजापत्या तु गायत्री सविता देवता स्मृता । विनियोगश्चतुर्णां तु सेचने परिकीर्तितः इति ।।

ஹோமத்தின் ப்ரகாரத்தை அவரவர் க்ருஹ்யத்திற் சொல்லிய படி அறிந்து கொள்ள வேண்டும். அதுவும் சொல்லப்பட்டுள்ளது க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- தனது க்ருஹ்யத்தில் சொல்லிய விதியுடன் முறைப்படி ஹோமம் செய்ய வேண்டும். ஸ்ம்ருதிரத்னத்திலும்:- முதலில் உபாவரோஹணம் செய்து, பிறகு ப்ராணா யாமம் செய்து தனது க்ருஹ்யத்திற் சொல்லிய ப்ரகாரமாய் அக்னிக்கு அர்ச்சனம் செய்ய வேண்டும். 'அதிதே' என்பது முதலான நான்கு மந்த்ரங்களால் பரிஷேசனம் செய்ய வேண்டும். 'அதிதேநுமன்யஸ்வ' என்ற மந்த்ரத்திற்கு வாமதேவர்

ருஷி, ஜகதீ சந்தஸ், அதிதி தேவதையாம். 'அனுமதேனுமன்யஸ்வ' என்பதற்கு வாமதேவர் ருஷி, ப்ராஜாபத்யா காயத்ரீ சந்தஸ், அனுமதி தேவதையாம். 'ஸரஸ்வதேனுமன்யஸ்வ' என்பதற்கு வாமதேவர் ருஷி, ப்ராஜாபத்யா காயத்ரீ சந்தஸ், ஸரஸ்வதீ தேவதையாம். 'தேவஸவித: ப்ரஸுவ' என்பதற்கு வாமதேவர் ருஷி, ப்ராஜாபத்யா காயத்ரீ சந்தஸ், ஸவிதா தேவதையாம், நான்கு மந்த்ரங்களுக்கும் பரிஷேசனத்தில் வினியோகம் சொல்லப்பட்டுள்ளது.

संवर्तः—होमे पर्युक्षणे श्राद्धे सन्ध्याकर्मसु मार्जने। आचामे भोजने पात्रं तोयं वामेन संस्पृशेत् इति ।। होमादिषु पात्रं, सन्ध्यामार्जने तोयं वामहस्तेन स्पृशेदित्यर्थः ।। सङ्ग्रहे — गृह्योक्तविधिना हुत्वा पूर्ववत् परिषेचयेत् । अन्वमंस्थाः प्रासावीरिति मन्त्रं सन्नमयेद्बुधः ।। अथाग्निमुपतिष्ठेत मन्त्रेणाग्नेनयादिना इति ।।

ஸம்வர்த்தர்:- ஹோமம், பரிஷேசனம், ச்ராத்தம், ஸந்த்யா வந்தனங்களில் செய்யும் மார்ஜனம், ஆசமனம், போஜனம் இவைகளில் பாத்ரத்தையும் ஜலத்தையும் இடது கையினுல் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதாவது ஹோமம் முதலியவைகளில் பாத்ரத்தையும், ஸந்த்யா வந்தன காலத்தில் மார்ஜனத்தில் ஜலத்தையும் இடது கையினுல் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பது பொருள். ஸங்க்ரஹத்தில்:- க்ருஹ்யத்திற் சொல்லியபடி ஹோமம் செய்து முன்போல் பரிஷேசனம் செய்ய வேண்டும். 'அன்வமம்ஸ்தா:, ப்ராஸாவீ:, என்று மந்த்ரங்களில் மாறுதலுண்டு. பிறகு 'அக்னே நய' முதலான மந்த்ரத்தினுல் அக்ன்யுபஸ்தானம் செய்ய வேண்டும்.

एतच्च ज्ञात्वैवानुष्ठेयम् ।। अन्यथा दोषश्रवणात् ।। तदाह अङ्गिराः – स्वाभिप्रायकृतं कर्म यत् किञ्चित् ज्ञानवर्जितम् । क्रीडाकर्मेव बालानां तत्सर्वं निष्प्रयोजनम् ।। हतं ज्ञानं क्रियाहीनं हतास्त्वज्ञानिनः क्रियाः । अपश्यन्नन्धको दग्धः पश्यन्नपि च पङ्गुकः इति ।।

இக்கார்யத்தை நன்கறிந்தே செய்ய வேண்டும். இல்லாவிடில் தோஷம் கேட்கப்படுகிறது. அதைச் சொல்லுகிறுர் அங்கிரஸ்:- சாஸ்த்ரத்தை அறியாமல், தன்னபிப்ராயப்படி செய்யப்படும் கார்யமெதுவோ, அது முழுவதும், சிறுவர்களின் விளையாட்டுக் கார்யம் போல் வீணுகும். அனுஷ்டானம் இல்லாத சாஸ்த்ரஜ்ஞானம் வீணுகும். ஜ்ஞானமில்லாதவனின் அனுஷ்டானங்களும் வீணுகும். நடக்கச் சக்தியிருந்தும், கண்ணில்லாததால் குருடனும், பார்வையுள்ளவனுயினும் நடக்க முடியாததால் நொண்டியும் நெருப்பினுல் பொசுக்கப்பட்டனர்.

मन्त्रार्थस्तु – अदितेऽनुमन्यस्व । अदितिः - देवमाता । हे अदिते । अनुमन्यस्व मया क्रियमाणं कर्म अनुजानीहि । अनुमतिः - अनुमन्त्री पौर्णमासी । सरस्वती - वाग्देवता । छान्दसो गुणः । हे देव सवितः ! सर्वस्याप्यनुज्ञातः ! अस्मानपि प्रसुव - अनुजानीहि । अन्वमंस्थाः - अनुज्ञातवती । प्रासावीः - अनुज्ञातवान् । अग्ने नयेति । हे अग्ने ! सुपथा - शोभनेन शास्त्राविरुद्धेन मार्गेण अस्मान् राये नय - श्रियं प्रापय विश्वानि वयुनानि - पापानि, विद्वान् - जानानः त्वं, एनः - पापं, अस्मत् - अस्मत्तः, युयोधि - अपनय । यौतिः पृथग्भावे । लोटि, बहुलं छन्दसीति शपःश्लुः । वाछन्दसीत्यपित्त्वाभावे गुणः । कीदृशमेनः ? जुहुराणं - कुटिलस्वभावम् । तदर्थं वयमपि ते - तुभ्यं, भूयिष्ठां - बहुमतां, नम उक्तिं विधेम - क्रियास्म । विदधातिः विधाने । आशिषि लिङ् ॥

மந்த்ரங்களினார்த்தம்:- (அதிதேநுமன்யஸ்வ) அதிதி என்பவள் தேவர்களின் தாய். ஓ அதிதி தேவியே! என்னுல் செய்யப்படும் கர்மத்தை அனுமதிக்கக் கடவாய். அனுமதி - பௌர்ணமாஸீ. ஓ அனுமதியே! அனுமதிப்பாயாக. ஸரஸ்வதீ - வாக்தேவதை. ஓ ஸரஸ்வதீயே அனுமதிப்பாயாக. ஸவிதா - எல்லோரையும்

அனுமதிப்பவன். ஓ ஸவிதாவே! எங்களையும் அனுமதிப்பாயாக. அன்வமம்ஸ்தா:- அனுமதித்தாய். ப்ராஸாவீ:- அனுமதித்தாய். 'அக்னேநய' என்பதின் அர்த்தம். ஓ அக்னியே! ஸுபதா - சுபமான (சாஸ்த்ர விரோதமில்லாத) மார்க்கத்தினால், அஸ்மான் - எங்களை, ராயே நய - ஸம்பத்தை அடைவிப்பாயாக. விச்வானி வயுநாநி - எல்லாப் பாங்களையும், வித்வான் - அறிந்த நீ, ஏன:- பாபத்தை, அஸ்மத் - எங்களிடமிருந்து, யுயோதி - போக்கவேண்டும். எவ்விதமான பாபத்தை? எனில், ஜுஹுராணம் - குடிலஸ்வ பாவமான பாபத்தை. அதற்காக நாங்களும், தே - உனக்கு, பூயிஷ்டாம் - அனேகமான, நமஉக்திம் - நமஸ்கார வாக்யத்தை, விதேம - செய்வோம்.

व्यासः — स्नास्यतो वरुणः शोभां जुह्वतोऽग्निः श्रियं हरेत्। भोजने मृत्युमाप्नोति तस्मान्मौनं त्रिषु स्मृतम् इति ॥

வ்யாஸர்:- ஸ்நான காலத்தில் பேசுகின்றவனின் சோபையை வருணனும். ஹோமகாலத்தில் பேசுகின்றவனின் ஸம்பத்தை அக்னியும் அபஹரிக்கின்றனர். போஜனகாலத்தில் பேசுகின்றவன் ம்ருத்யுவை அடைகிறான். ஆகையால் இம்மூன்றிலும் மௌனம் விதிக்கப்பட்டுள்ளது.

अनुगतेऽग्नौ सन्धानमाहापस्तम्बः— नित्ये धार्योऽनुगतो मन्थ्यः श्रोत्रियागाराद्वाऽऽहार्यः इति ॥ नित्य इति सिद्धेधार्य इत्यारम्भात् उखादौ धारणमेवास्य मुख्यम्। न त्वरण्योरात्मनि वा समारोपणम्। स च ध्रियमाणोऽग्निरनुगतश्चेत् तदैव सन्धातव्य इति व्याख्यातारः ॥

அக்னி அனுகதமானால் (அணைந்து போனால்) அதன் ஸந்தானத்தைச் சொல்லுகிறார். **ஆபஸ்தம்பர்:**- 'இந்த அக்னி எப்பொழுதும் இருக்க வேண்டும். தரிக்கப்பட வேண்டும். அனுகதமானால் மதனம் (கடைதல்) செய்யப்பட வேண்டும். அல்லது ச்ரோத்ரியன்

க்ருஹத்தினின்றும் கொண்டு வரவேண்டும்' என்று. ''ஸூத்ரத்தில் 'நித்ய:' என்ற பதத்தாலேயே ஸித்தித்திருக்கையில், 'தார்ய:' என்றதால் பானை முதலியதில் தரிப்பதே இதற்கு முக்யம். அரணிகளிலோ, தன்னிடத்திலோ ஸமாரோபணம் செய்வது முக்யமல்ல. அப்படி தரிக்கப்பட்டுள்ள அந்த அக்னி அனுகதமானால் அப்பொழுதே ஸந்தானம் செய்ய வேண்டும்'' என்று வ்யாக்யானகாரர்கள் சொல்லியுள்ளனர்.

ध्रियमाणे त्वग्नौ विशेषमाह स एव — चतूरात्रमहुतोऽग्निर्लौकिकः सम्पद्यते इति । शौनकः — अग्नावनुगते यत्र होमकालद्वयं व्रजेत् । उभयोर्विप्रवासे च लौकिकोऽग्निर्विधीयते इति ।। भारद्वाजः — एकाऽग्निर्द्वादशाहं विच्छिन्नः पुनराधेयः इति ।। बोधायनः – अर्वाक्त्रिरात्रादयसेऽग्नये स्यात् ततः परं तन्तुमती च कार्या । आसप्तरात्रान्मनसे च हुत्वा आद्वादशाहात् पुनरादधीत इति ।। द्वादशदिनपर्यन्तमग्न्यनुगति प्रायश्चित्तमेवोक्तम् । नाग्निसन्धानम् । अत्र यथास्वगृह्यं व्यवस्था ।।

அக்னி தரிக்கப்பட்டுள்ள காலத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறார்- ஆபஸ்தம்பரே:- 'நாலுநாள் முழுவதும் ஹோமம் செய்யப்படாத அக்னி லௌகிகமாகின்றது' என்று. சௌனகர்:- அக்னி அனுகதமான பிறகு இரண்டு ஹோமகாலம் சென்றாலும், தம்பதிகள் இருவரும் வெளியூர் சென்றாலும், அக்னி லௌகிகமென்று விதிக்கப்படுகிறது. பாரத்வாஜர்:- ஔபாஸனாக்னி பன்னிரண்டுநாள் விச்சின்னமானால் புனராதானம் செய்ய வேண்டும். போதாயநீயத்தில்:- மூன்று நாளைக்குள்ளானால் 'அயஸே அக்னயே' ஹோமம் செய்ய வேண்டும். மூன்று நாளைக்கு மேல் தந்துமதீ என்ற ருக்காலும் ஹோமம் செய்ய வேண்டும். 7-ஆவது நாள் முதல் 'மனோஜ்யோதி:' என்ற ருக்காலும் ஹோமம் செய்ய வேண்டும். 12- ஆவது நாள் முதல் புனராதானம் செய்ய வேண்டும். 12- நாள் வரையில்

அக்னியின் அனுகதி ப்ராயச்சித்தம் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அக்னி ஸந்தானம் சொல்லப்படவில்லை. இவ்விஷயத்தில் அவரவர் க்ருஹ்யத்திற் சொல்லியபடி வ்யவஸ்தையை அறியவும்.

शौनकः—विच्छिन्नवह्निमाधाय कर्माङ्गं विधिवत् द्विजः। सायमारभ्य जुहुयादाहुतीनां चतुष्टयम्।। यदा सन्धीयते वह्निः प्रायश्चित्त पुरस्सरम् । तदा सायं विजानीयात् प्रातर्होमं ततः परम् ।। प्रतिपत्पर्वसन्धानं कर्म कर्तृविनाशनम्। सन्धाय त्रिदिनं हुत्वा स्थालीपाकं समाचरेत् इति ।। प्रतिपत्पर्वसन्धानमिति चतुर्दश्या अप्युपलक्षणम्। नोचेत् सन्धाय त्रिदिनं हुत्वेति विरोधः ।। कथञ्चिद्धारणाशक्तौ बोधायनः – एकाग्रेस्त्रिविधं समारोपण मात्मन्यरण्योर्वा समित्सु (वा) इति ।।

சௌனகர்:- ப்ராம்ஹணன் விச்சின்னமான அக்னியை விதிப்படி ஆதானம் செய்து கொண்டு அதற்கு அங்கமாக முதல் நாள் ஸாயங்காலம் முதற்கொண்டு நான்கு ஆஹுதிகளை ஹோமம் செய்ய வேண்டும். எக்காலத்தில் ப்ராயச் சித்தத்தை முன்னிட்டு அக்னி ஸந்தானம் செய்யப்படுகிறதோ அக்காலத்தை ஸாயங்காலமாயறிய வேண்டும். அதற்குப் பிறகு ப்ராதர் ஹோமம். ப்ரதமையிலும், பர்வத்திலும் ஸந்தானம் செய்வது கர்த்தாவுக்கு நாசகரமாகும். ஸந்தானம் செய்து கொண்டு மூன்றுநாள் ஹோமம் செய்து பிறகு ஸ்தாலீபாகம் செய்ய வேண்டும். ப்ரதமையையும், பர்வங்களையும் நிஷேதித்தது சதுர்தசிக்குமுப லக்ஷணமாம். இல்லாவிடில் 3- நாள் ஹோமம் செய்து என்பதற்கு விரோதமாகும். எவ்விதத்தாலும் அக்னியைத் தரிக்க முடியாவிடில், **போதாயனர்:-** ஔபாஸனக்னிக்கு ஸமாரோபணம் மூன்று விதம், தேஹத்தில், அல்லது அரணியில், அல்லது ஸமித்துக்களில் என்று.

समिधश्च स्मृत्यर्थसारे दर्शिताः—पलाशाश्वत्थखदिरबिल्वोदुम्बरजा समित् इति ।। आत्मसमारोपणं यजमानकर्तृकमेव ।

समिदादिसमारोपणं तु अध्वर्युकर्तृकमपि भवति ॥ तथा चापस्तम्बः – उपर्यग्नावरणी धारयन् जपत्ययं ते योनिर् ऋत्विय इत्यपि वा यजमान एवात्मन् समारोपयते याते अग्ने + एहीति हस्तं प्रताप्य मुखायाहरते इति ॥ यजमानासन्निधानेऽपि पत्नीसन्निधौ अध्वर्युणा अरण्यादौ समारोप्यावरोप्य च होतुं शक्यते। यजमानकर्तृकमप्युपावरोहमन्त्रजपं यजमानासन्निधौ अन्यः कुर्यात्। पत्नी न कुर्यात्। श्रौतमन्त्रोर्ध्वक्रियामन्त्र व्यतिरिक्तमन्त्रेषु स्त्रिया अनधिकारादिति न्यायविदः ॥

ஸமித்துக்கள் ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில் சொல்லப்பட்டுள்ளன :- புரசு, அரசு, கருங்காலி, பில்வம், அத்தி இவைகளில் உண்டாகிய ஸமித்து விஹிதம் என்று. ஆத்ம ஸமாரோபணத்தை யஜமானன் தான் செய்யலாம். ஸமிதரணி ஸமாரோபணத்தை அத்வர்யுவும் செய்யலாம். அவ்விதமே, **ஆபஸ்தம்பர்:**- அக்னியின்மேல் அரணிகளைப் பிடித்துக் கொண்டு 'அயம் தேயோநி:' என்ற மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். அல்லது யஜமானனே தன்னிடத்தில் ஸமாரோபணம் செய்து கொள்ளலாம். 'யாதே அக்னே' என்ற மந்த்ரத்தால் கையைக் காய்ச்சி முகத்திற்குக் கொண்டு வரவேண்டும். யஜமானன் எதிரில் இல்லாவிடினும், பத்னீ ஸமீபத்தில் இருந்தால், அத்வர்யு, அரணி முதலியதில் ஸமாரோபணம், அவரோபணம் இவைகளைச் செய்து ஹோமம் செய்யலாம். யஜமானன் செய்ய வேண்டயதாயினும், உபாவரோஹ மந்த்ர ஜபத்தை யஜமானன் ஸன்னிதியில் இல்லாவிடில் அன்யன் செய்யலாம். பத்னீ செய்யக் கூடாது. ச்ரௌத மந்த்ரங்கள், அபரக்கிரியையிலுள்ள மந்த்ரங்கள் இவைகளைத் தவிர்த்து மற்ற மந்த்ரங்களில் ஸ்த்ரீக்கு அதிகாரம் இல்லாததால் என்கின்றனர், ந்யாயம் அறிந்தவர்கள்.

तथा च शातातपः — श्रौतं यत्तत् स्वयं कुर्यादन्योऽपि स्मार्तमाचरेत् इति ॥ बोधायनः — आत्मारूढो निमज्जेद्वा वदेद्वा पतितादिभिः। अनृतौ च स्त्रियं गच्छेदथवा काममोहितः ॥ वदन्त्येषु

निमित्तेषु केचिदग्निविनाशनम्। आपस्तम्बस्य तन्नेष्टमात्मारूढः सदा शुचिः इति ॥ पुनस्सन्धाननिमित्तमाह स एव — अथाग्नेर्विपत्तिं व्याख्यास्यामोऽमेध्याशुचि चण्डाल शूद्र वायस पतितरजस्वलाश्वभिश्च संस्पर्शेऽरण्योर्विनाश इति पुनरग्निमुपसमिन्ध्यात् इति।

சாதாதபர்: - ச்ரௌதமெதுவோ அதைத் தானே செய்ய வேண்டும். ஸ்மார்த்தத்தை அன்யனும் செய்யலாம். **போதாயனர்:** - ஆத்மஸமாரோபணம் செய்து கொண்டவன் ஸ்நானம் செய்தாலும், பதிதன் முதலியவருடன் பேசினாலும், ருது காலமல்லாத காலத்தில் காமமோஹமுற்றவனாய் ஸ்த்ரீஸங்கம் செய்தாலும், இந்த நிமித்தங்களில் சிலர் அக்னி நாசத்தைச் சொல்லுகின்றனர். அது ஆபஸ்தம்பருக்கு இஷ்டமில்லை. அக்னியை ஆத்ம ஸமாரோபணம் செய்து கொண்டவன் எப்பொழுதும் சுத்தனாகிறான். புன:ஸந்தான நிமித்தத்தைச் சொல்லுகிறார்- **போதாயனரே:** - இனி அக்னியின் நாசத்தைச் சொல்லுகின்றோம். அசுத்தவஸ்து, அசுத்தன், சண்டாளன், சூத்ரன், காக்கை, பதிதன், ரஜஸ்வலை, நாய் இவைகளால் ஸ்பர்சமேற்படினும், அரணிகள் காணப்படாவிடினும் மறுபடி அக்னிஸந்தானம் செய்து கொள்ள வேண்டும்.

सङ्ग्रहे — स्पर्शे तु धार्यमाणं वा समिदारूढमेव वा। त्यक्त्वा तु पुनराधानमात्मारूढं त्यजेद्बुधः ॥ शवानुगमनाशौचाद्युपघातेऽग्निमात्मगम्। विसृज्य हावयेच्चित्तं हावयेच्च न तु त्यजेत् इति ॥ अहुतेष्वग्निषु यजमानोऽश्नीयात् यत्ते वयं यथाह तदित्याहुती जुहुयात्। समिधौ वाऽऽदध्यात् जपेदित्येके। अनाज्ञातमिति तिस्रोऽनाज्ञाते जुहुयात् जपेदित्येके। त्वन्नो अग्ने सत्वन्नो अग्न इति सर्वत्रान्तराये विपर्यासे चैते आहुती जुहोति। तदिदं सर्वप्रायश्चित्तं सर्वत्र क्रियते इत्यादि प्रायश्चित्तमापस्तंबोक्तं स्मार्तेऽपि कर्तव्यमविरोधात् ॥

ஸங்க்ரஹத்தில்: - தரிக்கப்படும் அக்னிக்கோ, ஸமித்தில் ஆரூடமான அக்னிக்கோ அசுத்த

ஸ்பர்சமேற்பட்டால் அதைத் தள்ளி, புனராதானம் செய்ய வேண்டும். ஆத்மாரூடமான அக்னியையும் விடவேண்டும். சவானுகமனம், ஆசௌசம் இவைகளால் அசுத்தி ஏற்பட்டால் ஆத்மாரூடமான அக்னியை விட்டு ஸர்வ ப்ராயச்சித்த ஹோமம் செய்ய வேண்டும். ஹோமம் செய்ய வேண்டுமேயல்லாது த்யாகம் கூடாது. "அக்னிகளில் ஹோமம் செய்வதற்குமுன் யஜமானன் போஜனம் செய்தால் 'யத்தேவயம்' 'யதாஹதத்' என்ற ருக்குகளால் இரண்டு ஆஹுதிகள் செய்ய வேண்டும். அல்லது இரண்டு ஸமித்துக்களை ஹோமம் செய்யலாம். அல்லது ஷை ருக்குகளை ஜபிக்கலாமென்று சிலர். அறியாமற் செய்யப்பட்டதில் 'அஞ்ஞாதம்' என்ற மூன்று ருக்குகளால் ஹோமம் செய்ய வேண்டும். ஷை ருக்குகளை ஜபிக்கலாமென்று சிலர். எல்லாக் கர்மங்களிலும், குறுக்கில் செல்லுதல், மாறிச் செய்தல் இவைகளில் 'த்வம்நோ அக்னே' 'ஸத்வம்நோ அக்னே' என்ற இரண்டு ருக்குகளால் ஹோமம் செய்ய வேண்டும். இந்த ஸர்வப்ராயச் சித்தத்தை எல்லாக் கர்மங்களிலும் செய்ய வேண்டும்" என்பது முதலியதாய் ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கும் ப்ராயச் சித்தம் ஸ்மார்த்த கர்மத்திலும் செய்யப்படலாம், விரோதமில்லாததால்.

स्मृत्यन्तरे—औपासनाग्निद्वयसङ्गतिश्चेदग्निं समारोपणतो विभज्य। पूर्वस्य होतुर्विविचिं च हुत्वा पश्चाच्च होतुः पथिकृच्च सोऽपि इति ॥ द्वयोरौपासनाग्न्योः संसर्गे संसृष्टाग्निं समारोपणार्थं विभज्य ममायमंशो ममायमंश इति प्रत्येकमभिमानीकृत्य स्वांशे पूर्वहोता अग्नये विविचये स्वाहेति हुत्वा सर्वप्रायश्चित्तं च जुहुयात्। पश्चाद्धोता तु अग्नये पथिकृते स्वाहा। अग्नये विविचये स्वाहेति हुत्वा सर्वप्रायश्चित्तं च जुहुयात्। ततस्तावुभौ सहैव समारोपयेतामित्यर्थः ॥ लौकिकाग्नि-संपर्केऽपि विविचिं पाहि पञ्चकं च जुहुयादिति बोधायनोक्तं द्रष्टव्यम्॥

மற்றொரு ஸ்ம்ருதியில்:- இரண்டு ஔபாஸநாக்னிகள் கலந்து விட்டால், ஸமாரோபணத்திற்காக அந்த அக்னியை இரண்டாகப் பிரித்து, இது என்னுடைய பாகம், இது என்னுடைய பாகம் என்று தனித்தனியாய் இருவரும் அபிமானித்து, முதலில் ஹோமம் செய்பவன் தனது அக்னிபாகத்தில் 'அக்னயேவிவிசயே ஸ்வாஹா' என்று ஹோமம் செய்து ஸர்வப்ராயச் சித்த ஹோமமும் செய்ய வேண்டும். பிறகு ஹோமம் செய்பவன் 'அக்னயே பதிக்ருதே ஸ்வாஹா', 'அக்னயேவிவிசயே ஸ்வாஹா' என்று ஹோமம் செய்து ஸர்வ ப்ராயச் சித்தஹோமமும் செய்ய வேண்டும். பிறகு அவ்விருவரும் சேர்ந்தே ஸமாரோபணம் செய்ய வேண்டும். ஔபாஸநாக்னி லௌகிகாக்னியுடன் கலந்து விட்டாலும், விவிசியும், பாஹுபஞ்சகமும் ஹோமம் செய்ய வேண்டும்' என்று போதாயனர் சொல்லியதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

विधुराग्न्युत्पत्तिः सङ्ग्रहे दर्शिता—उद्धृत्य वह्निं प्रणवेन पूर्वमन्वग्निमन्त्रेण हरेत् पुरस्तात्। निधाय पृष्टोदि विमन्त्रकेण ततस्तु होमः शकलैश्चतुर्भिः॥ लेखादयो नैव च तत्सतां स विश्वानिदेऽद्या न इमे च मन्त्राः। आरोपणं नाप्यवरोपणं स्यादुत्पत्तिरेवं विधुरानलस्य॥ नित्यानि नैमित्तिककाम्यकर्माण्यत्रैव कुर्याद्विधुरस्सदैव इति॥ तत्सवितुः, ताꣳसवितुः, विश्वानि देवसवितः, अद्यानो देवसवितः इतीमे शकलहोममन्त्रा इत्यर्थः॥

விதுராக்னியின் உத்பத்திப்ரகாரம் ஸங்க்ரஹத்தில்:- சொல்லப்பட்டுள்ளது. முதலில் 'ஓம்' என்ற மந்த்ரத்தால் எடுத்து, 'அன்வக்னி:' என்ற மந்த்ரத்தால் கிழக்கில் கொண்டுவந்து, 'ப்ருஷ்டோதிவி' என்ற மந்த்ரத்தால் கீழேவைத்து, பிறகு நான்கு சகலங்களால் ஹோமம் செய்ய வேண்டும். ரேகை முதலியதைச் செய்ய வேண்டியதில்லை. 'தத்ஸவிது:, தாம்ஸவிது:, விச்வானிதேவ, அத்யாந:, என்ற நான்கும் சகலஹோம மந்த்ரங்கள். ஸமாரோபணமில்லை.

அவரோபணமுமில்லை. விதுராக்னியினுத்பத்தி இவ்விதமாம். விதுரன், நித்ய நைமித்திக காம்ய கர்மங்களை இந்த அக்னியிலேயே செய்ய வேண்டும்.

चन्द्रिकायाम् — ब्रह्मण्याधाय कर्माणि निस्सङ्गः कामवर्जितः । प्रसन्नेनैव मनसा कुर्वाणो याति तत्पदम् ।। नाहं कर्ता सर्वमेतद् ब्रह्मैव कुरुते तथा । एतद् ब्रह्मार्पणं प्रोक्त मृषिभिस्तत्त्वदर्शिभिः ।। यद्वा फलानां सन्न्यासं प्रकुर्यात्परमेश्वरे । कर्मणामेतदप्याहुर्ब्रह्मार्पणमनुत्तमम् इति ।। मनुरपि — सन्न्यस्य सर्वकर्माणि कर्मदोषानपानुदन् । नियतो वेदमभ्यस्य पुत्रैश्वर्ये सुखं वसेत् ।। मङ्गलाचारयुक्तानां नित्यं च प्रयतात्मनाम् । जपतां जुह्वतां चैव विनिपातो न विद्यते इति ।।

சந்த்ரிகையில்:- கர்மங்களை ப்ரம்ஹத்தினிடத்தில் சேர்த்து பற்றில்லாதவனும், ஆசையற்றவனுமாய், தெளிவுள்ள மனதுடன் செய்பவன் ப்ரம்ஹபதத்தை அடைவான். நான் கர்த்தாவல்ல. இதையெல்லாம் ப்ரம்ஹமே செய்கிறது. என்ற இதை 'ப்ரம்ஹார்ப்பணம்' என்கின்றனர் உண்மையறிந்த முனிவர்கள். அல்லது, கர்மங்களின் பலன்களைப் பரமேச்வரனிடம் ஒப்புவிக்கலாம். இதுவும் சிறந்த ப்ரம்ஹார்ப்பணம் என்கின்றனர். மனுவும்:- ஸகல கர்மங்களையும் த்யாகம் செய்து, கர்மங்களில் உண்டாகும் தோஷங்களைப் போக்கி, நியமத்துடன் வேதாப்யாஸம் செய்தால் புத்ரனுடைய ஐச்வர்யத்தில் ஸுகமாய் வாழ்வான். சுபமான ஆசாரமுடையவரும், எப்பொழுதும் நியமமுடையவரும். ஜபசீலரும், ஹோமம் செய்பவருமாய் இருப்பவருக்குக் கேடு உண்டாவதில்லை.

श्रीभगवान् — ब्रह्मार्पणं ब्रह्म हविर्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् । ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना इति ।। स्मृत्यर्थसारे — स्वकर्महानौ पतनमब्देनैव त्वनापदि । स्वकर्महानौ नास्तिक्यान्मासेन पतनं स्मृतम् । द्वादशाब्दव्रतनैव तस्य शुद्धिस्तु नान्यथा । तं निरीक्ष्यार्कमीक्षेत स्पर्शे

स्नायात् सचेलकम् ।। तेन संभाषणं हास्यं कुर्वन्नब्देन तत्समः ।। तदन्नभुक्तौ सद्यस्तु सहशय्यासनेषु च इति ।।

चन्द्रिकायाम् — सव्यं जानु ततोऽन्वाच्य पाणिभ्यां दक्षिणामुखः । तल्लिङ्गैस्तर्पयेन्मन्त्रैः सर्वान् पितृगणांस्तथा इति ॥ षट्त्रिंशन्मते — उदिते विमले सूर्ये तत्क्षणादेव तर्पयेत् । नोदयात् पितृतृप्तिः स्यादित्याह भगवान् मनुः इति ॥ शातातपः — श्राद्धे कृते तु पूर्वेद्युः परेद्युरुदिते रवौ । उपस्थानस्य परतो होमात् पूर्वं तु तर्पणम् इति ॥ विज्ञानेश्वरीये — आब्दिके स्वस्य वर्गस्य तृप्तिरेकस्य शाश्वती । तृप्तिर्वर्गद्वयस्यापि परेऽह्नि स्यात् तिलोदकैः इति ॥ स्मृत्यन्तरे — प्रत्याब्दिके तिलं दद्यात् निषिद्धेऽपि परेऽहनि । यस्यैकवर्गस्योद्देश

इतरेषां तु वर्जयेत् इति ॥ अत्र परस्परविरुद्धानां वचनानां शिष्टाचाराद्व्यवस्थाऽवगन्तव्या ॥

சந்த்ரிகையில்:- பிறகு இடது முழங்காலைக் கவிழ்த்துக் கொண்டு தெற்கு முகனாய் எல்லாப் பித்ருகணங்களையும் உத்தேசித்து அவர்களைக் குறிக்கும் மந்த்ரங்களால், இருகைகளாலும் தர்ப்பணம் செய்ய வேண்டும். **ஷட்த்ரிசன்மதத்தில்:-** ஸூர்யன் உதயாபி முகமாயிருக்கும் போது, அப்பொழுதே தர்ப்பிக்க வேண்டும். உதயத்திற்குப் பிறகு செய்தால் பித்ருக்களுக்கு த்ருப்தியுண்டாகாது என்றார் பகவானாகிய **மனு. சாதாதபர்:-** முதல்நாளில் ச்ராத்தம் செய்த பிறகு மறுநாளில் ஸூர்யனுதித்த பிறகு, உபஸ்தானத்திற்குப் பிறகு, ஹோமத்திற்கு முன் தர்ப்பணம் செய்ய வேண்டும். **விக்ஞானேச்வரீயத்தில்:-** ச்ராத்தத்தில் உத்தேச்யமான ஒரு வர்க்கத்திற்கு மட்டில் சாச்வதமான த்ருப்தி உண்டாகிறது. மறுநாளில் திலதர்ப்பணத்தால் இரண்டு வர்க்கத்திற்கும் த்ருப்தி உண்டாகிறது. **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** ப்ரத்யாப்திகத்தில், திலத்திற்கு நிஷித்த தினமாயினும், மறுநாளில் திலதர்ப்பணம் செய்ய வேண்டும். ச்ராத்தத்தில் எந்த வர்க்கத்திற்கு உத்தேசமோ அந்த ஒரு வர்க்கத்திற்கே தர்ப்பணம். மற்றவருக்குக் கூடாது. இங்கு ஒன்றுக்கொன்று விரோதமுள்ள வசனங்களுக்கு வ்யவஸ்தையைச் சிஷ்டாசாரத்தால் அறிந்து கொள்ள வேண்டும்.

तर्पणानन्तरं दर्भत्याग उक्तो रत्नावल्याम्— विकिरे पिण्डदाने च तर्पणे स्नानकर्मणि । आचम्यैव प्रकुर्वीत दर्भसन्त्यजनं बुधः इति ॥ दर्भत्यागमन्त्रः तत्रैवोक्तः — येषां न पिता न भ्राता न पुत्रो नान्यगोत्रिणः । ते सर्वे तृप्तिमायान्तु मयोत्सृष्टैः कुशैस्तथा इति ॥

*தர்ப்பணத்திற்குப் பிறகு தர்ப்பத்யாகம் சொல்லப்பட்டுள்ளது. **ரத்னுவளியில்:-** விகிரத்திலும், பிண்டதானத்திலும், தர்ப்பணத்திலும், ஸ்நானத்திலும் அறிந்தவன் ஆசமனம் செய்த பிறகே தர்ப்பத்யாகம் செய்ய வேண்டும். தர்ப்பத்யாக மந்த்ரம் சொல்லப்பட்டுள்ளது, **ரத்னுவளியிலேயே:-** 'யேஷாம் ந பிதா + குசைஸ்ததா' என்பது மந்த்ரம். 'எவருக்கு பிதா இல்லையோ, ப்ராதா இல்லையோ, புத்ரன் இல்லையோ, அன்ய கோத்ரிகளு மில்லையோ, அவரெல்லோரும் என்னுல் விடப்பட்ட குசங்களால் த்ருப்தியடையக் கடவர் என்பது பொருள்.*

तर्पणानन्तरं वस्त्रनिष्पीडनं कर्तव्यम् । तदाह योगयाज्ञवल्क्यः — यावद्देवानृषींश्चैव पितॄंश्चापि न तर्पयेत् । तावन्न पीडयेद्वस्त्रं यो हि स्नातो भवेत् द्विजः ।। निष्पीडयति यो वस्त्रमकृत्वा पितृतर्पणम् । निराशाः पितरो यान्ति शापं दत्वा सुदारुणम् ।। वस्त्रनिष्पीडितं तोयं श्राद्धे तूच्छिष्टभोजिनाम् । भागधेयं श्रुतिः प्राह तस्मान्निष्पीडयेत् स्थले इति ।। भरद्वाजः — वस्त्रनिष्पीडनं प्रातःकर्मणः प्राग्विशिष्यते । मध्याह्ने ब्रह्मयज्ञान्ते वस्त्रनिष्पीडनं भवेत् ।। ये केचास्मत्कुल इति वस्त्रं निष्पीडयेत् स्थले ।। वस्त्रं चतुर्गुणीकृत्य ताडयित्वा जलाद्बहिः । वामप्रकोष्ठे निक्षिप्य द्विराचम्य विशुध्यति इति ।। माधवीये — आचम्य च ततो दद्यात् सूर्याय सलिलाञ्जलिम् । नमो विवस्वते ब्रह्मन् भास्वते विष्णुतेजसे ।। जगत्सवित्रे शुचये सवित्रे कर्मदायिने इति ।।

*தர்ப்பணத்திற்குப் பிறகு ஸ்நான வஸ்த்ரத்தைப் பிழிய வேண்டும். அதைச் சொல்லுகிறார். **யோகயாக்ஞவல்க்யர்:-** ஸ்நானம் செய்த ப்ராம்ஹணன், தேவ ருஷி பித்ரு தர்ப்பணம் செய்யாத வரையில் வஸ்த்ரத்தைப் பிழியக்கூடாது. பித்ருதர்ப்பணம் செய்யாமல் எவன் வஸ்த்ரத்தைப் பிழிகின்முனே, அவன்*

பித்ருக்கள் ஆசையற்றவராய், பயங்கரமான சாபத்தைக் கொடுத்துத் திரும்பிச் செல்லுகின்றனர். பிழிந்த வஸ்த்ரத்தின் ஜலத்தை, ச்ராத்தத்திலுச்சிஷ்டபாகியான தாஸாதிகளுக்குப் பாகமென ச்ருதி சொல்லுகின்றது. ஆகையால் கரையில் அதைப் பிழியவேண்டும். **பரத்வாஜர்:-** காலையில் வஸ்த்ரத்தைப் பிழிவதை ஸந்த்யா வந்தனத்திற்கு முன் செய்ய வேண்டும். மத்யாஹ்னத்தில் ப்ரம்ஹ யக்ஞத்திற்குப் பிறகு செய்ய வேண்டும். 'யேகேச' என்ற மந்த்ரத்தால் கரையில் வஸ்த்ரத்தைப் பிழியவேண்டும். வஸ்த்ரத்தை நான்காய் மடித்து ஜலத்திற்கு வெளியில் பிழிந்து, இடது கையின் மணிக்கட்டுக்கு மேல் வைத்துக் கொண்டு இருமுறை ஆசமனம் செய்து சுத்தனாகிறான். **மாதவீயத்தில்:-** ஆசமனம் செய்து பிறகு ஸூர்யனுக்கு ஜலாஞ்ஜலியைக் கொடுக்க வேண்டும். அதன் மந்த்ரம் 'நமோவிவஸ்தே' என்பது 'ஓ ப்ரம்ஹமே! காந்தியால் எல்லாவற்றையும் மறைப்பவனும், காந்தியுடையவனும், வ்யாபிக்கும் தேஜஸ்ஸுடையவனும்; ஜகத்தை ப்ரேரணம் செய்பவனும், சுத்தனும், ஜகத்காரணனும், கர்மபல தாதாவுமான உனக்கு நமஸ்காரம்' என்று பொருள்.

देवपूजनम्

अथ देवपूजनम् — तच्च प्रातर्होमादनन्तरमिति केचित् । विधेया देवतापूजा प्रातर्होमादनन्तरम् इति मरीचिस्मरणात् ।। तथा चन्द्रिकायाम् — स्वशाखोक्तक्रियां कृत्वा हुत्वा चैवाग्निहोत्रकम् । कुर्यादाराधनं विष्णोर्देवदेवस्य चक्रिणः इति । ब्रह्मयज्ञजप-तर्पणानन्तरमित्यन्ये ।। तथा च हारीतः — कुर्वीत देवतापूजां जपयज्ञादनन्तरम् इति ।। व्यासोऽपि — जलदेवान्नमस्कृत्य ततो गच्छेद्गृहं बुधः । पौरुषेण च सूक्तेन ततो विष्णुं समर्चयेत् इति ।।

याज्ञवल्क्योऽपि — स्नात्वा देवान् पितॄंश्चैव तर्पयेदर्चयेत् तथा इति ॥

தேவபூஜை

இனி தேவபூஜை சொல்லப்படுகிறது. அதைக் காலையில் ஹோமத்திற்குப் பிறகு செய்யலாமென்று சிலர். 'ப்ராத:கால ஹோமத்திற்குப் பிறகு தேவபூஜையைச் செய்ய வேண்டும்' என்று மரீசி சொல்கிறார். அவ்விதமே. **சந்த்ரிகையில்:**- தன் சாகையில் சொல்லியுள்ள கர்மத்தை அனுஷ்டித்து, அக்னிஹோத்ர ஹோமமும் செய்து, தேவ தேவனும், சக்ரியுமான விஷ்ணுவின் ஆராதனத்தைச் செய்ய வேண்டும். ப்ரம்ஹயக்ஞஜபம் தர்ப்பணம் இவைகளுக்குப் பிறகு செய்ய வேண்டுமென்று சிலர். அவ்விதமே, **ஹாரீதர்:**- ப்ரம்ஹயக்ஞத்திற்குப் பிறகு தேவதா பூஜையைச் செய்ய வேண்டும். **வ்யாஸரும்:**- அறிந்தவன் ஜலாபிமானி தேவதைகளை நமஸ்கரித்துப் பிறகு க்ருஹத்திற்குச் செல்ல வேண்டும். பிறகு புருஷ ஸூக்தத்தால் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். **யாக்ஞவல்க்யரும்:**- ஸ்நானம் செய்து தேவ பித்ருகளுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். தேவபூஜையையும் செய்ய வேண்டும்.

मध्याह्ने तर्पणानन्तरं गन्धकुसुमाक्षतैर्हरिहरहिरण्यगर्भ-प्रभृतीनामन्यतमं यथावासनमृग्यजुःसाममन्त्रैः तत्प्रकाशकैः स्वनामभिर्वा चतुर्थ्यन्तैर्नमस्कारयुक्तैराराधयेत् इति विज्ञानेश्वरः ॥ यमः — गायत्रीं तु जपेत् पूर्वं ब्रह्मयज्ञजपस्ततः । देवादींस्तर्पयेत् पश्चादिष्टं देवं ततोऽर्चयेत् इति । कूर्मपुराणे — निष्पीड्य स्नानवस्त्रं वै समाचम्य च वाग्यतः । स्वैर्मन्त्रैरर्चयेत् देवान् पत्रैः पुष्पैस्तथाऽम्बुभिः । ब्रह्माणं शङ्करं सूर्यं तथैव मधुसूदनम् । अन्यान् स्वाभिमतान् देवान् भक्त्या चाराधयेन्नरः इति ॥ हारीतोऽपि — ततो

देवान्नमस्कृत्य गृहं गच्छेत्ततः पुनः । विधिना पुरुषसूक्तस्य गत्वा विष्णुं समर्चयेत् इति ॥

"மத்யாஹ்னத்தில், தர்ப்பணத்திற்குப் பிறகு, கந்த புஷ்பாக்ஷதங்களால் ஹரி, ஹரன், ப்ரஹ்மா முதலியவருள் ஒருவரைப் பக்திக்குத் தகுந்தபடி ருக், யஜுஸ், ஸாமம் இந்த மந்த்ரங்களாலாவது, தேவதா ப்ரகாசகமும், நான்காவது வேற்றுமையுடனும் நம: என்பதோடும் கூடிய நாம மந்த்ரங்களாலாவது ஆராதிக்க வேண்டும்" என்றார் விக்ஞானேச்வரர். **யமன்:-** முதலில் காயத்ரியை ஜபிக்க வேண்டும். பிறகு ப்ரம்ஹயக்ஞத்தை ஜபிக்க வேண்டும். பிறகு தேவர் முதலியவரைத் தர்ப்பிக்க வேண்டும். பிறகு இஷ்டமான தேவதையைப் பூஜிக்க வேண்டும். **கூர்ம புராணத்தில்:-** ஸ்நான வஸ்த்ரத்தைப் பிழிந்து ஆசமனம் செய்து மௌனியாய் அவரது மந்த்ரங்களால், பத்ரம், புஷ்பம், ஜலம் இவைகளால், ப்ரம்ஹா, சிவன், ஸூர்யன், விஷ்ணு தனக்கிஷ்டமான இதர தேவர்கள் இவர்களைப் பக்தியுடன் பூஜிக்க வேண்டும். **ஹாரீதரும்:-** பிறகு தேவர்களை நமஸ்கரித்து வீட்டிற்குச் செல்ல வேண்டும். பிறகு புருஷஸூக்த விதானத்தால் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும்.

विष्णुपुराणेऽपि — ततो गृहार्चनं कुर्यादभीष्टसुरपूजनम् । जलाभिषेकं पुष्पाणां धूपादेश्च निवेदनम् इति ॥ योगयाज्ञवल्क्यः — देवानामर्चनं कुर्यात् ब्रह्मादीनाममत्सरः । ब्राह्मवैष्णवरौद्रैश्च सावित्रैरथ वारुणैः ॥ तल्लिङ्गैरर्चयेन्मन्त्रैः सर्वान् देवान् समाहितः इति । मनुः — आदित्यमथवा विष्णुमीशं ब्रह्माणमेव च । अर्चयेद्वैदिकैर्मन्त्रैर्गृहस्थः प्रयतो भवेत् इति ॥ अन्यत्र च — आरोग्यं भास्करादिच्छेत् श्रियमिच्छेद्धुताशनात् । ईश्वरात् ज्ञानमन्विच्छेत् मोक्षमिच्छेज्जनार्दनात् इति ॥

விஷ்ணு புராணத்திலும்:- பிறகு க்ருஹ தேவார்ச்சனம் செய்ய வேண்டும். இஷ்டமான தேவர்களைப் பூஜிக்கலாம். ஜலத்திஞல் அபிஷேகத்தையும் புஷ்பம் தூபம் முதலியதையும் ஸமர்ப்பிக்க வேண்டும். **யோகயாக்ஞவல்க்யர்:-** ப்ரம்ஹா முதலிய தேவர்களுக்கு ச்ரத்தையுடன் அர்ச்சனம் செய்ய வேண்டும். ப்ராம்ஹம், வைஷ்ணவம், ரௌத்ரம், ஸாவித்ரம், வாருணம் முதலியதும், அந்தந்தத் தேவதாப்ரகாசமுமுள்ள மந்த்ரங்களால், ஏகாக்ரஞய் எல்லாத் தேவர்களையும் அர்ச்சிக்க வேண்டும். **மனு:-** க்ருஹஸ்தன், ஸூர்யன் அல்லது விஷ்ணு, ஈசன், ப்ரம்ஹா இவர்களை வைதிக மந்த்ரங்களால் அர்சிக்க வேண்டும். சுத்தஞவான். **மற்ருரிடத்தில்:-** ஸூர்யனிடமிருந்து ஆரோக்யத்தையும், அக்னியினிடமிருந்து ஸம்பத்தையும், ஈச்வரனிடமிருந்து ஞானத்தையும், விஷ்ணுவினிடமிருந்து மோக்ஷத்தையும் விரும்ப வேண்டும்.

गृह्यपरिशिष्टे—अथ गृहस्थो ह्यहरहरिष्टां देवतामिष्ट्वाऽभीष्टानर्थाँश्चिनोति। ते च देवा गणपतिर्वा स्कन्दो वा सूर्यो वा सरस्वती वा गौरी वा गौरीपतिर्वा श्रीर्वा श्रीपतिर्वाऽन्यो वाऽभिमतस्त एते यथारुचि समस्ता व्यस्ता वेज्यन्ते इति ॥ सङ्ग्रहे — आदित्यमम्बिकां विष्णुं गणनाथं महेश्वरम्। पञ्च यज्ञपरो नित्यं गृहस्थः पञ्च पूजयेत् इति। स्मृत्यर्थसारे — ब्रह्माणमीशं विष्णुं वा सूर्यमग्निं गणाधिपम्। दुर्गां सरस्वतीं लक्ष्मीं गौरीं वा नित्यमर्चयेत् ॥ पौरुषेणैव सूक्तेन देवार्चा प्रणवेन वा। तल्लिङ्गैरेव वा मन्त्रैरर्चयेद्गुर्वनुज्ञया ॥ स्त्रीशूद्राणां च भवति नाम्नो वै देवतार्चनम्। सर्वे चागममार्गेण कुर्युर्वेदानुसारिणा ॥ गुरूक्तेन प्रकारेण वेदबाह्येन नार्चयेत् इति ॥

க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- பிறகு, க்ருஹஸ்தன் ப்ரதி தினமும் இஷ்டமான தேவதையைப் பூஜித்தால் விரும்பிய பொருள்களை அடைவான். அந்தத் தேவர்கள் கணபதியோ,

ஸ்கந்தனோ, ஸூர்யனோ, ஸரஸ்வதியோ, கௌரியோ, சிவனோ, லக்ஷ்மியோ, லக்ஷ்மீபதியோ, இஷ்டமான வேறு தேவனுகவோ இருக்கலாம். இந்தத் தேவர்களை பக்திக்குத் தக்கபடி எல்லோரையும் யஜிக்கலாம். அல்லது தனியாக ஒரு தேவனை யஜிக்கலாம். ஸங்க்ரஹத்தில்:- பஞ்சயக்ஞங்களை யனுஷ்டிக்கும் க்ருஹஸ்தன், ஆதித்யன், அம்பிகை, விஷ்ணு, கணநாதன், மஹேச்வரன் என்ற ஐந்து தேவர்களையும் ப்ரதி தினமும் பூஜிக்க வேண்டும். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- ப்ரம்ஹா, ஈசன், விஷ்ணு, ஸூர்யன், அக்னி, கணபதிபன், துர்க்கை, ஸரஸ்வதீ, லக்ஷ்மீ, கௌரி இவர்களுள் யாரையாவது நித்யமும் அர்ச்சிக்க வேண்டும். புருஷஸூக்தத்தினுலோ, ப்ரணவத்தினுலோ தேவதாப்ரகாசகமான மந்த்ரங்களாலோ குருபதேசப்படி தேவபூஜையைச் செய்யலாம். ஸ்த்ரீகள், சூத்ரர்கள் இவரும் நாம மந்த்ரத்தால் தேவதா பூஜையைச் செய்யலாம். எல்லோருமே வேதத்தைத் தழுவியுள்ள ஆகமமார்கத்தால் செய்யலாம். குருவினுல் உபதேசிக்கப்பட்ட ப்ரகாரத்தால் அர்ச்சிக்க வேண்டும். வேதபாஹ்யமான மார்க்கத்தால் அர்ச்சிக்கக் கூடாது.

स्मृतिरत्ने — मन्त्रैर्वैष्णवरौद्रैस्तु सावित्रैः शाम्भवैस्तथा । विष्णुं प्रजापतिं वाऽपि शिवं वा भास्करं तथा ।। अन्यांश्चाभिमतान् देवान् भक्त्या चाक्रोधनोऽत्वरः ।। अप्स्वग्नौ हृदये सूर्ये स्थण्डिले प्रतिमासु च । षट्स्वेतेषु हरेस्सम्यगर्चनं मुनिभिः स्मृतम् ।। हविषाऽग्नौ जले पुष्पैः ध्यानेन हृदये हरिम् । अर्चन्ति सूरयो नित्यं जपेन रविमण्डले । सालग्रामे च चक्राङ्के पटे(ट्ट) मुद्रासु देवताः । पूजनीया हिरण्येषु रत्नगोब्राह्मणेषु च ।। यां काञ्चिद्देवतां कश्चि दाराधयितुमिच्छति । स सर्वोपाययत्नेन ब्राह्मणान् गाश्च तोषयेत् इति ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- விஷ்ணு, ருத்ரன், ஸூர்யன், சிவன் இவர்களுடைய மந்த்ரங்களால், விஷ்ணு, அல்லது ப்ரஜாபதி, சிவன், ஸூர்யன் இவரையாவது, வேறு அபிமதமான தேவர்களையாவது பக்தியுடன், கோபமில்லாமல், வேகமில்லாமல் அர்ச்சிக்க வேண்டும். ஜலம், அக்னி, ஹ்ருதயம், ஸூர்யன், ஸ்தண்டிலம், (தரை) பிம்பங்கள் என்ற இந்த ஆறு ஸ்தானங்களில் ஹரிபூஜையை நன்றாய்ச் செய்யலாமென்று முனிவரால் விதிக்கப்பட்டுள்ளது. அக்னியில் ஹவிஸ்ஸாலும், ஜலத்தில் புஷ்பங்களாலும், ஹ்ருதயத்தில் த்யானத்தாலும், ஸூர்ய மண்டலத்தில் ஜபத்தாலும், ப்ரதிதினம் அறிந்தவர்கள் அர்ச்சிக்கின்றனர். சக்ரமுள்ள ஸாளக்ராமம், படம், முத்ரை, தங்கம், ரத்னம், பசு, ப்ராம்ஹணர்கள் என்ற இவர்களிடத்தில் தேவர்களைப் பூஜிக்கலாம். எவனொருவன் ஏதாவதொரு தேவதையைப் பூஜிக்க விரும்புகின்றானோ, அவன் எல்லா உபாயத்தாலும் ப்ரயத்னத்தாலும், ப்ராம்ஹணர்களையும், பசுக்களையும் த்ருப்தராய்ச் செய்ய வேண்டும்.

नारदः — विप्राणां वपुराश्रित्य सर्वास्तिष्ठन्ति देवताः । अतस्तत्रैव ताः पूज्याः अलाभे प्रतिमादिषु ।। प्रतिमापट्टयन्त्राणां नित्यं स्नानं न कारयेत् । कारयेत् पर्वदिवसे यथा मलनिवारणम् ।। अग्नौ क्रियावतां देवो दिवि देवो मनीषिणाम् । प्रतिमास्वल्पबुद्धीनां योगिनां हृदये हरिः ।। तस्य सर्वगतत्वाच्च स्थण्डिले भावितात्मनाम् ।। सालग्रामशिला यत्र यत्र द्वारवती शिला । उभयोस्सङ्गमो यत्र तत्र मुक्तिर्न संशयः ।। सालग्रामशिला यत्र पूज्यते भगवन्मयैः । तद्देशे योजनादर्वाङ्मृतो निर्वाणमश्नुते ।। सालग्रामशिलायास्तु न च सम्प्रोक्षणं स्मृतम् । न प्रतिष्ठा विधातव्या न चैवावाहनादिकम् इति ।।

நாரதர்:- ப்ராம்ஹணர்களின் சரீரத்தையண்டி எல்லாத் தேவர்களும் வஸிக்கின்றனர். ஆகையால் அங்கே அவர்களைப் பூஜிக்க வேண்டும். அவர் கிடைக்காவிடில் பிம்பம் முதலிவற்றில் பூஜிக்க வேண்டும். பிம்பங்கள், படங்கள், யந்த்ரங்கள் இவைகளுக்கு ப்ரதிதினமும் ஸ்நானம் செய்விக்க வேண்டியதில்லை. பர்வதினத்தில், அழுக்கு நிவ்ருத்திக்குமளவு ஸ்நானம் செய்விக்க வேண்டும். ச்ரோத்ரியர்களான கர்மானுஷ்டாயிகளுக்கு அக்னியில் தேவன். ஞானிகளுக்கு வைகுண்டத்தில் தேவன். ஸ்வல்பபுத்திகளுக்கு பிம்பங்களில் தேவன். யோகிகளுக்கு ஹ்ருதயத்தில் தேவன். ஆத்ம பாவனை யுடையவருக்கு ஸ்தண்டிலத்திலேயே (தரையிலேயே) தேவன். அவன் எங்கும் இருப்பவனுனதால். ஸாளக்ராம சிலை எங்கிருக்கின்றதோ, த்வாரவதீசிலை எங்கிருக் கின்றதோ, இரண்டும் சேர்ந்து எங்கு இருக்கின்றனவோ அங்கு முக்தியே, ஸம்சயமில்லை. எந்தத் தேசத்தில் ஸாளக்ராமம் பக்தர்களால் பூஜிக்கப்படுகின்றதோ அந்தத் தேசத்தில் ஒரு யோஜனை தூரத்திற்குள் மரித்தவன் மோக்ஷத்தை அடைகிறுன். ஸாளக்ராம சிலைக்கு ஸம்ப்ரோக்ஷணம் வேண்டியதில்லை. ப்ரதிஷ்டையும் செய்ய வேண்டியதில்லை. ஆவாஹனம் முதலியதும் செய்ய வேண்டியதில்லை.

विष्णुपूजाप्रकारमाह नारदः - वेदे तु पौरुषं सूक्त मर्चितं गुह्यमुत्तमम् । आनुष्टुभस्य सूक्तस्य त्रिष्टुबन्तस्य देवता ॥ पुरुषो यो जगद्बीजमृषिर्नारायणः स्मृतः । छन्दोऽनुष्टुप्च भवति तिसृणां त्रिष्टुबन्ततः इति ॥

விஷ்ணு பூஜாப்ரகாரத்தைச் சொல்லுகிறுர் நாரதர்:- வேதத்தில் புருஷஸூக்தம் சிறந்ததும், மிக ரஹஸ்யமுமாகியது. அனுஷ்டுப் சந்தஸ்ஸையுடையது,

த்ரிஷ்டுப் சந்தஸ்ஸை முடிவிலுடையது இந்த ஸூக்தத்திற்கு, ஜகன் மூலமாகிய புருஷன் தேவதை. நாராயணன் ருஷி. அனுஷ்டுப் சந்தஸ். முடிவில் மூன்று ருக்குகளுக்கு த்ரிஷ்டுப் சந்தஸ்ஸாம்.

प्रत्यृचमृषिभेदमाह स एव – बृहस्पतिर्मनुर्दक्षः शौनकोऽत्रिश्च मुद्गलः । शातातपो वसिष्ठश्च याज्ञवल्क्यश्च नारदः ॥ गौतमोऽथ भरद्वाजः शुको गर्गोशनाऽङ्गिराः । व्यासः पराशरश्चैव ऋषयोऽष्टादश स्मृताः ॥ मत्स्यः कूर्मो वराहश्च नारसिंहश्च वामनः । रामो रामश्च रामश्च कृष्णः कल्कीति ते दश ॥ श्रीवल्लभो हरिः शौरिरच्युतो धरणीधरः । जनार्दनो हृषीकेशो माधवश्च तथैव च ॥ देवा अष्टादश प्रोक्ताः पूजां वक्ष्ये यथाक्रमम् । आवाहनासनं पाद्यमर्घ्य माचमनीयकम् ॥ मधुपर्कं तथा स्नानं वस्त्रं चैवोपवीतकम् । गन्धं पुष्पं च धूपं च तथा दीपं प्रकल्पयेत् ॥ नैवेद्यं चैव ताम्बूलं प्रदक्षिणनमस्कृती । उद्वासनं च क्रमशः कुर्यात् पूजापरायणः इति ॥

ஒவ்வொரு ருக்குக்கும் ருஷி பேதத்தைச் சொல்லுகிறார். நாரதரே:- ப்ரஹஸ்பதி, மனு, தக்ஷர், சௌனகர், அத்ரி, முத்கலர், சாதாதபர், வஸிஷ்டர், யாக்ஞவல்க்யர், நாரதர், கௌதமர், பரத்வாஜர், சுகர், கர்கர், உசநஸ், அங்கிரஸ், வ்யாஸர், பராசரர் என்று பதினெட்டு ருஷிகள் கூறப்பட்டுள்ளனர். மத்ஸ்யர், கூர்மர், வராஹர், நரஸிம்ஹர். வாமனர், ராமர், ராமர், ராமர், க்ருஷ்ணர், கல்கீ, ச்ரீவல்லபர், ஹரி, சௌரி, அச்யுதர், தரணீதரர், ஜநார்த்தனர், ஹ்ருஷீகேசர், மாதவர் என்று பதினெட்டுத் தேவர்களாம். இனி க்ரமப்படி பூஜையைச் சொல்லுகிறேன். ஆவாஹனம், ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனீயம், மதுபர்க்கம், ஸ்நானம், வஸ்த்ரம், உபவீதம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவைத்யம், தாம்பூலம், ப்ரதக்ஷிணம், நமஸ்காரம்,

உத்வாஸனம் இவைகளை க்ரமமாய்ச் செய்ய வேண்டும் பூஜையில் ச்ரத்தையுள்ளவன். (இவ்விதம் 18- உபசாரங்கள் யஜுர்வேத புருஷ ஸூக்தானுஸாரமாய்.)

षोडशर्चेन पूजाप्रकार उक्तश्चन्द्रिकामाधवीयादौ — पौरुषेण तु सूक्तेन ततो विष्णुं समर्चयेत् । ऋग्वेदे पौरुषं सूक्तं षोडशर्चमुदीरितम् । आनुष्टुभस्य सूक्तस्य त्रिष्टुबन्तस्य देवता । पुरुषो यो जगद्बीज मृषिर्नारायणः स्मृतः ।। प्रथमां विन्यसेद्वामे द्वितीयां दक्षिणे करे । तृतीयां वामपादे तु चतुर्थीं दक्षिणे पदे ।। पञ्चमीं वामजङ्घायां दक्षिणस्यां तथोत्तराम् । सप्तमीं वामकट्यां तु दक्षिणस्यां तथाऽष्टमीम् । नवमीं नाभिमध्ये तु दशमीं हृदये न्यसेत् । एकादशीं कण्ठदेशे द्वादशीं वामबाहुके ।। त्रयोदशीं दक्षिणे तु आस्यदेशे चतुर्दशीम् । अक्ष्णोः पञ्चदशीं न्यस्य षोडशीं मूर्ध्नि विन्यसेत् ।। यथाऽऽत्मनि तथा देवे न्यासकर्म समाचरेत् ।।

பதினாறு ருக்குள்ள ஸூக்தத்தினால் பூஜாப்ரகாரம் சொல்லப்பட்டுள்ளது சந்த்ரிகா, மாதவீயம்:- முதலியவைகளில். பிறகு புருஷஸூக்தத்தினால் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். ருக் வேதத்தில் புருஷஸூக்தம் பதினாறு ருக்குகளுடையதாய்ச் சொல்லப்பட்டுள்ளது. அனுஷ்டுப் சந்தஸ்ஸுள்ளதும், த்ரிஷ்டுப் சந்தஸ்ஸை முடிவிலுடையதுமான இதற்குத் தேவதை, ஜகன் மூலனான புருஷனும். நாராயணன் ருஷியாம். (இனி ந்யாஸம்) முதலாவதான ருக்கை இடது கையிலும், இரண்டாவது ருக்கை வலது கையிலும், மூன்றாவதை இடது காலிலும், நான்காவதை வலது காலிலும், ஐந்தாவதை இடது முழங்காலிலும், ஆறாவதை வலது முழங்காலிலும், ஏழாவதை இடது இடுப்பிலும், எட்டாவதை வலது இடுப்பிலும், ஒன்பதாவதை நாபியின் நடுவிலும், பத்தாவதை மார்பிலும், பதினொன்றாவதை

கண்டத்திலும், பன்னிரண்டாவதை இடது கையிலும், பதின்மூன்றுவதை வலது கையிலும், பதிஞன்காவதை வாயிலும், பதினைந்தாவதைக் கண்களிலும், பதிஞறுவது ருக்கைச் சிரஸ்ஸிலும் ந்யஸிக்க வேண்டும். (ருக்கை ஜபித்து அந்தந்த ஸ்தானத்தைத் தொடுவது ந்யாஸம்.) தேஹத்திற்போல் தேவபிம்பத்திலும் ந்யாஸம் செய்ய வேண்டும்.

एवं न्यासं तु कृत्वाऽऽदौ पश्चाद्देवस्य पूजनम् ॥ गन्धमाल्यैरथात्मानमर्चयेत् पीठमेव च । पूर्वयाऽऽवाहयेद्देवमासनं तु द्वितीयया ॥ पाद्यं तृतीयया चैव चतुर्थ्याऽर्घ्यं प्रदापयेत् । पञ्चम्याऽऽचमनं दद्यात् षष्ठ्या स्नानं समाचरेत् ॥ सप्तम्या तु ततो वासोऽप्यष्टम्या चोपवीतकम् । नवम्या गन्धमेवं तु दशम्या पुष्पकं तथा । एकादश्या तथा धूपं द्वादश्या दीपमेव हि । नैवेद्यं तु त्रयोदश्या नमस्कारे चतुर्दशी ॥ प्रदक्षिणे पञ्चदशी वर्जने षोडशी तथा । स्नाने वस्त्रे च नैवेद्ये दद्यादाचमनं तथा ॥

ஆரம்பத்தில் இவ்விதம் ந்யாஸம் செய்து கொண்டு பிறகு தேவபூஜையைச் செய்ய வேண்டும். பிறகு கந்தபுஷ்பங்களால் ஆத்ம பூஜையையும், பிறகு பீட பூஜையையும் செய்ய வேண்டும். முதல் ருக்கிஞல் தேவனை ஆவாஹனம் செய்ய வேண்டும். இரண்டாவது ருக்கிஞல் ஆஸனத்தையும், மூன்றுவதால் பாத்யத்தையும், நான்காவதால் அர்க்யத்தையும், ஐந்தாவதால் ஆசமனத்தையும் கொடுக்க வேண்டும். ஆறுவதால் ஸ்நானத்தைச் செய்விக்க வேண்டும். ஏழாவதால் வஸ்த்ரத்தையும், எட்டாவதால் உபவீதத்தையும், ஒன்பதாவதால் கந்தத்தையும், பத்தாவதால் புஷ்பத்தையும், பதிஞென்றுவதால் தூபத்தையும், பன்னிரண்டாவதால் தீபத்தையும்,

பதின்மூன்றுவதால் நைவேத்யத்தையும், ஸமர்ப்பிக்க வேண்டும். பதினுன்காவதால் நமஸ்கரிக்க வேண்டும். பதினைந்தாவதால் ப்ரதக்ஷிணமும், பதினுறுவதால் உத்வாஸனமும் செய்ய வேண்டும். ஸ்நானம், வஸ்த்ரம், நைவேத்யம் இவைகளில் ஆசமனத்தையும் கொடுக்க வேண்டும்.

हुत्वा षोडशभिर्मन्त्रैः षोडशान्नस्य चाहुतीः । पुनष्षोडशभिर्मन्त्रैः दद्यात् पुष्पाणि षोडश ॥ तच्च सर्वं जपेद्भूयः पौरुषं सूक्तमुत्तमम् । षण्मासात् सिद्धिमाप्नोति ह्येवमेव समर्चयन् ॥ संवत्सरेण तेनैव सायुज्यमधिगच्छति ॥ ध्येयः सदा सवितृमण्डलमध्यवर्ती नारायणः सरसिजासनसन्निविष्टः । केयूरवान् मकरकुण्डलवान् किरीटी हारी हिरण्मयवपुर्धृत शङ्खचक्रः इति ॥

இந்தப் பதினுறு ருக்குகளால் பதினுறு அன்னுஹுதிகளைச் செய்து, மறுபடி அதே பதினுறு மந்த்ரங்களால் பதினுறு புஷ்பங்களை ஸமர்ப்பித்து, மறுபடி அதே புருஷஸூக்தத்தை முழுவதும் ஜபிக்க வேண்டும். இவ்விதமே அர்ச்சிப்பவன் ஆறுமாதத்தில் இஷ்ட ஸித்தியை அடைகிறுன். ஒருவருஷம் அர்ச்சிப்பவன், அவனுடனே ஸாயுஜ்யத்தை அடைகிறுன். ஸூர்ய மண்டலத்தின் நடுவிலிருப்பவனும், தாமரைப் பூவாஸனத்தில் வீற்றிருப்பவனும், கேயூரம், மகரகுண்டலம், கிரீடம், ஹாரம் இவை அணிந்தவனும், ஸ்வர்ணமயமான மேனியுடையவனும், சங்கம், சக்ரம் இவைகளைத் தரித்தவனுமான நாராயணனை த்யானிக்க வேண்டும்.

शौनकः— वक्ष्ये पुरुषसूक्तस्य विधानं त्वर्चनं प्रति । स्नात्वा यथोक्तविधिना प्राङ्मुखः शुद्धमानसः ॥ देवस्याभिमुखो भूत्वा विष्ण्वाराधनमारभेत् । नारायण ऋषिः प्रोक्तो ह्यनुष्टुप् छन्द उच्यते ॥

पुरुषो भगवान् देवो विनियोगः स्मृतोऽर्चने ॥ वामाद्यङ्गं करचरणजानूरुयुग्मेषु नाभौ हृत्कण्ठांसद्वितयवदनाक्ष्युत्तमाङ्गेषु मन्त्री। पुंसः सूक्तैर्न्यसतु मनुभिः संहृतौ शीर्षपूर्वं सृष्टौ नाभिप्रभृति हृदयान्तं स्थितौ च क्रमेण ॥ एवं न्यासविधिं कृत्वा पश्चाद्यागं समाचरेत् ॥

சௌனகர்:- புருஷஸூக்தத்தால் அர்ச்சிக்கும் விதியைச் சொல்லுகிறேன். விதிப்படி ஸ்நானம் செய்து, சுத்த மனமுடையவனாய், கிழக்கு நோக்கியவனாய், தேவனுக்கு நேராக இருந்து விஷ்ணுவின் ஆராதனத்தைத் துவக்க வேண்டும். இந்தப் புருஷஸூக்தத்திற்கு நாராயணர் ருஷி. அனுஷ்டுப் சந்தஸ். பகவானாகிய புருஷன் தேவதை. அர்ச்சனத்தில் விநியோகமாம். ந்யாஸம் சொல்லப்படுகிறது. புருஷஸூக்தத்தின் பதினாறு ருக்குகளால் பதினாறு ஸ்தானங்களில் ந்யாஸம் செய்ய வேண்டும். இரட்டையாயுள்ள அங்கங்களில் முதலில் இடது புறத்திலும், பிறகு வலது புறத்திலும் ந்யாஸம் செய்ய வேண்டும். கைகள் இரண்டு, கால்கள் இரண்டு, முழங்கால்கள் இரண்டு, துடைகள் இரண்டு, ஆக-8, நாபி, மார்பு, கழுத்து, தோள்கள் தனியே இரண்டு, முகம், கண்கள், 2-ம் ஒன்று, தலை, ஆக-8, மொத்தம் 16-ஸ்தானங்களில் ந்யாஸம் செய்ய வேண்டும். இந்த க்ரமம் ஸம்ஹ்ருதி ந்யாஸத்தில், ஸ்ருஷ்டி ந்யாஸத்தில் தலை முதலாக இடது கை வரையிலும், ஸ்திதி ந்யாஸத்தில் நாபி முதல் ஹ்ருதயம் வரையிலும் ந்யாஸம் செய்ய வேண்டும். பிறகு யாகம் செய்ய வேண்டும்.

आद्येनावाहयेद्देवं द्वितीयेनासनं तथा । तृतीयेनासने देवमास्यतामिति च ब्रुवन् ॥ चतुर्थ्या पाद्यदानं च आचामं पञ्चमेन तु । षष्ठेन चार्घ्यमादद्यादाचामं पूर्ववत् तथा ॥ समस्तैः स्नापयेद्देवमाचामं पूर्ववत् तथा। दद्याद्गन्धं सप्तमेन पुष्पदानं तथाऽष्टमे ॥ नवमे वस्त्रदानं तु

दशमेनोत्तरीयकम् । एकादशेनोपवीतं पाद्याचामं तु पूर्ववत् ।। धूपं तु द्वादशेनैव दीपदानं त्रयोदशे । चतुर्दशे- नाभरणं पाद्याचामं तु पूर्ववत् ।। पात्रशुद्धिं चाभिघार मोदनाभिनिवेदनम् । कुर्यात् पञ्चदशेनैव आचामं पूर्ववत् तथा ।। दक्षिणां तु यथाशक्ति षोडशेन विसर्जयेत् । दद्यात् पुरुषसूक्तेन यः पुष्पाण्यप एव वा ।। अर्चितं तेन वै सर्वं त्रैलोक्यं सचराचरम् । ततः प्रदक्षिणं कृत्वा जपं कुर्यात् समाहितः ।। जितं ते पुण्डरीकाक्ष नमस्ते विश्वभावन । नमस्तेऽस्तु हृषीकेश महापुरुष पूर्वज । इत्येवमनया स्तुत्या स्तुत्वा देवं दिनेदिने । किङ्करोऽस्मीति चात्मानं देवायैव निवेदयेत् इति ।।

16- ருக்குகளினுலும் முறையே ஆவாஹனம்-1, ஆஸனம்-2, ஆஸ்யதாம் என்று உபசரிப்பது-3, பாத்யம்-4, ஆசமனம்-5, அர்க்யம்-6, ஆசமனம், ஸ்நானம், ஆசமனம், கந்தம், -7, புஷ்பம்-8, வஸ்த்ரம்-9, உத்தரீயம்-10, உபவீதம்-11, பாத்யம், ஆசமனம், தூபம்-12, தீபம்-13, ஆபரணம்-14, பாத்யம், ஆசமனம், பாத்ரசுத்தி, அபிகாரம், அன்னுதி நிவேதனம்-15, ஆசமனம், தக்ஷிணுதானம், விஸர்ஜனம்-16, இவ்விதம் 16- உபசாரங்களைச் செய்ய வேண்டும். எவன் புருஷஸூக்தத்தால் புஷ்பங்களையாவது, ஜலத்தையாவது கொடுக்கின்ருனே, அவனுல் சராசரங்களுடன் கூடிய இம்மூன்றுலகும் பூஜிக்கப்பட்டதாகும். பிறகு ப்ரதக்ஷிணம் செய்து ஏகாக்ரனுய் ஜபம் செய்ய வேண்டும். 'ஜிதம்தே புண்டரீகாக்ஷ + பூர்வஜ' என்ற ஸ்துதியால் ஸ்துதித்து, ப்ரதி தினமும் 'உமக்குக் கிங்கரனுய் இருக்கின்றேன்' என்று தன்னைத் தேவனுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும்.

बोधायनोऽपि — अथातो महापुरुषस्याहरहः परिचर्याविधिं व्याख्यास्यामः । स्नातः शुचिश्शुचौ समे देशे गोमयेनोपलिप्य प्रतिकृतिं कृत्वाऽक्षतपुष्पैर्यथालाभमर्चयेत्, सहपुष्पोदकेन महापुरुषमावाहयेत्

ओं भूः पुरुषमावाहयामि, ओं भुवः पुरुषमावाहयमि, ओं सुवः पुरुषमावाहयामि, ओं भूर्भुवः सुवः पुरुषमावाहयामि, आयातु भगवान् महापुरुष इति । अथ स्वागतेनाभिनन्दति स्वागतं भगवते महापुरुषाय एतदासनमुपक्लृप्तमत्रास्यतां भगवान्महापुरुषः इत्यत्र कूर्चं ददाति भगवतोऽयं कूर्चो दर्भमयस्त्रिवृद्धरितस्तं जुषस्वेत्यत्र स्थानानि कल्पयति अग्रतः शङ्खाय कल्पयामि । दक्षिणतो गदायै कल्पयामि । वनमालायै कल्पयामि । पश्चिमतः श्रीवत्साय कल्पयामि । गरुत्मते कल्पयामि । सरस्वत्यै कल्पयामि । तुष्ट्यै कल्पयामि । अथ सावित्र्या पात्रमभिमन्त्र्य प्रक्षाल्य त्रिरपः परिषिच्य तिरः पवित्र मप आनीय पुनस्तेनैवाप्स्वभिमन्त्र्य सह पवित्रेणादित्यं दर्शयेदोमित्यातमितोः प्राणमायच्छेत्त्रीणि पदा विचक्रम इति पाद्यं दद्यादथ व्याहृतिभिर्निर्माल्यमपोह्योत्तरतो विष्वक्सेनाय नम इति इदं विष्णुर्विचक्रम इत्यर्घ्यं दद्यादथैनं स्नापयत्यापोहिष्ठामयोभुव इति । ब्रह्मजज्ञानं वामदेव्यर्चा यजुः पवित्रेणेत्येताभिः षड्भिः स्नापयित्वाऽथाद्भिस्तर्पयति केशवं नारायणं माधवं गोविन्दं विष्णुं मधुसूदनं त्रिविक्रमं वामनं श्रीधरं हृषीकेशं पद्मनाभं दामोदरं तर्पयित्वा व्याहृतिभिः प्रदक्षिणमुदकुम्भं परिषिच्य प्रणवेन वासो ददाति सावित्र्या यज्ञोपवीत माचमनीयमुदकेनेदं विष्णुर्विचक्रम इति गन्धं दद्यात् तद्विष्णोः परमं पदमिति पुष्पमिरावतीत्यक्षतं सावित्र्या धूपमुद्दीप्यस्वेति दीपं देवस्यत्वेति महापुरुषाय जुष्टं निवेदयामीति नैवेद्यमथ केशवादिनामभिर्द्वादश पुष्पाणि दद्यात् । शङ्खाय नमश्चक्राय नमो गदायै नमो वनमालायै नमः श्रीवत्साय नमो गरुत्मते नमः श्रियै नमः सरस्वत्यै नमः पुष्ट्यै नमस्तुष्ट्यै नमः इति । अवशिष्टैर्गन्धमाल्यैर्ब्राह्मणानलङ्कृत्याथैनमृग्यजुःसामाथर्वभिः स्तुवन् विष्णुसूक्तं जपित्वा पुरुषसूक्तं चान्यांश्च वैष्णवान् मन्त्रानित्यके । ओं

भूर्भुवः सुवरों भगवते महापुरुषाय चरुमुद्वासयामीति चरुमुद्वास्य व्याहृतीभिः पुरुषमुद्वासयेत् ओं भूः पुरुषमुद्वासयामि । ओं भुवः पुरुषमुद्वासयामि । ओं सुवः पुरुषमुद्वासयामि । ओं भूर्भुवः सुवः पुरुषमुद्वासयामि इत्युद्वास्य प्रयातु भगवान् महापुरुषोऽनेन हविषा तृप्तो हरिः पुनरागमनाय पुनः सन्दर्शनाय च इति । प्रतिमा-स्थानेष्वावाहनो द्वासनवर्जं सर्वं समानं महत् स्वस्त्ययनमित्याचक्षते महत्स्वस्त्ययनमित्याह भगवान् बोधायनः इति।

போதாயனரும்:- இனி மஹாபுருஷனின் ப்ரதிதின பூஜா விதியைச் சொல்லுகிறேன். ஸ்நானம் செய்து சுத்தனுய், சுத்தமாயும் ஸமமாயுள்ள ப்ரதேசத்தில், கோமயத்தால் மெழுகி மூர்த்தியைக் கல்பித்து அக்ஷத புஷ்பங்களால் கிடைத்த மட்டில் அர்ச்சிக்க வேண்டும். புஷ்பம், ஜலம் இவைகளால் மஹாபுருஷனை ஆவாஹனம் செய்ய வேண்டும். 'ஓம்பூ: புருஷ மாவாஹயாமி + மஹாபுருஷ:, என்ற மந்த்ரத்தால். பிறகு ஸ்வாகதம் செய்து, ஆஸனத்திற்காகக் கூர்ச்சத்தை ஸமர்ப்பித்து, சங்காதிகளுக்கு ஸ்தானங்களைக் கல்பித்து, பாத்யதானம், நிர்மால்ய விஸர்ஜனம், அர்க்யதானம், ஸ்நானம், கேசவாதி நாமங்களால் தர்ப்பணம் இவைகளைச் செய்து, வஸ்த்ரம், உபவீதம், கந்தம், புஷ்பம், அக்ஷதம், தூபம், தீபம், நைவேத்யம் இவைகளை ஸமர்ப்பித்து, கேசவாதிகளான பன்னிரண்டு நாமங்களால் பன்னிரண்டு புஷ்பங்களை ஸமர்ப்பிக்க வேண்டும். 'சங்காய நம:' என்பது முதலிய மந்த்ரங்களால் அர்ச்சித்து மீதியுள்ள கந்த புஷ்பங்களால் ப்ராம்ஹணர்களை அலங்கரித்து, பிறகு ருக், யஜுஸ், ஸாம, அதர்வ வேதங்களால் ஸ்துதித்து, விஷ்ணுஸூக்தம் முதலியதை ஜபித்து, சருவை உத்வாஸனம் செய்து, வ்யாஹ்ருதிகளால் மஹாபுருஷனையும் உத்வாஸனம் செய்ய வேண்டும்.

ப்ரதிமைகளில் ஆவாஹனமும் உத்வாஸனமும் இல்லை. மற்றதெல்லாம் ஸமானம், இது மிகக்ஷேமப்ரதம், என்றார் போதாயனர். (மந்த்ரங்கள் அங்கங்கு மூலத்திலுள்ளதால் இங்கே குறிக்கவில்லை)

आश्वमेधिके — शृणु पाण्डव मत्सर्वमर्चनाक्रममात्मनः । स्थण्डिले पद्मकं कृत्वा चाष्टपत्रं सकर्णिकम् ।। मल्लिङ्गैर्वैदिकैर्मन्त्रैर्मम सूक्तेन वा पुनः । अष्टाक्षरविधानेन ह्यथवा द्वादशाक्षरैः ।। स्थापितं मां ततस्तस्मिन्नर्चयेत् तु विचक्षणः । पुरुषं च ततः सत्यमच्युतं च युधिष्ठिर । अनिरुद्धं च मां प्राहुः वैखानसविदो जनाः । अन्ये त्वेवं विजानन्ति मां राजन् पाञ्चरात्रिकाः ।। वासुदेवं च राजेन्द्र सङ्कर्षणमथापि वा । प्रद्युम्नं चानिरुद्धं च चतुर्मूर्तिं प्रचक्षते ।। स्वाधिकारानुरूपेण मामेवं चार्चयेद्बुधः इति ।।

ஆச்வமேதிகத்தில்:- ஓ பாண்டவனே! எனது பூஜாக்ரமத்தை முழுவதும் என்னிடமிருந்து கேட்பாயாக. ஸ்தண்டிலத்தில் எட்டு இதழ்களும் கர்ணிகையுமுடைய பத்மத்தைச் செய்து, அதில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள என்னை, என்னைக் குறிக்கும் வைதிக மந்த்ரங்களாலாவது, எனது ஸூக்தத்தாலாவது, அஷ்டாக்ஷரத்தினலாவது, த்வாதசாக்ஷரத்தினலாவது வித்வான் அர்ச்சிக்க வேண்டும். வைகானஸ சாஸ்த்ரக்ஞர்கள், புருஷன், ஸத்யன், அச்யுதன், அனிருத்தன், விஷ்ணு என்று சொல்லுகின்றனர். மற்றப் பாஞ்சராத்ரிகர்களோவெனில், வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன், என்று நான்கு ஸ்வரூபமுள்ளவனாய் என்னைச் சொல்லுகின்றனர். அறிந்தவன் தனது அதிகாரத்திற்கு அனுகுணமாய் என்னை அர்சிக்க வேண்டும்.

अपरार्के — अष्टाक्षरेण देवेशं नारसिंहमनामयम् । गन्धपुष्पादिभिर्नित्यमर्चयेदच्युतं नरः ।। अष्टाक्षरस्य मन्त्रस्य

ऋषिर्नारायणः स्मृतः । छन्दश्च देवी गायत्री परमात्मा च देवता ।। गन्धपुष्पादि सकलमनेनैव निवेदयेत् । अनेनैवार्चितो विष्णुः प्रीतो भवति तत्क्षणात् ।। किं तस्य बहुभिर्मन्त्रैः किं तस्य बहुभिर्मखैः । ओं नमो नारायणायेति मन्त्रः सर्वार्थसाधकः इति ।।

அபரார்க்கத்தில்:- தேவேசனும், அழிவற்றவனுமான நரஸிம்ஹனை, அஷ்டாக்ஷர மந்த்ரத்தால் கந்த புஷ்பாதிகளால் ப்ரதி தினமும் பூஜிக்க வேண்டும். அஷ்டாக்ஷர மந்த்ரத்திற்கு நாராயணர் ருஷி. காயத்ரீ சந்தஸ். பரமாத்மா தேவதை. கந்தம், புஷ்பம் முதலிய எல்லாவற்றையும் இந்த மந்த்ரத்தாலேயே ஸமர்ப்பிக்க வேண்டும். இதனால் அர்ச்சிக்கப்பட்டால் விஷ்ணு அப்பொழுதே ப்ரீதியுடையவராகிறார். 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்த்ரம் எல்லாப் புருஷார்த்தங்களையும் ஸாதிக்கக் கூடியது. இந்த மந்த்ரம் உடையவனுக்கு அநேக மந்த்ரங்களாலும், அநேக யாகங்களாலும் என்ன ப்ரயோஜனம்?

उपचारफलान्याह पुलस्त्यः— दध्यादीनां विकाराणां क्षीरतः सम्भवो यथा । तथैवाशेषकामानां क्षीरस्नापनतो हरेः ।। स्नाप्य दध्ना सकृद्विष्णुं निर्मलं प्रियदर्शनम् । विष्णुलोकमवाप्नोति सेव्यमानः सुरोत्तमैः ।। गवां शतस्य विप्राणां यद्दत्तस्य फलं भवेत् । घृतप्रस्थेन तद्विष्णोः भवेत् स्नानान्न संशयः ।। अयने चोत्तरे प्राप्ते यः स्नापयति केशवम् । घृतप्रस्थेन पापानि सकलानि व्यपोहति इति ।।

உபசாரங்களின் பலத்தைச் சொல்லுகிறார், **புலஸ்த்யர்:-** *பாலிலிருந்து தயிர் முதலியவை உண்டாவது போல், விஷ்ணுவுக்குச் செய்யும் க்ஷீரஸ்நாபனத்திலிருந்து ஸகல காமங்களும் உண்டாகின்றன. நிர்மலமாயும் அழகியதுமான விஷ்ணு பிம்பத்தை தயிரால் ஒரு முறை*

ஸ்நானம் செய்விப்பவன், தேவோத்தமர்களால் ஸேவிக்கப்பட்டவனாய் விஷ்ணு லோகத்தை அடைகிறான். ப்ராம்ஹணர்களுக்கு நூறு பசுக்களைத் தானம் செய்வதாலுண்டாகும் பலன், ஒரு படி நெய்யினால் விஷ்ணு பிம்பத்தை ஸ்நானம் செய்விப்பதால் உண்டாகும். ஸம்சயமில்லை. உத்தராயண காலத்தில் ஒரு படி நெய்யினால் விஷ்ணுவுக்கு ஸ்நானத்தை எவன் செய்விக்கின்றானோ அவன் ஸகல பாபங்களையும் போக்கிக் கொள்கிறான்.

यमः — कपिलां विप्रमुख्याय दद्यात्यनुदिनं हि यः । घृत स्नानं च देवस्य विष्णोः काले समं हि तत् ॥ देवे मलापनयनं देवागारसमूहनम् । स्नापनं सर्वदेवानां गोप्रदानसमं स्मृतम् इति ॥ स्मृतिरत्ने – कुङ्कुमागरु श्रीकण्ठकर्दमैरच्युताकृतिम् । आलिप्य भक्त्या देवेशं कल्पकोटिं वसेद्दिवि ॥ गन्धेभ्यश्चन्दनं पुण्यं चन्दनादगरुर्वरः । कृष्णागरुस्ततः श्रेष्ठः कुङ्कुमं तु ततो वरम् इति ॥

யமன்:- எவன் ப்ரதிதினமும் சிறந்த ப்ராம்ஹணனுக்குக் காராம் பசுவைத் தானம் செய்கின்றானோ, எவன் விஷ்ணுவுக்குக் காலத்தில் நெய்யினால் ஸ்நானம் செய்விக்கின்றானோ, அவ்விருவரின் புண்யம் ஸமமாகும். தேவதாபிம்பத்தின் அழுக்கைப் போக்குவதும், தேவாலயத்தைச் சுத்தி செய்வதும், எல்லாத் தேவர்களையும் ஸ்நானம் செய்விப்பதும் கோதானத்திற்குச் சமமாகும். **ஸ்ம்ருதிரத்னத்தில்:-** குங்குமம், அகில், கஸ்தூரி, சந்தனம் இவைகளால் விஷ்ணு பிம்பத்தைப் பக்தியுடன் பூசுகின்றவன், ஸ்வர்க்கத்தில் கோடிகல்பகாலம் வரையில் வஸிப்பான். வாஸனை வஸ்துக்களுள் சந்தனம் புண்யமானது. சந்தனத்திலும் அகில் புண்யமானது. அதினும் காரகில் புண்யமானது. அதினும் குங்குமப்பூ புண்யமானது.

आचारसारे — मालती मल्लिका चैव यूथिका चातिमुक्तकम्। पाटली करवीरं च जपा चावन्तमेव च ॥ कुटजं श्री(त)करं चैव कर्णिकारं कुरण्डकम्। पुन्नागं चम्पकं कुन्दं बाणं षट्सरमल्लिका ॥ अशोकं तिलकं चैव नन्द्यावर्तं तथैव च। अमी पुष्पप्रकाराश्च क्लृप्ताः केशवपूजने ॥ बिल्वपत्रं शमीपत्रं भृङ्गराजस्य पत्रकम्। तुलसी कृष्णतुलसीपत्रं वासवमेव च ॥ केतकीपुष्पपत्रं च सद्यस्तुष्टिकरं हरेः। श्वेतरक्तसरोजानि नीलरक्ते तथोत्पले। सितोत्पलं च कृष्णस्य दयितानि सदा हरेः ॥ नीपार्जुनकदंबैश्च वकुलैश्च सुगन्धिभिः। कल्हारैर्विष्णुमभ्यर्च्य विष्णुलोके महीयते ॥ काञ्चनैः कुसुमैर्विष्णुं मणिविद्रुमनिर्मितैः। पूजयन् वस्त्रपुष्पाद्यैर्नरो मुक्तिमवाप्नुयात् इति।

ஆசாரஸாரத்தில்:- ஜாதிமல்லிகை, மல்லிகை, காட்டுமல்லிகை, காட்டுமுல்லை, பாதிரி, அரளி, செம்பருத்தி, ஜவந்தி, மலை மல்லிகை, தகரம், கொங்கிலவு, குறிஞ்சி, புன்னை, சண்பகம், குருந்தை, பாணம், ஆறுஸர மல்லிகை, அசோகம், மஞ்சாடி, நந்த்யாவர்த்தம் இவைகளின் புஷ்பங்களும், பில்வம், வன்னி, கரிசாலை, துளஸீ, கருந்துளஸீ, பச்சிலை, தாழைப்பூ இவைகளின் பத்ரங்களும் விஷ்ணுவுக்கு ப்ரீதி கரங்களாம். வெண்மை, சிவப்பு நிறமுள்ள தாமரைகளும், கறுப்பு, சிவப்பு நிறமுள்ள உத்பலங்களும், வெளுப்பு நிறமான உத்பலமும் விஷ்ணுவுக்கு ப்ரியங்களாம். நீர்க்கடம்பு, மருதை, கடம்பு, மகிழ், செங்கழுனீர் இவைகளின் புஷ்பங்களால் அர்ச்சித்தால் விஷ்ணுலோகத்தில் சிறப்புறுவான். தங்கப் புஷ்பங்களாலும், ரத்னம், பவழம் இவைகளாற் செய்த புஷ்பங்களாலும், வஸ்த்ரம், புஷ்பம் முதலியதாலும் அர்ச்சிப்பவன் முக்தியை அடைவான்.

पुलस्त्यः — पुष्पजातिषु सर्वासु सौवर्णं पुष्पमुत्तमम् । त्रुटिमात्रप्रदानात्तु शक्रार्द्धासनमाप्नुयात् इति । मौद्गल्यः – सकृदभ्यर्च्य गोविन्दं बिल्वपत्रेण मानवः । मुक्तिगामी निरातङ्कः कृष्णस्यानुचरो भवेत् । सुगन्धितुलसीपत्रैः प्रतिमायाः समन्ततः । निश्छिद्रमाचरेद्यस्तु सोऽनन्तफलमाप्नुयात् इति ॥ धर्मसारे – सालग्रामशिलामूर्ध्नि तुलसीपत्रपातनम् । कर्मनिर्मूलनायालमेकादश्यामभोजनम् ॥ न विप्रसदृशं पात्रं न दानं सुरभीसमम् । गङ्गाया न समं तीर्थं न पत्रं तुलसीसमम् इति ॥

புலஸ்த்யர்:- புஷ்பஜாதிகள் எல்லாவற்றிலும், ஸ்வர்ணத்தால் செய்த புஷ்பம் சிறந்தது. ஸ்வல்ப ஸ்வர்ணத்தைக் கொடுத்தாலும் இந்த்ரனின் பாதி ஆஸனத்தை அடைவான். மௌத்கல்யர்:- மனிதன் பில்வ பத்ரங்களால் ஒரு முறை கோவிந்தனை அர்ச்சித்தாலும், முக்தியை அடைந்து துக்கமற்றவனாய் விஷ்ணுவுக்கு தாஸனாகிறான். நல்ல வாஸனையுள்ள துளஸீ பத்ரங்களால் விஷ்ணு பிம்பத்தின் நான்கு புறத்திலும் இவைவெவெளியில்லாமல் அர்ச்சிப்பவன் முடிவில்லாத பலனை அடைவான். தர்மஸாரத்தில்:- ஸாளக்ராம சிலையின் சிரஸ்ஸில் துளஸியின் இலையை ஸமர்ப்பிப்பதும், ஏகாதசியில் உபவாஸமும், கர்மங்களை வேருடனகற்றப் போதுமானது. ப்ராம்ஹணனுக்குச் சமமான தான பாத்ரம் (தானத்திற்குரியவன்) இல்லை. கோதானத்திற்குச் சமமான தானமில்லை. கங்கைக்குச் சமமான தீர்த்தமில்லை. துளஸிக்குச் சமமான இலையுமில்லை.

चन्द्रिकायाम् – दश दत्वा सुवर्णानि यत्फलं लभते नरः । तत्फलं लभते विष्णोः द्रोणपुष्पप्रदानतः ॥ बिल्वपत्रसहस्राद्धि वकुलं पुष्पमुत्तमम् । तस्माद्बकुलपुष्पाद्धि नन्द्यावर्तं विशिष्यते ॥ नन्द्यावर्तसहस्राद्धि करवीरं विशिष्यते । सर्वैर्मनोरमैः पुष्पैः जातिपुष्पं विशिष्यते ॥ वर्णानां तु यथा विप्रस्तीर्थानां जाह्नवी यथा । सुराणां च

यथा विष्णुः कल्हारकुसुमं तथा ॥ सितरक्तैर्महापुण्यैः कुसुमैः करवीरजैः । अर्चयित्वाऽच्युतं याति यत्रास्ते गरुडध्वजः ॥ गन्धाढ्यैर्विमलै रम्यैः कुसुमैः कुन्दकोद्भवैः । भक्त्याऽभ्यर्च्य हृषीकेशं कुसुमैः केतकोद्भवैः ॥ शुभ्राशुभ्रैर्महागन्धैः कुसुमैः पङ्कजोद्भवैः । अधोक्षजं समभ्यर्च्य नरो याति हरेः पदम् ॥ अभ्यर्च्य केशवं पुष्पैः किंशुकैः सुमनोहरैः । समभ्यर्च्य हृषीकेशं जन्मदुःखाद्विमुच्यते ॥ भक्त्या दत्तं फलं पत्रं पुष्पं दूर्वाङ्कुरं जलम् । अचिरात् प्रतिगृह्णाति भक्तिग्राह्यो हि केशवः ॥ तुलसी कृष्णगौराख्या तयाऽभ्यर्च्य जनार्दनम् । नरो याति तनुं त्यक्त्वा वैष्णवीं शाश्वतीं गतिम् ॥ एवं शुभैः सदा पुष्पैः पूज्यः सर्वैर्जनार्दनः । निषिद्धैर्दुःखदैर्देवं नार्चयेत कदाचन । न शुष्कैः पूजयेद्देवं कुसुमैर्न महीगतैः । न विशीर्णदलैः शिष्टैः नाशुभैर्नाविकासिभिः इति ॥

சந்த்ரிகையில்:- பத்து ஸுவர்ணங்களை (80-குன்றிமணி இடை ஒரு ஸுவர்ணம்) தானம் செய்தால் எந்தப் பலனோ அந்தப் பலனை விஷ்ணுவுக்குத் தும்பைப்பூவை ஸமர்ப்பிப்பதால் அடைவான். ஆயிரம் பில்வ தளத்தைவிட ஒரு வகுள (மகிழம்) புஷ்பம் சிறந்தது. ஆயிரம் வகுள புஷ்பத்தைவிட ஒரு நந்த்யாவர்த்தம் சிறந்தது. ஆயிரம் நந்த்யாவர்த்த புஷ்பத்தைவிட ஒரு அரளிப் புஷ்பம் சிறந்தது. மனதிற்கினிதான எல்லா புஷ்பங்களிலும் ஜாதி புஷ்பம் சிறந்தது. வர்ணங்களுள் ப்ராம்ஹணன் போலும், தீர்த்தங்களுள் கங்கை போலும், தேவர்களுள் விஷ்ணு போலும், புஷ்பங்களுள் செங்கழுனீர் புஷ்பம் சிறந்ததாகும். வெண்மை, சிவப்பு நிறமுள்ள அரளிப் புஷ்பங்களால் அச்யுதனை அர்சித்தால், கருடத்வஜனிருக்குமிடம் செல்லுகிறான். வாஸனையுள்ளதும், அழகியதுமாகிய குந்த புஷ்பங்களாலும், தாழையின் பூக்களாலும், வெளுப்பு, கறுப்பு நிறமுள்ள தாமரைப் பூக்களாலும், அதோக்ஷஜனை அர்சித்தால்

ஹரியின் உலகத்தை அடைவான். அழகிய புரசின் புஷ்பங்களால் விஷ்ணுவைப் பூஜித்தால், மனிதன் பிறப்பு துக்கத்தை அடையான். பக்தியுடன் கொடுக்கப்பட்டது, பழம், இலை, புஷ்பம், அறுகு, ஜலம் எதுவாயினும், அதைக் கேசவன் உடனே பெற்றுக் கொள்ளுகிறான். அவன் பக்தியினால் வசப்படுத்தக்கூடியவனல்லவா? கருந்துளஸி, வெண் துளஸியென இருவகைத் துளஸியால் ஜனார்த்தனனை அர்ச்சித்தால், மனிதன் உடலை விட்டு சாச்வதமான விஷ்ணுலோகத்தை அடைவான். எவ்விதமான சுபமான எல்லாப் புஷ்பங்களாலும் விஷ்ணுவைப் பூஜிக்கலாம். நிஷித்தமாகியதும் துக்கத்தைக் கொடுப்பதுமான புஷ்பங்களால் ஒருபொழுதும் தேவனை அர்ச்சிக்கக் கூடாது. உலர்ந்ததும், தரையில் விழுந்ததும் இதழ்கள் சிதறியதும், மற்றொரு தேவதையைப் பூஜித்து மீதியுள்ளதும், அசுபங்களும், மலராதவைகளுமான புஷ்பங்களால் பூஜிக்கக் கூடாது.

रत्नावल्याम् – मुकुलैर्नार्चयेद्देवं चम्पकैर्जलजैर्विना । न कण्टकिभवं पुष्पं दद्याच्छुक्लमृते सदा ।। येऽर्कपुष्पैस्त्रिलोकेश मर्चयन्ति जनार्दनम् । तेभ्यः क्रुद्धोऽक्षयं दुःखं क्रोधाद्विष्णुः प्रयच्छति ।। उन्मत्तकेन ये मूढाः पूजयन्ति त्रिविक्रमम् । उन्मादं दारुणं तेषां ददाति गरुडध्वजः इति ।। विष्णुः – न नक्तं गृहीतोदकेन देवतार्चनं कुर्याच्चन्दन कुङ्कुमकर्पूरमृगमदजातीफलवर्जमनुलेपनं न दद्यान्मणिसुवर्णमुक्ताफलविद्रुमरजतवर्जं प्रतिरूपकमलङ्कारं न कुर्यान्न चासौ नीलं रक्तं नागन्धि पुष्पं नोग्रगन्धि न कण्टकिजं दद्यात्, कण्टकिजमपि शुक्लं सुगन्धि रक्तमपि कुङ्कुमजं दद्यात् इति ।।

ரத்னாவளியில்:- சம்பகம், தாமரை தவிர்த்து, மற்ற மொக்குகளால் தேவனைப் பூஜிக்கக் கூடாது. முள்ளுள்ள மரத்திலுண்டாகும் புஷ்பத்தை ஸமர்ப்பிக்கக் கூடாது. அது வெண்ணிறமானால் ஸமர்ப்பிக்கலாம். மூன்று லக்குக்குமீசனான விஷ்ணுவை எருக்கின் பூக்களால் எவர்

பூஜிக்கின்றனரோ, அவர்களுக்குக் கோபத்தால் அக்ஷயமான துக்கத்தை விஷ்ணு கொடுக்கிறூர். எவர்கள் ஊமத்தையின் பூக்களால் த்ரிவிக்ரமனைப் பூஜிக்கின்றனரோ, அவர்களுக்குப் பயங்கரமான உன்மாத தோஷத்தைக் கருடத்வஜன் கொடுக்கிறுன். விஷ்ணு:- இரவில் க்ரஹித்து வைக்கப்பட்ட ஜலத்திஞல் தேவபூஜையைச் செய்யக் கூடாது. சந்தனம், குங்குமப்பூ, கர்ப்பூரம், கஸ்தூரீ, ஜாதிக்காய் இவைகளைத் தவிர்த்து மற்ற அனுலேபனத்தை, (பூசிக்கொள்ளும் வஸ்து) கொடுக்கக் கூடாது. ரத்னம், தங்கம், முத்து, பவழம், வெள்ளி இவை தவிர்த்து மற்ற ஆபரணங்களைக் கொடுக்கக் கூடாது. கறுப்பு, சிவப்பு நிறமுள்ளதும், வாஸனை இல்லாததும் வெறுப்பான வாஸனையுள்ளதும், முள்மரத்தில் உண்டாகியதுமான புஷ்பத்தை ஸமர்ப்பிக்கக் கூடாது. முள்மரத்தினுடையதாயினும், வெண்ணிறமாயும், நல்ல வாஸனையுள்ளதுமாயின் ஸமர்ப்பிக்கலாம். சிவப்பாயினும் குங்குமப்பூவை ஸமர்ப்பிக்கலாம்.

सारसमुच्चये – गिरिकर्णिकया विष्णुं येऽर्चयन्त्यबुधा नराः । तेषां कुलक्षयं घोरं कुरुते मधुसूदनः ।। गुल्गुलुं गन्धकं चैव देवदारुं सरूषकम् । सर्जारसं जातिफलं धूपयेद्गोघृतं हरेः ।। न धूपयेत् जीवजातैर्नाहविष्यं निवेदयेत् । घृततैलैर्विना किञ्चिद्दीपार्थं न समाहरेत् ।। प्रज्वाल्य देवदेवस्य कर्पूरेण तु दीपकम् । अश्वमेधमवाप्नोति कुलं चैव समुद्धरेत् इति ।।

ஸாரஸமுச்சயத்தில்:- அறியாத எந்த மனிதர் விஷ்ணுக்ராந்தையிஞல் விஷ்ணுவைப் பூஜிக்கின்றனரோ, அவர்கட்கு, கோரமான குல நாசத்தைக் கொடுக்கிறுன் மதுஸூதனன். குங்கிலியம், கந்தகம், தேவதாரு, ஸருஷகம், ஸர்ஜரஸம், ஜாதிக்காய், பசுவின் நெய் இவைகளால் விஷ்ணுவுக்குத் தூபம் ஸமர்ப்பிக்க வேண்டும். ப்ராணிகளிடம் உண்டாகிய வஸ்துக்களால் தூபம் கூடாது. ஹவிஸ்ஸுக்கு அர்ஹமல்லாததை

நிவேதனம் செய்யக் கூடாது. நெய், எண்ணெய் தவிர மற்றதைத் தீபத்திற்காக உபயோகிக்கக் கூடாது. தேவதேவனை விஷ்ணுவுக்குக் கற்பூரத்தால் தீபத்தை ஸமர்ப்பித்தால் அச்வமேத பலத்தை அடைவான். தன் குலத்தையும் எழும்பச் செய்வான்.

संवर्तः – देवागारे द्विजानां च दीपं दत्वा चतुष्पथे । मेधावी ज्ञानसंपन्नश्चक्षुष्मान् जायते नरः इति ।। पाद्मे – नैवेद्यपात्रं वक्ष्यामि केशवाय महात्मने । हैरण्यं राजतं कांस्यं ताम्रं मृन्मयमेव वा ।। पालाशं पद्मपत्रं वा पात्रं विष्णोरतिप्रियम् ।। हविः शाल्योदनं दिव्य माज्ययुक्तं सशर्करम् । नैवेद्यं देवदेवाय यावकं पायसं तथा ।। संस्कृतं चान्नमाज्याढ्यं दधिक्षीरमधूनि च । फलमूल्यव्यञ्जनानि मोदकं च निवेदयेत् । अर्घ्यमाचमनं चैव हविस्ताम्बूलमेव च । दक्षिणे देवदेवस्य हस्ते दद्याद्विचक्षणः । हविर्दानं त्रिकालं तु उत्तमोत्तममुच्यते । द्वयोश्च मध्यमं प्रोक्तं एककालेऽधमं हविः ।

ஸம்வர்த்தர்:- தேவாலயத்திலும், ப்ராம்ஹணர்கள் க்ருஹத்திலும், நாற்சந்தியிலும் தீபத்தைக் கொடுத்தால், மனிதன், மேதாவியும், ஞானமுடையவனும், நல்ல கண்ணுள்ளவனுமாக ஆகிறுன். **பாத்மத்தில்:-** மஹாத்மாவான கேசவனின் நைவேத்ய பாத்ரத்தைச் சொல்லுகிறேன். பொன், வெள்ளி, வெண்கலம், தாம்ரம், மண் இவைகளில் ஒன்றிஞல் செய்யப்பட்ட பாத்ரமாவது, புரசு, தாமரை இவைகளின் இலையாவது விஷ்ணுவுக்கு ப்ரியமான போஜன பாத்ரமாகும். நெல்லரிசியிஞல் பக்வமான அன்னம், நெய் சர்க்கரைகளுடன் கூடியது தேவனின் நிவேதனத்திற்கு உரியதாகும். அவ்விதம் யவையன்னம், பாயஸம், பால், தயிர் முதலியதுடன் சேர்க்கப்பட்டதும், நெய் மிகுந்துள்ளதுமான அன்னம், தனியே, தயிர், பால், தேன், பழம், வேர், வ்யஞ்ஜனம், மோதகம் இவைகளையும் நிவேதனம் செய்ய வேண்டும். அர்க்யம், ஆசமனம், ஹவிஸ், தாம்பூலம் இவைகளைத்

தேவனின் வலது கையில் அறிந்தவன் ஸமர்ப்பிக்க வேண்டும். மூன்று காலங்களிலும் நிவேதனம் செய்வது மிக உத்தமம், இரண்டு காலங்களில் செய்வது மத்யமம். ஒரு காலத்தில் செய்வது அதமமாம்.

रत्नावल्याम् – नैवेद्यस्य त्वलाभे तु फलानि तु निवेदयेत्। फलानामप्यलाभे तु तृणगुल्मौषधीरपि । औषधीनामलाभे तु तोयान्यपि निवेदयेत्। तदलाभे तु सर्वत्र मानसं प्रवरं स्मृतम् इति ।। व्यासः – गाण्डूषिकं जलं दद्यात् दद्यादाचमनं ततः। हस्तवासं सकर्पूरं मकुटं भूषणानि च ।। आदर्शयेत् तथाऽऽदर्शं कल्पयेच्छत्रचामरे। महानीराजनं श्रीमन्मङ्गलेशाय कल्पयेत्।। कर्पूरं तुलसीपत्रं ताम्बूलं च समर्पयेत् ।। गन्धकर्पूरसंयुक्तं ताम्बूलं यो निवेदयेत् । विष्णवे भक्तियुक्तः स विष्णुलोके महीयते ।। विष्णोर्विमानं यः कुर्यात् सकृद्भक्त्या प्रदक्षिणम्। अश्वमेधसहस्रस्य फलमाप्नोति मानवः ।। प्रणम्य दण्डवद्भूमौ नमस्कारेण योऽर्चयेत्। स यां गतिमवाप्नोति न तां क्रतुशतैरपि।। दोर्भ्यां पद्भ्यां च जानुभ्यां उरसा शिरसा दृशा। मनसा वचसा चेति प्रणामोऽष्टाङ्ग ईरितः ।। जानुभ्यां वै बाहुभ्यां शिरसा वचसा धिया। पञ्चाङ्गकः प्रणामः स्यात् पूजासु प्रवराविमौ इति ।।

ரத்னாவளியில்:- நிவேதனத்திற்கு ஹவிஸ் கிடைக்காவிடில் பழங்களை நிவேதிக்கலாம். பழங்களும் கிடைக்காவிடில் புல் புண்டு ஓஷதிகள் இவைகளையாவது நிவேதிக்கலாம், ஓஷதிகளும் கிடைக்காவிடில் ஜலத்தையாவது நிவேதிக்கலாம். அதுவும் கிடைக்காவிடில் எப்பொழுதும் மனதினால் கல்பிக்கப்பட்ட நைவேத்யம் சிறந்ததெனச் சொல்லப்பட்டுள்ளது. வ்யாஸர்:- கண்டூஷத்திற்காகவும் ஜலத்தை ஸமர்ப்பிக்க வேண்டும். பிறகு ஆசமனத்தையும் ஸமர்ப்பிக்க வேண்டும். பிறகு கைகளுக்கு வாஸனைதரும் வஸ்துவைக் கற்பூரத்துடனும், கிரீடம், ஆபரணங்கள்,

கண்ணாடி, குடை, சாமரம், மஹாநீராஜனம் இவைகளையும் மங்களேசனான பகவானுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும். கற்பூரம், துளஸீ, தாம்பூலம் இவைகளையும் ஸமர்ப்பிக்க வேண்டும். கந்தத்துடனும் கற்பூரத்துடனும் கூடிய தாம்பூலத்தைத் தேவனுக்குப் பக்தியுடன் நிவேதனம் செய்பவன் விஷ்ணுலோகத்தில் சிறப்பையடைகிறான். எவன் விஷ்ணுவின் விமானத்தைப் பக்தியுடன் ஒருமுறையாவது ப்ரதக்ஷிணம் செய்வானோ அவன் ஆயிரம் அச்வமேதங்களின் பலனையடைகிறான். பூமியில் கழிபோல் நமஸ்கரித்து அர்ச்சிப்பவன் அடையும் கதியை நூறுயாகங்களாலும் அடையமுடியாது. கைகள், கால்கள், முழங்கால்கள், மார்பு, தலை, கண், மனது, வாக்கு இவ்வெட்டு அங்கங்களாலும் செய்யப்படும் நமஸ்காரம் ஸாஷ்டாங்க நமஸ்காரம் எனப்பட்டது. முழங்கால், கைகள், தலை, வாக்கு, மனது இவ்வைந்துகளாலும் செய்யப்படும் நமஸ்காரம் பஞ்சாங்க நமஸ்காரம் எனப்பட்டது. இவ்விரண்டு நமஸ்காரங்களும் பூஜைகளிற் சிறந்ததாகும்.

चन्द्रिकायाम् – उरसा मनसा चैव शिरसा च कपोलयोः । पद्भ्यां कराभ्यां जानुभ्यां प्रणामोऽष्टाङ्ग उच्यते ॥ कूर्मवच्चतुरः पादान् शिरश्चाहृत्य पञ्चमम् । मनोबुद्ध्यभिमानेन पञ्चाङ्गः परिकीर्तितः ॥ स्तुवन् देवं नमस्कुर्यात् प्रसीद भगवन्निति ॥ एकहस्तप्रणामश्च एकं चापि प्रदक्षिणम् । अकाले दर्शनं विष्णोः हन्ति पुण्यं पुरातनम् ॥ एकोऽपि कृष्णस्य कृतः प्रणामो दशाश्वमेधावभृथेन तुल्यः । दशाश्वमेधी पुनरेति जन्म कृष्णप्रणामो न पुनर्भवाय ॥ शङ्खमध्ये स्थितं तोयं भ्रामितं केशवोपरि । अङ्गलग्नं मनुष्याणां ब्रह्महत्यायुतं दहेत् ॥ शङ्खस्थं प्रोक्षयेद्देहं पुत्रमित्रपरिग्रहम् । इति ॥

சந்த்ரிகையில்:- மார்பு, மனது, தலை, கன்னங்கள் (இரண்டு), கால்கள், கைகள், முழங்கால்கள் இவ்வெட்டு அங்கங்களாலும் செய்யப்படும் நமஸ்காரம் ஸாஷ்டாங்க

நமஸ்காரம். ஆமைபோல் இரண்டு கைகள், இரண்டு கால்கள், தலை இவைகளைப் பூமியில் சேர்த்து, மனம், புத்தி, அபிமானம் (பக்தி) இவைகளுடன் செய்யப்படும் நமஸ்காரம் பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும். ஓ பகவானே! அருளவேண்டும் என்று ஸ்துதிப்பவனாய் நமஸ்கரிக்க வேண்டும். ஒரு கையால் நமஸ்கரிப்பதும், ஒரு முறை ப்ரதக்ஷிணம் செய்வதும், அகாலத்தில் விஷ்ணுவைத் தர்சிப்பதும் முந்திய புண்யத்தைப் போக்கும். விஷ்ணுவை ஒரு முறை நமஸ்கரித்தாலும் அது பத்து அச்வமேதங்களின் அவப்ருதத்திற்குச் சமமாகும். பத்து அச்வமேதங்களின் அவப்ருதங்களை அனுஷ்டித்தவன் (அப்புண்யம் முடிந்த பிறகு) மறுபடி பிறப்பை அடைவான். க்ருஷ்ணனை நமஸ்கரித்தல் மறுபடி பிறப்பிற்கு ஆகாது. மோக்ஷத்திற்குக் காரணமாகின்றது. சங்கத்தின் நடுவிலுள்ளதும், கேசவனின் மேல் சுற்றப்பட்டதுமான ஜலம் மனிதரின் அங்கத்தைப் பற்றினால் பதினாயிரம் ப்ரம்ஹஹத்யா தோஷத்தைப் போக்கும். சங்கத்திலுள்ள ஜலத்தினால், தன் தேஹத்தையும், புத்ரன், மித்ரன், பார்யை இவர்களையும் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

व्यासः – देवदेव जगन्नाथ शङ्खचक्रगदाधर। देहि देव ममानुज्ञां भवत्तीर्थनिषेवणे । इत्यनुज्ञां ततो लब्ध्वा पिबेत्तीर्थमघापहम् ॥ अकालमृत्युहरणं सर्वव्याधिविनाशनम् । विष्णोः पादोदकं तीर्थं शिरसा धारयाम्यहम् । इति मन्त्रं समुच्चार्य सर्वदुष्टग्रहापहम् । तुलसीमिश्रितं तीर्थं पिबेन्मूर्ध्ना च धारयेत् । सालग्रामशिलातोयमपीत्वा यस्तु मस्तके। प्रक्षेपणं प्रकुर्वीत ब्रह्महा स निगद्यते ॥ विष्णोः पादोदकं पीतं कोटिहत्याघनाशनम् । तदेवाष्टगुणं पापं भूमौ बिन्दुनिपातनात् इति ॥

வ்யாஸர்:- ஓ தேவதேவ! ஜகந்நாத! சங்கசக்ரகதாதர! உமது தீர்த்தத்தைச் சேவிப்பதில் எனக்கு அனுக்ஞையளித்தருள வேண்டும் என்று ப்ரார்த்தித்து,

தேவனிடமிருந்து அனுக்ஞை பெற்று, தீர்த்தத்தைப் பானம் செய்ய வேண்டும். அகாலம்ருத்யுவை அபஹரிப்பதும், எல்லா வ்யாதிகளையுமகற்றுவதுமாகிய விஷ்ணு பாத தீர்த்தத்தைச் சிரத்தால் தரிக்கிறேன் என்ற மந்த்ரத்தை உச்சரித்து, ஸகல துஷ்டக்ரஹ தோஷங்களை யகற்றுவதான, துளஸியுடன் கூடிய தீர்த்தத்தைப் பருக வேண்டும். சிரத்தாலும் தரிக்க வேண்டும். எவன், ஸாளக்ராம சிலா தீர்த்தத்தைப் பானம் செய்யாமல் சிரத்தில் ப்ரோக்ஷித்துக் கொள்கிறானோ அவன் ப்ரம்ஹஹத்யை செய்தவன் எனப்படுகிறான். விஷ்ணுவின் பாதோதகம் பானம் செய்யப்பட்டால் கோடி ப்ரம்ஹஹத்யா தோஷத்தைப் போக்குவதாகும். அந்தத் தீர்த்தத்தின் ஒரு துளியைப் பூமியில் சிந்தினால் அது முன்சொல்லிய புண்யத்தை விட எட்டு மடங்கு பாபத்தைக் கொடுப்பதாகும்.

मार्कण्डेयः – आम्रेक्षुखण्डताम्बूलचर्वणे सोमपानके । विष्ण्वङ्घ्रितोयपाने च नाद्यन्ताचमनं स्मृतम् । विष्णुपादोद्भवं तीर्थं पीत्वा न क्षालयेत् करम् । क्षालयेद्यदि मोहेन पञ्चपातकमाप्नुयात् इति ॥ श्रुतिरपि – भगवान् पवित्रं भगवत्पादकं पवित्रं तत्पाने नाचमनं यथा हि सोमेषु इति ॥ चन्द्रिकायाम् – हृदि रूपं मुखे नाम नैवेद्यमुदरे हरेः । पादोदकं च पुष्पं च मस्तके यस्य सोऽच्युतः ॥ अग्निष्टोमसहस्रैस्तु वाजपेयशतैरपि । यत्फलं लभते भक्त्या विष्णोर्नैवेद्यभक्षणात् इति ॥

மார்க்கண்டேயர்:- மாங்கனி, கரும்புத்துண்டு, தாம்பூலம் இவைகளைப் பக்ஷிப்பதிலும், ஸோமபானத்திலும், விஷ்ணுபாத தீர்த்த பானத்திலும், முன்னும் பின்னும் ஆசமனம் வேண்டியதில்லை. விஷ்ணுபாத தீர்த்தத்தைப் பானம் செய்த பிறகு கையை அலம்பக்கக் கூடாது. அறியாமல் அலம்பினால் ஐந்து மஹா பாதகங்களை அடைவான். ச்ருதியும்:- பகவான் சுத்தன், அவனது பாதோதகம் சுத்தம், அந்தப் பாதோதகத்தைப் பானம் செய்வதில் ஆசமனம் இல்லை. ஸோமபானங்களில்

போல். சந்த்ரிகையில்:- எவனுடைய மனதில் ஹரியின் ரூபமும், வாயில் ஹரிநாமமும், வயிற்றில் ஹரி நைவேத்யமும், தலையில் ஹரிபாதோதகமும், ஹரிநிர்மால்ய புஷ்பமும் இருக்கின்றதோ அவன் அச்யுதனேயாவான். ஆயிரம் அக்னிஷ்டோமங்களாலும் நூறு வாஜபேயங்களாலும் எந்தப் பலத்தை அடைவானே அந்தப் பலத்தைப் பக்தியுடன் விஷ்ணு நைவேத்யத்தைப் பக்ஷிப்பதால் அடைவான்.

बह्वृचपरिशिष्टेऽपि – पवित्रं विष्णुनैवेद्यं सुरसिद्धर्षिभिः स्मृतम् । अन्यदेवस्य नैवेद्यं भुक्त्वा चान्द्रायणं चरेत् ।। ग्राह्यं हरेस्तु निर्माल्यं पत्रं पुष्पं फलं जलम् । सालग्रामशिलासङ्गात् सर्वं याति पवित्रताम् इति । व्यासः – नैवेद्यमन्नं तुलसीविमिश्रं विशेषतस्तीर्थजलेन सिक्तम् । योऽश्नाति नित्यं पुरतो मुरारेः प्राप्नोति यज्ञायुतकोटिपुण्यम् इति ।। पितामहः – नैवेद्यं तुलसीमिश्रं स्वयं भुञ्जीत वाग्यतः । गृही तस्मादयत्नेन स गच्छेद्वैष्णवं पदम् इति ।।

பஹ்வ்ருசபரிசிஷ்டத்திலும்:- விஷ்ணு நைவேத்ய அன்னம் பரிசுத்தமென, தேவர், ஸித்தர், ருஷிகள் இவர்கள் சொல்லியுள்ளனர். மற்றத் தேவதையின் நைவேத்யத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஹரியின் நிர்மால்யமான இலே, பூ, பழம், ஜலம் இவைகளை ஸ்வீகரிக்க வேண்டும். ஸாளக்ராம சிலேயின் சேர்க்கையால் எல்லா வஸ்துவும் சுத்தமாகின்றது. வ்யாஸர்:- துளஸியுடன் சேர்ந்ததும் விசேஷமாய் விஷ்ணு பாதோதகத்தால் நனேக்கப்பட்டதுமான விஷ்ணு நைவேத்யான்னத்தை விஷ்ணுவின் எதிரில் எவன் நித்யமும் புஜிக்கின்றுனோ அவன் பதினுயிரம் கோடி யாகங்கள் செய்த புண்யத்தை அடைகிறுன். பிதாமஹர்:- க்ருஹஸ்தன், துளஸியுடன் சேர்ந்த நைவேத்யான்னத்தை, மௌனியாய்தான் புஜிக்க வேண்டும். அதனுல் அவன் வேறு முயற்சியின்றி விஷ்ணுலோகத்தை அடைவான்.

श्रुतिरपि – तदस्य प्रियमभि पाथो अश्यां नरो यत्र देवयवो मदन्ति। उरुक्रमस्य स हि बन्धुरित्था विष्णोः पदे परमे मध्व उत्सः इति। अस्य विष्णोः प्रियं तत्पाथः - निवेदितं अन्नं अभ्यश्याम्। यत्र देवाराधकाः नराः हृष्यन्ति। इत्था - इत्थं वर्तमानः तस्य बन्धुः, मध्वे - मधुवद्भोग्ये, उत्सः - उत्सुकः इत्यर्थः ॥

ச்ருதியும்:- ததஸ்யப்ரிய + உத்ஸ: இதன்பொருள். 'அஸ்ய = இந்த விஷ்ணுவின், ப்ரியம் = ப்ரியமான, தத்பாத:= அந்த நிவேதிதமான அன்னத்தை, அப்யச்யாம் = புஜிப்பேன். யத்ர = எதில், தேவயவ:= தேவனை ஆராதிக்கின்ற, நர:- மனிதர்கள், மதந்தி= ஸந்தோஷிக்கின்றனரோ, இத்தா= இவ்விதமிருக்கும், உருக்ரமஸ்ய = த்ரிவிக்ரமனின், ஸ: பந்து:= அந்தப் பக்தன் விஷ்ணோ:= விஷ்ணுவின், மத்வே= தேன்போல் போக்யமான, பரமேபதே = சிறந்த வைகுண்டஸ்தானத்தில், உத்ஸ:= ஆசையுள்ளவனாய் இருக்கின்றான்' என்பதாம்.

स्मृतिरत्ने – शुभमिच्छन्नरः प्राज्ञः स्कन्धे मालां न धारयेत्। धारयेत्तां शिरस्येव सुगन्धां प्रियदर्शनाम्॥ ततः स्तुत्वा तु देवेश मपराधान् क्षमापयेत्॥ अपराधसहस्राणि क्रियन्तेऽहर्निशं मया। दासोऽयमिति मां मत्वा क्षमस्व परमेश्वर॥ भगवान् देव देवेश पुरुषोऽसि सनातन। क्षमस्व सर्वलोकेश भक्तस्य तु विशेषतः॥ ज्ञानादज्ञानतो वाऽपि यन्न्यूनादि कृतं मया। तत् सर्वं पूर्णमेवास्तु त्वत् प्रसादात् जनार्दन इति।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- அறிந்த மனிதன் சுபத்தை விரும்பினால், தோளில் மாலையைத் தரிக்கலாகாது. நல்ல வாஸனையுள்ளதும், அழகியதுமான மாலையைத் தலையிலேயே தரிக்க வேண்டும். பிறகு தேவேசனை ஸ்துதித்து, குற்றங்களைப் பொறுத்தருளுமென

வேண்டவேண்டும். ஓ பரமேசனே! பகலிலும், இரவிலும், பல்லாயிரம் குற்றங்களை நான் செய்கின்றேன். இவன் அடியான் என்று என்னை எண்ணிப் பொறுக்க வேணடும். ஓ பகவன்! தேவ! தேவேச! ஸர்வலோகேச! புராதன! நீர் புருஷனுகின்றீர். விசேஷபக்தனுகிய எனது குற்றங்களைப் பொறுத்தருளும். ஓ ஜனுர்த்தன! அறிந்தோ, அறியாமலோ நான் குறைவு முதலியது எதில் செய்தாலும் அதெல்லாம் உனதருளால் ஸம்பூர்ணமாகவே ஆகவேண்டும். (என்று ப்ரார்த்தன ப்ரகாரங்கள்.)

सङ्ग्रहे – साधु वाऽसाधु वा कर्म यद्यदाचरितं मया। तत् सर्वं भगवन् विष्णो गृहाणाराधनं मम ॥ इति कर्मार्पणं कृत्वा स्वात्मानं च निवेदयेत् इति ॥ योगयाज्ञवल्क्यः – एवं संपूज्य देवेशं क्षणं ध्यात्वा निरञ्जनम्। ततोऽवलोकयेदर्कं हंसः शुचिषदित्यृचा इति ॥ महाभारते – ब्राह्मणैः क्षत्रियैर्वैश्यैः शूद्रैश्च कृतलक्षणैः। अर्चनीयश्च सेव्यश्च भक्तियुक्तैः सदा हरिः इति ॥

ஸங்க்ரஹத்தில்:- ஓ பகவன்! விஷ்ணே! நன்ருகவோ, மாருகவோ, எந்தெந்தக் கர்மம் என்னுல் செய்யப்பட்டுள்ளதோ, என்னுடைய அக்கர்மம் முழுவதையும் பூஜையாய் க்ரஹித்தருளும் என்று கர்மத்தைப் பகவதர்ப்பிதமாக்கித் தன்னையும் பகவானுக்கு அர்ப்பிக்க வேண்டும். யோகயாக்ஞவல்க்யர்:- இவ்விதம் தேவேசனைப் பூஜித்து, நிர்மலனுன அவனை க்ஷணகாலம் த்யானித்துப் பிறகு, 'ஹம்ஸச்சுசிஷத்' என்ற ருக்கினுல் ஸூர்யனைப் பார்க்க வேண்டும். மஹாபாரதத்தில்:- பக்தர்களான ப்ராம்ஹணர், க்ஷத்ரியர், வைச்யர், அங்கனம் (முத்ரை) செய்து கொண்ட சூத்ரர்கள் இவர்கள் ஹரியை எப்பொழுதுமர்ச்சிக்க வேண்டும். ஸேவிக்கவும் வேண்டும்.

यत्तु स्मर्यते – जपस्तपस्तीर्थसेवा प्रव्रज्या मन्त्रसाधनम्। देवताराधनं चैव स्त्रीशूद्रपतनानि षट् इति, तद्वैदिकार्चनाभिप्रायम् ॥

वैदिकं ब्राह्मणानां स्याद्राज्ञां वैदिकतान्त्रिकम् । तान्त्रिकं वैश्यशूद्राणां स्त्रीणामपि च तान्त्रिकम् इति स्त्रीशूद्रयोस्तान्त्रिककत्वाभ्यनु ज्ञानात् । नारदः – स्त्रीशूद्रपूजितं लिङ्गं विष्णुं वाऽपि नमेत्तु यः । त्रिः सप्तकुलसंयुक्तो नरकं प्रतिपद्यते इति ॥ हारीतः – यो मोहादथवाऽलस्यादकृत्वा देवतार्चनम् ॥ भुङ्क्ते स याति नरकं तिर्यग्योनौ प्रजायते ॥ येऽर्चयन्ति सदा विष्णुं निष्कलेनान्तरात्मना । न ते भूयो हि जायन्ते श्वेतद्वीपनिवासिनः ॥ शङ्खचक्रगदाशार्ङ्गधरा विष्णुपराक्रमाः । पीताम्बरधराश्चैव गन्धमाल्योपशोभिताः इति ॥

'ஜபம், தபஸ், தீர்த்தஸேவை, ஸன்யாஸம், மந்த்ரஸாதனம், தேவதாராதனம் என்ற ஆறும் ஸ்த்ரீகளுக்கும், சூத்ரருக்கும் பாதித்ய ஹேதுக்களாகும்.' என்று ஸ்ம்ருதிவசனமுள்ளதேயெனில், அது வைதிக பூஜையை நிஷேதிப்பதில் தாத்பர்யமுள்ளதாம். (ஏனெனில்) 'ப்ராம்ஹணர்களுக்கு வைதிகார்ச்சனம் விஹிதம், க்ஷத்ரியர்களுக்கு வைதிக தாந்த்ரிகார்ச்சனம் விஹிதம், வைச்யர்களுக்கும், சூத்ரர்களுக்கும் தாந்த்ரிகார்ச்சனம் விஹிதம், ஸ்த்ரீகளுக்கும் தாந்த்ரிகம் விஹிதம்' என்று ஸ்த்ரீ சூத்ரர்களுக்குத் தாந்த்ரிக பூஜை விஹிதம் ஆகியிருப்பதால். **நாரதர்:-** ஸ்த்ரீகளாலும், சூத்ரர்களாலும் பூஜிக்கப்பட்ட லிங்கத்தையாவது, விஷ்ணுவையாவது எவன் நமஸ்கரிக்கின்றானோ அவன் இருபத்தொரு குலங்களுடன் நரகத்தை அடைகின்றான். **ஹாரீதர்:-** எவன் மோஹத்தாலோ, சோம்பலினாலோ தேவதாபூஜையைச் செய்யாமல் போஜனம் செய்கின்றானோ அவன் நரகத்தை அடைவான், பசு முதலியவையாய்ப் பிறப்பான். எவர் எப்பொழுதும் நிர்மலமான மனதுடன் விஷ்ணுவைப் பூஜிக்கின்றனரோ, அவர் மறுபடி பிறப்பதில்லை. அவர் ச்வேதத்வீபத்தில் வஸிப்பவராய், சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம் இவைகளைத் தரித்தவராய், விஷ்ணுவைப் போன்றவராய், பீதாம்பரம் அணிந்தவராய்,

சந்தனம், மாலை இவைகளால் சோபிப்பவராய் விளங்குகின்றனர்.

शाण्डिल्यः –न हुङ्कुर्यान्न वा जल्पेद्वशी मौन्यर्चयेद्धरिम् । यन्नोपपद्यते किञ्चित् ध्यायेत्तन्मनसैव तु ।। सम्पद्यते तु तत् सर्वं देवदेवस्य शार्ङ्गिणः इति ।। भागवते – गृहं श्मशानं तव बिम्बवर्जितं कथाविहीनाश्च गिरः शिवारुताः । श्वसञ्छवो दास्यविनाकृतं वपुर्वदन्ति हि त्वय्यनिवेदितं विषम् इति ।।

சாண்டில்யர்:- *ஹுங்காரம் செய்யக் கூடாது. பேசக் கூடாது. நிச்சலசித்தனாயும், மௌனியாயும் ஹரியை அர்ச்சிக்க வேண்டும். எந்த ஸாதனம் கிடைக்கவில்லையோ அதை மனதினால் த்யானித்துக் கொள்ள வேண்டும். அதனாலேயே தேவதேவனின் பூஜை பூர்ணமாய் விடுகிறது.* ***பாகவதத்தில்:-*** *ஓ பகவன்! உனது பிம்பமில்லாத வீடு சுடுகாடாம், உனது கதையில்லாத வார்த்தைகள் நரியின் சத்தமாம், உனக்குப் பணிவிடை செய்யாத உடல் மூச்சுள்ள பிணமாம், உனக்கு நிவேதனம் செய்யாத வஸ்து விஷமாம்.*

ऋग्वेदे श्रूयते – प्रवः पान्तगन्धसो धियायते महे शूराय विष्णवे चार्चत इति ।। यजुषि च – भवामित्रो नशेव्यो घृतासुतिः । विभूतद्युम्न एवया उ सप्रथाः । अधा ते विष्णो विदुषा चिद्दध्यः । स्तोमो यज्ञस्य राध्यो हविष्मतः ।। यः पूर्व्याय वेधसे नवीयसे । सुमज्जानये विष्णवे ददाशति । यो जातमस्य महतो महि ब्रवात् । सेदु श्रवोभिर्युज्यं चिदभ्यसत् ।। तमु स्तोतारः पूर्व्यं यथाविद ऋतस्य । गर्भꣳहविषा पिपर्तन । आस्यजानन्तो नामचिद्विवक्तन । बृहत्ते विष्णो सुमतिं भजामहे इति ।।

ருக்வேதத்தில்:- *'ப்ரவ:+ சார்ச்சத:' இதன் பொருள் - 'உங்களை ரக்ஷிப்பவனும், ஸ்தோத்ரங்களால் ஸ்துதிக்கப்படுகின்றவனும், மஹாசூரனுமாகிய*

விஷ்ணுவை, நீங்கள் அன்னம் முதலியதைப் பெறுவதற்காக ஆராதியுங்கள்' என்பதாம். **யஜுர்வேதத்திலும்:-** 'பவாமித்ரோ + ஸுமதிம்பஜாமஹே' என்று மூன்று ருக்குகள். முதல் ருக்கு - 'பவாமித்ரோ + ஹவிஷ்மத:' என்பது. இதன் பொருள் - 'ஹே விஷ்ணோ! நீர் மித்ரன் போல் ஸுகத்திற்கு ஹேதுவாகக் கடவீர். நீர் எவ்விதமுள்ளவரெனில், நெய்யைக் கொடுப்பவரும், அதிக தனமுடையவரும், செல்லவேண்டிய இடத்திற்குச் செல்கின்றவரும், கீர்த்தியை உடையவருமாய் இருக்கின்றீர். பிறகு யாகம் செய்யச் சக்தியற்ற கேவல வித்வானுலும், உமது ஸ்தோத்ரம் ஸம்பாதிக்கத் தகுந்தது. யாகம் செய்யச் சக்தியுள்ளவனுக்கு, யக்ஞத்திலுல் நீர் ஆராதனீயராகின்றீர், என்பதாம். இரண்டாவது ருக்கு - 'ய: பூர்வ்யாய + தப்யஸத்' என்று. இதன் பொருள் - 'எவன் விஷ்ணுவின் பொருட்டு ஹவிஸ்ஸைக் கொடுக்கின்றுனே. எவ்விதமானவரின் பொருட்டு? உலகத்திற்கு முந்தியவனுன ப்ரம்ஹாவாகியவனும், ராமக்ருஷ்ணுதி அவதாரங்களால் புதிதாயுள்ளவனும், லக்ஷ்மீபதியாயுமுள்ளவனின் பொருட்டு. மற்றுமெவனெருவன், இந்த மஹா விஷ்ணுவின் ராமக்ருஷ்ணுத்யவதார விசேஷத்தைப் பெருமையுடன் வர்ணிக்கின்றுனே, அவ்விரு விதமான மனிதனும், கேட்பதற்கு உசிதமான, ஹவிஸ்ஸைக் கொடுக்கும் மந்த்ரங்களாலும், ஸ்தோத்ரங்களாலும், எப்பொழுதும் தன்னுடனேயே கூடியிருந்தாலும் காமக்ரோதலோப ரூபமான சத்ருவை நான்கு புறத்திலும் தள்ளுகிறுன். மூன்றுவது ருக்கு - 'தமுஸ்தோதார:+ பஜாமஹே' என்பதாம். இதன் பொருள் - 'ஹே ஸ்துதிக்கும் மனிதர்களே! உலகத்திற்கு முந்தியே இருக்கும் அந்த விஷ்ணுவையே உள்ளபடி அறியுங்கள். அறிந்து, ஸத்யமான வேதத்திற்கு உள்ளிருப்பவனுன (வேத ப்ரதிபாத்யனுன) விஷ்ணுவை ஹவிஸ்ஸிலுல் பூர்ணனுகச்

செய்யுங்கள். அதில் சக்தி இல்லாவிடில், நீங்கள் இந்த விஷ்ணுவின் கேசவ நாராயண என்பது முதலான நாமங்களை, சாஸ்த்ராசார்ய முகமாய் அறிந்தவர்களாய் இடைவிடாது ஜபியுங்கள். ஹே விஷ்ணோ! உன்னுடைய அனுக்ரஹ புத்தியை இடைவிடாது ஸேவிக்கின்றோம்' என்பது. (வித்யாரண்ய பாஷ்யானு ஸாரமாய் எழுதப்பட்டுள்ளது.)

पुराणे – विष्णुपूजाविहीनस्य दत्तं चेष्टं हुतं श्रुतम् । तपश्च व्यर्थतां याति प्रेतालङ्कारवद्द्विज ।। मातृवत् परिरक्षन्तं सृष्टिसंहारकारकम् । यो नार्चयति वै विष्णुं सोऽक्षयं नरकं व्रजेत् इति ।।

புராணத்தில்:- விஷ்ணுபூஜை செய்யாதவனின் தானம், யாகம், ஹோமம், சாஸ்த்ரம், தபஸ் இவையெலாம் பிணத்தினலங்காரம் போல் வீணாகின்றது. தாயைப்போல் ரக்ஷிப்பவனும், ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் இவைகளைச் செய்பவனுமான விஷ்ணுவை எவன் பூஜிப்பதில்லையோ அவன் அழிவற்ற நரகத்தை அடைவான்.

धनुर्मासपूजा

धनुर्मासपूजा – मार्गशीर्षार्चनमुक्तं भास्करीये – अयनं दक्षिणं रात्रिरुत्तरं तु दिवा भवेत् । दैवतं तदहोरात्रं तत् त्रिंशन्मास उच्यते ।। तद्दिनस्य उषःकालं चापमासं विदुर्बुधाः । तस्मात् सर्वप्रयत्नेन चापमासे दिने दिने ।। उषःकाले तु संप्राप्ते बोधयित्वा जगत्पतिम् । समभ्यर्च्य भजेद्विष्णुं जनानां दोषशान्तये इति ।। ब्रह्माण्डे – चापं गते दिवा नाथे उत्थाप्य शयनाद्धरिम् । उषः काले तु सम्प्राप्ते अर्चयित्वा जनार्दनम् ।। उपचारैः षोडशभिः मुद्गान्नं च निवेदयेत् इति ।। आदित्यपुराणे – चापं गते ततः सूर्ये प्रत्यूषे स्नानमाचरेत् । अर्चयेच्च जगन्नाथं यावत्सूर्योदयात् पुरा ।। तः प्रभातसमये अर्घ्यं प्रक्षिप्य वै द्विजः । गायत्रीं च ततो जप्त्वा उपतिष्ठेत भास्करम् इति ।।

தனுர்மாஸ பூஜை

மார்கசீர்ஷத்தில் செய்யும் பூஜை சொல்லப் பட்டுள்ளது, பாஸ்கரீயத்தில்:- தக்ஷிணாயனம் ராத்ரி, உத்தராயணம் பகலாகும். அது தேவர்களின் ஒரு தினமாகும். இவ்விதம் முப்பது கொண்டது தேவர்களின் ஒரு மாதமெனப்படுகிறது. அந்தத்தினத்தின் உஷ:காலத்தைச் சாபமாஸமென அறிந்தவர் சொல்லுகின்றனர். ஆகையால் எவ்விதத்தாலாவது தனுர் மாஸத்தில் ஒவ்வொரு நாளிலும் உஷ:காலம் வந்தவுடன் ஜகன்னாதனை விஷ்ணுவை எழுந்தருளச் செய்து, பூஜித்து ஸேவிக்க வேண்டும், ஜனங்களின் தோஷங்களடங்குவ தற்காக. ப்ரம்ஹாண்டத்தில் :- ஸூர்யன் சாபராசியை அடைந்துள்ள பொழுது, உஷ:காலம் வந்தவுடன், ஹரியைச் சயனத்தினின்றும் எழுப்பி, பதினாறு உபசாரங்களால் பூஜித்து முத்கத்துடன் கூடிய அன்னத்தையும் நிவேதனம் செய்ய வேண்டும். ஆதித்ய புராணத்தில்:- ஸூர்யன் தனூராசியை அடைந்துள்ள பொழுது, விடியற்காலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். ஸூர்யோதயத்திற்கு முன்பே ஜகன்னாதனை யர்ச்சிக்க வேண்டும். பிறகு விடியற் காலத்தில் அர்க்யத்தை கொடுத்து, காயத்ரியையும் ஜபித்து, ஸூர்யோப ஸ்தானத்தைச் செய்ய வேண்டும்.

भागवतेऽपि – कोदण्डस्थे सवितरि प्रत्यूषे पूजनाद्धरेः । सहस्राब्दार्चनफलं दिनेनैकेन लभ्यते इति ।। शैवेऽपि – चापराशौ स्थिते सूर्ये उषः काले दिने दिने । अभिषेकं ततः कुर्या द्रौद्रमन्त्रेण मन्त्रवित् ।। अर्कपुष्पैश्च बिल्वैश्च पूजयित्वा महेश्वरम् । नैवेद्यं च ततः कुर्यात् लोकसंहारशान्तये इति ।। शाण्डिल्यः – एकादश्यां सिते पक्षे चापे तिष्ठति भास्करे । उत्सवं कारयेद्धीमान् वेदपारायणैः सह ।। सङ्क्रान्तिर्जन्मनक्षत्रं श्रवणं द्वादशी द्वयम् । पर्वद्वयं समुद्दिष्टं सविशेषक्रियाविधौ ।। चन्द्रसूर्योपरागे च प्रादुर्भावदिने हरेः । मासर्क्षेषु

च पुण्येषु विशेषाराधनं विदुः । दुर्निमित्तेषु दुःस्वप्ने सञ्जाते च महाभये। आगतेषु च भक्तेषु कुर्याद्वैशेषिक क्रियाम् इति ।।

பாகவதத்திலும்:- ஸூர்யன் தனூராசியிலிருக்கும் பொழுது, விடியற் காலத்தில் ஹரியைப் பூஜிப்பதால், ஒருநாள் பூஜையினுல் ஆயிரம் வருஷம் பூஜை செய்த பலம் அடையப்படும். **சைவத்திலும்:-** ஸூர்யன் சாபராசியிலிருக்கும் பொழுது, ப்ரதிதினம் உஷ:காலத்தில், மந்த்ரமறிந்தவன் ருத்ர ஸம்பந்தமுள்ள மந்த்ரங்களால் அபிஷேகம் செய்து, எருக்கின் புஷ்பங்களாலும், பில்வ பத்ரங்களாலும் மஹேச்வரனைப் பூஜித்து, நைவேத்யத்தையும், ஸமர்ப்பிக்க வேண்டும், உலகின் பீடைகள் தணிவதற்காக. **சாண்டில்யர்:-** ஸூர்யன் சாபராசியிலிருக்கும் பொழுது, சுக்லபக்ஷத்தில், ஏகாதசியில், பக்தன் வேதபாராயணங்களுடன் உத்ஸவத்தைச் செய்விக்க வேண்டும். ஸங்க்ரமணம், ஜன்ம நக்ஷத்ரம், ச்ரவணம், இரண்டு த்வாதசிகள், இரண்டு பர்வங்கள் இவை விசேஷாராதனத்திற்குக் காலங்களாம். சந்த்ர ஸூர்ய க்ரஹணங்கள், பகவானின் ஆவிர்ப்பாவதினம், புண்யமான மாஸ நக்ஷத்ரங்கள் இவைகளில் விசேஷாராதனம் செய்ய வேண்டுமென்கின்றனர். துஷ்ட நிமித்தங்கள், துஷ்ட ஸ்வப்னம், மஹாபயம் இவை நேர்ந்தாலும். பகவத் பக்தர்கள் வந்தாலும் விசேஷாராதனம் செய்ய வேண்டும்.

कूर्मपुराणे – न विष्ण्वाराधनात् पुण्यं विद्यते कर्म वैदिकम् । तस्मादनादिमध्यान्तं नित्यमाराधयेद्धरिम् ।। तद्विष्णोरिति मन्त्रेण सूक्तेन पुरुषेण तु । नैताभ्यां सदृशो मन्त्रो वेदेषूक्तश्चतुर्ष्वपि इति ।।

கூர்ம புராணத்தில்:- விஷ்ணுவின் ஆராதனத்தைவிடப் புண்யமான வைதிக கர்மமொன்று மில்லை. ஆகையால், ஆதி மத்யம் அந்த மற்று நித்யனுன ஹரியை, 'தத்விஷ்ணோ:' என்ற மந்த்ரத்தாலும், புருஷஸூக்தத்தாலும் ஆராதிக்க வேண்டும்.

இவ்விரண்டிற்கும் ஸமமான மந்த்ரம், நான்கு வேதங்களிலும் சொல்லப்படவில்லை.

शिवपूजा

शिवपूजाऽपि तत्रोक्ता — अथवा देवमीशानं भगवन्तं सनातनम् । आराधयेत् महादेवं भावपूतो महेश्वरम् ॥ मन्त्रेण रुद्रगायत्र्या प्रणवेनाथवा पुनः । ईशानेनाथवा रुद्रैः त्र्यम्बकेन समाहितः ॥ पुष्पैः पत्रैरथाद्भिर्वा चन्दनाद्यैर्महेश्वरम् । तथोन्नमः शिवायेति मन्त्रेणानेन वा यजेत् ॥ नमस्कुर्यान्महादेव मृतं सत्यमितीश्वरम् । निवेदयीत चात्मानं यो ब्रह्माणमितीश्वरम् ॥ प्रदक्षिणं द्विजः कुर्यात् पञ्च ब्रह्माणि वा जपेत् ॥ ध्यायीत देवमीशानं व्योममध्यगतं शिवम् इति ॥

சிவபூஜை

சிவபூஜையும் அங்கே சொல்லப்பட்டுள்ளது, அல்லது, தேவனும், ஈசனும், பகவானும், ஸநாதனனும், மஹாதேவனுமான மஹேச்வரனைச் சுத்தசித்தனாய் ஆராதிக்க வேண்டும். ருத்ர காயத்ரியாலாவது, ப்ரணவத்தினாலாவது, ஈசான மந்த்ரத்தினாலாவது, ருத்ரங்களாலாவது, த்ர்யம்பக மந்த்ரத்தினாலாவது, புஷ்பங்கள், பத்ரங்கள், ஜலங்கள், சந்தனம் முதலியவை இவைகளால் அர்ச்சிக்கலாம். ஓம் நமச்சிவாய என்ற மந்த்ரத்தினாலாவது பூஜிக்கலாம். 'ருதம்ஸத்யம்' என்ற மந்த்ரத்தால் நமஸ்கரிக்க வேண்டும். 'யோப்ரம்ஹாணம்' என்ற மந்த்ரத்தால் தன்னை ஸமர்ப்பிக்க வேண்டும். ப்ரதக்ஷிணமும் செய்ய வேண்டும். பஞ்ச ப்ரம்ஹ மந்த்ரங்களையாவது ஜபிக்க வேண்டும். ஆகாச மத்யத்தில் விளங்கும் ஈசனான சிவனை த்யானிக்க வேண்டும்.

बोधायनोऽपि – अथातो महादेवस्याहरहः परिचर्याविधिं व्याख्यास्यामः, स्नात्वा शुचिः शुचौ समे देशे गोमयेनोपलिप्य

प्रतिकृतिं कृत्वाऽक्षतपुष्पैर्यथाकाममर्चयेत् सह पुष्पोदकेन महादेवमावाहयेत् । ओं भूः महादेवमावाहयामि, ओं भुवः महादेवमावाहयामि, ओं सुवः महादेवमावाहयामि, ओं भूर्भुवः सुवः महादेवमावाहयामीत्यावाह्यायातु तु भगवान् महादेव इत्यथ स्वागतेनाभिनन्दति स्वागतं भगवते महादेवाय एतत् स्वासनं क्लृप्तमास्यतां भगवान् महादेव इत्यत्र कूर्चं ददाति भगवतोऽयं कूर्चो दर्भमयस्त्रिवृद्धरितः सुवर्णस्तं जुषस्वेत्यत्र स्थानानि कल्पयत्य ग्रतो ब्रह्मणे कल्पयामि विष्णवे कल्पयामि। दक्षिणतः स्कन्दाय कल्पयामि विनायकाय कल्पयामि। पश्चिमतः शूलाय कल्पयामि महाकालाय कल्पयामि। उत्तरत उग्राय कल्पयामि नन्दिकेश्वराय कल्पयामि इति। अथ सावित्र्या पात्रमभिमन्त्र्य प्रक्षाल्य तिरः पवित्रमप आनीय सह पवित्रेणादित्यं दर्शयेत् आमित्यातमितो स्त्वरितरुद्रेण पाद्यं दद्यात्। प्रणवेनार्घ्यमथ व्याहृतिभिर्निर्माल्यं, व्यपोह्य उत्तरतश्चण्डेशाय नम इत्यथैनं स्नापयत्यापोहिष्ठा मयोभुव इति तिसृभिर्हिरण्यवर्णाः शुचयः पावका इति पवमानः सुवर्जन इत्येतेन वानुवाकेन स्नापयित्वाद्भि-स्तर्पयति । भवं देवं तर्पयामि । शर्वं देवं तर्पयामि । ईशानं देवं तर्पयामि। पशुपतिं देवं तर्पयामि । रुद्रं देवं तर्पयामि । उग्रं देवं तर्पयामि। भीमं देवं तर्पयामि । महान्तं देवं तर्पयामीति तर्पयित्वाऽथैतानि वस्त्रयज्ञोपवीताचमनीयानि उदकेन व्याहृतिभिर्दत्वा व्याहृतिभिः प्रदक्षिणमुदकं परिषिच्य नमस्ते रुद्र मन्यव इति गन्धं दद्यात्। सहस्राणि सहस्रश इति पुष्पाणि दद्यात्। ईशानं त्वा भुवनानामभिश्रियमित्यक्षतं दद्यात्, सावित्र्या धूप मुद्दीप्य स्वेति दीपं, देवस्य त्वा सवितुः प्रसव इति भगवते महादेवाय जुष्टं चरुं निवेदयामीति नैवेद्यं, अथाष्टभिर्नामधेयैरष्टौ पुष्पाणि दद्यात्। भवाय देवाय नमः। शर्वाय देवाय नमः। ईशानाय देवाय नमः। पशुपतये

देवाय नमः । रुद्राय देवाय नमः । उग्राय देवाय नमः । भीमाय देवाय नमः । महते देवाय नमः । ब्रह्मणे नमः । विष्णवे नमः । स्कन्दाय नमः । विनायकाय नमः । शूलाय नमः । महाकालाय नमः । उग्राय नमः नन्दिकेश्वराय नमः । इति । चरुशेषेणाष्टभिर्नामधेयै रष्टाहुतीर्जुहोति भवाय देवाय स्वाहेत्यादिभिर्हुत्वा शिष्टैर्माल्यैर्ब्राह्मणानलङ्कृत्याथैन-मृग्यजुः सामभिः स्तौति । सहस्राणि सहस्रश इत्यनुवाकं जपित्वाऽन्यांश्च रौद्रमन्त्रान् यथाशक्तीत्येके । ओं भूर्भुवः सुवर्महरों भगवते महादेवाय चरुमुद्वासयामीत्युद्वास्य, उद्वासनकाले ओं भूर्महादेवमुद्वासयामीत्यादिभिरुद्वास्य, 'प्रयातु भगवानीशः सर्वलोकनमस्कृतः । अनेन हविषा तृप्तः पुनरागमनाय च ।। पुनः सन्दर्शनाय च इति प्रतिमास्थानेष्वावाहनोद्वासनवर्जं समानं, महत्स्वस्त्यानमित्याचक्षते महत्स्वस्त्ययनमित्यह भगवान् बोधायनः इति ।

போதாயனரும்:- இனி மஹாதேவனின் நித்ய பூஜாவிதியைச் சொல்லுகின்றோம் - ஸ்நானம் செய்து, சுத்தனாய், ஸமமான சுத்த ஸ்தலத்தில் கோமயத்தால் மெழுகி, பிம்பத்தை ஸ்தாபித்து, கிடைத்த மட்டில் அக்ஷத புஷ்பங்களால் அர்ச்சிக்க வேண்டும். புஷ்பம் ஜலம் இவைகளால் மஹாதேவனை ஆவாஹனம் செய்து, ஸ்வாகதம் செய்து, கூர்ச்சதானம், ஸ்தானகல்ப்பனம், பாத்யம், அர்க்யம், ஸ்நானம், தர்ப்பணம், வஸ்த்ரம், உபவீதம், கந்தம், புஷ்பம், அக்ஷதம், தூபம், தீபம், நைவேத்யம், அஷ்ட புஷ்பங்கள், இவைகளை ஸமர்ப்பித்து, ஹோமம் செய்து, ப்ராம்ஹண பூஜை செய்து, ருக்யஜு: ஸாம மந்த்ரங்களால் ஸ்துதித்து, 'ஸஹஸ்ராணி' என்ற அனுவாகத்தை ஜபித்து, யதாசக்தி மற்ற ருத்ர தேவதாக மந்த்ரங்களை ஜபித்து உத்வாஸனம் செய்ய வேண்டும். ப்ரதிமைகளில் ஆவாஹனமும் உத்வாஸனமுமில்லை. இது மஹாமங்களப்ரதமென்கிறார்கள் என்றார் போதாயனர்.

(இந்தப் பூஜாவிதியில் மந்த்ரங்கள் மூலத்தில் இருப்பதால் இங்கு எழுதப்படவில்லை.)

शिवपूजाप्रशंसा।

शिवार्चनं प्रशंसति नन्दिकेश्वरः – यः प्रयच्छेद्गवां लक्षं दोग्ध्रीणां वेदपारगे। एकाहमर्चयेत् लिङ्गं तस्य पुण्यं ततोऽधिकम्।। सकृत् पूजयते यस्तु भगवन्तमुमापतिम्। तस्याश्वमेधावधिकं फलं भवति भूसुराः इति। चन्द्रिकायाम् – लिङ्गस्य दर्शनं पुण्यं दर्शनात् स्पर्शनं परम्। स्पर्शनादर्चनं श्रेष्ठं अर्चनाद्ध्यानवन्दने।। मासे मासे तु योऽश्नीयाद्यावज्जीवं द्विजोत्तमः। यस्त्वर्चयेत् सकृल्लिङ्गं सममेतन्न संशयः इति।।

சிவபூஜா ப்ரசம்ஸை

*சிவபூஜையை ப்ரசம்ஸிக்கிறார், **நந்திகேச்வரர்:**- எவன் நன்றாய்க் கறக்கும் லக்ஷம் பசுக்களை வேதங்கள் முழுவதும் கற்ற ப்ராம்ஹணனுக்குத் தானம் செய்கின்றானோ அவனின் புண்யத்தைவிட, சிவலிங்கத்தை ஒரு நாள் அர்ச்சிப்பவனின் புண்யம் அதிகமாகும். ஓ வேதியரே! எவன் உமாபதியை ஒரு முறை பூஜிக்கின்றானோ அவனுக்கு அச்வமேதத்தைவிட அதிகமான பலம் உண்டாகும். **சந்த்ரிகையில்:**- சிவலிங்கத்தின் தர்சனம் புண்யமாம். அதைவிடச் சிவலிங்கத்தை ஸ்பர்சிப்பது புண்யமாம். அதைவிட அர்ச்சனம் புண்யமாம். அதைவிட த்யானமும், நமஸ்காரமும் புண்யமாம். ஒரு மாதத்திற்கொருமுறை புஜித்து ஜீவனுள்ளவரையில் நியமமுடனிருப்பதும், ஒரு முறை சிவலிங்கத்தைப் பூஜிப்பதும் ஸமமாகும். ஸம்சயமில்லை.*

स्मृतिरत्ने –अयुतं यो गवां दद्यात् दोग्ध्रीणां वेदपारगे। वस्त्रहेमादियुक्तानां क्षीरस्नानस्य तत् फलम्।। दध्ना यः स्नापयेत् लिङ्गं

कृष्णाष्टम्यामुपोषितः । कुलसप्तकमुद्धृत्य शिवलोके महीयते ।। दध्ना तु स्नापयेल्लिङ्गं सकृत् भक्त्या तु यो नरः । पापकञ्चुकमुत्सृज्य ब्रह्मलोके महीयते ।। कल्पकोटिसहस्रैस्तु यत् पापं समुपार्जितम् । घृतस्नानेन तत् सर्वं दहत्यग्निरिवेन्धनम् ।। नैरन्तर्येण यो मासं घृतस्नानं समाचरेत् । त्रिसप्ततिकुलोपेतो लभते पदमैश्वरम् ।। मधुना स्नापयित्वा तु सकृत् भक्त्याऽर्चयेद्विजः । पापकञ्चुकमुत्सृज्य वह्निलोके महीयते ।। स्नानमिक्षुरसेनापि यो लिङ्गे सकृदाचरेत् । लभेद्वैद्याधरं लोकं सर्वकामसमन्वितम् ।। पयोदधिघृतक्षौद्रशर्कराद्यैरनुक्रमात् । ईशादिमन्त्रितैः स्नाप्य शिवं मुक्तिमवाप्नुयात् ।।कपिलापञ्चगव्येन विधिना सकृदाचरेत् । स्नानं शतगुणं ज्ञेयमितरेभ्यो न संशयः ।। यः पुमांस्तिलतैलेन करयन्त्रोद्भवेन च । शिवाभिषेकं कुरुते स शैवं पदमाप्नुयात् ।। स्नानं पलशतं ज्ञेयमभ्यङ्गः पञ्चविंशतिः । पलानां च सहस्रं तु महास्नानं प्रकीर्तितम् ।। वस्त्रपूतेन तोयेन यो लिङ्गं स्नापयेत् सकृत् । सर्वकामसुतृप्तात्मा शिवलोकमवाप्नुयात् ।। गन्धचन्दनतोयेन स्नापयेत् सकृदीश्वरम् । गन्धर्वलोकमाप्नोति स गन्धर्वैश्च पूज्यते ।। कुशोदकेन यो लिङ्गं सकृत् स्नापयते नरः । काञ्चनेन विमानेन ब्रह्मलोके महीयते इति ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- எவன், நன்ருய்க் கறக்கும் பதிஞயிரம் பசுக்களை வஸ்த்ரம், பொன் முதலியதுடன் கூடியதாய் வேதம் முழுவதும் கற்றவனுக்குத் தானம் செய்கின்ருனோ, அவனின் புண்யம், சிவனுக்கு க்ஷீரஸ்நானம் செய்விப்பதால் உண்டாகும். க்ருஷ்ணபக்ஷாஷ்டமியில் உபவாஸத்துடனிருந்து சிவலிங்கத்தைத் தயிரிஞல் அபிஷேகம் செய்பவன், ஏழு குலங்களை எழுப்பி, சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிருன். எவன் தயிரிஞல் ஒருமுறை சிவலிங்கத்தைப் பக்தியுடன் ஸ்நானம் செய்விக்கின்ருனோ, அவன் பாபத்தைத்

தொலைத்து ப்ரம்ஹ லோகத்தில் சிறப்புறுகிறான். ஆயிரம் கோடி கல்பங்களால் ஸம்பாதித்த பாபத்தையும், நெய்யினால் ஸ்நானம் செய்விப்பதால், அக்னி கட்டையை எரிப்பது போல் எரிக்கிறான். இடைவிடாது ஒரு மாதம் முழுவதும் நெய்யினால் ஸ்நானம் செய்விப்பவன் 210 - குலங்களுடன் கூடியவனாய் ஈச்வரபதத்தை அடைகிறான். ப்ராம்ஹணன் ஒரு தடவை தேனால் ஸ்நானம் செய்வித்து, பக்தியுடன் அர்ச்சித்தால், பாபகஞ்சுகத்தைக் கழற்றி அக்னிலோகத்தில் சிறப்புறுகிறான். கரும்பின் சாற்றினால் லிங்கத்திற்கு ஒருமுறை ஸ்நானம் செய்வித்தால் ஸகல காமங்களுடன் கூடிய வித்யாதரஸ்தானத்தை அடைவான். பால், தயிர், நெய், தேன், சர்க்கரை இவையால் முறையே ஈசானாதி மந்த்ரங்களால் சிவனை ஸ்நானம் செய்வித்தால் முக்தியை அடைவான். காராம்பசுவின் பஞ்சகவ்யத்தால் விதியுடன் ஒருமுறை ஸ்நானம் செய்விப்பது மற்றவைகளைவிட நூறு மடங்கு அதிகமாகும். ஸம்சயமில்லை. எவன், கையந்த்ரத்தினால் உண்டாகிய எள்ளெண்ணெயால் சிவனுக்கபிஷேகம் செய்கின்றானோ அவன் கைலாஸத்தை அடைகிறான். நூறு பலம் எண்ணெய்யினால் செய்வது ஸ்நானம் எனப்படும். 25-பலங்களால் செய்வது அப்யங்கமெனப்படும். ஆயிரம் பலங்களால் செய்வது மஹாஸ்நானம் எனப்படும். வஸ்த்ரத்தினால் சோதிக்கப்பட்ட ஜலத்தினால் சிவலிங்கத்தை ஒருமுறை எவன் ஸ்நானம் செய்விக்கின்றானோ அவன் ஸகல காமங்களையும் அடைந்து த்ருப்தனாய்ச் சிவலோகத்தை அடைவான். கந்த சந்தனத்துடன் கூடிய ஜலத்தினால் ஜகதீசனை எவன் ஒரு முறை ஸ்நானம் செய்விக்கின்றானோ அவன் கந்தர்வ லோகத்தை அடைகிறான். கந்தர்வர்களாலும் பூஜிக்கப்படுகிறான். குசத்துடன் கூடிய ஜலத்தினால் எவன் சிவலிங்கத்தை ஒரு முறை ஸ்நானம் செய்விக்கின்றானோ, அவன் ஸ்வர்ண விமானத்தினால் ப்ரம்ஹலோகம் சென்று அங்கே சிறப்பிக்கப்படுகிறான்.

रत्नावल्याम् – कर्पूरागरुतोयेन यो लिङ्गं स्नापयेत् सकृत्। स सर्वपापनिर्मुक्तः शिवसारूप्यमाप्नुयात्। हिमाम्भसा शिवं स्नाप्य कौबेरं पदमाप्नुयात्॥ शिवं प्राप्नोति संस्नाप्य शिवं कुङ्कुमवारिणा। फलतोयैः शिवं स्नाप्य शिवलोके स मोदते॥ वासांसि सुविचित्राणि सारवन्ति मृदूनि च। धूपितानि शिवे दद्याद्विकेशानि नवानि च॥ त्रिवृतं शुक्लचित्रं वा पद्मसूत्रादिनिर्मितम्। दत्वोपवीतं रुद्राय भवेद्वेदान्तपारगः॥ लिङ्गस्य लेपनं कुर्याद्यदि गन्धैः सुगन्धिभिः। वर्षकोटिशतं दिव्यं शिवलोके महीयते॥ पुष्पैररण्यसंभूतैः पत्रैर्वा गिरिसंभवैः। आत्मारामोद्भवैर्वाऽपि पुष्पैः सम्पूजयेच्छिवम्॥ केतकीमाधवीकुन्दचूतयूथिकजालकैः। शिवे शिरीषबन्धूकैः कुसुमानि विवर्जयेत्॥ यः साज्यगुग्गुलुं दग्ध्वा घृतदीपं प्रकाशयेत्। स यामीं यातनां हित्वा शिवलोके महीयते॥ यावन्तस्तण्डुलास्तस्मिन् नैवेद्ये परिसङ्ख्यया। तावद्युगसहस्राणि स्वर्गलोके महीयते॥ गुडखण्डघृतानां च दानाच्छतगुणं फलम्॥ आढकक्षीरसंयुक्त माढकार्धजलैर्युतम्॥ पायसं पाचितं कुर्याद्देवयोग्यमिदं शुभम् इति॥

ரத்னாவளியில்:- *கற்பூரம், அகில் இவைகளுடன் கூடிய ஜலத்தால் லிங்கத்தை ஒரு முறை எவன் ஸ்நானம் செய்விக்கின்றானோ அவன் ஸகல பாபங்களாலும் விடப்பட்டு, சிவனின் ஸாரூப்யத்தை அடைவான். பன்னீரினால் சிவனை ஸ்நானம் செய்வித்தால் குபேரனின் பதத்தை அடைவான். குங்குமப்பூவுடன் கூடிய ஜலத்தால் சிவனுக்கபிஷேகம் செய்தால் ஸம்பத்தை அடைவான். பழங்களின் ரஸங்களால் சிவாபிஷேகம் செய்தால் சிவலோகத்தில் ஸந்தோஷிப்பான். விசித்ரங்களாயும், ஸாரமுள்ளதாயும், மெதுவாயும், வாஸனையுள்ளதும், மயிரில்லாததும், புதியவையுமான வஸ்த்ரங்களைச் சிவனுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும். வெளுப்பு அல்லது சித்ர வர்ணமுள்ளதும் மூன்றாய் மடிக்கப்பட்டதும், தாமரை நூல்*

முதலியதால் செய்யப்பட்டதுமான உபவீதத்தைச் சிவனுக்கு ஸமர்ப்பித்தால் வேதாந்தங்களின் முடிவை அடைந்தவனுவான். நல்ல வாஸனையுள்ள சந்தனங்களால் சிவலிங்கத்தைப் பூசினுல் தேவர்களின் நூறு கோடி வர்ஷகாலம் வரையில் சிவலோகத்தில் சிறப்புறுவான். காட்டில் உண்டாகும் புஷ்பங்களாலாவது, மலையில் உண்டாகும் இலைகளாலாவது, தனது தோட்டத்தில் உண்டாகிய புஷ்பங்களாலாவது சிவனைப் பூஜிக்க வேண்டும். தாழை, குருக்கத்தி, குருந்தை, மா, முல்லை, எள், வாகை, செம்பருத்தி இவைகளின் புஷ்பங்களை வர்ஜிக்க வேண்டும். நெய்யுடன் கூடிய குங்கிலியத்தால் தூபத்தையும், நெய்யினுல் தீபத்தையும் எவன் ஸமர்ப்பிப்பானே அவன் நரகதுக்கத்தைத் தொலைத்து, சிவலோகத்தில் சிறப்புறுகிறுன். நைவேத்யத்தில் எவ்வளவு அரிசிகளுள்ளனவோ அவ்வளவு ஆயிரம் யுகங்கள் வரையில் ஸ்வர்க்கத்தில் சிறப்புறுகிறுன். வெல்லம், நெய், நெய்யில் பக்குவமான பக்ஷ்யங்கள் இவைகளை நிவேதனம் செய்தால், தானத்தைவிட நூறு மடங்கு அதிகமான பலனுண்டாகும். குறுணிப் பால், அதன் பாதி ஜலம், குறுணி அரிசி, வெல்லம், பழம் இவைகளைச் சேர்த்துப் பாயஸம் செய்ய வேண்டும். இது தேவர்களுக்குரியதாம்.

निवेदनार्हमाह भृगुः – अत ऊर्ध्वं प्रवक्ष्यामि हविष्पाकविधिक्रमम् । वाराक कोद्रवादीनि वर्जयेत्तु विचक्षणः ॥ कुलुत्थजातिभेदं च प्रियङ्गुं चैव वर्जयेत् । धान्यानामपि सर्वेषां कृष्णधान्यं विवर्जयेत्॥ अथवाऽन्यदलब्धं चेत् धान्यं शुद्धं समाहरेत्॥ त्रिवर्षातीतधान्यानि न प्रशस्तानि दैविके । तण्डुलानपि सर्वांश्च मासादूर्ध्वं विवर्जयेत् ॥ आढकं जीरकं चैव मरीचं सर्षपं तथा । राजमाषं महामाषं श्यामाकं कृष्णमाषकम् ॥ माषं मुद्गं महामुद्गं निष्पावं तिलतिल्वकौ । फलानि चूतकदलीपनसानां समाहरेत् ॥ भेदैस्तु कारवल्ल्यादि सर्वं ग्राह्यमितीरितम् । क्षुद्रकन्दं महाकन्द-

माहरेत्तु विचक्षणः ।। सहकारप्रभेदैश्च तथैव पनसद्वयम् । कदल्यादिषु भेदैस्तु गृह्णीयात्तु प्रयत्नतः ।। कूष्माण्डोर्वारुके चैव सिंही व्याघ्री तथैव च । कार्कोटकादि संग्राह्यं कलञ्जादीनि वर्जयेत् ।। बिम्बालर्कफलादीनि वर्जयेदिति केचन । भेदैश्च बृहती सर्वा सङ्ग्राह्येत्युच्यते बुधैः इति ।।

நிவேதனத்திற்குரியதைச் சொல்லுகிறார் ப்ருகு:- இனிமேல் ஹவிஸ்ஸைப் பாகம் செய்யும் விதியின் க்ரமத்தைச் சொல்லுகிறேன். காட்டுப்பயறு, (வரகு,) கேழ்வரகு முதலியதையும், கொள்ளு, அதன் பேதங்கள், தினை இவைகளையும் வர்ஜிக்க வேண்டும். எல்லாத் தான்யங்களிலும் கறுப்புத் தான்யத்தை வர்ஜிக்க வேண்டும். அல்லது வேறு தான்யம் கிடைக்காவிடில் சுத்தமான தான்யத்தை க்ரஹிக்கலாம். மூன்று வர்ஷத்திற்கு மேலான தான்யங்கள் தேவார்ஹமல்ல. எந்த அரிசியையும் ஒரு மாதத்திற்கு மேலானால் வர்ஜிக்க வேண்டும். துவரை, ஜீரகம், மிளகு, கடுகு, கருமொச்சை, தட்டைப்பயிறு, சாமை, கருஞ்சோளம், உளுந்து, பயறு, பெரும்பயறு, அவரை, எள், தினை இவைகளையும் மா, வாழை, பலா இவையின் பழங்களையும் க்ரஹிக்கலாம். பாகலின் எல்லாப் பேதங்களையும் க்ரஹிக்கலாம். சிறுகிழங்கு, பெருங்கிழங்கு, மாவின் பேதங்கள், பலாவின் இரண்டு பேதங்கள், வாழையின் எல்லாப் பேதங்கள் இவைகளையும் க்ரஹிக்கலாம். பூஷணி, வெள்ளரி, ஆடாதொடை, கண்டங்கத்திரி, குருணைப்பாலை முதலியதை க்ரஹிக்கலாம். கஞ்சா முதலியதை வர்ஜிக்க வேண்டும். கோவை, வெள்ளெருக்கு முதலியதின் பழங்களையும் வர்ஜிக்க வேண்டுமென்று சிலர். கண்டங்கத்திரியின் பேதங்கள் எல்லாவற்றையும் க்ரஹிக்கலாம் என்று அறிந்தவர் சொல்லுகின்றனர்.

मरीचिरपि — अथ हविर्विधिं वक्ष्ये वेणुकान् यवान् षाष्टिकान्नीवारान् प्रियङ्गून् शालिभेदानन्यान् व्रीहीन्वाऽप्येक जातीयांश्चतुर्वर्णैरेवानयेदेतेषां पूर्वं पूर्वं श्रेष्ठं तस्माद्वरककोद्रवादीनि

कुधान्यानि प्रतिलोमानि तानि च वर्जयेत्। कदलीचूतपनसनालिकेर तिन्त्रिणी कारवल्ली व्याघ्री शिम्बभेद बृहतीभेदसिंहीव्याघ्रनख कर्कन्धूर्वारुक कूश्माण्ड कार्कोटकानि सूरणकन्द क्षुद्रकन्द महाकन्द वल्लीकन्द शृङ्गिबेरोत्पलकन्दान्यन्यानि च भक्ष्याणि यथालाभमाहरेत्। कोशातकीमलाबूं च विशेषेण विवर्जयेत् इति ॥

மரீசியும்:- இனி நைவேத்ய விதியைச் சொல்லுகிறேன். மூங்கிலரிசி, யவை, அறுபதாங்குறுவை, செந்நெல், தினை, நெல்லின் பேதங்கள், சம்பாநெல் முதலியவைகளையாவது கலப்பில்லாமல், நான்கு வர்ணத்தார்களாலேயே தருவிக்க வேண்டும். இவைகளுள் பிந்தியதை விட முந்தியது சிறந்ததாகும். வரகு, கேழ்வரகு முதலியவை தாழ்ந்தனவாகும். அவைகளை வர்ஜிக்க வேண்டும். வாழை, மா, பலா, தென்னை, புளி, பாகல், கண்டங்கத்திரி, சிம்பபேதங்கள், கண்டங்கத்திரியின் பேதங்கள், ஆடாதொடை, புலிநகம், இலந்தை, வெள்ளரி, பூஷணி, கார்க்கோடகம், கருணைக் கிழங்கு, சிறுகிழங்கு, பெருங்கிழங்கு, கொடிக்கிழங்கு, இஞ்சி, நெய்தல் கிழங்கு இவைகளையும், போஜநார்ஹமானவைகளையும் கிடைத்த மட்டில் க்ரஹிக்கலாம். கொம்மட்டியும், சுரையும், அவச்யம் வர்ஜிக்கத் தகுந்ததாகும்.

हरिहरपूजा ॥

हरिहरयोः पूजामाह बोधायनः – अथातो देवयोः पूजाकरणे सर्वत्र त्रीणि पदाविचक्रमे त्र्यम्बकं यजामह इत्येताभ्यां यथालिङ्गमासनपाद्यार्घ्याचमनीयादीनि। एतयोश्च त्रैवर्णिकधर्मत्वात् सर्वत्र पुरस्तात् लोकप्रसिद्धाप्तप्रतिषेधाभावान्नियते इतिस्माह भगवान् बोधायनः इति । स एव – देवयोर्यथाकामी स्याद्यस्यां कस्यां चिदवस्थायां जले वा स्थले वा प्रतिमासु वा सर्वं कृत्वाऽभ्यर्चयेत् इति ।

ஹரிஹர பூஜா

ஹரிஹரர்களின் பூஜையைச் சொல்லுகிருர், போதாயனர்:- ஹரிஹரர்களின் பூஜையில், எல்லாவற்றிலும், 'த்ரீணிபதா', 'த்ர்யம்பகம்' என்ற இவ்விரு மந்த்ரங்களால், ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனீயம் முதலியதைச் செய்ய வேண்டும். இவ்விருவரின் பூஜைகள் மூன்று வர்ணத்தாருக்கும் உரியதாகையாலும், எங்கும் முன் உலகப்ரஸித்தரான சிஷ்டர்கள் ப்ரதிஷேதிக்காததாலும், இந்தப் பூஜைகள் நித்யமென்ருர் பகவான் போதாயனர். போதாயனரே:- ஹரிஹர பூஜையை இஷ்டப்படியும் செய்யலாம். ஏதாவதொரு ஸமயத்தில் (விதிப்படி செய்யமுடியாவிடில்) ஜலத்திலாவது, ஸ்தலத்திலாவது, பிம்பங்களிலாவது எல்லாவற்றையும் செய்து பூஜிக்கலாம்.

शौनकः—केचिद्गणपतिमादित्यं शक्तिमच्युतं शिवं च पञ्च क्रमेणाहरहर्यजन्ते। तानप्सु वाऽग्नौ वा सूर्ये वा हृदये वा स्थण्डिले वा प्रतिमासु वा यजेत। प्रतिमास्वक्षणिकासु नावाहनविसर्जने भवतः स्वाकृतिषु हि तासु नित्यं सन्निहिता इति। प्रतिमाः प्राङ्मुखी रुदङ्मुखो यजेत। अन्यत्र प्राङ्मुखः। सम्भृतसम्भारं यजनभवनमेत्य विधिनोपविश्य, यतप्राणः कर्म सङ्कल्प्य शुचिः शङ्खादिपात्रं सपवित्रमद्भिः पूरयित्वा, गन्धाक्षतपुष्पाणि प्रक्षिप्य सावित्र्याऽभिमन्त्र्य, तीर्थान्यावाह्य, अभ्युक्ष्य, (पवित्रपुष्पाणि) तदुदकेनोपोहिष्ठेत्यात्मानमायतनं यजनाङ्गानि चाभ्युक्ष्य, क्रियाङ्गोदकुम्भं गन्धादिभिरभ्यर्च्य, तेनोदकेन नमोन्तनाम्ना तल्लिङ्ग मन्त्रेण वा क्रमेणोपचारान् दद्यात्। पुष्पोदकेन पाद्योदकमर्घ्यं च पात्रान्तरेण सगन्धाक्षत कुसुमं दद्यात्। आवाहनमासनं पाद्य मर्घ्य माचमनं तथा स्नानमाचमनीयं वस्त्रमाचमनीयं उपवीतमाचमनीयं गन्धपुष्पाणि धूपं दीपं नैवेद्यमाचमन मुपचारं मुखवासं स्तोत्रं प्रणामं दक्षिणां प्रदक्षिणं विसर्जनं कुर्यासदम्पन्नं मनसा सम्पादयेत्।

சௌனகர்:- சிலர், கணபதி, ஆதித்யன், சக்தி, அச்யுதன், சிவன் என்ற ஐவரையும் முறையே ப்ரதிதினமும் அர்ச்சிக்கின்றனர். அவர்களை ஜலத்திலாவது, அக்னியிலாவது, ஸூர்யனிலாவது ஹ்ருதயத்திலாவது, தரையிலாவது, பிம்பங்களிலாவது பூஜிக்கலாம். ஸ்திரமான பிம்பங்களில் ஆவாஹனமும் உத்வாஸனமும் இல்லை. அவைகளில் அந்தந்தத் தேவர்கள் எப்பொழுதுமே இருக்கிறார்கள். கிழக்கு நோக்கியுள்ள பிம்பங்களை வடக்கு முகமாய் இருந்து பூஜிக்க வேண்டும். மற்றவிடத்தில் கிழக்கு முகமாய் இருந்து பூஜிக்க வேண்டும். பூஜாத்ரவ்யங்கள் சேர்ந்துள்ள பூஜாக்ருஹத்தை அடைந்து, விதிப்படி உட்கார்ந்து, ப்ராணாயாமம் செய்து, ஸங்கல்பித்து, சுத்தனாய், பவித்ரத்துடன் கூடிய சங்கம் முதலிய பாத்ரத்தை ஜலத்தால் நிரப்பி, கந்தம், அக்ஷதை, புஷ்பம் இவைகளை அதில் சேர்த்து, காயத்ரியால் அபிமந்த்ரித்து, தீர்த்தங்களை ஆவாஹனம் செய்து, பவித்ரத்துடன் கூடிய அந்த ஜலத்தால் 'ஆபோஹிஷ்டா' என்ற மந்த்ரத்தால் தன்னையும், பூஜாஸ்தானத்தையும், பூஜோபகரணங்களையும் ப்ரோக்ஷித்து, பூஜாங்கமான ஜல கும்பத்தைக் கந்தம் முதலியதால் பூஜித்து, அந்த ஜலத்தால், நமச்சப்தத்தை முடிவிலுடைய தேவதாநாம மந்த்ரத்தாலாவது, தேவதாலிங்கமுள்ள மந்த்ரத்தாலாவது, க்ரமமாய் உபசாரங்களை ஸமர்ப்பிக்க வேண்டும். புஷ்பத்துடன் கூடிய ஜலத்தினால் பாத்யத்தையும், அர்க்யத்தை மற்றொரு பாத்ரத்தினால், கந்தம், அக்ஷதை, புஷ்பம் இவையுடன் கூடியதாய்க் கொடுக்க வேண்டும். ஆவாஹனம், ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனம், ஸ்நானம், ஆசமனீயம், வஸ்த்ரம், ஆசமனீயம், உபவீதம் ஆசமனீயம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம் ஆசமனம், உபசாரம், தாம்பூலம், ஸ்தோத்ரம், நமஸ்காரம், தக்ஷிணை, ப்ரதக்ஷிணம், விஸர்ஜனம் இவைகளை க்ரமமாய் செய்ய வேண்டும். கிடைக்காத வஸ்துவை மனதால் ஸம்பாதித்து உபசரிக்க வேண்டும்.

मन्त्राः – गणानां त्वा गणपतिं हवामह इति गणपतेः । आकृष्णेन रजसा इत्यादित्यस्य । जातवेदसे सुनवाम सोमम् इति शक्तेः । इदं विष्णुर्विचक्रमे इति विष्णोः । त्र्यम्बकं यजामह इति रुद्रस्येत्यन्ये सावित्र्या वा जातवेद्या वा प्राजापत्यया वा व्याहृतिभिर्वा प्रणवेन वा कुर्वन्त्येष देवयज्ञोऽहरहर्गोदानसंमितः सर्वाभीष्टदः स्वर्ग्योऽपवर्ग्यश्च तस्मादेनमहरहः कुर्वन्ति तमेनं हुतशेषेण वा पृथगन्नेन कुर्यान्नास्य शेषेण वैश्वदेवं कुर्यात् इति ॥

இனி மந்த்ரங்கள் - 'கணாநாம்' என்று கணபதிக்கும். 'ஆக்ருஷ்ணேந' என்று ஸூர்யனுக்கும், 'ஜாதவேதஸே' என்று சக்திக்கும், 'இதம் விஷ்ணு:' என்று விஷ்ணுவுக்கும், 'த்ர்யம்பகம்' என்று ருத்ரனுக்கும் மந்த்ரங்களாம். சிலர் காயத்ரியாலாவது, 'ஜாதவேதஸே' என்பதாலாவது, 'ப்ரஜாபதே' என்பதாலாவது, வ்யாஹ்ருதிகளாலாவது, ப்ரணவத்தினுலாவது செய்கின்றனர். இந்தத் தேவயக்ஞம் ப்ரதிதினமும் கோதானத்திற்குச் சமமானது. ஸர்வாபீஷ்டங்களையும் கொடுப்பதும், ஸ்வர்க்கத்தையும், மோக்ஷத்தையுமளிப்பதாகும். ஆகையால் இதை ப்ரதிதினமும் (பெரியோர்) செய்கின்றனர். இதை ஹோமம் செய்த மீதியன்னத்தாலாவது, தனியன்னத்தாலாவது செய்ய வேண்டும். இதன் சேஷத்தால் வைச்வதேவம் செய்யக் கூடாது.

अन्यानपि पूजार्हानाह व्यासः – शिवो वह्निर्गुरुश्चैव ब्राह्मणश्च विशेषतः । चतुष्टयं समं पूज्यं सदाशिवपदार्थिभिः इति ॥ माधवीये – शिवविद्यागुरूणां च भेदो नास्ति कथञ्चन । शिवे मन्त्रे गुरौ यस्य भावना सदृशी भवेत् ॥ भोगो मोक्षश्च सिद्धिश्च शीघ्रं तस्य भवेत् ध्रुवम् इति ॥ पराशरः – मर्त्यबुद्धिर्गुरौ यस्य शिवलिङ्गे शिलामतिः । शब्द बुद्धिस्तु मन्त्रेषु स खलु ब्रह्महा भवेत् इति ॥ वसिष्ठः – गुरोरवज्ञया मृत्युर्मन्त्रत्यागाद्दरिद्रता । गुरुमन्त्रपरित्यागाद्रौरवं नरकं व्रजेत् इति ॥

மற்றும் பூஜார்ஹமானவர்களைச் சொல்லுகிறார், **வ்யாஸர்:-** சிவன், அக்னி, குரு, ப்ராம்ஹணன் என்ற நால்வரையும் ஸமமாய்ப் பூஜிக்க வேண்டும், சிவபதத்தை விரும்புவோர், **மாதவீயத்தில்:-** சிவன், மந்த்ரம், குரு இம்மூவருக்கும் எவ்விதத்தாலும் பேதமில்லை. எவனுக்கு இம்மூவரிடத்திலும் ஸமமான பாவனையுள்ளதோ, அவனுக்குப் போகமும், மோக்ஷமும், ஸித்தியும் சீக்கிரமாய் உண்டாகும். இது நிச்சயம். **பராசரர்:-** எவனுக்குக் குருவினிடம் மனிதனெனும் புத்தியும், சிவலிங்கத்தில் சிலையெனும் புத்தியும், மந்த்ரத்தில் சப்தமெனும் புத்தியுமுள்ளதோ அவன் ப்ரம்ஹஹத்யையைச் செய்தவன் ஆவான். **வஸிஷ்டர்:-** குருவை அவமதித்தால் ம்ருத்யு உண்டாகும். மந்த்ரத்தை விட்டால் தாரித்ர்யம் உண்டாகும். குரு, மந்த்ரமிருவரையும் விட்டால் ரௌரவமெனும் நரகத்தை அடைவான்.

पञ्चमहायज्ञाः

पञ्चमे च तथा भागे संविभागो यथार्हतः । पितृदेवमनुष्याणां कीटानां चोपदिश्यते इति ।। वैश्वदेवस्य देवपूजानन्तरभावित्वमुक्तम्, नृसिंहपुराणे – पौरुषेण च सूक्तेन ततो विष्णुं समर्चयेत् । वैश्वदेवं ततः कुर्याद्बलिकर्म तथैव च इति ।। व्यासोऽपि – नैवेद्यार्थं पृथग्भाण्डे पत्नी स्नात्वा पचेद्गृहे । वैश्वदेवार्थमन्यस्मिन् व्यञ्जनानि पृथक्पृथक् ।। एकस्मिन् वा पचेद्भाण्डे पूर्वं विष्णुनिवेदनम् । वैश्वदेवं ततः शिष्टा द्व्यासस्य वचनं यथा ।। वैश्वदेवं प्रकुर्वीत स्वशाखाभिहितं ततः । संस्कृतान्नैस्तु विविधैः हविष्यव्यञ्जनान्वितैः ।। तैरेवान्नैर्बलिं दद्या च्छेषमाप्लाव्य वारिणा । कृत्वाऽपसव्यं स्वधया सर्वं दक्षिणतो हरेत् इति ।।

ஐந்து மஹாயக்ஞங்கள்

இனி பஞ்சமஹாயக்ஞங்கள் சொல்லப்படும். அதில், **தக்ஷர்:-** பகலின் ஐந்தாவது பாகத்தில் பித்ருக்கள், தேவர்கள், மனுஷ்யர்கள், கீடங்கள் இவர்களுக்கு உசிதப்படி அன்னத்தைப் பாகம் செய்து கொடுப்பதென்பது விதிக்கப்படுகிறது. வைச்வதேவம் தேவபூஜைக்குப் பிறகு செய்யப்பட வேண்டும் என்பது சொல்லப்பட்டுள்ளது. **ந்ருஸிம்ஹ புராணத்தில்:-** பிறகு புருஷஸூக்தத்தினுல் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். பிறகு வைச்வதேவத்தையும், பலி தானத்தையும் செய்ய வேண்டும். **வ்யாஸரும்:-** வீட்டில், பத்னீ ஸ்நானம் செய்து தேவ நைவேத்யத்திற்காக ஒரு பாத்ரத்தில் பாகம் செய்ய வேண்டும். வைச்வதேவத்திற்காக வேறு பாத்ரத்தில் பாகம் செய்ய வேண்டும். வ்யஞ்ஜனங்களையும் தனித்தனியே பாகம் செய்ய வேண்டும். அல்லது ஒரே பாண்டத்தில் சமைக்கலாம். முதலில் விஷ்ணுவுக்கு நிவேதனம் செய்து, மீதியுள்ளதால் வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். வ்யாஸரின் வாக்யமப்படி. தன் சாகையில் சொல்லியபடி ஸம்ஸ்காரம் செய்த அன்னங்களால் வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். ஹவிஸ், வ்யஞ்ஜனம் இவைகளுடன் கூடிய அந்த அன்னங்களாலேயே பலிதானம் செய்ய வேண்டும். மீதியுள்ளதை ஜலத்தினுல் நனைத்து, ப்ராசீனுவீதம் செய்து கொண்டு, ஸ்வதா சப்தத்துடன் முழுவதையும் தெற்கில் வைக்க வேண்டியது.

हारीतोऽपि– द्विजः पुरुषसूक्तस्य विधिना विष्णुमर्चयेत् । वैश्वदेवं ततः कुर्यात् बलिकर्म विधानतः इति ।। यत्तु शौनकवचनम् – हुतशेषेण वैश्वदेवं कुर्यात् इति, तत् वैश्वदेवार्थ मुद्धृत्य तच्छेषेण निवेदनं कुर्यादित्येवं परम् । उद्धृत्य वैश्वदेवार्थं देवस्य प्राङ्निवेदयेत् इति स्मरणात् ।।

ஹாரீதரும்:- ப்ராம்ஹணன் புருஷஸூக்த விதானத்தால் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். பிறகு

வைச்வதேவத்தையும், விதிப்படி பலிதானத்தையும் செய்ய வேண்டும். ஆனால், சௌனகர்:- 'ஹோமசேஷத்தினாலாவது, தனியன்னத்தினாலாவது செய்ய வேண்டும், தேவசேஷத்தில் வைச்வதேவம் செய்யக் கூடாது' என்ற சொல்லியிருக்கிறரே எனில், அந்த வசனம், வைச்வதேவத்திற்காகத் தனியாய் எடுத்து வைத்து, மீதியால் தேவ நிவேதனம் செய்ய வேண்டும் என்பதைச் சொல்வதற்காம். 'வைச்வதேவத்திற்காக எடுத்து வைத்து விட்டு, தேவனுக்கு முதலில் நிவேதனம் செய்ய வேண்டும்' என்று ஸ்ம்ருதி இருப்பதால்.

वैश्वदेवहोमात् पूर्वं शकलहोमं कुर्वन्ति शिष्टाः । तत्र बोधायनः – अष्टौ समिध आदध्यात् देवकृतस्यैनसोऽवयजनमसि स्वाहा, मनुष्यकृतस्यैन सोऽवयजनमसि स्वाहा, पितृकृतस्यैनसोऽवयजन-मसि स्वाहाऽऽत्मकृतस्यैनसोऽवयजनमसि स्वाहा, यद्दिवा च नक्तं चैनश्चकृम तस्यावयजनमसि स्वाहा, यत् स्वपन्तश्च जाग्रतश्चैनश्चकृम तस्यावयजनमसि स्वाहा, यद्विद्वाꣳसश्चाविद्वाꣳसश्चैनश्चकृम तस्यावयजनमसि स्वाहैनस एनसोऽवयजनमसि स्वाहेत्येतैरष्टभिर्हुत्वा सर्वस्मात् पापात् प्रमुच्यते इति ॥ पञ्चमहायज्ञरूपमाह ॥ श्रुतिः – देवयज्ञः पितृयज्ञो भूतयज्ञो मनुष्ययज्ञो ब्रह्मयज्ञ इति यदग्नौ जुहोत्यपि समिधं तद्देवयज्ञः सन्तिष्ठते यत् पितृभ्यः स्वधाकरोत्यप्यपस्तत् पितृयज्ञः सन्तिष्ठते यद्भूतेभ्यो बलिꣳहरति तद्भूतयज्ञः सन्तिष्ठते यद्ब्राह्मणेभ्योऽन्नं ददाति तन्मनुष्ययज्ञः सन्तिष्ठते यत् स्वाध्यायमधीयीतैकामप्यृचं यजुः साम वा तत् ब्रह्मयज्ञः सन्तिष्ठते इति ॥

வைச்வதேவ ஹோமத்திற்கு முன், சிஷ்டர்கள் சகல ஹோமத்தைச் செய்கின்றனர். அங்கு, போதாயனர்:- எட்டு ஸமித்துக்களை ஹோமம் செய்ய வேண்டும். 'தேவக்ருதஸ்யைன ஸோவயஜனமஸி ஸ்வாஹா' என்பது

முதலிய மந்த்ரங்களால். இந்த எட்டு மந்த்ரங்களால் ஹோமம் செய்தால் ஸகல பாபத்தினின்றும் விடுபடுகிறான். பஞ்ச மஹா யக்ஞங்களில் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்றது, ச்ருதி:- 'தேவயஜ்ஞ:+ ஸம்திஷ்டதே' என்று. ச்ருதியின் பொருள் - தேவயஜ்ஞம், பித்ரு யஜ்ஞம், பூத யஜ்ஞம், மனுஷ்யக்ஞம், ப்ரம்ஹ யக்ஞம் என்ற ஐந்தும் மஹா யக்ஞங்களாம். அக்னியில் ஒரு ஸமித்தையாவது ஹோமம் செய்வது தேவயக்ஞம், பித்ருக்களுக்கு ஜலத்தையாவது ஸ்வதாகாரத்துடன் கொடுப்பது பித்ரு யக்ஞம், பூதங்களுக்குப் பலியைக் கொடுப்பது பூத யக்ஞம், ப்ராம்ஹணர்களுக்கு அன்னத்தைக் கொடுப்பது மனுஷ்ய யக்ஞம், தனது வேதமாகிய ஒரு ருக்கையாவது, ஒரு யஜுஸ்ஸையாவது, ஒரு ஸாமத்தையாவது அத்யயனம் செய்வது ப்ரம்ஹ யக்ஞமாம்.

व्यासः — देवयज्ञं पितृयज्ञं भूतयज्ञं तथैव च। मानुष्यं ब्रह्मयज्ञं च पञ्चयज्ञान् प्रचक्षते ॥ यदि स्यात् तर्पणादर्वाक् ब्रह्मयज्ञः कृतो न हि। कृत्वा मनुष्ययज्ञं वै ततः स्वाध्यायमारभेत् ॥ अग्नेः पश्चिमतो देशे भूतयज्ञान्तरेऽथवा इति ॥

வ்யாஸர்:- தேவயக்ஞம், பித்ருயக்ஞம், பூதயக்ஞம், மனுஷ்ய யக்ஞம், ப்ரம்ஹ யக்ஞம் என்ற ஐந்தையும் பஞ்சயக்ஞங்களென்கின்றனர். தர்ப்பணத்திற்கு முன் ப்ரஹ்யக்ஞம் செய்யப்படாவிடில், மனுஷ்ய யக்ஞம் செய்து பிறகு ப்ரம்ஹ யக்ஞத்தை ஆரம்பிக்க வேண்டும். அக்னிக்கு மேற்கு ப்ரதேசத்தில், அல்லது பூத யக்ஞத்திற்குப் பிறகாவது செய்யலாம்.

यमः— पञ्च सूना गृहस्थस्य वर्तन्तेऽहरहः सदा । खण्डिनी पेषिणी चुल्ली जलकुम्भ उपस्करः । एताभिर्वाहयन्विप्रो बध्यते वै मुहुर्मुहुः । एतासां पावनार्थाय पञ्चयज्ञाः प्रकल्पिताः इति । सूनाः - हिंसास्थानानि । खण्डनी - मुसलोलूखलादिः । पेषिणी दृषदुपलादिः ।

चुल्ली - पाकस्थानम्। जलकुम्भः - उदधानम्। उपस्करः - शूर्पादिः एताभिः सूनाभिः स्वकार्यं प्रापयन् पापेन युज्यते इत्यर्थः।

யமன்:- க்ருஹஸ்தனுக்கு ஒவ்வொரு நாளும் ஐந்து ஹிம்ஸாஸ்தானங்கள் இருக்கின்றன. அவை, கண்டினீ, பேஷிணீ, சுல்லீ, உதகும்பம், உபஸ்கரம் என்பதாம், இவற்றால் தனது கார்யத்தை நடத்திவரும் ப்ராம்ஹணன் பாபத்தால் கட்டப்படுகிறான். இவைகளைச் சுத்தி செய்வதற்காக ஐந்து யக்ஞங்கள் விதிக்கப்பட்டுள்ளன. கண்டினீ = உலக்கை, உரல் முதலியவை. பேஷிணீ = அம்மி, குழவி முதலியவை. சுல்லீ = அடுப்பு, சமையல் ஸ்தானம். உதகும்பம் = ஜலபாத்ரம். உபஸ்கரம் = முறம் முதலியவை.

मनुरपि— पञ्चसूना गृहस्थस्य चुल्ली पेषिण्युपस्करी। खण्डिनी चोदकुम्भश्च बध्यते यास्तु वाहयन्॥ तासां क्रमेण सर्वासां निष्कृत्यर्थं महर्षिभिः। पञ्च क्लृप्ता महायज्ञाः प्रत्यहं गृहमेधिनाम्॥ अध्यापनं ब्रह्म यज्ञः पितृयज्ञस्तु तर्पणम्। होमो दैवो बलिर्भौतो नृयज्ञोऽतिथिपूजनम्। पञ्चैतान् यो महायज्ञान्न हापयति शक्तितः। स गृहेऽपि वसन्नित्यं सूनादोषैर्न लिप्यते इति॥ नामान्तराण्याह स एव – अहुतं च हुतं चैव तथा प्रहुतमेव च। ब्राह्मं हुतं प्राशितं च पञ्चयज्ञान् प्रचक्षते॥ जपोऽहुतो हुतो होमः प्रहुतो भौतिको बलिः। ब्राह्मं हुतं द्विजाग्र्यार्चा प्राशितं पितृतर्पणम्॥ स्वाध्यायेनार्चयेदृषीन् होमैर्देवान् यथाविधि। पितॄन् श्राद्धेन नॄनन्नैर्भूतानि बलिकर्मणा इति।

மனுவும்:- க்ருஹஸ்தனுக்கு, ஐந்து ஹிம்ஸாஸ்தானங்களிருக்கின்றன. அவை சுல்லீ, பேஷிணீ, உபஸ்கரம், கண்டினீ, உதகும்பம் என்பவை. அவைகளைத் தனக்காக ப்ரயோகிக்கும் க்ருஹஸ்தன் பாபத்தால் கட்டப்படுகிறான். அந்தப் பாபங்களின் ப்ராயச் சித்தத்திற்காக, மஹர்ஷிகளால் ஐந்து மஹாயக்ஞங்கள் க்ருஹஸ்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளன. வேதத்தை

அத்யயனம் செய்வதும், அத்யயனம் செய்விப்பதும் ப்ரம்ஹயக்ஞம். அன்னத்தினுலாவது, ஜலத்தினுலாவது பித்ருக்களைத் தர்ப்பிப்பது பித்ருயக்ஞம். ஹோமம் செய்வது தேவயக்ஞம். பலிதானம் பூதயக்ஞம். அதிதி பூஜை மனுஷ்யயக்ஞம். இந்த ஐந்து மஹா யக்ஞங்களையும் எவன் விடாமல் யதாசக்தி அனுஷ்டிக்கின்ருனே அவன் ஹிம்ஸா தோஷங்களால் பற்றப்படுவதில்லை. இவைகளுக்கே வேறு பெயர்களைச் சொல்லுகிருர், **மனுவே:**- அஹுதம், ஹுதம், ப்ரஹுதம், ப்ராம்ஹ ஹுதம், ப்ராசிதம் என்று ஐந்து யக்ஞங்களைச் சொல்லுகின்றனர். வேதஜபம் அஹுதமாம். ஹோமம் ஹுதமாம். பூதபலிதானம் ப்ரஹுதமாம். ப்ராம்ஹண பூஜை ப்ராம்ஹ ஹுதமாம். பித்ருக்களைத்ருப்தி செய்விப்பது ப்ராசிதமாம். வேதாத்யயனத்தால் ருஷிகளையும், ஹோமங்களால் தேவர்களையும், விதிப்படி ச்ராத்தங்களால் பித்ருக்களையும், அன்னங்களால் மனுஷ்யர்களையும், பலிதானத்தால் பூதங்களையும் பூஜிக்க வேண்டும்.

याज्ञवल्क्योऽपि – बलिकर्मस्वधाहोमस्वाध्यायातिथि सत्क्रियाः । भूतपित्रमरब्रह्ममनुष्याणां महामखाः इति ।। नारायणः – सभार्यस्तु शुचिः स्नातो विधिनाऽऽचम्य वाग्यतः । उपविश्य समिद्धेऽग्नौ वैश्वदेवं समाचरेत् इति ।। वसिष्ठः – वैश्वदेवं सायं प्रातर्गृह्येऽग्नौ जुहुयात् इति ।।

யாக்ஞவல்க்யரும்:- பலிதானம், ஸ்வதாகாரம், ஹோமம், வேதஜபம், அதிதிஸத்காரம் இவை முறையே, பூதங்கள், பித்ருக்கள், தேவர்கள், ப்ரம்ஹம், மனுஷ்யர் இவர்களின் மஹாயக்ஞங்களாம். **நாராயணர்:**- விதிப்படி ஸ்நானம் செய்து ஆசமனம் செய்து, பார்யையுடன் மௌனியாய் உட்கார்ந்து, ஜ்வாலையுள்ள அக்னியில் வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். **வஸிஷ்டர்:**- மாலையிலும், காலையிலும் ஔபாஸனுக்னியில் வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும்.

मनुः – वैवाहिकेऽग्नौ कुर्वीत गार्ह्यं कर्म यथाविधि । पञ्चयज्ञविधानं च पक्तिं चान्वाहिकीं गृही इति ॥ गार्ह्यं कर्म - पाकयज्ञादिकम् । पितृभूतमनुष्यब्रह्मयज्ञानामग्नौ करणमग्निसमीपे करणम्, होमाभावात् । ब्रह्मयज्ञोऽपि मनुष्ययज्ञानन्तरं चेत् क्रियते, तदाऽग्निसमीपे कर्तव्यः । अग्नेः पश्चिमतो देशे भूतयज्ञान्तरेऽथवा इति व्यासस्मरणात् । तथा च कण्वः – अग्निमतोऽपि पचने न निषिद्धाः पञ्चयज्ञा आहिताग्नेरपि इति ॥

மனு:- விதிப்படி பாகயக்ஞங்களையும், பஞ்சமஹாயக்ஞங்களையும், ப்ரதிதினம் செய்யும் பாகத்தையும், க்ருஹஸ்தன் ஔபாஸனாக்னியில் செய்ய வேண்டும். பித்ருயக்ஞம், பூதயக்ஞம், மனுஷ்யயக்ஞம், ப்ரம்ஹயக்ஞம் இவைகளில் ஹோமம் இல்லாததால், அக்னியில் செய்வது என்பதற்கு அக்னி ஸமீபத்தில் செய்வதென்பது பொருள். ப்ரம்ஹயக்ஞத்தையும் மனுஷ்ய யக்ஞத்திற்குப் பிறகு செய்தால் அக்னி ஸமீபத்தில் செய்ய வேண்டும். அக்னிக்கு மேல்புறத்தில் பூதயக்ஞத்திற்குப் பிறகு, என்று வ்யாஸ ஸ்ம்ருதியிருப்பதால். அவ்விதமே, **கண்வர்:-** ஔபாஸனாக்னி உடையவனுக்கும், ஆஹிதாக்னிக்கும், பசனாக்னியில் பஞ்சமஹாயக்ஞங்கள் நிஷேதிக்கப்படவில்லை.

ब्रह्मयज्ञस्याग्निसम्बन्ध उशनसाऽपि पक्षे दर्शितः अग्निसमीपे इत्येकेषाम् इति ॥ अङ्गिराः – लौकिके वैदिके वाऽपि हुतोत्सृष्टे जले क्षितौ । वैश्वदेवस्तु कर्तव्यः पञ्चसूनापनुत्तये इति ॥ व्यासोऽपि – शालाग्नौ लौकिके वाऽथ जले भूम्यामथापि वा । वैश्वदेवस्तु कर्तव्यो देवयज्ञः स वै स्मृतः इति ॥ गृह्यपरिशिष्टेऽपि – वैश्वदेवस्य प्रातरारम्भोऽग्निमौपासनं पचनं वा परिसमूह्य इति ॥ विश्वेदेवाः - सर्वे देवाः । तद्देवत्यमिदं वैश्वदेवम् इति च ॥

ப்ரம்ஹயக்ஞத்திற்கு அக்னி ஸம்பந்தத்தை உசனஸ்ஸும் விகல்பமாய்த் தெரிவித்திருக்கிறார் -'அக்னிஸமீபத்தில் செய்யலாம் என்பது சிலர் மதம்' என்று. **அங்கிரஸ்:-** லௌகிகாக்னியிலாவது, வைதிகாக்னியிலாவது, ஹோமம் செய்து விடப்பட்ட அக்னியிலாவது, ஜலத்திலாவது, பூமியிலாவது, ஐந்து ஹிம்ஸா தோஷங்களைப் போக்குவதற்கு வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். **வ்யாஸரும்:-** ஔபாஸனாக்னியிலோ, லௌகிகாக்னியிலோ, ஜலத்திலோ, பூமியிலோ வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். அது தேவயக்ஞமெனப்பட்டது. **க்ருஹ்யபரிசிஷ்டத்திலும்:-** 'வைச்வதேவத்திற்குப் பகலில் ஆரம்பம். 'ஔபாஸனாக்னியையாவது, பசனாக்னியையாவது பரிஸமூஹனம் செய்து' என்றும், 'விச்வதேவர்கள் - ஸர்வதேவர்கள். அவர்களை உத்தேச்ய தேவதையாயுடையது இது என்பதால் வைச்வதேவம்' என்றுமுள்ளது.

अत्र व्यवस्थामाहाङ्गिराः – शालाग्नौ तु पचेदन्नं लौकिके वाऽपि नित्यशः । यस्मिन्नेव पचेदन्नं तस्मिन् होमो विधीयते इति ।। सङ्ग्रहे – यदि स्याल्लौकिके पाकस्ततोऽन्नं तत्र हूयते । गृह्याग्नौ चेत् पचेदन्नं गृह्याग्नौ होम एव च ।। प्रातर्होमं तु निर्वर्त्य समुद्धृत्य हुताशनात् । शेषं महानसे कृत्वा तत्र पाकं समाचरेत् ।। तमग्निं पुनराहृत्य शालाग्नावेव निक्षिपेत् । ततोऽस्मिन् वैश्वदेवादि कर्म कुर्यादतन्द्रितः इति ।। चन्द्रिकायामपि – यस्मिन्नग्नौ भवेत् पाकः वैश्वदेवस्तु तत्र वै । तत्राहुत्वा तु यो भुङ्क्ते स भुङ्क्ते किल्बिषं नरः इति ।।

இதில் வ்யவஸ்தையைச் சொல்லுகிறார், **அங்கிரஸ்:-** ஔபாஸனாக்னியிலாவது, லௌகிகாக்னியிலாவது ப்ரதிதினம் பாகம் செய்ய வேண்டும். எந்த அக்னியில் பாகம் செய்யப்பட்டதோ, அந்த அக்னியிலேயே ஹோமம் விதிக்கப்படுகிறது. **ஸங்க்ரஹத்தில்:-** லௌகிகாக்னியில்

பாகம் செய்தால் அதிலேயே அன்ன ஹோமத்தைச் செய்ய வேண்டும். ஔபாஸனுக்னியில் பாகம் செய்தால் அதிலேயே ஹோமமும் செய்யப்பட வேண்டும். காலையில் ஹோமத்தை முடித்து, அக்னியினின்று ஸ்வல்பம் எடுத்துப் பாகசாலையில் வைத்து அதில் பாகம் செய்ய வேண்டும். அந்த அக்னியை மறுபடி எடுத்து ஔபாஸனுக்னியிலேயே வைக்க வேண்டும். பிறகு இதில் வைச்வதேவம் முதலியதைச் சோம்பலின்றிச் செய்ய வேண்டும். **சந்த்ரிகையிலும்:-** எந்த அக்னியில் பாகம் செய்யப்பட்டதோ அந்த அக்னியிலேயே வைச்வதேவமும் செய்யப்பட வேண்டும். அதில் ஹோமம் செய்யாமல் எவன் புஜிக்கின்றனோ அவன் பாபத்தையே புஜிக்கின்றன்.

व्यासोऽपि — यदि स्याल्लौकिके पक्वं ततोऽन्नं तत्र भूयते । शालाग्नौ तत्र चेदन्नं विधिरेष सनातनः ॥ देवेभ्यस्तु हुतादन्नाच्छेषाद्भूतबलिं हरेत् । भूतयज्ञः स विज्ञेयो भूतिदः सर्वदेहिनाम् इति । तच्च कालद्वयेऽपि कर्तव्यमित्याह कात्यायनः – सायं प्रातर्वैश्वदेवः कर्तव्यो बलिकर्म च । अनश्नताऽपि सतत मन्यथा किल्बिषी भवेत् इति ॥ प्रजापतिरपि – वैश्वदेवं बलिहृतिं प्रत्यहं गृहमेधिनः । सायं प्रातश्च कुर्वीरन् सूनादोषापनुत्तये इति ॥

வ்யாஸரும்:- அன்னம் லௌகிகாக்னியில் பக்வமானல் அதிலேயே ஹோமம் செய்யப்பட வேண்டும். ஔபாஸனுக்னியில் பக்வமானல் அதிலேயே ஹோமம் செய்யப்பட வேண்டும். இது புராதனமான விதி. தேவர்களுக்கு ஹோமம் செய்து மீதியுள்ளதினின்று பூதபலியைக் கொடுக்க வேண்டும். அதைப் பூதயக்ஞம் என்று அறியவும். அது ஸகல ப்ராணிகளுக்கும் ஐச்வர்யத்தை அளிப்பதாகும். அந்தப் பூதயக்ஞத்தை இரு காலங்களிலும் செய்ய வேண்டும என்கிறார் **காத்யாயனர்:-** மாலையிலும், காலையிலும் வைச்வதேவமும், பலிதானமும்

செய்ய வேண்டும். போஜனம் செய்யாவிடினும் ப்ரதிதினம் செய்ய வேண்டும். செய்யாவிடில் பாபமுடையவனுவான். **ப்ரஜாபதியும்:-** க்ருஹஸ்தர்கள், ப்ரதிதினம் காலையிலும், மாலையிலும், ஹிம்ஸா தோஷத்தை நிவர்த்திப்பதற்கு வைச்வ தேவத்தையும், பலிஹரணத்தையும் செய்ய வேண்டும்.

तात्पर्यदर्शने— ऋते महायज्ञेभ्यः सायं रौद्रान्तं कृत्वा वैहायसमाकाशे भूतबलिं कुर्वीत । अन्य आहुः – नक्तमेवोत्तमेन वैहायस मित्यापस्तम्बवचने एवकारस्य व्यवहितान्वया द्वैहायसमेव सायम् इति ।। तथा च त्रिकाण्डी — वैश्वदेवं दिवारात्रौ कुर्याद्बलिहृतिं तथा । रात्रौ होमं प्रकुर्वीत ये भूता मन्त्रतो बलिम् । नान्यद्बलिहृतिं रात्रौ यद्वा कुर्यादमन्त्रतः इति । मनुः – सायन्त्वन्नस्य सिद्धस्य पत्न्यमन्त्रं बलिं हरेत् इति ।।

தாத்பர்யதர்சனத்தில்:- 'ஸாயங்காலத்தில் மஹாயக்ஞங்களை விட்டு, ருத்ரபலி வரையில் பலிதானம் செய்து, ஆகாசத்தில் பூத பலியைக் கொடுக்க வேண்டும். சிலர் இவ்விதம் சொல்லுகின்றனர் - 'நக்தமேவோத்தமேந வைஹாயஸம்' என்ற ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் உள்ள 'ஏவ' என்பதற்குத் தூரத்திலுள்ள 'வைஹாயஸம்' என்பதுடன் அன்வயமானதால், வைஹாயஸம் (பூதபலி) மட்டில் ராத்ரியில் என்று. அவ்விதமே. **த்ரிகாண்டீ:-** பகலிலும், ராத்ரியிலும் வைச்வதேவம், பலிஹரணம் இவைகளைச் செய்ய வேண்டும். ராத்ரியில் ஹோமம் செய்ய வேண்டும். யே பூதா:' என்ற மந்த்ரத்தால் பலிஹரணம் செய்ய வேண்டும். ராத்ரியில் மற்றப் பலிகளைக் கொடுக்கக் கூடாது. அல்லது மந்த்ரமில்லாமல் பலிதானம் செய்யலாம். **மனு:-** ஸாயங்காலத்தில், பக்வமான அன்னத்தினுல் மந்த்ரமில்லாமல் பத்னீ பலிஹரணம் செய்ய வேண்டும்.

तत्र वैश्वदेवहोमप्रकारमाहाश्वलायनः —सायं प्रातः सिद्धस्य हविष्यस्य जुहुयादग्निहोत्रदेवताभ्यः सोमाय वनस्पतयेऽग्नीषोमाभ्या

मिन्द्राग्निभ्यां द्यावापृथिवीभ्यां धन्वन्तरय इन्द्राय विश्वेभ्यो देवेभ्यो ब्रह्मणे स्वाहा इति इति । हविष्यस्य - हविर्योग्यस्येत्यर्थः । अग्निहोत्रदेवताभ्यः - सूर्याग्निप्रजापतिभ्य इत्यर्थः ।।

அதில் வைச்வதேவ ஹோமத்தின் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார், ஆச்வலாயனர்:- ஸாயங்காலத்திலும், ப்ராத: காலத்திலும், பக்வமான ஹவிஸ்ஸினுல், அக்னிஹோத்ர தேவதைகளுக்கும், ஸோமன், வனஸ்பதி, அக்னீஷோமர்கள், இந்த்ராக்னிகள், த்யாவா ப்ருதிவிகள், தன்வந்தரி, இந்த்ரன், விச்வேதேவர்கள், ப்ரம்ஹா இவர்களுக்கும் ஹோமம் செய்ய வேண்டும். அக்னிஹோத்ர தேவதைகள் - ஸௌர்யாக்னி ப்ரஜாபதிகள்.

आपस्तम्बः— औपासने पचने वा षड्भिराद्यैः प्रतिमन्त्रं हस्तेन जुहुया दुभयतः परिषेचनं यथापुरस्तात् इति ।। षड्भिराद्यैः - अग्नये स्वाहा, सोमाय स्वाहा, विश्वेभ्यो देवेभ्यः स्वाहा, ध्रुवाय भूमाय स्वाहा, ध्रुवक्षितये स्वाहाऽच्युतक्षितये स्वाहेत्येतैः ।। केचित् सौविष्टकृतमपि सप्तमं जुह्वति, अग्नये स्विष्टकृते स्वाहा इति, औषधहविष्केषु सर्वत्र तस्य प्रवृत्तिरिति वदन्तः । अन्ये तु सोमाय स्वाहा इति न पठन्ति । सौविष्टकृतं षष्ठं पठन्ति इति हरदत्तः ।।

ஆபஸ்தம்பர்:- ஔபாஸனுக்னியிலாவது, பாகாக்னியிலாவது ஆதியிலுள்ள ஆறு மந்த்ரங்களால் மந்த்ரம் தோறும் கையினுல் ஹோமம் செய்ய வேண்டும். ஆதியிலும் அந்தத்திலும் பரிஷேசனம் முன்போல், "ஆறு மந்த்ரங்களென்பதற்கு, 'அக்னயேஸ்வாஹா' என்பது முதல் 'அச்யுதக்ஷிதயேஸ்வாஹா' என்பது வரையுள்ள மந்த்ரங்கள் என்று பொருள். சிலர், ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தையும் ஏழாவதாக 'அக்னயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா' என்று செய்கின்றனர். ஔஷத ஹவிஷ்க ஹோமங்கள் எல்லாவற்றிலும் அதற்கு ப்ரவ்ருத்தி உண்டென்று சொல்லுகின்றனர். சிலரோவெனில்

'ஸோமாயஸ்வாஹா' என்று படிப்பதில்லை. ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தையே ஆறுவதாகப் படிக்கின்றனர்'' என்றார் ஹரதத்தர்.

गौतमः – अग्नावग्निर्धन्वन्तरिर्विश्वेदेवाः प्रजापतिः स्विष्टकृदिति होमाः इति ।। अग्न्यादिभ्यः स्विष्टकृदन्तेभ्योऽग्नौ होमाः कर्तव्या इत्यर्थः ।। मनुरपि – वैश्वदेवस्य सिद्धस्य गृह्येऽग्नौ विधिपूर्वकम् । आभ्यः कुर्याद्देवताभ्यो ब्राह्मणो होममन्वहम् ।। अग्नेस्सोमस्य चैवादौ तयोश्चैव समस्तयोः । विश्वेषां चैव देवानां धन्वन्तरय एव च ।। कुह्वै चैवानुमत्यै च प्रजापतय एव च । सह द्यावापृथिव्योश्च तथा स्विष्टकृतेऽन्ततः इति ।। चतुर्थ्यर्थे षष्ठी । सहद्यावापृथिव्योः - समस्ताभ्यां द्यावापृथिवीभ्यां इत्यर्थः । कात्यायनोऽपि – स्वाहाकारैर्जुहुयाद् ब्रह्मणे प्रजापतये गृह्येभ्यः काश्यपायानुमतये इति ।।

கௌதமர்:- *அக்னி, தன்வந்தரி, விச்வேதேவர், ப்ரஜாபதி, ஸ்விஷ்டக்ருத் இவர்களுக்கு அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும்.* **மனுவும்**:- *ஸர்வதேவோத்தேசமாய்ப் பக்வமான அன்னத்தினுல், ஔபாஸனக்யில் விதிப்படி, ப்ராம்ஹணன் ப்ரதிதினமும், அக்னி, ஸோமன், அக்னீஷோமர்கள், விச்வேதேவர்கள், தன்வந்தரி, குஹூ, அனுமதி, ப்ரஜாபதி, த்யாவாப்ருதிவீ, ஸ்விஷ்டக்ருத் என்ற இவர்களுக்கு ஹோமம் செய்ய வேண்டும்.* **காத்யாயனரும்**:- *ப்ரம்ஹா, ப்ரஜாபதி, க்ருஹ்யர்கள், காச்யபர், அனுமதி என்ற இவர்களுக்கு ஸ்வாஹாகாரத்தால் ஹோமம் செய்ய வேண்டும்.*

अत्र यथास्वशाखं व्यवस्था । वैश्वदेवं प्रकुर्वीत स्वशाखाभिहितं तथा ।। यस्य यावत् स्वगृह्योक्तं स्वल्पं वा यदि वा बहु । तस्य तावति शास्त्रार्थे कृते सर्वं कृतं भवेत् इति व्यासस्मरणात् ।। स्मृतिसारे – अप्रबुद्धे तु होमाग्नौ वैश्वदेवं न कारयेत् । यजमानो भवेदन्ध इत्येवं

मनुरब्रवीत् इति ।। होतव्यान्नस्य संस्कारमाह व्यासः – जुहुयात् सर्पिषाऽभ्यक्तं तैलक्षारविवर्जितम् । दध्यक्तं पयसाऽक्तं वा तदभावेऽम्बुनाऽपि वा इति ।। गृह्यपरिशिष्टेऽपि – अग्नेः प्रत्यग्दर्भेषु निधाय सर्पिषाऽभ्यज्य सकृदवदानेन पाणिना जुहुयात् इति ।

இங்கு, அவரவர் சாகையில் சொல்லியபடி வ்யவஸ்தை என்றறியவும். 'தன் சாகையில் சொல்லியபடி வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். 'எவனுக்கு எவ்வளவு தனது க்ருஹ்யத்தில் சொல்லப்பட்டுள்ளதோ, அது ஸ்வல்பமாணாலும், பஹுவாணாலும், அவன் அவ்வளவைச் செய்தால் முழுவதும் செய்ததாக ஆகும்' என்று வ்யாஸர் சொல்லிருக்கிறுர். **ஸ்ம்ருதிஸாரத்தில்:-** ஹோமாக்னி ஜ்வலிக்காவிடில் வைச்வதேவத்தைச் செய்யக் கூடாது. செய்தால் யஜமானன் குருடணுவான் என்று மனு சொன்ஞர். ஹோமார்ஹமான அன்னத்தின் ஸம்ஸ்காரத்தைச் சொல்லுகிறுர் **வ்யாஸர்:-** நெய்யிஞல் நனைக்கப்பட்டதும், எண்ணெய், உறைப்பு இல்லாததும், தயிரிஞலாவது, பாலிஞலாவது நனைக்கப்பட்டதும், அவையில்லாவிடில், ஜலத்திஞலாவது நனைக்கப் பட்டதுமான அன்னத்தை ஹோமம் செய்ய வேண்டும். **க்ருஹ்யபரிசிஷ்டத்திலும்:-** அக்னிக்கு மேற்கில் தர்ப்பங்களில் வைத்து நெய்யிஞல் நனைத்து, ஒரு தடவையாயெடுத்துக் கையால் ஹோமம் செய்ய வேண்டும்.

स्मृत्यर्थसारे — कोद्रवं वरकं माषं मसूरं च कुलत्थकम् । क्षारं च लवणं सर्वं वैश्वदेवे विवर्जयेत् इति ।। आपस्तम्बोऽपि – न क्षारलवणहोमो विद्यते तथाऽवरान्नसंसृष्टस्य चाहविष्यस्य होम उदीचीनमुष्णं भस्मापोह्य तस्मिन् भस्मनि जुहुयात् तद्धुतमहुतं चाग्नौ भवति, न स्त्री जुहुयान्नानुपेत इति यस्याग्नौ न क्रियते यस्य चाग्रं न दीयते न तद्भोक्तव्यम् इति च ।। बोधायनः – अङ्गारान् भस्ममिश्रांस्तु

निरूह्योत्तरतोऽत्र तु। जुहुयाद्वैश्वदेवं तु यदि क्षारादिमिश्रितम् इति ॥

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- கேழ்வரகு, வரகு, உளுந்து, சிறுகடலை, கொள்ளு, இவைகளையும், உறைப்பு, உப்பு இவைகளுடன் கூடியதையும் வைச்வதேவத்தில் வர்ஜிக்க வேண்டும். **ஆபஸ்தம்பரும்:-** 'உறைப்பு, உப்பு கலந்ததை ஹோமம் செய்யக் கூடாது. கொள்ளு முதலியது கலந்ததையும் ஹோமம் செய்யக் கூடாது. 'ஹவிஸ்ஸுக்கு அர்ஹமல்லாததை ஹோமம் செய்வதானால், அக்னியில் வடக்குப் பாகத்திலுள்ள உஷ்ணமான பஸ்மத்தை ஒதுக்கி, அந்தப் பஸ்மத்தில் அஹவிஷ்யத்தை ஹோமம் செய்ய வேண்டும். அது ஹோமம் செய்யப்பட்டதாயும், செய்யப்படாததாயும் ஆகின்றது.' 'ஸ்த்ரீயும், உபநயனமில்லாதவனும் ஹோமம் செய்யக் கூடாது.' 'எந்த அன்னத்தின் சிறிதுபாகம் அக்னியில் ஹோமம் செய்யப்படவில்லையோ, எந்த அன்னத்தின் சிறிது பாகம் கொடுக்கப்படவில்லையோ அது புஜிக்கத்தக்கதல்ல.' **போதாயனர்:-** சாம்பலுடன் கூடிய தணல்களை வட புறத்தில் ஒதுக்கி அவற்றில் ஹோமம் செய்ய வேண்டும், வைச்வதேவான்னம் உறைப்பு முதலியதுடன் சேர்ந்திருந்தால்.

भारद्वाजः — सर्वेषु पाकयज्ञेषु (तथा वैदिककर्मसु) । स्त्रियाश्चानुपनीतस्य बलिमन्त्रो न विद्यते इति ॥ द्रव्यानुकल्पश्चतुर्विंशतिमते दर्शितः – अलाभे येन केनापि फलशाकोदकादिभिः । पयोदधिघृतैः कुर्याद्वैश्वदेवं स्रुवेण तु ॥ हस्तेनान्नादिभिः कुर्यादद्भिरञ्जलिना जले इति ॥ व्यासोऽपि — पक्वाभावे प्रवासे च तण्डुलानोषधीस्तु वा । पयो दधि घृतं वाऽपि कन्दमूलफलानि वा ॥ जुहुयादिति शेषः ॥ स एव – अथवा मन्त्रतः कुर्याद्भवेन्नावैश्वदेवकः इति ॥ यदद्यते, तेनैव होतव्यम् । तदुक्तं गृह्यपरिशिष्टे – शाकं वा यदि वा पत्रं मूलं वा यदि वा फलम् । संकल्पयेद्यदाहारं तेनैव जुहुयादपि ॥

उत्तानेन तु हस्तेन ह्यङ्गुष्ठाग्रेण पीडितम्। संहताङ्गुलि पाणिस्तु वाग्यतो जुहुयाद्धविः ॥ अङ्गुष्ठपर्वमात्रं स्यादवदानमिति स्मृतिः। द्रवं स्रुवेण होतव्यं पाणिना कठिनं हविः इति।

பாரத்வாஜர்:- *பாக யக்ஞங்கள் எல்லாவற்றிலும், (அவ்விதம் வைதிக கர்மங்களிலும்) ஸ்த்ரீக்கும், அனுபநீதனுக்கும், பலிதானத்தில் மந்த்ரமில்லை. த்ரவ்யத்தில் கௌண கல்ப்பம் சதுர்விம்சதிமதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹவிர்யோக்யமாகியது கிடைக்காவிடில், பழம், சாகம், ஜலம் இவைகளிலே ஏதாவது ஒன்றினுல் செய்யலாம், அல்லது, பால், தயிர், நெய் . இவைகளுளொன்றினுல், ஸ்ருவத்தினுல் வைச்வதேவத்தைச் செய்யலாம். அன்னம் முதலியதால் செய்தால் கையினுல் செய்ய வேண்டும். ஜலத்தில் செய்வதானுல் அஞ்ஜலியினுல் செய்ய வேண்டும்.* **வ்யாஸரும்:-** *பக்வான்னம் இல்லாவிடினும், ப்ரவாஸத்திலும், அரிசி, ஓஷதிகள், பால், தயிர், நெய், கிழங்கு, வேர், பழம் இவைகளையாவது ஹோமம் செய்யலாம்.* **வ்யாஸரே:-** *அல்லது மந்த்ரத்தினுல் செய்யலாம். வைச்வதேவம் இல்லாமல் இருக்கக் கூடாது. எதைப் புஜிக்கப் போகிருனே அதனுலேயே ஹோமம் செய்ய வேண்டும். அவ்விதம் சொல்லப்பட்டுள்ளது* **க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:-** *சாகம், இலை, வேர், பழம் இவைகளுள், எதை ஆஹாரமாய் ஸங்கல்ப்பித்திருக்கின்றனே அதனுலேயே ஹோமத்தையும் செய்ய வேண்டும். நிமிர்ந்த கையினுல், விரல்கள் எல்லாவற்றையும் சேர்த்து, பெருவிரலின் நுனியால் பிடிக்கப்பட்ட ஹவிஸ்ஸை மௌனியாய் ஹோமம் செய்ய வேண்டும். அவதானம் பெருவிரலின் கணுவளவுள்ளதாய் இருக்க வேண்டுமென்கிறது ஸ்ம்ருதி. த்ரவமான வஸ்துவை ஸ்ருவத்தினுலும், கடினமான ஹவிஸ்ஸைக் கையினுலும் ஹோமம் செய்ய வேண்டும்.*

जैमिनिः — अवश्यं तु त्यजेदन्नं मनसा वचसाऽपि च । ततश्च प्रक्षिपेदग्नाविति धर्मः सनातनः ॥ अत्यक्त्वा जुहुयाद्यस्तु मोहेनान्वितमानसः । देवानां नोपतिष्ठेत नरकं प्रतिपद्यते ॥ यत् किञ्चिज्जुहुयादग्नौ तत् सर्वं त्यागपूर्वकम् । अन्यथा कुरुते यस्तु नरकं स प्रपद्यते इति ॥ अनग्निकस्य वैश्वदेवे विशेषमाह वृद्धवसिष्ठः — अनग्निकस्तु यो विप्रः सोऽन्नं व्याहृतिभिः स्वयम् । हुत्वा शाकलमन्त्रैश्च शिष्टं काकबलिं हरेत् इति ।

ஜைமினி:- அன்னத்தை மனதினுலும், வாக்கினுலும் தனதல்ல என்று அவச்யம் விடவேண்டும். பிறகு அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும். இது புராதனமான தர்மமாம். அறியாதவனுய் எவன் த்யாகம் செய்யாமல் ஹோமம் செய்கின்றனே, அவனது ஹவிஸ் தேவர்களை அடைவதில்லை. அவன் நரகத்தை அடைகிருன். அக்னியில் எந்த வஸ்துவை ஹோமம் செய்தாலும், அதை த்யாகத்தை முன்னிட்டே செய்ய வேண்டும். மாறிச் செய்பவன் நரகத்தை அடைகிருன். விதுரனின் வைச்வதேவத்தில் விசேஷத்தைச் சொல்லுகிருர், வ்ருத்த வஸிஷ்டர்:- அக்னியில்லாத ப்ராம்ஹணன் எவனே அவன், வ்யாஹ்ருதிகளால் அன்னத்தை ஹோமம் செய்து, சாகல மந்த்ரங்களால் சகல ஹோமம் செய்து, ப்ரஜாபதிக்கும் ஹவிஸ்ஸை ஹோமம் செய்து, மீதியுள்ள அன்னத்தைக் காகபலியாய்க் கொடுக்க வேண்டும்.

विष्णुरपि — अन्नं व्याहृतिभिर्हुत्वा हुत्वा मन्त्रैश्च शाकलैः । प्रजापतेर्हविर्हुत्वा पूजयेदतिथिं ततः इति ॥ तिसृभिर्व्याहृतिभिरन्नाहुतीर्हुत्वा प्रजापतये स्वाहेति च, ततो देवकृतस्यैनस इत्याद्यैः शकलहोमं च कृत्वा काकबलिं हृत्वाऽतिथिं पूजयेदित्यर्थः । तथा च अत्रिः — साग्निकः पितृयज्ञान्तं बलिकर्म समाचरेत् । अनग्निर्हुतशेषं तु बलिं काकबलिं हरेत् ॥ पुरुष यज्ञादृते नास्ति निरग्नेस्तु महामखः इति ।

व्याहृत्यादि होमान् काकबलिमातिथ्यं च विना नान्यदस्तीत्यर्थः ।

விஷ்ணுவும்:- வ்யாஹ்ருதிகளால் அன்ன ஹோமமும், சகலஹோம மந்த்ரங்களால் ஹோமமும், ப்ரஜாபதிக்கு ஹவிர் ஹோமமும் செய்து, பிறகு அதிதியைப் பூஜிக்க வேண்டும். 'மூன்று வ்யாஹ்ருதிகளால் ஹோமம் செய்து, ப்ரஜாபதயே ஸ்வாஹா என்றும் ஹோமம் செய்து, பிறகு 'தேவக்ருதஸ்ய' என்பது முதலிய மந்த்ரங்களால் சகல ஹோமம் செய்து, காகபலியும் செய்து, அதிதியைப் பூஜிக்க வேண்டும் என்பது பொருள். அவ்விதமே, அத்ரி:- அக்னியுடன் கூடியவன் பித்ருயக்ஞம் வரையிலுள்ளதையும், பலி கர்மத்தையும் செய்ய வேண்டியது. அக்னியில்லாதவன் ஹோம சேஷத்தைக் காகபலியாகக் கொடுக்க வேண்டும். விதுரனுக்குப் புருஷயக்ஞம் தவிர்த்து வேறு மஹாயக்ஞம் இல்லை. 'வ்யாஹ்ருதி முதலியதால் ஹோமம், காகபலி. அதிதி பூஜை இவைகளைத் தவிர்த்து மற்றதொன்றுமில்லை. என்பது பொருள்.

मन्त्रोपयोगे नियममाहापस्तम्बः – गृहमेधिनो यदशनीयस्य होमा बलयश्च स्वर्गपुष्टिसंयुक्तास्तेषां मन्त्राणामुपयोगे द्वादशाहमधः शय्या ब्रह्मचर्यं क्षारलवणवर्जनं चोत्तमस्यैकरात्रमुपवासः इति ॥ गृहमेधिनो यदशनीयं पक्वमपक्वं वोपस्थितम्, तस्यैकदेशेन होमा बलयश्च कर्तव्याः। स्वर्गः पुष्टिश्च तेषां फलम् तेषां होमबलिमन्त्राणामुपयोगे। उपयोगः - नियमपूर्वकं विद्याग्रहणम् ॥ तथा च बोधायनः - तेषां ग्रहणे द्वादशरात्रम् इत्यादि ॥ तत्र उपयोक्तुरेव व्रतम् । अन्ये तु पत्न्या अपीच्छन्ति । उपयोगः - प्रथमप्रयोगः । तत्र पत्न्या अपि सहाधिकारः इति वदन्ति । उत्तमस्य - ये भूताः प्रचरन्तीत्यस्य एकरात्रमुपवासः कर्तव्यः इति हरदत्तः ॥

மந்தரங்களை முதலில் உபயோகிக்கும் பொழுதுள்ள நியமத்தைச் சொல்லுகிறார். ஆபஸ்தம்பர்:-

க்ருஹஸ்தனுக்கு, போஜனார்ஹமாகியது பக்வமாகவோ, அபக்வமாகவோ எந்த வஸ்து கிடைத்துள்ளதோ, அதில் ஏகதேசத்தால் ஹோமங்களையும், பலிகளையும் செய்ய வேண்டும். ஸ்வர்க்கமும், புஷ்டியும் அவைகளுக்குப் பலன். அந்த ஹோமபலி மந்த்ரங்களை உபயோகிக்கும் பொழுது, உபயோகம் என்ற பதத்திற்கு நியமத்துடன் வித்யையை க்ரஹிப்பதென்று பொருள். அவ்விதமே **போதாயனர்:-** 'அவைகளை க்ரஹிக்கும் பொழுது பன்னிரண்டுநாள்' என்பது முதலாகச் சொல்லியுள்ளார். பன்னிரண்டு நாள் பூமியில் படுக்கையும், ப்ரம்ஹசர்யமும், உறைப்பு, உப்புகளை வர்ஜிப்பதும் நியமங்கள். கடைசி மந்த்ரமாகிய 'யேபூதா:' என்பதற்கு ஒரு நாள் உபவாஸம் செய்ய வேண்டும் என்றார் ஹரதத்தர். இங்கு சொல்லிய வ்ரதம் புருஷனுக்கு மட்டில். சிலர் பத்னிக்கும் வேண்டுமென்கின்றனர். உபயோகம் என்பது முதல் ப்ரயோகம், அதில் பத்னிக்கும் கூட அதிகாரமென்று சொல்லுகின்றனர்.

अन्नसंस्कर्तॄनाहापस्तम्बः – आर्याः प्रयता वैश्वदेवेऽन्न-संस्कर्तारः स्युः इति ।। आर्याः - त्रैवर्णिकाः । स एव – सिद्धेऽन्ने तिष्ठन् भूतमिति स्वामिने प्रब्रूयात् तत् सुभूतं विराडन्नं तन्माक्षायीति प्रतिवचनः इति ।। सिद्धे - पक्वेऽन्ने तिष्ठन् पाचकः भूतम् इति अन्नस्वामिने ब्रूयात् । तत् सुभूतमित्यादिः प्रतिवचनो मन्त्र इत्यर्थः । यत्तु तेनैवोक्तम् – आर्याधिष्ठिता वा शूद्राः संस्कर्तारः स्युः इति, तद्युगान्तरविषयम् । ब्राह्मणादिषु शूद्रस्य पचनादि क्रियाऽपि च इति कलियुगनिषिद्धधर्मेषु मध्ये स्मरणात् ।।

வைச்வதேவார்ஹமான அன்னத்தைச் சமைப்பதற்கு அர்ஹர்களைச் சொல்லுகிறார், **ஆபஸ்தம்பர்:-** சுத்தரான மூன்று வர்ணத்தார் வைச்வ தேவத்தில் அன்னத்தைப் பாகம் செய்பவராக வேண்டும். **ஆபஸ்தம்பரே:-** அன்னம் பக்வமான உடன் நின்றுகொண்டு 'பூதம்' என்று

யஜமானனின் பொருட்டுச் சொல்ல வேண்டும். 'தத்ஸு¬பூதம்' என்பது முதலியது யஜமானன் சொல்லும் ப்ரதிவசனம். பூதம் - தயாராயுள்ளது. 'அந்த அன்னம் நன்றாய் உள்ளது, நான் விளங்குவதற்கு ஸாதனமாயுள்ளது, அது குறைய வேண்டாம்' என்பது ப்ரதிவசனத்தின் பொருள். 'மூன்று வர்ணத்தாரை மேல்வராய்க் கொண்ட சூத்ரராவது பாசகராய் இருக்கலாம்' என்று ஆபஸ்தம்பர் சொல்லியுள்ளது, மற்ற யுகங்களைப் பற்றியதாம். 'சூத்ரனுக்கு ப்ராம்ஹணர் முதலிய மூன்று வர்ணத்தாரிடம் சமையல் முதலியது செய்வதும் கூடாது' என்று கலியுக நிஷித்த தர்மங்களின் நடுவில் சொல்லியுள்ளனர்.

बलिहरणम्

अथ बलिहरणम् । तत्र कात्यायनः – उद्धृत्य हविरासिच्य हविष्येण घृतादिना । स्वशाखाविधिना हुत्वा तच्छेषं बलिमाहरेत् ।। यावद्गृहे वसेत्तावत् स्वयमेव बलिं हरेत् । सायं त्वन्नस्य सिद्धस्य पत्न्यमन्त्रं हरेत् इति ।। चन्द्रिकायाम् – स्वशाखोक्तेन विधिना बलिकर्म विधीयते । न जातु परशाखोक्तं बुधः कर्म समाचरेत् इति ।। हारीतः– वास्तुपालनभूतेभ्यो बलिहरणं भूतयज्ञः इति ।। बलिहरणे गौणकर्तॄनाह अत्रिः – पुत्रो भ्राताऽथवा ऋत्विक् शिष्यश्वशुर-मातुलाः । पत्नीश्रोत्रिययाज्याश्च दृष्टास्ते बलिकर्मणि ।। गृहे कर्त्रन्तराभावे प्रवासेऽप्याचरेत् स्वयम् इति ।

பலிஹரணம்

இனி பலிஹரணம் சொல்லப்படுகிறது. அதில் **காத்யாயனர்:**- ஹவிஸ்ஸை எடுத்து, ஹோமார்ஹமான நெய் முதலியதால் நனைத்து, தன் சாகையில் சொல்லிய விதிப்படி ஹோமம் செய்து, அதன் மீதியைப் பலியாய்க் கொடுக்க வேண்டும். வீட்டில் இருக்கும் வரையில், தானே பலிஹரணம் செய்ய வேண்டும். ஸாயங்காலத்திலானால்,

ஸித்தமான அன்னத்தினுல், மந்த்ரமில்லாமல் பத்னீ பலிஹரணம் செய்யலாம். சந்த்ரிகையில்:- தன் சாகையில் சொல்லிய விதிப்படியே பலிஹரணம் விதிக்கப்படுகிறது. அறிந்தவன், பிறர் சாகையில் சொல்லப்பட்ட கர்மத்தை ஒருகாலும் அனுஷ்டிக்கக் கூடாது. ஹாரீதர்:- க்ருஹத்தை ரக்ஷிக்கும் பூதங்களுக்குப் பலியைக் கொடுப்பது பூதயக்ஞமாம். பலிஹரணத்தில் கௌணகர்த்தாக்களைச் சொல்லுகிருர் அத்ரி:- புத்ரன் அல்லது ப்ராதா, ருத்விக், சிஷ்யன், மாமனுர், மாதுலன், பத்னீ, ச்ரோத்ரியன், சிஷ்யன் இவர்கள் பலி கர்மத்தில் (கௌணகர்த்தாக்களாக) விதிக்கப்பட்டிருக்கின்றனர். வீட்டில் வேறு கர்த்தா இல்லாவிடில், ப்ரவாஸத்திலும் (வேறு தேசத்தில் இருக்கும் போதும்) யஜமானன் தானே பலிஹரணம் செய்ய வேண்டும்.

बलिहरणप्रकारमाह शौनकः – अथ बलिहरणमेताभ्यश्चैव देवताभ्योऽद्भ्य औषधिवनस्पतिभ्यो गृहाय गृहदेवताभ्यो वास्तुदेवताभ्य इन्द्रायेन्द्रपुरुषेभ्यो यमाय यमपुरुषेभ्यो वरुणाय वरुणपुरुषेभ्यः सोमाय सोमपुरुषेभ्य इति प्रतिदिशं, ब्रह्मणे ब्रह्मपुरुषेभ्य इति मध्ये, विश्वेभ्यो देवेभ्यः सर्वेभ्यो भूतेभ्यो दिवाचारिभ्य इति दिवा, नक्तं चारिभ्य इति नक्तं, रक्षोभ्य इत्युत्तरतः स्वधा पितृभ्य इति प्राचीनावीती शेषं दक्षिणा निनयेत् इति ॥

பலிஹரண ப்ரகாரத்தைச் சொல்லுகிருர், சௌனகர்:- இனி பலிஹரணம் சொல்லப்படுகிறது. இந்தத் தேவதைகளுக்கும், அப்புகள், ஓஷதி வனஸ்பதிகள், க்ருஹம், க்ருஹ தேவதைகள், வாஸ்து தேவதைகள், இந்த்ரன், இந்த்ர புருஷர்கள், யமன், யம புருஷர்கள், வருணன், வருண புருஷர்கள், ஸோமன், ஸோம புருஷர்கள் என்று இவர்களுக்கு ப்ரதிதிக்கிலும், ப்ரம்ஹாவுக்கும் ப்ரம்ஹ புருஷர்களுக்கும் என்று மத்யத்திலும், விச்வதேவர்களுக்கும், ஸர்வ

பூதங்களுக்கும், திவாசாரிகளுக்கும் என்று பகலில், நக்தஞ்சாரிகளுக்கென்று இரவில், ரக்ஷஸ்ஸுகளுக்கென்று வடக்கில், ஸ்வதா பித்ருப்ய: என்று, ப்ராசீனாவிதியாய் மீதியைத் தென்பாகத்தில் வைக்க வேண்டும்.

आपस्तम्बोऽपि – अपरेणाग्निं सप्तमाष्टमाभ्यामुदगपवर्ग-मुदधानसन्निधौ नवमेन मध्येऽगारस्य दशमैकादशाभ्यां प्रागपवर्गमुत्तरपूर्वदेशेऽगारस्योत्तरैश्चतुर्भिः शय्यादेशे कामलिङ्गेन देहल्यामन्तरिक्षलिङ्गेनोत्तरेणापिधान्यामुत्तरैर्ब्रह्मसदने दक्षिणतः पितृलिङ्गेन प्राचीनावीत्यवाचीनपाणिः कुर्याद्रौद्र उत्तरो यथा देवताभ्यस्तयोर्नानापरिषेचनं धर्मभेदान्नक्तमेवोत्तमेन वैहायसं य एतानव्यग्रो यथोपदेशं कुरुते नित्यः स्वर्गः पुष्टिश्च इति ॥

अस्यार्थः – अग्नेः पश्चात् सप्तमाष्टमाभ्यां - धर्माय स्वाहा, अधर्माय स्वाहा इत्येताभ्यां उदगपवर्गं बलिहरणं कर्तव्यम्। उदकं यत्र धीयते तदुदधानं मणिकाख्यम्। तस्य सन्निधौ नवमेन - अद्भ्यः स्वाहेत्यनेन। अगारमध्ये दशमैकादशाभ्यां - औषधिवनस्पतिभ्यः स्वाहा, रक्षोदेवजनेभ्यः स्वाहेत्येताभ्यां प्रागपवर्गम् । अगारस्योत्तरपूर्वदेशे उत्तरैश्चतुर्भिः - गृह्याभ्यः स्वाहा, अवसानेभ्यः स्वाहा, अवसानपतिभ्यः स्वाहा, सर्वभूतेभ्यः स्वाहेत्येतैः प्रागपवर्गमेव । शय्यादेशे कामाय स्वाहेत्यनेन । देहली - अन्तर्द्वारस्याधस्ताद्दारु । तत्र अन्तरिक्षाय स्वाहेत्यनेन । येन अपिधीयते द्वारम्, सा अपिधानी कवाटम्। तदर्गलमित्यन्ये। तत्र उत्तरेण मन्त्रेण - यदेजति जगति यच्चचेष्टति नाम्नो भागोऽयन्नाम्ने स्वाहेत्यनेन।

ஆபஸ்தம்பரும்:- 'அபரேணாக்னிம் + புஷ்டிச்ச' என்பது ஸூத்ரம். இதன் பொருள் - அக்னிக்கு மேல்புறத்தில், 7-ஆவது 8-ஆவது மந்த்ரங்களால் =

தர்மாயஸ்வாஹா, அதர்மாய ஸ்வாஹா என்பவைகளால், வடக்கில் முடியும் வரை பலிஹரணம் செய்ய வேண்டும். ஜலம் வைக்கும் பாத்ரம் உததானம், மணிகமெனப்பட்டது. (பெரிதான ஜலபாத்ரம்) அதன் எதிரில் 9-ஆவது மந்த்ரத்தால் - 'அத்ப்ய: ஸ்வாஹா' என்பதால். வீட்டின் நடுவில் 10-ஆவது, 11- ஆவதுகளால் - ஓஷதி வனஸ்பதிப்ய: ஸ்வாஹா, ரக்ஷோதேவஜநேப்ய: ஸ்வாஹா என்ற இவைகளால் கிழக்கில் முடிவாக. வீட்டின் வடகிழக்கு ப்ரதேசத்தில், நான்கு மந்த்ரங்களால் = க்ருஹ்யாப்ய: ஸ்வாஹா, அவஸாநேப்ய: ஸ்வாஹா, அவஸாநபதிப்ய: ஸ்வாஹா, ஸர்வபூதேப்ய: ஸ்வாஹா என்பவைகளால், கிழக்கில் முடிவாகவே. படுக்கும் ஸ்தலத்தில் 'காமாய ஸ்வாஹா' என்று. தேஹளியில் - உள் வாயிலின் கீழ்ப்படியில் 'அந்தரிக்ஷாய ஸ்வாஹா' என்று. வாயிற்படி எதனுல் மூடப்படுகின்றதோ அது அபிதானீ - கதவு, அதன் தாழ்ப்பாள் என்று சிலர். அதில், அடுத்த மந்த்ரத்தால் = 'யதேஜதி + நாம்னே ஸ்வாஹா' என்று.

ब्रह्मसदनं - मध्येऽगारं वास्तुविद्याप्रसिद्धम् । अग्नेर्दक्षिणत इत्यन्ये । तत्रोत्तरैर्दशभिः - पृथिव्यै स्वाहा, अन्तरिक्षाय स्वाहा, दिवे स्वाहा, सूर्याय स्वाहा, चन्द्रमसे स्वाहा, नक्षत्रेभ्यः स्वाहा, इन्द्राय स्वाहा, बृहस्पतये स्वाहा, प्रजापतये स्वाहा, ब्रह्मणे स्वाहेत्येतैः प्रागपवर्गमेव । दक्षिणतः - अनन्तराणां बलीनां दक्षिणतः स्वधा पितृभ्य इत्यनेन प्राचीनावीती अवाचीनपाणिः दक्षिणं पाणिमुत्तानं कृत्वा अङ्गुष्ठतर्जन्योरन्तरालेन कुर्यात् । पितृबलेरुत्तरतो रौद्रबलिः कर्तव्यः । यथादेवताभ्यः - उपवीतीत्यर्थः । नमो रुद्राय पशुपतये स्वाहेति मन्त्रः ।

அடுத்த பத்து மந்த்ரங்களால் = 'ப்ருதிவ்யை ஸ்வாஹா' என்பது முதல் 'ப்ரம்ஹணே ஸ்வாஹா' என்பது வரை உள்ளவைகளால் வீட்டில் நடுவில், அல்லது அக்னியின் தெற்கில், கிழக்கு முடிவாகக் கொடுக்க

வேண்டும். தெற்கில் - முன் சொல்லிய பலிகளின் தெற்குப் பாகத்தில், 'ஸ்வதாபித்ருப்ய:' என்ற மந்த்ரத்தால் ப்ராசீனு வீதியாய், அவாசீனபாணி: - வலதுகையை நிமிர்த்து, பெருவிரல் தர்ஜனீ இவைகளின் நடுவினுல் கொடுக்க வேண்டும். பித்ரு பலியின் வடக்கில் ரௌத்ர பலியைக் கொடுக்க வேண்டும். யதாதேவதாப்ய:= உபவீதியாய் என்று பொருள். 'நமோருத்ராயபசுபதயே ஸ்வாஹா' என்பது அதற்கு மந்த்ரம்.

बलीनां देशे देशे समवेतानां सकृत्सकृदन्ते परिषेचनम् इति स्वोक्तस्यापवादः, तयोर्नानापरिषेचनम् इति । तयोः - अनन्तरोक्तयोः बल्योरेकस्मिन् देशे समवेतयोरपि नाना - पृथक् परिषेचनं कर्तव्यम्। कुतः ? धर्मभेदात्। पित्र्यस्याप्रदक्षिणं परिषेचनं, इतरस्य दैवतत्वात् प्रदक्षिणमिति। उत्तमेन - ये भूताः प्रचरन्ति नक्तं बलिमिच्छन्तो वितुदस्य प्रेष्याः। तेभ्यो बलिं पुष्टिकामो हरामि मयि पुष्टिं पुष्टिपतिर्दधातु स्वाहा इत्यनेन वैहायसं बलिं दद्यात् । तच्च नक्तमेव। वैहायसमिति वचनात् आकाश एव बलिरुत्क्षेप्यः। न छदिः परिष्कृते देशे ।। तथा च बोधायनः – अथाकाश उत्क्षिपति ये भूता इति ।।

'பலீநாம் + பரிஷேசனம்' என்று முன் சொல்லியதற்கு மறுப்பு 'தயோ: நாநாபரிஷேசனம்' என்பது. அந்த இரண்டு பலிகளுக்கும் நாநா - தனியாய்ப் பரிஷேசனம் செய்ய வேண்டும். ஏன்? தர்மபேதத்தால். பித்ரு பலிக்கு அப்ரதக்ஷிணமாய்ப் பரிஷேசனம். ரௌத்ர பலிக்கு ப்ரதக்ஷிணமாய்ப் பரிஷேசனம். உத்தமே - முடிவிலுள்ள 'யேபூதா: + ஸ்வாஹா' என்ற மந்த்ரத்தால் வைஹாயஸ பலியைக் கொடுக்க வேண்டும். அது ராத்ரியில் மட்டும். 'வைஹாயஸம்' என்றிருப்பதால், ஆகாசத்திலேயே பலியைத் தூக்கிப் போடவேண்டும். கூரையால் மறைக்கப்பட்ட ப்ரதேசத்திற் கூடாது. அவ்விதமே,

போதாயனர்:- *'பிறகு 'யேபூதா:' என்பதால் ஆகாசத்தில் பலியை எறியவேண்டும், என்கிறார்.*

अपर आह– एवकारो भिन्नक्रमः । नक्तमुत्तमेनैव बलिरिति । तत्र बल्यन्तराणां रात्रौ निवृत्तिः । अन्ये तु दिवा बलिमिच्छन्त इत्यूहेन दिवाऽपि बलिं हरन्ति ॥ तथा चाश्वलायनः – दिवाचारिभ्य इति दिवा नक्तंचारिभ्य इति नक्तम् इति ॥

மற்றொருவர் சொல்லுகிறார் 'ஏவ' என்பதற்கு க்ரமம் மாறியுள்ளது. 'உத்தமேனைவபலி:' என்று சேர்க்க வேண்டும். அங்கு, ராத்ரியில் மற்றப் பலிகள் நிவ்ருத்திக்கின்றன. பூதபலி மட்டுமே உண்டென்பது பொருள். சிலரோவெனில், 'திவாபலிமிச்சந்த:' என்று ஊஹித்துப் பகலிலும் பூதபலியைச் செய்கின்றனர். அவ்விதமே, ஆச்வலாயனர்:- 'திவாசாரிப்ய:' என்று பகலில், 'நக்தஞ்சாரிப்ய:' என்று ராத்ரியில், என்றார்.

मनुरपि – विश्वेभ्यश्चैव देवेभ्यो बलिमाकाश उत्क्षिपेत् । दिवाचरेभ्यो भूतेभ्यो नक्तंचारिभ्य एव च इति ॥ बलिदेशसंस्कारोऽप्यापस्तम्बेनोक्तः – बलीनां तस्य तस्य देशसंस्कारो हस्तेन परिमृज्यावोक्ष्य न्युप्य पश्चात् परिषेचनम् इति । बलीनां मध्ये तस्य तस्य बलेर्देशसंस्कारः कर्तव्यः । कः पुनरसौ? हस्तेन परिमार्जनमवोक्षणं च । तत् कृत्वा बलिं निवपति । न्युप्य पश्चादेकैकस्मिन् देशे समवेतानां सकृत् परिषेचनं इत्यर्थः ॥ स एव – सति सूपसंसृष्टेन कार्याः इति । व्यञ्जनैः सूपेन च संसृष्टेनान्नेन बलयः कार्याः । सति संभव इत्यर्थः ॥ तथा च बोधायनः – एष एव व्यञ्जनानां संस्कारः सूपस्यापि इति ॥ गौतमः – दिग्देवताभ्यश्च यथास्वं गृहस्य द्वार्षु मरुद्भ्यो गृहदेवताभ्यः प्रविश्य ब्रह्मणे मध्येऽद्भ्य उदकुम्भ आकाशायेत्यन्तरिक्षे नक्तं चरेभ्यश्च सायम् इति ॥ दिग्देवताभ्यः -

इन्द्रादिभ्यः अष्टभ्यः प्रागादिदिक्षु प्रदक्षिणं बलिर्हर्तव्यः ।। यावन्ति गृहस्य द्वाराणि तेषु सर्वेषु मरुद्भ्यः स्वाहा इति बहिः स्थितो बलिं हृत्वा ततोऽन्तः प्रविश्य गृहदेवताभ्यो बलिं हरेत् ।। अत्रैके गृहदेवताभ्यः स्वाहेति मन्त्रं मन्यन्ते ।। आश्वलायने तथा दर्शनात् । अन्ये गृहे या देवताः, ताभ्यस्तेन तेन शब्देन बलिर्हर्तव्यः इत्याहुः ।

மனுவும்:- *விச்வதேவர்களுக்கும், திவாசர பூதங்களுக்கும், நக்தஞ்சாரி பூதங்களுக்கும் பலியை ஆகாசத்தில் போடவேண்டும். பலி வைக்கப்படும் தேசத்தின் ஸம்ஸ்காரத்தைச் சொல்லியுள்ளார்,* **ஆபஸ்தம்பர்:-** *பலிகளுக்குள் ஒவ்வொரு பலிக்கும் தேச ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். அது என்ன? எனில், கையினுல் துடைப்பதும் நீர்தெளிப்பதும். அதைச் செய்து பலியை வைக்க வேண்டும். வைத்த பிறகு, ஒவ்வோரிடத்திலும் சேர்ந்துள்ள பலிகளுக்கு ஒவ்வொரு தடவை பரிஷேசனம் என்பது பொருள்.* **ஆபஸ்தம்பரே:-** *வ்யஞ்சனங்களுடனும், ஸூபத்துடனும் சேர்ந்துள்ள அன்னத்தால் பலிகளைக் கொடுக்க வேண்டும்; இருக்குமாகில். அவ்விதமே,* **போதாயனர்:-** *இதுவே வ்யஞ்சனங்களுக்கும் ஸூபத்திற்கும் ஸம்ஸ்காரமாம்.*

கௌதமர்:- *'திக் தேவதைகளுக்கு அவரவர் திக்கில், வீட்டின் வாயில்களில் மருத்துக்களுக்கும், வீட்டினுள் நுழைந்து க்ருஹ தேவதைகளுக்கும், வீட்டின் நடுவில் ப்ரம்ஹாவுக்கும், உதகும்பத்தில் அப்புகளுக்கும், ஆகாசத்தில் அந்தரிக்ஷத்திற்கும், ஸாயங்காலத்தில் நக்தஞ்சர பூதங்களுக்கும் பலியைக் கொடுக்க வேண்டும்.' என்பது ஸூத்ரம். இதன் பொருள் - திக் தேவதைகளுக்கு - இந்த்ராதிகளெட்டுப் பேர்களுக்குக் கிழக்கு முதலான திக்குகளில் ப்ரதக்ஷிணமாய்ப் பலியைக் கொடுக்க வேண்டும். வீட்டில் எவ்வளவு வாயில்களோ அவைகளெல்லாவற்றிலும், மருத்ப்ய: ஸ்வாஹா என்று வெளியிலிருந்து பலியை வைத்துப் பிறகு உள்ளே*

நுழைந்து க்ருஹ தேவதைகளுக்குப் பலியைக் கொடுக்க வேண்டும். இங்கு சிலர் 'க்ருஹதேவதாப்ய: ஸ்வாஹா' என்று மந்த்ரத்தைச் சொல்லுகின்றனர். ஆச்வலாயனத்தில் அவ்விதம் இருப்பதால். சிலர் - க்ருஹத்தில் உள்ள தேவதைகள் எவையோ அவைகளுக்கு அந்தந்தச் சப்தத்தால் பலியைக் கொடுக்க வேண்டும் என்கின்றனர்.

ताश्चोशनसा दर्शिताः – शयनस्य शिरःस्थाने श्रियै नम इति दद्यात्। पादस्थाने भद्रकाल्यै नम इति। गोष्ठागारे धनपतये नम इति। स्तम्भनिलये रुद्राय नम इति । गोष्ठे मित्राय नम इति । उलूखलमुसलयोर्वरुणाय नम इति। कूपे अहये बुध्नियाय नम इति। पेषिण्यामग्निसमीपे चैताभ्यो देवताभ्यो नम इति। गृहमध्ये ब्रह्मणे स्वाहेति । उदकुम्भसमीपेऽद्भ्यः स्वाहेति । अन्तरिक्षे आकाशाय स्वाहेति । नक्तंचरेभ्यः स्वाहेति सायमाकाशे बलिरुत्क्षेप्यः इति गौतमवचनार्थः ॥

அந்தத் தேவதைகளும் உசனஸ்ஸினால் சொல்லப்பட்டுள்ளனர். படுக்கையின் தலைப்பக்கத்தில் 'ச்ரியை நம:' என்று கொடுக்க வேண்டும். கால்பக்கத்தில் 'பத்ரகாள்யை நம:' என்று. கொட்டில் வீட்டில் 'தனபதயே நம:' என்று. ஸ்தம்பஸ்தானத்தில் 'ருத்ராய நம:' என்று. மாட்டுக் கொட்டிலில் 'மித்ராய நம:' என்று. உரல், உலக்கை இவைகளில் 'வருணாய நம:' என்ற. கிணற்றில் 'அஹயே புத்னியாய நம:' என்று. அம்மியிலும் அக்னி ஸமீபத்திலும் 'ஏதாப்யோ தேவதாப்யோ நம:' என்று. க்ருஹத்தின் நடுவில் 'ப்ரம்ஹணே ஸ்வாஹா' என்று. ஜலகும்ப ஸமீபத்தில் 'அத்ப்ய: ஸ்வாஹா' என்று. அந்தரிக்ஷத்தில் 'ஆகாசாய ஸ்வாஹா' என்று. 'நக்தஞ்சரேப்ய: ஸ்வாஹா' என்று மாலையில் ஆகாசத்தில் பலியை உயர்த்திப் போட வேண்டும். என்பது கௌதம வசனத்தினர்த்தமாம்.

मनुरपि — एवं सम्यग्घविर्हुत्वा सर्वदिक्षु प्रदक्षिणम् । इन्द्रान्तकाप्पतीन्दुभ्यः सानुगेभ्यो बलिं हरेत् ॥ मरुद्भ्य इति तु द्वारि हरेदप्स्वद्भ्य इत्यपि । वनस्पतिभ्य इत्येवं मुसलोलूखले हरेत् ॥ उच्छीर्षके श्रियै दद्याद्भद्रकाल्यै तु पादतः । ब्रह्मवास्तोष्पतिभ्यां तु वास्तुमध्ये बलिं हरेत् ॥ विश्वेभ्यश्चैव देवेभ्यो बलिमाकाश उत्क्षिपेत् । दिवाचरेभ्यो भूतेभ्यो नक्तञ्चारिभ्य एव च ॥ पृष्ठवास्तुनि कुर्वीत बलिं सर्वानुभूतये । पितृभ्यो बलिशेषं तु सर्वं दक्षिणतो हरेत् इति ।

மனுவும்:- இவ்விதம் நன்றாய் ஹவிஸ்ஸை ஹோமம் செய்து நான்கு திக்குகளிலும் ப்ரதக்ஷிணமாய் அனுசரர்களுடன் கூடிய இந்த்ரன், யமன், வருணன், ஸோமன் இவர்களுக்குப் பலியைக் கொடுக்க வேண்டும். 'மருத்ப்ய:' என்று வாயிலிலும், 'அத்ப்ய:' என்று ஜலத்திலும். 'வநஸ்பதிப்ய:' என்று உலக்கையிலும், உரலிலும், உச்சீர்ஷகத்தில் படுக்கையின் தலைப்ரதேசத்தில் 'ச்ரியை' என்றும். கால்ப்ரதேசத்தில் 'பத்ரகாள்யை' என்றும், வீட்டின் மத்யத்தில் 'ப்ரம்ஹணே', வாஸ்தோஷ்பதயே' என்றும், பலியைக் கொடுக்க வேண்டும். 'விச்வேப்யோ தேவேப்ய:' என்று பலியை வீட்டின் ஆகாசத்தில் உயர்த்திப் போடவேண்டும். திவாசர பூதங்களுக்குப் பகலிலும், நக்தஞ்சாரி பூதங்களுக்கு ராத்ரியிலும், வீட்டின் பின்புறத்தில் 'ஸர்வா(னு)த்ம பூதயே' என்றும் பலியைக் கொடுத்து, மீதியுள்ள அன்னம் முழுவதையும் ப்ராசீனவீதியாய் 'ஸ்வதா பித்ருப்ய:' என்று தென்புறத்தில் வைக்க வேண்டும்.

इदं बलिहरणं व्यजनाकार मग्निसमीपे शिष्टाः कुर्वन्ति ॥ अत्र कात्यायनः – ध्वजाकारं नराकारं तथा वल्मीकरूपकम् । चक्राकारं च काम्यानां बलीनां लक्षणं विदुः ॥ चतुर्ष्वेतेषु विप्राणां नित्या चक्राकृतिर्भवेत् । चक्राकारमथाष्टारं कुर्यादग्निसमीपतः इति ॥ शौनकोऽपि – आयुष्कामो दिवारात्रौ स्रुवाकारं बलिं हरेत् ।

आयुरारोग्यकामस्तु ध्वजाकारं बलिं हरेत् ॥ मृत्युरोगविनाशार्थी नराकारं बलिं हरेत् । जनवश्यं कर्तुकामो वल्मीकाख्यं बलिं हरेत् ॥ आयुरारोग्य सौभाग्य पुत्रविद्यापशून् प्रति । कामश्च धनमोक्षादौ चक्राकारं बलिं हरेत् ॥ बदरीफलमात्रान्नमङ्गुल्यग्रैर्भुवि क्षिपेत् इति ।

இந்தப் பலிஹரணத்தை விசிறியின் வடிவமுடையதாய் அக்னியின் ஸமீபத்தில் சிஷ்டர்கள் செய்கின்றனர். இதில், காத்யாயனர்:- த்வஜாகாரமாயும், நராகாரமாயும், புற்றிஞகாரமாயும், சக்ராகாரமாயும் காம்ய பலிகளின் லக்ஷணத்தைச் சொல்லுகின்றனர். இந்த நான்கு பக்ஷங்களுள் ப்ராம்ஹணர்களுக்குச் சக்ராகாரமே நித்யமாய் ஆகின்றது. அல்லது சக்ராகாரமாய், எட்டு ஆரங்களுள்ளதாயும் அக்னி ஸமீபத்தில் செய்யலாம். சௌனகரும்:- ஆயுஸ்ஸை விரும்பியவன், பகலிலும், இரவிலும் ஸ்ருவம் போன்ற பலிஹரணம் செய்ய வேண்டும். ஆயுஸ்ஸையும், ஆரோக்யத்தையும் விரும்பியவன் த்வஜம் போன்ற பலிஹரணம் செய்ய வேண்டும். ம்ருத்ய் ரோகம் இவைகளைப் போக்க விரும்பியவன் மனிதன் போன்ற பலிஹரணம் செய்ய வேண்டும். ஜனங்களை வசப்படுத்த விரும்பியவன் புற்றைப் போன்ற பலிஹரணம் செய்ய வேண்டும் ஆயுஸ், ஆரோக்யம், ஸௌபாக்யம், புத்ரர், வித்யை, பசுக்கள், தனம், மோக்ஷம் முதலியவைகளை விரும்பியவன் சக்ராகாரமான பலிஹரணம் செய்ய வேண்டும். இலந்தைக் கனியின் அளவுள்ள அன்னத்தை விரல்களின் நுனிகளால் பூமியில் வைக்க வேண்டும்.

व्यासः —श्वभ्यश्च श्वपचेभ्यश्च पतितादिभ्य एव च । दद्याद्भूमौ बहिस्त्वन्नं पक्षिभ्योऽथ द्विजोत्तमः इति ॥ मार्कण्डेयोऽपि – एवं गृहबलिं कृत्वा गृहे गृहपतिः शुचिः । आप्यायनाय भूतानां कुर्यादुत्सर्गमादरात् इति ॥ याज्ञवल्क्यः – देवेभ्यस्तु हुतादन्नात् शेषात् भूतबलिं हरेत् । अन्नं भूमौ श्वचण्डाल वायसेभ्यश्च निक्षिपेत् ॥

संक्षालनमथान्नेन निनयेत् प्रागुदग्दिशि इति ।। मनुरपि – शुनां च पतितानां च श्वपचां पापरोगिणाम् । वायसानां कृमीणां च शनकैर्निर्वपेद्भुवि इति ।। स्मृत्यर्थसारेऽपि – भूतयज्ञबलिशेषं सोदकं स्वधा पितृभ्य इति प्राचीनावीती पितृभ्यो दद्यात् ततस्तथैव बहिर्निवेशनान्ते सोदकमन्नं श्वचण्डालपतितवायसेभ्यश्च निक्षिपेत् इति ।

வ்யாஸர்:- *ச்வா (நாய்), ச்வபசர்கள் (நாயாடி) பதிதர் முதலானவர், பக்ஷிகள் இவர்களுக்கும், வெளியில் பூமியில் அன்னத்தைக் கொடுக்க வேண்டும்.* **மார்க்கண்டேயரும்**:- *க்ருஹஸ்தன் க்ருஹத்தில் இவ்விதம் க்ருஹபலி தானத்தைச் சுத்தனாய்ச் செய்து, பூதங்களுக்கு த்ருப்தி செய்ய அன்னத்தைக் கொடுக்க வேண்டும்.* **யாக்ஞவல்க்யர்**:- தேவர்களுக்கு ஹோமம் செய்து மீந்த *அன்னத்தினின்றும் பூத பலிதானம் செய்ய வேண்டும். ச்வா, சண்டாளன், வாயஸம் இவர்களுக்கும் அன்னத்தைப் பூமியில் வைக்க வேண்டும். பிறகு பாத்ரத்தை அலம்பி அந்த ஜலத்தை அன்னத்துடன் வடகிழக்கில் விடவேண்டும்.* **மனுவும்**:- *நாய்கள், பதிதர்கள், ச்வபசர்கள், பாபரோகிகள், (குஷ்டரோகிகள், அல்லது க்ஷயரோகிகள்) வாயஸங்கள், க்ரிமிகள் இவர்களுக்கும் அன்னத்தைப் பூமியில் மெதுவாய்க் கொடுக்க வேண்டும்.* **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலும்**:- *பூதயக்ஞ பலிகள் செய்து மீந்த அன்னத்தை ஜலத்துடன், 'ஸ்வதாபித்ருப்ய:' என்ற மந்த்ரத்தால், ப்ராசீனாவீதியாய்ப் பித்ருக்களுக்குக் கொடுக்க வேண்டும். பிறகு அப்படியே வீட்டின் வெளியில் ஜலத்துடன் கூடிய அன்னத்தை ச்வ சண்டாள பதித வாயஸங்களின் பொருட்டு வைக்க வேண்டும்.*

तत्र मन्त्रो विष्णुपुराणे दर्शितः— देवा मनुष्याः पशवो वयांसि सिद्धाः सदैत्योरगयक्षसङ्घाः । प्रेताः पिशाचास्तरवः समस्ताः ये चान्नमिच्छन्ति मयाऽत्र दत्तम् ।। पिपीलिकाः

कीटपतङ्गकाद्या बुभुक्षिताः कर्मनिबन्धबद्धाः । प्रयान्तु ते तृप्तिमिदं मयाऽन्नं तेभ्यो निसृष्टं सुखिनो भवन्तु ।। येषां न माता न पिता न बन्धुर्नैवास्ति सिद्धिर्न तथाऽन्नमस्ति । तत्तृप्तयेऽन्नं भुवि दत्तमेतत्ते यान्तु तृप्तिं मुदिता भवन्तु ।। भूतानि सर्वाणि तथाऽन्नमेतदहं च विष्णुर्न यतोऽन्यदस्ति । तस्मादहं भूतहिताय भूमावन्नं प्रयच्छामि भवाय तेषाम् । चतुर्दशो लोकगणो य एष तत्र स्थिता येऽखिलभूतसङ्घाः । तृप्त्यर्थमन्नं हि मया निसृष्टं तेषामिदं ते मुदिता भवन्तु ।। इत्युच्चार्य नरो दद्यादन्नं श्रद्धासमन्वितः । भुवि सर्वोपकाराय गृही सर्वाश्रयो यतः इति ।

அதில் மந்த்ரம் தெரிவிக்கப்பட்டுள்ளது விஷ்ணு புராணத்தில்:- 'தேவா மனுஷ்யா: + முதிதாபவந்து' என்பது மந்த்ரம். இதன் பொருள் - 'தேவர், மனிதர், பசுக்கள், பக்ஷிகள், ஸித்தர், தைத்யர், உரகர், யக்ஷர், ப்ரேதர், பிசாசர், வ்ருக்ஷங்கள், நான் கொடுக்கும் அன்னத்தை விரும்புகிறவரும், எறும்புகள், கீடங்கள், விளக்குப் பூச்சிகள் என்ற இவர்கள் பசியுற்றவராய், முன்வினையால் கட்டப்பட்டவராய் இருப்பவர் த்ருப்தியை அடையவேண்டும். இந்த அன்னம் என்னால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஸுகமுடையவராய் ஆகவேண்டும். எவருக்குத் தாயில்லையோ, பிதாவுமில்லையோ, பந்துவுமில்லையோ, ஸித்தியில்லையோ, அன்னமுமில்லையோ, அவரின் த்ருப்திக்காக இந்த அன்னம் பூமியில் கொடுக்கப்பட்டது. அவர் த்ருப்தியை அடையவேண்டும். ஸந்துஷ்டராக வேண்டும். ஸகல ப்ராணிகளும், இந்த அன்னமும், நானும் விஷ்ணுவே. அவரினும் வேறு ஒன்றுமில்லை. ஆகையால் நான் பூதங்களின் ஹிதத்திற்காகப் பூமியில் அன்னத்தை, அவர்களின் நன்மைக்காகக் கொடுக்கிறேன். நான்கு திக்குகளும், ஸகல உலகங்களும், அவைகளிலுள்ள ஸகல பூத கணங்களும், எவையோ அவைகளின் த்ருப்திக்காக

இந்த அன்னம் என்னுல் கொடுக்கப்பட்டது. அவர் த்ருப்தராகக் கடவர்' என்று. இவ்விதம் மந்த்ரத்தை உச்சரித்து, ச்ரத்தையுடன் எல்லாருடையவும் உபகாரத்திற்காகப் பூமியில் அன்னத்தைக் கொடுக்க வேண்டும். ஏனெனில்? க்ருஹஸ்தன் எல்லோருக்கும் ஆச்ரயமாயிருப்பவன்.

मार्कण्डेयः – ततः शनैर्बलिं दद्यात् बहिः काकशुनां तथा। तत्र मन्त्रः – ऐन्द्रवारुणवायव्याः सौम्या याम्याश्च नैऋताः। वायसाः प्रतिगृह्णन्तु भूमौ पिण्डं मयाऽर्पितम् ॥ श्वानौ हि श्यामशबलौ वैवस्वतकुलोद्भवौ। ताभ्यां पिण्डं मया दत्तं स्यातां मे तावहिंसकौ। मन्त्राभ्यामेव चैताभ्यां श्वकाकबलिमुत्सृजेत्। दत्वाऽनेन विधानेन बलिं पश्चादुपस्पृशेत् इति ॥

மார்க்கண்டேயர்:- பிறகு காக்கைகள், ச்வாக்கள் இவைகளுக்கும் பலியை மெதுவாய்க் கொடுக்க வேண்டும். அதில் மந்த்ரம்- 'ஐந்த்ரவாருண + வஹிம்ஸகௌ' என்பது. இதன் பொருள் - 'இந்த்ரன், வருணன், வாயு, ஸோமன், யமன், நிர்ருதி இவர்களைச் சேர்ந்த காக்கைகள், என்னுல் பூமியில் வைக்கப்பட்ட அன்னத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கறுப்பு நிறமும், பல வர்ணங்களும் உடையதும், வைவஸ்வதனின் குலத்திற் பிறந்ததுமான நாய் இரண்டு எவையோ, அவைகளுக்கு அன்னம் என்னுல் கொடுக்கப்பட்டது. அவரிருவரும் என்னை ஹிம்ஸிப்பவரல்லாதவராய் ஆகவேண்டும்' என்பதாம். இந்த இரண்டு மந்த்ரங்களால் ச்வ காகபலியைக் கொடுக்க வேண்டும். இந்த விதிப்படி பலியைக் கொடுத்துப் பிறகு ஆசமனம் செய்ய வேண்டும்.

मुख्यानुकल्पभेदेन पितृयज्ञस्वरूपमाह कात्यायनः – श्राद्धं वा पितृयज्ञः स्यात् पित्र्यो बलिरथापि वा। एकमप्याशयेन्नित्यं पितृयज्ञार्थसिद्धये॥ अदेवं नास्ति चेदन्यो भोक्ता भोज्य मथापि वा।

अप्युद्धृत्य यथाशक्ति किञ्चिदन्नं यथाविधि । पितृभ्य इदमित्युक्त्वा स्वधाकारमथाहरेत् इति ॥ व्यासः– एकं तु भोजयेद्विप्रं पितॄनुद्दिश्य सादरम् । नित्यं श्राद्धं समुद्दिष्टं पितृयज्ञो गतिप्रदः ॥ उद्धृत्य वा यथाशक्ति किञ्चिदन्नं समाहितः । वेदतत्वार्थविदुषे द्विजायैव प्रदापयेत् । विप्राभावे तु पिण्डं वा दद्यात् दक्षिणतो भुवि । कुक्कुटाण्डप्रमाणस्तु पिण्ड इत्यभिधीयते इति ॥

முக்ய கல்பம், கௌண கல்பம் என்ற பேதத்துடன், பித்ரு யக்ஞத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறுர், **காத்யாயனர்:-** ச்ராத்தமே பித்ருயக்ஞம் எனப்படும். அல்லது பித்ருபலியாவது பித்ருயக்ஞம் எனப்படும். ப்ரதிதினமும், பித்ருயக்ஞம் ஸித்திப்பதற்காக, ஒருவனையாவது, விச்வதேவரில்லாமல் புஜிக்கச் செய்ய வேண்டும். போக்தாவான ஒருவன் கிடைக்காவிடில், போஜனார்ஹமான வஸ்துவும் கிடைக்காவிடில், தன் சக்திக்கியன்றபடி, ஸ்வல்பமான அன்னத்தை எடுத்து, விதிப்படி, 'பித்ருப்ய இதம் ஸ்வதா' என்று சொல்லிப் பூமியில் வைக்க வேண்டும். **வ்யாஸர்:-** பித்ருக்களை உத்தேசித்து, ஆதரவுடன் ஒரு ப்ராம்ஹணனைப் புஜிப்பிக்க வேண்டும். இந்த ச்ராத்தம் நித்யமெனச் சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பித்ருயக்ஞம் நற்கதியைக் கொடுப்பதாகும். அல்லது யதாசக்தி ஸ்வல்ப அன்னத்தை எடுத்துக் கவனமுடையவனுய், வேதத்தின் அர்த்தத்தை அறிந்துள்ள ப்ராம்ஹணனுக்கே கொடுக்கவும். ப்ராம்ஹணன் இல்லாவிடில், தென்புறத்தில் ஒரு அன்ன பிண்டத்தையாவது வைக்க வேண்டும். கோழி முட்டையளவுள்ளது பிண்டமெனப்படுகிறது.

मनुः— दद्यादहरहः श्राद्धमन्नाद्येनोदकेन वा । पयोमूलफलैर्वाऽपि पितृभ्यः प्रीतिमावहन् ॥ एकमप्याशयेन्नित्यं पित्रर्थे पाञ्चयज्ञिके । न चैवात्राशयेत् कश्चिद्वैश्वदेवं प्रति द्विजम् इति ॥ मार्कण्डेयोऽपि – पितॄनुद्दिश्य विप्रांस्तु भोजयेद्विप्रमेव वा इति ॥

तत्प्रकारमाह प्रचेताः – नावाहनाग्नौकरणे न पिण्डो न विसर्जनम्। दत्वा तु दक्षिणां शक्त्या नमस्कारैर्विसर्जयेत्॥ एकमप्याशयेन्नित्यं षण्णामप्यन्वहं गृही इति॥

மனு:- ஒவ்வொரு நாளிலும், பித்ருக்களுக்கு ப்ரீதி செய்பவனாய், அன்னம் முதலியதாலாவது, ஜலத்தினாலாவது, பால், வேர், பழம் இவைகளாலாவது ச்ராத்தம் செய்ய வேண்டும். பஞ்சயக்ஞத்தைச் சேர்ந்த பித்ருயக்ஞத்தில், ஒருவனையாவது புஜிப்பிக்க வேண்டும். இதில் விச்வதேவருக்காக ஒருவனையும் புஜிப்பிக்க வேண்டியதில்லை. **மார்க்கண்டேயரும்:**- பித்ருக்களை உத்தேசித்து, ப்ராம்ஹணர்களைப் புஜிப்பிக்க வேண்டும். ஒரு ப்ராம்ஹணனையாவது புஜிப்பிக்க வேண்டும். அதன் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார். **ப்ரசேதஸ்:**- ஆவாஹனமில்லை, அக்னியில் ஹோமமில்லை, பிண்டமில்லை, விஸர்ஜனமுமில்லை, யதாசக்தி தக்ஷிணையைக் கொடுத்து நமஸ்காரங்களுடன் அனுப்ப வேண்டியது. க்ருஹஸ்தன் ப்ரதிதினமும் ஆறுபேர்களின் ஸ்தானத்தில் ஒருவனையாவது புஜிப்பிக்க வேண்டும்.

स्मृत्यर्थसारे – नित्यश्राद्धमदैवं षट्पुरुषं च भवति, तत्र न देशकालनियमाः कर्त्रादिनियमाः इति॥ सारसमुच्चये – नित्यश्राद्धं तु यन्नाम दैवहीनं तदुच्यते। तत्तु त्रिपूरुषं ज्ञेयं दक्षिणापिण्डवर्जितम् इति। व्यासोऽपि – नित्यश्राद्धे तु गन्धाद्यैर्द्विजानभ्यर्च्य शक्तितः। सर्वान् पितृगणान् सम्यक्सहैवोद्दिश्य भोजयेत्। आवाहनस्वधाकार- पिण्डाग्नौ करणादिकम्। ब्रह्मचर्यादिनियमो विश्वेदेवास्तथैव च॥ नित्यश्राद्धे त्यजेदेतान् भोज्यमन्नं प्रकल्पयेत् इति॥ शातातपः – नित्यश्राद्धमदैवं स्यादर्घ्यपिण्डादिवर्जितम् इति।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- நித்ய ச்ராத்தமென்பது விச்வே தேவரில்லாததும், ஆறுபேர்களை உத்தேச்யரா யுடைதுமாம். அதில் தேசம், காலம், நியமம் இவையில்லை.

கர்த்தா முதலியவரின் நியமங்களுமில்லை. **ஸாரஸமுச்சயத்தில்:-** நித்யச்ராத்தமென்பது விச்வே தேவரில்லாதது எனப்படுகிறது. அது மூன்று புருஷர்களை உத்தேசித்துள்ளது. தக்ஷிணையும் பிண்டமுமில்லை. **வ்யாஸரும்:-** நித்ய ச்ராத்தத்தில் யதாசக்தி, கந்தம் முதலியதால் ப்ராம்ஹணர்களைப் பூஜித்து, பித்ரு கணங்களெல்லோரையும் சேர்த்தே உத்தேசித்துப் புஜிப்பிக்க வேண்டும். ஆவாஹனம், ஸ்வதாகாரம், பிண்டம், ஹோமம் முதலியது, ப்ரம்ஹசர்யம் முதலிய நியமம், விச்வேதேவர் இவைகளை த்யஜிக்க வேண்டும். போஜனார்ஹமான அன்னத்தைக் கொடுக்க வேண்டும். **சாதாதபர்:-** நித்ய ச்ராத்தம் என்பது, விச்வேதேவர், அர்க்யம், பிண்டம் முதலியவை இல்லாததாகும்.

मत्स्यपुराणेऽपि — नित्यं तावत् प्रवक्ष्यामि अर्घ्यावाहन-वर्जितम् । अदैवं तद्विजानीयात् पार्वणे तद्धि कीर्तितम् इति ॥ रत्नावल्याम् – पितृगाथा - अपि स्यात् स कुलेऽस्माकं यः श्राद्धं नित्यमाचरेत् । पुष्पमूलफलैर्वाऽपि तिलतोयेन वा पुनः इति ॥ अत्र केचित् वैश्वदेवबलिहरणयोः देवयज्ञभूतयज्ञपितृयज्ञाना मन्तर्भाव-माचक्षते ॥ तथा च व्यासः – वैश्वदेवस्तु कर्तव्यो देवयज्ञः स वै स्मृतः । देवेभ्यस्तु हुतादन्नाच्छेषाद्भूतबलिं हरेत् ॥ भूतयज्ञः स विज्ञेयो भूतिदः सर्वदेहिनाम् । श्राद्धं वा पितृयज्ञः स्यात् पित्र्यो बलिरथापि वा इति ॥

மத்ஸ்யபுராணத்திலும்:- நித்யச்ராத்தத்தைச் சொல்லுகிறேன். அது, அர்க்யம், ஆவாஹனமிவை யில்லாததும், தைவதமில்லாததுமாகும். அதெல்லாம் பார்வண ச்ராத்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. **ரத்னாவளியில்:-** பித்ருக்களின் வாக்யமிவ்விதமுள்ளது. 'எவன் ப்ரதிதினமும் புஷ்பம், மூலம், பலம், திலோதகமிவைகளில் ஒன்றினாலாவது நமக்கு ச்ராத்தத்தைச் செய்வானோ, அவன் நம் குலத்தில்

பிறப்பானு?' என்று. இங்கு சிலர், வைச்வதேவம், பலிஹரணம் இவைகளுள், தேவயக்ஞ, பூதயக்ஞ, பித்ருயக்ஞங்களுக்கு அந்தர்ப்பாவத்தைச் சொல்லு கின்றனர். அவ்விதமே, வ்யாஸர்:- வைச்வதேவம் செய்ய வேண்டும், அது தேவயக்ஞம் எனப்பட்டது. தேவர்களுக்கு ஹோமம் செய்து மிகுந்த அன்னத்தினின்றும் பூதபலியைச் செய்ய வேண்டும். அது பூதயக்ஞம் என்றறியவும். இது எல்லோருக்கும் ஐச்வர்யத்தையளிப்பதாகும். ச்ராத்தத்தையாவது பித்ருயக்ஞமெனலாம். அல்லது பித்ரு பலியையாவது பித்ருயக்ஞமெனலாம்.

हारीतोऽपि – वैश्वदेवो देवयज्ञो वास्तुपालनभूतेभ्यो बलिहरणं भूतयज्ञः इति ॥ आपस्तम्बः – अहरहर्भूतबलिर्मनुष्येभ्यो यथा-शक्तिदानं देवेभ्यः स्वाहाकार आकाष्ठात् पितृभ्यः स्वधाकार ओद पात्रात् स्वाध्यायः इति ॥

ஹாரீதரும்:- வைச்வதேவம் தேவயக்ஞமெனப் படுகிறது. வீட்டைப் பரிபாலிக்கும் பூதங்களுக்குப் பலியைக் கொடுப்பது பூதயக்ஞமெனப்படுகிறது. ஆபஸ்தம்பர் :- ப்ரதிதினம் பூதங்களுக்குப் பலிகொடுப்பதும், மனிதருக்கு யதாசக்தி தானமும், தேவர்களுக்கு ஒரு ஸமித்தையாவது ஸ்வாஹா என்று ஹோமம் செய்வதும், பித்ருக்களுக்கு ஜலத்துடன் பாத்ரத்தையாவது ஸ்வதா என்று கொடுப்பதும், தன் வேதத்தை அத்யயனம் செய்வதும் ஐந்து யக்ஞங்களாகும்.

अत्रोज्ज्वला – अपरेणाग्निं सप्तमाष्टमाभ्यामुदगपवर्गमिति बलिहरणप्रकारेण भूतेभ्योऽहरहर्बलिर्देय एष भूतयज्ञः । मनुष्येभ्यश्च यथाशक्ति दानं कर्तव्यम् । एष मनुष्ययज्ञः । देवेभ्यश्च स्वाहाकारेण प्रदानमाकाष्ठात् । अशनीयाभावे षड्भिराद्यैः प्रतिमन्त्रमिति वैश्वदेवोक्तप्रकारेण काष्ठमपि तावद्देयम् । एष देवयज्ञः । केचिद्वैश्वदेवाहुतिभ्यः पृथग्भूतां देवेभ्यः स्वाहेत्येकामाहुतिं मन्यन्ते ।

वयं तु न तथा । पितृभ्यः स्वधाकार ओदपात्रात् । अन्नाद्यभावे उदपात्रमपि स्वधाकारेण देयम् । एष पितृयज्ञः । स्वाध्यायः - नित्यस्वाध्यायः । एष ब्रह्मयज्ञः । एते महायज्ञाः इति ।। माधवीये – त एते देवयज्ञपितृयज्ञभूतयज्ञास्त्रयोऽपि वैश्वदेवशब्देनोच्यन्ते इति ।।

இங்கு உஜ்வலை இவ்விதமுள்ளது. 'அக்னிக்கு மேல்புறத்தில்' என்று சொல்லியபடி பூதங்களுக்கு ப்ரதிதினமும் பலி கொடுக்கப்பட வேண்டும், இது பூதயக்ஞம். மனுஷ்ய யஜ்ஞும். யதாசக்தி தானம் செய்ய வேண்டும். இது மனுஷ்யர்களுக்கும் தேவர்களுக்கும் ஸ்வாஹாகாரத்தினால் ஸமித்தையாவது கொடுக்க வேண்டும். புஜிக்கக் கூடிய வஸ்துவில்லாவிடில், வைச்வதேவத்தில் சொல்லியபடி ஆறு மந்த்ரங்களால் ஸமித்தையாவது ஹோமம் செய்ய வேண்டும். இது தேவயக்ஞம். சிலர் வைச்வதேவாஹுதிகளைத் தவிர்த்துத் தனியாய் 'தேவேப்ய:ஸ்வாஹா' என்று ஒரு ஆஹுதியைத் தேவயக்ஞம் என்கின்றனர். நாம் அவ்விதம் சொல்லவில்லை. அன்னம் முதலியதில்லாவிடில் ஜலபாத்ரத்தையாவது 'ஸ்வதா' என்று கொடுக்க வேண்டும். இது பித்ருயக்ஞம். ப்ரதிதினமும் வேதாத்யயனம் செய்வது ப்ரம்ஹயக்ஞம். இவை மஹாயக்ஞங்களாம். மாதவீயத்தில்:- இந்தத் தேவயக்ஞ, பித்ருயக்ஞ, பூதயக்ஞங்கள் மூன்றும் வைச்வதேவ சப்தத்தால் சொல்லப்படுகின்றன.

स्मृत्यर्थसारेऽपि – देवयज्ञो वैश्वदेवाख्यं कर्म । देवयज्ञहुतशेषेण शुद्धं देशमभ्युक्ष्य बलिहरणं कुर्यादेष भूतयज्ञः । बलिशेषं सोदकं स्वधा पितृभ्य इति प्राचीनावीती पितृभ्यो दद्यादेष पितृयज्ञः । एते देवयज्ञभूतयज्ञ पितृयज्ञाः वैश्वदेवमित्युच्यन्ते इति ।। मनुरपि – विधाय पितृयज्ञान्तं वैश्वदेवं ततो बहिः । श्वपाकपतिताद्यर्थमन्नमल्पं क्षिपेद्बहिः इति ।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்திலும்:- தேவயக்ஞம் வைச்வதேவமென்னும் கர்மம். தேவயக்ஞத்தில் ஹோமம் செய்து மீதியுள்ளதால் சுத்தமான ஸ்தலத்தை ப்ரோக்ஷித்துப் பலிஹரணம் செய்ய வேண்டும். இது பூதயக்ஞம். பலிசேஷத்தை ஜலத்துடன் ப்ராசீனாவீதியாய் 'ஸ்வதா பித்ருப்ய:' என்று பித்ருக்களுக்குக் கொடுக்க வேண்டும். இது பித்ருயக்ஞம். இந்தத் தேவயக்ஞ, பூதயக்ஞ, பித்ருயக்ஞங்கள் வைச்வதேவமெனச் சொல்லப்படு கின்றன. **மனுவும்:-** பித்ருயக்ஞம் வரையுள்ள வைச்வதேவத்தைச் செய்து, பிறகு வெளியில் ச்வபாகர், பதிதர் முதலியவர்க்காக ஸ்வல்பமான அன்னத்தை வைக்க வேண்டும்.

बलिहरणस्य वैश्वदेवशब्देनाभिधानमाश्रयाश्रयिणोर-भेदमाश्रित्येति द्रष्टव्यम्। आश्रयाश्रयिभावश्च कालादर्शे दर्शितः – बलीनां वैश्वदेवस्य वदन्त्याश्रयतां बुधाः इति । एवं च देवयज्ञभूतयज्ञपितृयज्ञानां वैश्वदेव बलिहरणात्मकत्वात् पृथङ्न कर्तव्या इति । अन्ये तु पञ्चयज्ञानां पृथक्त्वेन विधानात् तेषां वैश्वदेवबलिहरणयोरनन्तर्भावमाहुः ।। तथा च जमदग्निः – वैश्वदेवं दिवा रात्रौ कुर्याद्बलिहृतिं तथा । महतः पञ्चयज्ञांस्तु दिवैवेत्याह गौतमः इति ।।

பலிஹரணத்தை வைச்வதேவசப்தத்தால் சொல்லுவது, ஆச்ரயாச்ரயிகளின் அபேதத்தால் என்றறியவும். ஆச்ரயாச்ரயிபாவமும் காலாதர்சத்தில் காண்பிவிக்கப்பட்டிருக்கிறது- 'பலிகளுக்கு வைச்வ தேவம் ஆச்ரயமென்று அறிந்தவர் சொல்லுகின்றனர்' என்று. 'இவ்விதம், தேவயக்ஞ, பூதயக்ஞ, பித்ருயக்ஞங்கள் வைச்வதேவ பலிஹரண ரூபமானதால், அவை தனியாய்ச் செய்யப்பட வேண்டியதில்லை' என்று, சிலரோவெனில், பஞ்சயக்ஞங்களைத் தனியாய் விதித்திருப்பதால், அவைகளுக்கு வைச்வதேவ

பலிஹரணங்களுள் அந்தர்ப்பாவமில்லை என்கின்றனர். அவ்விதமே. ஜமதக்னி:- வைச்வதேவம், பலிஹரணம் இவைகளைப் பகலிலும், ராத்ரியிலும் செய்ய வேண்டும். பஞ்சமஹாயக்ஞங்களையோவெனில் பகலில்தான் செய்ய வேண்டும் என்றார் கௌதமர்.

बोधायनोऽपि – अग्नये स्वाहेति षडाहुतीर्जुहोत्येष वैश्वदेवः सन्तिष्ठते, धर्माय स्वाहेत्यादि नमो रुद्राय पशुपतय इत्यन्तं बलीन् हरत्येतद्बलिहरणं सन्तिष्ठते, देवेभ्यः स्वाहेत्यग्नौ जुहोत्येष देवयज्ञः सन्तिष्ठते, पितॄनुद्दिश्यैकं ब्राह्मणं भोजये दपिवा दक्षिणेनाग्निं दर्भान् दक्षिणाग्रान् संस्तीर्य तेषु पिण्डं ददाति पितृभ्यः स्वधाऽस्त्वित्यपि वाऽपस्तत् पितृ यज्ञः सन्तिष्ठते, उत्तरेणाग्निं शुचौ देशे प्रागग्रान् दर्भान् संस्तीर्य गन्धपुष्पधूपदीपैरलङ्कृत्य बलिमुपहरति भूतेभ्यो नम इत्यपः पुष्पाणि तद्भूत यज्ञः सन्तिष्ठते, मनुष्ययज्ञार्थ मतिथिं भोजये दपिवा हन्तकारं ब्राह्मणेभ्यो दद्यात् इति ॥

போதாயனரும்:- 'அக்னயேஸ்வாஹா' என்பது முதலான ஆறு ஆஹுதிகளை ஹோமம் செய்ய வேண்டும், இது வைச்வதேவம் முடிகிறது. 'தர்மாயஸ்வாஹா' என்பது முதல் 'நமோருத்ராய பசுபதயே' என்பது வரையுள்ள மந்த்ரங்களால் பலிகளைக் கொடுக்க வேண்டும். இது பலிஹரணம் முடிகிறது. 'தேவேப்ய:ஸ்வாஹா' என்ற மந்த்ரத்தால் அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும். இது தேவயக்ஞம் முடிகிறது. பித்ருக்களை உத்தேசித்து ஒரு ப்ராம்ஹணனைப் புஜிப்பிக்க வேண்டும். அல்லது அக்னிக்குத் தென்புறத்தில் தெற்கு நுனியுள்ளதாய்த் தர்ப்பங்களைப் பரப்பி அவைகளில் 'பித்ருப்ய: ஸ்வதாஸ்து' என்று பிண்டத்தைக் கொடுக்க வேண்டும், அல்லது ஜலத்தையாவது கொடுக்க வேண்டும். அது பித்ருயக்ஞம் முடிகிறது. அக்னிக்கு வடக்கில் சுத்த ஸ்தலத்தில் கிழக்கு நுனியுள்ளதாய்த் தர்ப்பங்களைப் பரப்பி, கந்தம், புஷ்பம், தூபம், தீபம் இவைகளால் அலங்கரித்து 'பூதேப்யோ நம:'

என்று பலியைக் கொடுக்க வேண்டும். ஜலத்தையும், புஷ்பங்களையும் கொடுக்க வேண்டும். அது பூதயக்ஞம் முடிவடைகிறது. மனுஷ்யயக்ஞத்திற்காக அதிதியைப் புஜிப்பிக்க வேண்டும். அல்லது 'ஹந்தகாரத்தை' (அன்னத்தை) ப்ராம்ஹணர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

आपस्तम्बपरिशिष्टेऽपि – वैश्वदेवबलिहरणानन्तर मग्रं दत्वा देवयज्ञार्थमुद्धृतादन्नात् देवेभ्यः स्वाहेत्येकामग्नौ जुहुयुः, पितृयज्ञार्थमपि वैश्वदेवबलिहरणशिष्टादन्नात् प्राचीनावीतिनो दक्षिणतोऽग्नेः पितृतीर्थेन पितृभ्यः स्वधाऽस्त्विति बलिं हरेयुः, भूतयज्ञार्थमपि वैश्वदेवशिष्टादन्नादेवोत्तरतोऽग्नेर्देवतीर्थेन बलिमुपहरेयुः भूतेभ्यः स्वाहेति, मनुष्ययज्ञार्थमतिथिं भोजयेयु रतिथ्यभावे सङ्कल्पितं दद्युः इति ॥

ஆபஸ்தம்ப பரிசிஷ்டத்திலும்:- *வைச்வதேவம் பலிஹரணம் இவைகளைச் செய்தபிறகு, அக்ரதானம் செய்து, தேவயக்ஞத்திற்காக உத்தரணம் செய்த அன்னத்தினின்றும், 'தேவேப்ய: ஸ்வாஹா என்ற மந்த்ரத்தால் அக்னியில் ஒரு ஆஹுதியைச் செய்ய வேண்டும். பித்ருயக்ஞத்திற்காகவும், வைச்வதேவ பலிஹரண சேஷமான அன்னத்தினின்றும், ப்ராசீனவீதியாய் அக்னிக்குத் தென்புறத்தில் பித்ரு தீர்த்தத்தால் 'பித்ருப்ய: ஸ்வதாஸ்து' என்று பலியைக் கொடுக்க வேண்டும். பூதயக்ஞத்திற்காகவும், வைச்வதேவ சேஷமான அன்னத்தினின்றே அக்னிக்கு வடபுறத்தில் தேவ தீர்த்தத்தால் 'பூதேப்ய:ஸ்வாஹா' என்ற மந்த்ரத்தால் பலியைக் கொடுக்க வேண்டும். மனுஷ்ய யக்ஞத்திற்காக அதிதியைப் புஜிப்பிக்க வேண்டும். அதிதி இல்லாவிடில் ஸங்கல்பிக்கப்பட்ட அன்னத்தை (ப்ராம்ஹணனுக்கு)த் தானம் செய்ய வேண்டும்.*

तात्पर्यदर्शनेऽपि – पञ्चमहायज्ञेभ्यः पृथग्वैश्वदेवम् । प्रकरणान्तरात् संज्ञाभेदाः च कर्मभेदावगतेः । अत एव भाष्ये

वैश्वदेवस्य तेषां च प्रयोगः पृथगेवोपपादितः इति ॥ प्रयोगोऽपि दर्शितस्तत्रैव – गृहमेधिनो यदशनीयमन्नं, ततो होमार्थं हविष्यमन्नं पात्रे कल्पयति । अहविष्यं क्षारलणादिसंसृष्टं द्वितीये । हविष्यमन्नं देवयज्ञाद्यर्थं तृतीये । सर्वतः समवदायाग्रार्थं चतुर्थे । सर्वत एव समवदाय मनुष्ययज्ञार्थं पञ्चमे । ततः परिषेचनं कृत्वा प्रथमकल्पितादन्नात् अग्नये स्वाहेत्यादिभिः षडाहुतीर्हुत्वोत्तर-परिषेचनम् । अथोदीचीनमुष्णं भस्मापोह्य तस्मिन्नहविष्यं स्वाहाकारेण जुहुयात् । अथषडाहुतिशेषमहविष्यशेषेण संसृज्य सूपसंसृष्टेन तेनान्नेन रौद्रान्तं बलिं हृत्वा अग्रं च देयमिति विहितं ग्रासचतुष्टयपर्याप्तमन्नं भिक्षवे दद्यात् ।

தாத்பர்யதர்சனத்திலும்:- 'பஞ்சமஹா யக்ஞங்களினின்றும் தனியாயுள்ளது வைச்வதேவம். ப்ரகரண பேதத்தாலும், நாமபேதத்தாலும் கர்மபேதம் அறியப்படுகிறது. ஆகையால்தான் பாஷ்யத்தில் வைச்வதேவத்திற்கும், பஞ்சமஹாயக்ஞங்களுக்கும் ப்ரயோகம் தனியாகவே சொல்லப்பட்டுள்ளது என்றுள்ளது. ப்ரயோகமும் காண்பிவிக்கப்பட்டுள்ளது **தாத்பர்யதர்சனத்திலேயே**- ''க்ருஹஸ்தனுக்குப் போஜனார்ஹமான அன்னமெதுவோ அதினின்றும் ஹோமத்திற்காக ஹவிஷ்யமான அன்னத்தைப் பாத்ரத்தில் வைக்க வேண்டும். அஹவிஷ்யமாய் உறைப்பு உப்பு முதலியவையுடன் கலந்துள்ளதை இரண்டாவது பாத்ரத்தில் வைக்கவும். ஹவிஷ்யமான அன்னத்தைத் தேவயக்ஞம் முதலியதற்காக மூன்றுவது பாத்ரத்தில் வைக்கவும். எல்லாவற்றினின்றுமெடுத்து அக்ரதானத்திற்காக நான்காவது பாத்ரத்தில் வைக்கவும். எல்லாவற்றினின்றுமேயெடுத்து மனுஷ்ய யக்ஞத்திற்காக ஐந்தாவது பாத்ரத்தில் வைக்கவும். பிறகு பரிஷேசனம் செய்து, முதலாவதாய் வைக்கப்பட்ட அன்னத்தினின்றும் 'அக்னயேஸ்வாஹா என்பது முதலான மந்த்ரங்களால் ஆறு

ஆஹுதிகளைச் செய்து, உத்தர பரிஷேசனம் செய்யவும். பிறகு வடபுறத்திலுள்ள உஷ்ணமான பஸ்மத்தை ஒதுக்கி, அதில் 'ஸ்வாஹா' என்று அஹவிஷ்யத்தை ஹோமம் செய்யவும். பிறகு ஆறுஹுதி செய்து மீந்துள்ளதை அஹவிஷ்யத்தின் மீதியுடன் கலந்து, பருப்புடன் கலந்துள்ள அந்த அன்னத்திஞல் ரௌத்ரபலி வரையில் பலிஹரணம் செய்து, 'அக்ரதானமும் செய்ய வேண்டும்' என்று விதிக்கப்பட்ட நான்கு கபள ப்ரமாணமுள்ள அன்னத்தைப் பிக்ஷுகனுக்குக் (ப்ரம்ஹசாரி, அல்லது ஸன்யாஸிக்கு) கொடுக்கவும்.

अथ देवयज्ञेन यक्ष्य इत्यागूर्य, विद्युदसीत्यपः स्पृष्ट्वा परिषिच्य देवेभ्यः स्वाहेत्यग्नौ हविष्यं हुत्वा परिषिच्य वृष्टिरसीत्यपः स्पृशेत्। एवमितरेष्वपि महायज्ञेषु विद्युद्वृष्टी भवतः । नावषट्कार होमेषु विद्युद्वृष्टी इत्युपदेशः । अथ प्राचीनावीती पितृयज्ञेन यक्ष्य इत्युक्त्वा शुचौ भूमौ हस्तेनाङ्गुष्ठ प्रदेशिन्यावन्तरेण पितृभ्यः स्वधाऽस्त्विति दद्यात्। अथ यज्ञोपवीती भूतयज्ञेन यक्ष्य इत्युक्त्वा शुचौ भूमौ हस्तेन इदं भूतेभ्योऽस्त्विति वा भूतेभ्यः स्वाहेति वा दद्यात्। अथ मनुष्ययज्ञेन यक्ष्य इत्युक्त्वा ब्राह्मणतर्पणं सङ्कल्पितस्य वा दानम् इति ॥

பிறகு, 'தேவயக்ஞேந யக்ஷ்யே', என்று ஸங்கல்ப்பித்து, 'வித்யுதஸி' என்பதால் ஜலத்தைத் தொட்டு, பரிஷேசனம் செய்து 'தேவேப்ய: ஸ்வாஹா' என்பதால் அக்னியில் ஹவிஷ்யத்தை ஹோமம் செய்து, பரிஷேசனம் செய்து, 'வ்ருஷ்டிரஸி' என்பதால் ஜலத்தைத் தொடவும். இவ்விதமே மற்ற மஹாயக்ஞங்களிலும் 'வித்யுத்வருஷ்டி' மந்த்ரங்களால் ஜலத்தைத் தொடுவதென்பதுண்டு. வஷட்காரமில்லாத ஹோமங்களில் 'வித்யுத்வ்ருஷ்டி' மந்த்ரங்கள் இல்லையென்பது ரஹஸ்யம். பிறகு, ப்ராசீஞவீதியாய் 'பித்ருயக்ஞேந யக்ஷ்யே' என்று ஸங்கல்ப்பித்து, சுத்தமான ஸ்தலத்தில் கையிஞல் பெருவிரல் தர்ஜனீ விரல்

இவைகளின் மத்யத்தால் 'பித்ருப்ய:ஸ்வாஸ்து' என்று ஹவிஷ்யத்தை வைக்க வேண்டும். பிறகு உபவீதியாய், 'பூதயக்ஞேநயக்ஷ்யே' என்று ஸங்கல்ப்பித்து, சுத்தமான ஸ்தலத்தில் கையினுல் 'இதம் பூதேப்யோஸ்து' என்ருவது, 'பூதேப்ய:ஸ்வாஹா' என்ருவது ஹவிஷ்யத்தை வைக்க வேண்டும். பிறகு 'மனுஷ்யயக்ஞேந யக்ஷ்யே' என்று ஸங்கல்ப்பித்து, ப்ராம்ஹண போஜனத்தையாவது, ஸங்கல்ப்பிக்கப்பட்ட அன்னத்தின் தானத்தையாவது செய்ய வேண்டும்'' என்று.

सर्वमेतत् संगृह्योक्तं कालादर्शे — वैश्वदेवे बलिहृतावन्तर्भावं प्रचक्षते। ब्रह्मयज्ञान्ययज्ञानां बह्वृचाः केचनर्षयः ॥ बोधायनापस्तम्बौ च बह्वृचा अपि केचन। अनन्तर्भावमप्याहुः पृथक्त्वेनोपदेशतः इति ॥

இது முழுவதும் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டுள்ளது காலாதர்சத்தில் :- வைச்வதேவத்திலும், பலிஹரணத்திலும், ப்ரம்ஹயக்ஞம் தவிர மற்ற யக்ஞங்களுக்கு அந்தர்ப் பாவத்தைச் சில பஹ்வ்ருச ருஷிகள் சொல்லுகின்றனர். போதாயனரும், ஆபஸ்தம்பரும், சில பஹ்வ்ருசருஷிகளும் அந்தர்ப் பாவமில்லை என்கின்றனர், தனியாய்ப் படித்திருப்பதே காரணம்.

अत्र मनुष्ययज्ञस्यापि बलिहरणरूपत्वमाश्रित्य चतुर्णामन्तर्भाव उक्तः ॥ तथा च स्मृत्यर्थसारे – निवीती सनकादिभ्यो मनुष्येभ्यो हन्तेति दद्याद्यद्वा हन्ताकारं हन्तेति त्यजेत् इति ॥ चन्द्रिकायामपि – अतिथिभ्योऽन्नदानं यत् नृयज्ञः सर्वपश्चमः। अशक्तावन्नमुद्धृत्य हन्तेत्येवं प्रकल्पयेत् इति ॥ कात्यायनः – स्वाहाकारवषट्कारनमस्कारा दिवौकसाम्। स्वधाकारः पितॄणां तु हन्ताकारो नृणां तथा इति ॥

இங்கு, மனுஷ்ய யக்ஞத்திற்கும் பலிஹரண ரூபத்வத்தை ஆச்ரயித்து நாலுக்கும் அந்தர்பாவம்

சொல்லப்பட்டது. அவ்விதமே, ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- நிவீதியாய் ஸநகாதிகளின் பொருட்டு, 'மனுஷ்யேப்யோஹந்தா' என்று கொடுக்க வேண்டும். அல்லது 'ஹந்தா' என்று சொல்லிப் பூமியில் அன்னத்தை வைக்கவும். சந்த்ரிகையிலும்:- அதிதிகளுக்கு அன்னத்தைக் கொடுப்பது ஐந்தாவதான மனுஷ்ய யக்ஞம். சக்தி இல்லாவிடில் அன்னத்தை எடுத்து 'ஹந்தா' என்று பூமியில் வைக்க வேண்டும். காத்யாயனர்:- ஸ்வாஹாகாரம், வஷட்காரம், நமஸ்காரம் இவை தேவர்களுக்கு. ஸ்வதாகாரம் பித்ருக்களுக்கு. ஹந்தாகாரம் மனுஷ்யர்களுக்குமாம்.

कार्ष्णाजिनिः — भिक्षां वा पुष्कलं वाऽपि हन्ताकारमथापि वा । असम्भवे सदा दद्यादुदपात्रमथापि वा इति ॥ व्यासोऽपि – हन्ताकारमथाग्रं वा भिक्षां वा शक्तितो द्विजः । दद्यादतिथये नित्यं बुध्येत्तं परमेश्वरम् इति ॥ मनुः – वैश्वदेवे तु निर्वृत्ते यद्यन्योऽतिथिराव्रजेत् । तस्मा अन्नं यथाशक्ति प्रदद्यात् न बलिं हरेत् इति । शातातपः – ग्रासमात्री भवेद्भिक्षा पुष्कलं तच्चतुर्गुणम् । पुष्कलानि च चत्वारि हन्ताकारं विदुर्बुधाः इति । स्मृतिरत्ने – यवानां व्रीहिशालीनां द्वे शते ग्रासमुच्यते । ग्रासप्रमाणं भिक्षा स्यादग्रं ग्रासचतुष्टयम् इति । प्रजापतिः – ग्रासमात्रं भवेद्भिक्षा अग्रं ग्रासचतुष्टयम् । अग्रं चतुर्गुणीकृत्य हन्ताकारं विधीयते इति ।

கார்ஷ்ணாஜினி:- பிக்ஷையையாவது, புஷ்கலத்தையாவது, ஹந்தாகாரத்தையாவது கொடுக்க வேண்டும். முடியாவிடில் ஜலபாத்ரத்தையாவது கொடுக்க வேண்டும். வ்யாஸரும்:- ப்ராம்ஹணன் ப்ரதிதினமும் யதாசக்தி, ஹந்தாகாரத்தை, அல்லது அக்ரத்தை, அல்லது பிக்ஷையை அதிதிக்குக் கொடுக்க வேண்டும். அதிதியைப் பரமேச்வரனாய் நினைக்க வேண்டும். மனு:- அதிதிபோஜனம் வரையிலுள்ள வைச்தேவம் ஆன பிறகு,

அதிதியான மற்றொருவன் வந்து விட்டால் மறுபடி பாகம் செய்து அவனுக்கும் யதாசக்தி அன்னத்தைக் கொடுக்க வேண்டும். அந்த அன்னத்திலிருந்து பலிஹரணம் செய்ய வேண்டியதில்லை. சாதாதபர்:- ஒரு கபள ப்ரமாணமுள்ள அன்னம் 'பிக்ஷை' எனப்படும். அது நான்கு மடங்குள்ளது 'புஷ்கல' எனப்படும். நான்கு புஷ்கலங்களின் ப்ரமாணமுள்ளதை 'ஹந்தாகாரம்' என்கின்றனர் அறிந்தவர்கள். ஸ்ம்ருதிரத்னத்தில்:- யவங்கள், அல்லது வ்ரீஹிகள், அல்லது சாலிகள் இவைகளில் இருநூறு கொண்டது 'க்ராஸம்' எனப்படுகிறது. க்ராஸத்தினளவுள்ளது 'பிக்ஷை' எனப்படும். நான்கு க்ராஸங்களுள்ளது 'அக்ரம்' எனப்படும். ப்ரஜாபதி:- ஒரு க்ராஸ ப்ரமாணமுள்ளது 'பிக்ஷை' எனப்படும். நான்கு க்ராஸங்களுள்ளது 'அக்ரம்' எனப்படும். அக்ரம் நான்கு உள்ளது 'ஹந்தாகாரம்' எனப்படுகிறது.

इह केचित् वैश्वदेवाख्यस्य कर्मणः अन्नसंस्कारार्थत्वमिच्छति। तत्राश्वलायनः – सायंप्रातः सिद्धस्य हविष्यस्य जुहुयात् इति। आपस्तम्बश्च – यस्याग्नौ न क्रियते यस्य चाग्रं न दीयते न तत् भोक्तव्यम् इति।। यमोऽपि – होमाग्रदानरहितं न भोक्तव्यं कथञ्चन। अविभक्तेषु संसृष्टेष्वेकेनापि कृतं च यत्। न सर्वैरपि कर्तव्यं लौकिकाग्नौ कृतं यदि इति।।

இங்கு சிலர், வைச்வதேவம் என்னும் கர்மத்திற்கு அன்ன ஸம்ஸ்காரார்த்தத்வத்தை விரும்புகின்றனர். (வைச்வதேவம் அன்னத்தின் ஸம்ஸ்காரத்திற்காகச் செய்யப்படுகின்றது என்கின்றனர்.) அங்கு, ஆச்வலாயனர்:- இரவிலும், பகலிலும், பக்வமான அன்னத்தை ஹோமம் செய்ய வேண்டும். ஆபஸ்தம்பரும்:- எந்த அன்னம் அக்னியில் ஹோமம் செய்யப்படவில்லையோ, எந்த அன்னத்தால் 'அக்ர' தானம் செய்யப்படவில்லையோ அந்த அன்னம் புஜிக்கத் தகுந்ததல்ல. யமனும்:- ஹோமமும், அக்ரதானமும்

செய்யப்படாத அன்னத்தை எவ்விதத்தாலும் புஜிக்கக் கூடாது. விபாகமில்லாமல் ஒரே குடும்பமாய் வஸிக்கும் ப்ராதாக்களுள், ஒருவனால் வைச்வதேவம் செய்யப்பட்டாலும், அதை எல்லோரும் தனித்தனி செய்ய வேண்டியதில்லை; லௌகிகாக்னியில் செய்யப்பட்டிருந்தால். (இந்த வசனங்களால் அன்ன ஸம்ஸ்காரார்த்தத்வம் தெரிகின்றது.)

अन्ये तु वैश्वदेवस्य आत्मसंस्कारार्थत्वमिच्छन्ति ॥ तथा च आश्वलायनः – तानेतानहरहः कुर्वीत इति ॥ आपस्तम्बः – देवेभ्यः स्वाहाकार आकाष्ठात् इति । बोधायनः – प्रवासं गच्छतो यस्य गृहे कर्ता न विद्यते । पञ्चानां महतामेषां स यज्ञैः सह गच्छति ॥ प्रवासे कुरुते चैतान् यद्यन्नमुपपद्यते । न चेदुत्पद्यते चान्नमद्भिरेतान् समापयेत् इति ॥ मनुरपि – महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः इति ॥

மற்றவரோவெனில்:- வைச்வதேவம் ஆத்ம ஸம்ஸ்காரத்திற்காக என்கின்றனர். அவ்விதமே, **ஆச்வலாயனர்:**- இவைகளை ஒவ்வொரு நாளிலும் செய்ய வேண்டும். **ஆபஸ்தம்பர்:**- 'தேவேப்ய: ஸ்வாஹாகார ஆகாஷ்டாத்' என்கிறார். (இந்த ஸூத்ரம் முன் விவரிக்கப்பட்டுள்ளது.) **போதாயனர்:**- அயல் தேசம் செல்லும் க்ருஹஸ்தனுக்கு வீட்டில் பஞ்சமஹா யக்ஞங்களைச் செய்பவனில்லாவிடில், அவன் யக்ஞங்களுடனேயே செல்லுகிறான். ப்ரவாஸத்திலும் அன்னம் கிடைக்குமாகில் இவைகளைச் செய்ய வேண்டும். அன்னம் கிடைக்காவிடில், ஜலத்தினால் இவைகளைச் செய்து முடிக்க வேண்டும். **மனுவும்:**- பஞ்ச மஹா யக்ஞங்களாலும், ஜ்யோதிஷ்டோமாதி யக்ஞங்களாலும் இந்தச் சரீரத்திலுள்ள ஆத்மா, ப்ரம்ஹ ப்ராப்தி யோக்யனாகச் செய்யப்படுகிறான்.

कात्यायनोऽपि – सायं प्रातर्वैश्वदेवः कर्तव्यो बलिकर्म च । अनश्नताऽपि सततमन्यथा किल्बिषी भवेत् इति ॥

वचनद्वयबलादुभयार्थं वैश्वदेवकर्मेत्यपरे ॥ तथा च स्मृत्यर्थसारे – वैश्वदेवाख्यं कर्म अन्नस्य चात्मनश्च संस्कारार्थ इति ॥ व्यासोऽपि – गृहस्थो वैश्वदेवाख्यं कर्म प्रारभते दिवा । अन्नस्य चात्मनश्चैव संस्कारार्थं तदिष्यते इति ॥

காத்யாயனரும்:- இரவிலும், பகலிலும், வைச்வதேவம் பலிதானம் இவைகளைச் செய்ய வேண்டும். போஜனம் செய்யாவிடினும், ப்ரதிதினம் செய்ய வேண்டும். செய்யாவிடில் பாபமுடையவனாகிறான். இவ்விதம் இருவிதமாயுள்ள வசனங்களின் பலத்தால், வைச்வதேவமென்னும் கர்மம் உபயார்த்தம் என்கின்றனர் சிலர். (அன்ன ஸம்ஸ்காரத்திற்கும் ஆத்ம ஸம்ஸ்காரத்திற்கும் என்பதாம்.) அவ்விதமே, **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:-** வைச்வதேவம் என்னும் கர்மம், அன்னத்திற்கும் ஆத்மாவுக்கும் ஸம்ஸ்காரத்திற்காகும். **வ்யாஸரும்:-** க்ருஹஸ்தன் வைச்வதேவமென்னும் கர்மத்தைப் பகலில் ஆரம்பிக்க வேண்டும். அது அன்னத்திற்கும் ஆத்மாவுக்கும் ஸம்ஸ்காரத்திற்கென்று சொல்லப்படுகிறது.

तदेदद्विज्ञानेश्वरीयमाधवीयादौ पुरुषार्थत्वेन व्यवस्थापितम् ॥ तथा हि – केचिद्वैश्वदेवस्य पुरुषार्थत्वेनव्यवस्थापितम् । तथा हि – केचिद्वैश्वदेवस्य पुरुषार्थत्वमन्नसंस्कारकर्मकत्वं चेच्छन्ति । तदयुक्तं, परस्परविरोधात् । अन्नसंस्कारत्वे ह्यन्नस्य प्राधान्यं वैश्वदेवस्य गुणता । पुरुषार्थत्वे तु तद्विपर्ययः । एकस्यैव युगपत् प्राधान्यं गुणत्वं च विरुध्येयाताम् । तर्ह्यस्त्वन्नसंस्कारतैवेति न वाच्यम् । तत्र हि प्रतिपाकमावृत्तिप्रसङ्गः । प्रतिप्रधानं गुणावृत्तिरिति न्यायात् । तस्मात् पुरुषार्थत्वमेव न्याय्यम् इति ॥ अत एव गृह्यपरिशिष्टेऽभिहितम् – प्रोषितोऽप्यात्मसंस्कारं कुर्याद्दिवाविचारयन् इति ।

இந்த வைச்வதேவம், விக்ஞானேச்வரீயம், மாதவீயம் முதலியதில் 'புருஷார்த்தம்' என வ்யவஸ்தை செய்யப்பட்டுள்ளது. அது இவ்விதம். 'சிலர் வைச்வதேவத்திற்குப் புருஷார்த்தத்வம் அன்ன ஸம்ஸ்காரார்த்தத்வம் என்ற இரண்டையும் விரும்புகின்றனர். அது யுக்தமல்ல. (ஏனெனில்) பரஸ்பரம் விரோதம் இருப்பதால். (எவ்விதமெனில்) அன்ன ஸமஸ்காரார்தத்வ பக்ஷத்தில் அன்னத்திற்கு ப்ராதான்யம், வைச்வதேவத்திற்கு குணத்வம். புருஷார்த்தத்வ பக்ஷத்தில், இதற்கு மாறுதல். ஒன்றுக்கே ஒரே ஸமயத்தில் ப்ராதான்யமும், குணத்வமும் விருத்தங்களாகும். 'அப்பொழுது அன்ன ஸம்ஸ்காரார்த்தத்வமே இருக்கட்டும்' என்றும் சொல்லக் கூடாது. அந்தப் பக்ஷத்தில் ஒவ்வொரு பாகத்திலும் வைச்வதேவத்தை ஆவ்ருத்தி செய்ய வேண்டுமென்பது ப்ரஸக்தமாகும். 'ப்ரதி ப்ரதானம் குணாவ்ருத்தி:' என்ற ந்யாயத்தால். ஆகையால் புருஷார்த்தத்வத்தை ஒப்புவதே ந்யாய்யமாகும்' என்று. ஆகையால்தான், க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- 'வெளித் தேசத்தில் இருப்பவனாயினும் ஸந்தேஹமில்லாதவனாய், ஆத்ம ஸம்ஸ்காரத்தைச் செய்ய வேண்டும்' என்று சொல்லப்பட்டுள்ளது.

गोभिलोऽपि — यद्येकस्मिन् काले व्रीहियवौ पच्येयातामन्यतरस्य हुत्वा कृतं मन्येत। यद्येकस्मिन् काले पुनः पुनरन्नं पच्येत सकृदेव बलिं कुर्वीत। यद्येकस्मिन् काले बहुधाऽन्नं पच्येत गृहपतिमहानसादेवैनं बलिं कुर्वीत इति ॥ अयमर्थः — नानाद्रव्यकान्नपाकेऽपि पुनः पुनः पाकेऽपि बहूनामविभक्तानां भ्रात्रादीनां पृथक् पृथक् पाकेऽप्येकस्मादेव गृहपतिपाकादेव होतव्यम् इति ॥

கோபிலரும்:- 'ஒரே ஸமயத்தில் நெல்லும், யவையும் சமைக்கப்படுமாயினும், ஒன்றால் ஹோமம் செய்து

மற்றதையும் ஹோமம செய்ததாய் எண்ண வேண்டும். ஒரே ஸமயத்தில் அடிக்கடி அன்னம் பாகம் செய்யப்பட்டாலும், ஒரே தடவை பலிதானம் செய்ய வேண்டும். ஒரே ஸமயத்தில் பலவிதமாய் அன்னம் சமைக்கப்பட்டாலும், க்ருஹபதியின் சமையற்கட்டிலுள்ள அன்னத்தாலேயே பலிதானம் செய்ய வேண்டும். இதன் பொருள் -'அநேகம் த்ரவ்யமுள்ள அன்னத்தின் பாகத்திலும், அடிக்கடி செய்யும் பாகத்திலும், அநேகம் ப்ராதாக்கள் விபாகமில்லாமல் ஒரே க்ருஹத்தில் தனித்தனியாய்ப் பாகங்கள் செய்தாலும், க்ருஹபதியின் பாகம் ஒன்றிலிருந்தே ஹோமம் செய்ய வேண்டும்' என்பதாம்.

स्मृतिसंग्रहे – एकपाकेन वसतां पितृदेवद्विजार्चनम्। एकं भवेद्विभक्तानां तदेव स्याद्गृहे गृहे इति ॥ सायं प्रातः सिद्धस्य इत्यादि वचनजातमुत्पत्तिप्रयोग प्रदर्शनपरम्। तानेतान् यज्ञानहरहः कुर्वीत इत्यादिरधिकारविधिः इति माधवीये ॥

ஸ்ம்ருதிஸங்க்ரஹத்தில்:- ஒரே பாகத்துடன் வஸிக்கும் ப்ராதாக்களுக்குப் பித்ருக்கள், தேவர்கள், ப்ராம்ஹணர்கள் இவர்களின் பூஜை ஒன்றே ஆகும். விபாகம் செய்து கொண்டவர்களானல் ஒவ்வொருவரின் க்ருஹம்தோறும் அது செய்யப்பட வேண்டும். 'இரவிலும், பகலிலும் பாகம் செய்யப்பட்ட அன்னத்தால்' என்பது முதலிய வசனங்கள் அன்னத்தின் உத்பத்தியையும், ப்ரயோகத்தையும் தெரிவிப்பதில் தாத்பர்யமுள்ளவை. 'இந்தப் பஞ்ச மஹாயக்ஞங்களை ப்ரதிதினமும் செய்ய வேண்டும்' என்பது முதலியது அதிகாரத்தின் விதியாம் என்று மாதவீயத்தில்.

पञ्चमहायज्ञान् प्रशंसति भृगुः – यत्फलं सोमयागेन प्राप्नोति धनवान् द्विजः । सम्यक् पञ्चमहायज्ञैर्दरिद्रस्तावदाप्नुयात् इति । अकरणे प्रत्यवायमाह स एव – पञ्चयज्ञांस्तु यो मोहान्न करोति गृहाश्रमी। तस्य नास्ति परो लोको लोके भवति निन्दितः ॥ अकृत्वा

वैश्वदेवं तु भुञ्जते ये द्विजोत्तमाः । सर्वे ते निष्फला ज्ञेयाः पतन्ति नरकेऽशुचौ इति ।। द्विजोत्तमाः - ब्राह्मणाः ।। वसिष्ठः – अकृत्वा वैश्वदेवं तु भुञ्जते ये द्विजाधमाः । स्वप्रधानान्नपाकेन काकयोनिं व्रजन्ति ते इति ।।

பஞ்சமஹாயக்ஞங்களை ப்ரசம்ஸிக்கிறார், ப்ருகு:- தனமுள்ள ப்ராம்ஹணன் ஸோம யாகத்தால் எவ்வளவு பலனை அடைவானோ அவ்வளவு பலனை, தரித்ரன் விதிப்படி பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்வதால் அடைவான். செய்யாவிடில் தோஷத்தைச் சொல்லுகிறார், ப்ருகுவே:- எந்த க்ருஹஸ்தன் அறியாமையால் பஞ்சமஹா யக்ஞங்களைச் செய்யவில்லையோ அவனுக்குப் பரலோகம் இல்லை. அவன் உலகில் நிந்திக்கப்பட்டவனாக ஆகிறான். வைச்வதேவத்தைச் செய்யாமல் எந்த ப்ராம்ஹணர்கள் புஜிக்கின்றனரோ, அவர்கள் எல்லோரும் பலமற்றவர்களாக அறியத்தகுந்தவர்கள். அவர் அசுத்தமான நரகத்தில் விழுகின்றனர். வஸிஷ்டர்:- எந்த ப்ராம்ஹணாதமர்கள் வைச்வதேவத்தைச் செய்யாமல் புஜிக்கின்றனரோ அவர்கள் தமக்கென்றே அன்னத்தைச் சமைத்ததால் காக்கையின் பிறப்பை அடைகின்றனர்.

व्यासोऽपि – ऋषीन् देवान् पितॄंश्चैव भूतानि ब्राह्मणां स्तथा । तर्पयन् विधिना विप्रो ब्रह्मभूयाय कल्पते । वैश्वदेवेन ये हीना आतिथ्येन बहिष्कृताः । सर्वे ते वृषला ज्ञेयाः प्राप्तवेदा अपि द्विजाः ।। अकृत्वा पञ्चयज्ञांस्तु भुक्त्वा चान्द्रायणं चरेत् ।। अकृत्वा वैश्वदेवं तु यो भुङ्क्तेऽनापदि द्विजः । स मूढो नरकं याति कालसूत्रमवाक्छिराः इति ।। मनुः – ऋषयः पितरो देवा भूतान्यतिथयस्तथा । आशंसन्ते कुटुम्बिभ्यस्तेभ्यः कार्यं विजानता ।। एवं यः सर्वभूतानि ब्राह्मणो नित्यमर्चति । स गच्छति परं स्थानं तेजोमूर्तिः पथर्जुना ।। देवतातिथिभूतानां पितॄणामात्मनश्च यः । न निर्वपति

पञ्चानामुच्छ्वसन्न स जीवति इति ।। आत्मा - ब्रह्म । निर्वापः - पृथक्करणम् । यजनमिति यावत् ।।

வ்யாஸரும்:- *ரிஷிகள், தேவர்கள், பித்ருக்கள், பூதங்கள், ப்ராம்ஹணர்கள் இவர்களை விதிப்படி த்ருப்தி செய்விக்கும் ப்ராம்ஹணன் ப்ரம்ஹ ஸாயுஜ்யத்தை அடைகிறான். எவர் வைச்வதேவம் இல்லாதவரும், அதிதி பூஜை இல்லாதவருமாய் இருக்கின்றனரோ அந்த ப்ராம்ஹணர் எல்லோரும் வேதம் கற்றவராயினும் சூத்ரரென அறியத்தகுந்தவர். பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்யாமல் புஜித்தால் சாந்த்ராயணத்தைச் செய்ய வேண்டும். வைச்வதேவத்தைச் செய்யாமல் எந்த ப்ராம்ஹணன் ஆபத்தில்லாத காலத்தில் புஜிக்கின்றானோ அந்த மூடன் தலைகீழாகக் காலஸூத்ரமெனும் நரகத்தை அடைகிறான்.* **மனு:-** *ருஷிகள், பித்ருக்கள், தேவர்கள், பூதங்கள், அதிதிகள் என்ற இவர்கள் க்ருஹஸ்தர்களிடமிருந்து பூஜையை விரும்புகின்றனர். ஆகையால் அறிந்தவன் அவர்களுக்குப் பூஜையைச் செய்ய வேண்டும். இவ்விதம் எந்த ப்ராம்ஹணன் ப்ரதிதினம் ஸகல ப்ராணிகளையும் பூஜிக்கின்றானோ அவன் ஜ்ஞானஸ்வரூபனாய் நேரான (அர்ச்சிராதி) மார்க்கத்தினால் சிறந்த ஸ்தானத்தை (பரப்ரம்ஹத்தை) அடைகிறான். தேவர்கள், அதிதிகள், பூதங்கள், பித்ருக்கள், ப்ரம்ஹம் என்ற இவ்வைந்து பேர்களுக்கும் எவன் அன்னத்தைக் கொடுப்பதில்லையோ அவன் மூச்சுடனிருந்தாலும் பிழைத்திருப்பவனில்லை.*

हारीतः — यद्देवेभ्यो जुहोति देवलोकं तेनाभिजयति, यत् पितृभ्यः पितृलोकं तेन, यत्स्वाध्यायमधीत ऋषि लोकं तेन, यद्भूतेभ्यो बलिं हरति भूतलोकं तेन, यद्ब्राह्मणांस्तर्पयति मनुष्यलोकं तेनाभि जयति इति ।। कूर्मपुराणेऽपि – अकृत्वा तु द्विजः पञ्चमहायज्ञान् द्विजोत्तमाः । भुञ्जीत चेत् स मूढात्मा तिर्यग्योनिषु जायते इति ।। संवर्तः

– पञ्चयज्ञविधानं च कुर्यादहरहर्द्विजः । न हापयेच्च तच्छक्तः श्रेयस्कामो द्विजोत्तमः ।। हापनं तस्य कुर्वीत सदा मरणजन्मनोः इति । स्मृत्यन्तरे – होमस्तत्र न कर्तव्यः शुष्कान्नेन फलेन वा । पञ्चयज्ञविधानं तु न कुर्यान्मृतिजन्मनोः इति ।।

ஹாரீதர்:- தேவர்களுக்கு ஹோமம் செய்வதால் தேவலோகத்தை ஜயிக்கிறான். பித்ருக்களுக்குக் கொடுப்பதால் பித்ரு லோகத்தையும், அத்யயனம் செய்வதால் ருஷி லோகத்தையும், பூதங்களுக்குப் பலியைக் கொடுப்பதால் பூதலோகத்தையும், ப்ராம்ஹணர்களை த்ருப்தி செய்வதால் மனுஷ்ய லோகத்தையும் ஜயிக்கிறான். **கூர்ம புராணத்திலும்:-** ஓ ப்ராம்ஹணோத்தமர்களே! எந்த ப்ராம்ஹணன் ஐந்து மஹாயக்ஞங்களைச் செய்யாமல் புஜிப்பானோ அந்த மூடன் பசு, பக்ஷி ஜாதிகளில் பிறக்கிறான். **ஸம்வர்த்தர்:-** ப்ராமஹணன் ப்ரதிதினமும் பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்ய வேண்டும். சக்தியுள்ள ப்ராம்ஹணன் நன்மையை விரும்பினால் அவைகளை விடக்கூடாது. மரணசௌசம் ஜனனசௌசம் இவைகளில் எப்பொழுதும் அவைகளை விடவேண்டும். **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** ஜனனமரண சௌசங்களில் சுஷ்கான்னத்தினாலும் (தான்யத்தாலும்) பழத்தினாலும் கூட ஹோமத்தைச் செய்யக் கூடாது. பஞ்ச மஹாயஜ்ஞங்களையும் செய்யக் கூடாது.

श्राद्धे वैश्वदेवकालमाह मनुः – उच्छेषणं तु तत्तिष्ठेद्यावद्विप्रा विसर्जिताः । ततो गृहबलिं कुर्यादिति धर्मो व्यवस्थितः इति ।। ततः - विप्रविसर्जनानन्तरं, गृहबलिं - वैश्वदेवं कुर्यात् इति तद्व्याख्याने ।। तथा भविष्यत्पुराणे – कृत्वा श्राद्धं महाबाहो ब्राह्मणांश्च विसृज्य च । वैश्वदेवादिकं कर्म ततः कुर्यान्नराधिप इति ।। मार्कण्डेयः – ततो नित्यक्रियां कुर्यात् भोजयेच्च तथाऽतिथीन् । ततस्तदन्नं भुञ्जीत सह भृत्यादिभिर्नरः ।। नित्यक्रियां - श्राद्धारम्भात् पूर्वमकृतां

देवार्चनवैश्वदेवादिकां, ब्राह्मणविसर्जनानन्तरं कुर्यात्, इति चन्द्रिकायां व्याख्यातम्।। तत्रैव – यदा श्राद्धं पितृभ्यस्तु दातुमिच्छति मानवः । वैश्वदेवं तदा कुर्यात् निर्वृत्ते श्राद्धकर्मणि ।। प्रतिवासरिको होमः श्राद्धादौ क्रियते यदि । देवा हव्यं न गृह्णन्ति कव्यं च पितरस्तथा इति ।।

ச்ராத்தத்தில் வைச்வதேவ காலத்தைச் சொல்லுகிறார். **மனு:**- *அந்த உச்சிஷ்டம் ப்ராம்ஹணர்களை அனுப்பும் வரை இருக்க வேண்டும். ப்ராம்ஹணர்களை அனுப்பிய பிறகு வைச்வ தேவத்தைச் செய்ய வேண்டும் என்று தர்மம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அவ்விதமே,* **பவிஷ்யத் புராணத்தில்** :- *ஓ மஹாபாஹோ! ஓ அரசனே! ச்ராத்தம் செய்து, ப்ராம்ஹணர்களையும் அனுப்பிப் பிறகு வைச்வதேவம் முதலிய கர்மத்தைச் செய்ய வேண்டும்* **மார்க்கண்டேயர்:**- *பிறகு நித்யக்ரியையைச் செய்ய வேண்டும். அதிதிகளையும் புஜிப்பிக்க வேண்டும். பிறகு அந்த அன்னத்தை ப்ருத்யர் முதலியவர்களுடன் கூடப் புஜிக்க வேண்டும். 'நித்ய க்ரியையை - ச்ராத்தாரம்பத்திற்கு முன்செய்யாத தேவபூஜை வைச்வதேவம் முதலியதை, ப்ராம்ஹணர்களை அனுப்பிய பிறகு செய்ய வேண்டும்' என்று சந்த்ரிகையில் வியாக்யானம் செய்யப்பட்டுள்ளது.* **சந்த்ரிகையிலேயே:**- *மனிதன் எப்பொழுது பித்ருக்களுக்கு ச்ராத்தத்தைக் கொடுக்க விரும்புகின்றானோ அப்பொழுது ச்ராத்தம் முடிந்த பிறகு வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். வைச்வதேவ ஹோமத்தை ச்ராத்தத்திற்கு முன் செய்தால் தேவர்கள் ஹவிஸ்ஸையும், பித்ருக்கள் கவ்யத்தையும் க்ரஹிப்பதில்லை.*

मत्स्यपुराणे — ततश्च वैश्वदेवान्ते सभृत्यसुतबान्धवः । भुञ्जीतातिथिसंयुक्तः सर्वं **पितृनिषेवितम्** इति ।। मध्येऽपि वैश्वदेवादिकमुक्तमादित्यपुराणे – **पितॄन्** सन्तर्प्य विधिवत् बलिं दद्या द्विधानतः । वैश्वदेवं ततः कुर्यात् पश्चाद् ब्राह्मणवाचनम् इति ।।

अस्यार्थश्चन्द्रिकायामुक्तः – ब्राह्मणभोजनेन पितॄन् सन्तर्प्य, विकिररूपं बलिं प्रदाय अनन्तरं वैश्वदेवं कृत्वा पश्चात् स्वस्तिवाचनादि विसर्जनान्तं कुर्यात् । वैश्वदेवं प्रकुर्वीत नैत्यकं बलिमेव च इति द्वयोरानन्तर्येण विधानाद्वैश्वदेवा नन्तरमेव बलिहरणं कुर्यात् इति ॥

மத்ஸ்யபுராணத்தில்:- *பிறகு வைச்வதேவத்தின் முடிவில் பணியாளர், பிள்ளைகள், பந்துக்கள் இவர்களுடன் கூடியவனாய், அதிதிகளுடனும் கூடியவனாய், பித்ரு சேஷமான எல்லாவற்றையும் புஜிக்க வேண்டும். ச்ராத்தத்தின் நடுவிலும் வைச்வதேவம் முதலியது சொல்லப்பட்டுள்ளது,* **ஆதித்யபுராணத்தில்:-** *'விதிப்படி பித்ருக்களுக்கு த்ருப்தி செய்வித்து, விதிப்படி பலிதானம் செய்ய வேண்டும். பிறகு வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். பிறகு ப்ராம்ஹணவாசனம் செய்ய வேண்டும்'. இந்த வசனத்திற்கு அர்த்தம் சந்த்ரிகையில் சொல்லப்பட்டுள்ளது - 'ப்ராம்ஹண போஜனத்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி செய்வித்து விகிரரூபமான பலியைக் கொடுத்துப் பிறகு வைச்வதேவத்தைச் செய்து, பிறகு ஸ்வஸ்திவாசனம் முதல் விஸர்ஜனம் வரையில் செய்ய வேண்டும். 'வைச்வதேவம் ப்ரகுர்வீத நைத்யகம் பலிமேவச' என்று வைச்வதேவ பலிஹரணங்களை சேர்த்து விதித்திருப்பதால் வைச்வதேவத்திற்கடுத்துப் பலிஹரணத்தைச் செய்ய வேண்டும்' என்று.*

प्रकारान्तरमुक्तं स्मृत्यन्तरे – वैश्वदेवाहुतीरग्नावर्वाग् ब्राह्मणभोजनात् । जुहुयाद्भूतयज्ञादि श्राद्धं कृत्वा ततः स्मृतम् इति ॥ अर्वाग् ब्राह्मणभोजनादित्यनेन अग्नौ करणानन्तरं वैश्वदेवाहुतीः जुहुयादित्युक्तम् ॥ एवं च श्राद्धसमाप्त्यनन्तरं, श्राद्धमध्येऽपि विकिररूपबलिदानानन्तरं, अग्नौकरणानन्तरं वा वैश्वदेवानुष्ठानं बलिहरणं च कर्तव्यम् । न श्राद्धादौ कर्तव्यम् ।

अग्नौकरणानन्तरकरणपक्षे तु श्राद्धसमाप्त्यनन्तरं भूतयज्ञादिकं कर्तव्यमित्युक्तं भवति ॥

வேறொரு ப்ரகாரம் சொல்லப்பட்டுள்ளது, **மற்றொருஸ்ம்ருதியில்:-** *ப்ராம்ஹண போஜனத்திற்கு முன் வைச்வதேவாஹுதிகளை அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும். ச்ராத்தம் செய்து பிறகு பூதயக்ஞம் முதலியதைச் செய்ய வேண்டும். இங்கு 'ப்ராம்ஹண போஜனத்திற்கு முன்' என்றதால், அக்னியில் ச்ராத்தத்திற்கான ஹோமம் செய்த உடன் வைச்வதேவாஹுதிகளை ஹோமம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. இவ்விதமிருப்பதால், ச்ராத்தம் முடிந்த பிறகாவது, ச்ராத்த மத்யத்திலும் விகிரரூப பலியைக் கொடுத்த பிறகாவது, அக்னியில் ஹோமம் செய்த பிறகாவது, வைச்வதேவமும், பலிஹரணமும் செய்யப்பட வேண்டும். ச்ராத்தத்தின் ஆதியில் செய்யக் கூடாது. ஹோமத்திற்குப் பிறகு செய்யும் பக்ஷத்திலானால் (வைச்வதேவாஹுதிகளை மட்டில் செய்து) ச்ராத்தம் முடிந்த பிறகு, பூதயக்ஞம் முதலியதைச் செய்ய வேண்டும் என்று சொல்லியதாய் ஆகிறது.*

एतच्च वैश्वेदवादिकं पृथक्पाकादेव कर्तव्यम् । तथा च सूत्रकारः – ब्राह्मणभोजनार्थादन्येनान्नेन वैश्वदेवादीन् कुर्यात् समाप्ते वा इति । लोकाक्षिरपि – गृहाग्निद्विजदेवानां यतीनां ब्रह्मचारिणाम् । श्राद्धपाको न दातव्यो यावत्पिण्डान्न निर्वपेत् इति ॥ पैठीनसिः – पितृपाकात् समुद्धृत्य वैश्वदेवं करोति यः । आसुरं तद्भवेच्छ्राद्धं पितॄणां नोपतिष्ठते इति ॥ लोकाक्षिः – पित्रर्थं निर्वपेत् पाकं वैश्वदेवार्थमेव च । वैश्वदेवं न पित्रर्थं न दार्शं वैश्वदेविकम् इति ॥ दार्शं - दर्शश्राद्धम् । अमावास्याश्राद्धार्थं निरुप्तमन्नं न वैश्वदेवार्थं भवतीत्यर्थः ॥

இந்த வைச்வதேவம் முதலியது, தனிப்பாகத்திலிருந்தே செய்யப்பட வேண்டும். அவ்விதமே **ஸூத்ரகாரர்:-** *ப்ராம்ஹண*

போஜனத்திற்காகச் செய்யப்பட்ட அன்னத்தினின்றும் வேறான அன்னத்தினால் வைச்வதேவம் முதலியவைகளைச் செய்ய வேண்டும். அல்லது ச்ராத்தம் முடிந்த பிறகாவது வைச்வதேவாதிகளைச் செய்யலாம். லோகாக்ஷியும்:- பூதபலி, வைச்வதேவம், மனுஷ்யயஜ்ஞம், தேவயக்ஞம், யதிகள், ப்ரம்ஹசாரிகள் இவர்களுக்கு, பிண்டதானம் செய்வதற்கு முன் ச்ராத்தான்னத்தைக் கொடுக்கக் கூடாது. பைடீநஸி:- பித்ருபாகத்திலிருந்து எடுத்து வைச்வதேவத்தை எவன் செய்கின்றானோ, அவனின் ச்ராத்தம் அஸுரர்களைச் சேர்ந்ததாகும். பித்ருக்களைச் சேர்வதில்லை. லோகாக்ஷி:- பித்ருக்களுக்காக அன்னத்தைப் பாகம் செய்ய வேண்டும். வைச்வதேவத்திற்காகவும் அன்னத்தைப் பாகம் செய்ய வேண்டும். வைச்வதேவான்னத்தைப் பித்ருக்களுக்கு உபயோகிக்கக் கூடாது. தர்ச ச்ராத்தத்திற்காகியதை வைச்வதேவத்திற்கு உபயோகிக்கக் கூடாது. தர்ச ச்ராத்தத்திற்காகச் செய்த அன்னத்தை வைச்வதேவத்திற்கு உபயோகிக்கக் கூடாதென்பது பொருள்.

आहिताग्नेर्विशेषमाह स एव – पक्षान्तं कर्म निर्वर्त्य वैश्वदेवं च साग्निकः । पिण्डयज्ञं ततः कुर्यात् ततोऽन्वाहार्यकं बुधः इति ।। पक्षान्तं कर्म - अग्न्यन्वाधानम् । अन्वाहार्यकं - अमावास्याश्राद्धम् ।। न दार्शं वैश्वदेविकमित्येतत्तु आहिताग्न्यनाहिताग्निसाधारणम् ।। चन्द्रिकायां प्रकारान्तरमुक्तम् – अग्नौकरणानन्तरं विकिरानन्तरं वा पृथक्पाकादेव कार्यम् । श्राद्धान्ते तु पितृपाकात् समुद्धृत्य वैश्वदेवादिकं कुर्यात् इति ।।

ஆஹிதாக்னி விஷயத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறார், லோகாக்ஷியே:- ஆஹிதாக்னி, அன்வாதானத்தையும், வைச்வதேவத்தையும் செய்து, பிறகு பிண்ட பித்ருயக்ஞத்தையும், பிறகு தர்ச ச்ராத்தத்தையும் செய்ய வேண்டும். 'ந தார்சம் வைச்வதேவிகம்' என்பது ஆஹிதாக்னி, அநாஹிதாக்னி இருவருக்கும் பொதுவாகியது. சந்த்ரிகையில் வேறு

ப்ரகாரம் சொல்லப்பட்டுள்ளது:- 'ஹோமத்திற்குப் பிறகாவது, விகிரத்திற்குப் பிறகாவது செய்யும் வைச்வதேவத்தைத் தனியான அன்னத்தினின்றே செய்ய வேண்டும். ச்ராத்தத்தின் முடிவிலானால் பித்ரு பாகான்னத்திலிருந்து எடுத்து வைச்வதேவம் முதலியதைச் செய்ய வேண்டும்' என்று.

तथा च पैठीनसिः – श्राद्धं निर्वर्त्य विधिवद्वैश्वदेवादिकं ततः । कुर्याद्भिक्षां ततो दद्याद्धन्ताकारादिकं तथा इति ॥ ततः - पितृपाकसमुद्धृतादन्नादित्यर्थः ॥ साग्निकदर्शश्राद्धे वैश्वदेवार्थं पृथक्पाकः । अनाहिताग्निदर्शश्राद्धे न पृथक्पाकनियमः इति ॥ अन्ये तु पैठीनसिवचनस्य तथा व्याख्याने प्रमाणाभावात् श्राद्धे सर्वत्र वैश्व देवार्थं पृथक्पाक एव इत्याहुः । एवमेव शिष्टा आचरन्ति ॥

அவ்விதமே, பைடீநஸி:- விதிப்படி ச்ராத்தத்தை முடித்து, அதிலிருந்து வைச்வதேவம் முதலியதைச் செய்ய வேண்டும். அதிலிருந்து பிக்ஷையையும் கொடுக்க வேண்டும். ஹந்தாகாரம் முதலியதையும் அதிலிருந்து செய்ய வேண்டும். இங்குள்ள 'தத:' என்ற பதத்திற்கு 'பித்ரு பாகத்திலிருந்து எடுத்த அன்னத்தினின்று' என்பது பொருள். ஆஹிதாக்னி செய்யும் தர்ச ச்ராத்தத்தில் வைச்வதேவத்திற்காகத் தனியாய்ப் பாகம் செய்ய வேண்டும். அநாஹிதாக்னி செய்யும் தர்ச ச்ராத்தத்தில் தனிப்பாகம் செய்ய வேண்டிய நியமமில்லை என்று. சிலரோவெனில், பைடீநஸி வசனத்திற்கு அவ்விதம் வ்யாக்யானம் செய்வதில் ப்ரமாணமில்லாததால் ச்ராத்தமெல்லாவற்றிலும் வைச்வதேவத்திற்காகத் தனிப்பாகமே தான் என்கின்றனர். இவ்விதமேதான் சிஷ்டர்கள் அனுஷ்டிக்கின்றனர்.

सङ्ग्रहे तु – वृद्धावादौ क्षये चान्ते दर्शे मध्ये महालये । अन्त एव तु कुर्वीत वैश्वदेवं चतुर्विधम् इति । वृद्धौ - वृद्धिश्राद्धे । क्षये - मृताहश्राद्धे इत्यर्थः । वृद्ध्यदिचतुष्टयव्यतिरिक्तश्राद्धेषु विशेषो दर्शितः सङ्ग्रहे –

याजुषाः सामगाः पूर्वं मध्ये कुर्वन्ति बह्वृचाः । आथर्वणास्तृतीयांशे वैश्वदेवं त्रिधा मतम् इति ।। एतदेवाभिप्रेत्य गृह्यपरिशिष्टेऽभिहितम्— सम्प्राप्ते पार्वणश्राद्धे एकोद्दिष्टे तथैव च । अग्रतो वैश्वदेवं स्यात् पश्चादेकादशेऽहनि इति ।

ஸங்கிரஹத்திலானுல்:- நாந்தீ ச்ராத்தத்தில் ஆதியிலும், ப்ரத்யாப்திக ச்ராத்தத்தில் முடிவிலும், தர்ச ச்ராத்தத்தில் நடுவிலும், மஹாளயத்தில் முடிவிலும், ஆக நான்கு விதமாய் வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். நாந்தீ ச்ராத்தம் முதலிய நான்கு ச்ராத்தங்களைத் தவிர்த்த மற்ற ச்ராத்தங்களிலுள்ள விசேஷம் காண்பிவிக்கப் பட்டுள்ளது, ஸங்க்ரஹத்தில்:- யாஜுஷர்களும் ஸாமகர்களும் ச்ராத்தத்திற்கு முன்பும், பஹ்வ்ருசர்கள் மத்யத்திலும், அதர்வவேதிகள் மூன்றுவது பாகத்திலும் (கடைசியிலும்) செய்கின்றனர். இவ்விதம் மூன்றுவிதமாயுள்ளது வைச்வதேவம். இதையே அபிப்ராயத்திற் கொண்டு சொல்லப்பட்டுள்ளது, க்ருஹ்யபரிசிஷ்டத்தில்:- பார்வண ச்ராத்தமாவது, ஏகோத்தேச்யக ச்ராத்தமாவது ப்ராப்தமானுல் ஆதியில் வைச்வதேவத்தைச் செய்ய வேண்டும். 11-ஆவது தினத்தில் ஏகோத்திஷ்டத்திற்குப் பிறகு செய்ய வேண்டும்.

आतिथ्यम्

अथातिथ्यम् । तत्र व्यासः — आचम्य च ततः कुर्यात् प्राज्ञो द्वारावलोकनम् । मुहूर्तस्याष्टमं भागमुदीक्ष्यो ह्यतिथिर्भवेत् इति ।। शङ्खः — गोदोहमात्रमङ्कणेऽतिथिं प्रतीक्षमाण आसीत इति ।। माधवीये — ततो गोदोहमात्रं वै कालं तिष्ठेद्गृहाङ्कणे । अतिथिग्रहणार्थाय तदूर्ध्वं वा यथेच्छया ।। नाडिकायाश्चतुर्भागं गोदोहं ब्रुवते बुधाः इति । चन्द्रिकायाम् — गोदोहकालं काङ्क्षेत कृत्वा भूतबलिं द्विजः । अतिथिं तत्र सम्प्राप्तं पूजयेत् स्वागतादिना इति ।

அதிதிபூஜை

இனி ஆதித்யம் சொல்லப்படுகிறது, அதில், **வ்யாஸர்**:- சாஸ்த்ரமறிந்தவன், ஆசமனம் செய்து, பிறகு வாயிலைப் பார்க்க வேண்டும். முஹூர்த்தத்தின் எட்டிலொருபாகம் (1/4- நாழிகை) வரையில் அதிதியை ப்ரதீக்ஷிக்க வேண்டும். **சங்கர்**:- கோதோஹன (மாடு கறக்கும்) காலமளவு வரையில் வாயிலில் அதிதியை எதிர்பார்த்திருக்க வேண்டும். **மாதவீயத்தில்**:- பிறகு வாயிலில் கோதோஹனகாலம் வரையில் இருக்க வேண்டும். அதிதியை ஏற்பதற்காக. அதற்கதிகமாயும் இஷ்டப்படி இருக்கலாம். ஒரு நாழிகையில் நான்கிலொரு பாகத்தைக் கோதோஹனம் என்கின்றனர் அறிந்தவர். **சந்த்ரிகையில்**:- ப்ராம்ஹணன் பூத பலியைச் செய்து, கோதோஹன காலம் வரையில் அதிதியை எதிர்பார்க்க வேண்டும். அக்காலத்தில் வந்த அதிதியை நல்வரவு கூறுவது முதலியதால் பூஜிக்க வேண்டும்.

मनुः – कृत्वैतद्बलिकर्मैवमतिथिं पूर्वमाशयेत्। भिक्षां च भिक्षवे दद्याद्विधिवद्ब्रह्मचारिणे इति ।। कूर्मपुराणे – गोदोहमात्रकालं वै प्रतीक्ष्यो ह्यतिथिः स्वयम्। अभ्यागतान् यथाशक्ति पूजयेदतिथिं यथा ।। भिक्षां वै भिक्षवे दद्यात् विधिवद् ब्रह्मचारिणे। दद्यादन्नं यथा शक्ति ह्यर्थिभ्यो लोभवर्जितः ।। सर्वेषामप्यलाभे तदन्नं गोभ्यो निवेदयेत् इति ।। व्यासः – गवाह्निकं परगवे दद्यादपि तृणादिकम्। अकृत्वा स्वयमाहारं स्वर्गलोकं स गच्छति इति ।। गवाह्निक मन्त्रो मार्कण्डेयेन दर्शितः – सौरभेय्यः सर्वहिताः सर्वपापप्रणाशनाः। प्रतिगृह्णन्तु मे ग्रासं गावस्त्रैलोक्यमातरः इति ।।

மனு:- இவ்விதம் இந்தப் பலிகர்மத்தைச் செய்து, அதிதியை முன்பு புஜிக்கச் செய்ய வேண்டும். ஸன்யாஸிக்கும், ப்ரம்ஹசாரிக்கும் விதிப்படி பிக்ஷையைக் கொடுக்க வேண்டும். **கூர்ம புராணத்தில்**:-

கோதோஹனகாலம் வரையில் அதிதியைத் தானாகவே ப்ரதீக்ஷிக்க வேண்டும். அக்காலத்தில் வந்த அதிதியைப்போல் அப்யாகதர் (விருந்தினர்)களையும் யதாசக்தி பூஜிக்க வேண்டும். ஸன்யாஸிக்கும், ப்ரம்ஹசாரிக்கும் யதாசக்தி பிக்ஷான்னத்தைக் கொடுக்க வேண்டும். மற்றும் யாசகருக்கும் யதாசக்தி லோபமின்றி அன்னத்தைக் கொடுக்க வேண்டும். ஒருவரும் கிடைக்காவிடில் அந்த அன்னத்தைப் பசுக்களுக்குக் கொடுக்கவும். **வ்யாஸர்:-** தான் ஆஹாரம் செய்வதற்கு முன்பே, புல் முதலியதையாவது கவாஹ்னிகமாய்ப் பிறரின் பசுவுக்குக் கொடுக்கவும். கொடுப்பவன் ஸ்வர்க்க லோகத்தை அடைவான். கவாஹ்னிக மந்த்ரம் **மார்க்கண்டேயரால்** சொல்லப்பட்டிருக்கிறது 'காமதேனுவினுடையவைகளும், எல்லோருக்கும் ஹிதமானவைகளும், ஸகல பாபங்களையும் அழிப்பவைகளும், மூன்றுலகத்திற்கும் தாய்களாயுமுள்ள கோக்கள், எனது க்ராஸத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' என்று.

भारतेऽपि — दिने द्विरभिषेकश्च पितृदैवतपूजनम् । गवाह्निकप्रदानं च संविभागोऽतिथिष्वपि ।। ग्रासमप्येकमन्नस्य यो ददाति च गोर्दिने । स्वर्गलोकमवाप्नोति नरकं च न पश्यति इति ।। मनुः – विघसाशी भवेन्नित्यं नित्यं चामृतभोजनः । विघसो भुक्तशिष्टं स्याद्यज्ञशिष्टं तथाऽमृतम् ।। अघं स केवलं भुङ्क्ते यः पचत्यात्मकारणात् । यज्ञशिष्टाशनं ह्येतत् सतामन्नं विधीयते इति । गीतायामपि – यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः । ते त्वघं भुञ्जते पापा ये पचन्त्यात्मकारणात् इति ।। देवलः – देवार्थे ब्राह्मणार्थे च पचमानो न लिप्यते । अघं स केवलं भुङ्क्ते यः पचत्यात्मकारणात् । नात्मार्थं पाचयेदन्नं नात्मार्थं घातयेत् पशून् इति ।

பாரதத்திலும்:- பகலில் இருமுறை ஸ்நானமும், பித்ருக்கள் தேவதைகள் இவர்களின் பூஜையும்,

கவாஹ்னிக தானமும், அதிதிகளுக்கு அன்னதானமும் செய்யத்தகுந்தது. எவன் பகலில் ஒரு கபள மாத்ரமான அன்னத்தையாவது பசுவுக்குக் கொடுக்கின்றானோ அவன் ஸ்வர்க்கத்தை அடைவான், நரகத்தையும் பார்க்க மாட்டான். **மனு:-** ப்ரதிதினம் விகஸத்தைப் புஜிப்பவனாயும், அம்ருதத்தைப் புஜிப்பவனாயும் இருக்க வேண்டும். விகஸம் என்பது அதிதிகள் புஜித்து மீதியுள்ள அன்னம். அம்ருதம் என்பது யக்ஞம் செய்து மீதியுள்ள அன்னமாம். எவன் தனக்குமட்டில் சமைக்கின்றானோ அவன் பாபத்தையே புஜிக்கின்றான். யக்ஞம் செய்து மீதியுள்ள அன்னமே ஸாதுக்களின் அன்னமென்று விதிக்கப்படுகிறது. **பகவத்கீதையிலும்:-** யக்ஞ சேஷத்தைப் புஜிக்கும் ஸாதுக்கள் ஸகல பாபங்களாலும் விடப்படுகின்றனர். எவர்கள் தமக்கு மட்டில் அன்னத்தைச் சமைக்கின்றனரோ, அந்தப் பாபிகள் பாபத்தையே புஜிக்கின்றனர். **தேவலர்:-** தேவர்களுக்கும், ப்ராம்ஹணர்களுக்குமென்று சமைப்பவன் (பாபத்தினால்) பற்றப்படுவதில்லை. எவன் தனக்கு மட்டில் சமைக்கின்றானோ அவன் பாபத்தையே புஜிக்கின்றான். தனக்கென்று அன்னத்தைச் சமைக்கக் கூடாது. தனக்கென்று பசுக்களை வதைக்கக் கூடாது.

श्रुतिरपि — केवलाघो भवति केवलादी इति ॥ हारीतः – अतिथीनागतान् शक्त्या पूजयेदविचारतः । अन्यानभ्यागतान् विप्रान् पूजयेच्छक्तितो गृही इति ॥ आपस्तम्बः – अतिथीनेवाग्रे भोजयेद्बालान् वृद्धान् रोगसंबद्धान् स्त्रीश्चान्तर्वत्नीः इति, शेषभोज्यतिथीनां स्यात् न रसान् गृहे भुञ्जीतानवशेषमतिथिभ्यो नात्मार्थमभिरूपमन्नं पाचयेत् इति च ॥ आगामिभ्यः अतिथिभ्यः गृहे गव्यादिरसानवशेष्य स्वयं भुञ्जीतेत्यर्थः ॥ गौतमोऽपि – भोजयेत् पूर्व मतिथिकुमारव्याधितगर्भिणीसुवासिनीस्थविरान् जघन्यांश्च इति ॥ सुवासिन्यः - दुहितरो भगिन्यश्च । स्थविराः - वृद्धाः । जघन्याः - परिचारकाः ।

ச்ருதியும்:- (பிறருக்குக் கொடாமல்) தான்மட்டில் புஜிப்பவன் பாபத்தையே அடைகின்றவனாகிறான். **ஹாரீதர்:-** வந்த அதிதிகளை விசாரிக்காமல், யதாசக்தி பூஜிக்க வேண்டும். மற்றும் அப்யாகதர்களான ப்ராம்ஹணர்களையும், யதாசக்தி க்ருஹஸ்தன் பூஜிக்க வேண்டும். **ஆபஸ்தம்பர்:-** அதிதிகளையே முதலில் புஜிப்பிக்க வேண்டும். பிறகு பாலர், வ்ருத்தர், ரோகிகள், கர்ப்பிணிகளான ஸ்த்ரீகள், இவர்களையும் புஜிப்பிக்க வேண்டும். அதிதிகளின் சேஷத்தைப் புஜிப்பவனாயிருக்க வேண்டும். வீட்டிலுள்ள மோர் முதலியவைகளை அதிதிகளுக்கு மீதிவைக்காமல் முழுவதையும் உபயோகித்துக் கொள்ளக் கூடாது. தனக்கென்று மதுரமான அபூபம் முதலியதைச் சமைக்கக் கூடாது. **கௌதமரும்:-** அதிதி, பாலன், ரோகி, கர்ப்பிணீ, ஸுவாஸினிகள் (பெண்களும், பகினிகளும்) வ்ருத்தர், பரிசாரகர்கள் இவர்களுக்கு முதலில் போஜனம் செய்விக்க வேண்டும். பிறகு தான் புஜிக்க வேண்டும்.

बोधायनोऽपि – सायं प्रातर्यदन्नं स्यात्तेन वैश्वदेवं बलिमुपहृत्य ब्राह्मणक्षत्रियविट्छूद्रानभ्यागतान् यथाशक्ति पूजयेद्यदि बहूनां न शक्नुयादे कस्मै गुणवते दद्याद्यो वा प्रथममुपागतः स्याच्छूद्रश्चेदागत स्तं कर्मणि नियुञ्ज्याच्छ्रोत्रियाय वाऽग्रं दद्याद्ये नित्यभाक्तिकाः स्युस्तेषामनुपरोधेन संविभागो विहितो न त्वेव कदाचिददत्वा भुञ्जीताथाप्यत्रान्नगीतौ श्लोकावुदाहरन्ति – यो मामदत्वा पितृदेवताभ्यो भृत्यातिथिभ्यश्च सुहृज्जनाय । संपन्नमश्नन् विषमत्ति मोहात्तमद्म्यहं तस्य च मृत्युरस्मि ।। हुताग्निहोत्रः कृतवैश्वदेवः पूज्यातिथीन् भृत्यजनावशिष्टम् । तुष्टः शुचिः श्रद्दधदत्ति यो मां तस्यामृतं स्यां स च मां भुनक्ति इति ।।

போதாயனரும்:- இரவிலும், பகலிலும் எந்த அன்னம் உள்ளதோ அதனால் வைச்வதேவ பலிகளைச்

செய்து அப்யாகதர்களான ப்ராம்ஹண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களை யதாசக்தி பூஜிக்க வேண்டும். அநேகருக்குப் பூஜை செய்யச் சக்தியில்லாவிடில் நற்குணங்களுள்ள ஒருவனுக்காவது கொடுக்க வேண்டும். அல்லது எவன் முதலில் வந்தவனோ அவனுக்குக் கொடுக்க வேண்டும். சூத்ரன் வந்தால் அவனை வேலையிலேவிப் பிறகு கொடுக்க வேண்டும். ச்ரோத்ரியனுக்காவது அக்ரத்தைக் கொடுக்க வேண்டும். எவர் நித்யமும் அன்னத்திற்கு அர்ஹர்களோ அவர்களுக்கு விரோதமல்லாமல் விபாகம் செய்து மற்றவருக்குக் கொடுக்க வேண்டும். எக்காலத்திலும் பிறருக்குக் கொஞ்சமாவது கொடாமல் புஜிக்கலாகாது. இவ்விஷயத்தில், அன்னத்தினால் சொல்லப்பட்ட இரண்டு ச்லோகங்களைச் சொல்லுகின்றனர் (பெரியோர்கள்)- "எவன் என்னை, பித்ருக்கள், தேவதைகள், ப்ருத்யர்கள், அதிதிகள், மித்ரர்கள் இவர்களுக்குக் கொடாமல் அறியாமையால் தான்மட்டில் நிறையப் புஜிக்கின்றானோ, அவனை நான் பக்ஷிக்கின்றேன். அவனுக்கு ம்ருத்யுவாகவும் ஆகின்றேன். எவன், அக்னி ஹோத்ரம் செய்து, வைச்வதேவமும் செய்து, அதிதிகளைப் பூஜித்து, ப்ருத்யர் முதலியவருக்கும் கொடுத்து, மீதியுள்ள என்னை, ஸந்துஷ்டனாய், சுத்தனாய், ச்ரத்தையுடையவனாய், புஜிக்கின்றானோ, அவனுக்கு நான் அம்ருதமாய் இருப்பேன். அவனே என்னைப் புஜிக்கின்றான்" என்று.

स एव – अग्रे तु भोजयेदतिथीनन्तर्वत्नीरनन्तरम्। बालवृद्धांस्तथा दीनान् व्याधितांश्च विशेषतः ।। अन्ने श्रितानि भूतानि अन्नं प्राणमिति श्रुतिः। तस्मादन्नं प्रदातव्यं अन्नं हि परमं हविः ।। हुतेन शाम्यते पापं हुतमन्नेन शाम्यति। अन्नं दक्षिणया शान्तिमुपयातीति नः श्रुतिः इति।

போதாயனரே:- முதலில் அதிதிகளைப் புஜிப்பிக்க வேண்டும். பிறகு கர்ப்பிணிகள், பாலர், வ்ருத்தர், தீனர், பிணியாளர் இவர்களையும் புஜிப்பிக்க வேண்டும்.

ப்ராணிகள் அன்னத்தை ஆச்ரயித்துள்ளன. 'அன்னம் ப்ராணம்' என்று ச்ருதியிருக்கின்றது. ஆகையால் அன்னத்தைக் கொடுக்க வேண்டும். அன்னம் சிறந்த ஹவிஸ்ஸல்லவா? (மனிதனின்) பாபம் ஹோமத்தால் தணிக்கப்படுகின்றது. ஹோமத்தாலுண்டாகும் பாபம் அன்னத்தால் தணிக்கப்படுகின்றது. அன்னத்தாலுண்டாகும் தோஷம் தக்ஷிணையால் தணிக்கப்படுகின்றது என்று நமக்குக் கேள்வி.

याज्ञवल्क्योपि — अन्नं पितृमनुष्येभ्यो देयमप्यन्वहं जलम्। स्वाध्यायं चान्वहं कुर्यान्न पचेदन्नमात्मने ॥ बालस्ववासिनी वृद्धगर्भिण्यातुरकन्यकाः । संभोज्यातिथिभृत्यांश्च दम्पत्योः शेषभोजनम्। अतिथित्वे तु वर्णानां देयं शक्त्याऽनुपूर्वशः । सत्कृत्य भिक्षवे भिक्षा दातव्या सुव्रताय च ॥ भोजयेच्चागतान् काले सखिसंबन्धिबान्धवान् इति ॥ मनुः – शक्तितोऽपचमानेभ्यो दातव्यं गृहमेधिना। संविभागश्च भूतानां कर्तव्योऽनुपरोधतः ॥ अपचमानेभ्यः - ब्रह्मचारिसन्यासिभ्यः ॥

யாக்ஞவல்க்யரும்:- ப்ரதிதினமும், பித்ருக்களுக்கும், மனுஷ்யர்களுக்கும் அன்னத்தை, அது இல்லாவிடில் ஜலத்தையாவது, கொடுக்க வேண்டும். ப்ரதிதினம் வேதாத்யயனமும் செய்ய வேண்டும். தனக்கென்று அன்னம் முதலியதைச் சமைக்கக் கூடாது. பாலர், ஸ்வவாஸினீ, வ்ருத்தர், கர்ப்பிணீ, பிணியாளன், கன்யகை, அதிதி, ப்ருத்யன் இவர்களைப் புஜிக்கச் செய்து மீதியுள்ளதைத் தம்பதிகள் புஜிக்க வேண்டும். (ஸ்வவாஸினீ = விவாஹமாகிப் பித்ருக்ருஹத்திலிருக்கும் பெண்.) நான்கு வர்ணத்தாரும் அதிதிகளாய் வந்தால் வர்ண க்ரமமாய் யதாசக்தி கொடுக்க வேண்டும். ப்ரம்ஹசாரிக்கும், ஸன்யாஸிக்கும் பிக்ஷையைக் கொடுக்க வேண்டும். அவன் நல்ல நியமமுடையவனுயின் ஸத்காரம் செய்து கொடுக்க வேண்டும். போஜன ஸமயத்தில் வந்த

மித்ரன், ஸம்பந்தி, பந்து இவர்களுக்கும் போஜனத்தைக் கொடுக்க வேண்டும். **மனு:-** பாகம் செய்யாதவர்க்கும், ப்ரம்ஹசாரீ, ஸன்யாஸீ இவர்கட்கும் யதாசக்தி அன்னத்தை க்ருஹஸ்தன் கொடுக்க வேண்டும். மற்ற ப்ராணிகளுக்கும். தன் குடும்பத்திற்கு உபரோதமில்லாமல் ஜலம் முதலியவைகளைக் கொடுக்க வேண்டும்.

स एव-यत्पुण्यफलमाप्नोति गां दत्वा विधिवद्गुरोः। तत्पुण्यफलमाप्नोति भिक्षां दत्वा द्विजो गृही। भिक्षां वाप्युदपात्रं वा सत्कृत्य विधिपूर्वकम्। वेदतत्त्वार्थविदुषे ब्राह्मणायोपपादयेत्। सुवासिनीः कुमारीश्च रोगिणो गर्भिणीस्तथा। अतिथिभ्योऽन्वगेवैतान् भोजयेदविचारयन्। भुक्तवत्सु च विप्रेषु स्वेषु भृत्येषु चैव हि। भुञ्जीयातां ततः पश्चात् अवशिष्टं तु दंपती। अदत्वा तु यदेतेभ्यः पूर्वं भुंक्तेऽविचक्षणः। स भुञ्जानो नैव जानाति श्वगृध्रैर्जग्धिमात्मनः। इतरानपि सख्यादीन् संप्रीत्या गृहमागतान्।सत्कृत्यान्नं यथाशक्ति भोजयेत्सह भार्यया। यदि त्वतिथिधर्मेण क्षत्रियो गृहमाव्रजेत्। भुक्तवत्सु तु विप्रेषु कामं तमपि भोजयेत्। वैश्यशूद्रावपि तथा कुटुंबेऽतिथिधर्मिणौ। भोजयेत्सहभृत्यैस्तौ आनृशंस्यं प्रकल्पयन् इति। सह भृत्यैः स्व भृत्यैः सह। स्वभृत्य भोजन काले इत्यर्थः।

மனுவே:- விதிப்படி குருவிற்குப் பசுவைத் தானம் செய்வதால் எந்த புண்யத்தை அடைவானோ, அந்த புண்யத்தை பிக்ஷையைக் கொடுப்பதால் க்ருஹஸ்த ப்ராம்ஹணன் அடைகிறான். பிக்ஷான்னத்தையாவது ஜலபாத்ரத்தையாவது வேதத்தின் தத்வத்தை உணர்ந்த பிராம்ஹணனுக்கு விதியுடனும் ஆதரவுடனும் கொடுக்க வேண்டும். ஸுவாஸினிகள் (புதிதாய் விவாஹமான பெண்கள், நாட்டுப் பெண்கள்) குமாரிகள், (கன்யகைகள்) ரோகிகள், கர்ப்பிணிகள், இவர்களை அதிதிகளுடன் சேர்த்தே ஸந்தேகமில்லாமல் புஜிக்கச் செய்ய வேண்டும். இதில் அக்ரே என்ற பாடபேதமுண்டு. அதற்கு

அதிதிகளுக்கு முன்பே என்று பொருள். ப்ராம்ஹணர்களும் பந்துக்களும் தாஸர்களும் உண்ட பிறகு மீதியுள்ளதைத் தம்பதிகள் புஜிக்க வேண்டும். எவன் இவர்களுக்குக் கொடாமல் முன்பு புஜிக்கிருனோ அந்த மூடன் இறந்த பிறகு தன்னை நாய்களும், கழுதைகளும் புஜிக்குமென்பதை அறியவில்லை. ப்ரீதியுடன் வீட்டிற்கு வந்துள்ள மற்ற மித்ரன் முதலியவரையும் ஆதரவுடன், பார்யையுடன் சேர்த்து யதாசக்தி போஜனம் செய்விக்க வேண்டும். க்ஷத்ரியன் அதிதியாய் க்ருஹத்திற்கு வந்தால், ப்ராம்ஹணர்கள் புஜித்த பிறகு அவனையும் புஜிக்கச் செய்ய வேண்டும். வைச்யனும், சூத்ரனும் குடும்பத்தில் அதிதி தர்மத்துடன் வந்தால் தாஸர்களுடன் அவர்களையும் புஜிக்கச் செய்ய வேண்டும்.

स एव – न ब्राह्मणस्य त्वतिथिः गृहे राजन्य उच्यते। वैश्यशूद्रौ सखा चैव ज्ञातयो गुरुरेव च इति ।। न क्षत्रियादयो ब्राह्मणेनातिथि सत्कारमर्हन्ति । किन्तु भोजनमात्रमित्यर्थः । तथा च स्मृतिरत्ने – ब्राह्मणं त्वनधीयानमधीयानं नृपं विशम् । पूर्वं च भोजयेत्तुल्यान् प्रत्युत्थानविवर्जितः ।। शूद्रमभ्यागतं कर्म कारयित्वा तु भोजयेत् ।। मातृजातीयसदृशं पूजयेदनुलोमजम् इति ।। आपस्तम्बोऽपि – ब्राह्मणायानधीयानायासनमुदकमन्नमिति देयं न प्रत्युत्तिष्ठेद्राजन्यवैश्यौ च शूद्रमभ्यागतं कर्मणि नियुञ्ज्यादथास्मै दद्यात् इति ।। राजन्यवैश्यावधीयानावपि न प्रत्युत्तिष्ठेदित्यर्थः ।।

மனுவே:- ப்ராம்ஹணனுடைய வீட்டில் வந்த க்ஷத்ரியன் அதிதி எனச் சொல்லப்படுவதில்லை. வைச்யன், சூத்ரன், ஸகா ஜ்ஞாதி, குரு இவர்களுமப்படியே. க்ஷத்ரியன் முதலியவர் அதிதி பூஜையைப் பெறுவதற் குரியவரல்ல, போஜன மாத்ரத்திற்கு அர்ஹரென்பது பொருள். அவ்விதமே, ஸ்ம்ருதிரத்னத்தில்:- வேதாத்யயனம் செய்யாத ப்ராம்ஹணனையும், அத்யயனம்

செய்துள்ள க்ஷத்ரியனையும், வைச்யனையும், எழுந்து வரவேற்பதில்லாமல், முதலில் புஜிக்கச் செய்ய வேண்டும். அப்யாகதனான சூத்ரனை ஒரு வேலையைச் செய்வித்துப் பிறகு புஜிக்கச் செய்ய வேண்டும். அனுலோம ஜாதீயனை மாதாவின் ஜாதியில் பிறந்தவனைப் போல் பூஜிக்க வேண்டும். ஆபஸ்தம்பரும்:- வேதாத்யனமில்லாத ப்ராம்ஹணனுக்கு ஆஸனம், ஜலம், அன்னம் இவைகளைக் கொடுக்க வேண்டும். எழுந்து மர்யாதை செய்யக் கூடாது. க்ஷத்ரிய வைச்யர்கள் விஷயத்திலுமப்படியே. சூத்ரன் வந்தால் அவனை ஒரு வேலையில் ஏவிப்பிறகு இவனுக்குக் கொடுக்க வேண்டும். க்ஷத்ரிய வைச்யர்கள் வேதாத்யயனமுள்ளவராயினும் ப்ராம்ஹணன் எழுந்திருக்கக் கூடாதென்பது பொருள்.

विष्णुपुराणे — ततः सुवासिनी दुःखिगर्भिणीवृद्धबालकान्। भोजयेत् सत्कृतान्नेन प्रथमं तु परं गृही ।। अभुक्तवत्सु चैतेषु भुञ्जन् भुङ्क्ते सुदुष्कृतम् । मृतश्च भुक्त्वा नरकं श्लेष्मभुग्जायते नृप इति ।। मार्कण्डेयोऽपि – पूजयित्वाऽतिथीन् स्वांश्च ज्ञातीन् बन्धूंस्तथाऽर्थिनः । विकलान् बालवृद्धांश्च भोजयेदातुरांस्ततः ।। वाञ्छेत् क्षुत्तृट्परीतात्मा यश्चान्नं रससंयुतम्।। श्रीमन्तं ज्ञातिमासाद्य यो ज्ञातिरवसीदति । सीदता यत्कृतं पापं तत्सर्वं प्रतिपद्यते इति ।। पराशरः – अपूर्वः सुव्रती विप्रो ह्यपूर्वश्चातिथिस्तथा । वेदाभ्यासरतो नित्यं त्रयोऽपूर्वा दिने दिने ।। यतिश्च ब्रह्मचारी च पक्वान्नस्वामिनावुभौ । तयोरन्नमदत्वा तु भुक्त्वा चान्द्रायणं चरेत्।। दद्याच्च भिक्षात्रितयं परिव्राड् ब्रह्मचारिणाम् । इच्छया च ततो दद्याद्विभवे सत्यवारितम्।। यतिहस्ते जलं दद्याद्भैक्षं दद्यात् पुनर्जलम्। तद्भैक्षं मेरुणा तुल्यं तज्जलं सागरोपमम् इति ।। नृसिंहपुराणे – भिक्षां च भिक्षवे दद्यात् परिव्राड् ब्रह्मचारिणे । अकल्पितान्नादुद्धृत्य सर्वव्यञ्जनसंयुताम् इति।

விஷ்ணு புராணத்தில்:- பிறகு, ஸுவாஸினீ, வருந்தியவன், கர்ப்பிணீ, கிழவன், சிறுவன் இவர்களை ஆதரவுடன் முந்தியே புஜிக்கச் செய்ய வேண்டும். பிறகு க்ருஹஸ்தன் புஜிக்க வேண்டும். இவர்கள் புஜிக்காமலிருக்கத் தான் புஜித்தால் க்ருஹஸ்தன் பாபத்தைப் புஜிக்கின்றான். இறந்து நரகத்தை அனுபவித்துப் பிறகு ச்லேஷ்மத்தைப் புஜிக்கும் ஜந்துவாய்ப் பிறப்பான், ஓ அரசனே! **மார்க்கண்டேயரும்:-** அதிதிகளையும், தனது ஜ்ஞாதிகள் பந்துக்கள், யாசகர், அங்கஹீனர், பாலர்கள், வ்ருத்தர்கள், பிணியாளர்கள் இவர்களையும், பசி தாகங்களுடன் அன்னத்தை அபேக்ஷிப்பவனையும் பூஜித்துப் புஜிப்பிக்க வேண்டும். தனமுள்ள பந்துவையடைந்து, தனமில்லாத எந்தப் பந்து வருந்துகின்றானோ, வறுமையுள்ள அவன் செய்த பாபம் முழுவதையும் தனமுள்ள பந்து அடைகிறான். **பராசரர்:-** நல்ல நியமங்களுடைய ஸன்யாஸியும் அபூர்வனாவான். அதிதியும் அபூர்வனாவான். ப்ரதிதினம் வேதாப்யாஸம் செய்பவனான ப்ரம்ஹசாரியும் அபூர்வனாவான். இவ்விருவரும் அதிதிபோல் பூஜ்யராவர். இம்மூவரும் ப்ரதிதினம் அபூர்வராவர். ஸன்யாஸியும், ப்ரம்ஹசாரியும், க்ருஹஸ்தன் சமைத்துள்ள அன்னத்திற்கு ஸ்வாமிகளாவர். அவ்விருவருக்கும் அன்னத்தைக் கொடாமல் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஸன்யாஸிகளுக்கும், ப்ரம்ஹசாரிகளுக்கும் மூன்று பிக்ஷையைக் கொடுக்க வேண்டும். விபவமிருந்தால், இச்சைப்படி அதற்கு மேலும் கொடுக்கலாம். யதியின் கையில் ஜலத்தைக் கொடுக்க வேண்டும். பிறகு பிக்ஷான்னத்தைக் கொடுக்க வேண்டும். மறுபடி ஜலத்தைக் கொடுக்க வேண்டும். அந்தப் பிக்ஷான்னம் மேருவுக்குச் சமமாகும். அந்த ஜலம் ஸமுத்ரத்திற்குச் சமமாகும். **ந்ருஸிம்மபுராணத்தில்:-** ஸன்யாஸிக்கும், ப்ரம்ஹசாரிக்கும், அன்ன பாத்ரத்திலிருந்து எடுத்து எல்லா வ்யஞ்ஜனங்களுடன் கூடியதாய்ப் பிக்ஷையைக் கொடுக்க வேண்டும்.

यमः — सत्कृत्य भिक्षवे भिक्षां यः प्रयच्छति मानवः । गोप्रदानसमं पुण्यं तस्याह भगवान् यमः इति ।। ब्रह्मचारिणं स्वस्तीति वाचयित्वा तद्धस्ते जलं प्रदाय भिक्षां दद्यादित्याह गौतमः – स्वस्ति वाच्य भिक्षादानमप्पूर्वम् इति ।। हारीतः – भक्त्या च शक्तितो नित्यं विष्णुमभ्यर्च्य सादरम् ।। भिक्षां च भिक्षवे दद्यात् परिव्राड् ब्रह्मचारिणे । विष्णुरेव यतिश्चायमिति निश्चित्य भावयेत् ।। यतिर्यस्य गृहे भुङ्क्ते तस्य भुङ्क्ते हरिः स्वयम् । हरिर्यस्य गृहे भुङ्क्ते तस्य भुङ्क्ते जगत्त्रयम् । इति ।

யமன்:- எந்த மனிதன் பூஜித்துப் பிக்ஷுகனுக்குப் பிக்ஷையைக் கொடுக்கின்றானோ அவனுக்குக் கோதான பலனுக்குச் சமமான பலமென்று பகவான் யமன் சொன்னார். ப்ரம்ஹசாரியை ஸ்வஸ்தி என்று சொல்வித்து அவன் கையில் ஜலத்தைக் கொடுத்துப் பிக்ஷையைக் கொடுக்க வேண்டும். ஹாரீதர்:- ப்ரதிதினம் ஆதரவுடன் யதாசக்தி விஷ்ணுவைப் பூஜித்து, ஸன்யாஸிக்கும், ப்ரம்ஹசாரிக்கும் பிக்ஷையைக் கொடுக்க வேண்டும். இந்த ஸன்யாஸி விஷ்ணுவே என்று பாவிக்க வேண்டும். யதி எவனின் க்ருஹத்தில் புஜிக்கின்றானோ அவன் க்ருஹத்தில் ஹரி தாமே புஜிக்கின்றார். ஹரி எவனின் க்ருஹத்தில் புஜிக்கின்றாரோ அங்கு மூன்றுலகமும் புஜிக்கின்றது.

व्यासः – यः पात्रपूर्णां भिक्षां यतिभ्यः सम्प्रयच्छति । विमुक्तः सर्वपापेभ्यो नासौ दुर्गतिमाप्नुयात् इति ।। वैश्वदेवात् पूर्वं भिक्षौ गृहमागते सति कर्तव्यमाह पराशरः – वैश्वदेवे तु सम्प्राप्ते भिक्षुके गृहमागते । वैश्वदेवाकृतं पापं शक्तो भिक्षुर्व्यपोहितुम् । न हि भिक्षुकृतान् दोषान् वैश्वदेवो व्यपोहति इति ।। सम्प्राप्ते - प्रसक्ते । अननुष्ठित इति यावत् । वैश्वदेवाकृतमिति ।। वैश्वदेवस्य पश्चात्करणेन प्रसक्तो यो दोषः, स भिक्षादानेन निवर्त्यते । भिक्षापरिहारेण तु यो दोषः, नासौ पूर्वकृतेनापि वैश्वदेवेन निवर्त्यत इत्यर्थः ।।

வ்யாஸர்:- எவன் யதிகளுக்குப் பாத்ரம் நிறையுமான பிக்ஷையைக் கொடுக்கின்றனோ, அவன் ஸகல பாபங்களினின்றும் விடுபடுவான். தாரித்ர்யத்தை அடையமாட்டான். வைச்வதேவம் செய்வதற்கு முன் பிக்ஷுகன் பிக்ஷைக்கு வீட்டிற்கு வந்துவிட்டால் செய்ய வேண்டியதைச் சொல்லுகிறார் **பராசரர்:-** வைச்வதேவம் செய்ய வேண்டிய ஸமயத்தில் (செய்யாமலிருக்கும் பொழுது) பிக்ஷுகன் க்ருஹத்திற்கு வந்து விட்டால், வைச்வதேவத்திற்காக எடுத்து வைத்துவிட்டு, பிக்ஷுகனை, அன்னத்தைக் கொடுத்து அனுப்ப வேண்டும். வைச்வதேவத்தை முன் செய்யாத தோஷத்தைப் போக்குவதற்குப் பிக்ஷுகன் சக்தன். பிக்ஷுவுக்குப் பிக்ஷையைக் கொடாததால் உண்டான தோஷத்தை வைச்வதேவம் போக்குவதில்லை. வைச்வதேவத்தைப் பின்பு செய்வதால் எந்தத் தோஷமோ அது பிக்ஷாதானத்தால் நிவர்த்திக்கப்படுகிறது. பிக்ஷை கொடாததால் உண்டாகிய தோஷம், முன் செய்யப்பட்ட வைச்வதேவத்தால் நிவர்த்திக்கப்படுவதில்லை என்பது பொருள்.

तथा च हारीतः – अकृते वैश्वदेवे तु भिक्षुके गृहमागते। उद्धृत्य वैश्वदेवार्थं भिक्षां दत्वा विसर्जयेत् ॥ पश्चात् कृते वैश्वदेवे दोषं भिक्षुर्व्यपोहति। न भिक्षुवर्जनोत्थं तु वैश्वदेवो व्यपोहति ॥ तस्मात् समाहितो भिक्षां दद्यात् प्राप्ताय भिक्षवे इति ॥

ஹாரீதர்:- வைச்வதேவம் செய்யப்படாமலிருக்கும் பொழுது, பிக்ஷுகன் வீட்டிற்கு வந்தால், வைச்வ தேவத்திற்காக எடுத்து வைத்துவிட்டுப் பிக்ஷையைக் கொடுத்து அனுப்ப வேண்டும். வைச்வதேவத்தைப் பின்பு செய்வதாலுண்டாகும் தோஷத்தை, பிக்ஷுகன் போக்குவான். பிக்ஷுவுக்குப் பிக்ஷை கொடுக்காத தோஷத்தை வைச்வதேவம் போக்காது. ஆகையால் கவனமுடையவனாய், வீட்டிற்கு வந்த பிக்ஷுவுக்குப் பிக்ஷையைக் கொடுக்க வேண்டும்.

व्यासेन भिक्षवो दर्शिताः – यतिश्च ब्रह्मचारी च विद्यार्थी गुरुपोषकः । अध्वगः क्षीणवृत्तिश्च षडेते भिक्षुकाः स्मृताः इति ॥ मनुरपि – व्याधितस्यार्थहीनस्य कुटुम्बात्प्रच्युतस्य च । अध्वानं वा प्रपन्नस्य भिक्षाचर्या विधीयते इति । एवं च – न दद्याद्यतये स्वर्णं तण्डुलं ब्रह्मचारिणे । पक्वान्नं तु गृहस्थाय दाता दुर्गाणि गच्छति इति वचनं भिक्षुकव्यतिरिक्तगृहस्थविषयं वेदितव्यम् । यमः – आहारमात्रादधिकं न कश्चिद्भैक्षमाहरेत् । युज्यते स्तेयदोषेण कामतोऽधिकमाहरन् ॥ तस्मान्नोपहरेद्भैक्ष मतिरक्तिं यतिर्व्रती इति ।

வ்யாஸரால்:- பிக்ஷுக்கள் இன்னாரென்று சொல்லப்பட்டுள்ளனர், யதி, ப்ரம்ஹசாரீ, வித்யார்த்தீ, குருவைப் போஷிப்பவன், வழிப்போக்கன், வ்ருத்தியில்லாதவன் என்ற ஆறு பேர்களும் பிக்ஷுகர் எனச் சொல்லப்பட்டுள்ளனர். **மனுவும்:-** வ்யாதியுடையவன், பணமில்லாதவன், குடும்பத்தினின்றும் நழுவியவன், வழிப்போக்கன் இவர்களுக்குப் பிக்ஷை எடுத்தல் விதிக்கப்படுகிறது. இவ்விதமிருப்பதால், 'யதிக்கு ஸ்வர்ணத்தையும், ப்ரம்ஹசாரிக்கு அரிசியையும், க்ருஹஸ்தனுக்குப் பக்வான்னத்தையும் கொடுக்கக் கூடாது. கொடுத்தால், கொடுத்தவன் கஷ்டங்களை அடைவான்' என்ற வசனம் பிக்ஷுகனல்லாத க்ருஹஸ்தனைப் பற்றியதென அறியவும். **யமன்:-** தன் ஆஹாரத்திற்குப் போதுமானதை விட அதிகமாகப் பிக்ஷையை வாங்கக் கூடாது. ஆசையால் அதிகமாக வாங்குகின்றவன் திருடிய பாபத்துடன் சேருவான். ஆகையால், விரதமுள்ள ஸன்யாஸியும் அதிகமாக பிக்ஷான்னத்தை வாங்கக் கூடாது.

चन्द्रिकायाम् – माधूकरीं य आदाय ब्राह्मणेभ्यः प्रयच्छति । दाता तु नरकं याति भोक्ता भुञ्जीत किल्बिषम् ॥ हस्तदत्ता तु या भिक्षा लवणव्यञ्जनानि च । भोक्ता ह्यशुचितां याति दाता स्वर्गं न गच्छति

इति ।। यमः – अपचन्तमतिक्रम्य पचन्तं यस्तु भोजयेत्। कृमीणां तु भजेद्योनिं वर्षाणामधिकं शतम् ।। अहुत्वाऽग्निमसन्तर्प्य तपस्विनमुपागतम्। अशित्वा तु परे लोके स्वानि मांसानि खादति इति।

சந்த்ரிகையில்:- பிக்ஷான்னத்தை வாங்கி எவன் அதை ப்ராம்ஹணர்களுக்குக் கொடுக்கின்றானோ, அவன் நரகத்தையடைவான். புஜித்தவன் பாபத்தைப் புஜிப்பான். கையினால் கொடுக்கப்பட்ட பிக்ஷான்னம், உப்பு, வ்யஞ்ஜனங்கள் இவைகளைப் புஜிப்பவன் அசுத்தியை அடைகிறான். கொடுத்தவனும் ஸ்வர்க்கத்தை அடையமாட்டான். யமன்:- சமைக்காதவனை (யதி ப்ரம்ஹசாரிகளை) அதிக்ரமித்துச் சமைப்பவனை (க்ருஹஸ்தனை) எவன் புஜிப்பிக்கின்றானோ, அவன் அநேகவர்ஷகாலம் வரை புழுக்களின் பிறப்பை அடைவான். அக்னியில் ஹோமம் செய்யாமல், வீட்டிற்கு வந்துள்ள தபஸ்வியைப் புஜிப்பிக்காமல் புஜிப்பானாகில், அவன் நரகத்தில் தன் மாம்ஸத்தைப் புஜிப்பான்.

आपस्तम्बः – स्त्रीणां प्रत्याचक्षाणानां समाहितो ब्रह्मचारीष्टं दत्तं हुतं प्रजां पशून् ब्रह्मवर्चसमन्नाद्यं वृङ्क्ते तस्मादुह वै ब्रह्मचारिसङ्घं चरन्तं न प्रत्याचक्षीत इति ।। समाहितः - व्रताध्ययननिष्ठ इत्यर्थः ।। अत एव वसिष्ठपराशरौ – अव्रता ह्यनधीयाना यत्र भैक्षचरा द्विजाः । तं ग्रामं दण्डयेद्राजा चोरभक्तप्रदो हि सः इति ।। ब्रह्मचारिकर्तृकं मध्वादिवर्जनम्, स्वगृह्यप्रसिद्धानि चत्वारि प्राजापत्यादीनि च अत्र व्रतशब्दाभिधेयानि। तदुभयविधव्रतरहिताः स्वाध्यायमप्यनधीयानाः ब्रह्मचारिणः यत्र ग्रामे भैक्षमाचरन्ति तं ग्रामं दण्डयेत् । यतः चोरसदृशेभ्यः भक्तं - अन्नं प्रयच्छतीत्यर्थः ।।

ஆபஸ்தம்பர்:- ஸமாஹிதனான (விஹித ப்ரதிஷித்தங்களில் கவனமுடைய) ப்ரம்ஹசாரீ, பிக்ஷையைக் கொடாமல் மறுதலிக்கும் ஸ்த்ரீகளின்,

யாகத்தாலும், தானத்தாலும், ஹோமத்தாலும் ஸம்பாதித்த கர்மம், ப்ரஜை, பசுக்கள், ப்ரம்ஹவர்ச்சஸம், அன்னம் இவைகளை நாசப்படுத்துவான். ஆகையால் பிக்ஷை வாங்கும் ப்ரம்ஹசாரிகளின் கூட்டத்தை மறுதலிக்கக் கூடாது. (இவர்களுள்) ஸமாஹிதனும், ப்ரம்ஹசர்ய வ்ரதங்களுடையவனுமான ப்ரம்ஹசாரியும் ஒருகால் இருக்கக் கூடும். 'ஸமாஹிதன்' என்பதற்கு, வ்ரதம் அத்யயனம் இவைகளுடன் கூடியவன் என்றும் பொருள். ஆகையாலேயே **வஸிஷ்டரும், பராசரரும்**:- வ்ரதங்களில்லாமலும், வேதாத்யயனம் இல்லாமலுமுள்ள ப்ராம்ஹணர்கள் எந்த க்ராமத்தில் பிக்ஷையைப் பெறுகிறார்களோ, அந்த க்ராமத்தை அரசன் தண்டிக்க வேண்டும். ஏனெனில் அந்த க்ராமம் திருடர்களுக்கு அன்னத்தைக் கொடுக்கின்றதல்லவா. இங்கு 'வ்ரதம்' என்பதற்கு ப்ரம்ஹசாரிகள் அனுஷ்டிக்க வேண்டிய மது முதலியதின் வர்ஜனமும், ப்ரஜாபத்யம் முதலிய நான்கு வ்ரதங்களும் பொருள். அந்த இருவிதமான வ்ரதங்களில்லாமலும், வேதாத்யனனம் செய்யாமலும் ப்ரம்ஹசாரிகள் எந்த க்ராமத்தில் பிக்ஷையை வாங்குகின்றனரோ அந்த க்ராமத்தைத் தண்டிக்க வேண்டும். திருடனைப் போன்றவருக்கு அன்னத்தைக் கொடுக்கிறதல்லவா? என்று பொருள்.

व्यासः – द्वाविमौ पुरुषौ लोके सूर्यस्योपरि तिष्ठतः । अन्नप्रदाता दुर्भिक्षे सुभिक्षे हेमवस्त्रदः ।। मनुः – विद्यातपः समृद्धेषु हुतं विप्रमुखाग्निषु । निस्तारयति दुर्गाच्च महतश्चैव किल्बिषात् ।। नश्यन्ति हव्यकव्यानि नराणामविजानताम् । भस्मीभूतेषु विप्रेषु मोहाद्दत्तानि दातृभिः ।। अविजानताम् - अपात्रदानदोषमविजानतां दातॄणां, हव्यकव्यानि नश्यन्ति । हव्यं - दैवम् । कव्यं - पित्र्यम् । भस्मीभूतेषु - निस्तेजस्केषु ।।

வ்யாஸர்:- துர்ப்பிக்ஷ காலத்தில் அன்னத்தைக் கொடுப்பவன், ஸுபிக்ஷ காலத்தில் பொன் வஸ்த்ரம்

இவைகளைக் கொடுப்பவன் என்ற இவ்விரு மனிதர்களும் ஸூர்யனுக்கு மேலான உலகில் இருக்கின்றனர். **மனு:-** வித்தையாலும், தபஸ்ஸாலும் நிறைந்துள்ள ப்ராம்ஹணர்களின் முகங்களாகிய அக்னிகளில் ஹோமம் செய்யப்பட்ட ஹவ்யம் கவ்யம் முதலிய வஸ்து, பெரிதான பயத்தினின்றும், பாபத்தினின்றும் தப்புவிக்கின்றது. தேஜஸ்ஸில்லாமல் சாம்பல் போலுள்ள ப்ராம்ஹணர்களிடத்தில், அயோக்ய ப்ராம்ஹணர்களுக்குக் கொடுப்பதால் உண்டாகும் தோஷத்தை அறியாத தாதாக்களால் அறியாமையால் கொடுக்கப்பட்ட ஹவ்யகவ்யங்கள் வீணாய் அழிகின்றன.

स एव – काममभ्यर्चयेन्नित्यं नाभिरूपमपि त्वरिम्। द्विषता हि हविर्भुक्तं भवति प्रेत्य निष्फलम्। श्रोत्रियायैव देयानि हव्य कव्यानि दातृभिः । अर्हत्तमाय विप्राय तस्मै दत्तं महाफलम् ।। सहस्रं हि सहस्राणामनृचां यत्र भुञ्जते । एकस्तान् मन्त्रविद्विप्रः सर्वानर्हति धर्मतः ।। ज्ञाननिष्ठा द्विजाः केचित्तपोनिष्ठास्तथा परे । तपः स्वाध्यायनिष्ठाश्च कर्मनिष्ठास्तथैव च ।। ज्ञाननिष्ठेषु कव्यानि प्रतिष्ठाप्यानि यत्नतः । हव्यानि त यथान्यायं सर्वेष्वेव चतुर्ष्वपि इति ।

மனுவே:- வித்வானாகினும் சத்ருவைப் பூஜிக்கக் கூடாது. சத்ருவினால் புஜிக்கப்பட்ட ஹவ்யம், பரலோகத்தில் நிஷ்பலமாய் ஆகிறது. கொடுப்பவர்கள் ஹவ்யங்களையும் கவ்யங்களையும் ச்ரோத்ரியனுக்கே கொடுக்க வேண்டும். அவ்விதமான ப்ராம்ஹணனுக்குக் கொடுக்கப்பட்டது மஹாபலத்தைக் கொடுப்பதாகும். எந்த ச்ராத்தத்தில், வேதாத்யயனமில்லாத பத்துலக்ஷம் ப்ராம்ஹணர்கள் புஜிக்கின்றனரோ அந்த ச்ராத்தத்தின் பலனை, வேதமறிந்த ப்ராம்ஹணன் ஒருவன் புஜிப்பதால் கொடுக்க அர்ஹனாவான். சில ப்ராம்ஹணர்கள், ஆத்மஜ்ஞான பரர்களாயுள்ளனர். சிலர் தபோநிஷ்டர்களாய் இருக்கின்றனர். சிலர் தபஸ்ஸிலும், அத்யயனத்திலும்

ஆஸக்தியுள்ளவராய் இருக்கின்றனர். சிலர் யாகாதிகர்மங்களில் தத்பரராயிருக்கின்றனர். ஜ்ஞான ப்ரதானராய் இருப்பவரிடத்தில் பித்ருக்களையுத்தேசித்த அன்னங்களை ப்ரயத்னத்துடன் கொடுக்க வேண்டும். தேவர்களை உத்தேசித்த ஹவ்யங்களை இந்த நான்கு பேர்களிடத்திலும் ந்யாயானுஸாரமாய்க் கொடுக்க வேண்டும்.

बृहस्पतिरपि— नष्टशौचे व्रतभ्रष्टे विप्रे वेदविवर्जिते। दीयमानं रुदत्यन्नं (किंमया)यन्मया दुष्कृतं कृतम्॥ वेदविद्याव्रतस्नाते श्रोत्रिये गृहमागते। क्रीडन्त्योषधयः सर्वा यास्यामः परमां गतिम् इति॥ अयं च गुणदोषविवेको वैश्वदेवान्ते न कर्तव्य इत्यभिप्रेत्य अतिथिलक्षणमाह पराशरः– इष्टो वा यदि वा द्वेष्यो मूर्खः पण्डित एव वा। सम्प्राप्तो वैश्वदेवान्ते सोऽतिथिः स्वर्गसंक्रमः॥ दूराध्वोपगतं श्रान्तं वैश्वदेव उपस्थितम्। अतिथिं तं विजानीयान्नातिथिः पूर्वमागतः॥ नैकग्रामीणमतिथिं संगृह्णीत कदाचन। अनित्यमागतो यस्मात् तस्मादतिथिरुच्यते इति॥ वैश्वदेवान्ते - वैश्वदेवस्योपरि घटिकापादपरिमिते काले समागनमेवातिथिलक्षणं नान्यद्विद्यादि। स्वर्गसंक्रमः - स्वर्गप्राप्तिहेतुः। नातिथिः पूर्वमागतः इति। वैश्वदेवे समागतः तस्मिन्नेवातिथिः, नोत्तरेद्युरित्यर्थः।

ப்ருஹஸ்பதியும்:- சௌசமற்றவனும், வ்ரதமில்லாதவனும், வேதமற்றவனுமான விப்ரனிடத்தில் கொடுக்கப்படும் அன்னமானது 'என்னால் என்ன பாபம் செய்யப்பட்டது' என்று கண்ணீர் விடுகிறது. வித்யாஸ்நாதனும் வ்ரதஸ்நாதனுமான விப்ரன் வீட்டிற்கு வந்தால், நாம் நற்கதியை அடையப்போகிறோம்' என்று அன்னங்களெல்லாம் ஸந்தோஷித்து விளையாடுகின்றன. இந்தக் குணதோஷ விவேகத்தை வைச்வதேவத்தின் முடிவில் செய்ய வேண்டுவதில்லை என்று அபிப்ராயப்பட்டு, அதிதி லக்ஷணத்தைச் சொல்லுகிறார்

பராசரர்:- இஷ்டனானாலும், த்வேஷ்யனானாலும், மூர்க்கனானாலும், பண்டிதனானாலும் வைச்வதேவத்தின் முடிவில் வந்தவனெவனோ, அந்த அதிதி ஸ்வர்க்கத்தின் ப்ராப்திக்குக் காரணமாவான். தூரமான வழி நடந்து வந்தவனும், களைப்படைந்தவனும், வைச்வதேவ காலத்தில் வந்தவனுமாயுள்ளவனை அதிதியென்றறியவும். அதற்கு முன்வந்தவன் அதிதியாகமாட்டான். ஒரே க்ராமத்தில் வஸிப்பவனை அதிதியாய் க்ரஹிக்கக் கூடாது. அநித்யமாய் வந்தவனானதால் அதிதி எனப்படுகிறான். மூலத்திலுள்ள 'வைச்வதேவாந்தே' என்பதற்கு, வைச்வதேவம் ஆனபிறகு கால்நாழிகைக்குள் என்பது பொருள். அக்காலத்தில் வருவதுதான் அதிதிக்கு லக்ஷணம். மற்ற வித்யை முதலியதல்ல. 'நாதிதி:பூர்வமாகத;' - வைச்வதேவத்தில் வந்தவன் அன்றைக்குத்தான் அதிதி. மறுநாளில் அதிதியல்ல என்று பொருள்.

तथा च मनुः — एकरात्रं हि निवसन्नतिथिर्ब्राह्मणः स्मृतः । अनित्यं हि स्थितो यस्मात्तस्मादतिथिरुच्यते ।। नैकग्रामीणमतिथिं विप्रं साङ्गतिकं तथा । उपस्थितं गृहे विद्याद्भार्या यत्राग्नयोऽपि वा इति । साङ्गतिकं - सङ्गतेन चरन्तं कचित् कचिदतिथित्वेन सङ्गतपूर्वमिति यावत् । तं नातिथिं विद्यात् । यत्र स्वकीये परकीये वा गृहे भार्या नातिथिं विद्यात् । यत्र स्वकीये परकीये वा गृहे भार्या अग्नयो वा सन्ति, तत्रोपस्थितमतिथिं विद्यात् । नान्यं विप्रोषितभार्यस्य स्वस्याभ्याशमागतमित्यर्थः । आपस्तम्बः – स्वधर्मयुक्तं कुटुम्बिन मभ्यागच्छति धर्मपुरस्कारो नान्यप्रयोजनः सोऽतिथिर्भवति इति ।। आदितो यच्छब्दो द्रष्टव्यः । अन्ते स इति दर्शनात् ।। स एव – अग्निरिव ज्वलन्नतिथिरभ्यागच्छति इति ।। तस्मादसौ भोजनादिभि-स्तर्पयितव्यः । निराशस्तु गतः गृहान् दहेत् इत्यर्थः ।

அவ்விதமே **மனு:-** ஒருநாள் (மட்டும்) வஸிக்கும் ப்ராம்ஹணன் அதிதி எனப்படுகிறான். அநித்யமாய்

இருப்பதால் அதிதி எனப்படுகிறுன். ஒரு க்ராமத்தில் இருப்பவனை அதிதி என்று அறியக்கூடாது. சிற்சில ஸமயங்களில் அதிதியாய் வந்தவனையும் அதிதி என்றறியக்கூடாது. தன் வீட்டிலாவது பிறர் வீட்டிலாவது பார்யையுடனும் அக்னிகளுடனுமிருந்தால் அந்த இடத்தில் வந்தவனை அதிதி என்றறியவும். பார்யை அன்ய தேசத்திலிருக்கும் பொழுது தனிமையாயுள்ள தன் ஸமீபத்திற்கு வந்தவனை அதிதியெனக் கொள்ள வேண்டியதில்லை என்று பொருள். **ஆபஸ்தம்பர்:**- எந்த ச்ரோத்ரியன், ஸ்வதர்மத்துடன் கூடிய க்ருஹஸ்தனைக் குறித்து, தர்மத்தை விரும்பியவனாய், வேறு ப்ரயோஜனமில்லாமல் வருகின்றுனோ அவன் அதிதி ஆவான். **ஆபஸ்தம்பரே:**- எரிகிற அக்னிபோல் அதிதி வருகிறுன் என்று. இதன் பொருள். ஆகையால் இவனைப் போஜனாதிகளால் த்ருப்தனாய்ச் செய்ய வேண்டும். ஆசையற்றுச் சென்றால் அவன் வீட்டைத் தஹித்து விடுவானென்பதாம்.

स एव – सर्वान् वैश्वदेवे भागिनः कुर्वीताश्वचण्डालेभ्यो नानर्हद्भ्यो दद्यादित्येके ये नित्या भाक्तिकास्तेषामनुपरोधेन संविभागो विहितः काममात्मानं भार्यां पुत्रं वोप रुन्ध्यात् नत्वेव दासकर्मकरं तथा चात्मनोऽनुपरोधं कुर्याद्यथा कर्मसु समर्थः स्यात् इति। बोधायनः – श्रान्तोऽदृष्टपूर्वोऽश्रुतः केवलमन्नार्थी नान्यप्रयोजनो य एति सोऽतिथिर्भवत्यपि वा सर्ववर्णानामन्यतः काले यथोपपन्नः सर्वेषामतिथीनां श्रेष्ठतमोऽतिथिर्भवति इति।

ஆபஸ்தம்பரே:- வைச்வதேவத்தின் முடிவில் போஜனத்திற்காக வந்த எல்லோரையும் பாகமுள்ளவராய்ச் செய்ய வேண்டும், நாய்கள், சண்டாளர் வரையில். சண்டாளாதிகளுக்குக் கொடுக்கக் கூடாதென்று சிலர் எண்ணுகின்றனர். (இதனால், கொடுத்தால் நன்மை, கொடுக்காவிடில் ப்ரத்யவாயமில்லை என்பதாம்.) எவர்கள் நித்யமும் அன்னத்திற்கு யோக்யர்களோ, வேலைக்காரர்

முதலியவர், அவர்களுக்கு இடையூறில்லாமல் வைச்வதேவாந்தத்தில் வந்தவர்க்கு அன்னத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். தன்னையும் பார்யையையும், புத்ரனையும் வருத்தலாம், வீட்டில் ஊழியம் செய்பவனை வருத்தக் கூடாது. தனக்கும் அதிகமாய் வறுமையைச் செய்யக் கூடாது. நித்ய கர்மானுஷ்டானத்திற்கு ஸாமர்த்யமிருக்கும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். **போதாயனர்:-** களைப்புற்றவனும், முன் பார்க்கப்படாதவனும், முன் கேட்கப்படாதவனும், அன்னத்தை மட்டில் விரும்பியவனும், வேறொன்றையும் விரும்பாதவனுமாய் எவன் வருகின்றானோ அவன் அதிதியாவான். அல்லது எந்தவர்ணத்தில் ஒருவனானாலும் காலத்தில் விதிப்படி வந்தவன் எல்லா அதிதிகளிலும் மிகச் சிறந்த அதிதியாகிறான்.

गौतमोऽपि — असमानग्रामोऽतिथिरैकरात्रिकोऽधिवृक्षसूर्योपस्थायी ब्राह्मणस्यानतिथिरब्राह्मणोऽयज्ञे संवृतश्चेद्भोजनं तु क्षत्रियस्योर्ध्वं ब्राह्मणेभ्योऽन्यान् भृत्यैः सहानृशंस्यार्थम् इति । अब्राह्मणः - क्षत्रियादिः । अनतिथिः - न तत्रातिथिधर्मा अनुष्ठेयाः । अयज्ञे - यज्ञादन्यत्र । यज्ञे त्वागतस्य कर्तव्याः । स चेदब्राह्मणः संवृतः - अप्रकाशः दरिद्रः । प्रभूतस्य तु भवत्येव । आनृशंस्यार्थं नृशंसोऽयमिति लोको माक्रुशदित्यर्थः ॥ संवर्तः – तिथिपर्वोत्सवाः सर्वे त्यक्ता येन महात्मना । सोऽतिथिः सर्वभूतानां शेषानभ्यागतान् विदुः इति ।

கௌதமரும்:- வேறு க்ராமத்தில் வஸிப்பவனும், ஒருநாள் மட்டில் வஸிப்பவனும், மத்யாஹ்ன ஸமயத்தில் வந்தவனும் ஆகியவன் அதிதி ஆவான். ப்ராம்ஹணனுக்கு அப்ராம்ஹணன் (க்ஷத்ரியன் முதலியவன்) அதிதியாகான். இது யாகம் தவிர மற்ற இடத்தில். யாகத்திலானால், வந்த அப்ராம்ஹணனுக்கும் அதிதிதர்மங்களைச் செய்ய வேண்டும். அந்த அப்ராம்ஹணன் தரித்ரனாயிருந்தால்.

க்ஷத்ரியனுக்கு அதிதிகளான ப்ராம்ஹணர்கள் புஜித்த பிறகு போஜனம் செய்விக்க வேண்டும். ஆதித்ய காலத்தில் வந்த வைச்யன் முதலானவரையும், தன் பணியாளுடன் புஜிக்கச் செய்ய வேண்டும், விபவமிருந்தால். இவன் க்ரூரன் என்று உலகம் சொல்லாமலிருப்பதற்காக. ஸம்வர்த்தர்:- எந்த மஹாத்மா, திதி, பர்வம், உத்ஸவம் இவைகள் எல்லாவற்றையும் விட்டு வருகின்றானோ அவன் எல்லோருக்கும் அதிதி ஆவான். மற்றவர்களை அப்யாகதர் என்பார்கள்.

व्यासः — सुदूरादाशया प्राप्तः तृष्णाश्रमकर्शितः । यत् पूज्यतेऽतिथिः सम्यगयूपः क्रतुरेव सः ॥ पापो वा यदि चण्डालो विप्रघ्नः पितृघातकः । वैश्वदेवे तु सम्प्राप्तः सोऽतिथिः स्वर्गसंक्रमः ॥ अज्ञात कुलनामानं याचमानमकिञ्चनम् । ब्राह्मणं प्राहुरतिथिं स पूज्यः शक्तितो द्विजैः । अकिञ्चनमसंम्बन्धमन्यदेशादुपागतम् । असंपूज्यातिथिं भुञ्जन् भुक्त्वा कामं व्रजत्यधः इति । सुमन्तुः — अभ्यागतो ज्ञातपूर्वस्त्वज्ञातोऽतिथिरुच्यते । यस्याध्वखिन्नाः पथिकाः गृहमायान्ति कर्शिताः । पूज्यन्ते तृणभूम्याद्यैः पितरस्तेन पुत्रिणः इति ।

வ்யாஸர்:- வெகு தூரத்திலிருந்து ஆசையுடன் வந்தவனும், பசி, தாஹம், ச்ரமம் இவைகளால் மெலிந்தவனுமான அதிதியை நன்றாய்ப் பூஜிப்பதென்பது யூபமில்லாத யாகமே ஆகும். பாபியானாலும், சண்டாளனானாலும், ப்ரம்ஹக்னனானாலும், பித்ருக்னனானாலும் வைச்வதேவ காலத்தில் வந்த அதிதி ஸ்வர்க்கத்திற்குப் படியாவான். குலம் பெயர் அறியப்படாதவனும், யாசிப்பவனும், தரித்ரனுமான ப்ராம்ஹணனை அதிதி என்பார். அவன் க்ருஹஸ்தரான ப்ராம்ஹணர்களால் யதாசக்தி பூஜிக்கப்பட வேண்டும். தரித்ரனும், ஸம்பந்தமில்லாதவனும், அன்யதேசத்தினின்று வந்தவனுமான அதிதியைப் பூஜிக்காமல் புஜிப்பவன், இஷ்டப்படி

புஜித்தால் பாதித்யத்தை அடைவான். ஸுமந்து:- முன் அறியப்பட்டவன் அப்யாகதன் எனப்படுவான். முன் அறியப்படாதவன் அதிதி எனப்படுவான். வழிகடந்து வருந்தியவரும் மெலிந்தவருமான வழிப்போக்கர்கள் எவன் வீட்டை அடைகின்றனரோ, க்ருஹஸ்தனுல், புல், பூமி முதலியதால் யதாசக்தி பூஜிக்கப்படுகின்றனரோ, அதனுல் அவன் பித்ருக்கள் புத்ரனுடையவராய் ஆகின்றனர்.

याज्ञवल्क्यः —अध्वनीनोऽतिथिर्ज्ञेयः श्रोत्रियो वेदपारगः। मान्यावेतौ गृहस्थस्य ब्रह्मलोकमभीप्सतः इति ॥ आश्वमेधिके – दूराध्वगं श्रान्तमनुव्रजन्ति देवाश्च सर्वे पितरोऽग्नयश्च। तस्मिन् द्विजे तुष्यति पूजिताः स्युर्दिते निराशा अपि ते प्रयान्ति॥ दिते - खण्डिते निराकृत इति यावत्। बुभुक्षितं पिपासार्तमतिथिं श्रान्तमागतम्। तदा तं भावयेदत्र व्यासोऽयं समुपस्थितः इति ॥ आपस्तम्बः – असमुदेतश्चेदतिथिर्ब्रुवाण आगच्छेदासनमुदकमन्नं श्रोत्रियाय ददामीत्येव दद्यादेवमस्य समृद्धं भवति इति। विद्यारहितः असमुदेतः।

யாக்ஞவல்க்யர்:- வழியிலிருப்பவனை அதிதியென்று அறியவும். ச்ரோத்ரியன், வேதபாரகன் என்ற இருவரும் வழியிலிருப்பவராஞல், ப்ரம்ஹலோகத்தை விரும்பும் க்ருஹஸ்தனுல் பூஜிக்கத் தகுந்தவர். (ச்ரோத்ரியன் வேதாத்யயனம் செய்தவன் என்றாலும், இங்கே சாஸ்த்ரம், அத்யயனம் இவைகளுடன் கூடியவன், என்று பொருள். வேதபாரகன் என்பதற்கு, ஒரு வேதத்தை அத்யயனம் செய்விக்கச் சக்தி உள்ளவன், என்று பொருள்.) ஆச்வமேதிகத்தில்:- தூரமான வழிநடந்தவனும் களைப்புற்றவனுமானவனைத் தேவரும், எல்லாப் பித்ருக்களும், அக்னிகளும் தொடர்ந்து செல்லுகின்றனர். அந்த ப்ராம்ஹணன் பூஜையால் ஸந்தோஷித்தால், அவர்களும் பூஜிக்கப்பட்டவராய் ஆகின்றனர். அவர் நிராகரிக்கப்பட்டால், அவரும் ஆசையற்றவராய்ச்

செல்கின்றனர். பசியால் வருந்தியவனும், தாஹத்தால் வருந்தியவனும், ச்ரமமுற்று வந்தவனுமான அதிதியை 'வ்யாஸர் இங்கு வந்திருக்கிறுர்' என்று பாவிக்க வேண்டும். **ஆபஸ்தம்பர்:-** வித்யையில்லாதவன், அதிதி என்று சொல்பவனுய் வந்தால், ஆஸனம், ஜலம், அன்னம் இவைகளை, ச்ரோத்ரியனுக்குக் கொடுக்கிறேன் என்று பாவித்தே கொடுக்க வேண்டும். இவ்விதமானுல் இவனின் தானம் ஸம்பூர்ணமாய் ஆகிறது. ச்ரோத்ரியனுக்கே கொடுத்ததாகிறது, என்பதாம்.

स्मृतिसारे – अज्ञातकुलगोत्रस्तु अध्वश्रान्तो बुभुक्षितः । सम्प्राप्तो वैश्वदेवान्ते सोऽतिथिः स्वर्गसङ्क्रमः इति ।। वैश्वदेवान्त इति दिवसाभिप्रायम् । सायं तु वैश्वदेवकाले कालान्तरे च प्राप्तोऽतिथिरेव ।। तथा च मनुः – अप्रणोद्योऽतिथिः सायं सूर्योढो गृहमेधिना । काले प्राप्तस्त्वकाले वा नास्यानश्नन् गृहे वसेत् इति । सूर्योढ इति । अस्तं गच्छता सूर्येण देशान्तरगमनाशक्तिमुत्पाद्य गृहं प्रापित इत्यर्थः ।

ஸ்ம்ருதிஸாரத்தில்:- குல கோத்ரங்களறியப் படாதவனும், வழி நடையால் களைப்புற்றவனும், பசியுள்ளவனும், வைச்வதேவத்தின் முடிவில் வந்தவனுமான அதிதி எவனே அவன் ஸ்வர்க்கத்திற்கு மார்க்கமாகியவனும். வைச்வதேவாந்தத்தில் என்று சொல்லியது பகலில் என்றபிப்ராயமுடையது. இரவிலானுல் வைச்வதேவகாலத்திலோ வேறு காலத்திலோ வந்தாலும் அவன் அதிதியேயாவான். அவ்விதமே, **மனு:-** ஸாயங்காலத்தில் ஸூர்யோடனுய் வந்த அதிதியை க்ருஹஸ்தன் மறுதலிக்கக் கூடாது. அவன் ஸாயம் வைச்வதேவ காலத்தில் வந்தாலும், போஜனத்திற்குப் பிறகு வந்தாலும், க்ருஹஸ்தன் வீட்டில் போஜனமில்லாமல் வஸிக்கக் கூடாது. ஸூர்யோடன் - அஸ்தமயமடையும் ஸூர்யனுல் வேறு இடத்திற்குப் போவதற்குச் சக்தியின்மையை உண்டாக்கி, க்ருஹத்தை அடைவிக்கப்பட்டவன், என்று பொருள்.

प्रचेता अपि – यः सायं वैश्वदेवान्ते सायं वा गृहमागतः । देववत् पूजनीयोऽसौ सूर्योढः सोऽतिथिः स्मृतः इति ॥ याज्ञवल्क्योऽपि – अप्रणोद्योऽतिथिः सायमपि वाग्भूतृणोदकैः इति। सङ्ग्रहे – सायं प्राप्तायातिथये प्रदद्यादासनोदके। अन्नं चैव यथाशक्ति सत्कृत्य विधिपूर्वकम् इति ॥ स्मृतिरत्ने – दिवाऽतिथौ तु विमुखे गते यत् पातकं भवेत् । तदेवाष्टगुणं पुंसां सूर्योढे विमुखे गते ॥ तस्माच्छक्त्या च भक्त्या च सूर्योढमतिथिं नरः । पूजयेत् पूजिते तस्मिन् पूजिताः सर्वदेवताः ॥ धाता प्रजापतिः शक्रो वह्निर्वायुगणोऽर्यमा। प्रविश्यातिथिमेनं वै भुञ्जते नात्र संशयः इति ॥

ப்ரசேதஸ்ஸும்:- எவன் மாலையில் செய்யப்படும் வைச்வதேவத்தின் முடிவிலோ, மாலையிலோ வீட்டிற்கு வந்தவனோ, இவனைத் தேவனைப்போல் பூஜிக்க வேண்டும். அந்த அதிதி ஸூர்யோடன் எனப்படுகிறான். **யாக்ஞவல்க்யரும்:**- ஸாயங்காலத்தில் வந்த அதிதியை மறுதலிக்கக் கூடாது. அன்னம் முதலியதில்லாவிடினும், நல்ல வார்த்தை, தங்குமிடம், பாய், ஆஸனம் முதலியது, ஜலம் இவைகளாலாவது பூஜிக்க வேண்டும். **ஸங்க்ரஹத்தில்:**- இரவில் வந்த அதிதிக்கு, ஆஸனம், ஜலம், அன்னம் இவைகளை விதிப்படி ஆதரித்துக் கொடுக்க வேண்டும். **ஸ்ம்ருதிரத்னத்தில்:**- பகலில் வந்த அதிதி பூஜிக்கப்படாமல் திரும்பிச் சென்றால் எந்தப் பாபமுண்டாகுமோ, அதே எட்டு மடங்கு அதிகமாகும், ராத்ரியில் வந்த அதிதி பூஜிக்கப்படாமல் திரும்பிச் சென்றால். ஆகையால் யதாசக்தி, பக்தியுடன் ஸூர்யோடனை அதிதியை க்ருஹஸ்தன் பூஜிக்க வேண்டும். அவன் பூஜிக்கப்பட்டால் ஸகல தேவர்களும் பூஜிக்கப்பட்டவராய் ஆகின்றனர். தாதா, ப்ரஜாபதி, இந்திரன், அக்னி, வாயுக்கள், அர்யமா என்ற இவர்கள் இந்த அதிதியினுட் புகுந்து, ஆதித்யத்தைப் புஜிக்கின்றனர். இதில் ஸந்தேஹமில்லை.

उक्तलक्षणेऽतिथावागते सति यत् कर्तव्यम्, तदाह पराशरः— अतिथिं तत्र सम्प्राप्तं पूजयेत् स्वागतादिना । तथाऽऽसनप्रदानेन पादप्रक्षालनेन च ॥ श्रद्धया चान्नदानेन प्रियप्रश्नोत्तरेण च । गच्छतश्चानुयानेन प्रीतिमुत्पादयेद्गृही ॥ न पृच्छेद्गोत्रचरणे न स्वाध्यायं श्रुतं तथा । हृदये कल्पयेद्देवं सर्वदेवमयो हि सः इति ॥ चरणं - आचारः । श्रुतं - व्याकरणमीमांसादि ॥ यमोऽपि — न पृच्छेद्गोत्रचरणे देशं नाम कुलं श्रुतम् । अध्वनोऽभ्यागतं विप्रं भोजनार्थमुपस्थितम् ॥ देशं नाम कुलं विद्यां पृष्ट्वा योऽन्नं प्रयच्छति । न स तत् फलमाप्नोति दत्वा स्वर्गं न गच्छति इति ॥

*சொல்லிய லக்ஷணங்களுடைய அதிதி வந்தால் எது செய்யத் தகுந்ததோ அதைச் சொல்லுகிறார். **பராசரர்:-** அக்காலத்தில் வந்த அதிதியை, நல்வரவு கூறுவது முதலியதால் பூஜிக்க வேண்டும். ஆஸனம் கொடுப்பதாலும், கால்களைக் கழுவுவதாலும், ச்ரத்தையுடன் அன்னமளிப்பதாலும், ப்ரியமான கேள்விகளாலும், உத்தரங்களாலும், செல்பவனைப் பின் தொடருவதாலும், க்ருஹஸ்தன் அதிதிக்குக் களிப்பை உண்டாக்க வேண்டும். கோத்ரத்தையும், ஆசாரத்தையும், வேதத்தையும், சாஸ்த்ரத்தையும் கேட்கக் கூடாது. அவனைத் தேவனாய் மனதில் எண்ண வேண்டும். அவன் ஸர்வதேவஸ்வரூபனல்லவா. **யமனும்:-** வழியினின்று வந்தவனும், போஜனத்திற்காக வீட்டிற்கு வந்தவனுமான ப்ராம்ஹணனை, தேசம், நாமதேயம், குலம், வித்யை இவைகளைக் கேட்டுக் கொண்டு எவன் அன்னத்தைக் கொடுக்கின்றானோ, அவன் அதன் பலனையடைவதில்லை. கொடுத்தும் ஸ்வர்க்கத்தை அடைவதில்லை.*

विष्णुपुराणे — स्वाध्यायगोत्रचरणमपृष्ट्वा च तथा कुलम् । हिरण्यगर्भबुध्या तं मन्येताभ्यागतं गृही इति ॥ शातातपोऽपि – चित्ते विभावयेदस्मिन् व्यासः स्वयमुपागतः इति ॥ व्यासोऽपि – न

पृच्छेद्गोत्रचरणं न स्वाध्यायं न च श्रुतम्। शोभनाशोभनाकारं तं मन्येत प्रजापतिम्॥ अन्नशाकाम्बुदानेन स्वशक्त्या पूजयेत् पुमान्। शयन प्रस्तरमहीप्रदानैर्मृदुभाषणैः इति॥

விஷ்ணு புராணத்தில்:- க்ருஹஸ்தன் வீட்டிற்கு வந்த அதிதியை, வேதம், கோத்ரம், ஆசாரம், குலம் இவைகளைக் கேட்காமல் ஹிரண்யகர்ப்பன் என்ற புத்தியுடன் மதிக்க வேண்டும். **சாதாதபரும்:-** வ்யாஸர் தாமாகவே வந்திருக்கிறார் என்று மனதில் எண்ண வேண்டும். **வ்யாஸரும்:-** கோத்ரம், ஆசாரம், வேதம், சாஸ்த்ரம் இவைகளைப் பற்றிக் கேட்கக் கூடாது. அதிதி நன்றாயிருந்தாலும், நன்றாயில்லாவிடினும், அவனை ப்ரம்ஹாவாக எண்ண வேண்டும். யதாசக்தி அன்னம், சாகம், ஜலம், படுக்கை, ஆஸனம், பூமி இவைகளைக் கொடுப்பதாலும், மெதுவான வார்த்தைகளாலும் பூஜிக்க வேண்டும்.

यमः— चक्षुर्दद्यान्मनो दद्याद्वाचं दद्याच्च सूनृताम्। उत्थाय चासनं दद्यात् स्वधर्मः पञ्चलक्षणः॥ संमुखे तुष्ट आदित्यः सम्भाषेण सरस्वती। स्वागतेनाग्रयः प्रीता आसनेन शतक्रतुः। पितरः पादशौचेन अन्नाद्येन प्रजापतिः। शयनेन च तुष्टाः स्युः ब्रह्मविष्णु महेश्वराः इति। संवर्तः – अदृष्टपूर्वमज्ञातमतिथिं प्राप्तमर्चयेत्। स्वागतासनदानेन प्रत्युत्थानेन चाम्बुना। स्वागतेनाग्रयस्तुष्टा भवन्ति गृहमेधिनः। आसनेन तु दत्तेन प्रीतो भवति देवराट्॥ पादशौचेन पितरः प्रीतिमायान्ति दुर्लभाम्। अन्नदानेन युक्तेन तृप्यते हि प्रजापतिः इति।

யமன்:- கண்ணைக் கொடுக்க வேண்டும். மனதைக் கொடுக்க வேண்டும். ஸத்யமாயும் ப்ரியமாயுள்ள வார்த்தையைக் கொடுக்க வேண்டும். எழுந்து, ஆஸனத்தைக் கொடுக்க வேண்டும். இவ்விதம் க்ருஹஸ்தனின் தர்மம் ஐந்துவிதம். எதிரில் செல்வதால்

ஸூர்யனும், பேசுவதால் ஸரஸ்வதியும், நல்வரவு கூறுவதால் அக்னிகளும், ஆஸனத்தைக் கொடுப்பதால் இந்த்ரனும், காலலம்புவதால் பித்ருக்களும், அன்னம் முதலியதால் ப்ரஜாபதியும், படுக்கையால் ப்ரம்ஹ, விஷ்ணு, மஹேச்வரர்களும், ப்ரீதர்களாய் ஆகின்றனர். **ஸம்வர்த்தர்:-** முன் காணப்படாதவனும், அறியப் படாதவனுமான வந்த அதிதியை, நல்வரவு கூறுதல், ஆஸனம் கொடுத்தல், எழுந்து ஆதரித்தல், ஜலத்தைக் கொடுத்தல் இவைகளால் அர்ச்சிக்க வேண்டும். க்ருஹஸ்தன் நல்வரவு கூறுதலால் அக்னிகளும், ஆஸனம் கொடுப்பதால் இந்த்ரனும், கால்களை அலம்புவதால் பித்ருக்களும் மிகுந்த த்ருப்தியை அடைகின்றனர். உசிதமாய் அன்னதானம் செய்வதால் ப்ரஜாபதியும் த்ருப்தராகிறார்.

आसनादिदाने विशेषमाह मनुः – आसनावसथे शय्या मनुव्रज्यामुपासनाम् । उत्तमेषूत्तमं कुर्याद्धीने हीनं समे समम् इति ॥ गौतमोऽपि – शय्यासनावसथानुव्रज्योपासनानि सदृक् श्रेयसोः समान्यल्पशोऽपि हीने इति ॥ सदृक् - आत्मना तुल्यः । श्रेयान् - अधिको विद्यावृत्तादिना । तयोरात्मना तुल्यानि शय्यासनादीनि देयानि । हीनेऽप्यल्पशो देयानीत्यर्थः ॥

ஆஸனம் முதலியதைக் கொடுப்பதில் பேதத்தைச் சொல்லுகிறார், **மனு:-** ஆஸனம், இருப்பிடம், படுக்கை, பின்தொடருதல், பணிவிடை இவைகளை உத்தமருக்கு உத்தமமாயும், தாழ்ந்தவருக்குத் தாழ்ந்ததாயும், ஸமமானவருகக்கு ஸமமாகியதாகவும் செய்ய வேண்டும். **கௌதமரும்:-** படுக்கை, ஆஸனம், இருப்பிடம், தொடர்ந்து செல்லுதல், பணிவிடை இவைகளை வித்யையாலும், ஆசாரத்தாலும் தனக்குச் சமமாயும், மேலாயும் உள்ளவருக்குத் தன்னுடையது போலவும், தன்னைவிடக் குறைந்தவனுக்கு அல்பமாகியதாயும் கொடுக்க வேண்டும்.

स एव — श्रोत्रियस्य तु पाद्यमर्घ्यमन्नविशेषांश्च प्रकारयेन्नित्यं वा संस्कारविशिष्टं मध्यतोऽन्नदानमवैद्ये साधुवृत्ते विपरीते तु तृणोदकभूमीः स्वागतमन्ततः पूजाऽनत्याशश्च इति ।। अन्नविशेषाः - पायसादयः । नित्यं वा - यदेवास्य गृहे नित्यम्, तदेव मरीचिभर्जनादिसंस्कारविशिष्टं साधयेत् । अवैद्ये - विद्यारहिते साधुवृत्ते उपस्थिते, मध्यतः - मध्यमेन संस्कारेण अन्नं देयम् । यद्यवैद्यः साधुवृत्तश्च न भवति, स विपरीतः । तस्मै तृणादि दद्यात् । अनत्याशः - यदतिथये न दत्तं, न तदश्नीयादित्यर्थः ।।

கௌதமரே:- ச்ரோத்ரியனை அதிதிக்குப் பாத்யம், அர்க்யம், இவைகளைக் கொடுக்க வேண்டும். பாயஸம் முதலியதையும் செய்விக்க வேண்டும். அல்லது, ப்ரதிதினம் தன் வீட்டில் எவ்விதம் சமைக்கப்படுமோ அவ்விதம் அன்னத்தைக் கொடுக்க வேண்டும். வித்யை இல்லாமல் நல்ல ஆசாரத்துடனிருப்பவனை அதிதிக்கு, நடுத்தரமான பாகத்தினால் ஸித்தமான அன்னத்தைக் கொடுக்க வேண்டும். வித்யையுமில்லாமல் நல்ல ஆசாரமும் இல்லாதவனுக்கு, புல் ஆஸனம், இடம், இவைகளைக் கொடுத்து நல்வரவு கூற வேண்டும். எவ்விதமான அதிதியைப் புஜிப்பித்தாலும் அவனைப் பூஜிக்க வேண்டும். அதிதிக்குக் கொடுக்காத வஸ்துவைத் தான் புஜிக்கக் கூடாது.

तथा च वसिष्ठः – मांसमन्नं तथा शाकं गृहे यद्वोपपादितम् । न वै स्वयं तदश्नीया दतिथिं यन्न भोजयेत् ।। यद्येकपङ्क्तौ विषमं ददाति स्नेहाद्भयाद्वा यदि वाऽर्थहेतोः । वेदेषु दृष्टामृषिभिश्च गीतां तां ब्रह्महत्यां मुनयो वदन्ति इति ।। देवलोऽपि – अघृतं भोजयेद्विप्रं यो गृहे सति सर्पिषि । परत्र निरयं घोरं गृहस्थः प्रतिपद्यते ।। मृष्टमन्नं स्वयं भुक्त्वा पश्चात् कदशनं नरः । ब्राह्मणं भोजयन् मूर्खो नरके चिरमावसेत् इति ।। मनुरपि – नैव स्वयं तदश्नीया दतिथिं यन्न भोजयेत् । धन्यं यशस्यमायुष्यं स्वर्ग्यं चातिथिपूजनम् इति ।

सङ्ग्रहे – गृहीत्वाऽऽपोशनं हस्ते पात्रे चैव तिलोदकम्। पूरणं चेत् पुनः कुर्यात् सुरापानसमं भवेत्॥ आपोशनं करे कृत्वा पात्रस्थान्नं न लङ्घयेत्॥ हस्तेन लङ्घितं चान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत्॥ आपोशनकरो विप्रः य आशीर्वचनं वदेत्। अभोज्यं तद्भवेदन्नं दाता भवति निष्फलः॥ आपोशनं गृहीत्वा तु स्वस्ति कुर्वन्ति ये द्विजाः। न देवास्तृप्तिमायान्ति निराशाः पितरो गताः॥ भुञ्जानोऽभिवदेद्यस्तु तदन्नं परिवर्जयेत्॥ आपोशनं चासनं च तैलाभ्यङ्गं तथैव च। स्वयंकरकृतं प्रोक्तमायुः श्रीपुत्रहानिदम् इति।

ஸங்க்ரஹத்தில்:- ஆபோசனத்தைக் கையில் க்ரஹித்து, அர்க்ய பாத்ரத்தில் திலோதகத்தை க்ரஹித்து, மறபடி பூரணம் செய்தால் ஸுராபானத்திற்குச் சமமாகும். ஆபோசன ஜலத்தைக் கையில் வைத்துக் கொண்டு போஜன பாத்ரத்திலுள்ள அன்னத்தைத் தாண்டக்கூடாது. கையினால் தாண்டிய அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஆபோசனத்தைக் கையிலுள்ளவனாய் எந்த ப்ராம்ஹணன் ஆசீர்வாதம் சொல்லுகிறானோ அந்த அன்னம் புஜிக்கத்தகாததாகும்.

அன்னத்தைக் கொடுத்தவன் பலனற்றவனுகிருன். ஆபோசனத்தை வைத்துக் கொண்டு எந்த ப்ராம்ஹணர்கள் ஆசீர்வாதம் செய்கின்றனரோ (அவர்களால்) தேவர்கள் த்ருப்தியை அடைவதில்லை. பித்ருக்கள் ஆசையற்றவர்களாய்ச் செல்லுகின்றனர். புஜித்துக் கொண்டு எவன் அபிவாதநம் செய்கின்ருனே அந்த அன்னத்தை வர்ஜிக்க வேண்டும். ஆபோசனம், ஆஸனம், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல் இவைகள் தன் கையினுல் செய்யப்பட்டால் ஆயுள், லக்ஷ்மி, புத்ரன் இவர்களுக்கு ஹானியைக் கொடுக்குமென்று சொல்லப்பட்டுள்ளது.

वसिष्ठः – आपोशनं सर्वतीर्थं तेनान्नं तु लङ्घयेत्। बाहुना लङ्घितं चान्न मभोज्यं मनुरब्रवीत् इति ।। अत्रिः – शब्देनापः पयः पीत्वा शब्देन घृतपायसम् । शब्देनापोशनं कृत्वा सुरापानसमं भवेत् । आपोशनमकृत्वा तु यस्तु भुञ्जीत मूढधीः । श्वसूकरसमो भुक्त्वा नरकं प्रतिपद्यते इति ।। स्मृतिरत्ने – आपोशनमकृत्वा तु यो भुङ्क्तेऽनापदि द्विजः । भुञ्जानो वा यदि ब्रूयाद्गायत्र्यष्टशतं जपेत् इति ।। हारीतः – पञ्च प्राणाहुतीः कुर्याच्छुद्धान्नैरभिघारितैः । उच्छिष्टे न घृतं दद्यात् प्राग्घुतेर्लवणान्वितम् इति ।।

வஸிஷ்டர்:- ஆபோசனஜலம் ஸகல தீர்த்த ஜல ஸமமாம். அதனுல் அன்னத்தைத் தாண்டக்கூடாது. கையினுல் தாண்டப்பட்ட அன்னம் புஜிக்கத்தகாததென்று மனு சொன்னுர். அத்ரி:- சப்தத்துடன் ஜலத்தையோ பாலையோ பருகினுலும், சப்தத்துடன் நெய், பாயஸம் இவைகளைப் பருகினுலும் சப்தத்துடன் ஆபோசனத்தைப் பருகினுலும் ஸுராபானத்திற்குச் சமமாகும். ஆபோசனம் செய்யாமல் எந்த மூடன் புஜிக்கின்ருனே, நாய் பன்றி இவற்றிற்குச் சமனுய் புஜித்த அவன் நரகத்தை அடைகிருன். ஸ்ம்ருதிரத்னத்தில்:- எந்த ப்ராம்ஹணன் ஆபத்தில்லாத ஸமயத்தில் ஆபோசனத்தை செய்யாமல்

புஜிக்கின்ருஞே, புஜிக்கும் போது பேசுகின்ருஞே, அவன் 108-முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். ஹாரீதர்:- அபிகாரம் செய்யப்பட்ட சுத்தமான அன்னங்களால் ஐந்து ப்ராணுஹுதிகளைச் செய்ய வேண்டும். உச்சிஷ்டத்தில் நெய்யைக் கொடுக்கக் கூடாது. ப்ராணுஹுதிக்கு முன் உப்புள்ள வஸ்துவைக் கொடுக்கக் கூடாது.

व्यासः – स्नास्यतो वरुणः जुह्वतोऽग्निः श्रियं हरेत्। भुञ्जतो मृत्युरायुष्यं तस्मान्मौनं त्रिषु स्मृतं इति । प्राणाग्निहोत्रं शुद्धान्नैर्लवणव्यञ्जनान्वितैः। कुर्यात् प्राणाहुतीरन्तर्निगिरेन्न तु चर्वयेत् इति ॥ स्मृतिसारे – मध्यमानामिकाङ्गुष्ठैः गृहीत्वाऽन्नं मितं पुनः। प्राणाय चेत्यपानाय व्यानाय च यथाक्रमम् ॥ उदानाय समानाय स्वाहेति जुहुयात् क्रमात् इति ॥ स्मृत्यर्थसारे – आप्रोशनं गृहीत्वा सर्वाङ्गुलीभिर्ग्रसन् प्राणायापानाय व्यानायोदानाय समानाय स्वाहेति पञ्चाहुतीः सघृताः सक्षीरा वा हुत्वा कृत्स्नमन्नं साङ्गुष्ठं ग्रसेत् इति ॥ शौनकः – तर्जनीमध्यमाङ्गुष्ठैः लग्ना प्राणाहुतिर्भवेत् । मध्यमानामिकाङ्गुष्ठै रपाने जुहुयात्ततः ॥ कनिष्ठानामिकाङ्गुष्ठैर्व्याने च जुहुयाद्धविः । तर्जनीं तु बहिः कृत्वा उदाने जुहुयात्ततः ॥ समाने सर्वहस्तेन समादायाहुतिर्भवेत् इति ॥ उदाने स्मृत्यन्तरे विशेषो दृश्यते –कनिष्ठातर्जन्यङ्गुष्ठै रुदाने जुहुयाद्बुधः इति ॥

வ்யாஸர்:- லவணத்துடனும் வ்யஞ்ஜனத்துடனும் கூடிய அன்னங்களால் ப்ராணுக்னி ஹோத்ரத்தைச் செய்ய வேண்டும். ப்ராணுஹுதிகளை வாயினுள் விழுங்க வேண்டும். கடிக்கக் கூடாது. ஸ்ம்ருதிஸாரத்தில்:- நடுவில், பவித்ரவிரல், பெருவிரல் இவைகளால் ஸ்வல்பமான அன்னத்தை எடுத்து, ப்ராணுய, அபாஞய, வ்யாஞய, உதாஞய, ஸமாஞய, ஸ்வாஹா என்பதுடன் முறையே ஹோமம் செய்ய வேண்டும். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- ஆபோசனத்தை க்ரஹித்து எல்லா விரல்களுடனும் விழுங்குகிறவனுய் ப்ராணுய, அபாநாய, வ்யாஞய,

உதாநாய, ஸமாநாய ஸ்வாஹா என்று ஐந்து ஆஹுதிகளை நெய்யுடனாவது, பாலுடனாவது கூடியதாய் ஹோமம் செய்து மீதியுள்ள அன்னம் முழுவதையும் பெருவிரலுடன் புஜிக்க வேண்டும். சௌனகர்:- தர்ஜநீ, நடுவிரல், பெருவிரல் இவைகளுடன் கூடியதாய் ப்ராணாஹுதி இருக்க வேண்டும். நடுவிரல், பவித்ர விரல், பெருவிரல் இவைகளுடன் அபாணாஹுதியைச் செய்ய வேண்டும். சிறுவிரல், பவித்ரவிரல், பெருவிரல் இவைகளுடன் வ்யாணாஹுதியைச் செய்ய வேண்டும். தர்ஜனீ விரலைத் தள்ளிவிட்டு உதாணாஹுதியைச் செய்ய வேண்டும். எல்லா விரல்களுடன் சேர்த்து ஸமாணாஹுதியைச் செய்ய வேண்டும். இங்கு உதாணாஹுதியில் விசேஷம் மற்றொரு ஸ்ம்ருதியில் காணப்படுகிறது:- 'சிறுவிரல், தர்ஜநீவிரல், பெருவிரல் இவைகளோடு உதாணாஹுதியைச் செய்ய வேண்டும்' என்று.

वाग्यमनमाह मनुः — स्नास्यतो वरुणः शक्तिं जुह्वतोऽग्निः श्रियं हरेत्। भुञ्जतो मृत्युरायुष्यं तस्मान्मौनं त्रिषु स्मृतमिति। मौनं वाचो निवृत्तिः स्यात् नात्र भाषा न संस्कृतम्। नान्यदेवेरणं विष्णुं सदा ध्यायेच्च कीर्तयेत्।। कबले कबले चैव कुर्याद्गोविन्दकीर्तनम्। नाशौचं कीर्तने तस्य पवित्रं भगवान् हरिः इति। देवताभिधानं चाप्रयतः इत्यापस्तम्बवचनं देवतान्तरविषयम्।

மௌனத்தைச் சொல்லுகிறார் மனு:- ஸ்நானம் செய்பவனின் சக்தியை வருணனும், ஹோமம் செய்பவனின் லக்ஷ்மியை அக்னியும், போஜனம் செய்பவனின் ஆயுளை ம்ருத்யுவும் (மௌனமில்லாவிடில்) அபஹரிக்கின்றனர். ஆகையால் இம்மூன்றிலும் மௌனம் விதிக்கப்பட்டுள்ளது. வ்யாஸர்:- மௌனம் என்பது வார்த்தையை நிவர்த்திப்பது என்பதாம். இங்கு பாஷையும் கூடாது. ஸம்ஸ்க்ருதமும் கூடாது. இதர தேவர்களைச் சொல்லக்கூடாது. விஷ்ணுவை எப்பொழுதும் த்யானிக்க வேண்டும். கீர்த்தனமும் செய்ய

வேண்டும். ஒவ்வொரு கபளத்திலும் கோவிந்தநாமத்தை உச்சரிக்க வேண்டும். அந்த நாமத்தைச் சொல்லுவதில் அசுத்தி இல்லை. பகவானுகிய ஹரி சுத்தனும். ஆபஸ்தம்பர்:- ''அசுத்தனுய்த் தேவதாநாமத்தை உச்சரிக்கக் கூடாது'' என்ருர். இவ்விதம் சொல்லியிருப்பது மற்றத் தேவதைகளின் நாம விஷயமாம்.

मौनव्रतं महाकष्टं हुङ्कारेणापि नश्यति । तथा सति महान् दोषस्तस्मात्तन्नियतश्चरेत् इति ।। एतच्च काष्ठमौनं पञ्चग्रासविषयम् । तथा च मनुः – अनिन्दन् भक्षयेन्नित्यं वाग्यतोऽन्नमकुत्सयन् । पञ्चग्रासान् महामौनं प्राणाद्याप्यायनं महत् इति ।। स्मृत्यर्थसारेऽपि— आस्ये चान्नस्य निक्षेपो मन्त्रैः प्राणादिपञ्चकैः । तदेव भोजनं ज्ञेयं तत्रैव नियमःस्मृतः ।। प्राणाहुतिषु सर्वासु हुतास्वेव त्यजेद्गृही । पात्रस्य धारणं मौनं तावत्सिद्धिर्भवेद्भुजेः ।। अन्नस्य वा निषेधार्थ मुपदंशस्य वा पुनः । धर्मार्थं विसृजेद्वाचं नासद्वाचं कदाचन इति ।

அத்ரி:- மௌன வ்ரதம் என்பது மிகக் கஷ்ட மானதாம். ஹுங்காரம் செய்தாலும் அது கெட்டுவிடும். அப்படியிருப்பதால் பெரிய தோஷமுண்டு. ஆகையால் மௌனத்தை நியமமுடையவனுய் அனுஷ்டிக்க வேண்டும். இந்தக் காஷ்ட மௌனம் ஐந்து ஆஹுதிகளின் விஷயம். அவ்விதமே மனு:- எப்பொழுதும் அன்னத்தை நிந்திக்காமலும், வெறுக்காமலும் மௌனியாய்ப் புஜிக்க வேண்டும். ஐந்து க்ராஸங்களைப் புஜிக்கும் பொழுது அதிக மௌனமானது ப்ராணன் முதலியவைகளுக்குப் பெரிதான வ்ருத்திகரமாம். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலும்:- ப்ராணுய முதலிய ஐந்து மந்த்ரங்களால் வாயில் அன்னத்தை வைப்பது போஜனமென்று அறியத்தக்கது. அதிலேதான் நியமம் சொல்லப்பட்டுள்ளது. க்ருஹஸ்தன் எல்லா ப்ராணுஹுதிகளும் செய்யப்பட்ட பிறகே போஜன பாத்ரத்தைப் பிடிப்பதையும் மௌனத்தையும்

விடவேண்டும். அப்பொழுதுதான் போஜனத்தின் பலஸித்தி உண்டாகிறது. அன்னத்தை நிஷேதிப்பதற்காகவாவது, வ்யஞ்ஜனத்தை நிஷேதிப்பதற்காகவாவது, தர்மத்திற்காகவாவது வார்த்தை பேசலாம். கெட்டவார்த்தையை ஒருகாலும் பேசக்கூடாது.

शाण्डिल्यः — नावश्यं भोजने मौनं कुटुम्बाश्रमवासिनाम् । वाचोपचारः कर्तव्यो भुञ्जतां सहभोजने इति ॥ स्मृतिरत्ने – प्राणाग्निहोत्रादन्यत्र नासौ मौनं समाचरेत् ॥ यदि भुञ्जीत तूष्णीं तु सर्वत्रैव तु भोजने । स पापो भ्रातरं हन्ति सन्ततिं चाचिराच्छ्रियम् इति ॥ एतदेवाभिप्रेत्य व्यासः - मौनी वाऽप्यथवाऽमौनी प्रहृष्टः संयतेन्द्रियः । भुञ्जीत विधिवद्विप्रो नचोच्छिष्टानि चाहरेत् ॥

சாண்டில்யர் :- க்ருஹஸ்தாச்ரமத்தில் வஸிப்பவருக்குப் போஜனத்தில் மௌனம் ஆவச்யகமில்லை. (ஏனெனில்) சேர்ந்து புஜிப்பவர்களுக்குப் போஜனத்தில் வார்த்தையினால் உபசாரம் செய்ய வேண்டும். ஸ்ம்ருதிரத்னத்தில்:- ப்ராணாக்னிஹோத்ரம் தவிர மற்ற ஸமயத்தில் க்ருஹஸ்தன் மௌனத்தை அனுஷ்டிக்கக் கூடாது. போஜனம் முழுவதிலும் மௌனமாயிருப்பானாகில் அந்தப் பாபிஸஹோதரனையும், ஸந்ததியையும், செல்வத்தையும் சீக்கிரமாய்க் கொல்லுகிறான். இவ்விதமே அபிப்ராயப்பட்டுச் சொல்லுகிறார் வ்யாஸர்:- மௌனியாகவோ, மௌனமில்லாதவனாகவோ ஸந்தோஷமுடையவனாய், புலன்களை அடக்கியவனாய், விதிப்படி ப்ராம்ஹணன் புஜிக்க வேண்டும். உச்சிஷ்டங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது.

वामेन पात्रस्पर्शोऽपि कर्तव्यः ॥ तत्र यमः - समुत्थितस्तु यो भुङ्क्ते यो भुङ्क्ते मुक्तभाजने । एवं वैवस्वतः प्राह भुक्त्वा सान्तपनं चरेत् इति ॥ मुक्तभाजने - वामहस्तेनास्पृष्टभाजने इत्यर्थः ॥ बोधायनोऽपि — सव्येन पाणिनाऽविमुञ्चन्नमृतोपस्तरणमसीत्यपः पीत्वा

प्राणाहुतीर्जुहोति इति ।। एतच्च प्राणाहुत्यनन्तरं वैकल्पिकम्। प्राणाहुतौ हुतायां वा त्यजेत् पात्रस्य धारणम् इति गोभिलस्मरणात् ।। आपस्तम्बोऽपि — नापजहीतापजहीत वा इति ।। भोजनपात्रं सव्येन पाणिना न विमुञ्चेत्। प्राणाहुत्यूर्ध्वं मुञ्चेद्वा इत्यर्थः ।।

இடது கையினால் போஜன பாத்ரத்தையும் தொட்டுக் கொள்ள வேண்டும். அதில், யமன்:- எவன் நின்றுகொண்டு புஜிக்கின்றானோ, எவன் இடது கையினால் தொடப்படாத பாத்ரத்தில் புஜிக்கின்றானோ அவன் ஸாந்தபன க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். போதாயனரும்:- இடது கையினால் போஜன பாத்ரத்தை விடாமல், அம்ருதோபஸ்தரணமஸி என்று ஜலத்தைப் பருகி ப்ராணாஹுதிகளை ஹோமம் செய்ய வேண்டும். இதில், ப்ராணாஹுதிக்குப் பிறகு விகல்பம். 'ப்ராணாஹுதி செய்த பிறகு பாத்ரத்தைப் பிடிப்பதை விட்டாலும் விடலாம்' என்று கோபிலர் சொல்லியுள்ளார். ஆபஸ்தம்பரும்:- போஜன பாத்ரத்தை இடது கையினால் விடக்கூடாது. ப்ராணாஹுதிக்குப் பிறகு விட்டாலும் விடலாம்.

बोधायनः — ब्रह्मणि म आत्माऽमृतत्वायेत्यक्षरेणात्मानं योजयेत् सर्वक्रतुयाजिनामात्मयाजी विशिष्यते इति ।। चन्द्रिकायाम् — यथा हि तूलमैषीकमग्नौ प्रोतं प्रदीप्यते। तद्वत् सर्वाणि पापानि दह्यन्ते ह्यात्मयाजिनः इति ।। मार्कण्डेयः – अश्नीयात् तन्मना भूत्वा पूर्वं तु मधुरं रसम्। लवणाम्लौ तथा मध्ये कटुतिक्तादिकं ततः ।। प्राक् द्रवं पुरुषोऽश्नीयान्मध्ये तु कठिनाशनम्। अन्ते पुनर्द्रवाशी तु बलारोग्ये न मुञ्चति इति ।। मनुः — न सीदेत् स्नातको विप्रः क्षुधा शक्तः कथञ्चन। न जातु मलवद्वासा भवेच्च विभवे सति इति ।।

போதாயனர்:- 'ப்ரம்ஹணிம ஆத்மாம்ருதத்வாய' என்று பரமாத்மாவுடன் ஜீவாத்மாவைச் சேர்க்க

வேண்டும். ஸகல யாகங்கள் செய்தவரினும் ஆத்மயாகம் செய்தவன் சிறந்தவனாகிறான். சந்த்ரிகையில்:- தீவின் பஞ்சு அக்னியில் வைக்கப்பட்டால் எப்படி பொசுக்கப்படுகிறதோ அப்படி ஆத்மயாஜியின் ஸகல பாபங்களும் பொசுக்கப்படுகின்றன. மார்க்கண்டேயர்:- ஏகாக்ரமான மனதுடையவனாயிருந்து, முதலில் மதுரரஸத்தைப் புஜிக்க வேண்டும். உப்பு, புளி இவைகளை நடுவிலும், கசப்பு, துவர்ப்பு முதலியதைப் பிறகும் புஜிக்க வேண்டும். மனிதன் முதலில் த்ரவ்பதார்த்தத்தைப் புஜிக்க வேண்டும். நடுவில் கடினமான வஸ்துவைப் புஜிக்க வேண்டும். முடிவில் த்ரவமான வஸ்துவைப் புஜிக்க வேண்டும். இவ்விதம் புஜிப்பவன் பலம், ஆரோக்யம் இவைகளை விடமாட்டான். மனு:- க்ருஹஸ்தன் ப்ராம்ஹணன் சக்தியுள்ளவனாகில் எவ்விதத்தாலும் பசியால் வருந்தக் கூடாது. ஒருபொழுதும் அழுக்குள்ள வஸ்த்ரமுடையவனாய் இருக்கக் கூடாது, விபவமிருந்தால்.

धर्मोद्योते - काले साम्यं लघुस्निग्ध मुष्णं क्षिप्रं द्रवोत्तरम् । बुभुक्षुरन्नमश्नीयान्मात्रा तावद्धितागमः ॥ काले प्राणायते भुक्तं साम्यमन्नं न बाधते । लघु प्रजीर्यते क्षिप्रं स्निग्धोष्णं बलवर्धनम् । क्षिप्रभुक्तं तथा चान्नं धातुसाम्यं करोति हि । मात्राशी सर्वकालं स्यान्मात्रा ह्यग्नेः प्रवर्तिका इति ॥ भारते —— गुणास्तु षण्मितभुक्तं भजन्ते आरोग्यमायुः प्रतिभा बलं च । अनाविलं चास्य भवेदपत्यं नचैनमत्याश इति क्षिपन्ति इति ।

தர்மோத்யோதத்தில்:- பசியுள்ள காலத்தில், ஸமமாயும் இலேசாயும், நெய் முதலியதுடன் கூடியதும், உஷ்ணமாயும், திரவவஸ்து அதிகமுள்ளதாயும் உள்ள அன்னத்தைச் சீக்கிரமாய்ப் புஜிக்க வேண்டும். பசியுள்ளவனாய்ப் புஜிக்க வேண்டும். (அளவுடன் புஜிக்க வேண்டும்.) அளவுதான் ஹிதத்திற்கு ஹேதுவாகிறது.

காலத்தில் புஜித்த அன்னம் ப்ராணனையாகிறது. ஸமமான அன்னம் தொந்தரவு செய்வதில்லை. இலகுவான அன்னம் சீக்கிரமாய் ஜீர்ணமாகிறது. நெய்யுடன் கூடியதும், உஷ்ணமுமான அன்னம் பலத்தை வ்ருத்தி செய்கிறது. சீக்கிரம் புஜிக்கப்பட்ட அன்னம் தாதுக்களுக்கு ஸமத்தன்மையைச் செய்கிறது. எக்காலத்திலும் அளவின்படி புஜிக்க வேண்டும். அளவு என்பதுதான் அக்னியை ப்ரவ்ருத்தி செய்வதாயாகிறது. பாரதத்தில்:- அளவுப்படி புஜிப்பவனை ஆறு குணங்கள் அடைகின்றன. அவை:- ஆரோக்யம், ஆயுள், நல்லபுத்தி, பலம், தோஷமற்ற ஸந்ததி இவைகளும், இவனை அதிகமாய்ப் புஜிப்பவன் என்று நிந்திக்க மாட்டார்கள் என்பதுமாக ஆறு குணங்களாம்.

व्यासः - नाजीर्णे भोजनं कुर्यात् कुर्यान्नातिबुभुक्षितः ।। आहारकाले सम्प्राप्ते यो न भुङ्क्ते बुभुक्षितः । तस्य सीदति कायाग्निः निरिन्धन इवानलः ।। पात्रेष्वर्थानुरूपेषु पुत्रभृत्यादिभिर्वृतः । सुसंस्कृतं हितमिदं भुञ्जीतान्नमकुत्सयन् ।। यवगोधूमशाल्याढ्यं मांसशाकादिसंयुतम् । तिक्ताम्ललवणोपेतं व्यञ्जनैश्च सुगन्धिभिः ।। भक्ष्यप्रकारान् विविधान् कन्दमूलफलानि च ।। अनारोग्यमनायुष्य-मस्वर्ग्यं चातिभोजनम् । अपुण्यं लोकविद्विष्टं तस्मात्परिवर्जयेत् ।। न निन्देदन्नभक्ष्यांस्तु स्वाद्वस्वादूनकुत्सयन् । आर्द्रपाणिपदास्यस्तु प्राङ्मुखो ब्रह्मसूत्रधृक् ।। द्वात्रिंशद्ग्रासमश्नीयात् दीर्घमायुर्जिजीविषुः इति । आपस्तम्बः–अष्टौ ग्रासा मुनेर्भक्ष्याः षोडशारण्यवासिनः । द्वात्रिंशतं गृहस्थस्यापरिमितं ब्रह्मचारिणः इति ।। द्वात्रिंशतं प्रथमार्थे द्वितीया ।।

வ்யாஸர்:- ஜீர்ணமாகாமலிருக்கும் பொழுது போஜனம் செய்யக் கூடாது. அதிகப் பசியுள்ளவனும் புஜிக்கக் கூடாது. பசியுள்ள எவன், ஆஹாரகாலம் வந்தபிறகும் புஜிப்பதில்லையோ, அவன் தேஹத்திலுள்ள

அக்னி, விறகில்லாத நெருப்புப்போல் அணைகின்றது. தன் விபவத்திற்குத் தகுந்ததான போஜன பாத்ரத்தில், புத்ரர், ப்ருத்யர் இவர்களுடன் கூடியவனாய், நன்றாய்ச் சமைக்கப்பட்டதும், ஹிதமாயும், அளவுள்ளதாயும், உள்ள அன்னத்தை நிந்திக்காமல் புஜிக்க வேண்டும். யவை, கோதுமை, நெல், அரிசி இவைகளால் நிறைந்ததும், மாம்ஸம், சாகம் முதலியதுடன் கூடியதும், துவர்ப்பு, புளிப்பு, உப்பு இவைகளுடன் கூடியதும். வாஸனைகளுள்ள வ்யஞ்ஜனங்களுடன் கூடியதுமான ஆஹாரத்தையும், பலவிதமான பக்ஷ்யங்களையும், கிழங்கு, வேர், பழம் இவைகளையும் புஜிக்க வேண்டும். அதிகமாய்ப் புஜித்தல், ரோகத்தைக் கொடுப்பதும், ஆயுளைக் குறைப்பதும், ஸ்வர்க்கத்தைத் தடுப்பதும் புண்யமல்லாததும், உலகத்தினல் வெறுக்கப்பட்டதுமாம். ஆகையால் அளவுக்கு மீறிய போஜனத்தை வர்ஜிக்க வேண்டும். அன்னம், பக்ஷ்யம் இவை, மதுரமாயினும், இல்லாவிடினும் வெறுக்கவும், நிந்திக்கவும் கூடாது. வெகுநாள் ஜீவித்திருக்க விரும்பியவன் ஈரமுள்ள கை கால் முகம் இவைகளை உடையவனாய், கிழக்கு நோக்கியவனாய், யக்ஞோபவீதியாய் முப்பத்திரண்டு கபளங்களைப் புஜிக்க வேண்டும். ஆபஸ்தம்பர்:- ஸன்யாஸிக்கு எட்டுக் கபளங்கள் புஜிக்கத் தகுந்தவை. வானப்ரஸ்தனுக்குப் பதினாறு கபளங்கள், க்ருஹஸ்தனுக்கு முப்பத்திரண்டு கபளங்கள் புஜிக்கத் தகுந்தவை. ப்ரம்ஹசாரிக்குக் கணக்கில்லாமல் அன்னம் புஜிக்கத் தகுந்தது.

आहिताग्निविषये कालयोर्भोजनम् इत्ययमपि नियमो नास्तीत्याह स एव — आहिताग्निरनड्वांश्च ब्रह्मचारी च ते त्रयः । अश्नन्त एव सिध्यन्ति नैषां सिद्धिरनश्नताम् इति ।। अनडुद् ग्रहणं दृष्टान्तार्थम् । सिध्यन्ति - स्वकार्यक्षमा भवन्तीत्यर्थः ।। स एव – यावद्ग्रासं सन्नयन्नस्कन्दयन् कृत्स्नं ग्रसीत सहाङ्गुष्ठं न च मुखशब्दं कुर्यात्

पाणिं च नावधूनुयात् इति ।। यावदेव ग्रसितुं शक्यम्, तावदेव सन्नयन् - पिण्डीकुर्वन् । अस्कन्दन् - भूमावन्नलेपानपातयन् । सहाङ्गुष्ठं - आस्ये ग्रासप्रवेशे यथाऽङ्गुष्ठोऽप्यनुप्रविशति, तथा सर्वानेव ग्रासान् ग्रसीतेत्यर्थः ।। स एव – सोत्तराच्छादनश्चैव यज्ञोपवीती भुञ्जीत इति । उत्तराच्छादनं - उपरिवासः ।

ஆஹிதாக்னி விஷயத்தில் "இரு காலங்களில் மட்டும் போஜனம்" என்கிற இந்த நியமமும் இல்லை என்கிறார் ஆபஸ்தம்பரே - ஆஹிதாக்னி, எருது, ப்ரம்ஹசாரீ என்ற மூவர்களும் புஜிப்பவர்களாயிருந்தாலேயே தம் கார்யத்தில் ஸமர்த்தராகின்றனர். இஷ்டப்படி புஜிக்காத இவர்களுக்குக் கார்யஸித்தி உண்டாவதில்லை. ஆபஸ்தம்பரே:- எவ்வளவு விழுங்க முடியுமோ அவ்வளவு அன்னத்தைச் சேர்த்தெடுத்துப் பூமியில் இறைக்காமல் முழுவதையும் கட்டைவிரல் உள் செல்லும்படி விழுங்க வேண்டும். வாயினால் சப்தம் செய்யக் கூடாது. கையை உதறவுங்கூடாது. ஆபஸ்தம்பரே:- உத்தரீயத்துடன் கூடியவனாய், யக்ஞோப வீதியாய்ப் புஜிக்க வேண்டும்.

व्यासः – वक्त्रप्रमाणं पिण्डांश्च न्यसेदेकैकशः पुनः । वक्त्राधिकस्तु यः पिण्डः स आत्मोच्छिष्ट उच्यते । पिण्डावशिष्टमन्यच्च वक्त्रान्निसृतमेव च । अभोज्यं तद्विजानीयात् भुक्त्वा चान्द्रायणं चरेत् । सदा चात्यशनं नाद्यान्नाति हीनं च कर्हिचित् । यथाऽन्नेन व्यथा न स्यात् तथा भुञ्जीत नित्यशः इति ।

வ்யாஸர்:- வாயளவுள்ளதாய்க் கபளங்களை ஒவ்வொன்றாய் வாயில் சேர்க்க வேண்டும். வாய்க்கு அதிகமாகிய எந்தப் பிண்டமோ அது தனது உச்சிஷ்டம் என்று சொல்லப்படுகிறது. பிண்டத்தில் மீதியானதும், வாயினின்றும் வெளிவந்ததும் புஜிக்கத்தகாததென அறியவும். புஜித்தால் சாந்த்ராயணம் அனுஷ்டிக்க வேண்டும். எப்பொழுதுமே அதிக ஆஹாரத்தை

உட்கொள்ளக் கூடாது. அதிகக் குறைவாகவும் புஜிக்கக் கூடாது. அன்னத்தால் தொந்தரை எவ்விதம் உண்டாகாமலிருக்குமோ அவ்விதம் புஜிக்க வேண்டும்.

भोजननियमाः

अथ भोजननियमाः । तत्र पराशरः– यो वेष्टितशिरा भुङ्क्ते यो भुङ्क्ते दक्षिणामुखः । वामपादकरः स्थित्वा तद्वै रक्षांसि भुञ्जते ॥ भुञ्जानश्चैव यो विप्रः पादं हस्तेन संस्पृशेत् । स्वमुच्छिष्टमसौ भुङ्क्ते यो भुङ्क्ते मुक्तभाजने ॥ पादुकास्थो न भुञ्जीत न पर्यङ्कस्थितोऽपि वा । श्वान चण्डालदृक्चैव भोजनं परिवर्जयेत् इति ॥ वसिष्ठः – न मुखशब्दं कुर्यात् सर्वाभिरङ्गुलीभिरश्नीयात् पाणिं च नावधूनुयात् इति ।

போஜன நியமங்கள்

இனி போஜன நியமங்கள் சொல்லப்படுகின்றன. அதில், பராசரர்:- எவன் வஸ்த்ரத்தால் சுற்றப்பட்ட தலையையுடையவனாய்ப் புஜிக்கின்றானோ, எவன் தெற்கு முகமாய்ப் புஜிக்கின்றானோ, எவன் இடதுகாலில் கையை உடையவனாய்ப் புஜிக்கின்றானோ, எவன் நின்றுகொண்டு புஜிக்கின்றானோ அவனுடைய அன்னத்தை ராக்ஷஸர்கள் புஜிக்கின்றனர். எந்த ப்ராம்ஹணன் புஜிக்கும் பொழுது காலைக் கையினால் தொடுகிறானோ அவனும், எவன் உபயோகித்து விடப்பட்ட பாத்ரத்தில் புஜிக்கிறானோ அவனும் தனது உச்சிஷ்டத்தைப் புஜிக்கிறான். பாதுகைகளிலிருந்து கொண்டு, கட்டிலிலிருந்து கொண்டு, நாய், சண்டாளன் இவர்களைப் பார்த்துக் கொண்டும். புஜிக்கக் கூடாது. வஸிஷ்டர்:- வாயினால் சப்தம் செய்யக் கூடாது. எல்லா விரல்களோடும் சேர்த்துப் புஜிக்க வேண்டும். கையையும் உதறக்கூடாது.

व्यासः—यस्तु पाणितले भुङ्क्ते यस्तु फूत्कारसंयुतम् । प्रसृताङ्गुलिभिर्यश्च तस्य गोमांसवच्च तत् ॥ हस्त्यश्वरथयानोष्ट्रमास्थितो नैव भक्षयेत् ॥ श्मशानाभ्यन्तरस्थो वा देवालयगतोऽपि वा । शयनस्थो

न भुञ्जीत न पाणिस्थं न चासने । नार्द्रवासा नार्द्रशिरा न चायज्ञोपवीतवान् । न प्रसारितपादस्तु पादारोपितपाणिमान् । न बाहुसक्थिसंस्थश्च न च पर्यङ्कमास्थितः ॥ न वेष्टितशिराश्चापि नोत्सङ्गकृतभाजनः । नैकवस्त्रो दुष्टमध्ये सोपानत्कः सपादुकः । न चर्मोपरिसंस्थश्च चर्मविष्टितपार्श्ववान् । ग्रासशेषं च नाश्नीयात् पीतशेषं पिबेन्न च ॥ शाकमूलफलेक्षूणां दन्तच्छेदैर्न भक्षयेत् । बहूनां भुञ्जतां मध्ये न चाश्नीयात्स्वरान्वितः ॥ वृथा न विकिरेदन्नं नोच्छिष्टः कुत्रचिद्व्रजेत् । यस्त्यक्त्वा भुवि तच्चान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ।

வ்யாஸர்:- எவன் கையில் வைத்துக் கொண்டு புஜிக்கின்றுனே, எவன் பூத்காரத்துடன் புஜிக்கின்றுனே, விரிந்த விரல்களுடன் எவன் புஜிக்கின்றுனே அவனுக்கு அந்த அன்னம் கோமாம்ஸம் போலாகும். யானை, குதிரை, தேர், வாஹனம், ஒட்டகை இவைகளில் இருந்து புஜிக்கலாகாது. ச்மசானத்தின் நடுவிலிருந்தும் தேவாலயத்திலிருந்தும், படுக்கையிலிருந்தும் புஜிக்க லாகாது. கையில் வைத்திருப்பதையும் ஆஸனத்தில் வைத்திருப்பதையும் புஜிக்கலாகாது. ஈர வஸ்த்ர முடையவனுகவும், ஈரமான சிரஸ்ஸுடையவனுகவும், யக்ஞோபவீதம் இல்லாதவனுகவும், நீட்டப்பட்ட காலுடையவனுகவும், காலின் மேல் கையை வைத்துக் கொண்டவனுகவும், துடையின்மேல் கையை வைத்துக் கொண்டவனுகவும், கட்டிலின் மேல் இருப்பவனுகவும், தலையை வஸ்த்ரத்தால் சுற்றிக் கொண்டவனுகவும், மடியில் பாத்ரத்தை வைத்துக் கொண்டவனுகவும், ஒரு வஸ்த்ரமுடையவனுகவும், துஷ்டரின் நடுவிலும், பாதுகை, பாதரக்ஷை தரித்தவனுகவும், தோலின்மேல் உட்கார்ந்தவனுகவும், தோலால் சுற்றப்பட்ட பக்கமுடையவனுகவும், கபளத்தின் மீதியையும் புஜிக்கக் கூடாது. குடித்து மீந்த ஜலத்தையும் குடிக்கக் கூடாது. காய்கள், வேர்கள், பழங்கள், கரும்புகள் இவைகளைப் பற்களால் துண்டித்துப் பக்ஷிக்கக் கூடாது. அன்னத்தை

வீணுய் இறைக்கக் கூடாது. எச்சிலுடையவனாய் எங்கும் செல்லக் கூடாது. பூமியில் தள்ளப்பட்ட அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

कूर्मपुराणे — यो भुङ्क्ते वेष्टितशिरा यश्च भुङ्क्ते उदङ्मुखः । सोपानत्कश्च यो भुङ्क्ते सर्वं विद्यात्तदासुरम् इति ।। मनुः — न कुर्वीत वृथा चेष्टां न वार्यञ्जलिना पिबेत् । नोत्सङ्गे भक्षयेद्भक्ष्यान् न जातु स्यात् कुतूहल इति ।। चन्द्रिकायाम् — नोच्छिष्टो भक्षयेत् किञ्चिन्न गच्छन्वा कदाचन । खट्वारूढो न भुञ्जीत न पाणिस्थं कदाचन ।। नास्नातो न च संविष्टो नचैवान्यमना नरः । न चैव शयने नोर्व्यामुपविष्टो न शब्दवत् ।। न चैकवस्त्रो न वदन् प्रेक्षतामप्रदाय च । पादप्रसारणं कृत्वा न च वेष्टितमस्तकः इति ।।

கூர்ம புராணத்தில்:- துணி சுற்றப்பட்ட தலையுடனும், வடக்கு நோக்கியவனாகவும், பாதுகையுடனும் எவன் புஜிக்கின்றானோ அது முழுவதும் ஆஸுரம் என்று அறியவும். மனு:- வீணாகிய சேஷ்டையைச் செய்யக் கூடாது. அஞ்ஜலியால் ஜலத்தைக் குடிக்கக் கூடாது. மடியில் பக்ஷ்யங்களை வைத்துக் கொண்டு பக்ஷிக்கக் கூடாது. ஒன்றிலும் ஆவலுடையவனாய் இருக்கக் கூடாது. சந்த்ரிகையில்:- அசுத்தனாய் ஒன்றையும் பக்ஷிக்கக் கூடாது. நடந்து கொண்டும் பக்ஷிக்கக் கூடாது. கட்டிலில் இருப்பவனாயும், கையிலிருப்பதையும் புஜிக்கக் கூடாது. ஸ்நானம் செய்யாதவனாயும், படுத்தவனாயும், வேறிடத்தில் மனமுடையவனாயும், படுக்கையிலோ, பூமியிலோ உட்கார்ந்தவனாயும், சப்தத்துடனும், ஒரு வஸ்த்ரமுடையவனாயும், பேசிக் கொண்டும், பார்ப்பவருக்குக் கொடாமலும், கால்களை நீட்டியும், சுற்றப்பட்ட தலையையுடையவனாகவும் புஜிக்கக் கூடாது.

बोधायनः — सर्वभक्षापूपकन्दमूलमांसानि दन्तैर्नावद्येन्नाति-सुहितः स्यात् इति ।। बृहस्पतिः — खादितार्धं पुनः खात्वा मोदकादि

फलानि च । दम्पत्योर्भुक्तशिष्टं च भुक्त्वा चान्द्रायणं चरेत् ।। न स्पृशेद्वामहस्तेन भुञ्जानोऽन्नं कदाचन । न पादौ न शिरो वस्तिं न पदा भोजनं स्पृशेत् इति ।। याज्ञवल्क्यः – गोब्राह्मणानलान्नानि नोच्छिष्टो न पदा स्पृशेत् इति ।। एतान्यशुचिः न स्पृशेत् । पादेन त्वनुच्छिष्टोऽपि न स्पृशेदित्यर्थः ।

போதாயனர்:- பக்ஷ்யங்களெல்லாவற்றையும், அப்பம், கிழங்கு, வேர், மாம்ஸம் இவைகளையும் பற்களால் துண்டிக்கக் கூடாது. அதிக த்ருப்தியுள்ளவனாய் இருக்கக் கூடாது. ப்ருஹஸ்பதி:- மோதகம், பழம் முதலியதைக் கடித்துப்பாதி புஜித்துப் பாதி மீதிவைத்து அதைப் பிறகு புஜித்தாலும், தம்பதிகள் புஜித்த மீதியைப் புஜித்தாலும், சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். புஜிப்பவன் இடது கையால் அன்னத்தையும் கால்களையும், தலையையும், நாபியின் கீழ்ப்பாகத்தையும் தொடக்கூடாது. காலினால் போஜன பாத்ரத்தைத் தொடக் கூடாது. யாக்ஞவல்க்யர்:- பசு, ப்ராம்ஹணன், அக்னி, அன்னம் இவர்களை அசுத்தனாயிருப்பவன் தொடக்கூடாது. சுத்தனாயிருந்தாலும் இவர்களைக் காலால் தொடக்கூடாது.

यमः – अङ्के नारोपयेत् पादं पाणिना नाक्रमेद्ध्रुवम् । अङ्गं वा न स्पृशेत् पद्भ्यां पादं पादान्तरेण च ।। न भिन्नभाजनेऽश्नीयान्न भूम्यां न च पाणिषु । नान्धकारे न चाकाशे न च देवालयादिषु इति ।। आश्वमेधिके – उत्थाय च पुनः स्पृष्टं पादस्पृष्टं च लङ्घितम् । केशकीटातिपन्नं च मुख्यमाज्यविवर्जितम् ।। अन्नं तद्राक्षसं ज्ञेयं तस्माद्यत्नेन वर्जयेत् ।। राक्षसोच्छिष्टभुग्विप्रः सप्त पूर्वान् परानपि । रौरव नरके घोरे स्वपितॄन् पातयिष्यति इति ।। हारीतः – एकवस्त्रो न भुञ्जीत कवाटमपिधाय च। यानस्थः शयनस्थो वा पादुकास्थोऽपि वा पुनः । ज्योत्स्नोल्कालोकमार्गेषु प्रदोषे च महानिशि । कोणे चामार्जिते नाद्यात् सङ्घे शय्यासु हर्म्यके इति ।

யமன்:- மடியின்மேல் பாதத்தை ஏற்றக்கூடாது. கையைப் பூமியில் வைத்துக் கொள்ளக் கூடாது. கால்களால் வேறு அங்கத்தைத் தொடக் கூடாது. ஒரு காலால் மற்றொரு காலைத் தொடக் கூடாது. உடைந்த பாத்ரத்திலும், பூமியிலும், கையிலும் வைத்துக் கொண்டு புஜிக்கக் கூடாது. இருளிலும், ஆவரணமில்லாத இடத்திலும், தேவாலயம் முதலியவைகளிலும் இருந்து புஜிக்கக் கூடாது. ஆச்வமேதிகத்தில்:- எழுந்து மறுபடி தொடப்பட்டதும், காலால் தொடப்பட்டதும், காலால் தாண்டப்பட்டதும், மயிர், புழு ஸம்பந்தமுள்ளதும், வாயினின்று விழுந்ததும், ஆஜ்யமில்லாததுமாகிய அன்னம் ராக்ஷஸமாம். ஆகையால் அதை அவச்யம் வர்ஜிக்க வேண்டும். ராக்ஷஸரின் உச்சிஷ்டத்தைப் புஜித்த ப்ராம்ஹணன், தனக்கு முன் ஏழு, பின் ஏழு உள்ள பித்ருக்களை நரகத்தில் தள்ளுவான். ஹாரீதர்:- ஒரு வஸ்த்ரமுடையவனாகவும், கதவை மூடாமலும், வாஹனத்திலிருந்தும், படுக்கையிலிருந்தும், பாதுகையிலிருந்தும், நிலவு, கொள்ளியின் வெளிச்சம், வழி இவைகளிலிருந்தும், ப்ரதோஷ காலத்திலும், மஹாராத்ரியிலும், மூலையிலும், சுத்தி செய்யாத இடத்திலும், கூட்டத்திலும், படுக்கையிலும், மாடியிலும், புஜிக்கக் கூடாது.

सङ्ग्रहे — शय्यायां वेत्रासने चन्द्रिकायामुल्कालोके द्वारि मार्गप्रदेशे। गेहे धूलीधूसरे भित्तिसन्धौ लक्ष्मीकामो वर्जयेदन्नभुक्तिम् इति ।। बृहस्पतिः – अग्न्यगारे गवां गोष्ठे देवब्राह्मणसन्निधौ । जप्ये भोजनकाले च पादुके परिवर्जयेत् ।। उत्सङ्गे च न भुञ्जीत न च पाणितलेऽजिने। शून्यागारे च नाश्नीयान्न च पाण्यासनस्थितम् इति । कूर्मपुराणे – नार्धरात्रे न मध्याह्ने नाजीर्णे नार्द्रवस्त्रधृक्। न भिन्नभाजने चैव न भूम्यां न च पाणिषु ।। नोच्छिष्टो घृतमादद्यान्न मूर्धानं स्पृशन्नपि। न ब्रह्म कीर्तयन् वाऽपि न निश्शेषं न भार्यया इति।

ஸங்க்ரஹத்தில்:- படுக்கையிலும், பிரம்புப்பாயிலும், நிலவிலும், கொள்ளியின் வெளிச்சத்திலும், வாயிற்படியிலும், வழியிலும், புழுதி படிந்த வீட்டிலும், சுவர்களின் ஸந்தியிலும், ஸம்பத்தை விரும்புகிறவன் போஜனத்தை வர்ஜிக்க வேண்டும். ப்ருஹஸ்பதி:- அக்னிசாலையிலும், பசுக்கொட்டிலிலும், தேவர் ப்ராம்ஹணர் ஸன்னிதியிலும், ஜப காலத்திலும், போஜன காலத்திலும் பாதுகைகளைத் தரிக்கக் கூடாது. மடியிலும், உள்ளங்கையிலும், தோலிலும் வைத்துக் கொண்டும், பாழான வீட்டிலும் புஜிக்கக் கூடாது. கையை ஆஸனமாய்ச் செய்து கொண்டு புஜிக்கக் கூடாது. கூர்ம புராணத்தில்:- பாதிராத்ரியிலும், நடுப்பகலிலும், அஜீர்ணத்திலும், ஈரமான வஸ்த்ரம் தரித்தவனும், உடைந்த பாத்ரத்திலும், பூமியிலும், கையிலும் புஜிக்கக் கூடாது. உச்சிஷ்டனுயிருந்து நெய்யை க்ரஹிக்கக் கூடாது. தலையைத் தொட்டுக் கொண்டும், வேதம் சொல்லிக் கொண்டும், மீதிவைக்காமலும், பார்யையுடனும் புஜிக்கக் கூடாது.

याज्ञवल्क्यः – न भार्यादर्शनेऽश्नीयान्नैकवासा न संस्थितः इति। भार्यायामात्मपुरतः स्थितायां नाश्नीयात्। अवीर्यवदपत्योत्पत्तिभयात्। तथा च श्रुतिः – जायाया अन्ते नाश्नीयादवीर्यवदपत्यं भवति इति॥ अतस्तया सह भोजनं दूरादेव निरस्तम् इति विज्ञानेश्वरः॥ तथा च बृहद्यमः – माता वा भगिनी वापि भार्या वाऽन्याश्च योषितः। न ताभिः सह भोक्तव्यं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति। तथा च चन्द्रिकायाम् – नासनारूढपादस्तु न च सार्धं तु भार्यया। शून्यालये तु नाश्नीयान्न च देवाग्निवेश्मनि इति।

யாக்ஞவல்க்யர்:- பார்யையின் எதிரில் புஜிக்கக் கூடாது. ஒரு வஸ்த்ரமுடையவனாகவும், நின்று கொண்டும் புஜிக்கக் கூடாது. "பார்யை தனது எதிரிலிருக்கும் போது புஜிக்கலாகாது. வீர்யமில்லாத

குழந்தை பிறக்குமென்ற பயத்தால். அவ்விதமே ச்ருதி சொல்லுகிறது- 'பார்யையின் எதிரில் புஜிக்கக் கூடாது. வீர்யமில்லாத குழந்தை உண்டாகு மென்பதால்' என்று. இதனல் அவளுடன்கூட புஜிப்பதென்பது தூரத்தில் தள்ளப்பட்டது'' என்றுர் விக்ஞாநேச்வரர். அவ்விதமே, ப்ருஹத்யமர்:- தாய், ஸஹோதரீ, பார்யை, மற்ற ஸ்த்ரீகள் யாராயினும் அவருடன் புஜிக்கலாகாது. புஜித்தால் சாந்த்ராயணம் அனுஷ்டிக்க வேண்டும். அவ்விதமே, சந்த்ரிகையில்:- ஆஸனத்தில் காலே வைத்தவனுகவும், பார்யையுடனும், பாழான ஆலயத்திலும், தேவாலயத்திலும், அக்னிசாலேயிலும் புஜிக்கக் கூடாது.

विष्णुः— नाश्नीयाद्भार्यया सार्धं नाकाशे न तटे स्थितः । शयानः प्रौढपादश्च कृत्वा नैवावसक्थिकम् इति ।। मनुः — नाश्नीयाद्भार्यया सार्धं नैनामीक्षेत चाश्नतीम् । क्षुवतीं जृम्भमाणां वा न चासीनां यथासुखम् इति ।। यत्तु— ब्राह्मण्या सह योऽश्नीयादुच्छिष्टं वा कदाचन । न तस्य दोषमिच्छन्ति नित्यमेव मनीषिणः ।। उच्छिष्टमितरस्त्रीणां योऽश्नीयाद् ब्राह्मणः क्वचित् । प्रायश्चित्ती स विज्ञेयः सङ्कीर्णो मूढचेतनः इति, न तत् सर्वदा दोषा भावप्रतिपादनपरम्, कदाचनेति वचनात् ।

விஷ்ணு:- பார்யையுடனும், கூரையில்லாத இடத்திலும், கரையிலும், நின்றுகொண்டும், படுத்துக் கொண்டும், ப்ரௌடபாதனுயும், (ஆஸனத்தில் காலேவைத்துக் கொண்டும்) முழங்கால்களேக் கட்டிக் கொண்டும் புஜிக்கக் கூடாது. மனு:- பார்யையுடன் புஜிக்கக் கூடாது. அவள் புஜிக்கும் போதும், தும்மும் போதும், கொட்டாவி விடும்போதும், சோம்பல் முறிக்கும் போதும், இஷ்டப்படி உட்கார்ந்திருக்கும் போதும் அவளேப் பார்க்கக் கூடாது. ''எவன், ப்ராம்ஹணியான பத்னியுடன் புஜிக்கின்றுனே, அவளின் உச்சிஷ்டத்தையாவது ஒருகால் புஜிக்கின்றுனே,

அவனுக்கு எப்பொழுதும் தோஷமில்லை என்கின்றனர் அறிந்தவர்கள். மற்ற வர்ண ஸ்த்ரீகளின் உச்சிஷ்டத்தை ப்ராம்ஹணன் எக்காலத்திலாவது புஜித்தால் அந்த மூடன் ஸங்கீர்ணன், ப்ராயச்சித்தார்ஹனுவான்'' என்ற வசனமுள்ளதேயெனில், அது, எப்பொழுதும் தோஷ மில்லை என்பதைச் சொல்வதில் தாத்பர்யமுள்ளதல்ல, 'கதாசந' எப்போதாவது என்றிருப்பதால்.

अत एवादित्यपुराणम् – ब्राह्मण्या भार्यया सार्धं क्वचिद्भुञ्जीत वाऽध्वनि। अधोवर्णस्त्रिया सार्धं भुक्त्वा पतति तत्क्षणात् इति। यदपि बोधायनेनोक्तम् – यानि दक्षिणतस्तानि व्याख्यास्यामो यथैत दनुपेतेन सह भोजनं स्त्रिया सह भोजनं पर्युषित भोजनम् इति, तदपि तस्य दुराचारत्वप्रतिपादनपरम्॥ तथा च स एव – मिथ्यैतदिति गौतमः उभयं चैव नाद्रियेत शिष्टस्मृतिविरोधदर्शनात् इति। आपस्तम्बः – उपेतः स्त्रीणामनुपेतस्योच्छिष्टं वर्जयेत् इति, धर्मविप्रतिपत्तावभोज्यम् इति।

ஆதித்யபுராணம்:- 'ப்ராம்ஹணியான பார்யையுடன் ஒரு காலத்தில் மார்க்கத்தில் புஜித்தாலும் புஜிக்கலாம். கீழ் வர்ண ஸ்த்ரீயுடன் புஜித்தால் அப்பொழுதே பதிதனுகிறுன்' என்கிறது. போதாயனர்:- ''தென்தேசத்தி லுள்ளவை எவையோ அவைகளைச் சொல்லுகிறேன், அனுபநீதனுடன் சேர்ந்து புஜிப்பதும், பார்யையுடன் சேர்ந்து புஜிப்பதும், பழையதான அன்னத்தை புஜிப்பதும்'' என்று சொல்லிய வசனமெதுவோ அதுவும், அதற்கு துராசாரத் தன்மையைச் சொல்வதில் தாத்பர்யமுள்ளதாம். அவ்விதமே, போதாயனரே:- 'இது மித்யை (துராசாரம்) என்றுர் கௌதமர். இரண்டு விதமான ஆசாரத்தையும் ஆதரிக்கக் கூடாது, சிஷ்டர்களின் ஸ்ம்ருதிகளுடன் விரோதம் காணப்படுவதால்' என்றுர். ஆபஸ்தம்பர்:- உபநயனமாகிய ப்ராம்ஹணன், ஸ்த்ரீகளுடையவும், உபநயனமாகாதவனுடையவும்

உச்சிஷ்டத்தைப் புஜிக்கலாகாது. விஹிதமான உச்சிஷ்டமானாலும், தர்மத்திற்கு லோபம் வருமாகில் அதைப் புஜிக்கக் கூடாது.

बृहस्पतिः – नोच्छिष्टो ग्राहयेदाज्यं जग्धशिष्टं च सन्त्यजेत्। न भिन्नकांस्ये सन्ध्यायां पतितानां च सन्निधौ ॥ शूद्रशेषं न भुञ्जीयात् श्राद्धान्नं शिशुभिः सह। शूद्रभुक्तावशिष्टं तु नाद्याद्भाण्डस्थितं त्वपि ॥ पात्रान्तरे निधायास्माद् दद्यान्निरवशेषतः इति ॥ पाकभाण्डात् पात्रान्तरे निधाय तत आदाय शूद्रादिभ्यो निरवशेषं देयम् एवं सति पाकभाण्डस्थं भोज्यमित्यर्थः ॥

ப்ருஹஸ்பதி:- உச்சிஷ்டனாயிருந்து நெய்யை க்ரஹிக்கக் கூடாது. புஜித்ததின் மீதியைப் புஜிக்கலாகாது. உடைந்த வெண்கலத்தில் புஜிக்கலாகாது. பதிதர்களின் எதிரில் புஜிக்கலாகாது. சூத்ரசேஷத்தைப் புஜிக்கலாகாது ச்ராத்தசேஷான்னத்தைப் புஜிக்கலாகாது. சிசுக்களுடன் சேர்ந்து புஜிக்கலாகாது. சூத்ரசேஷத்தையும் புஜிக்க லாகாது. பாக பாண்டத்திலிருந்தாலும் சூத்ரசேஷத்தைப் புஜிக்கலாகாது. பாக பாண்டத்திலிருந்து வேறு பாத்ரத்திலெடுத்து வைத்துக் கொண்டு அதை முழுவதும் கொடுத்துவிட வேண்டும். அதாவது, பாக பாண்டத்திலிருந்தும் வேறு பாத்ரத்தில் அன்னத்தை எடுத்து வைத்துக் கொண்டு அந்த அன்னத்திலிருந்து எடுத்து சூத்ரர் முதலியவர்க்குக் கொடுக்க வேண்டும். அதை மீதியில்லாமல் கொடுத்துவிட வேண்டும். அப்படியானால் பாக பாண்டத்திலுள்ளது சேஷமாகாது. அது புஜிக்கத் தகுந்தது தான் என்பது பொருள்.

अत्रिः — क्षीरं लवणसंयुक्तमुच्छिष्टे घृतसेचनम् । रजस्वलामुखास्वादः सुरापानसमं त्रयम् इति । उच्छिष्टे घृतसेचने विशेषमाह स एव – प्राणाहुतौ घृताभावे पश्चाद्भुञ्जीत नो घृतम्। प्राग्घुते घृतसद्भावे भुक्तिमध्ये न दुष्यति इति ॥ शातातपः —

अग्रासनोपविष्टस्तु यो भुङ्क्ते प्रथमं द्विजः । बहूनां पश्यतां सोऽज्ञः पङ्क्त्या हरति किल्बिषम् इति । उशनाः — नादत्वा मृष्टमश्नीयाद्बहूनां चैव पश्यताम् । नाश्नीयुर्बहवश्चैव तथा चैकस्य पश्यतः ।। अश्नाति यो भृत्यजनस्य मध्ये मृष्टान्नमेको रसगृध्नुबुद्धिः । दीनैः कटाक्षैरभिवीक्ष्यमाणो व्यक्तं विषं हालहलं स भुङ्क्ते इति ।

அத்ரி:- உப்புடன்கூடிய பால், உச்சிஷ்டத்தில் நெய் சேர்ப்பது, ரஜஸ்வலையின் முகத்தைப் பருகுதல் என்ற இம்மூன்றும் ஸுராபானத்திற்குச் சமமாகும். உச்சிஷ்டத்தில் நெய் சேர்ப்பதில் விசேஷத்தைச் சொல்லுகிறார், அத்ரியே:- ப்ராணாஹுதியில் நெய் சேர்க்காவிடில், பிறகு நெய்யைப் புஜிக்கக்கூடாது. ப்ராணாஹுதியில் நெய் சேர்ந்திருந்தால், போஜன மத்யத்தில் நெய் சேர்ப்பது துஷ்டமாகாது. சாதாதபர்:- பங்க்தியின் முதலில் உட்கார்ந்து கொண்டும், அநேகர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, எவன் முதலில் புஜிக்கின்றானோ, அந்த அக்ஞன், அந்தப் பங்க்தியிலுள்ளவரின் பாபத்தைப் பெறுகிறான். உசநா:- அநேகர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுக்குக் கொடாமல் தான் வயிறு நிரம்ப புஜிக்கக் கூடாது. ஒருவன் பார்த்துக் கொண்டிருக்க அவனுக்குக் கொடாமல் பலரும் புஜிக்கக் கூடாது. எவன் ப்ருத்ய ஜனங்களின் நடுவில், அவர்களின் தீனமான பார்வைகளால் பார்க்கப்பட்டு, அவர்களுக்குக் கொடாமல், ரஸங்களில் ஆசையுள்ளவனாய்த் தான்மட்டில் ம்ருஷ்டான்னத்தைப் வயிறுநிறைய புஜிக்கின்றானோ அவன் ஹாலாஹல விஷத்தையே புஜிக்கின்றான். நிச்சயம்.

यमः—यस्त्वेकपङ्क्तौ विषमं ददाति स्नेहाद्भयाद्वा यदि वाऽर्थहेतोः । वेदेषु दृष्टामृषिभिश्च गीतां तां ब्रह्महत्यां मुनयो वदन्ति इति ।। व्यासः –एकपंक्त्युपविष्टानां विषमं यः प्रयच्छति ।

यश्चैवाश्नाति विषमं स कुर्याद्ब्रह्महणो व्रतम् ।। पङ्क्तिभेदी पृथक्पाकी नित्यं ब्राह्मणनिन्दकः । आदेशी वेदविक्रेता पञ्चैते ब्रह्मघातुकाः इति ।। गोभिलः - एकपङ्क्त्युपविष्टानां विप्राणां सहभोजने । यद्येकोऽपि त्यजेत् पात्रं नाश्नीयुरितरेऽप्यनु ।। मोहात्तु भुङ्क्ते यस्तत्र स सान्तपनमाचरेत् ।। भुञ्जानेषु तु विप्रेषु यस्तु पात्रं परित्यजेत् । भोजने विघ्नकर्ताऽसौ ब्रह्महाऽपि तथोच्यते ।। एकपङ्क्त्युपविष्टानां विप्राणां भोक्तुकामिनाम् । यो विघ्नं कुरुते मर्त्यः ततो नान्योऽस्ति पापकृत् इति।

யமன்:- எவன், ஒரு பங்க்தியில், ஸ்நேஹத்தாலோ, பயத்தாலோ, பணத்திற்காகவோ பேதமுள்ளபடி போஜனத்தைக் கொடுக்கின்றனோ, அவனுககு வேதங்களில் காணப்பட்டதும், ருஷிகளால் சொல்லப் பட்டதுமான அந்த ப்ரம்ஹத்யையை முனிவர்கள் சொல்லுகின்றனர். வ்யாஸர்:- ஒரு பங்க்தியில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு எவன் பேதமுள்ளதாய் கொடுக்கின்றனோ, எவன் பேதமுள்ளபடி புஜிக் கின்றனோ, அவன் ப்ரம்ஹத்யை செய்தவனுடைய வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். பங்க்தியைப் பேதம் செய்பவனும், தனக்கு மட்டில் தனியாய்ப் பாகம் செய்து கொள்பவனும், எப்பொழுதும் ப்ராம்ஹணர்களை நிந்திப்பவனும், ஆதேசியும், (உத்தரவிடுபவன்) வேதத்தை விற்பவனும் இந்த ஐவரும் ப்ரம்ஹஹத்தி செய்தவர்கள். கோபிலர்:- ஒரு பங்க்தியில் உட்கார்ந்து புஜிக்கும் ப்ராம்ஹணர்களுள் ஒருவன் போஜன பாத்ரத்தை விட்டாலும், பிறகு மற்றவர்களும் புஜிக்கக் கூடாது. எவன் அறியாமையால் அப்பங்க்தியில் புஜிக்கின்றனோ அவன் ஸாந்தபனத்தை அனுஷ்டிக்க வேண்டும். ப்ராம்ஹணர்கள் புஜிக்கும் பொழுது எவன் போஜன பாத்ரத்தை விடுகின்றனோ அவன் பிறரின் போஜனத்தில் விக்னம் செய்தவனாயும், ப்ரம்ஹஹத்யை செய்தவனாயும் சொல்லப்படுகின்றான். ஒரு பங்க்தியில் உட்கார்ந்திருப்பவரும், புஜிக்க விரும்பியவருமான

ப்ராம்ஹணர்களுக்கு எந்த மனிதன் விக்னத்தைச் செய்கின்றானோ அவனைவிடப் பாபம் செய்பவன் ஒருவன் இல்லை.

पराशरः — एकपङ्क्त्युपविष्टानां विप्राणां सहभोजने । यद्येकोऽपि त्यजेत् पात्रं शेषमन्नं न भोजयेत् । मोहाद्भुञ्जीत यस्तत्र पङ्क्त्या उच्छिष्टभाजने । प्रायश्चित्तं चरेद्विप्रः कृच्छ्रं सान्तपनं तथा ।। भुञ्जानेषु तु विप्रेषु योऽग्रे पात्रं परित्यजेत् । स चोरः स च पापिष्ठो ब्रह्मघ्नः स खलूच्यते ।। अप्येकपङ्क्त्यां नाश्नीयाद् ब्राह्मणः स्वजनैरपि । को हि जानाति किं कस्य प्रच्छन्नं पातकं भवेत् ।। एकपङ्क्त्युपविष्टानां दुष्कृतं यद्दुरात्मनाम् । सर्वेषां तत् समं तावद्यावत्पंक्तिः न भिद्यते इति ।

பராசரர்:- ஒரு பங்க்தியில் உட்கார்ந்து சேர்ந்து புஜிக்கின்ற ப்ராம்ஹணர்களுள் ஒருவனாவது பாத்ரத்தை விட்டால் மற்றவரும் மீதியுள்ள அன்னத்தைப் புஜிக்கக் கூடாது. எவன் அறியாமையால் பங்க்தியின் உச்சிஷ்ட பாத்ரத்தில் புஜிப்பானோ அவன் ஸாந்தபன க்ருச்ரத்தை ப்ராயச்சித்தமாய் அனுஷ்டிக்க வேண்டும். ப்ராம்ஹணர்கள் புஜிக்கும் போது எவன் முதலில் பாத்ரத்தை விடுகின்றானோ அவன் திருடன், அவன் மஹாபாபி, அவன் ப்ரம்ஹக்னன் என்று சொல்லப்படுகிறான். ப்ராம்ஹணன் தன் ஜனங்களுடனும் கூட ஒரு பங்க்தியில் புஜிக்கக் கூடாது. எவனுக்கு எந்தப் பாபம் மறைவாய் இருக்கக் கூடும் என்று யார் அறிவார்? ஒரு பங்க்தியில் உட்கார்ந்திருக்கும் துஷ்டர்களுக்கு எந்தப் பாபமோ அது எல்லோருக்கும் ஸமமாகும், பங்க்தியைப் பேதிக்காதவரையில்.

पङ्क्तिभेदप्रकारमाह स एव — अग्निना भस्मना चैव स्तम्भेन सलिलेन च । द्वारेण चैव मार्गेण पङ्क्तिभेदो बुधैः स्मृतः इति ।। यमोऽपि – उदकं च तृणं भस्म द्वारं पन्थास्तथैव च । एभिरन्तरितं कृत्वा

पङ्क्तिदोषो न विद्यते इति। स्मृत्यन्तरे —— अग्निना भस्मनाचैव स्तम्भेन सलिलेन वा। द्वारेण निम्नभूम्या वा षड्भिः पङ्क्तिर्विभिद्यते इति ॥ स्मृत्यर्थसारे —— न शुष्कपाणिपादो भुञ्जीत न तिष्ठन्नगच्छन्न प्रह्वो न शयानो नार्द्रवस्त्रो न प्रौढपादो नासनारूढपादो न विदिङ्मुखो न शयने न खट्वायां नासन्द्यां न जानुनि नोत्सङ्गे न शिशुभिः सह न पश्यतामप्रदाय न भार्यया सहाश्नीयाद्विवाहवर्जं न दुष्टपङ्क्तौ जलतृणाग्निभस्म-पथिस्तंभादिभिः पङ्क्तिर्भिद्यते इति।

பங்க்தியைப் பேதிக்கும் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார் :- பராசரரே:- அக்னியினாலும், சாம்பலினாலும், ஸ்தம்பத்தினாலும், ஜலத்தினாலும், வாயிலினாலும், வழியினாலும் பங்க்தியின் பேதம் வித்வான்களால் சொல்லப்பட்டுள்ளது. யமனும்:- ஜலம், புல், சாம்பல், வாயில், வழி இவைகள் நடுவிலிருந்தால் பங்க்தியின் தோஷம் இல்லை. மற்றொருஸ்ம்ருதியில்:- அக்னி, சாம்பல், ஸ்தம்பம், ஜலம், வாயில், தாழ்ந்தபூமி, இவ்வாறுகளில் ஒன்று நடுவிலிருந்தால் பங்க்தி பேதிக்கப்படுகிறது. (வேறாகிறது.) ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- உலர்ந்த கை, கால்கள் உள்ளவனாயும், நின்றுகொண்டும், நடந்து கொண்டும், குனிந்து கொண்டும், படுத்துக் கொண்டும், ஈரவஸ்த்ரமுடையவனாகவும், ப்ரௌடபாதனாயும், (ஆஸனத்தில் கால்களை வைத்துக் கொண்டும்) விதிக்குகளை நோக்கினவனாயும் புஜிக்கக் கூடாது. படுக்கையிலும், கட்டிலிலும், நாற்காலியிலும், முழங்காலிலும், மடியிலும், உள்ளங்காலிலும் பாத்ரத்தை வைத்துக் கொண்டு புஜிக்கக் கூடாது. படுக்கை முதலியவைகளி லிருந்தும், குழந்தைகளுடனும், பார்ப்பவர்க்குக் கொடாமலும் புஜிக்கக் கூடாது. விவாஹம் தவிர மற்றக் காலத்தில் பார்யையுடன் புஜிக்கக் கூடாது. துஷ்டர்களின் பங்க்தியில் புஜிக்கக் கூடாது. ஜலம், புல், நெருப்பு, சாம்பல், வழி, ஸ்தம்பம் முதலியவைகளால் குறுக்கிட்டால் பங்க்தி வேறாகும்.

स्मृतिरत्ने — शयनस्थो न भुञ्जीत न पाणिस्थं न चासने। न कुर्यात् स्कन्दनं शब्दं क्रोध मन्यत्र चिन्तनम्॥ शिशूनां भर्त्सनं चापि श्वचण्डालादिनिदर्शनम्। अशुचीनां तथा मध्ये प्रेक्षतामप्यनश्नताम्॥ नाकाले विषयुक्तं च नाश्नीयादहुतं तथा इति ॥ व्यासः — उदक्यामपि चण्डालं श्वानं कुक्कुटमेव च। भुञ्जानो यदि पश्येत्तु तदन्नं तु परित्यजेत्॥ रजस्वलादृष्टमन्नं भुक्त्वा वमनमिष्यते। चण्डालदृष्टमन्नं च सूतिकादृष्टमेव च। चण्डालं पतितं प्रेतं श्वशूद्रादीन् रजस्वलाम्। एतान्निरीक्ष्य भुञ्जानो वमित्वोपवसेत्त्र्यहम् इति।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- படுக்கையிலிருந்து புஜிக்கக் கூடாது. கையிலுள்ளதையும், ஆஸனத்திலுள்ளதையும் புஜிக்கக் கூடாது. சிந்தக்கூடாது. சப்தம், கோபம், மற்றவிடத்தில் சிந்தை, குழந்தைகளை விரட்டுதல், நாய், சண்டாளன் முதலியவரைப் பார்ப்பது இவை கூடாது. அசுத்தர்களின் நடுவிலும், புஜிக்காதவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதும், அகாலத்திலும், விஷம் கலந்ததையும், ஹோமம் செய்யாததையும் புஜிக்கக் கூடாது. வ்யாஸர்:- ரஜஸ்வலை, சண்டாளன், நாய், கோழி இவர்களைப் புஜிப்பவன் பார்த்தால் அந்த அன்னத்தை விட்டுவிட வேண்டும். ரஜஸ்வலையால் பார்க்கப்பட்ட அன்னத்தைப் புஜித்தால் வாந்தி செய்ய வேண்டும். சண்டாளனாலும், ஸூதிகையினாலும் பார்க்கப்பட்ட அன்னத்தைப் புஜித்தாலும் வாந்தி செய்ய வேண்டும். சண்டாளன், பதிதன், ப்ரேதன், நாய், சூத்ரன் முதலியவர், ரஜஸ்வலை இவர்களைப் பார்த்து விட்டு புஜித்தால் வாந்தி செய்து, மூன்றுநாள் உபவாஸம் இருக்க வேண்டும்.

संवर्तः — उदक्यामपि चण्डालं ग्रामसूकरकुक्कुटौ। भुक्त्यन्तरे समीक्ष्यैतान् जपेत् पूर्वोदितामृचम् इति। मानस्तोक इत्यृचम्॥ स्मृत्यन्तरे — चण्डालं पतितं श्वानमुदक्यां सूतिकां तथा। दृष्ट्वा भुक्त्यन्तरे स्नात्वा मानस्तोकऋचं जपेत् इति॥ कात्यायनः —

चण्डालपतितोदक्यावाक्यं श्रुत्वा द्विजोत्तमः । भुञ्जीत ग्रासमात्रं तु दिनमेकमभोजनम् इति ।। आश्वमेधिके — उदक्यामपि चण्डालं श्वानं वा काकमेव वा । भुञ्जानो यदि पश्येत्तु तदन्नं तु परित्यजेत् ।। भुञ्जानो यदि तन्मोहात् द्विजश्चान्द्रायणं चरेत् इति ।

ஸம்வர்த்தர்:- *ரஜஸ்வலை, சண்டாளன், ஊர்ப்பன்றி, கோழி இவர்களைப் போஜனத்தின் நடுவில் பார்த்தால், முன் சொல்லிய ('மானஸ்தோகே' என்ற) ருக்கை ஜபிக்க வேண்டும்.* மற்றொருஸ்ம்ருதியில்:- *சண்டாளன், பதிதன், நாய், ரஜஸ்வலை, ஸூதிகை இவர்களைப் போஜனத்தின் மத்யத்தில் பார்த்தால் ஸ்நானம் செய்து, 'மானஸ்தோகே' என்ற ருக்கை ஜபிக்க வேண்டும்.* காத்யாயனர்:- *ப்ராம்ஹணன் போஜன மத்யத்தில் சண்டாளன், ஸூதிகை, ரஜஸ்வலை இவர்களின் வார்த்தையைக் கேட்டு விட்டு ஒரு கபளம் புஜித்தாலும், ஒருநாள் முழுவதும் உபவாஸம் இருக்க வேண்டும்.* ஆச்வமேதிகத்தில்:- *ரஜஸ்வலை, சண்டாளன், நாய், காக்கை இவைகளைப் புஜிக்கும் பொழுது பார்த்தால் அந்த அன்னத்தை விட்டுவிட வேண்டும். அறியாமையால் அதைப் புஜித்தால், ப்ராம்ஹணன் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.*

प्रजापतिः — उदक्यायाः करेणान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् । प्राजापत्यमशक्तश्चेत् त्रिरात्रं स्पृष्टभोजने ।। अशक्तौ तु तदर्धं स्यात् त्रिगुणं सहभोजने । चतुर्गुणं तदुच्छिष्टे पानीयेऽर्धार्धमेव च इति ।। भोजनपात्रस्योच्छिष्टस्पर्शे सति कर्तव्यमुक्तं स्मृत्यर्थसारे— उच्छिष्टस्पर्शनं ज्ञात्वा तत् पात्रं परिहृत्य च । ततः पश्चाद्गोमयेन भूमिं समनुलिप्य च ।। अन्यत् पात्रं निधायैव तदन्नं परिवेषयेत् । परिषिच्याथ भुञ्जीत भोजने तु न दोषभाक् इति ।

ப்ரஜாபதி:- *ரஜஸ்வலையின் கையினால் கொடுக்கப் பட்ட அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை*

அனுஷ்டிக்க வேண்டும். அசக்தனுனல் ப்ராஜாபத்யத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவளால் ஸ்பர்சிக்கப்பட்டதைப் புஜித்தால் மூன்று நாள் வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அசக்தனுனல் அதில் பாதியை அனுஷ்டிக்க வேண்டும். ரஜஸ்வலையுடன் புஜித்தால் மூன்று மடங்கான வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவளின் உச்சிஷ்டத்தைப் புஜித்தால் நான்கு மடங்கு வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவளின் ஜலத்தைப் பருகினுல் கால்பாகமான வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். போஜன பாத்ரத்திற்கு, உச்சிஷ்டஸ்பர்சம் ஏற்பட்டால் செய்ய வேண்டியது ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- போஜன பாத்ரத்திற்கு உச்சிஷ்ட ஸ்பர்சம் ஏற்பட்டதாய்த் தெரிந்தால் அந்தப் பாத்ரத்தை பரிஹரித்து, பிறகு கோமயத்தால் பூமியை மெழுகி, மற்ெருரு பாத்ரத்தில் அன்னத்தைப் பரிமாறி, பரிஷேசனம் செய்து பிறகு புஜிக்கலாம். இவ்விதம் புஜித்தால் தோஷத்தை அடையமாட்டான்.

पात्रस्पर्शाभावे अन्योन्यस्पर्शे तत्रैवोक्तम् — एकपङ्क्तिषु भुञ्जानो ब्राह्मणो ब्राह्मणं स्पृशेत् । तदन्नमत्यजन् भुक्त्वा गायत्र्यष्टशतं जपेत् इति ॥ तदन्नं त्यजेत् । अत्यक्त्वा भुञ्जीत चेत् गायत्र्यष्टशतं जपेदित्यर्थः । इदं चापद्विषयम् । अत एवाह पराशरः — उच्छिष्टोच्छिष्टसंस्पृष्टः शुना शूद्रेण वा द्विजः । उपोष्य रजनीमेकां पञ्चगव्येन शुध्यति इति ॥ शूद्रेण - अनुच्छिष्टशूद्रेणेत्यर्थः ॥ स्मृत्यन्तरे — एकपङ्क्तौ तु भुञ्जान उच्छिष्टं संस्पृशेद्यदि । विसृज्यान्नं ततः स्नायात् भुक्त्वा चान्द्रायणं चरेत् इति । उच्छिष्टान्नस्पर्शे अत्रिः – अशुद्धः स्वयमप्यन्नमशुद्धं तु स्पृशेद्यदि । विशुध्यत्युपवासेन भुङ्क्ते कृच्छ्रेण शुध्यति इति ।

போஜன பாத்ரத்திற்கு ஸ்பர்சமில்லாமல், புஜிப்பவர் ஒருவரையொருவர் ஸ்பர்சித்தால், செய்ய வேண்டியதும்

அங்கே சொல்லப்பட்டுள்ளது. ஒரே பங்க்தியில் புஜிக்கும் ப்ராம்ஹணன் புஜிக்கும் மற்றொருவனை, ஸ்பர்சித்தால், அந்த அன்னத்தை கைவிட வேண்டும். த்யஜிக்காமல் புஜித்தால் 108- முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். இது ஆபத்விஷயமாம். பராசரர்:- 'உச்சிஷ்டனான ப்ராம்ஹணன், உச்சிஷ்டனான ப்ராம்ஹணனாலாவது, நாயினாலாவது, சூத்ரனாலாவது ஸ்பர்சிக்கப்பட்டால் ஒரு இரவு முழுவதும் உபவாஸமிருந்து, பஞ்சகவ்யத்தால் சுத்தனாகிறான்' என்றார். இங்கு சூத்ரன் என்றதற்கு உச்சிஷ்டனல்லாத சூத்ரன் என்று பொருள். மற்றொருஸ்ம்ருதியில்:- ஒரே பங்க்தியில் புஜிப்பவன் மற்றொரு உச்சிஷ்டனை ஸ்பர்சித்தானாகில் அந்த அன்னத்தை விட்டுப் பிறகு ஸ்நானம் செய்ய வேண்டும். அந்த அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். உச்சிஷ்டான்னத்தை ஸ்பர்சித்த விஷயத்தில், அத்ரி:- தான் அசுத்தனாயிருந்து அசுத்தமான (பிறனின்) அன்னத்தை ஸ்பர்சித்தால் உபவாஸத்தால் சுத்தனாவான். புஜித்தால் க்ருச்ரத்தால் சுத்தனாவான்.

श्राद्धे अन्योन्यस्पर्शने कर्तव्यमाह शङ्खः — श्राद्धपङ्क्तौ तु भुञ्जानो ब्राह्मणो ब्राह्मणं स्पृशेत्। तदन्नमत्यजन् भुक्त्वा गायत्र्यष्टशतं जपेत् इति। उच्छिष्टस्पर्शेऽप्याह — उच्छिष्टलेपनस्पर्शे प्रक्षाल्यान्येन वारिणा। भोजनान्ते नरः स्नात्वा गायत्रीं त्रिशतं जपेत् इति ॥ पात्रयोरन्योन्यस्पर्शेऽप्याह — उच्छिष्टोच्छिष्टसंस्पर्शे स्पृष्टपात्रं विसृज्य च। सर्वान्नं पूर्ववद्दत्वा भोजयेत् तु द्विजोत्तमः इति। संवर्तः— कृते मूत्रे पुरीषे वा भुक्तोच्छिष्टे तथैव च। श्वादिस्पृष्टो जपेद्देव्याः सहस्रं स्नानपूर्वकम् ॥ चण्डालाद्यैस्तु संस्पृष्ट उच्छिष्टस्तु द्विजोत्तमः। गोमूत्रयावकाहारः षड्रात्रेण विशुध्यति इति।

ச்ராத்தத்தில் ஒருவர்க்கொருவர் ஸ்பர்சித்தால் செய்ய வேண்டியதைச் சொல்லுகிறார் சங்கர்:- ச்ராத்த பங்க்தியில் புஜிக்கும் ப்ராம்ஹணன், புஜிக்கும் மற்றொருவனை

ஸ்பர்சித்தால், அந்த அன்னத்தை விடவேண்டும். விடாமல் புஜித்தால் 108-முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். உச்சிஷ்டத்தைத் தொடும் விஷயத்தில், **சங்கரே:-** உச்சிஷ்டத்தின் பற்றுல் ஸ்பர்சம் ஏற்பட்டால், வேறு ஜலத்தால் அலம்பி, போஜனத்தின் முடிவில் ஸ்நானம் செய்து, 300- முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். போஜன பாத்ரங்களுக்குப் பரஸ்பரம் ஸ்பர்சமேற்பட்டால், **சங்கரே:-** உச்சிஷ்ட பாத்ரங்களுக்குப் பரஸ்பரம் ஸ்பர்சமேற்பட்டால் பாத்ரத்தைப் பரிஹரித்து, ஸகல அன்னத்தையும் முன்போல் பரிமாறிப் புஜிப்பிக்க வேண்டும். **ஸம்வர்த்தர்:-** மூத்ர விஸர்ஜனம் செய்து, அல்லது மலவிஸர்ஜனம் செய்து, அல்லது போஜனம் செய்து உச்சிஷ்டனுயிருப்பவன் நாய் முதலியதால் ஸ்பர்சிக்கப்பட்டால் ஸ்நானம் செய்து 1000-முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். உச்சிஷ்டனுன ப்ராம்ஹணன், சண்டாளன் முதலியவரால் ஸ்பர்சிக்கப்பட்டால், ஆறுநாள் கோமூத்ர யாவகத்தை ஆஹாரம் செய்தால் சுத்தனுகிறுன்.

व्यासोऽपि - उच्छिष्टोऽद्भिरनाचान्तश्चण्डालादीन् स्पृशेद्द्विजः । प्रमादाद्वै जपेत् स्नात्वा गाव्यष्टसहस्रकम् ।। चण्डालपतितादींस्तु कामाद्यः संस्पृशेद् द्विजः । उच्छिष्टस्तत्र कुर्वीत प्राजापत्यं विशुद्धये इति, अशुद्धान् स्वयमेवैतानशुद्धस्तु यदि स्पृशेत् । विशुध्यत्युपवासेन तथा कृच्छ्रेण वा पुनः इति च । मनुः – पुच्छे बिडालकं स्पृष्ट्वा स्नात्वा विप्रो विशुध्यति । भोजने कर्मकाले च विधिरेष उदाहृतः इति ।। इतराङ्गस्पर्शे त्वाचमनमेव । मार्जारमूषिकस्पर्शे कर्म कुर्वन्नुपस्पृशेत् इति बृहस्पतिस्मरणात् ।

வ்யாஸரும்:- உச்சிஷ்டனுன ப்ராம்ஹணன் ஆசமனம் செய்யாமல் சண்டாளன் முதலியவரை ஸ்பர்சித்தால் கவனமில்லாவிடில், ஸ்நானம் செய்து 1008- முறை

காயத்ரியை ஜபிக்க வேண்டும். க்ஞானபூர்வமாய் ஸ்பர்சித்தவன் சுத்திக்காக ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். அசுத்தர்களான அவர்களைத் தானும் அசுத்தனுயிருந்து ஸ்பர்சித்தால், உபவாஸத்தாலாவது, அல்லது க்ருச்ரத்தாலாவது சுத்தனுகிறுன். மனு:- பூனையை வாலில் தொட்டால் ஸ்நானம் செய்வதால் ப்ராம்ஹணன் சுத்தனுகிறுன். இந்த விதி, போஜன காலத்திலும், கர்மகாலத்திலும் சொல்லப்பட்டுள்ளது. வாலைத் தவிர்த்த மற்ற அங்கத்தில் தொட்டால் ஆசமனம் மட்டில். 'கர்மகாலத்தில் பூனை, எலி இவைகளை ஸ்பர்சித்தால் ஆசமனம் செய்ய வேண்டும்' என்று ப்ருஹஸ்பதி ஸ்ம்ருதி இருப்பதால்.

वृद्धमनुः — न पिबेन्न च भुञ्जीत द्विजः सव्येन पाणिना । नैकहस्तेन च जलं शूद्रेणावर्जितं पिबेत् ॥ पिबतो यत्पतेत्तोयं भाजने मुखनिःसृतम् । अभोज्यं तद्भवेदन्नं भोक्ता भुञ्जीत किल्बिषम् ॥ पीत्वाऽवशेषितं तोयं ब्राह्मणो न पुनः पिबेत् । पिबेद्यदि हि तन्मोहात् द्विजश्चान्द्रायणं चरेत् इति ॥ शातातपः – उद्धृत्य वामहस्तेन यत्तोयं पिबति द्विजः । सुरापानेन तत्तुल्यं मनुराह प्रजापतिः इति ॥ पराशरः – अर्धभुक्ते तु यो विप्रस्तस्मिन् पात्रे जलं पिबेत् । हतं दैवं च पित्र्यं च आत्मानं चोपघातयेत् ॥ पिबतः पतितं तोयं भाजने मुखनिः सृतम् । अभोज्यं तद्विजानीयात् भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ।

வ்ருத்தமனு:- ப்ராம்ஹணன் இடது கையினுல் குடிக்கக் கூடாது. புஜிக்கவும் கூடாது. ஒரு கையினுல் விடப்பட்ட ஜலத்தையும், சூத்ரனுல் விடப்பட்ட ஜலத்தையும் பருகக் கூடாது. ஜலத்தைப் பருகும் போது வாயினின்றும் ஜலம் போஜன பாத்ரத்தில் விழுந்தால் அந்த அன்னம் அபோஜ்யமாகும். புஜிப்பவன் பாபத்தைப் புஜிப்பவனுவான். ஜலத்தைக் குடித்துப் பாத்ரத்தில் மீந்த ஜலத்தை மறுபடி குடிக்கக் கூடாது. அறியாமல் அதைக் குடித்தால், ப்ராம்ஹணன் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க

வேண்டும். சாதாதபர்:- இடதுகையால் எடுத்து ஜலத்தைக் குடித்தானாகில் அது ஸுராபானஸமம் என்று. மனுவும், ப்ரஜாபதியும் சொன்னார். பராசரர்:- எந்த ப்ராம்ஹணன் பாதி புஜித்த பிறகு அந்தப் பாத்ரத்தில் ஜலத்தைப் பருகுகின்றானோ, அவனின் தைவகார்யமும், பித்ருகார்யமும் கெடுக்கப்பட்டதாகின்றன. அவன் தன்னையும் கெடுத்துக் கொள்ளுகிறான். ஜலத்தைப் பருகுகிறவனின் முகத்திலிருந்து ஜலம் போஜன பாத்ரத்தில் விழுந்தால் அந்த அன்னம் புஜிக்கத்தகாததாகும். புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

शङ्खः—पीतावशेषितं पीत्वा पानीयं ब्राह्मणः क्वचित् । त्रिरात्रं तु व्रतं कुर्याद्वामहस्तेन वा पुनः । व्यासः - हस्ते च विद्यमाने तु ब्राह्मणो ज्ञानदुर्बलः। तोयं पिबति वक्त्रेण श्वानयोनिं व्रजेत्यधः इति ॥ अत्रिः – आस्येन न पिबेत्तोयं तिष्ठन्नाञ्जलिना पिबेत्। वामहस्तेन शय्यायां तथैवान्यकरेण वा ॥ तोयं पाणिनखस्पृष्टं ब्राह्मणो न पिबेत् क्वचित्। सुरापानेन तत्तुल्यं मनुः स्वायम्भुवोऽब्रवीत्॥ वामहस्तेन यो भुङ्क्ते योऽपः पिबति वा द्विजः । सुरापानेन तुल्यं स्यादित्येवं मनुरब्रवीत्। भुञ्जानो दक्षिणं बाहुं न संयुञ्ज्यात्। कदाचन उद्धृत्य वामहस्तेन तृषार्तः सलिलं पिबेत् । वामेनैव पिबेत्तोयं भोजने पात्रमत्यजन्। त्यजन् पिबेत्तु रुधिरमत्यजन्नमृतं पिबेत् इति।

சங்கர்:- ப்ராம்ஹணன், குடித்து மீந்த ஜலத்தைப் பருகினாலும், இடது கையினால் பருகினாலும், மூன்றுநாள் வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். வ்யாஸர்:- ப்ராம்ஹணன் அறிவில்லாமல், கையிருக்கும் போது வாயினால் ஜலத்தைப் பருகினால் நாயின் பிறப்பை அடைவான். அத்ரி:- வாயினால் ஜலத்தைப் பருகக் கூடாது. நின்று கொண்டும், அஞ்ஜலியினாலும், இடதுகையினாலும், படுக்கையிலும், பிறர் கையினாலும்

பருகக் கூடாது. கையினாலும், நகத்தினாலும் தொடப்பட்ட ஜலத்தை ஒருகாலும் பருகக் கூடாது. அது ஸுராபானத்திற்குச் சமமென்று ஸ்வாயம்புவ மனு சொன்னார். எவன் இடது கையினால் புஜிக்கின்றானோ, அல்லது ஜலத்தைப் பருகுகின்றானோ, அது ஸுராபானத்திற்குச் சமமென்று மனு சொன்னார். சாப்பிடுகிறவன் வலது கையைச் சேர்க்கக் கூடாது. தாகமுள்ளவனால் இடது கையால் எடுத்து ஜலத்தைக் குடிக்க வேண்டும். போஜன காலத்தில், வலதுகையினால் போஜன பாத்ரத்தை விடாமல் பிடித்துக் கொண்டு, இடது கையினாலேயே ஜலத்தைப் பருகவேண்டும். போஜன பாத்ரத்தை விட்டுவிட்டு ஜலத்தைப் பருகுகின்றவன் ரக்தபானம் செய்பவனாவான். விடாமற் பருகுகின்றவன் அம்ருதபானம் செய்பவனாவான்.

यमः— न हस्तेन पिबेत्तोयं भुक्तौ तु द्विजसत्तमः । अन्येन कांस्यपात्रेण पिबेदन्यैश्च साधनैः इति ।। हस्तेन - दक्षिणेन । भुक्तिग्रहणात् अन्यत्र पाणिना पाने न दोषः । अञ्जलिना तन्निषेधात् ।। तथा च याज्ञवल्क्यः — जलं पिबेन्नाञ्जलिना शयानं न प्रबोधयेत् । नाक्षैः क्रीडेन्न धर्मघ्नैर्व्याधितैर्वा न संविशेत् इति ।। शाण्डिल्योऽपि – पिबेद्भोजनपात्रेण पाणिना वा न भोजने । प्रभूतं न पिबेत्तोयं नापिबन्नशनं चरेत् ।। पीत्वाऽवशिष्टं चषके पुनस्तन्न पिबेत् जलम् इति ।

யமன்:- போஜன காலத்தில், ப்ராம்ஹணன் வலதுகையினால் ஜலத்தைப் பருகக் கூடாது. இடது கையினால் வெண்கலப்பாத்ரம் அல்லது வேறு ஸாதனங்களால் குடிக்க வேண்டும். இங்கு 'போஜன காலத்தில்' என்றிருப்பதால், மற்றக் காலத்தில் கையினால் பானம் செய்வதில் தோஷமில்லை. அஞ்ஜலியினால் குடிப்பதை நிஷேதிப்பதால். அவ்விதமே, **யாக்ஞவல்க்யர்:-** அஞ்சலியினால் ஜலத்தைக் குடிக்கக் கூடாது. தூங்குகின்றவனை எழுப்பக் கூடாது. சூதாடக்

கூடாது. தர்மத்தைக் கெடுக்கும் வ்யாபாரங்களால் விளையாடக் கூடாது. வ்யாதியுள்ளவர்களுடன் சேர்ந்து படுக்கக் கூடாது. சாண்டில்யரும்:- போஜனகாலத்தில், போஜன பாத்ரத்தாலாவது, கையினுலாவது பருகக் கூடாது. அதிகமாய் ஜலத்தைப் பருகக் கூடாது. ஜலத்தைப் பருகாமலே புஜிக்கவும் கூடாது. பானபாத்ரத்தில் குடித்து மீந்த ஜலத்தை மறுபடி குடிக்கக் கூடாது.

व्यासः—पानीयानि पिबेद्येन तत्पात्रं द्विजसत्तम। अनुच्छिष्टं भवेत्तावद्यावद्भूमौ न निक्षिपेत्॥ पात्रशिष्टं तु यत्तोयं पाने पादावनेजने। भूमौ तदम्बु निःस्राव्य शिष्टं तत् पानमर्हति इति ॥ बृहस्पतिः – पर्णपृष्ठे न भुञ्जीया द्रात्रौ दीपं विना तथा इति ॥ कात्यायनः – नृणां भोजनकाले तु यदा दीपो विनश्यति। पाणिभ्यां पात्रमादाय भास्करं मनसा स्मरेत्॥ पुनश्च दीपितं कृत्वा तच्छेषं भोजयेन्नरः। पुनरन्नं न भोक्तव्यं भुक्त्वा पापैर्विलिप्यते इति।

வ்யாஸர்:- ஓ ப்ராம்ஹணோத்தம! எந்தப் பாத்ரத்தால் ஜலத்தைப் பருகுகின்றுனே, அந்தப் பாத்ரம், பூமியில் வைக்காத வரையில் உச்சிஷ்டமல்லாததாகும். பூமியில் வைக்கப்பட்டால் அது உச்சிஷ்டமாகும். பானத்திலோ, காலலம்புவதிலோ, பாத்ரத்தில் மீதியுள்ள ஜலத்தைப் (பருகவேண்டுமாஞல்) பூமியில் கொஞ்சம் விட்டு விட்டால், மீதியுள்ளது பானத்திற்கு அர்ஹமாகும். ப்ருஹஸ்பதி:- இலையின் பின்புறத்திலும், இரவில் தீபமில்லாமலும் புஜிக்கக் கூடாது. காத்யாயனர்:- மனிதர் புஜிக்கும்பொழுது தீபம் அணைந்து விட்டால், புஜிப்பவன் கைகளால் போஜன பாத்ரத்தை எடுத்துக் கொண்டு ஸூர்யனை மனதால் த்யானிக்க வேண்டும். மறுபடி தீபத்தை ப்ரகாசப்படுத்தி, மீதியுள்ளதைப் புஜிக்க வேண்டும். மறுபடி வேறு அன்னத்தை க்ரஹிக்கக் கூடாது. க்ரஹித்துப் புஜித்தால் பாபங்களுடன் சேருவான்.

शातातपः — हस्तदत्तानि चान्नानि प्रत्यक्षलवणं तथा । मृत्तिका भक्षणं चैव गोमांसाभ्यशनं स्मृतम् ।। लवणं व्यञ्जनं चैव घृतं तैलं तथैव च । लेह्यं पेयं च विविधं हस्तदत्तं न भक्षयेत् इति ।। यमः — हस्तदत्ता तु या भिक्षा लवणव्यञ्जनानि च । भोक्ता ह्यशुचितां याति दाता स्वर्गं न गच्छति ।। हस्तदत्तास्तु ये स्नेहा लवणव्यञ्जनानि च । दातारं नोपतिष्ठन्ति भोक्ता भुञ्जीत किल्बिषम् इति ।। अत्रिः — घृतं वा यदि वा तैलं ब्राह्मण्या नखनिःसृतम् । अभोज्यं तद्द्विजातीनां भुक्त्वा चान्द्रायणं चरेत् ।। यत्त्यक्तं भुवि तच्चान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ।

சாதாதபர்:- கையால் கொடுக்கப்பட்ட அன்னங்களும், நேராய்க் கொடுக்கப்பட்ட உப்பும், மண்ணைப் பக்ஷிப்பதும் கோமாம்ஸ பக்ஷணமெனச் சொல்லப்பட்டுள்ளது. லவணம், வ்யஞ்ஜனம், நெய், எண்ணெய், பலவிதமான லேஹ்யம், பேயம் இவைகள் கையினுல் கொடுக்கப்பட்டால் அவைகளைப் பக்ஷிக்கக் கூடாது. யமன்:- கையால் கொடுக்கப்பட்ட பிக்ஷான்னம், லவணம், வ்யஞ்ஜனம் இவைகளைப் புஜிப்பவன் அசுத்தனுகிறுன். கொடுத்தவன் ஸ்வர்க்கத்தை அடைவதில்லை. கையால் கொடுக்கப்பட்ட நெய் முதலியவை, உப்பு, வ்யஞ்ஜனங்கள் இவை பரலோகத்தில் கொடுத்தவனை அடைவதில்லை. புஜித்தவனும் பாபத்தைப் புஜிக்கிறுன். அத்ரி:- நெய் அல்லது எண்ணெய் இவை ப்ராம்ஹண ஸ்த்ரீயின் கை நகங்களால் தொடப்பட்டிருந்தால் அவை ப்ராம்ஹணருக்குப் புஜிக்கத்தகாதது. புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். பூமியில் தள்ளப்பட்ட அன்னத்தைப் புஜித்தாலும் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

मनुः — वीर्यहानिर्यशोहानिः प्रज्ञाहानिस्तथैव च । भवेत्तस्मात्ततो रात्रौ धात्रीं यत्नेन वर्जयेत् ।। धानाः खादेन्न च दिवा दधिसक्तूंस्तथा निशि । सर्वं च तिलसंबन्धं नाद्यादस्तमयं प्रति ।।

तिक्तार्द्रकदधिश्राणातिलशाकानि निश्यदन्। त्यज्यते रूपवाक् श्रीभिः पुष्पितस्त्री रताद्यथा इति ।। स्मृत्यन्तरे — आमलक्याः फलं चैव जम्बीरं तिन्त्रिणीफलम्। प्रज्ञाप्रतापलक्ष्मीवान् सदैतद्वर्जयेन्निशि ।। नालिकेरोदकं कांस्ये ताम्रपात्रस्थितं मधु । ताम्रपात्रस्थितं गव्यं मद्यतुल्यं घृतं विना ।। अपि प्रस्थानसमये रात्रौ दधि न भक्षयेत्। मधुपर्कप्रदानं तु वर्जयित्वा विशेषतः इति।

மனு:- *ராத்ரியில் நெல்லிக் கனியைப் புஜிப்பவனுக்கு, வீர்யம், யசஸ், புத்தி இவைகள் குறையும். ஆகையால் எவ்விதத்தாலும் அதை ராத்ரியில் வர்ஜிக்க வேண்டும். பகலில் முட்டைப் பொரிகளையும், இரவில் தயிர், நெல்வறுத்தமாவு இவைகளையும் புஜிக்கக் கூடாது. எள்ளுடன் கூடிய எந்த வஸ்துவையும் அஸ்தமயத்திற்குப் பிறகு புஜிக்கக் கூடாது. குங்கிலியம், இஞ்சி, தயிர், கஞ்சி, எள்ளு, சாகம் இவைகளை இரவில் புஜிப்பவன், ரூபம், வாக்கு, லக்ஷ்மீ இவைகளால் விடப்படுவான், ரஜஸ்வலாஸ்த்ரீ ஸங்கத்தாற் போல்.* **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** *நெல்லிக்கனி, எலுமிச்சையின் பழம், புளி இவைகளை, புத்தி, ப்ரதாபம், லக்ஷ்மீ இவைகளை விரும்புகின்றவன் ராத்ரியில் வர்ஜிக்க வேண்டும். வெண்கலப் பாத்ரத்திலுள்ள இளநீரும், தாம்ர பாத்ரத்திலுள்ள தேனும், தாம்ர பாத்ரத்திலுள்ள நெய் தவிர பால், தயிர், மோர் இவையும் மத்யத்திற்குச் சமமாகும். புறப்படும் ஸமயத்திலும், ராத்ரியிலும் தயிரைக் குடிக்கக் கூடாது. மதுபர்க்க ப்ரதானத்தில் நிஷேதமில்லை.*

शातातपः — रात्रौ धानादधिसक्तून् श्रेयस्कामो विवर्जयेत्। भोजनं तिलसम्बन्धं स्नानं चैव विशेषतः इति ।। वृद्धहारीतः – सकांस्यं नालिकेराम्बु कांस्ये च रसमैक्षवम् । ताम्रपात्रयुतं गव्यं क्षीरं च लवणान्वितम् ।। घृतं लवणसंयुक्तं सुराकल्पं विवर्जयेत्। प्रत्यक्षलवणं नाद्यात् पक्वं परगृहागतम् इति ।। प्रत्यक्षलवणं चतुर्ग्राह्यमेव दत्तं नाद्यम्।

ओदनाद्यन्तर्हितं दत्तमदनीयमित्यर्थः ॥

சாதாதபர்:- நன்மையை விரும்பியவன், ராத்ரியில், முட்டைப் பொரி, தயிர், வறுத்த நெல்லின்மாவு, எள்ளின் ஸம்பந்தமுள்ள போஜனம், ஸ்நானம் இவைகளை அவச்யம் வர்ஜிக்க வேண்டும். வ்ருத்தஹாரீதர்:- வெண்கலப் பாத்ரத்திலுள்ள இளநீர், கரும்புச்சாறு இவைகளும், தாம்ர பாத்ரத்திலுள்ள கவ்யமும், (பால் முதலியது) உப்புடன் கூடிய பாலும், நெய்யும் ஸுரைக்கு ஸமமாகும். அவைகளை வர்ஜிக்க வேண்டும். ப்ரத்யக்ஷ லவணத்தையும், பிறர் க்ருஹத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பக்வான்னத்தையும் புஜிக்கக் கூடாது. ப்ரத்யக்ஷ லவணம், கண்ணிற்குத் தெரியும் படி கொடுக்கப்பட்டால் புஜிக்கத்தகாதது. அன்னம் முதலியதால் மறைத்துக் கொடுக்கப்பட்டால் புஜிக்கத்தகுந்தது என்பது பொருள்.

भक्ष्याण्याह भृगुः— भेदैस्तु कारवल्ल्यादि सर्वं ग्राह्यमितीरितम् । कन्दं पिण्डीकृतं चैव क्षुद्रकन्दं तथैव च ॥ महाकन्दादिकं कन्दमाहरेत विचक्षणः । सहकारप्रभेदं च तथैव पनसद्वयम् ॥ कदल्यादिषु भेदं च गृह्णीयात्तु प्रयत्नतः । कूश्माण्डोर्वारुकं चैव सिंही व्याघ्री तथैव च ॥ कार्कोटकादि सङ्ग्राह्यं कलञ्जादीनि वर्जयेत् ॥ इति ।

புஜிக்கத் தகுந்தவைகளைச் சொல்லுகிறார், ப்ருகு:- பாகலின் பேதங்கள் எல்லாம் புஜிக்கத் தகுந்தவை. உருண்டையான கிழங்கு, சிறு கிழங்கு, பெருங்கிழங்கு, மாவின் வகைகள், பலாவின் இரண்டு வகை, வாழையின் எல்லா வகையும், பூசனி, வெள்ளரி, கண்டங்கத்தரி, அதன் பேதம், கக்கரி இவைகள் புஜிக்கத் தகுந்தவை. கஞ்சா முதலியதை வர்ஜிக்க வேண்டும்.

मरीचिः—कदली चूत पनस नालिकेर तिन्त्रिणी कारवल्लीव्याघ्री शिम्बभेद बृहतीभेद सिंही व्याघ्रनखी कर्कन्धूर्वारुक

कूश्माण्डकार्कोटकादि सूरणकन्द क्षुद्रकन्द महाकन्द वल्लीकन्द शृङ्गिबेरोत्पलकन्द पिण्डीकृत शकुटकन्दानि च मरीचिसर्षपाणु-मुद्गाढक कुलत्थ तिल्वमाष मसूरकादीनि शाकेषु जीवन्ती झरस रक्तबाष्पाणि चान्यानि भक्ष्याणि यथालाभमाहरेत् इति।

மரீசி:- வாழை, மா, பலா, தென்னை, புளி, பாகல், கண்டங்கத்திரி, அவரையின் வகை, கண்டங்கத்திரியின் வகை, கத்திரியின் பேதம், புலியுகிர், இலந்தை, வெள்ளரி, பூசனி, தும்மட்டி, கரணைக் கிழங்கு, சிறுகிழங்கு, பெருங்கிழங்கு, கொடிக்கிழங்கு, இஞ்சி, நெய்தல் கிழங்கு, உருண்டைக் கிழங்கு, சகுட்டக் கிழங்கு, மிளகு, கடுகு, பயறு, பச்சைப்பயறு, துவரை, கொள்ளு, சாமை, உளுந்து, காட்டுப்பயறு இவைகள் போஜ்யங்களாம். சாகங்களுள், சிறுபாலை, சரஸம் என்று கீரை, கருஞ்சீரகம் இதுபோன்ற கீரைகளும் பக்ஷ்யங்களாகும். கிடைத்ததை உபயோகிக்கலாம்.

स एव — तुम्बीदलं च भार्ङ्गीं च शिबुमुद्गदलानि च। शाकिनीं शतपर्वाण मभ्रं चाश्वासनन्दिनीम्॥ अगस्त्यं शकुटं शाकं विहितं ब्राह्मणस्य च। एकमूलानि चान्यानि गृह्णीयादनिषेधितान् इति।

மரீசியே:- சுரையின் இலை, கண்டப்பரங்கி, அவரை, நரிப்பயறு, சாகினீ, கொத்துமல்லி, முத்தக்காசு, ஞாணல், கடுக்காய், அகத்திக்கீரை, வஞ்சி இவை ப்ராம்ஹணனுக்கு விஹிதமாம். ஒரே வேருள்ளதான மற்றவையும் நிஷேதமில்லாவிடில் க்ரஹிக்கத் தகுந்தவேயாம்.

बोधायनः— आम्रं च शृङ्गिबेरं च कर्करीफलमेव च। नालिकेरफलं चाभ्रं कपित्थं बदरीफलम्॥ द्राक्षा राजादनं जम्बूफलं ताटकमप्यथ। खर्जूरं वेत्रकं चैव मातुलुङ्गं च डाडिमम्॥ फलान्येतानि पक्वानि कालपक्वानि चाहरेत्। आजकं जीरकं चैव मरीचं सर्षपं तथा॥

राजमाषं महामाषं श्यामाकं कृष्णमाषकम् । माषं मुद्गं महामुद्गं निष्पावं तिलतिल्वकौ ।। कालाय मुद्गनिष्पावशिम्ब माषकुलुत्थकाः । सयूषा वा वियूषा वा पचनीया गुणान्विताः ।। धान्यानामपि सर्वेषां कृष्णधान्यं विवर्जयेत् । अथवाऽन्यदलब्धं चेच्छुद्धं तदपि चाहरेत् ।। माहिषं क्षीरमाजं च गव्यं भक्ष्यं विनिर्दिशेत् । अमेध्येषु च ये वृक्षा उप्ताः पुष्पफलोपगाः ।। तेषामपि न दुष्यन्ति पुष्पाणि च फलानि च । गौळी भाञ्जी च मत्स्याक्षी मुद्गशिम्बाभ्रतुम्बिकाः ।। निर्लतोपोदकी चैव कारञ्जालर्कशाकिनी । मण्डूकपर्णी जीवन्ती कुबेराक्षी च पिप्पली ।। आगस्ती वैष्णवी शाकी विष्णुभक्तिविवर्धनी इति ।

போதாயனர்:- மா, இஞ்சி, கக்கரி, தென்னை, முத்தக்காசு, விளா, இலந்தை, த்ராக்ஷை, முரளஞ்செடி, நாவல், கொடிக்கீரை, பேரீச்சை, பிரம்பு, புளிமாதுளை, மாதுளை இவைகளின் பழங்களையும் உபயோகிக்கலாம். ஆட்டுளுந்து, ஜீரகம், மிளகு, கடுகு, மொச்சை, பெரிய உளுந்து, தினை, கருமொச்சை, உளுந்து, பயறு, பெரும்பயறு, தட்டைப்பயறு, எள்ளு, வெள்ளலொத்தி, கறுப்புத் தட்டைப்பயறு, அவரை, கொள்ளு இவைகளைத் தோலுடனுவது, தோலில்லாமலாவது சமைக்கலாம். எல்லாத் தான்யங்களிலும் கறுப்புத் தான்யத்தை வர்ஜிக்க வேண்டும். வேறு தான்யம் கிடைக்காவிடில், சுத்தமான க்ருஷ்ண தான்யத்தையும் க்ரஹிக்கலாம். எருமை, வெள்ளாடு, பசு இவைகளின் பாலை உபயோகிக்கலாம். புஷ்பங்களுடனும், பலங்களுடனும் கூடிய வ்ருக்ஷங்கள் அசுத்த ஸ்தலத்தில் முளைத்திருந்தாலும், அவைகளின் புஷ்பங்களும், பழங்களும் தோஷமுள்ளவைகளல்ல. இலந்தை, கண்டப்பரங்கி, பொன்னுங்காணி, பயறு, அவரை, முத்தக்காசு, சுரை, நாவற்புல், நீர்ப்பசலை, நாரத்தை, தூதுவளை, கீரை, வல்லாரை, சிவந்தி, சீந்தில், கழற்சி, திப்பிலி, அகத்தி இவை உபயோகிக்கத் தக்கவையாம். அகத்தி என்பது விஷ்ணுவினுடையதாம். விஷ்ணு பக்தியை விருத்தி செய்வதாகும்.

व्यासः — धात्रीफलं सदा यस्तु भक्षयेदप्रमादतः । तस्य नारायणो देवः परमात्मा प्रसीदति इति ।। पुराणे – अतसी तुलसी चैव धात्रीफलमथाच्युतम् । यस्योदरे प्रवर्तन्ते तस्य सन्निहितो हरिः इति ।। चन्द्रिकायाम् – भक्ष्यं भोज्यं च लेह्यं च नमो नारायणेति यः । अभिमन्त्र्य स्पृशन् भुङ्क्ते स याति परमां गतिम् इति ।। श्रुतिः — विष्णुनाऽत्तमश्नन्ति विष्णुना पीतं पिबन्ति विष्णुना घ्रातं जिघ्रन्ति इति ।।

வ்யாஸர்:- எவன் எப்பொழுதும் நெல்லிக்கனியைக் கவனமாய்ப் பக்ஷிக்கின்றானோ அவனுக்குப் பரமாத்மாவாகிய நாராயணன் பிரஸன்னனாய் ஆகிறான். புராணத்தில்:- அதஸி (அகத்தி), துளஸி, நெல்லிக்கனி, சுண்டைக்காய் இவை எவன் வயிற்றில் இருக்கின்றனவோ அவனுக்கு 'ஹரி' ஸமீபத்தில் இருக்கின்றார். சந்த்ரிகையில்:- எவன், பக்ஷ்யம், போஜ்யம், லேஹ்யம் இவைகளைத் தொட்டு, 'நமோ நாராயணாய' என்று அபிமந்த்ரித்துப் புஜிக்கின்றானோ அவன் சிறந்த கதியை அடைகின்றான். ச்ருதி:- விஷ்ணுவினால் புஜிக்கப்பட்டதைப் புஜிக்கின்றனர், விஷ்ணுவினால் பருகப்பட்டதைப் பருகுகின்றனர், விஷ்ணுவினால் முகரப்பட்டதை முகர்கின்றனர்.

शाण्डिल्यः—वासोभूषणमाल्यादि गन्धं तैलं तथौषधम् । सर्वं भगवते दत्वा उपयुञ्ज्यान्निवेदितम् इति ।। जाबालशाखायां श्रूयते – रुद्रेणात्तमश्नन्ति रुद्रेण पीतं पिबन्ति रुद्रेणाघ्रातं जिघ्रन्ति इति ।। कठश्रुतावपि — त्रिगुप्सातमश्नीयाद्यदि पाप्मन् शिवानर्पितं भुंक्ष्व तदैनो भुंक्ष्व मलं भुंक्ष्व विषं भुंक्ष्व कृमिं भुंक्ष्वाघं भुंक्ष्वाधो गच्छ गच्छ इति ।। अस्यार्थः – त्रिगुः = त्रिणेत्रः । तेन प्सातं भक्षितमश्नीयात् । हे पाप्मन् ! शिवानर्पितं यदि भुंक्ष्व - अश्नीयाः, तदा एनः - पातकम् । अघम् - उपपातकम् । तच्छिवानर्पितभोजने भवति इति ।।

சாண்டில்யர்:- வஸ்த்ரம், ஆபரணம், மாலை முதலியவை, கந்தம், தைலம், ஒளஷதம் என்று எதையும் பகவானுக்குக் கொடுத்து நிவேதிதமாய் உள்ளதைத்தான் உபயோகிக்க வேண்டும். ஜாபாலசாகையில் சொல்லப் படுகிறது:- ருத்ரனால் புஜிக்கப்பட்டதைப் புஜிக்கின்றனர். ருத்ரனால் பருகப்பட்டதைப் பருகுகின்றனர். ருத்ரனால் முகரப்பட்டதை முகர்கின்றனர். கடச்ருதியிலும்:- முக்கண்ணனால் பக்ஷிக்கப்பட்டதையே பக்ஷிக்க வேண்டும். ஓ! பாபியே! சிவனுக்குக் கொடுக்கப் படாததைப் புஜித்தால் அப்பொழுது உபபாதகத்தைப் புஜிப்பாய், மலத்தைப் புஜிப்பாய், விஷத்தைப் புஜிப்பாய், புழுவைப் புஜிப்பாய், பாபத்தைப் புஜிப்பாய், கீழே செல்வாய். சிவனுக்கு அர்ப்பிதம் இல்லாததைப் புஜித்தால் உபபாதகம் உண்டாகும் என்பதாம்.

व्यासः—देवासुरनरैः स्थाप्य लिङ्गे चण्डाय शम्भुना । दत्तस्तस्मै न सर्वत्र प्रसादः शिवशासनात् ।। नाश्नीयात् स्थावरे लिङ्गे चण्डाय विनिवेदितम् इति ।। आदित्यपुराणे – लिङ्गे स्वायम्भुवे बाणे रत्नजे रौप्यनिर्मिते । सिद्धप्रतिष्ठिते लिङ्गे चण्डभागो न विद्यते इति ।। पाद्मे – बाणलिङ्गे स्वयम्भूते चन्द्रकान्ते हृदि स्थिते । चान्द्रायणसमं ज्ञेयं शम्भोर्निर्माल्यभक्षणम् इति ।

வ்யாஸர்:- தேவர், அஸுரர், மனிதர் இவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கத்தில் சண்டேச்வரனுக்குப் பாகம் ஈச்வரனால் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிலும் பாகமில்லை. ஈசன் ஆக்ஞையினால். ஸ்தாவர லிங்கத்தில் சண்டேச்வரனுக்கு நிவேதனம் செய்யப்பட்டதைப் புஜிக்கக் கூடாது. ஆதித்ய புராணத்தில்:- ஸ்வாயம்புவமான லிங்கத்திலும், பாணலிங்கத்திலும், ரத்னலிங்கத்திலும், ரஜதலிங்கத்திலும், ஸித்தரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்திலும் சண்டேச்வரனுக்குப் பாகமில்லை. பாத்மத்தில்:- பாணலிங்கத்திலும், ஸ்வயம் பூதமான லிங்கத்திலும்,

சந்த்ரகாந்த லிங்கத்திலும், ஹ்ருதயத்திலுள்ள லிங்கத்திலும், சிவநிர்மால்யத்தைப் பக்ஷிப்பது சாந்த்ராயணத்திற்கு ஸமமென்று அறியப்பட வேண்டும்.

एतत् सर्वं वैदिकमार्गपूजित गृहदेवता निर्माल्यविषयम्। स्वस्य देवस्य यद् दत्तं चरुकं तु न संशयः। तत् प्राशयेत् स्वयं प्राज्ञो नैवान्यस्मै प्रदापयेत् इति वचनात् ॥ चरुकं - हविः । अन्यस्मै - पुत्रादिभ्योऽन्यस्मै।

இது முழுவதும் வேதமார்க்கத்தால் பூஜிக்கப்பட்ட க்ருஹ தேவதையின் நிர்மால்யத்தைப் பற்றியது. "தனது தேவனுக்கு எந்த ஹவிஸ் கொடுக்கப்பட்டதோ அதை, அறிந்தவன் தானே புஜிக்க வேண்டும், பிறனுக்குக் கொடுக்கக் கூடாது" என்ற வசனத்தினால், பிறருக்கு என்பது புத்ரன் முதலியவரைத் தவிர்த்து மற்றவனுக்கு என்பது பொருள்.

तथा च पाद्मे – ततः स्वयं तु भुञ्जीत शुद्धं पुत्रादिभिः सह। निवेदितं च देवाय तच्छेषं चात्मशुद्धये इति ॥ गृहदेवताव्यतिरिक्तदेवतानिवेदितभक्षणं निषेधति दत्तात्रेयः — निर्माल्यं भक्षयित्वैवमुच्छिष्टमगुरोरपि । मासं पयोव्रतो भूत्वा जपन्नष्टाक्षरं सदा ॥ ब्रह्मकूर्चं ततः पीत्वा शुद्धो भवति मानवः ॥ निर्माल्यं नैव संरक्षेत् कूपे सर्वं च निक्षिपेत्। स्वीकुर्याद्यदि तन्मोहा द्रौरवे नरके पतेत् ॥ मक्षिकापा(त)दमात्रं तु निर्माल्यं न स्पृशेत् क्वचित् ॥ यदि स्पृशेत् स मोहाद्वै नरकेषु निमज्जति इति ॥ सङ्ग्रहेऽपि— निर्माल्यं च निवेद्यं च भुक्त्वा चान्द्रायणं चरेत् इति।

பாத்மத்தில்:- *பிறகு தேவனுக்கு நிவேதிதமும், சுத்தமும், சேஷமுமான அன்னத்தைத் தனது சுத்திக்காகப் புத்ரன் முதலியவருடன் புஜிக்க வேண்டும். க்ருஹ தேவதையைத் தவிர்த்து மற்றத் தேவதைக்கு நிவேதித மான அன்னத்தைப் பக்ஷிப்பதை நிஷேதிக்கின்றார்*

தத்தாத்ரேயர்:- நிர்மால்யத்தைப் பக்ஷித்தாலும், குருவல்லாத மற்றவனின் உச்சிஷ்டத்தைப் புஜித்தாலும், ஒரு மாதம் பாலையே பருகி வ்ரதமுடையவனாய், எப்பொழுதும் அஷ்டாக்ஷர மந்த்ரத்தை ஜபித்து, பிறகு ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்ய ப்ராசனம் செய்தால் மனிதன் சுத்தனாகிறான். நிர்மால்யத்தை ஸம்ரக்ஷித்து வைக்கக் கூடாது. எல்லாவற்றையும் கிணற்றில் போடவேண்டும். ஈயின் கால் அளவுள்ளதாயினும் நிர்மால்யத்தை ஒருகாலும் தொடக்கூடாது. அறியாமையால் தொடுவானாகில் ரௌரவமெனும் நரகத்தில் விழுவான். ஸங்க்ரஹத்திலும்:- நிர்மால்யத்தையும், நைவேத்யத்தையும், புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

यत्तु पुराणवचनम् — प्रापणेन महाविष्णोः वैश्वदेवं करोति यः । प्राणाग्निहवनं चैव तेन लोका जितास्त्रयः इति तत् तान्त्रिकविषयम् । अत एव महाभारते — पाञ्चरात्रविदो मुख्यास्तस्य गेहे महात्मनः । प्रापणं भगवद्भुक्तं भुञ्जते चाग्रभोजनम् ।। प्राणाग्निहोत्रं यच्चान्यत् सर्वं कुर्वन्ति तेन तु इति ।। पार्वणश्राद्धे शिष्टभोजनमाह मनुः— एवं निर्वपणं कृत्वा पिण्डांस्तांस्तदनन्तरम् । प्रक्षाल्य हस्तावाचम्य ज्ञातिप्रायं प्रकल्पयेत् ।। ज्ञातिभ्यः सत्कृतं दत्वा बान्धवानपि भोजयेत् इति ।। ज्ञाति प्रायं - ज्ञातिबाहुल्यम् । प्रकल्पयेत् - ज्ञातीन् सङ्घातयेदित्यर्थः । बान्धवान् - सम्बन्ध्यादीन् ।

புராணவசனம்:- "விஷ்ணுவின் நைவேத்யத்தால் எவன் வைச்வதேவத்தையும், ப்ராணாக்னி ஹோமத்தையும் செய்கின்றானோ அவனால் மூன்று உலகங்களும் ஜயிக்கப்பட்டதாய் ஆகின்றன" என்றிருக்கிறதே எனில், அது தாந்த்ரிகரைப் பற்றியதாம். ஆகையால்தான். மஹாபாரதத்தில்:- "அந்த மஹாத்மாவின் க்ருஹத்தில் பாஞ்சாராத்ரமறிந்த முக்யர்கள் பகவானுக்கு நிவேதிதமான அன்னத்தைப் புஜிக்கின்றனர், ப்ராணாக்னிஹோத்ரத்தையும்

அதனுலேயே செய்கின்றனர், மற்ற எல்லாவற்றையும் அதனுலேயே செய்கின்றனர்'' என்றுள்ளது. பார்வண ச்ராத்தத்தில் சேஷபோஜனத்தைச் சொல்லுகிருர், மனு:- இவ்விதம் பிண்டதானம் செய்து (அந்தப் பிண்டங்களைப் பசு, ப்ராம்ஹணன், ஆடு, அக்னி இவருள் ஒருவருக்குக் கொடுக்க வேண்டும். அல்லது ஜலத்தில் போடவேண்டும்.) பிறகு கைகளை அலம்பி, ஆசமனம் செய்து சேஷமான அன்னத்தை ஜ்ஞாதிகளை ஆதரவுடன் புஜிப்பிக்க வேண்டும். மற்ற ஸம்பந்தி முதலிய பந்துக்களையும் புஜிப்பிக்க வேண்டும்.

चन्द्रिकायाम् – एवं देवान् पितॄंश्चैव तर्पयित्वा द्विजोत्तमः। पुत्रमित्रादिसहितो गृहस्थो भोक्तुमर्हति इति ।। आदित्यपुराणेऽपि — भगिन्यो बान्धवाः पूज्याः श्राद्धेऽपि च सदैव हि। दारिद्र्योपहता दीनाश्छिन्नाङ्गाश्चाधिकाङ्गुलिः ।। वृथाजाता विरेकाश्च व्याधिभारप्रपीडिताः। एते भोजनमर्हन्ति भोक्तुः सर्वत्र सर्वदा ।। वन्दिमागधसूताश्च तौर्यत्रिकविदस्तथा। अलब्धलाभाः श्राद्धेषु नाशयन्ति महद्यशः ।। तस्मात्तेऽपि विभक्तव्याः स्वकलत्रं विभज्य च इति।

சந்த்ரிகையில்:- க்ருஹஸ்தனை ப்ராம்ஹணன் இவ்விதம் தேவர்களையும், பித்ருக்களையும் த்ருப்தி செய்வித்து, புத்ர மித்ராதிகளுடன் கூடியவனுய்ப் போஜனம் செய்ய வேண்டும். ஆதித்ய புராணத்திலும்:- பகினிகளும், பாந்தவர்களும், ச்ராத்தத்திலும், எப்பொழுதும் பூஜிக்கத் தகுந்தவராவர். தரித்ரர்கள், அங்கமிழந்தவர்கள், அதிக விரலுடையவன், வீணுய்ப் பிறந்தவர், விரேகர்கள், அதிக வ்யாதியுள்ளவர் இவர்கள் எவ்விடத்திலும், எக்காலத்திலும், க்ருஹஸ்தன் வீட்டில் போஜனத்திற்கு அர்ஹர்களாகின்றனர். வந்திகள், மாகதர்கள், ஸூதர்கள், ந்ருத்தம், கீதம், வாத்யமிவைகளை அறிந்தவர்கள் ச்ராத்தத்தில் அன்னத்தை அடையாவிடில்,

பெரும் புகழைக் கெடுப்பார்கள். ஆகையால் அவர்களுக்கும் அன்னத்தைக் கொடுக்க வேண்டும். தன்களத்ரத்திற்குக் கொடுத்த பிறகு.

अत्राहुः — नवश्राद्धेषु यच्छिष्टं गृहे पर्युषितं च यत् । दम्पत्योर्भुक्तशेषं च न भुञ्जीत कदाचन इति विज्ञानेश्वरेण नवश्राद्धशेषस्यैवाभ्योज्यत्वप्रतिपादनात्, आपस्तम्बेन च नचातद्गुणायोच्छिष्टं प्रयच्छेत्, नचातद्गुणायोच्छिष्टं दद्युः इति श्राद्धविशेषेऽपि निमन्त्रित विसदृशगुणेभ्य एव पितृशेषदाननिषेधात्, इष्टैः सह भुज्यताम् इतीष्टानां च शिष्टान्नभोजनानुज्ञानात्, 'शेषं चैवानुमान्य च' 'प्रदक्षिणीकृत्य शेषमनुज्ञाप्य', 'अनुज्ञातो गृह्यान् बालवृद्धांश्च परितोष्य भुञ्जीते'ति याज्ञवल्क्यबोधायनादिभि रभ्यनुज्ञापनविधानात्, मन्वादिवचनेषु तथा दर्शनाच्च, 'एकोद्दिष्टे च यद्भोक्तुरभोज्यं शिष्टभोजनम् । चन्द्रसूर्योपरागे च शिष्टमन्नं विवर्जयेत् इति विशेष निषेधाच्च, स्त्रीशूद्रानुपनीतानां श्राद्धोच्छिष्टं न दापयेत् । यो दद्याद्रागसंमोहात् न तद्गच्छति वै पितॄनित्यादेर्भुक्तिपात्र स्थोच्छिष्टविषयत्वात्, पितृशेषभोजने न दोषः इति ।

இது விஷயத்தில் சிலர் இவ்விதம் சொல்லுகின்றனர்:- "நவச்ராத்தத்தில் மீந்ததையும், வீட்டில் பழையதான அன்னத்தையும், தம்பதிகள் புஜித்து மீந்த அன்னத்தையும் ஒருகாலும் புஜிக்கக் கூடாது என்று விஜ்ஞானேச்வரரால், நவச்ராத்த சேஷத்திற்கே அபோஜ்யத்வம் சொல்லப் பட்டிருப்பதாலும், ஆபஸ்தம்பரால், ச்ராத்தத்தில் நிமந்த்ரிதரான ப்ராம்ஹணர்களுக்குச் சமமான குணமில்லாதவருக்கே உச்சிஷ்டத்தைக் கொடுக்கக் கூடாதென்று பித்ருசேஷதானம் நிஷேதிக்கப் பட்டிருப்பதாலும், 'இஷ்டர்களுடன் புஜிக்கப்படலாம்' என்று இஷ்டர்களுக்கும் சேஷான்ன போஜனம் உத்தரவிடப்பட்டிருப்பதாலும், 'ப்ரதக்ஷிணம் செய்து

சேஷான்னத்திற்கு அனுக்ஞை பெற்று, 'அனுக்ஞை பெற்றவனாய் க்ருஹத்தில் உள்ளவரையும், பாலரையும், வ்ருத்தரையும் ஸந்தோஷிப்பித்துப் பிறகு புஜிக்க வேண்டும்' என்று, யாக்ஞவல்க்யர், போதாயனர் முதலியவர்களால் அனுக்ஞை செய்விப்பது விதிக்கப் பட்டிருப்பதாலும், மன்வாதிகளின் வசனங்களில் அவ்விதம் காணப்படுவதாலும், 'ஏகோத்திஷ்டத்தில் புஜித்தவனின் சேஷான்னம் அபோஜ்யம், சந்த்ர ஸூர்யோபராகத்தில் மீதியான அன்னத்தையும் வர்ஜிக்க வேண்டும், என்று விசேஷ நிஷேதம் இருப்பதாலும், 'ஸ்த்ரீ, சூத்ரன், அனுபநீதன் இவர்களுக்கு ச்ராத்தோச்சிஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது, ராகத்தாலாவது மோஹத்தாலாவது கொடுத்தால் அந்த ச்ராத்தம் பித்ருக்களைச் சேருவதில்லை' என்பது முதலிய வசனங்கள் போஜன பாத்ரத்திலுள்ள உச்சிஷ்டத்தைப் பற்றியதாலும் பித்ரு சேஷ போஜனத்தில் தோஷமில்லை'' என்று.

अन्ये त्वाहुः — श्राद्धीयमन्नं पितृभुक्तशेषं ये भुञ्जते ते नरकानशेषान् । प्रयान्ति कर्ता पितरश्च सर्वे भुञ्जीत कर्ता सह तत्सपिण्डैः । श्राद्धशेषं तु यो भुङ्क्ते तत्कर्ता ज्ञातिभिर्विना । तस्य वैवस्वतो भोक्तुर्मलं प्राशयते पितॄन् इत्यादिना सपिण्डव्यतिरक्तानां निषेधात्, न पार्वणेष्वन्येषां पितृशेषं भोज्यमिति । इति भक्ष्याभक्ष्यविवेकः ।

மற்றும் சிலர் இவ்விதம் சொல்லுகின்றனர்:- 'பித்ருக்கள் புஜித்து மீந்த ச்ராத்தான்னத்தை எவர் புஜிக்கின்றனரோ அவரும் கர்த்தாவும், பித்ருக்க ளெல்லோரும் எல்லா நரகங்களையுமடைகின்றனர். ஆகையால் அந்தச் சேஷான்னத்தை, கர்த்தா ஸபிண்டர்களுடன் புஜிக்க வேண்டும்' என்றும், 'ச்ராத்த சேஷான்னத்தைக் கர்த்தாவையும், அவன் க்ஞாதிகளையும் தவிர்த்த மற்றவன் புஜித்தால், அவன் மலத்தைப் யமன்

பித்ருக்களைச் சாப்பிடச் செய்கிறான் என்பது முதலியதால் ஸபிண்டர்களைத் தவிர மற்றவர்க்கு நிஷேதமிருப்பதால், பார்வண ச்ராத்தத்தில் பிறருக்குப் பித்ரு சேஷம் புஜிக்கத் தகுந்ததல்ல' என்று.

भोज्याभोज्यान्नानि ।

अथ भोज्याभोज्यान्नानि । तत्रापस्तम्बः — द्वावेवाश्रमिणौ भोज्यौ ब्रह्मचारी गृही तथा । मुनेरन्नं न भोज्यं स्यात् सर्वेषां लिङ्गिनां तथा । लिङ्गिनः - पाशुपतादयः । यद्यन्नं यतिपात्रस्थं यतिना प्रेषितं च यत् । अन्नत्रयं न भोक्तव्यं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ।। प्रजापतिः– श्रद्धधानस्य भोक्तव्यं चोरस्यापि विशेषतः । न त्वेव बहुयाज्यस्य यश्चोपनयते बहून् ।। अवलिप्तस्य मूर्खस्य दुष्टवृत्तस्य दुर्मतेः । अन्नमश्रद्दधानस्य यो भुङ्क्ते भ्रूणहा स वै इति ।

புஜிக்கத் தகுந்ததும், தகாததுமான அன்னங்கள்

இனி புஜிக்கத் தகுந்தவையும், தகாதவையுமான அன்னங்கள் சொல்லப்படுகின்றன, அதில், ஆபஸ்தம்பர் :- ப்ரம்ஹசாரீ, க்ருஹஸ்தன் என்கிற இரண்டு ஆச்ரமிகளின் அன்னத்தை மட்டில் புஜிக்கலாம். வானப்ரஸ்தனின் அன்னமும், எல்லா லிங்கிகளுடையவும் அன்னமும் புஜிக்கத்தகாததாகும். லிங்கிகள் = பாசுபதர் முதலியவர். யதியின் அன்னமும், யதியின் பாத்ரத்திலுள்ள அன்னமும், யதியால் அனுப்பப்பட்ட அன்னமும் இம்மூன்று அன்னமும் புஜிக்கத்தகாதது. புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ப்ரஜாபதி:- திருடனாயினும் ச்ரத்தையுள்ளவனின் அன்னம் போஜ்யமாகும். அநேகருக்கு யாஜகன், அநேகருக்கு உபநயனம் செய்கின்றவன், கர்வமுடையவன், மூர்க்கன், கெட்ட நடத்தையுள்ளவன், துர்ப்புத்தி யுள்ளவன், ச்ரத்தையில்லாதவன் இவர்களின் அன்னம் போஜ்யமல்ல. புஜித்தவன் கர்ப்பஹத்யை செய்தவனாவான். ப்ரூணம் = கர்ப்பம்.

श्रोत्रियस्य कदर्यस्य वदान्यस्य च वार्धुषेः । मीमांसित्वोभयं देवाः सममन्नमकल्पयन् ।। तान् प्रजापतिराहैत्य मा कृध्वं विषमं समम् । श्रद्धापूतं वदान्यस्य हतमश्रद्धयेतरत् ।। श्रद्धयेष्टं च पूतं च नित्यं कुर्यादतन्द्रितः । श्रद्धाकृते ह्यक्षये ते भवतः स्वागतैर्धनैः इति ।। कदर्यः - लुब्धः । आत्मानं धर्मकृत्यं च पुत्रदारांश्च पीडयेत् । लोभाद्यः पितरौ भृत्यान् स कदर्य इति स्मृतः इत्युक्तेः । वार्धुषिः - निषिद्धवृद्ध्युपजीवी, आत्मस्तुतिपरनिन्दाकर्ता च । द्विजो निषिद्धया वृद्ध्या जीवन् वार्धुषिकः स्मृतः ।। यस्तु निन्देत् परगुणान्प्रशंसत्यात्मनो गुणान् । स वै वार्धुषिको नाम हव्यकव्येषु गर्हितः इति विष्णुस्मरणात् ।

மனு:- *ச்ரோத்ரியனை கதர்யன், வதான்யனை (தானசீலன்) வார்த்துஷி, என்ற இவ்விருவரின் குணதோஷங்களை விசாரித்துத் தேவர்கள், இவ்விருவரின் அன்னமும் ஸமம் என்று நிச்சயித்தனர். அந்தத் தேவர்களிடம் வந்து ப்ரம்ஹதேவர் சொன்னார். "பேதமுள்ள இவ்விரண்டையும் ஸமமாகச் செய்யாதீர்கள். (ஏனெனில்) வதான்யனை வார்த்துஷியின் அன்னம் ச்ரத்தையால் சுத்தமாகியது. க்ருபணனை ச்ரோத்ரியனின் அன்னம் ச்ரத்தையில்லாததால் துஷ்டமாகியது" என்று இஷ்டத்தையும் (யாகம் முதலியதையும்) பூர்த்தத்தையும், (குளம்வெட்டுவது முதலியதையும்) சோம்பலில்லாதவனாய் எப்பொழுதும் ச்ரத்தையுடன் செய்ய வேண்டும். ந்யாயத்தால் ஸம்பாதிக்கப்பட்ட தனங்களால் ச்ரத்தையுடன் இஷ்டாபூர்த்தங்களைச் செய்ய வேண்டும். அவ்விதம் செய்யப்பட்டால் அவை அக்ஷயபலமுள்ளவைகளாய் ஆகும். கதர்யன் - உலோபி. 'எவன் உலோபத்தால், தன்னையும், தர்ம கார்யத்தையும், புத்ரர்களையும், பத்னியையும், மாதா பிதாக்களையும், ப்ருத்யர்களையும் பீடிக்கின்றானோ அவன் கதர்யன் என்று சொல்லப்படுகிறான்' என்று சொல்லப்பட்டவன்.*

வார்த்துஷி - நிஷித்தவ்ருத்தியால் (வட்டியால்) ஜீவிப்பவனும், தன்னை ஸ்துதித்துப் பிறனை நிந்திப்பவனும். ''நிஷித்தமான வட்டியினால் ஜீவிக்கும் ப்ராம்ஹணன் 'வார்த்துஷி' எனப்படுவான். எவன் பிறரின் குணங்களை நிந்திக்கின்றானோ, தனது குணங்களைப் புகழ்கின்றானோ அவன் 'வார்த்துஷிகன்' எனப்படுவான். அவன் ஹவ்யங்களிலும் கவ்யங்களிலும் அர்ஹனாகான்'' என்று விஷ்ணுஸ்ம்ருதி உள்ளது.

आपस्तम्बः — क आश्यान्नो य ईप्सेदिति कण्वः पुण्य इति कौत्सः यः कश्चिद् दद्यादिति वार्ष्यायणिर्यदिह रजः स्थावरं पुरुषे भोक्तव्यमथ चेच्चलं दानेन निर्दोषो भवति, पुण्यस्येप्सतो भोक्तव्यं पुण्यस्याप्यनीप्सतो न भोक्तव्यम् इति ॥ गौतमः – प्रशस्तानां स्वकर्मसु द्विजातीनां ब्राह्मणो भुञ्जीत इति ॥ पराशरः – क्षत्रियश्चापि वैश्यश्च क्रियावन्तौ शुचिव्रतौ । तद्गृहेषु द्विजैर्भोज्यं हव्यकव्येषु नित्यशः इति ।

ஆபஸ்தம்பர்:- எவனின் அன்னத்தைப் புஜிக்கலாம்? எவன் ப்ரார்த்திக்கின்றானோ அவனின் அன்னத்தைப் புஜிக்கலாம். ப்ரதிஷித்தனைத் தவிர்த்து, என்பது கண்வரின் மதம். தபஸ், ஹோமம், ஜபம், ஸ்வதர்மம் இவைகளுடன் கூடியவன் புண்யன். அவன் ப்ரார்த்திக்காவிடினும் அவனின் அன்னம் போஜ்யம் என்பது கௌத்ஸரின் மதம். புண்யனாயினும், அபுண்யனாயினும் எவன் எப்பொழுதும் தானசீலனாயுள்ளவனோ அவனின் அன்னம் போஜ்யம் என்கிறார் வார்ஷ்யாயணி. பாபமானது, கர்த்தாவி னிடத்தில் ஸ்திரமாகவேயுள்ளது, அனுபவமில்லாமல் க்ஷயிப்பதில்லை என்றால், அப்பொழுது, அவனிடமிருந்து ப்ரதிக்ரஹித்தாலும் புஜித்தவனிடத்தில் தாதாவின் பாபம் ஸங்க்ரமிக்காதாகையால் புஜிக்கலாம். அல்லது, பாபம் சலம், உபயோகமில்லாவிடினும் க்ஷயிக்குமென்றால், அப்பொழுது, எப்போதும் தானசீலனாய் இருப்பவ

னிடத்தில் முஹூர்த்த காலங்கூடப் பாபம் இருப்பதிற்கில்லை என்பதால் நிர்த்தோஷனான அவனின் அன்னத்தைப் புஜிப்பவனுக்குத் தோஷமேது? 'புண்யனும், கொடுப்பதற்கு விரும்பியவனுமுள்ளவனின் அன்னம் போஜ்யமாகும். புண்யனானாலும் கொடுக்க விரும்பாதவனின் அன்னம் அபோஜ்யம்' என்பது ஆபஸ்தம்பரின் மதமாம். கௌதமர்:- ஸ்வகர்மானுஷ்டானத்தால் சிறந்த ப்ராம்ஹணர்களின் அன்னத்தை ப்ராம்ஹணன் புஜிக்க வேண்டும். பராசரர்:- க்ஷத்ரியன், வைச்யன் இவர்கள், ஸ்வகர்மத்தைச் செய்பவராய், சுத்தமான நியமமுடையவர்களாகில், அவர் க்ருஹங்களில் ப்ராம்ஹணர்கள் எப்பொழுதும் ஹவ்யகவ்யங்களில் புஜிக்கலாம்.

स्मृतिरत्ने — ब्राह्मणस्य सदाऽश्नीयात् क्षत्रियस्य तु पर्वसु । उत्सवेषु च वैश्यस्य शूद्रस्य न कदाचन इति । मनुः – नाश्रोत्रियतते यज्ञे ग्रामयाजहुते तथा । स्त्रिया क्लीबेन च हुते भुञ्जीत ब्राह्मणः क्वचित् ।। अश्रीकमेतत् साधूनां यत्र जुह्वत्यमी हविः । प्रतीपमेतद्देवानां तस्मात् तु परिवर्जयेत् ।। ग्रामयाजः - बहूनां याजकः । एतद्भोजनं साधूनां अश्रीकं - अमङ्गलम् । प्रतीपं - प्रतिकूलमित्यर्थः ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ப்ராம்ஹணனின் க்ருஹத்தில் எப்பொழுதும் புஜிக்கலாம். க்ஷத்ரியன் க்ருஹத்தில் பர்வகாலங்களிலும், வைச்யன் க்ருஹத்தில் உத்ஸவங்களிலும் புஜிக்கலாம். சூத்ரன் க்ருஹத்தில் ஒருகாலும் புஜிக்கக் கூடாது. மனு:- அச்ரோத்ரியனால் வ்யாபிக்கப்பட்ட யாகத்திலும், க்ராம யாஜகன் ஹோமம் செய்தவிடத்திலும், ஸ்த்ரீயினாலும், நபும்ஸகனாலும் ஹோமம் செய்யப்பட்டவிடத்திலும், ப்ராம்ஹணன் ஒருகாலும் புஜிக்கக் கூடாது. இவர்கள் எந்தக் கர்மத்தில் ஹவிஸ்ஸை ஹோமம் செய்கின்றனரோ அது, ஸாதுக்களுக்கு அமங்களமாயும், தேவர்களுக்கு ப்ரதிகூலமாயுமுள்ளது. ஆகையால் அவர்களால் ஹோமம் செய்விப்பதை வர்ஜிக்க வேண்டும்.

स एव—मत्तक्रुद्धातुराणां च न भुञ्जीत कदाचन । गणान्नं गणिकान्नं च विदुषां यत् जुगुप्सितम् ॥ स्तेनगायकयोश्चान्नं तक्ष्णो वार्धुषिकस्य च । दीक्षितस्य कदर्यस्य बद्धस्य निगलेन च ॥ अभिशस्तस्य षण्डस्य पुंश्चल्या डाम्भिकस्य च । चिकित्सकस्य मृगयोः क्रूरस्योच्छिष्ट भोजिनः ॥ उग्रान्नं सूतिकान्नं च पर्याचान्तमनिर्दशम् । अनिर्दशं सूतिकान्नमित्यन्वयः । अनर्चितं वृथामांसमवीरायाश्च योषितः । द्विषदन्नं नगर्यन्नं पतितान्नमवक्षुतम् ॥ अनर्चितम् = अवज्ञया दत्तम् । अवीरायाः - पतिपुत्रहीनायाः । नगर्यन्नमिति देशसम्बन्धेनास्य निषेधः । पिशुनानृतिनोश्चान्नं क्रतुविक्रयिणस्तथा ।

மனுவே:- திமிருள்ளவன், கோபமுள்ளவன், வ்யாதியுள்ளவன் இவர்களின் அன்னத்தை ஒருகாலும் புஜிக்கக் கூடாது. அஸாது ப்ராம்ஹணக் கூட்டத்தின் அன்னம். வேச்யையின் அன்னம், வித்வான்களால் நிந்திக்கப்பட்ட அன்னம், திருடன், பாட்டிஞல் ஜீவிப்பவன், தச்சன் வ்ருத்தியால் ஜீவிப்பவன், வட்டியால் ஜீவிப்பவன், தீக்ஷிதன், க்ருபணன், விலங்கிடப் பட்டவன், மஹாபாதகியென்று ஜனங்களால் சொல்லப் பட்டவன், நபும்ஸகன், வ்யபிசாரிணீ, தாம்பிகன் (கபடமாய்த் தர்மம் செய்பவன்), சிகித்ஸையால் ஜீவிப்பவன், மாம்ஸ விக்ரயத்திற்காக மான் முதலியதைக் கொல்பவன், குடிலஸ்பாவமுள்ளவன், நிஷித்தமான உச்சிஷ்டத்தைப் புஜிப்பவன், பயங்கரமான கார்யம் செய்பவன் இவர்களின் அன்னத்தைப் புஜிக்கலாகாது. ஸூதிகையை உத்தேசித்துச் செய்யப்பட்ட அன்னம், பர்யாசாந்தமான அன்னம், (பலர் புஜிக்கும் பங்க்தியில் ஒருவன் மட்டில் நடுவில் ஆசமனம் செய்து எழுந்தால் அந்தப் பங்க்தியிலுள்ளவரின் அன்னம் பர்யாசாந்தம்) பத்து நாளைக்குள் ஸூதிகையின் அன்னம், அநாதரவுடன்

கொடுக்கப்பட்ட அன்னம், தேவதோத்தேசமில்லாமல் சமைக்கப்பட்ட மாம்ஸம், கணவனும் புத்ரனுமில்லாத ஸ்த்ரீயின் அன்னம், சத்ருவின் அன்னம், நகரியின் அன்னம், பதிதனின் அன்னம், தும்மலினுல் தூஷிக்கப்பட்ட அன்னம், கோட்சொல்பவன், பொய்ஸாக்ஷ்யம் சொல்பவன் இவரின் அன்னம், யாகபலத்தை விற்பவனின் அன்னம், இவை கூடாது.

शैलूषतुन्नवायान्नं कृतघ्नस्यान्नमेव च ।। शैलूषः - नटः । कर्मारस्य निषादस्य रङ्गावतारकस्य च । श्ववतां शौण्डिकानां च चेलनिर्णेजकस्य च ।। कर्मारः - अयस्कारः । श्ववतां - श्वपोषकाणाम् । शौण्डिकानां - सुराविक्रयिणाम् । चेलनिर्णेजकस्य - वस्त्रशोधकस्य । सुवर्णकर्तुर्वेनस्य शस्त्रविक्रयिणस्तथा । रञ्जकस्य नृशंसस्य यस्य चोपपतिर्गृहे ।। वैदेहकेनाम्बष्ठ्यामुत्पन्नो वेनः । रञ्जकस्य - वस्त्रादीनां नीलादिरागकारस्य । नृशंसस्य - निर्दयस्य । यस्य गृहे उपपतिः - जारो वर्तते, तस्य चान्नं न भुञ्जीतेत्यर्थः ।। मृष्यन्ति ये चोपपतिं स्त्रीजितानां च सर्वशः । अनिर्दशं च प्रेतान्नमतुष्टिकरमेव च ।

தையற்காரன், நன்றி செய்தவனுக்கு அபகாரம் செய்பவன் இவர்களின் அன்னம், கர்மாரன் (கொல்லன்) நிஷாதன், நாட்யக்காரன், நாயை வளப்பவர்கள், கள்ளே விற்பவர்கள், வஸ்த்ரங்களே வெளுப்பவன், தட்டான், வேனன் என்றவன், ஆயுதங்களே விற்பவன், வஸ்த்ரங்களுக்குச் சாயம் போடுகின்றவன், தயையில்லாதவன், எவன் க்ருஹத்தில் ஜாரன் இருக்கின்றுனே அவன் இவர்களின் அன்னத்தையும் புஜிக்கக் கூடாது. இங்கு 'வேனன்' என்ற பதத்திற்கு 'வைதேஹகன்' என்னும் ஸங்கீர்ண ஜாதீயனுக்கு, 'அம்பஷ்டீ' என்னும் ஸ்திரீயினிடத்தில் உண்டானவன் என்று பொருள். வீட்டிலிருக்கும் ஜாரனேப் பொறுத்துக் கொண்டிருப்பவர், எக்கார்யங்களிலும் ஸ்த்ரீ பரதந்த்ரர்களாயிருப்பவர், பத்து நாளாகாத ப்ரேதா

சௌசிகள் இவர்களின் அன்னமும், அஸந்துஷ்டிகரமான அன்னமும் புஜிக்கத் தகாதவையாகும்.

राजान्नं तेज आदत्ते शूद्रान्नं ब्रह्मवर्चसम्। आयुः सुवर्णकारान्नं यशश्चर्मावकृन्तिनः ॥ कारुकान्नं प्रजां हन्ति बलं निर्णेजकस्य च । कारुकान्नं - कर्मारान्नम्। गणान्नं गणिकान्नं च लोकेभ्यः परिकृन्तति ॥ पूयं चिकित्सकस्यान्नं पुंश्चल्यास्त्वन्नमिन्द्रियम्। विष्ठा वार्धुषिकस्यान्नं शस्त्रविक्रयिणो मलम् ॥ इन्द्रियं - रेतः ।

அரசனின் அன்னம் தேஜஸ்ஸை அபஹரிக்கும். சூத்ரனின் அன்னம் ப்ரம்ஹவர்ச்சஸத்தை அபஹரிக்கும். தட்டானின் அன்னம் ஆயுஸ்ஸை அபஹரிக்கும். தோல் தைப்பவனின் அன்னம் யசஸ்ஸை அபஹரிக்கும். கர்மாரனின் அன்னம் ப்ரஜையை அபஹரிக்கும். வஸ்த்ரத்தை வெளுப்பவனின் அன்னம் பலத்தை அபஹரிக்கும். கூட்டத்தின் அன்னமும், வேச்யையின் அன்னமும் புண்யலோகங்களினின்று பிரிக்கின்றது. வைச்யனின் அன்னம் சீழுக்குச் சமானம். வ்யபிசாரிணியின் அன்னம் ரேதஸ்ஸுக்குச் சமானம். வட்டியால் ஜீவிப்பனின் அன்னம் விஷ்டைக்குச் சமானம். ஆயுதம் விற்பவனின் அன்னம் கோழை முதலிய மலத்திற்குச் சமானம் - ஷை மலங்களைப் புஜிப்பதற்குச் சமமான தோஷமுண்டென்பதாம்.

य एतेऽन्ये त्वभोज्यान्नाः क्रमशः परिकीर्तिताः । तेषां त्वगस्थिरोमाणि वदन्त्यन्नं मनीषिणः ॥ भुक्त्वाऽतोऽन्यतमस्यान्न ममत्या तु त्र्यहं क्षिपेत्। मत्या भुक्त्वा चरेत् कृच्छ्रं रेतो विण्मूत्रमेव च। नाद्याच्छूद्रस्य पक्वान्नं विद्वानश्राद्धिनो द्विजः । आममेवाददीतास्मा दवृत्तावैकरात्रिकम् ॥ अत्र आमस्याभ्यनुज्ञानात् पूर्वोक्ते मत्तक्रुद्धादिषु पक्वामयोरुभयोरपि निषेधः ।

மற்றும் எவரின் அன்னம் அபோஜ்யமென்று க்ரமமாய் சொல்லப்பட்டதோ அவர்களின் அன்னம், அவரின் தோல், எலும்பு, ரோமம் என அறிந்தவர் சொல்லுகின்றனர். இவர்களுள் ஒருவனின் அன்னத்தை அறியாமல் புஜித்தால் மூன்று நாள் உபவாஸம் அனுஷ்டிக்க வேண்டும். அறிந்து புஜித்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரமனுஷ்டிக்க வேண்டும். ரேதஸ், விஷ்டை, மூத்ரம் இவைகளைப் புஜித்தாலும் இதே ப்ராயச்சித்தம். சாஸ்த்ரமறிந்த ப்ராம்ஹணன், ச்ராத்தம் பஞ்சயக்ஞம் முதலியதை அனுஷ்டிக்காத சூத்ரனின் பக்வான்னத்தைப் புஜிக்கக் கூடாது. வேறு அன்னம் கிடைக்காவிடில், ஒரு தினத்திற்கு மட்டில் போதுமான ஆமத்தையே இவனிடமிருந்து க்ரஹிக்கலாம். பக்வான்னத்தை க்ரஹிக்கக் கூடாது. இங்கு ஆமத்திற்கு அனுக்ஞை செய்ததால் முன் சொல்லப்பட்ட மத்தன், க்ருத்தன் (கோபமுடையவன்)ஷி முதலியவர் விஷயத்தில் பக்வம் ஆமம் (அபக்வம்) என்ற இரண்டிற்கும் நிஷேதம்.

याज्ञवल्क्यः – कदर्यबद्धचोराणां क्लीबरङ्गावतारिणाम् । वैणाभिशस्तवार्द्धुष्यगणिकागणदीक्षिणाम् ॥ वीणावादनजीवी, वेणुच्छेदजीवी च वैणः । गणदीक्षी - बहुयाजकः - अन्नं नाद्यादित्यनुवर्तते ॥ स एव— चिकित्सकातुरक्रुद्धपुंश्चली-मत्तविद्विषाम् । क्रूरोग्रपतितव्रात्यडाम्भिकोच्छिष्टभोजिनाम् ॥ क्रूरः - दृढाभ्यन्तरकोपः । उग्रः - वाक्कायव्यापारेणोद्वेजकः । अवीरस्त्री स्वर्णकारस्त्रीजितग्रामयाजिनाम् । शस्त्रविक्रयिकर्मारतुन्न वायश्व-वृत्तिनाम् ॥ ग्रामयाजी - ग्रामस्य शान्त्यादिकर्ता । बहूनां वोपनेता । नृशंसराजरजककृतघ्नवधजीविनाम् । चेलधाव सुराजीव सहोपपतिवेश्मनाम् ॥ पिशुनानृतिनोश्चैव तथा चाक्रिकवन्दिनाम् । एषामन्नं न भोक्तव्यं सोमविक्रयिणस्तथा इति ॥ चाक्रिकः - तैलिकः । द्विजाना मेतेषामन्नं न भोक्तव्यम् । शूद्रस्य प्राप्त्यभावात् ।

யாக்ஞவல்க்யர்:- கதர்யன், விலங்கு முதலியதால் கட்டப்பட்டவன், திருடன், நபும்ஸகன், நடன் முதலியவர், வைணன் (வீணையால் ஜீவிப்பவனும், மூங்கில் வெட்டி ஜீவிப்பவனும்) அபிசஸ்தன் (பதநீய கர்மங்களுடையவன்) வார்த்யுஷ்யன் (வட்டியால் ஜீவிப்பவன்) வேச்யை, கணதீக்ஷீ (பலருக்கு யாஜனம் செய்பவன்) இவர்களின் அன்னத்தைப் புஜிக்கக் கூடாது. யாக்ஞவல்க்யரே:- வைத்யன், மஹாரோகமுடையவன், கோபமுடையவன், வ்யபிசாரிணீ, கர்வமுடையவன், சத்ரு, மனதினுள் த்ருடமான கோபமுடையவன், உக்ரன் (வாக்கு, தேஹம் இவைகளின் செயலால் வருத்துகிறவன்) பதிதன், வ்ராத்யன் (காயத்ரீ இல்லாதவன்) டாம்பிகன், (வஞ்சகன்) பிறரின் உச்சிஷ்டத்தைப் புஜிப்பவன், அவீரஸ்த்ரீ, (ஸ்வதந்த்ரமாயுள்ளவள், அல்லது பதி புத்ரரில்லாதவள்) தட்டான், ஸ்த்ரீக்கு வசமாயுள்ளவன், க்ராமயாஜீ, (க்ராம சாந்தி முதலியதைச் செய்பவன், அல்லது அநேகருக்கு உபநயனம் செய்பவன்) ஆயுதங்களை விற்பவன், கர்மாரன் (தச்சன், கொல்லன் முதலியவர்) தையற்காரன், நாய்களால் பிழைப்பவன், தயையற்றவன், அரசன், (புரோஹிதனும்) சாயமிடுபவன், உபகாரத்தை மறந்தவன், ப்ராணிவதத்தால் ஜீவிப்பவன், துணிகளை வெளுப்பவன், மத்யத்தை விற்பவன், ஜாரனுடன் கூடிய க்ருஹத்திலுள்ளவன், கோட் சொல்பவன், பொய் சொல்பவன், சாக்ரிகன் (எண்ணெய் வ்யாபாரீ, அல்லது வண்டியால் பிழைப்பவன்) ஸ்துதிபாடகன், ஸோமலதையை விற்பவன் என்ற இரு பிறப்பாளரான இவர்களின் அன்னம் புஜிக்கத்தகாததாம். சூத்ரனுக்கு ப்ராப்தி இல்லை.

सङ्ग्रहे — त्यजेदनुपनीतान्नमन्धस्य पतितस्य च । वेदाध्ययनहीनस्य कन्याविक्रयिणस्तथा ॥ दरिद्रस्य च मूर्खस्य यतिनिन्दापरस्य च । अयाज्ययाजकस्यान्नं निर्मर्यादस्य कर्षिणः । देवद्रोहपरस्यान्नं तथा विज्ञानदूषिणः । दग्धाङ्गस्यायसैर्दिव्यैः

सोमविक्रयिणस्तथा इति।

ஸங்க்ரஹத்தில்:- உபநயனமில்லாதவன், குருடன், பதிதன், வேதாத்யயனமற்றவன், பெண்ணை விற்பவன், தரித்ரன், மூர்க்கன், யதிநிந்தையை அதிகமாய்ச் செய்பவன், அனர்ஹருக்கு யாஜனம் செய்பவன், மர்யாதையில்லாதவன், க்ருஷி செய்பவன், தேவத்ரோகத்தையே எப்பொழுதும் செய்பவன். சாஸ்த்ரங்களைத் தூஷிப்பவன், தேவ ஸம்பந்தமான இரும்பு ஆயுதங்களால் தேஹத்தைச் சூடிட்டுக் கொண்டவன், ஸோமத்தை விற்பவன் இவர்களின் அன்னத்தைப் புஜிக்கக் கூடாது.

यमः - चक्रोपजीवी गान्धर्वः कितवस्तस्करस्तथा। ध्वजी दारोपजीवी च शूद्राध्यापकयाजकौ ॥ कुलालश्चित्रकर्मा च वार्धुषिश्चर्मविक्रयी। अभोज्यान्ना इमे षण्डमार्जारा वाखुकुक्कुटौ ॥ पतिताश्चापविद्धाश्च चण्डाला अधमाश्च ये ॥ न जुहोत्युचिते काले न स्नाति न ददाति च। पितृदेवार्चनाद्धीनः स षण्डः परिकीर्तितः ॥ डम्भार्थं जपते यश्च तप्यते च तपस्तथा। न परत्रार्थ इत्युक्तः स मार्जारः प्रकीर्तितः ॥ विभवे सति नैवार्थं ददाति न जुहोति च। तमाहुराखुं तस्यान्नं भुक्त्वा कृच्छ्रेण शुध्यति ॥ सभागतानां यः सभ्यः पक्षपातं समाचरेत् ॥ तमाहुः कुक्कुटं देवास्तस्याप्यन्नं विगर्हितम्। स्वधर्मं यः समुत्सृज्य परधर्मं समाचरेत्। अनापदि तु विद्वद्भिः पतितः परिकीर्त्यते। देवत्यागी पितृत्यागी गुरूणामप्यपूजकः। गोब्राह्मणस्त्रीवधकृदपविद्धः प्रकीर्तितः ॥ आशाकरस्त्वदाता च दातुश्च प्रतिषेधकः। शरणागतं यस्त्यजति स चण्डालः प्रकीर्तितः इति।

யமன்:- சக்ரத்தால் ஜீவிப்பவன், பாடகன், சூதாடுபவன், திருடன், ஸ்ராகாரன், பத்னியால் பிழைப்பவன், சூத்ராத்யாபகன், சூத்ரயாஜகன், குயவன்,

சித்ரகாரன், வட்டியால் ஜீவிப்பவன், தோல் விற்பவன், ஷண்டன், மார்ஜாரன், ஆகு, குக்குடன், பதிதன், அபவித்தன், சண்டாளன், அதமன் (தாழ்ந்தவன்) இவர்களின் அன்னத்தைப் புஜிக்கக் கூடாது. விஹிதமான காலத்தில், ஹோமம், ஸ்நானம், தானம், பித்ரு தேவபூஜை இவைகளைச் செய்யாதவன் 'ஷண்டன்' எனப்படுகிறான். எவன் டம்பத்திற்காக ஜபம், தபஸ் இவைகளைச் செய்கின்றானோ, பரகதிக்காகச் செய்யவில்லையோ அவன் 'மார்ஜாரன்' (பூனை) எனப்படுகிறான். எவன் விபவமிருந்தும், தானம், ஹோமம் இவைகளைச் செய்வதில்லையோ அவனை 'ஆகு' (எலி) என்பார்கள். அவன் அன்னத்தைப் புஜிப்பவன் ஒரு க்ருச்ரத்தால் சுத்தனாவான். எவன் ஸபைக்குத் தலைவனாயிருந்து, ஸபையிலுள்ளவர்களுக்குப் பக்ஷபாதம் செய்வானோ, அவனை 'குக்குடன்' (கோழி) என்று தேவர்கள் சொல்லுகின்றனர். அவனுடைய அன்னமும் அபோஜ்யமாம். எவன் ஆபத்தில்லாத காலத்திலும், ஸ்வதர்மத்தை விட்டுப் பரதர்மத்தைச் செய்கின்றானோ, அவன் வித்வான்களால் 'பதிதன்' எனச் சொல்லப்படுகிறான். எவன் தேவர்களை விட்டு, மாதா பிதாக்களையும் விட்டு, குருக்களையும் பூஜிக்காதவனாய், பசு, ப்ராம்ஹணன், ஸ்த்ரீ இவர்களை வதம் செய்தவனோ, அவன் 'அபவித்தன்' என்று சொல்லப்படுகிறான். ஆசையை மட்டில் தூண்டி கொடாதவனும், கொடுப்பவனைத் தடுப்பவனும், சரணமடைந்தவனைக் காப்பாற்றாமல் விடுகிறவனும், 'சண்டாளன்' என்று சொல்லப்பட்டவன். இவர்களின் அன்னம் அபோஜ்யமாம்.

स्मृतिरत्ने — अवलिप्तस्य मूर्खस्य दुष्टवृत्तस्य दुर्मतेः । अन्नमश्रद्दधानस्य यो भुङ्क्ते भ्रूणहा स वै इति ॥ अपरार्के — विभवे चाग्निहीनस्य न चाश्नीयादनापदि । स्मार्ताग्नेः वैदिकस्याग्नेः परिग्रहमकुर्वतः । विष्णुं जामातरं मन्ये तस्य मन्युं न कारयेत् ।

अप्रजायां तु कन्यायां नाश्नीयात्तस्य वै गृहे ।। भुञ्जीत यदि मोहात्मा श्वशुरो नरकं व्रजेत् इति ।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- கர்மவமுடையவன், மூர்க்கன், கெட்ட நடத்தையுள்ளவன், துர்ப்புத்தியுள்ளவன், ச்ரத்தையில்லாதவன் இவரின் அன்னத்தைப் புஜிப்பவன் கர்ப்பஹத்யையைச் செய்தவன் எனப்படுகிறுன். அபரார்க்கத்தில்:- விபவமிருந்தும், அக்னியில்லாமல், ஸ்மார்த்தாக்னி, அல்லது வைதிகாக்னியைப் பரிக்ரஹிக்காமல் இருப்பவனின் அன்னத்தை, ஆபத்தில்லாத காலத்தில் புஜிக்கக் கூடாது. ஜாமாதாவை (மாப்பிள்ளையை) விஷ்ணுவாய் எண்ணுகிறேன். அவனுக்குக் கோபத்தைச் செய்யக் கூடாது. தன் பெண், குழந்தையில்லாமல் இருந்தால், அந்த மாப்பிள்ளையின் வீட்டில் மாமனுர் புஜிக்கக் கூடாது. அறியாதவனுய்ப் புஜித்தாஞுகில் மாமனுர் நரகத்தை அடைவான்.

आपस्तम्बः — त्रयाणां वर्णानां क्षत्रियप्रभृतीनां समावृत्तेन न भोक्तव्यं, प्रकृत्या ब्राह्मणस्य भोक्तव्यम्, कारणादभोज्यं यत्राप्रायश्चित्तं कर्मासेवते प्रायश्चित्तवति चरितनिर्वेषस्य भोक्तव्यं सर्ववर्णानां स्वधर्मे वर्तमानानां भोक्तव्यं शूद्रवर्जमित्येके इति ।। अस्यार्थः – समावृत्तः क्षत्रियादीनां गृहे न भुञ्जीत । ब्राह्मणस्य त्वन्नं स्वभावेनैव भोक्तव्यम् । यत्र - यदा प्रायश्चित्तवत्यात्मनि चोदितं प्रायश्चित्तं मुक्त्वा कर्मान्तरमासेवते, तदैतस्मात् कारणादभोज्यम् । चरितनिर्वेषस्य - कृतप्रायश्चित्तस्य तु भोक्तव्यम् । एतन्महापातक-व्यतिरिक्तप्रायश्चित्तविषयम् । नास्यास्मिन् लोके प्रत्यापत्तिर्विद्यते कल्मषं तु निर्हण्यते इति स्मरणात् । शूद्रवर्जितानां सर्ववर्णानां अन्नं भोज्यमित्येके मन्यन्ते इति ।

ஆபஸ்தம்பர்:- ஸமாவர்த்தனம் செய்த ப்ராம்ஹணன், க்ஷத்ரியன் முதலிய மூன்று வர்ணத்தாரின்

க்ருஹத்தில் புஜிக்கக் கூடாது. ப்ராம்ஹணனுடைய அன்னம் ஸ்பாவத்தாலேயே புஜிக்கத் தகுந்ததாகும். காரணமிருந்தால் அபோஜ்யம். எக்காலத்தில், தான் ப்ராயச்சித்திற்கு அர்ஹனுயிருக்க, அதைச் செய்யாமல் விட்டு, வேறு கர்மத்தைச் செய்கின்றுனோ அப்பொழுது இக்காரணத்தால், அவனது அன்னம் அபோஜ்யம். அவன் ப்ராயச்சித்தம் செய்து கொண்டால் பிறகு அவனது அன்னம் போஜ்யம். இது மஹாபாதகம் தவிர மற்றப் பாபத்தின் விஷயம். (ஏனெனில்) 'மஹாபாதகிக்கு ப்ராயச்சித்தம் அனுஷ்டித்த பிறகும் இவ்வுலகில் சுத்தி இல்லை. பாபம் மட்டில் நசிக்கின்றது' என்றுள்ளது. 'சூத்ரன் தவிர, ஸ்வதர்மத்திலிருக்கும் எல்லா வர்ணத்தினருடையவும் அன்னம் புஜிக்கத் தகுந்தது' என்று சிலர் எண்ணுகின்றனர்.

स एव —— सङ्घान्नमभोज्यं परिक्रुष्टं च सर्वेषां च शिल्पाजीवानां ये च शस्त्रमाजीवन्ति ये चाधिं भिषग्वार्धुषिको दीक्षितोऽक्रीतराजकोऽग्नीषोमसंस्थायामेव हुतायां वा वपायां दीक्षितस्य भोक्तव्यं यज्ञार्थे वा निर्दिष्टे शेषाद्भुञ्जीरन्निति हि ब्राह्मणं क्लीबो राज्ञां प्रैषकरोऽहविर्याजी चार्यविधिना च प्रव्रजितो यश्चाग्नी-नपास्यति यश्च सर्वान् वर्जयते सर्वान्नी च श्रोत्रियो निराकृतिर्वृषलीपतिर्मत्त उन्मत्तो बद्धोऽणिकः प्रत्युपविष्टो यश्च प्रत्युपवेशयते तावन्तं कालम् इति। अभिचारादौ अहविषा रुधिरादिना यो जुहोति, सोऽहविर्याजी। चारी - चारः। अविधिना प्रव्रजितः - शाक्यादिः यश्च सर्वान् भोजने वर्जयति, यश्च सर्वेषामन्नं भुङ्क्ते, तावप्यभोज्यान्नौ। निराकृतिः - निस्स्वाध्यायः। अणिकः - पुत्रात् श्रुतग्राही। प्रत्युपविष्टः - ऋणादिना कारणेन अधमर्णादिकं निरुध्य तत्पार्श्वे उपविष्टः। तस्य परिहारमकुर्वन् तेन सहासीनः प्रत्युपवेशयिता। एते मत्तादयः यावन्मदाद्यनुवृत्तिः तावन्तं कालमभोज्यान्नाः इत्यर्थः॥

ஆபஸ்தம்பரே:- கூட்டத்தின் அன்னம் அபோஜ்யம். பரிக்ருஷ்டமும் (சாப்பிட விரும்பியவர் வாருங்கள் என்று கூவி அழைத்துக் கொடுக்கப்படும் அன்னம்) அபோஜ்யம், சித்ரம் எழுதுவது முதலிய சில்பத்தால் ஜீவிப்பவரின் அன்னமும், ஆயுதத்தால் ஜீவிப்பவரின் அன்னமும், வீட்டில் பிறரை வஸிக்கச் செய்து அவரிடமிருந்து தனத்தை க்ரஹித்து ஜீவிப்பவரின் அன்னமும், வைத்யனின் அன்னமும், வட்டியால் பிழைப்பவனின் அன்னமும் அபோஜ்யமாம். தீக்ஷணீயேஷ்டி செய்த பிறகு ஸோமக்ரயணம் செய்வதற்கு முன் தீக்ஷிதனின் அன்னம் அபோஜ்யம். அக்னீஷோமீய பசுயாகம் ஆனபிறகுதான் புஜிக்கலாமென்று மற்றொரு பக்ஷம். அக்னீஷோமீய பசுவின் வபாஹோமம் செய்த பிறகு புஜிக்கலாமென்று மற்றொரு பக்ஷம். இது யாகத்திற்காக என்று பிரித்துவிட்டால், மீதியுள்ளதிலிருந்து புஜிக்கலாம் என்று வேதம் சொல்லுகிறது. நபும்ஸகன், அரசரின் வேலைக்காரன், அஹவிர்யாஜீ (மனுஷ்ய ரக்தம் முதலியதால் அபிசாராதிகளில் ஹோமம் செய்பவன்) சாரன் (வேவுகாரன்) சாக்யன் (விதியில்லாமல் ஸன்யாஸி யானவன்) முதலியவன், விதியில்லாமல் அக்னிகளை விட்டவன், எவன் ச்ரோத்ரியனாயினும் எல்லோரையும் வர்ஜிக்கின்றானோ, ஒரிடத்திலும் புஜிப்பதில்லையோ, அவன், எவன் ச்ரோத்ரியனாயினும் எல்லோருடைய அன்னத்தையும் புஜிக்கின்றானோ அவன், வேதாத்யயனம் இல்லாதவன், வ்ருஷளீபதி (நான்கு வர்ணத்திலும் விவாஹம் செய்து கொண்டவனுக்கு முதல் மூன்று வர்ண ஸ்த்ரீகளும் இறந்து, சூத்ரவர்ண ஸ்த்ரீ மட்டில் பிழைத்திருந்தால் அவன் வ்ருஷளீபதியாம்) இவர்களின் அன்னம் அபோஜ்யமாம். மத்யம் முதலியதால் மதித்தவன், ப்ராந்தசித்தன், விலங்கிடப்பட்டவன், புத்ரனிடமிருந்து சாஸ்த்ரத்தைக் கற்றவன், ப்ரத்யுபவிஷ்டன், (கடன்காரனை மறித்து அவன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவன்) அவ்விதம் உட்காரச் செய்த கடன்

வாங்கியவன், இவர்களின் அன்னம் அபோஜ்யமாம். இந்த மத்தன் முதலியவர் மதம் முதலியது உள்ள காலம் வரையில் அபோஜ்யான்னர்கள். பிறகு அவர்களின் அன்னம் போஜ்யமாகும். இங்கு 'அணிகன்' என்ற பதத்திற்குக் கடன் கொடுத்தவன் என்று சிலர் பொருள் சொல்லுகின்றனர்.

स एव— चिकित्सकस्य मृगयोः शल्यकृन्तस्य पाशिनः । कुलटायाः षण्डकस्य च तेषामन्नमनाद्यमथाप्युदाहरन्ति - अन्नादे भ्रूणहा मार्ष्टि अनेना अभिशंसति । स्तेनः प्रमुक्तो राजनि याचन्ननृतसङ्करे इति ।। भ्रूणहा स्वीयं पापमन्नादे मार्ष्टि - लिम्पति । अनेनाः - निष्पापः मिथ्यावादिनि मार्ष्टि - याचन् असत्यप्रतिज्ञे मार्ष्टि इत्यर्थः ।

ஆபஸ்தம்பரே:- வைத்யன், வேடன், சஸ்த்ரத்தால் கட்டி முதலியதைச் சேதிப்பவன், வலையன், வ்யபிசாரிணீ, நபும்ஸகன் இவர்களின் அன்னம் அபோஜ்யமாகும். முன்ேனோர் இவ்விதம் சொல்லுகின்றனர். - ஆறு அங்கங்களுடன் கூடிய வேதத்தைக் கற்றவன் 'ப்ரூணன்' அவனைக் கொன்றவன் 'ப்ரூணஹா' அவன், தன் அன்னத்தைப் புஜித்தவனிடத்தில் தன் பாபத்தைச் சேர்த்து விடுகிறான். ஆகையால் அவனது அன்னம் அபோஜ்யமாம். பாபம் செய்யாதவனை எவன் உன்னால் பாபம் செய்யப்பட்டதென்று பொய்யாகச் சொல்லுகின்றானோ அவனிடத்தில் பாபம் செய்யாதவன் தன் பாபத்தைச் சேர்த்துவிடுகிறான். தண்டிக்கப்படாமல் விடப்பட்ட திருடன், அரசனிடத்தில் தன் பாபத்தைச் சேர்க்கிறான். கொடுப்பதாகச் சொல்லிப் பிறகு கொடாத, பொய் ப்ரதிக்ஞைக்காரனிடத்தில் யாசிப்பவன், தன் பாபத்தைச் சேர்க்கிறான்.

व्यासः — निहन्त्यन्नं मनः प्राणान् चक्षुः श्रोत्रे तथैव च । स्मृतिं मेधां धृतिं शुक्लं पारक्यं योऽन्नमश्नुते ।। परपाकान्नपुष्टस्य सततं

गृहमेधिनः । इष्टं दत्तं तपोऽधीतं यस्यान्नं तस्य तद्भवेत् ।। यस्यान्नेन तु भुक्तेन भार्यां समधिगच्छति । यस्यान्नं तस्य ते पुत्राः अन्नाद्रेतः प्रजायते इति ।

வ்யாஸர்:- எவன் பரான்னத்தைப் புஜிக்கின்றானோ, அவனது அன்னம், மனம், ப்ராணன்கள், கண் - காதுகள், ஸ்ம்ருதி, மேதை, த்ருதி, சுக்லம் என்ற இவைகளைப் பரான்னம் கொல்லுகின்றது. எப்பொழுதும் பரான்னத்தால் புஷ்டனான க்ருஹஸ்தனின், யாகம், தானம், தபஸ், அத்யயனம் என்ற இவையெல்லாம் எவனின் அன்னத்தைப் புஜித்தானோ, அவனுடையதாய் ஆகிறது. எவனின் அன்னத்தைப் புஜித்து அதனுடன் பார்யையைச் சேருகிறானோ, அந்தப் புத்ரர்கள் அந்த அன்னஸ்வாமியின் உடையவர்களாகின்றனர். அன்னத்தினின்றும் ரேதஸ் உண்டாகின்றது.

यमः — किल्बिषं हि मनुष्याणा मन्नमाश्रित्य तिष्ठति । यो हि यस्यान्नमश्नाति स तस्याश्नाति किल्बिषम् ।। स्वपाके वर्तमाने यः परपाकं निषेवते । स श्वत्वं सूकरत्वं च गर्दभत्वं च गच्छति ।। परपाकं परगृहे नाद्याद्विप्रो विचक्षणः । गृहस्थपतनं ह्येतत् परपाकोप जीवनम् इति । मनु :- उपासते ये गृहस्थाः परपाकमबुद्धयः । तेन ते प्रेत्य पशुतां व्रजन्त्यन्नादि दायिनाम् इति ।

யமன்:- மனுஷ்யரின் பாபம் அன்னத்தை அண்டி இருக்கிறது. எவன் எவனின் அன்னத்தைப் புஜிக்கின்றானோ, அவன் அவனின் பாபத்தையே புஜிக்கின்றான். எவன், தனது அன்னமிருக்கும் பொழுது, பரான்னத்தை ஸேவிக்கின்றானோ, அவன், நாய், பன்றி, கழுதை இவைகளின் தன்மையை அடைகின்றான். அறிந்த ப்ராம்ஹணன், பரக்ருஹத்தில் பரான்னத்தைப் புஜிக்கக் கூடாது. பரான்னத்தால் பிழைப்பதென்பது, க்ருஹஸ்தனுக்குப் பாதித்யஹேதுவாகும். மனு:-

புத்தியற்ற எந்த க்ருஹஸ்தர்கள் பரான்னத்தையே உபாஸிக்கின்றரோ, அவர், மறுஜன்மத்தில் அன்னம் முதலியதைக் கொடுத்தவரிடம் பசுவாக சென்றடைகின்றனர்.

जमदग्निः – पितृदेवक्रियां कृत्वा परपाकरतिस्तु यः । दातुः कर्मफलं याति भोक्ता भुञ्जीत किल्बिषम् इति । यमः – परपाकं सदा नाद्याद्धुत्वाप्यग्निं यथाविधि । न हि हित्वा स्वकार्याणि परकार्यरतो भवेत् । परान्नेनोदरस्थेन यः करोति शुभाशुभम् । अन्नदस्य त्रयो भागाः कर्ता भागेन लिप्यते ॥ भूमिं गां च सुवर्णं च रत्नानि विविधानि च । सर्वतः परिगृह्णीयात् भोजनं तु विवर्जयेत् इति ।

ஜமதக்னி:- எவன், பித்ருக்களுடையவும், தேவர்களுடையவும், க்ரியையை முடித்து, பரபாகத்தைப் புஜிக்கின்றானோ, அவனது கர்மபலம் அன்னதாதாவைச் சேருகிறது. புஜிப்பவன் பாபத்தைப் புஜிக்கிறான். யமன்:- விதிப்படி அக்னியில் ஹோமம் செய்து விட்டு, எப்பொழுதும் பரான்னத்தைப் புஜிக்கக் கூடாது. தன் கார்யங்களை விட்டு, பிறர் கார்யத்தில் முயல்பவனாய் இருக்கக் கூடாதல்லவா? வயிற்றிலிருக்கும் பரான்னத்துடன் எவன் சுபாசுபகார்யங்களைச் செய்கின்றானோ அவனது கர்மபலன்களின் மூன்று பாகங்கள் அன்ன தாதாவினுடையதாய் ஆகின்றன. ஒரு பாகம் கர்த்தாவைச் சேருகிறது. பூமி, பசு, ஸுவர்ணம், பலவிதமான ரத்னங்கள் இவைகளை எல்லோரிடமிருந்தும் வாங்கலாம். போஜனத்தை மட்டும் எல்லோரிடமும் வர்ஜிக்க வேண்டும்.

उशनाः—परान्नं परवस्त्रं च पराम्बु परयोषितः । परवेश्मनिवासश्च हरन्त्येतानि सम्पदम् इति ॥ रत्नावल्याम् —सर्वं तु तरितुं शक्य मन्नलेपो हि दुस्तरः । दुष्कृतं हि मनुष्याणामन्नमाश्रित्य तिष्ठति इति । लिखितपराशरौ — परपाकनिवृत्तस्य परपाकरतस्य

च। अपचस्य च भुक्त्वाऽन्नं द्विजश्चान्द्रायणं चरेत्॥ गृहीत्वाग्निं समारोप्य पञ्च यज्ञान्न निर्विपेत्। परपाकनिवृत्तोऽसौ मुनिभिः परिकीर्तितः॥ पञ्चयज्ञान् स्वयं कृत्वा परान्नेनोपजीवति। सततं प्रातरुत्थाय परपाकरतस्तु सः॥ गृहस्थधर्मा यो विप्रो ददातिपरिवर्जितः। ऋषिभिर्धर्मतत्वज्ञैरपचः परिकीर्तितः॥ अपचाय च यद्दानं दातुश्चास्य कुतः फलम्। दाता प्रतिग्रहीता च द्वौ तौ निरयगामिनौ॥ परिवित्तेस्तु यच्चान्नं परिवेत्रन्नमेव च। कुण्डान्नं गोलकान्नं च देवलान्नं तथैव च॥ पुरोहितस्य यच्चान्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति।

உசநஸ்:- *பிறனின் அன்னம், பிறனின் வஸ்த்ரம், பிறனின் ஜலம், பிறனின் ஸ்த்ரீ, பிறனின் வீட்டில் வாஸம் இவை ஸம்பத்தை அபஹரிக்கின்றன.* ரத்னாவளியில்:- *எல்லாப் பாபத்தையும் தாண்ட முடியும். அன்னத்தா லுண்டாகும் பாபம் தாண்டமுடியாது. மனிதரின் பாபம் அன்னத்தை அண்டி இருக்கின்றது.* லிகிதரும், பராசரரும்:- *பரபாகநிவ்ருத்தன், பரபாகரதன், அபசன் இவரின் அன்னத்தை ப்ராம்ஹணன் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். அக்னியை க்ரஹித்து, ஸமாரோபணம் செய்து, பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்யாமலிருப்பவன் 'பரபாகநிவ்ருத்தன்' என்று முனிகளால் சொல்லப்பட்டுள்ளான். எவன் காலையி லெழுந்து, பஞ்சயக்ஞங்களைத் தான் செய்து விட்டு, எப்பொழுதும் பரான்னத்தினாலேயே பிழைக்கின்றானோ அவன் 'பரபாகரதன்' எனப்படுகிறான். க்ருஹஸ்த தர்மமுள்ள எந்த ப்ராம்ஹணன் தானம் செய்யாமல் இருக்கின்றானோ அவன், தர்மதத்வத்தை அறிந்த முனிகளால் 'அபசன்' எனப்படுகிறான். அபசனுக்குக் கொடுக்கப்படும் தானமெதுவோ அதற்குப் பலம் ஏது? கொடுத்தவன் வாங்கியவன் என்ற அவ்விருவரும் நரகத்தை அடைகின்றனர். பரிவித்தி, பரிவேத்தா,*

குண்டன், கோளகன், தேவலன், புரோஹிதன் இவரின் அன்னத்தைப் புஜித்தால் ப்ராம்ஹணன் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

अभ्यासाभिप्रायेणेदं चान्द्रायणव्रतम् । अनभ्यासे त्वीदृशान्न भोजने भरद्वाजः — निराचारस्य विप्रस्य निषिद्धाचरणस्य च । अन्नं भुक्त्वा द्विजः कुर्याद्दिनमेकम भोजनम् इति ।। पराशरः – सदाचारस्य विप्रस्य तथा वेदान्तवेदिनः । भुक्त्वाऽन्नं मुच्यते पापा दहोरात्रान्तरान्नरः इति ।। शातातपः — यो हि हित्वा विवाहाग्निं गृहस्थ इति मन्यते । अन्नं तस्य न भोक्तव्यं वृथापाको हि स स्मृतः ।। वृथापाकस्य भुक्त्वाऽन्नं प्रायश्चित्तं चरेद् द्विजः । प्राणायामांस्त्रिरभ्यस्य घृतं प्राश्य विशुध्यति इति ।

இங்கு சாந்த்ராயணம் சொல்லியது அப்யாஸம் (தொடர்ந்து செய்வது) செய்த விஷயத்தில் அபிப்ராயமுடையது. அப்யாஸமில்லாமல் இவ்விதமான அன்னத்தைப் புஜித்த விஷயத்தில், பரத்வாஜர்:- ஆசாரமற்றவனும், நிஷித்த கர்மத்தை அனுஷ்டிப்பவனுமான ப்ராம்ஹணனுடைய அன்னத்தைப் புஜித்தால் ப்ராம்ஹணன் ஒருநாள் முழுவதும் உபவாஸம் செய்ய வேண்டும். பராசரர்:- நல்ல ஆசாரமுடையவனும், வேதாந்தமறிந்தவனுமான ப்ராம்ஹணனின் அன்னத்தைப் புஜித்தால், மனிதனின் ஒரு நாள் முழுவதும் செய்த பாபத்தினின்றும் விடுபடுகிறான். சாதாதபர்:- எவன் விவாஹாக்னியை விட்டு, தன்னை க்ருஹஸ்தன் என்று எண்ணுகின்றானோ அவனது அன்னத்தைப் புஜிக்கக் கூடாது. அவன் 'வ்ருதாபாகன்' எனச் சொல்லப்படுகிறான். வ்ருதாபாகனின் அன்னத்தை ப்ராம்ஹணன் புஜித்தால் ப்ராயச்சித்தம் அனுஷ்டிக்க வேண்டும். மூன்று முறை ப்ராணாயாமம் செய்து, நெய்யைப் பருகினால் சுத்தனாகிறான்.

अपरार्के— अभोज्यं ब्राह्मणस्यान्नं वृषलेन निमन्त्रितम्। तथैव वृषलस्यान्नं ब्राह्मणेन निमन्त्रितम् इति । गौतमः – ब्राह्मणान्नं ददच्छूद्रः शूद्रान्नं ब्राह्मणो ददत् । अभोज्यं तु तयोरन्नं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ।

அபரார்க்கத்தில்:- சூத்ரனால் அழைத்துக் கொடுக்கப்பட்ட ப்ராம்ஹணன்னமும், ப்ராம்ஹணனால் அழைத்துக் கொடுக்கப்பட்ட சூத்ரனுடைய அன்னமும் அபோஜ்யமாகும். கௌதமர்:- ப்ராம்ஹணன்னத்தைக் கொடுக்கும் சூத்ரன், சூத்ரான்னத்தைக் கொடுக்கும் ப்ராம்ஹணன் என்ற இவ்விருவரின் அன்னமும் அபோஜ்யமேயாம். புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

पराशरः — आमं वा यदि वा पक्वं शूद्रान्नमुपभोजयेत् । किल्बिषं भजते भोक्तो यश्च विप्रः पुरोहितः ।। आमं शूद्रस्य विप्रार्थं यस्तु पाचयते द्विजः । त्रयस्ते नरकं यान्ति दाता भोक्ता च पाचकः ।। गुर्वर्थमतिथीनां च भृत्यानां च विशेषतः । प्रतिगृह्य तु दातव्यं न भुञ्जीत स्वयं ततः ।। अकृत्वैव निवृत्तिं यः शूद्रान्नान् म्रियते द्विजः । आहिताग्निर्विशेषेण स शूद्रगतिभाग्भवेत् । शूद्रान्नरसपुष्टस्य ह्यधीयानस्य नित्यशः । जपतो जुह्वतो वाऽपि गतिरूर्ध्वा न विद्यते ।। शूद्रान्नं शूद्रसंपर्कः शूद्रेण तु सहासनम् । शूद्रात् ज्ञानागमश्चापि ज्वलन्तमपि पातयेत् ।। मृतसूतकपुष्टाङ्गं द्विजं शूद्रान्नभोजिनम्। अहं तं न विजानामि कां कां योनिं गमिष्यति ।। गृध्रो द्वादशजन्मानि दश जन्मानि सूकरः ।। श्वयोनौ सप्त जन्म स्यादित्येवं मनुरब्रवीत् इति ।।

பராசரர்:- ஆமமாயினும், பக்வான்னமாயினும், சூத்ரான்னத்தைப் புஜிப்பித்தானாகில், புஜிப்பவன் பாபத்தைப் புஜிக்கின்றான். கொடுத்த புரோஹிதனும் பாபத்தைப் புஜிக்கின்றான். எந்த ப்ராம்ஹணன் சூத்ரனின்

ஆமத்தை ப்ராம்ஹணனுக்காகச் சமைக்கின்றானோ அவனும், அன்னத்தைப் புஜித்தவனும், ஆமத்தைக் கொடுத்தவனும், அம்மூவரும் நரகத்தை அடைகின்றனர். குருவிற்காகவும், அதிதிகளுக்காவும், ப்ருத்யர்களுக் காகவும் ப்ரதிக்ரஹித்து அவர்களுக்குக் கொடுக்கலாம். அதிலிருந்து தான் புஜிக்கக் கூடாது. எந்த ப்ராம்ஹணன் சூத்ரான்னத்தினின்றும் நிவ்ருத்தியைச் செய்து கொள்ளாமலே இறக்கின்றானோ அவன் ஆஹிதாக்னி ஆனாலும் சூத்ரனின் கதியையடைவான். சூத்ரான்ன ரஸத்தினால் வளர்கின்ற ப்ராம்ஹணன் எப்பொழுதும் அத்யயனம். ஜபம், ஹோமம் இவைகளைச் செய்பவனாயினும் அவனுக்குச் சிறந்த கதி இல்லை. சூத்ரனின் அன்னம், சூத்ரனுடன் ஸம்பர்க்கம், சூத்ரனோடு சேர்ந்து உட்கார்தல், சூத்ரனிடமிருந்து அறிவை அடைதல் இவை (தவத்தினால்) ஜ்வலிப்பவனாயிருப்பவனையும் கீழே தள்ளிவிடும், ம்ருதாசௌசான்னம், ஜனனாசௌசான்னம், சூத்ரான்னம் இவைகளைப் புஜித்துப் பருத்துள்ள ப்ராம்ஹணன் எந்தெந்தப் பிறவியை அடைவானோ அதை நான் அறியவில்லை. அவன் கழுகாய்ப் பன்னிரண்டு பிறவிகளையும், பன்றியாய்ப் பத்துப் பிறவிகளையும், நாயாய் ஏழு பிறவிகளையும் அடைவான் என்று மனு சொன்னார்.

वसिष्ठः— शूद्रान्नेन तु भुक्तेन जठरस्थेन यो मृतः । स वै खरत्व मुष्ट्रत्वं शूद्रत्वं चैव गच्छति इति । स्मृतिभास्करे — आमं शूद्रस्य पक्वान्नं पक्वमुच्छिष्ट भोजनम् । तस्मादामं च पक्वं च दूरतः परिवर्जयेत् । षण्मासान् यो द्विजो भुङ्क्ते शूद्रस्यान्नं विगर्हितम् । स तु जीवन् भवेच्छूद्रो मृतः श्वा चाभिजायते ।। सूतके मृतके भुक्त्वा गृहीते शशिभास्करे । जलादौ हस्ततो भुक्त्वा न भूयः पुरुषो भवेत् इति ।

வஸிஷ்டர்:- எவன் சூத்ரான்னத்தைப் புஜித்து அது வயிற்றிலிருக்க அத்துடன் இறந்தானோ அவன், கழுதைத் தன்மையையும், ஒட்டகத் தன்மையையும், சூத்ரத்

தன்மையையும் அடைகின்றான். ஸ்ம்ருதிபாஸ்கரத்தில்:- சூத்ரனின் ஆமமான வஸ்து பக்வான்னமாகும். அவனின் பக்வான்னம் உச்சிஷ்ட போஜனமாகும். ஆகையால் சூத்ரனின் ஆமத்தையும், பக்வத்தையும் தூரத்தில் வர்ஜிக்க வேண்டும். எந்த ப்ராம்ஹணன் ஆறு மாதம் முழுவதும் நிஷித்தமான சூத்ரான்னத்தைப் புஜிக்கின்றானோ அவன் பிழைத்திருக்கும்போதே சூத்ரனாவான். இறந்த பிறகு நாயாய்ப் பிறப்பான். ஸூதகத்திலும், ம்ருதகத்திலும், சந்த்ர ஸூர்ய க்ரஹணத்திலும், ஜலம் முதலியதிலும், கையில் வைத்துக் கொண்டும் புஜித்தால் மறுபடி புருஷனாய்ப் பிறக்க மாட்டான்.

शूद्राद्यन्नभोजने प्रायश्चित्तमाह पराशरः— शूद्रान्नं सूतकस्यान्नं अभोज्यस्यान्नमेव च। शङ्कितं प्रतिषिद्धान्नं पूर्वोच्छिष्टं तथैव च॥ यदि भुक्तं तु विप्रेण अज्ञानादापदाऽपि वा। ज्ञात्वा समाचरेत् कृच्छ्रं ब्रह्मकूर्चं तु पावनम् इति॥ अज्ञाने आपदि च ब्रह्मकूर्चम्। ज्ञात्वा भोजने प्राजापत्यमित्यर्थः। एतच्च ब्रह्मकूर्चमविद्वद्विषयम्।

சூத்ரன் முதலியவர்களின் அன்னத்தைப் புஜித்தால் ப்ராயச்சித்தம் சொல்லுகிறார். பராசரர்:- சூத்ரனின் அன்னம், ஸூதகியின் அன்னம், அபோஜ்யனின் அன்னம், ஸந்தேஹமுள்ள அன்னம், விலக்கப்பட்ட அன்னம், முன் உச்சிஷ்டமான அன்னம் இவைகளை ப்ராம்ஹணன் அறியாமையாலாவது, ஆபத்திலாவது புஜித்தானாகில், அறிந்து புஜித்தால் க்ருச்ரமும், ப்ரம்ஹகூர்ச்சமும் சுத்திகரமாம். அக்ஞானத்திலும், ஆபத்திலும் ப்ரம்ஹகூர்ச்சம். அறிந்து புஜித்தால் ப்ராஜாபத்யம் என்பது பொருள். இந்த ப்ரம்ஹகூர்ச்சம் அறியாமல் புஜித்தவனைப் பற்றியது.

विद्वांसं प्रत्याह स एव — आपत्काले तु विप्रेण भुक्तं शूद्रगृहे यदि। मनस्तापेन शुध्येत द्रुपदां वा शतं जपेत्॥ शुष्कान्नं गोरसं स्नेहं शूद्रगेहाद्यदागतम्। पक्वं विप्रगृहे भक्तं भोज्यं तन्मनुरब्रवीत्॥ शुष्कान्नं

- व्रीहितण्डुलादि ।। स एव — घृतं क्षीरं तथा तैलं गुडं स्नेहेन पाचितम् । गत्वा नदीतटे विप्रो भुञ्जीयाच्छूद्रभोजनम् इति ।। एतच्च मार्गश्रान्त्यादौ पूर्ववर्णासम्भवे वेदितव्यमिति माधवीये ।।

அறிந்து புஜித்தவனைப் பற்றிச் சொல்லுகிறார், **பராசரரே:-** *ப்ராம்ஹணன் ஆபத்காலத்தில் சூத்ரனின் க்ருஹத்தில் புஜித்தாலுகில் பச்சாத்தாபத்தால் சுத்தனுவான். அல்லது 'த்ருபதா' என்கிற ருக்கை நூறு முறை ஜபிக்க வேண்டும். சுஷ்கமான அன்னம், மோர், நெய் முதலிய இவை சூத்ரனின் க்ருஹத்திலிருந்து வந்து ப்ராம்ஹணனின் க்ருஹத்தில் பக்வமானுல் அது புஜிக்கத் தகுந்தது என்று மனு சொன்னுர். சுஷ்கான்னம் - நெல், அரிசி முதலியது.* **பராசரரே:-** *நெய், பால், தைலம், வெல்லம், நெய் முதலியதோடு பக்வமானது, இது சூத்ரனுடையதானுலும் ப்ராம்ஹணன் நதியின் கரையில் சென்று அங்கே புஜிக்கலாம். இது வழியில் ச்ரமம் முதலியது நேர்ந்து முந்திய மூன்று வர்ணத்தார்கள் இல்லாவிடில் என்று அறியத்தகுந்தது என்று மாதவீயத்தில் உள்ளது.*

चतुर्विंशतिमते— आरनालं तथा क्षीरं कान्दुकं दधिसक्तवः । स्नेहपक्व मपक्वं च शूद्रस्यापि न दुष्यति इति ।। अङ्गिराः — स्वपात्रे यच्च विन्यस्तं द्रव्यं तच्छुचि नित्यशः । पात्रान्तरगतं ग्राह्यं शूद्राद्यद्गृहमागतम् ।। शूद्रस्य वेश्म विप्रेण क्षीरं वा यदि वा दधि । निवृत्तेन न भोक्तव्य मित्युक्तं स्मृतिवेदिभिः इति ।। निवृत्तेन - शूद्रान्न निवृत्तेनेत्यर्थः ।। मनुः - गोरसं चैव सक्तूंश्च तैलं पिण्याकमेव च । अपूपान् भक्षयेच्छूद्राद्यच्चान्यत् पयसा कृतम् इति ।

சதுர்விம்சதிமதத்தில்:- *கஞ்சி, பால், காந்துகம், தயிர்மாவு, எண்ணெயில் பக்வமாகியது, பக்வமாகாதது இவை சூத்ரனுடையதானுலும் தோஷமுடையவையல்ல.* **அங்கிரஸ்:-** *தன்னுடைய பாத்ரத்தில் எந்த த்ரவ்யம்*

போடப்பட்டதோ அது எப்பொழுதும் சுத்தமாகும். சூத்ரனுல் வீட்டிற்குக் கொண்டுவரப்பட்ட த்ரவ்யத்தை வேறு பாத்ரத்தில் வாங்கிக் கொள்ள வேண்டும். சூத்ரான்னத்தை நிவர்த்தித்த ப்ராம்ஹணன் சூத்ரனின் வீட்டையடைந்து பால் அல்லது தயிர் இவைகளையும் புஜிக்கக் கூடாது என்று ஸ்ம்ருதி அறிந்தவர்கள் சொல்லுகின்றனர். மனு- மோர், மாவு, தைலம், பிண்ணுக்கு, அப்பம், பாலினுல் செய்யப்பட்ட வஸ்து இவைகளைச் சூத்ரனிடமிருந்து வாங்கிப் புஜிக்கலாம்.

हारीतः — कण्डूपकं स्नेहपकं पायसं दधिसक्तवः । एतानि शूद्रान्नभुजो भोज्यानि मनुरब्रवीत् इति ॥ अपूपादिपचनार्थं परिमण्डलतया कृतमयोमयं पात्रं कण्डूः । तत्र पकं कण्डूपकमित्यर्थः ॥ शङ्खः —गृहाश्वरथभूम्यर्थे गवार्थे तु विशेषतः । श्रोत्रियेण तु भोक्तव्यं शूद्राणां तु यमोऽब्रवीत् इति ॥ शातातपः – तैलं घृतं दधि क्षीरं तथैवेक्षुरसं गुडम् । शूद्रभाण्डस्थितं तक्रं तथा मधु न दुष्यति इति ॥ सङ्ग्रहे – हैयङ्गवीनं गोक्षीरं पिण्याकं दधिसक्तवः । स्नेहपकं च तक्रं च शूद्रादपि न दुष्यति इति ।

ஹாரீதர்:- கண்டூவில் பக்வமானது, எண்ணெயில் பக்வமானது, பாயஸம், தயிர்மாவு இவைகளை, சூத்ரான்னத்தைப் புஜிக்கும் ப்ராம்ஹணன் புஜிக்கலாம் என்று சொன்னுர் மனு. அபம் முதலியதைப் பாகம் செய்வதற்கு வர்துளமாய்ச் செய்யப்பட்ட இரும்புப் பாத்ரம் கண்டூ (கந்து) எனப்படும். அதில் பக்வமானது கண்டூபக்வம் எனப்பொருள். சங்கர்:- வீடு, குதிரை, ரதம், பூமி இவைகளுக்காகவும், விசேஷமாய்ப் பசுவிற்காகவும், ச்ரோத்ரியன், சூத்ரர்களின் த்ரவ்யங்களைப் புஜிக்கலாம் என்று யமன் சொன்னுர். சாதாதபர்:- எண்ணெய், நெய், தயிர், பால், கரும்புச்சாறு, வெல்லம், மோர், தேன் இவை சூத்ரனின் பாண்டத்தில் இருந்தாலும் தோஷமுள்ளதல்ல. ஸங்க்ரஹத்தில்:- நெய், பசுவின், பால், பிண்ணுக்கு, தயிர்

மாவு, எண்ணெயில் பக்வமானது, மோர் இவை சூத்ரனிடமிருந்து வாங்கப்பட்டாலும் தோஷமுள்ளதல்ல.

घृतादिभोजने हेयोपादेयौ शूद्रौ विविनक्ति पराशरः - मद्यमांसरतं नित्यं नीचकर्मप्रवर्तकम् । तं शूद्रं वर्जयेद्विप्रः श्वपाकमिव दूरतः ।। द्विजशुश्रूषणरतान् मद्यमांसविवर्जितान् । स्वकर्मनिरतान्नित्यं तान् शूद्रान् न त्यजेद्द्विजः इति ।। एतत् सर्वमापद्विषयम् ।। तथा च मनुः—आममेवाददीतास्मादवृत्तावैकरात्रिकम् ।। जीवितात्ययमापन्नो योऽन्नमत्ति यतस्ततः । लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा इति ।

நெய் முதலியதைப் புஜிப்பதில் வர்ஜிக்க வேண்டியவனும், ஸ்வீகரிக்கத் தகுந்தவனுமாகிய சூத்ரர்களைப் பிரித்துச் சொல்லுகிறார். பராசரர்:- எப்பொழுதும் மத்யம், மாம்ஸம் இவைகளில் பற்றுள்ளவனும், தாழ்ந்த தொழில் செய்பவனுமான சூத்ரனை, ச்வபாகனைப் போல் தூரத்தில் ப்ராம்ஹணன் விலக்க வேண்டும். ப்ராம்ஹணசுச்ரூஷையில் பற்றுள்ளவரும், மத்யமாம்ஸங்களை வர்ஜித்தவரும், தம் கர்மங்களில் பற்றுள்ளவருமான சூத்ரர்களை ப்ராம்ஹணன் வர்ஜிக்க வேண்டியதில்லை. இது முழுவதும் ஆபத் விஷயமாம். அவ்விதமே, மனு:- வ்ருத்தியில்லாவிடில் ஒரு நாளைக்குப் போதுமான அபக்வமான வஸ்துவை மட்டில் சூத்ரனிடமிருந்து க்ரஹிக்கலாம். உயிரின் ஆபத்தை அடைந்தவனான ப்ராம்ஹணன் எவனெவனிடமிருந்தாவது அன்னத்தைப் புஜித்தாலும், அவன் தாமரை இலை ஜலத்தினால் போல், பாபத்தினால் பற்றப்படுவதில்லை.

याज्ञवल्क्यः — शूद्रेषु दासगोपालकुलमित्रार्धसीरिणः । भोज्यान्ना नापितश्चैव यश्चात्मानं निवेदयेत् इति ।। देवलः —स्वदासो नापितो गोपः कुम्भकारः कृषीवलः । ब्राह्मणेनापि भोज्यान्नाः पञ्चैते शूद्रयोनयः इति ।

யாக்ஞவல்க்யர்:- சூத்ரர்களுள் தாஸர், கோபாலன், குலமித்ரன், அர்த்தஸீரீ, நாபிதன், ஆத்மநிவேதகன் (தன்னைக் கொடுத்தவன்) இவர்களின் அன்னத்தைப் புஜிக்கலாம். தாஸன் - கர்ப்பதாஸன். கோபாலன் - மாடுகளைக் காப்பாற்றி ஜீவிப்பவன். குலமித்ரன் - பித்ருபிதாமஹாதிக்ரமமாய் வந்தவன். அர்த்தஸீரீ - க்ருஷியில் பாகத்தை க்ரஹித்து க்ருஷி செய்பவன். நாபிதன் - க்ருஹ வ்யாபாரங்களைச் செய்பவன். தேவலர்:- தனது தாஸன் (அடிமை), நாபிதன், கோபாலன், குயவன், க்ருஷி செய்பவன் இவ்வைந்துபேரும் சூத்ரராலுலும் அவரின் அன்னத்தை ப்ராம்ஹணன் புஜிக்கலாம்.

पराशरः—दासनापितगोपालकुलमित्रार्धसीरिणः । एते शूद्रेषु भोज्यान्नाः यश्चात्मानं निवेदयेत् ।। शूद्र कन्यासमुत्पन्नो ब्राह्मणेन तु संस्कृतः । स संस्काराद्भवेद् दासो ह्यसंस्कारात्तु नापितः । क्षत्रियाच्छूद्रकन्यायां सूतो जायेत नामतः । स गोपाल इति ज्ञेयो भोज्यो विप्रैर्न संशयः ।। वैश्यकन्या समुद्भूतो ब्राह्मणेन तु संस्कृतः । स ह्यर्धसीरी विज्ञेयो भोज्यो विप्रैर्न संशयः इति ।। एतानि याज्ञवल्क्यादिवचनानि युगान्तरविषयाणि । शूद्रेषु दासगोपालकुलमित्रार्धसीरिणाम् । भोज्यान्नता कलौ नास्ति तीर्थसेवा च दूरतः इति निषेधस्मरणात् ।

பராசரர்:- தாஸன், நாபிதன், கோபாலன், குலமித்ரன், அர்த்தஸீரீ, தன்னை ஒப்புவித்தவன் இவர்கள் சூத்ரர்களுள் போஜ்யான்னர்களாம். சூத்ர கன்னிகையை விவாஹம் செய்து கொண்டு அவளிடத்தில் ப்ராம்ஹணனால் உண்டாக்கப்பட்டவனும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவனுமாய் உள்ளவன் 'தாஸன்' எனப்படுவான். ஸம்ஸ்காரம் மட்டில் செய்யப்படாதவன் நாபிதன் எனப்படுவான். மணக்கப்பட்ட சூத்ர கன்னிகையிடத்தில் க்ஷத்ரியனிடமிருந்து பிறந்தவன் ஸூதன் எனப்படுவான். அவனே கோபாலன் என்று

அறியப்பட வேண்டும். இவன் ப்ராம்ஹணர்களால் போஜ்யான்னனே. ஸம்சயமில்லை. மணக்கப்பட்ட வைச்ய கன்னிகையிடத்தில் ப்ராம்ஹணனால் உண்டாகியவனும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவனும் எவனோ அவன் அர்த்தஸிரீ எனப்படுவான். அவன் ப்ராம்ஹணர்களால் போஜ்யான்னனே, ஸம்சயமில்லை. இந்த யாக்ஞவல்க்யாதி வசனங்கள் மற்ற யுகங்களைப் பற்றியதாம். "சூத்ரர்களுள் தாஸன், கோபாலன், குலமித்ரன், அர்த்தஸிரீ இவர்களுக்குப் போஜ்யான்னநிலை கலியில் கிடையாது. தூரத்தில் தீர்த்தஸேவையும் கூடாது" என்று நிஷேத ஸ்ம்ருதி உள்ளது.

अभोज्यानां नटादीनां जलादौ पीते प्रायश्चित्तमाह पराशरः— भाण्डस्थितमभोज्येषु जलं दधि घृतं पयः । अकामतस्तु यो भुंक्ते प्रायश्चित्तं कथं भवेत् ।। ब्राह्मणः क्षत्रियो वैश्यः शूद्रो वा उपसर्पति । ब्रह्मकूर्चोपवासेन याज्यवर्णस्य निष्कृतिः ।। शूद्राणां नोपवासः स्याच्छूद्रो दानेन शुध्यति ।। भाण्डस्थमन्त्यजानां तु जलं दधि पयः पिबेत् । ब्रह्मकूर्चोपवासेन द्विजातीनां तु निष्कृतिः ।। चण्डालघटसंस्थं तु यत्तोयं पिबति द्विजः । तत्क्षणात् क्षिपते यस्तु प्राजापत्यं समाचरेत् ।। यदि न क्षिप्यते तोयं शरीरे यस्य जीर्यते । प्राजापत्यं न दातव्यं कृच्छ्रं सान्तपनं चरेत् इति ।

அபோஜ்யான்னனர்களான நடன் முதலியவர்களின் ஜலம் முதலியதைப் பானம் செய்தால் ப்ராயச்சித்தத்தைச் சொல்லுகிறார், பராசரர்:- அபோஜ்யான்னர்களின் பாண்டத்திலுள்ள ஜலம், தயிர், நெய், பால் இவைகளை அறியாமல் எவன் புஜிக்கின்றானோ அவனுக்கு ப்ராயச்சித்தம் எப்படி? ப்ராம்ஹணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரனாவது கெட்டால், முதல் மூன்று வர்ணத்தாருக்கும் ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்யத்தாலும், உபவாஸத்தாலும் சுத்தி. சூத்ரர்களுக்கு உபவாஸமில்லை. சூத்ரன் தானத்தால் சுத்தனாகிறான். அந்த்யஜர்களுடைய

பாண்டத்திலுள்ள ஜலம், தயிர், பால் இவைகளைப் பருகினால் மூன்று வர்ணத்தாருக்கும் ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்யம், உபவாஸம் இவைகளால் ப்ராயச்சித்தம். சண்டாளனின் குடத்திலுள்ள ஜலத்தை ப்ராம்ஹணன் பருகினால் உடனே வெளியாக்கி விட்டால் அவன் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். வெளியாக்காமல் அந்த ஜலம் எவன் சரீரத்தில் ஜீர்ணமாகிறதோ அவனுக்கு ப்ராஜாபத்யத்தைச் சொல்லக் கூடாது. அவன் ஸாந்த்பன க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

श्वसृगालादिमरणोपहतकूपादिजलपाने वर्णविशेषेण प्रायश्चित्तमाह स एव— कूपे च पतितं दृष्ट्वा श्वसृगालादि मर्कटम्। अस्थिचर्मादि पतितं पीत्वाऽमेध्या अपो द्विजः ॥ नारं तु कुणवं काकं विड्वराहं खरोष्ट्रकम्। गवयं सौप्रतीकं च मायूरं खाड्गकं तथा॥ वैयाघ्रमार्क्षं सैंहं वा कूपे यदि निमज्जति। तटाकस्याथ दुष्टस्य पीतं स्यादुदकं यदि॥ प्रायश्चित्तं भवेत् पुंसः क्रमेणैतेन सर्वशः। विप्रः शुद्ध्येत्त्रिरात्रेण क्षत्रियस्तु दिनद्वयम्। एकाहेन तु वैश्यस्तु शूद्रो नक्तेन शुध्यति। चण्डालखातवापीषु पीत्वा सलिलमग्रजः॥ अज्ञानाच्चैक- भक्तेन त्वहोरात्रेण शुद्ध्यति। चण्डालभाण्डसंस्पृष्टं पीत्वा कूपगतं जलम्॥ गोमूत्रयावकाहारस्त्रिरात्राच्छुद्धिमाप्नुयात् इति। महातटाकादिषु चण्डालादिसम्बन्धे न कश्चिद्दोषः। अल्पेषु कूपवन्न्यायः इति। माधवीये।

நாய், நரி முதலியதின் மரணத்தால் கெடுக்கப்பட்ட கிணறு முதலியதின் ஜலத்தைப் பருகுவதில் வர்ணத்திற்கு உரியபடி ப்ராயச்சித்தத்தைச் சொல்லுகிறார். பராசரரே:- கிணற்றில் விழுந்துள்ள நாய், நரி முதலியதையும், குரங்கு, எலும்பு, தோல் முதலியதையும் பார்த்து அசுத்தமான அக்கிணற்றின் ஜலத்தை ப்ராம்ஹணன் பருகினாலும், மனிதனின் பிணம், காக்கை, பன்றி, கழுதை, ஒட்டகம்,

கவயம், யானை, மயில், கட்கம், புலி, கரடி, சிங்கம் இவைகளின் பிணமாவது கிணற்றில் மூழ்கியிருந்தாலும், தடாகத்தில் மூழ்கியிருந்தாலும் அவைகளினால் துஷ்டமான ஜலம் குடிக்கப்படுமாகில் சொல்லப்படும் க்ரமமாய் ப்ராயச்சித்தமாகும். ப்ராம்ஹணன் மூன்று நாள் உபவாஸத்தாலும், க்ஷத்ரியன் இரண்டுநாள் உபவாஸத்தாலும், வைச்யன் ஒருநாள் உபவாஸத்தாலும், சூத்ரன் ஒருகாலம் உபவாஸத்தாலும் சுத்தனாகிறான். சண்டாளனால் வெட்டப்பட்ட வாபிகளில் ப்ராம்ஹணன் அறியாமல் ஜலத்தைப் பருகினால் ஒருநாள் உபவாஸத்தால் சுத்தனாகிறான். சண்டாளன் பாண்டத்தினால் தொடப்பட்ட கிணற்றின் ஜலத்தைப் பருகினால் கோமூத்ரத்துடன் கூடிய யவைக்கஞ்சியை ஆஹாரமாய் உடையவனாய் மூன்று தினங்களால் சுத்தனாகிறான். பெரிய தடாகம் முதலியவையில் சண்டாளாதி ஸம்பந்தமிருந்தால் தோஷம் ஒன்றுமில்லை. சிறிய தடாகங்களில் கிணற்றைப் போல் ந்யாயம் என்று மாதவீயத்தில் சொல்லப்பட்டுள்ளது.

यमः—अल्पानामेव पयसां महत्सु न तु दूषणम् । अक्षोभ्याणामपां नास्ति प्रसृतानां च धावताम् ।। स्तोकानामुद्धृतानां च दोषदुष्टत्वमिष्यते । तथाऽक्षोभ्य तटाकादिनदीवापीसरांसि च । चण्डालाद्यशुचिस्पर्शे तीर्थतः परिवर्जयेत् इति ।। तीर्थं - जलावतरणप्रदेशः ।। हारीतः - क्लिन्ने भिन्ने शवे तोये तत्रस्थं यदि तत्पिबेत् । शुद्ध्यै चान्द्रायणं कुर्यात् तप्तकृच्छ्रमथापि वा । सीरखातप्रपातोयं पीत्वा चान्द्रायणं चरेत् । अज्ञानादापदा वाऽपि पञ्चगव्येन शुध्यति इति ।

யமன்:- அல்பமான ஜலங்களுக்குத்தான் தோஷம். அதிக ஜலங்களில் தோஷமில்லை. கலக்கமுடியாத ஜலங்களுக்கும், அகன்று ஓடுகின்ற ஜலங்களுக்கும் தோஷமில்லை. அல்பமான ஜலங்களுக்கும் எடுக்கப்பட்ட

ஜலங்களுக்குமே தோஷம் சொல்லப்படுகிறது. அப்படியே கலக்க முடியாத தடாகம் முதலியவை. நதீ, வாபீ, ஸரஸ் இவைகளில் சண்டாளர் முதலிய அசுத்தரின் ஸ்பர்சத்தில், அவைகளைத் தீர்த்தத்தை மட்டில் வர்ஜிக்க வேண்டும். தீர்த்தம் = ஜலத்தில் இறங்கும் ப்ரதேசம். (துறை) ஹாரீதர்:- ஜலத்தில் சவமானது நனைந்தோ, பின்னமாகவோ இருக்குமாகில், அங்குள்ள ஜலத்தைப் பருகுவானாகில் அவன், சுத்திக்குச் சாந்த்ராயணம் அல்லது தப்தக்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். கலப்பையின் பள்ளம், தண்ணீர்ப்பந்தல் இவைகளிலுள்ள ஜலத்தைப் பருகினால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். அறியாமையால் அல்லது ஆபத்தினால் பருகினால் பஞ்சகவ்ய பானத்தால் சுத்தனாகிறான்.

पराशरः— भुङ्क्तेऽज्ञानाद् द्विजश्रेष्ठश्चण्डालान्नं कथञ्चन । गोमूत्रयावकाहारो दशरात्रेण शुद्ध्यति ।। अमेध्यरेतोगोमांसं चण्डाला नामथापि वा । यदि भुक्तं तु विप्रेण कृच्छ्रं चान्द्रायणं चरेत् इति ।। अमेध्यं - विण्मूत्रादि । तदुपदुष्टस्यान्नस्य भोजनममेध्यभोजनम् ।। यत्तु चतुर्विंशतिमतेऽभिहितम् - विण्मूत्रभक्षणे विप्रः चरेच्चान्द्रायणद्वयम् । श्वादीनां चैव विण्मूत्रे चरेच्चान्द्रायणत्रयम् इति, एतदभ्यासविषयम् ।। अत्र विष्णुः – सर्वेष्वेतेषु द्विजानां प्रायश्चित्तान्ते पुनः संस्कारं कुर्यात् इति ।

பராசரர்:- ப்ராம்ஹணன் அறியாமையால் சண்டாளனின் அன்னத்தை எவ்விதத்தாலாவது புஜித்தானாகில், கோமூத்ரத்துடனுள்ள யவைக் கஞ்சியை ஆஹாரமாகக் கொண்டு பத்து நாட்களால் சுத்தனாகிறான். அமேத்யம், ரேதஸ், கோமாம்ஸம், சண்டாளான்னம் இவைகளை ப்ராம்ஹணன் புஜித்தால் சாந்த்ராயண க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். அமேத்யம் - மலம், மூத்ரம் முதலியது. அவைகளால் துஷ்டமான அன்னத்தைப் புஜிப்பது அமேத்ய போஜனமாம்.

சதுர்விம்சதிமதத்தில்:- "ப்ராம்ஹணன் மல மூத்ரங்களை பக்ஷித்தால் இரண்டு சாந்த்ராயணங்களை அனுஷ்டிக்க வேண்டும். நாய் முதலியதின் மல மூத்ரங்களைப் பக்ஷித்தால் மூன்று சாந்த்ராயணங்களை அனுஷ்டிக்க வேண்டும்" என்று உள்ளதேயெனில், இது அப்யாஸ விஷயமாம். (அப்யாஸம் = அடிக்கடி செய்வது) இங்கு, விஷ்ணு:- இவைகள் எல்லாவற்றிலும் ப்ராம்ஹணர்களுக்கு ப்ராயச்சித்ததின் முடிவில் புனருபநயனம் செய்ய வேண்டும்.

हारीतः—हस्तदत्तभोजने दुष्टपङ्क्तिभोजने व्यक्तमूत्र पुरीषकरणे मृतसूतकान्न भोजने शूद्रैः सह संसुप्ते त्रिरात्रमभोजनम् इति। इदं कामकृतविषयम्। अकामस्तु दिनमेकमभोजनं विज्ञानेश्वरोक्तं द्रष्टव्यम्। यत्तु मार्कण्डेयः - भुक्त्वा तु ब्राह्मणाशौचे चरेत् सान्तपनं द्विजः। शूद्रस्य तु तथा भुक्त्वा द्विजश्चान्द्रायणं चरेत् इति, एतत् कामकृताभ्यासविषयम्॥ यच्च शङ्खेनोक्तम् - शूद्रस्य सूतके भुक्त्वा षण्मासान् व्रतमाचरेत्। ब्राह्मणस्य तथाऽशौचे भुक्त्वा मासं व्रतीभवेत् इति, तदत्यन्ताभ्यासविषयम्।

ஹாரீதர்:- கையால் கொடுக்கப்பட்ட அன்னத்தைப் புஜிப்பதிலும், துஷ்டரின் பங்க்தியில் புஜிப்பதிலும், ப்ரகாசமாய் மலமூத்ர விஸர்ஜனத்திலும், ம்ருதாசௌச, ஜனனாசௌச அன்ன போஜனத்திலும், சூத்ரர்களுடன் தூங்குவதிலும் மூன்றுநாள் உபவாஸம் ப்ராயச்சித்தமாம். இது அறிந்து செய்த விஷயம். அறியாமல் செய்த விஷயத்தில் ஒருநாள் உபவாஸம் என்று விக்ஞானேச்வரர் சொல்லியதை அறியவும். ஆனால், மார்க்கண்டேயர்:- "ப்ராம்ஹணன், ப்ராம்ஹணனுடைய ஆசௌசத்தில் புஜித்தானாகில் ஸாந்தபன க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஆசௌசியான சூத்ரனின் அன்னத்தைப் புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்" என்று சொல்லியது புத்திபூர்வமாய் அப்யாஸம் செய்த

விஷயம். சங்கர்:- ''சூத்ரனுடைய ஜனனாசௌசத்தில் அவனுடைய அன்னத்தைப் புஜித்தால் ஆறுமாதம் நியமத்தை அனுஷ்டிக்க வேண்டும். ப்ராம்ஹணனுடைய ஆசௌசத்தில் அவனுடைய அன்னத்தைப் புஜித்தால் ஒருமாதம் முழுவதும் நியமத்தை அனுஷ்டிக்க வேண்டும்'' என்று சொல்லிய வசனமும் மிகவும் அப்யாஸம் செய்துள்ள விஷயமாம்.

पराशरः – अज्ञानाद्भुञ्जते विप्राः सूतके मृतकेऽपि वा । प्रायश्चित्तं कथं तेषां वर्णे वर्णे विनिर्दिशेत् ।। गायत्र्यष्टसहस्रेण शुद्धिः स्याच्छूद्रसूतके । वैश्ये पञ्चसहस्रेण त्रिसहस्रेण क्षत्रिये ।। ब्राह्मणस्य यदा भुङ्क्ते द्वे सहस्रे तु जापयेत् । अथवा वामदेव्येन साम्ना चैकेन शुध्यति इति । अत्र विकल्पः ।। सर्वत्र आशौचोत्तरकालमेव प्रायश्चित्तं द्रष्टव्यम् । तथा च विष्णुः - ब्राह्मणादीनामाशौचे यः सकृदेवान्नमश्नाति तस्य तावदेवाशौचं यावत्तेषाम् । अज्ञानेनापदा वा भोजने अहः । स्वाशौचापगमे प्रायश्चित्तं कुर्यात् इति ।

பராசரர்:- ப்ராம்ஹணர்கள் அறியாமையால் ஜனனாசௌசத்திலோ, மரணாசௌசத்திலோ புஜித்தார்களானால் அவர்களுக்கு ப்ராயச்சித்தம் எப்படி? ஒவ்வொரு வர்ணத்திற்கும் தனித்தனி விதிக்க வேண்டும். சூத்ரர்களின் ஸூதகத்தில் புஜித்தவனுக்கு 8,000- முறை காயத்ரீ ஜபத்தால் சுத்தி. வைச்யனின் ஆசௌசத்தில் புஜித்தவனுக்கு 5,000- முறை ஜபத்தால் சுத்தி. க்ஷத்ரியனின் ஆசௌத்தில் புஜித்தவனுக்கு 3,000- முறை ஜபத்தால் சுத்தி. ப்ராம்ஹணனின் ஆசௌசத்தில் புஜித்தால் 2,000- முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். அல்லது 'வாமதேவ்ய' என்கிற ஒரு ஸாமத்தால் சுத்தனாகிறான். இங்கு விகல்பம். எல்லாவற்றிலும் ஆசௌசத்திற்குப் பிறகான காலத்திலேயே ப்ராயச்சித்தம் என்று அறியவேண்டும். அவ்விதமே, விஷ்ணு:- ப்ராம்ஹணர் முதலியவரின் ஆசௌசத்தில், அவர்

அன்னத்தை, எவன், ஒரே முறை புஜிக்கின்றானோ அவனுக்கு, ஆசௌசிகளின் ஆசௌசம் வரையில் ஆசௌசம். அறியாமையாலாவது, ஆபத்தாலாவது புஜித்தால் ஒருநாள் ஆசௌசம். தன் ஆசௌசம் சென்ற பிறகு, ப்ராயச்சித்தத்தைச் செய்ய வேண்டும்.

सङ्ग्रहेऽपि — अघे भोक्तुर्धियाऽऽशौचं शिष्टाहं चैन्दवं ततः । मोहात्तावदघं यावद्भुक्तं जीर्णं पतत्यधः ।। आपत्स्वहरघे भोक्तु रिदं ज्ञातेर्न दोषकृत् इति ।। अघे धीपर्वं भुक्तवतः शिष्टाहमघं भवति । अघानन्तरं चान्द्रायणादि । अज्ञानात्तत्र भोक्तुस्तदहरेवाघं यावद्भुक्तं जीर्णं सदधो व्रजति । आपत्काले धीपूर्वमेव भुक्तवतोऽपि दिनमेवाघम् । एतत् सर्वं सपिण्डस्य न दोषकृत् इत्यर्थः ।। अत्रिः - शूद्रान्नं सूतकान्नं च श्राद्धान्नं चैव वर्जयेत् ।। नग्नप्रच्छादनश्राद्धे नवश्राद्धे तथैव च । एकोद्दिष्टे महत्याद्ये न भूयः पुरुषो भवेत् इति ।

ஸங்க்ரஹத்திலும்:- ஆசௌத்தில் ஆசௌசியின் அன்னத்தைப் புத்திபூர்வமாய்ப் புஜித்தவனுக்குப் பாக்கியுள்ள நாட்கள் வரை ஆசௌசமுண்டு. ஆசௌசத்திற்குப் பிறகு சாந்த்ராயணம் முதலியதை அனுஷ்டிக்க வேண்டும். அறியாமையால் ஆசௌசத்தில் புஜித்தவனுக்கு அந்த ஒருநாள் மட்டில் ஆசௌசம், புக்தமான அன்னம் ஜீர்ணமாய்க் கீழே செல்லும் வரை. ஆபத்காலத்தில் புத்தி பூர்வமாய் புஜித்தவனுக்கும் அந்தத் தினம் மட்டும் ஆசௌசம். இவையெல்லாம் ஜ்ஞாதிக்குத் தோஷத்தைச் செய்யாது' என்பது பொருள். அத்ரி:- சூத்ரான்னம், ஸுதகான்னம், ச்ராத்தசேஷான்னம் இவைகளை வர்ஜிக்க வேண்டும். நக்னப்ரச்சாதன ச்ராத்தத்திலும், நவ ச்ராத்தத்திலும், ஆத்யமஹை கோத்திஷ்டத்திலும் புஜித்தவன், மறபடி மனிதனாய்ப் பிறக்க மாட்டான்.

विष्णुः - प्राजापत्यं नवश्राद्धे पादोनं त्वाद्यमासिके । त्रैपक्षिके तदर्धं तु पञ्चगव्यं द्विमासिके । भुक्तं चेत् पार्वणश्राद्धे प्राणायामान्

षडाचरेत्।। उपवासस्त्रिमासादि वत्सरान्तं प्रकीर्तितम्।। प्राणायामत्रयं वृद्धावहोरात्रः सपिण्डने। आमरूपे स्मृतं नक्तं व्रतं पौराणिके तथा इति। इदमापद्विषयम्।। अनापदि तु हारीतः - चान्द्रायणं नवश्राद्धे प्राजापत्यं तु मिश्रके। एकाहस्तु पुराणेषु प्रायश्चित्तं विधीयते इति।। मिश्रके - आद्यमासिके।

விஷ்ணு:- நவச்ராத்தத்தில் புஜித்தால் ப்ராஜாபத்யமும், ஆத்யமாஸிகத்தில் புஜித்தால் முக்கால் க்ருச்ரமும், த்ரைபக்ஷிகத்தில் புஜித்தால் பாதி க்ருச்ரமும், த்விதீயமாஸிகத்தில் பஞ்சகவ்யமும், பார்வண ச்ராத்தத்தில் புஜித்தால் ஆறு ப்ராணாயாமங்களும் ப்ராச்சித்தமாகும். த்ருதீயமாஸிகம் முதல் வர்ஷம் முடியும் வரையுள்ள மாஸிகங்களில் புஜித்தால் ஒருநாள் உபவாஸம், ப்ராயச்சித்தமாய்ச் சொல்லப்பட்டுள்ளது. வ்ருத்தி ச்ராத்தத்தில் புஜித்தால் மூன்று ப்ராணாயாமங் களும், ஸபிண்டனத்தில் ஒருநாளும், ஆமரூபஸ பிண்டனத்தில் ஒருகாலமும், பௌராணிகத்தில் ஒரு காலமும் வ்ரதம் ப்ராயச் சித்தமெனச் சொல்லப் பட்டுள்ளது. ஆபத்விஷயமாம். ஆபத்தில்லாத விஷயத்தில், ஹாரீதர்:- நவச்ராத்தத்தில் சாந்த்ராயணமும், ஆத்யமாஸிகத்தில் ப்ராஜாபத்யமும், ப்ரத்யாப்திகங் களில் ஒருநாளும் ப்ராயச்சித்தம் விதிக்கப்படுகின்றது.

चतुर्विंशतिमते — प्राजापत्यं नवश्राद्धे पादोनं तूनमासिके। त्रैपक्षिके तदर्धं स्यात् पादो द्वैमासिके ततः ।। पादोनकृच्छ्रमुद्दिष्टं षाण्मासे चाब्दिके तथा। त्रिरात्रं चाद्यमासेषु प्रत्यब्दं चेदहः स्मृतम् इति ।। तथैव — शूद्रस्य तु नवश्राद्धे चरेच्चान्द्रायणद्वयम् । सार्धचान्द्रायणं मासे त्रिपक्षे त्वैन्दवं स्मृतम् ।। मासद्वये पराकः स्यादूर्ध्वं सान्तपनं स्मृतम् इति।

சதுர்விம்சதிமதத்தில்:- நவச்ராத்தத்தில் ப்ராஜா பத்யமும், ஊனமாஸிகத்தில் முக்கால் ப்ராஜாபத்ய

க்ருச்ரமும், த்ரைபக்ஷிகத்தில் பாதி க்ருச்ரமும், இரண்டாவது மாஸிகத்தில் கால்க்ருச்ரமும், ஷாண்மாஸிகத்திலும், ஆப்திகத்திலும், முக்கால் க்ருச்ரமும், ஆத்யமாஸிகத்தில் த்ரிராத்ரமும், ப்ரத்யாப்திகத்தில் ஒருநாளும் ப்ராயச்சித்தமாம். **சதுர்விம்சதிமதத்திலேயே:-** சூத்ரனின் நவச்ராத்தத்தில் இரண்டு சாந்த்ராயணங்களும், மாஸிகத்தில் 1 1/2-சாந்த்ராயணமும், த்ரைபக்ஷிகத்தில் சாந்த்ராயணமும், 2-வது மாஸிகத்தில் பராகமும், அதற்கு மேல் மாஸிகத்தில் ஸாந்தபனமும் விதிக்கப்பட்டுள்ளன.

यत्तु शङ्खवचनम्—चान्द्रायणं नवश्राद्धे पराको मासिके स्मृतः। पक्षत्रयेऽतिकृच्छ्रः स्यात् षाण्मासे कृच्छ्र एवतु॥ आब्दिके पादकृच्छ्रः स्यादेकाहं पुनराब्दिके। अत ऊर्ध्वं न दोषः स्याच्छङ्खस्य वचनं यथा इति इदं दुर्मृतपतितादिश्राद्धविषयम्॥ भारद्वाजः - अपांक्तेयान् यदुद्दिश्य श्राद्धमेकादशेऽनि। ब्राह्मणस्तत्र भुक्त्वाऽन्नं शिशुचान्द्रायणं चरेत्॥ आमश्राद्धे तथा भुक्त्वा तप्तकृच्छ्रेण शुद्ध्यति। सङ्कल्पिते तथा भुक्त्वा त्रिरात्रं क्षपणं भवेत् इति।

சங்கர்:- "நவச்ராத்தத்தில் சாந்த்ராயணமும், மாஸிகத்தில் பராகமும், த்ரைபக்ஷிகத்தில் அதிக்ருச்ரமும், ஷாண்மாஸிகத்தில் ஒரு க்ருச்ரமும், ஆப்திகத்தில் கால் க்ருச்ரமும், ப்ரத்யாப்திகத்தில் ஒருநாளும், அதற்குமேல் உள்ளதில் தோஷமில்லை சங்கரின் வசனப்படி" என்று சொல்லியிருக்கின்றனரே எனில், இது துர்ம்ருதன், பதிதன் முதலியவனின் ச்ராத்தத்தைப் பற்றியதாகும். **பரத்வாஜர்:-** பங்க்திக்கு அர்ஹரில்லாதவரை உத்தேசித்து, 11-ஆவது தினத்தில் செய்யப்படும் ச்ராத்தத்தில் அன்னத்தை ப்ராம்ஹணன் புஜித்தால் சிசு சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஆமச்ராத்தத்தில் புஜித்தால் தப்தக்ருச்ரத்தால் சுத்தனாகிறான். ஸங்கல்ப்பத்தில் புஜித்தால் மூன்றுநாள் வ்ரதமனுஷ்டிக்க வேண்டும்.

ब्रह्मचारिणस्तु बृहद्यम आह—मासिकादिषु योऽश्नीयादसमाप्तव्रतो द्विजः । त्रिरात्रमुपवासोऽस्य प्रायश्चित्तं विधीयते ॥ प्राणायामत्रयं कृत्वा घृतं प्राश्य विशुध्यति इति । कामतस्तु स एवाह— मधु मांसं च योऽश्नीयात् श्राद्धं सूतक एव वा । प्राजापत्यं चरेत् कृच्छ्रं व्रतशेषं समापयेत् इति ॥ अभ्यासे पुनरुपनयनं बोधायनोक्तं द्रष्टव्यम् । आमश्राद्धे तु सर्वत्रार्धम् । आमश्राद्धे भवेदर्धमिति षट्त्रिंशन्मतेऽभिधानात् ।

ப்ரம்ஹசாரி விஷயத்தில் சொல்லுகிறார், ப்ருஹத்யமர்:- ப்ரம்ஹசாரியான எந்த ப்ராம்ஹணன், மாஸிகம் முதலியதில் புஜிக்கின்றானோ அவனுக்கு, மூன்றுநாள் உபவாஸம் ப்ராயச்சித்தமாய் விதிக்கப்படுகிறது, தவிர மூன்று ப்ராணாயாமம் செய்து, நெய்யைப் பருகினால் சுத்தனாகிறான். ஜ்ஞானபூர்வமாய்ச் செய்த விஷயத்தில் சொல்லுகிறார். ப்ருஹத்யமரே:- எந்த ப்ரம்ஹசாரீ மது, மாம்ஸம் இவைகளைப் புஜிக்கின்றானோ, ச்ராத்தத்தையும், ஸூதகான்னத்தையும் புஜிக்கின்றானோ, அவன் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். பிறகு, வ்ரதத்தின் சேஷத்தை ஸமாப்தி செய்ய வேண்டும். அப்யாஸ விஷயத்தில் போதாயனர் சொல்லிய புனருபநயனம் ப்ராயச்சித்தம் என்று அறியவும். ஆமச்ராத்தம் எல்லாவற்றிலும் பாதி பிராயச்சித்தம். 'ஆமச்ராத்தத்தில் பாதி ப்ராயச்சித்தம் விதிக்கப்படுகிறது' என்று ஷட்த்ரிசன்மதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

यत्तूशनसोक्तम् — दशकृत्वः पिबेदापो गायत्र्या श्राद्धभुग्द्विजः । ततः सन्ध्यामुपासीत शुद्ध्येत् तु तदनन्तरम् इति तदनुक्तप्रायश्चित्तश्राद्धविषयमिति माधवीये ॥ संस्काराङ्गश्राद्धभोजने तु व्यासः – निर्वृत्ते चूडहोमे तु प्राङ्नामकरणात् तथा । चरेत् सान्तपनं भुक्त्वा जातकर्मणि चैव हि ॥ अतोऽन्येषु तु भुक्त्वाऽन्नं संस्कारेषु द्विजोत्तमः । नियोगादुपवासेन शुद्ध्यते निन्द्यभोजने इति ।

உசனஸ்:- "ச்ராத்தத்தில் புஜித்த ப்ராம்ஹணன் காயத்ரியால் அபிமந்த்ரிதமான ஜலத்தைப் பத்துமுறை பருகவேண்டும். பிறகு ஸந்த்யையை உபாஸிக்க வேண்டும். பிறகு அவன் சுத்தனுகிருன்" என்று சொல்லியிருக்கின்ருரே எனில், அது, 'ப்ராயச்சித்தம் சொல்லாத ச்ராத்தத்தைப் பற்றியது' என்று மாதவீயத்தில் உள்ளது. ஸம்ஸ்காராங்கமான ச்ராத்த போஜன விஷயத்திலோவெனில், வ்யாஸர்:- சௌளகர்ம ஹோமம் முடிந்த பிறகு, நாமகரணத்திற்கு முந்தியும், ஜாதகர்மத்திலும் அங்கமான நாந்தீச்ராத்தத்தில் புஜித்தால், ஸாந்தபன க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். இவைகளைத் தவிர்த்த மற்ற ஸம்ஸ்காராங்க நாந்தீச்ராத்தங்களில் புஜித்தாலும், நிந்திதான்னத்தைப் புஜித்தாலும் ப்ராம்ஹணன் உபவாஸத்தால் சுத்தனுகிருன்.

धौम्यः—— ब्रह्मौदने च सोमे च सीमन्तोन्नयने तथा। जातश्राद्धे नवश्राद्धे भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ।। शातातपः - वनस्पतिगते सोमे परान्नं ये तु भुञ्जते। तेषां मासकृतं पुण्यं दातारमधिगच्छति इति ।। सनत्कुमारः - एकादश्यां मुनिश्रेष्ठ यो भुङ्क्ते मूढचेतनः। प्रतिग्रासमसौ भुङ्क्ते किल्बिषं श्वानविट्समम् ।। निष्कृतिर्मद्यपस्योक्ता धर्मशास्त्रे मनीषिभिः। एकादश्यन्नकामस्य निष्कृतिः क्वापि नोदिता इति।

தௌம்யர்:- ப்ரம்ஹௌதனத்திலும், ஸோம யாகத்திலும், ஸீமந்தத்திலும், ஜாதச்ராத்தத்திலும், நவச்ராத்தத்திலும் புஜித்தால், சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். சாதாதபர்:- அமாவாஸ்யையில், எவர் பரான்னத்தைப் புஜிக்கின்றனரோ, அவரின், ஒரு மாதத்திய புண்யம் அன்னம் கொடுத்தவனை அடைகின்றது. ஸநத்குமாரர்:- ஓ முனிச்ரேஷ்டரே! எந்த மூடன் ஏகாதசியில் புஜிக்கின்ருனோ, அவன், ஒவ்வொரு கபளத்திலும், நாயின் மலத்தைப் புஜித்த பாபத்திற்குச் சமமான பாபத்தை அடைகின்ருன். மத்யத்தைப்

பருகினவனுக்கு ப்ராயச்சித்தம் தர்மசாஸ்த்ரத்தில் புத்திமான்களால் சொல்லப்பட்டுள்ளது. ஏகாதசியில் அன்னத்தைப் புஜிப்பவனுக்கு ப்ராயச்சித்தம் எங்குமே சொல்லப்படவில்லை.

कात्यायनः — अष्टवर्षाधिको मर्त्यो ह्यपूर्णाशीतिवत्सरः। एकादश्यामुपवसेत् पक्षयोरुभयोरपि इति ॥ कण्वः - एकादशीमुपवसेन्न कदाचिदतिक्रमेत् इति ॥ विष्णुः – एकादश्यां न भुञ्जीत कदाचिदपि मानवः इति ॥ आपस्तम्बः – पर्वसु चोभयोरुपवास औपवस्तमेव कालान्तरे भोजनं तृप्तिश्चान्नस्य इति ॥ उभयोः - दम्पत्योः। यत् कालान्तरे भोजनं तदप्यौपवस्तमेव - उपवास एव। तदपि दिवा। न रात्रौ। न तस्य सायमश्नीयादिति श्रौते दर्शनात्।

காத்யாயனர்:- எட்டு வயதிற்கு மேற்பட்டவனும் எண்பது வயதிற்குட்பட்டவனுமான மனிதன், இரண்டு பக்ஷங்களின் ஏகாதசியிலும் உபவாஸம் செய்ய வேண்டும். கண்வர்:- ஏகாதசியில் உபவாஸமிருக்க வேண்டும். ஒருகாலும் தவறக்கூடாது. விஷ்ணு:- மனிதன் ஒருகாலும் ஏகாதசியில் புஜிக்கக் கூடாது. ஆபஸ்தம்பர்:- தம்பதிகளான இருவருக்கும் பர்வ பக்ஷ ஸந்திகளில் உபவாஸம் விதிக்கப்படுகிறது. காலாந்தரத்தில் (ஏதாவதொரு காலத்தில்) புஜிப்பதும் உபவாஸமே யாகும். அதிலும் பகலில்தான் புஜிக்கலாம். ராத்ரியில் கூடாது. 'மறுநாள் ஹோமம் செய்யும் வஸ்துவை ஸாயங்காலத்தில் புஜிக்கக் கூடாது' என்று ச்ரௌதத்தில் காணப்படுவதால். ஒருவேளை போஜனத்தை த்ருப்தியாகும் வரை புஜிக்கலாம்.

स्मृत्यन्तरे — अर्कद्विपर्वरात्रौ च चतुर्दश्यष्टमी दिवा। एकादश्या महोरात्रं भुक्त्वा चान्द्रायणं चरेत् इति ॥ शौनकः – अष्टम्यां च चतुर्दश्यां न कुर्याद्भोजनं दिवा ॥ आदित्यपर्वसङ्क्रान्तौ व्यतीपाते पितुर्दिने। अभितश्चोपवासस्य न कुर्यान्निशि भोजनम् इति।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- பானுவாரம், இரண்டுபர்வங்கள் இவைகளில் ராத்ரியிலும், சதுர்தசீ, அஷ்டமீ இவைகளில் பகலிலும், ஏகாதசியில் பகல், ராத்ரி இவ்விரண்டிலும் போஜனம் கூடாது. புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். சௌனகர்:- அஷ்டமியிலும், சதுர்தசியிலும், பகலில் போஜனம் செய்யக் கூடாது. பானுவாரம், பர்வம், ஸங்க்ரமணம், வ்யதீபாதம், பித்ருச்ராத்ததினம், உபவாஸ தினத்தின் முன் பின் உள்ள தினங்கள் இவைகளில் ராத்ரியில் போஜனம் செய்யக்கூடாது.

अत्र प्रायश्चित्तमाह स एव — त्यंसुमेषं जपेन्मन्त्रं दशवारं जलेऽष्ट वा । अष्टम्यां वा चतुर्दश्यां दिवाभुक्तेरकल्मषम् ।। सपर्वतो जपेन्मन्त्रं पर्वान्ते दश चेज्जले । पर्वद्वये भानुवारे रात्रौ भुक्तेरकल्मषम् । स इद्वरो जपेन्मन्त्रं शतं वै विष्णुमन्दिरे । एकादश्यामहोरात्रं भुङ्क्ते यदि न पापकृत् ।। आयं पृणन्ति मन्त्रश्च दशवारं न किल्बिषम् । रात्रौ भुक्ते वत्सरान्ते मन्वादिषु युगादिषु इति ।

இது விஷயத்தில் ப்ராயச்சித்தத்தைச் சொல்லுகிறுர், சௌனகரே:- 'த்யம்ஸுமேஷம்' என்ற மந்த்ரத்தை ஜலத்திலிருந்து, பத்து, அல்லது எட்டுத் தடவை ஜபித்தால் அஷ்டமியிலோ, சதுர்தசியிலோ பகலில் புஜித்த பாபம் விலகும். 'ஸபர்வதோ' என்ற மந்த்ரத்தை, பர்வத்தின் முடிவில், ஜலத்திலிருந்து பத்துமுறை ஜபித்தால் இரண்டு பர்வங்களிலும் பானுவாரத்திலும் ராத்திரியில் புஜித்ததால் உண்டாகிய பாபம் விலகும். 'ஸஇத்வரோ' என்ற மந்த்ரத்தை விஷ்ணுவின் ஆலயத்திலிருந்து நூறுமுறை ஜபித்தால், ஏகாதசியில் இரண்டு வேளைகளிலும் புஜித்த பாபம் விலகும். 'ஆயம்ப்ருணந்தி' என்ற மந்த்ரத்தை, பத்து முறை ஜபித்தால், வர்ஷமுடிவு தினத்திலும், மன்வாதிகளிலும், யுகாதிகளிலும் ராத்ரியில் புஜித்ததால் உண்டான பாபம் விலகும்.

ग्रहणे भोजननिषेधमाह व्यासः — नाद्यात् सूर्यग्रहात् पूर्वमह्नि सायं शशिग्रहात्। ग्रहकाले च नाश्नीयात् स्नात्वाऽश्नीयाच्च मुक्तयोः। मुक्ते शशिनि भुञ्जीत यदि न स्यान्महानिशा। अमुक्तयोरस्तगयोरद्याद् दृष्ट्वा परेऽहनि॥ सूर्यग्रहे तु नाश्नीयात् पूर्वं यामचतुष्टयम्। चन्द्रग्रहे तु यामांस्त्रीन् बालवृद्धातुरैर्विना इति। बालादिषु विषये स एव – अपराह्णे न मध्याह्ने मध्याह्ने न तु सङ्गवे। भुञ्जीत सङ्गवे चेत् स्यान्न पूर्वं भुजिमाचरेत् इति।

க்ரஹணத்தில் போஜனநிஷேதத்தைச் சொல்லுகிறார் வ்யாஸர்:- ஸூர்யக்ரஹணத்திற்கு முன் பகலிலும், சந்த்ர க்ரஹணத்திற்கு முன் ஸாயங்காலத்திலும், க்ரஹண காலத்திலும் புஜிக்கக் கூடாது. அவர் முக்தர்களான பிறகு ஸ்நானம் செய்து புஜிக்கலாம். சந்த்ரன் விடப்பட்ட பிறகு, மஹாநிசி இல்லாவிடில், புஜிக்கலாம். அவர் முக்தர்களாகாமல் அஸ்தமயத்தை அடைந்தால் மறுநாளில் அவரைப் பார்த்துப் பிறகு புஜிக்க வேண்டும். ஸூர்யக்ரஹணத்தில், அந்த யாமத்திற்கு முன் நான்கு யாமங்களில் புஜிக்கக் கூடாது. சந்த்ரக்ரஹணத்தில் அந்த யாமத்திற்கு முன் மூன்று யாமங்களில் புஜிக்கக் கூடாது. பாலர், வ்ருத்தர், வ்யாதியுள்ளவரை விலக்கி. பாலர் முதலியவர் விஷயத்தில் சொல்லுகிறார், வ்யாஸரே:- அபராஹ்ணத்தில் க்ரஹணமானால், மத்யாஹ்னத்திலும், மத்யாஹ்னத்தில் க்ரஹணமானால் ஸங்கவத்திலும், ஸங்கவத்தில் க்ரஹணமானால் அதற்கு முந்தியும் போஜனம் செய்யக் கூடாது.

मार्कण्डेयः— ग्रहणं तु भवेदिन्दोः प्रथमादधियामतः। भुञ्जीतावर्तनात् पूर्वं प्रथमे प्रथमादधः॥ रात्रौ प्रथमयामे ग्रहणे दिवा प्रथमयामे भुञ्जीत। अन्यत्रावर्तनादध इत्यर्थः॥ स एव – रवेस्त्वावर्तनादूर्ध्वमर्वागेव निशीथतः। चतुर्थे प्रहरे चेत् स्यात् चतुर्थप्रहरादधः इति।

மார்க்கண்டேயர்:- ராத்ரியின் முதல் யாமத்தில் சந்த்ர க்ரஹணமானால், பகலில் முதல் யாமத்தில் புஜிக்கலாம். ராத்ரியின் முதல் யாமத்திற்குப் பிறகு க்ரஹணமானால் மத்யாஹ்னத்திற்கு முன் புஜிக்கலாம் என்று பொருள். **மார்க்கண்டேயரே:-** ஸூர்யக்ரஹணம் ஆவர்த்தனத்திற்குப் பிறகானால், முதல் நாளின் அர்த்தராத்ரிக்கு முன்பே புஜிக்கலாம். நான்காவது யாமத்திலானால், முதல்நாள் ராத்ரியின் நான்காவது யாமத்திற்கு முன்பே புஜிக்கலாம். (பிறகு கூடாது).

वृद्धगौतमः — चन्द्रसूर्यग्रहे नाद्यात् तस्मिन्नहनि पूर्वतः। राहोर्विमुक्तिं विज्ञाय स्नात्वा कुर्वीत भोजनम्। सन्ध्याकाले यदा राहुः ग्रसते शशिभास्करौ। तदहर्नैव भुञ्जीत रात्रावपि कदाचन इति॥ रवेर्ग्रस्तोदये पूर्वरात्रौ न भुञ्जीतेत्यर्थः। चन्द्रस्य ग्रस्तास्तमयेऽहर्न भुञ्जीत। भास्करे ग्रस्तास्तमिते रात्रावित्यपि व्याचक्षते॥ तथा च वसिष्ठः – ग्रस्तोदये विधोः पूर्वं नाहर्भोजनमाचरेत्। ग्रस्तोदिते तथा सूर्ये न रात्रौ भोजनं चरेत् इति॥

வ்ருத்த கௌதமர்:- சந்த்ர, ஸூர்ய க்ரஹணங்களில், அந்தத் தினத்தில் அதற்குமுன் புஜிக்கக் கூடாது. ராஹு மோசனத்தைப் பார்த்துப் பிறகு ஸ்நானம் செய்து பிறகு போஜனம் செய்ய வேண்டும். ஸந்த்யா காலத்தில் ராஹுவானவன் சந்த்ரனையும், ஸூர்யனையும் க்ரஹிப்பானாகில், அந்தப் பகலிலும், அந்த ராத்ரியிலும், ஒருகாலும் புஜிக்கக் கூடாது. ஸூர்யனின் க்ரஸ்தோதயத்தில் முன்னிரவில் புஜிக்கக் கூடாது. சந்த்ரனின் க்ரஸ்தாஸ்தமயத்தில் பின்பகலில் புஜிக்கக் கூடாது என்பது பொருள். 'சந்த்ரனின் க்ரஸ்தாஸ்தமயத்தில் மறுபகலில் புஜிக்கக் கூடாது. ஸூர்யனின் க்ரஸ்தாஸ்தமயத்தில் அடுத்த ராத்ரியில் புஜிக்கக் கூடாது, என்றும் வ்யாக்யானம் செய்கின்றனர். அவ்விதமே, **வஸிஷ்டர்:-** சந்த்ரனின் க்ரஸ்தோதயத்தில்,

முன்பகலில் போஜனம் செய்யக் கூடாது. ஸூர்யனின் க்ரஸ்தோதயத்தில் முன் ராத்ரியில் போஜனம் செய்யக் கூடாது.

भृगुः— ग्रस्तावेवास्तमानं तु रवीन्दू प्राप्नुतो यदि। तयोः परेद्युरुदये स्नात्वाऽभ्यवहरेन्नरः इति ॥ मार्कण्डेयः – चन्द्रस्य यदि वा भानोर्यस्मिन्नहनि भार्गव। ग्रहणं तु भवेत्तस्मिन् तत्पूर्वं भोजनं नरः ॥ नाचरेत् सङ्ग्रहं चैव तथैवास्तमुपागते। यावत्तयोर्नोदयः स्यान्नाश्नीयात् तावदेव तु ॥ मुक्तिं दृष्ट्वा तु भुञ्जीत स्नानं कृत्वा ततः परम् इति ॥ मनुरपि – अमुक्तयोरस्तगयोर्दृष्ट्वा स्नात्वा परेऽहनि इति।

ப்ருகு:- ஸூர்யனும், சந்த்ரனும், ராஹுவினால் பிடிக்கப்பட்டவராகவே அஸ்தமயத்தை அடைந்தால், மறுநாளில் அவ்விருவரின் உதயத்தில் ஸ்நானம் செய்து, மனிதன் புஜிக்க வேண்டும். மார்க்கண்டேயர்:- ஓ பார்க்கவ! சந்த்ரனுக்காவது, ஸூர்யனுக்காவது எந்தத் தினத்தில் க்ரஹணம் ஏற்படுமோ அந்தத் தினத்தில், அதற்குமுன் மனிதன் போஜனம் செய்யக் கூடாது. ஸங்க்ரஹமும் செய்யக் கூடாது. அவ்விதமே, க்ரஹணத்துடன் அவ்விருவரும் அஸ்தமயத்தை அடைந்தாலும், அவ்விருவரின் உதயம் வரையிலும் போஜனம் செய்யக் கூடாது. அவ்விருவரின் மோசனத்தைப் பார்த்து, ஸ்நானம் செய்து, அதற்குப் பிறகே போஜனம் செய்ய வேண்டும். மனுவும்:- க்ரஹணத்தால் விடுபடாமல் ஸூர்யனும், சந்த்ரனும் அஸ்தமயத்தை அடைந்தால், மறுநாளில் அவர்களைப் பார்த்து ஸ்நானம் செய்து போஜனம் செய்ய வேண்டும்.

विष्णुधर्मे—अहोरात्रं न भुञ्जीत चन्द्रसूर्यौ ग्रहेऽस्तगौ। मुक्तिं बुध्वा तु भोक्तव्यं स्नानं कृत्वा ततः परम् इति। ग्रहे - ग्रहणे। ग्रस्तास्तगे शशिनि ग्रहणात् पूर्वस्यां रात्रौ परस्मिन्नह्नि च न भुञ्जीत। ग्रस्तास्तगे सूर्ये ग्रहणात् पूर्वस्मिन्नह्नि परस्यां रात्रौ च न भुञ्जीतेत्यर्थः ॥ दक्षः -

अयने विषुवे चैव चन्द्रसूर्यग्रहे तथा। अहोरात्रोषितः स्नात्वा सर्वपापैः प्रमुच्यते इति ।। इदं पुत्रिव्यतिरिक्तविषयम्। सङ्क्रान्त्यामुपवासं च कृष्णैकादशिवासरे । चन्द्रसूर्यग्रहे चैव न कुर्यात् पुत्रवान् गृही इति स्मरणात्।। षट्त्रिंशन्मते — सर्वेषामेव वर्णानां सूतकं राहुदर्शने। सचेलं तु भवेत् स्नानं सूतकान्नं च वर्जयेत् इति ।। सूतकान्नं - राहुसूतकान्नम्।

விஷ்ணுதர்மத்தில்:- *க்ரஹணத்தில், சந்த்ரனும், ஸூர்யனும் க்ரஸ்தராகவே அஸ்தமயத்தை அடைந்தால், அவர்களின் மோக்ஷத்தைத் தெரிந்து, பிறகு ஸ்நானம் செய்து புஜிக்க வேண்டும். சந்த்ரன் க்ரஸ்தனாய் அஸ்தமயத்தை அடைந்தால், க்ரஹணத்திற்கு முன் ராத்ரியிலும், பின் பகலிலும் புஜிக்கக் கூடாது. ஸூர்யன் க்ரஸ்தனாய் அஸ்தமயத்தை அடைந்தால், க்ரஹணத்திற்கு முன் பகலிலும், பின் ராத்ரியிலும் புஜிக்ககூடாதென்று பொருள்.* **தக்ஷர்:-** *'அயனத்திலும், விஷுவத்திலும், சந்த்ரக்ரஹணத்திலும், ஸூர்யக்ரஹணத்திலும், பகல், இரவு இரண்டிலும் உபவாஸமிருந்து ஸ்நானம் செய்தால் எல்லாப் பாபங்களாலும் விடப்படுவான்' என்றார். இது புத்ரனுள்ளவனைத் தவிர்த்த மற்றவரைப் பற்றியதாகும். (ஏனெனில்) 'ஸங்க்ரமணம், க்ருஷ்ணபக்ஷகாதசீ, சந்த்ர க்ரஹணம், ஸூர்யக்ரஹணம் இவைகளில் உபவாஸத்தைப் புத்ரனுள்ளவனை க்ருஹஸ்தன் செய்யக் கூடாது' என்று ஸ்ம்ருதி இருப்பதால்.* **ஷட்த்ரிம்சன்மதத்தில் :-** *க்ரஹண காலத்தில், எல்லாப் வர்ணத்தாருக்கும் ஆசௌசமுண்டாகிறது. ஆகையால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். ஸூதகான்னத்தையும் வர்ஜிக்க வேண்டும். ஸூதகான்னம் - ராஹுஸூதகான்னம்.*

वृद्धमनुः—आरनालं च तक्रं च पाथेयं घृतपाचितम्। उदकं च कुशच्छन्नं न दुष्येद्राहुसूतके इति ।। स्मृतिरत्ने — आरनालं तथा क्षीरं

कन्दलं दधि सक्तवः। स्नेहपकं च न तैलं च न कदाचित् प्रदुष्यति इति॥ व्यासः — संवत्सरस्यैकमपि चरेत् कृच्छ्रं द्विजोत्तमः। अज्ञात भुक्तशुध्यर्थं ज्ञातस्य तु विशेषतः इति॥

வ்ருத்தமனு:- கஞ்சி, மோர், நெய்யில் பக்வமான பாதேயம் (வழியில் கொண்டுபோய்ப் புஜிக்கக் கூடிய வஸ்து) ஜலம் இவை தர்ப்பத்தால் மறைக்கப் பட்டிருந்தால் ராஹுக்ரஸ்தகத்தில் தோஷமுள்ளதாகாது. ஸ்ம்ருதிரத்னத்தில்:- கஞ்சி, பால், கிழங்கு, தயிர், மாவு, எண்ணெய் முதலியதில் பக்வமாகியது, எண்ணெய் இவை ஒருகாலும் தோஷமுள்ளதாகாது. வ்யாஸர்:- ப்ராம்ஹணன், அக்ஞானத்தால் செய்யப்படும் அபோஜ்ய போஜனத்தின் சுத்திக்காக ஒரு வர்ஷத்திற்கு ஒரு க்ருச்ரத்தையாவது அனுஷ்டிக்க வேண்டும். ஜ்ஞானத்தால் செய்யப்பட்டிருந்தால் அதற்காக விசேஷமாய் அனுஷ்டிக்க வேண்டும்.

भक्ष्यमांसानि।

भक्ष्यमांसमाह याज्ञवल्क्यः - भक्ष्याः पञ्चनखाः सेधा गोधा कच्छप शल्यकाः। शशश्च मत्स्येष्वपि हि सिहंतुण्डकरोहिताः॥ तथा पाठीन राजीव सशल्काश्च द्विजातिभिः इति॥ मनुरपि — श्वाविधं शल्यकं गोधा खड्ग कूर्मशशांस्तथा। भक्ष्यान् पञ्चनखेष्वाहुरनुष्ट्रांश्चैक-तोदतः इति॥ गौतमः – पञ्चनखाः शल्यकः श्वाविद्गोधा-खड्गकच्छपाः इति॥ याज्ञवल्क्यः – प्राणात्यये तथा श्राद्धे प्रोक्षितं द्विजकाम्यया। देवान् पितॄन्समभ्यर्च्य खादन् मांसं न दोषभाक् इति॥ प्रोक्षितम् - यागशिष्टम्।

பக்ஷ்யமான மாம்ஸங்கள்

பக்ஷிக்கத்தகுந்த மாம்ஸத்தைச் சொல்லுகிறார், யாக்ஞவல்க்யர்:- ஐந்து நகமுள்ள ப்ராணிகளுள், ஸேதா,

(ச்வாவித்) உடும்பு, ஆமை, சல்யகம், முயல் என்ற இவ்வைந்தும் பக்ஷ்யங்களாகும். மீன்களுள், ஸிம்ஹம், துண்டகம், ரோஹிதம், பாடீனம், ராஜீவம், ஸசல்கம் என்ற இவை மூன்று வர்ணத்தாருக்கும் பக்ஷ்யங்களாகும். **மனுவும்:-** *ஐந்து நகங்களுள்ளவைகளுள், ச்வாவித், சல்யகம், உடும்பு, கட்கம், ஆமை, முயல் இவை பக்ஷ்யங்களாகும். ஒட்டகம் தவிர மற்ற ஒருவரிசைப் பல்லுள்ளவை பக்ஷ்யங்களாகும்.* **கௌதமர்:-** *சல்யகம், ச்வாவித், உடும்பு, கட்கம், ஆமை என்ற இந்த ஐந்துநகமுள்ள ப்ராணிகள் பக்ஷ்யங்களாகும்.* **யாக்ஞவல்க்யர்:-** *ப்ராணுபத் காலத்திலும், ச்ராத்தத்திலும் மாம்ஸத்தைப் பக்ஷிக்கலாம். யாகத்தில் ப்ரோக்ஷணமென்னும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட பசுமாம்ஸத்தைப் புஜிக்கலாம். ப்ராம்ஹண போஜனத்திற்கும், தேவபித்ரு பூஜைக்கும் ஸாதிக்கப்பட்ட மாம்ஸத்தை, அவர்களைப் பூஜித்துப் பிறகு புஜிப்பவன் தோஷத்தை அடைவதில்லை. (ப்ரோக்ஷிதம் = யாகசிஷ்டம்.)*

स्मृतिरत्ने—प्रोक्षितं भक्षयेन्मांसं ब्राह्मणस्य च काम्यया । यथाविधि नियुक्तं च प्राणानामेव चात्यये इति ।। मनुः– नियुक्तस्तु यथा न्यायं पललं यः परित्यजेत् । स प्रेत्य पशुतां याति सम्भवानेक-विंशतिम् । इति ।। स एव – मधुपर्के च यज्ञे च पितृदैवतकर्मणि । अत्रैव पशवो हिंस्या नान्यत्रेत्यब्रवीन्मनुः इति ।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- *ப்ரோக்ஷிதமான மாம்ஸத்தையும், ப்ராம்ஹணனைப் பூஜிப்பதற்காக ஸாதிக்கப்பட்ட மாம்ஸத்தையும், ச்ராத்தத்தில் மாம்ஸத்தையும், ப்ராணுபத்காலத்தில் புஜிக்க வேண்டியதானால் அந்த மாம்ஸத்தையும் புஜிக்கலாம்.* **மனு:-** *ச்ராத்தத்தில் விதிப்படி வரிக்கப்பட்ட எந்த ப்ராம்ஹணன், மாம்ஸத்தைப் புஜிக்காமல் விடுகின்றானோ, அவன் இறந்த பிறகு இருபத்தொரு பிறவிகளில் பசுவாய்ப் பிறப்பான்.*

மனுவே:- மதுபர்க்கத்திலும், யாகத்திலும், பித்ரு கர்மத்திலும், தேவகர்மத்திலும் என்ற இவைகளில் மட்டும் பசுக்களை ஹிம்ஸிக்கலாம். மற்ற விஷயத்தில் ஹிம்ஸிக்கக் கூடாதென்றார் மனு.

यज्ञव्यतिरिक्ते सर्वत्र कर्मणि कलौ प्राणिवधो मांसभक्षणं च निषिद्धम्। वरातिथिपितृभ्यस्तु न पशूपाकृतिः कलौ इति स्मरणात्। यज्ञार्थे पशुवधे मांसभक्षणे न दोषोऽस्तीत्याह मनुः– यज्ञार्थं पशवः सृष्टाः स्वयमेव स्वयंभुवा । यज्ञो हि भूत्यै सर्वस्य तस्माद्यज्ञे वधोऽवधः । ओषध्यः पशवो वृक्षाः तिर्यञ्चः पक्षिणस्तथा । यज्ञार्थं निधनं प्राप्ताः प्राप्नुवन्त्युत्सृतीः पुनः । यज्ञाय जग्धिर्मांसस्येत्येष दैवो विधिः स्मृतः । अतोऽन्यथा प्रवृत्तिस्तु राक्षसो विधिरुच्यते ।। नाद्यादविधिना मांसं विधिज्ञोऽनापदि द्विजः । जग्ध्वा ह्यविधिना मांसं प्रेतस्तैरद्यतेऽवशः ।। असंस्कृतान् पशून् मन्त्रैर्नाद्याद्विप्रः कदाचन । मन्त्रैस्तु संस्कृतानद्यात् शाश्वतं धर्ममास्थितः ।। या वेदविहिता हिंसा नियताऽस्मिंश्चराचरे । अहिंसामेव तां विद्याद्वेदाद्धर्मो हि निर्बभौ ।। यावन्ति पशुरोमाणि तावत्कृत्वो हि मारणम्। वृथा पशुघ्नः प्राप्नोति प्रेत्य जन्मनि जन्मनि ।। योऽहिंसकानि भूतानि हिनस्त्यात्मसुखेच्छया। स जीवंश्च मृतश्चैव न कचित् सुखमेधते ।। नाकृत्वा प्राणिनां हिंसां मांसमुत्पद्यते कचित्। न च प्राणिवधः स्वर्ग्यः तस्मान्मांसं विवर्जयेत्। स्वमांसं परमांसेन यो वर्धयितुमिच्छति । अनभ्यर्च्य पितॄन् देवान् न ततोऽन्योऽस्त्य-पुण्यकृत् । मां स भक्षयिताऽमुत्र यस्य मांसमिहाद्म्यहम् । एतन्मांसस्य मांसत्वं प्रवदन्ति मनीषिणः ।। अनुमन्ता विशसिता निहन्ता क्रयविक्रयी । संस्कर्ता चोपहर्ता च खादकश्चेति घातुकाः इति ।। खादके हि सत्यनुमन्त्रादयो भवन्ति, तेन वधमकुर्वतोऽपि खादकस्य दोषो भवति । तस्मात् न खादकः स्यादित्यर्थः ।

அவன், பிழைத்திருந்தும், இறந்தும் ஒருகாலும் ஸுகமாய் இருக்கமாட்டான். ப்ராணிகளுக்கு ஹிம்ஸையைச் செய்யாமல் ஒருகாலும் மாம்ஸம் உண்டாவதில்லை. ப்ராணிகளின் வதம் ஸ்வர்க்கத்தைக் கொடுப்பதல்ல, நரகத்தைக் கொடுப்பதாகும். ஆகையால் மாம்ஸத்தை வர்ஜிக்க வேண்டும். எவன், பித்ருக்களையும், தேவர்களையும் பூஜிக்காமல், தன் தேஹத்தின் மாம்ஸத்தை இதர ப்ராணியின் மாம்ஸத்தால் வளர்க்க விரும்புகிறானோ, அவனைவிடப் பாபம் செய்பவனான மற்றொருவன் இல்லை. இவ்வுலகில் எந்த ப்ராணியின் மாம்ஸத்தை நான் பக்ஷிக்கின்றேனோ, ஸ:= அந்த ப்ராணி, மாம் = என்னை, பரலோகத்தில் பக்ஷிக்கப் போகின்றான், என்ற இந்த நிர்வசனத்தை மாம்ஸ சப்தத்திற்குப் பண்டிதர்கள் சொல்லுகின்றனர். பசுவதத்தை அனுமதிக்கின்றவன், பசுவைக் கொல்லுகிறவன், சேதிக்கின்றவன், க்ரயம் செய்பவன், விலைக்கு வாங்குகிறவன், சமைப்பவன், பரிமாறுகிறவன், புஜிக்கின்றவன் என்ற இவர் எல்லோரும் காதகர்களாவர். மாம்ஸத்தைப் பக்ஷிப்பவன் இருந்தாலல்லவா அனுமதிப்பவன் முதலியவர் ஏற்படுகின்றனர். ஆகையால் நேரில் தான் வதம் செய்யா விடினும் மாம்ஸ பக்ஷகனுக்குத் தோஷமுண்டாகிறது. ஆகையால் மாம்ஸபக்ஷகனாய் இருக்கக் கூடாதென்பது பொருள்.

मांसवर्जने फलमाह स एव — वर्षे वर्षेऽश्वमेधेन यो यजेत शतं समाः । मांसानि च न खादेद्यस्तयोः पुण्यफलं समम् ॥ फलमूलाशनैर्मेध्यैर्मुन्यन्नानां च भोजनैः । न तत् फलमवाप्नोति यन्मांसपरिवर्जनात् इति ।

மாம்ஸத்தை வர்ஜிப்பதில் பலனைச் சொல்லுகிறார். மனுவே:- எவன், ஒவ்வொரு வர்ஷத்திலும் அச்வமேத யாகத்தை நூறு வருஷம் வரையில் செய்கின்றானோ, எவன் மாம்ஸத்தையே பக்ஷிக்காமல் இருக்கின்றானோ,

யாகம் தவிர மற்றக் கார்யத்தில், கலியுகத்தில், ப்ராணிவதமும், மாம்ஸபக்ஷணமும் நிஷேதிக்கப் பட்டுள்ளது. 'வரன், அதிதி, பித்ருக்கள் இவருக்காகப் பசுவதம் செய்வது கலியில் இல்லை' என்று ஸ்ம்ருதி உள்ளது. யாகத்திற்காகச் செய்யும் பசுவதத்திலும், மாம்ஸ பக்ஷணத்திலும் தோஷமில்லை என்கிறார். மனு :- யாகத்திற்கென்று, ப்ரம்ஹதேவன் பசுக்களை ஆதரவுடன் ஸ்ருஷ்டித்திருக்கின்றார். யாகமென்பது எல்லோருக்கும் க்ஷேமத்தைப் பற்றியாகின்றது. ஆகையால் யாகத்தில், செய்யும் வதம் வதமல்ல. செடிகள், பசுக்கள், வ்ருக்ஷங்கள், திர்யக்ஜாதிகள், பக்ஷிகள் என்ற இவை யாகத்திற்காக மரணத்தை அடைந்தால், மறுபடி சிறந்த பிறப்புகளை அடைகின்றனர். யாகம் பூர்ணமாவதற்காக மாம்ஸத்தைப் பக்ஷிப்பதென்பது தைவானுஷ்டானம். இதைவிட வேறு ப்ரகாரத்தால் பக்ஷிப்பது ராக்ஷஸருக்கு சிதமான அனுஷ்டானம். விதியை அறிந்த ப்ராம்ஹணன், ஆபத்தில்லாத காலத்தில், விதியில்லாமல் மாம்ஸத்தைப் புஜிக்கக் கூடாது. விதியில்லாமல் புஜித்தானுகில், இறந்த பிறகு பரலோகத்தில், பரவசனாய், (எந்தப் பசுக்களின் மாம்ஸத்தைப் புஜித்தானோ) அந்தப் பசுக்களால் பக்ஷிக்கப் படுகிறான். ப்ராம்ஹணன் மந்த்ரங்களால் ஸம்ஸ்காரம் செய்யப்படாத பசுக்களை ஒருகாலும் பக்ஷிக்கக் கூடாது. சாச்வதமான (நித்யமான) யாகாதிவிதியை அடைந்து, மந்த்ரங்களால் ஸம்ஸ்க்ருதமான பசுக்களையே பக்ஷிக்க வேண்டும். ஸ்தாவர ஜங்கமரூபமான இவ்வுலகில், வேதத்தால் விதிக்கப்பட்ட ஹிம்ஸை எதுவோ அதை அஹிம்ஸையென்றே அறிய வேண்டும். தர்மம் வேதத்தினின்றும் ப்ரகாசமாகிறது. விதியில்லாமல் தனக்காகப் பசுவைக் கொன்றவன், இறந்து, பசுவின் மயிர்கள் எவ்வளவோ அவ்வளவு முறை ஒவ்வொரு ஜன்மத்திலும் மரணத்தை அடைகிறான். இது ஆகமப்ரஸித்தம். எவன் தனது ஸுகத்தின் விருப்பத்தால், தன்னை ஹிம்ஸிக்காத ப்ராணிகளை ஹிம்ஸிக்கின்றானோ,

அவ்விருவருக்கும் புண்யபலம் ஸமமாகும். மாம்ஸ பக்ஷணத்தை வர்ஜிப்பதால் எந்தப் பலமோ, அந்தப் பலத்தை, பழம், கிழங்கு இவைகளைப் புஜிப்பதாலும், சுத்தமான முனிகளின் அன்னங்களைப் புஜிப்பதாலும், அடைவதில்லை.

स एव—न मांसभक्षणे दोषो न मद्ये न च मैथुने। प्रवृत्तिरेषा भूतानां निवृत्तिस्तु महाफला इति ॥ मद्ये - मदकरद्रव्ये अविहिताप्रतिषिद्धे ताम्बूलादिके। मैथुने - अविहिताप्रतिषिद्धे अनृतौ स्वदारगमन इत्यर्थः ॥ मांसभक्षणे दोषाभाववचनं प्राणात्ययविषयम्। नार्तो दुष्यत्यदन्नाद्यान् प्राणानामेव चात्यये इति च तेनैव स्मरणात् ॥ देशविशेषविषयं युगान्तरविषयं वेति स्मृतिरत्नादौ। तथा च व्यासः समुद्रयात्रा मांसस्य भक्षणं शस्त्रजीविका। शीधुपानमुदीच्यानामविगीतानि धर्मतः। मन्त्रेणासंस्कृतं मांसं नाद्याद्विप्रः कलौ युगे। यज्ञे तूषाकृतं मांसमश्नीयाद्विधिचोदितम् इति।

மனுவே:- மாம்ஸ பக்ஷணத்திலும், அவிஹிதமாயும் அப்ரதிஷித்தமாயுமுள்ள தாம்பூலம் முதலிய மதகர த்ரவ்யத்திலும், அவிஹிதமும் அப்ரதிஷித்தமுமான, ருதுகாலமில்லாத காலத்தில் ஸ்வதாரகமனமான மைதுனத்திலும் தோஷமில்லை. இது ப்ராணிகளுக்கு ஸ்வாபாவிகமானது. ஆனால், இவைகளை வர்ஜிப்பது மஹாபலத்தைக் கொடுப்பதாகும். மாம்ஸ பக்ஷணத்தில் தோஷமில்லையென்றது ப்ராணாபத்து விஷயம். 'வ்யாதியுள்ளவன் ப்ராணாபத் காலத்தில் நிஷித்த வஸ்துக்களைப் பக்ஷித்தாலும், தோஷத்தை அடையமாட்டான்' என்று மனுவே சொல்லி உள்ளார். 'இது தேச விசேஷத்தைப் பற்றியது, அல்லது வேறு யுகத்தைப் பற்றியது' என்று ஸ்ம்ருதிரத்னம் முதலியதில் சொல்லப்பட்டுள்ளது. அவ்விதமே, வ்யாஸர்:- ஸமுத்ரயாத்ரை, மாம்ஸபக்ஷணம், ஆயுதங்களால் ஜீவிப்பது, மத்யபானம் என்ற இவை வடக்குத்

தேசத்திலுள்ளவர்கட்குத் தர்மசாஸ்த்ரப்படி நிஷித்தமல்ல. ப்ராம்ஹணன் கலியுகத்தில் மந்த்ரத்தால் ஸம்ஸ்காரம் செய்யப்படாத மாம்ஸத்தைப் புஜிக்கக் கூடாது. யாகத்திலோவெனில் வேதத்தால் விதிக்கப்பட்ட மந்த்ரத்தால் ஸ்ம்ஸ்க்ருதமான மாம்ஸத்தைப் புஜிக்கலாம்.

பக்ஷ்ய மாம்ஸவிதி முற்றிற்று.

—★—

उत्तरापोशनादि।

बोधायनः—अमृतापिधानमसीत्युपरिष्टादपः पीत्वाऽऽचान्तो हृदयमभिमृशति प्राणानां ग्रन्थिरसि रुद्रो माविशान्तक स्तेनान्नेनाप्यायस्वेति पुनराचम्य दक्षिणपादाङ्गुष्ठे पाणिं निस्रावयत्यङ्गुष्ठमात्रः पुरुषोऽङ्गुष्ठं च समाश्रितः। ईशः सर्वस्य जगतः प्रभुः प्रीणाति विश्वभुगित्यथानुमन्त्रणमूर्ध्वहस्तः समाचरेत् श्रद्धायां प्राणे निविश्यामृतꣳ हुतं प्राणमन्नेनाप्यायस्व, श्रद्धायामपाने, श्रद्धायां व्याने, श्रद्धायामुदाने, श्रद्धायाꣳसमाने, निविश्येति यथालिङ्गमनुषङ्गः, ब्रह्मणि म आत्माऽमृतत्वायेत्यक्षरेणात्मानं योजयेत् सर्वक्रतुयाजिनामात्मयाजी विशिष्यते इति।

உத்தராபோசனம் முதலியது

போதாயனர்:- 'அம்ருதாபிதானமஸி' என்று மேல் ஜலத்தைப் பருகி, ஆசமனம் செய்து, 'ப்ராணாநாம் + ப்யாயஸ்வ' என்ற மந்த்ரத்தால் ஹ்ருதயத்தை ஸ்பர்சித்து, மறுபடி ஆசமனம் செய்து, வலதுகாலின் பெருவிரலில் 'அங்குஷ்டமாத்ர:+ விச்வபுக்' என்ற மந்த்ரத்தால் கையிலுள் ஜலத்தை வடியவிடவேண்டும். பிறகு கையை உயர்த்தி வைத்துக் கொண்டு, 'ச்ரத்தாயாம் ப்ராணே நிவிச்யாம்ருதம் ஹு‍தம். ப்ராணமந்நேநாப்யாயஸ்வ' என்பது முதலிய ஐந்து மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்து, பரமாத்மாவோடு ஜீவாத்மாவைச் சேர்க்க

வேண்டும். இவ்விதமனுஷ்டிக்கும் ஆத்மயாஜீ, எல்லா க்ரதுக்களையும் அனுஷ்டித்தவரைவிடச் சிறந்தவனாகிறான்.

गद्यव्यासोऽपि—ततस्तृप्तः सन्नमृतापिधानमसीत्यपः प्राश्य तस्माद् देशान्मनागपसृत्य विधिवदाचामेत् इति । भरद्वाजः– भुक्त्वाऽमृतापिधानमसीति च निपीय कम् । आचान्तः पुनराचामेद्यावन्मण्डलशोधनम् इति ॥ देवलः – भुक्तोच्छिष्टं समादाय सर्वस्मात्किञ्चिदाचमन् । उच्छिष्ट भागधेयेभ्यः सोदकं निवपेद्भुवि इति ॥ विष्णुः – न हस्तौ प्रक्षाल्य चुलुकं गृह्णीयात् इति ॥ सङ्ग्रहे – अमृतापिधानमसीत्यवशिष्य जलं पिबेत् । तच्छेषं रौरवेत्युक्त्वा बलिप्रान्ते विसर्जयेत् इति ।

கத்யவ்யாஸரும்:- பிறகு த்ருப்தியுள்ளவனாய் 'அம்ருதாபி தானமஸி' என்று ஜலத்தைப் பருகி, அந்த இடத்தினின்றும் கொஞ்சம் நகர்ந்து, விதிப்படி ஆசமனம் செய்ய வேண்டும். **பரத்வாஜர்:-** புஜித்து 'அம்ருதாபி-தானமஸி' என்று ஜலத்தைப் பருகி, ஆசமனம் செய்து, போஜன பாத்ரத்திற்கு அடியிலுள்ள மண்டலத்தைச் சுத்தம் செய்த பிறகு மறுபடி ஆசமனம் செய்ய வேண்டும். **தேவலர்:-** உத்தராபோசனம் பருகுவதற்குமுன், உச்சிஷ்டமான எல்லாவற்றினின்றும் கொஞ்சம் எடுத்து ஜலத்துடன் உச்சிஷ்டபாகிகளுக்காகப் பூமியில் வைக்க வேண்டும். **விஷ்ணு:-** கைகளை அலம்பிய பிறகு ஆபோசனத்தைப் பருகக் கூடாது. **ஸங்க்ரஹத்தில்:-** 'அம்ருதாபிதானமஸி' என்று ஜலத்தைப் பருகும்போது கொஞ்சம் மீதிவைத்துப் பருகி, மீதி ஜலத்தை, பலியின் ஸமீபத்தில் 'ரௌரவே' என்ற மந்த்ரத்தால் விடவேண்டும்.

शातातपः—अर्धं पीत्वा तु गण्डूषमर्धं त्याज्यं महीतले । रसातलगता नागास्तेन प्रीणन्ति नित्यशः ॥ हस्तं प्रक्षाल्य गण्डूषं यः पिबेत् पापमोहितः । स देवांश्च पितॄंश्चैव आत्मानं चैव घातयेत् इति ॥ गण्डूषमत्रोत्तरापोशनम् ॥

சாதாதபர்:- பாதி கண்டூஷத்தைப் பருகவேண்டும். பாதியைப் பூமியில் விடவேண்டும். அதனால், பாதாளத்திலுள்ள நரகர்கள் எப்பொழுதும் த்ருப்தரா கின்றனர். எவன் பாபத்தால் மயங்கியவனாய், கையை அலம்பிப் பிறகு கண்டூஷத்தைப் பருகின்றானோ அவன். தேவர்களையும், பித்ருக்களையும், தன்னையும் ஹிம்ஸிக்கின்றான், இங்கு கண்டூஷம் உத்தாரபோசனம் என்பதாம்.

तथा च मार्कण्डेयः - उत्तरापोशनात्पूर्वं हस्तं न क्षालयेद् द्विजः । अर्धं पिबति गण्डूषं अर्धं त्यजति भूतले। प्रीणन्ति पितरः सर्वे याश्चान्या भूमिदेवताः । हस्तं निर्लिह्य संक्षाल्य विधूयोद्धूय पात्रतः । गण्डूषं धारयेद्यस्तु सुरामिव स धारयेत् इति । गण्डूषार्धत्यागमन्त्रमाह स एव—रौरवेऽपुण्यनिलये पद्मार्बुदनिवासिनाम् । अर्थिनामुदकं दत्तमक्षय्यमुपतिष्ठतु ।। उत्तरापोशनात् पश्चात् पात्रं हस्तान्न संस्पृशेत् । यदि स्पृशेत्तु मोहेन सचेलस्नानमाचरेत् ।। पीत्वा भुक्त्वा च यो मर्त्यः शून्यं पात्रं परित्यजेत् । स भूयः क्षुत्पिपासार्तो भवेज्जन्मनि जन्मनि ।। अपसृत्य ततः पश्चात् गण्डूषान् षोडशाचरेत् ।। विप्रस्य दक्षिणे भागे देवास्तिष्ठन्ति यत्नतः । आसीन एव गण्डूषान् वामभागे विसर्जयेत् इति ।

மார்க்கண்டேயர்:- ப்ராம்ஹணன், உத்தராபோசனத்திற்கு முன் கையை அலம்பக்கூடாது. பாதி கண்டூஷத்தைப் பருகவேண்டும். பாதியைப் பூமியில் விடவேண்டும். ஸகலமான பித்ருக்களும், பூமியிலுள்ள மற்றத் தேவதைகளும் த்ருப்தராகின்றனர். எவன் கையை நக்கியாவது, அலம்பியாவது, உதறியாவது, பாத்ரத்தில் தேய்த்தாவது பிறகு கண்டூஷத்தைப் பருகின்றானோ அவன் ஸுரையைப் பானம் செய்பவன் போலாகிறான். கண்டூஷத்தின் பாதியைப் பூமியில் விடும் மந்த்ரத்தைச் சொல்லுகிறார், மார்க்கண்டேயரே:- 'ரௌரவேऽபுண்ய + முபதிஷ்டது' என்று இதன் பொருள் - 'பாபிகளுக்கு

ஸ்தானமாகிய ரௌரவமெனும் நரகத்தில் வெகு காலமாய் வஸிப்பவரும், ஜலத்தை விரும்புகின்றவருமான நாரகிகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட இந்த ஜலம் அழிவற்றதாய் அவரை அடையவேண்டும்' என்று. உத்தரா போசனத்திற்குப் பிறகு, போஜன பாத்ரத்தைக் கையால் தொடக்கூடாது. அறியாமல் தொட்டால் ஸசேலஸ்நானம் செய்ய வேண்டும். எந்த மனிதன் ஜலத்தைப் பருகிய பிறகும், போஜனம் செய்த பிறகும் அந்தப் பாத்ரத்தைச் சூன்யமாய் விடுகின்றானோ, அவன் பிறகு ஒவ்வொரு பிறவியிலும் மிகவும் பசி, தாஹங்களால் வருந்துகின்றவனாய் ஆவான். பிறகு அந்த இடத்திலிருந்து நகர்ந்து 16-முறை வாயைக் கொப்புளிக்க வேண்டும். ப்ராம்ஹணனின் வலது பாகத்தில் தேவர்கள் இருக்கின்றனர். ஆகையால் கவனமாய் உட்கார்ந்தவனாகவே, கண்டூஷங்களை இடது பாகத்தில் கொப்புளிக்க வேண்டும்.

शाण्डिल्यः— माषादिचूर्णैर्मृद्भिर्वा प्रक्षाल्य करयोर्द्वयम् । प्रक्षाल्य जानू पादौ च काष्ठैर्दन्तान् विशोधयेत् इति ।। और्वः— आस्यं प्रक्षाल्य गण्डूषं पिबेद्भुक्त्वा च यो द्विजः । दैवं श्राद्धमसौ हन्यात् पित्र्यमात्मानमेव च इति ।। गण्डूषकाले आस्यस्थजलं न पिबेदित्यर्थः । देवलः— भुक्त्वाऽऽचामेद्यथोक्तेन विधानेन समाहितः । शोधयेन्मुखहस्तौ च मृदद्भिर्घर्षणैरपि ।। तस्मिन्नाचमनं कुर्यात् यत्र भाण्डेऽथ भुक्तवान् । यद्युत्तिष्ठत्यनाचान्तो भुक्तवानासनात्ततः ।। स्नानं सद्यः प्रकुर्वीत सोऽन्यथाऽप्रयतो भवेत् इति ।। गौतमः – गण्डूषस्याथ समये तर्जन्या वक्त्रचालनम् । कुर्वीत यदि मूढात्मा रौरवे नरके पतेतद् इति । पराशरः – गण्डूषं पादशौचं च कृत्वा वै कांस्यभाजने । षण्मासान् भुवि निक्षिप्य उद्धृत्य पुनराहरेत् इति । स्मृत्यन्तरे – भुक्त्वोच्छिष्टस्त्वनाचान्तः शूद्रादीन् यदि पश्यति । ज्ञानतोऽज्ञानतो वापि तैः साकं भुक्तवानसौ इति ।

சாண்டில்யர்:- உளுந்து முதலியதின் மாவுகளாலாவது, மண்களாலாவது இரண்டு கைகளையும் அலம்பி, முழங்கால்வரை கால்களையும் அலம்பி, குச்சிகளால் பற்களையும் சுத்திசெய்ய வேண்டும். ஔர்வர்:- எந்த ப்ராம்ஹணன் புஜித்த பிறகு, வாயை அலம்பி, கண்டூஷத்தைப் பருகுகின்றனோ, அவன், தைவகார்யம், பித்ருகார்யம், ச்ராத்தம் இவைகளையும், தன்னையும் ஹிம்ஸித்தவனாகிறான். வாய்க் கொப்புளிக்கும்போது வாயிலுள்ள ஜலத்தைக் குடிக்கக் கூடாதென்பது பொருள். தேவலர்:- போஜனம் செய்து, சொல்லிய விதிப்படி, கவனத்துடன் உத்தராபோசனத்தைப் பருகவேண்டும். வாய், கைகள் இவைகளை மண் ஜலம் இவைகளால் தேய்ப்பதால் சோதிக்க வேண்டும். எந்தப் போஜன பாத்ரத்தில் புஜித்தானோ அங்கிருந்தே உத்தராபோசனத்தைப் பருகவேண்டும். புஜித்தவன் ஆபோசனத்தைச் செய்யாமல் அந்த ஆஸனத்திலிருந்து எழுந்தால், உடனே ஸ்நானம் செய்ய வேண்டும். இல்லாவிடில் அசுத்தனாகிறான். கௌதமர்:- கண்டூஷம் செய்யும் பொழுது தர்ஜனீ விரலினால் வாயைச் சோதித்தானாகில், அந்த மூடன் ரௌரவமெனும் நரகத்தில் விழுவான். பராசரர்:- வாய்க் கொப்புளித்தலையும், காலலம்புவதையும் வெண்கலப் பாத்ரத்தில் செய்தால், அதை ஆறுமாதம் முழுவதும் பூமிக்குள் வைத்திருந்து பிறகு எடுத்து உபயோகிக்க வேண்டும். மற்றொருஸ்ம்ருதியில்:- சாப்பிட்டு உச்சிஷ்டனாயிருப்பவன் ஆசமனம் செய்யாமல், அறிந்தோ, அறியாமலோ, சூத்ரன் முதலியவரைப் பார்த்தால், இவன் அவருடன் புஜித்தவனாய் ஆகிறான்.

रत्नावल्याम्—दन्तानां शोधनं कृत्वा पवित्रं तु विसर्जयेत्। विसृज्य भूमौ पात्रे वा पश्चाद्वा दन्तशोधनम् इति ॥ स्मृत्यर्थसारे– अमृतापिधानमसीति गण्डूषमर्धं पीत्वाऽर्धं भूमौ बहिर्निनीय वर्तुलपवित्रं विसृज्य भूमौ पात्रे वा क्षिप्त्वा सम्यगुच्छिष्टं प्रक्षाल्य

द्विराचामेत् ततो हस्तौ संमृज्य परिस्राव्याङ्गुष्ठाभ्यां चक्षुषोर्निषिच्य चक्षुषी स्पृष्ट्वाऽग्निमुपस्पृश्य इष्टदेवतां स्मरेत् इति।

ரத்னாவளியில்:- பற்களைச் சுத்திசெய்து பிறகு பவித்ரத்தை விஸர்ஜனம் செய்ய வேண்டும். பூமியிலாவது, போஜன பாத்ரத்திலாவது பவித்ரத்தை விஸர்ஜனம் செய்து பிறகாவது தந்தசுத்தி செய்து கொள்ளலாம். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- 'அம்ருதாபி-தானமஸி' என்ற மந்த்ரத்தால் ஆபோசன ஜலத்தைப் பாதி பருகிப் பாதியைப் போஜன பாத்ரத்திற்கு வெளியில் பூமியில் விட்டு, வர்த்துள பவித்ரத்தை விஸர்ஜனம் செய்து, பூமியிலாவது, போஜன பாத்ரத்திலாவது போட்டு, எச்சிலை நன்றாய் அலம்பி, இருமுறை ஆசமனம் செய்ய வேண்டும். பிறகு கைகளைத் துடைத்து, ஜலத்தைக் கீழேவிட்டு பெருவிரல்களால் கண்களில் விட்டு, கண்களைத் தொட்டு, அக்னியைத் தொட்டு இஷ்ட தேவதையை ஸ்மரிக்க வேண்டும்.

स्मृतिरत्ने — दन्तशोधनकाष्ठं तु भूमावेव समुत्सृजेत्। भुक्त्वा तत्र प्रयत्नेन किञ्चित् प्रक्षाल्य वारिणा। अनूढस्तु न कुर्वीत भुक्त्वा वै दन्तशोधनम्। पादुकारोहणं चैव तिलैश्च पितृतर्पणम् इति। गौतमः – आचान्तः पुनराचामेदायङ्गौरिति मन्त्रतः। द्रुपदां वा त्रिरावर्त्य सर्वपापप्रणाशिनीम्॥ हस्तौ निघृष्याङ्गुष्ठाभ्या मक्ष्णोरम्बु विनिक्षिपेत् इति। मन्त्रः – शर्यातिं च सुकन्यां च च्यवनं शक्रमश्विनौ। भुक्तमात्रः स्मरेद्यस्तु चक्षुस्तस्य न हीयते इति॥ स एव — प्राणानां ग्रन्थिरसीत्यालभेद्धृदयं ततः। अक्षरेण स्वमात्मानं योजयेत् ब्रह्मणीति हि इति।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ப்ரயத்னத்துடன் தந்தங்களைக் கொஞ்சம் சோதித்து, அந்தத் தந்தசோதனக் குச்சியை ஜலத்தால், அலம்பி, பூமியிலேயே விடவேண்டும். விவாஹமாகாதவன், போஜனத்திற்குப் பிறகு தந்த

சோதனம், பாதுகைகளில் ஏறுவது, திலங்களுடன் பித்ரு தர்ப்பணம் இவைகளைச் செய்யக் கூடாது. கௌதமர்:- ஆசமனம் செய்து, மறுபடி ஆசமனம் செய்ய வேண்டும். 'ஆயங்கௌ:' என்ற மந்த்ரத்தை, அல்லது ஸகல பாபங்களையுமகற்றும் 'த்ருபதா' என்ற ருக்கை மூன்று முறை ஜபிக்க வேண்டும். கைகளைத் தேய்த்துப் பெரு விரல்களால் ஜலத்தைக் கண்களில் சேர்க்க வேண்டும். அதற்கு மந்த்ரம் - 'சர்யாதிம்ச + ஹீயதே' என்பது. இதன் பொருள் - 'சர்யாதி என்ற அரசனையும், ஸுகன்யை என்ற அவன் கன்யையையும், ச்யவனர் என்ற முனிவரையும், இந்த்ரனையும், அச்வினீதேவர்களையும் போஜனம் செய்தவுடன் எவன் ஸ்மரிக்கின்றானோ அவனுக்குப் பார்வை குறைவதில்லை' என்பது. கௌதமரே:- பிறகு 'ப்ராணஞ்ணும் க்ரந்திரஸி' என்ற மந்த்ரத்தால் மார்பைத் தொடவேண்டும். தன் ஆத்மாவைப் பரமாத்மாவோடு ப்ரம்ஹத்தினிடத்தில் சேர்க்க வேண்டும்.

कुत्सः— आचान्तो नाभिदेशं तु प्राणानां ग्रन्थिरसीति । विमृश्यादित्यमीक्षेत रात्रौ दीपमुखं ततः इति ॥ व्यासः— आचम्याङ्गुष्ठमात्रेति पादाङ्गुष्ठे तु दक्षिणे । निःस्रावयेद्धस्तजल मूर्ध्वहस्तः समाहितः ॥ हुतानुमन्त्रणं कुर्यात् श्रद्धायामिति मन्त्रतः इति ॥ अत्रिः— आचान्तोऽप्यशुचिस्तावद्यावत्पात्रमनुद्धृतम् । उद्धृतेऽप्यशुचिस्तावद्यावन्मण्डलशोधनम् ॥ भूमावपि हि लिप्तायां तावत्स्यादशुचिः पुमान् । आसनादुत्थितस्तस्माद्यावन्न स्पृशते महीम् इति ॥ एतत् ब्रह्मचारिविषयम् । भार्याभृतकदासेभ्य उच्छिष्टं शेषयेत् ततः इति गृहस्थस्योक्तत्वादिति स्मृतिरत्ने ।

குத்ஸர்:- ஆசமனம் செய்து 'ப்ராணஞ்ணும் க்ரந்திரஸி' என்று நாபிதேசத்தை ஸ்பர்சித்து, ஸுர்யனைப் பார்க்க வேண்டும். ராத்ரியில் தீபத்தைப் பார்க்க வேண்டும். வ்யாஸர்:- ஆசமனம் செய்து, 'அங்குஷ்டமாத்ர:' என்ற

மந்த்ரத்தால், வலது காலில் பெருவிரலில் கையிலுள்ள ஜலத்தைக் கையை மேலாக வைத்துக் கொண்டு கவனமுடையவனாய் வழியவிட வேண்டும். 'ச்ரத்தாயாம்' என்ற மந்த்ரத்தால், புஜித்த அன்னத்தை அனுமந்த்ரணம் செய்ய வேண்டும். அத்ரி:- ஆசமனம் செய்தவனானாலும், போஜன பாத்ரம் எடுக்கப்படாதவரை, போக்தா அசுத்தனே. எடுத்த பிறகும். மண்டலத்தைச் சுத்தம் செய்யும் வரையில் அசுத்தனே. பூமி சுத்தம் செய்யப்படாதவரையில் அசுத்தனேயாம் என்றார். இது பிரும்மசாரியைப் பற்றியது. ஏனெனில் பார்யை பிருத்யர், தாஸர், இவர்கட்கு உச்சிஷ்டத்தை மீதி வைக்க வேண்டுமென்று க்ருஹஸ்தனுக்குச் சொல்லியிருக்கிறது என்று ஸ்மிருதிரத்னத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

शातातपः – आचम्य पात्रमुत्सृज्य किञ्चिदार्द्रेण पाणिना । मुख्यान् प्राणान् समालभ्य नाभिं पाणितलेन च । भुक्त्वा नैव प्रतिष्ठेत नैव चार्द्रेण पाणिना । पाणिं मूर्ध्नि समाधाय स्पृष्ट्वाऽग्निं च समाहितः इति ।

சாதாதபர்:- போஜன பாத்ரத்தை விட்டு ஆசமனம் செய்து கொஞ்சம் ஈரமான கையால் முகத்திலுள்ள இந்த்ரியங்களை ஸ்பரிசித்து உள்ளங்கையால் நாபியை ஸ்பர்சிக்க வேண்டும். பாணியைத் தலையில் வைத்து அக்னியையும் கவனமாகத் தொடவேண்டும். போஜனம் செய்த பிறகும் ஈரக் கையுடனும் வெளியிற் செல்லக்கூடாது.

आपस्तम्बः—यत्र भुज्यते तत् समूह्य निर्हृत्यावोक्ष्य तं देशममत्रेभ्यो लेपान् सङ्कृष्याद्भिः संसृज्योत्तरतः शुचौ देशे रुद्राय निनयेदेवं वास्तु शिवं भवति इति । यत्र स्थाने भुज्यते तत्रत्यमुच्छिष्टं समूह्य - राशीकृत्य अन्यतो निर्हृत्य तं देशमवोक्षेत् । येषु पाकः कृतः तान्यमत्राणि । तेभ्योऽन्नलेपान् व्यञ्जनलेपांश्च सङ्कृष्य -

काष्ठादिनापकृष्य अद्भिः संसृज्य गृहस्योत्तरतः शुचौ देशे रुद्राय निनयेत् - रुद्रायेदमस्त्विति निनयेत्। एवं कृते सति वास्तु - गृहं, शिवं - समृद्धं भवतीत्यर्थः।

ஆபஸ்தம்பர்:- எந்த இடத்தில் புஜிக்கப்பட்டதோ அந்த இடத்திலுள்ள உச்சிஷ்டத்தை ஒன்று சேர்த்து வேறிடத்தில் போட்டுவிட்டுப் புஜித்த ஸ்தானத்தை ப்ரோக்ஷிக்க வேண்டும். எந்தப் பாத்ரங்களில் பாகம் செய்யப்பட்டதோ அவைகளினின்றும் அன்னம், வ்யஞ்ஜனம் இவைகளின் பற்றுகளைக் கட்டை முதலியதால் எடுத்து ஜலத்துடன் சேர்த்து வீட்டின் வடக்கில் சுத்தமான ப்ரதேசத்தில் 'ருத்ராயேதமஸ்து' என்று விடவேண்டும். இவ்விதம் செய்வதால் வீடானது நிறைந்ததாயாகிறது.

மிலேச்சர்களின் பாஷையைக் கற்கக் கூடாது. ஆஸனத்தைக் காலால் இழுக்கக் கூடாது. பற்களால் நகங்களையாவது, ரோமங்களையாவது நறுக்கக் கூடாது. தூங்குகின்றவனை எழுப்பக் கூடாது. இளம் வெயிலை ஸேவிக்கலாகாது. பிணப்புகையைத் தவிர்க்க வேண்டும். காரணமில்லாமல் துப்பக் கூடாது. பாதரக்ஷைகளைத் தானுகவே எடுத்துச் செல்லலாகாது. காலால் காலைத் தேய்த்து அலம்பக் கூடாது. அக்னியில் கால்களைக் காய்ச்சக் கூடாது. வெண்கலத்தில் கால்களை அலம்பக் கூடாது. தேவபிம்பம், ப்ராம்ஹணன், பசு, ஜலம், அக்னி, குரு, ஸூர்யன், சந்த்ரன் இவர்களுக்கு எதிராய்க் கால்களை நீட்டக் கூடாது. அசுத்தனுய் அக்னியில் ஹோமம் செய்யக் கூடாது. தேவதா ப்ரதிமைகளைத் தொடக் கூடாது. அதிக ஆழமுள்ள ஜலத்தில் முழுகக் கூடாது. ஜலத்தில் சுக்லத்தை விடக் கூடாது. சரணடைந்தவரைக் கைவிடக் கூடாது. ஜலத்தில் மைதுனம் செய்யக் கூடாது. அடையாளத்திற்காக உள்ள மரத்தை வெட்டக் கூடாது. ஜலத்தில் கோழையை உமியக் கூடாது. அக்னியைத் தாண்டக் கூடாது. அக்னியை அடியில் வைக்கக் கூடாது. கிணற்றில் இறங்கக் கூடாது. அசுத்தனுய் எங்கும் பார்க்கக் கூடாது.

अग्नौ न प्रक्षिपेदग्निं नाग्निं प्रशमयेत् तथा ।। सुहृन्मरणमार्तिं वा न स्वयं श्रावयेत्परान् । न भिन्द्यात् पूर्वसमयमभ्युपेतं कदाचन ।। परस्परं पशून् बालान् पक्षिणो नावबोधयेत् । सायं प्रातर्गृहद्वारं भिक्षार्थं नावघाटयेत् ।। स्वमग्निं नैव हस्तेन स्पृशेन्नाप्सु चिरं वसेत् । न वीजयेच्च वस्त्रेण समवायं च वर्जयेत् ।। नोपानद्वर्जितो यायान्न विना च कमण्डलुम् । नाग्रेग्रोब्राह्मणादीनामन्तरेण व्रजेत् क्वचित् ।। वर्जयेन्मार्जनीरेणुं स्नानवस्त्रं घटोदकम् इति ।

நெருப்பில் நெருப்பைப் போடக் கூடாது. அக்னியை அணைக்கக் கூடாது. ஸுஹ்ருத்தின் மரணத்தையாவது

கஷ்டத்தையாவது பிறருக்குத் தான் சொல்லக் கூடாது. முன் ஒப்புக் கொண்ட உடன் படிக்கையை மாற்றக் கூடாது. பசுக்கள், சிறுவர், பக்ஷிகள் இவர்களை ஒருவருக்கொருவர் சண்டைக்காக ஏவக்கூடாது. மாலையிலும் காலையிலும் பிச்சைக்காக வீட்டின் வாயிலை மூடக் கூடாது. தன் அக்னியைக் கையால் தொடக் கூடாது. ஜலத்தில் வெகுகாலமிருக்கக் கூடாது. அக்னியை வஸ்த்ரத்தால் வீசக் கூடாது. கூட்டத்தில் சேரக் கூடாது. பாதரக்ஷையில்லாமலும், கமண்டலு இல்லாமலும் வெளியிற் செல்லக் கூடாது. அக்னிகள், பசுக்கள், ப்ராம்ஹணர்கள் முதலியவரின் நடுவில் ஒருகாலும் போகக் கூடாது. துடைப்பத்தின் புழுதி, ஸ்நான வஸ்த்ரம், மட்குடத்திலெடுத்த ஜலம் இவைகளைப் பரிஹரிக்க வேண்டும்.

विष्णुपुराणे—नावगाहेत् जलौघस्य वेगमध्ये नरेश्वर। प्रदीप्तं वेश्म न विशेन्नारोहेच्छिखरं तरोः ॥ न कुर्याद् दन्तसङ्घर्षं न कुर्यान्नासिकारवम्। नासंवृतमुखो जृम्भेत् श्वासकासौ विवर्जयेत् ॥ नोच्चैर्हसेत् सशब्दं च श्मश्रूणि च न भक्षयेत्। दुष्टस्त्रीसन्निकर्षं च वर्जयेन्निशि सर्वदा ॥ नैकः शून्याटवीं गच्छेन्न च शून्यगृहे वसेत्। स्नानार्द्रधरणीं चैव दूरतः परिवर्जयेत् ॥ उपसर्पेन्न च व्यालान् चिरं तिष्ठेन्न चोत्थितः। अतीव जागरस्वप्ने तद्वत् स्थानासने बुधः ॥ न सेवेत तथा शय्यां व्यायामं च नरेश्वर। दंष्ट्रिणः शृङ्गिणश्चैव प्राज्ञो दूरेण वर्जयेत्। बालातपमवश्यायं पुरोवातं च वर्जयेत्। विरोधं नोत्तमैर्गच्छेत् नाधमैश्च सदा बुधः ॥ विवाहश्च विवादश्च तुल्यशीलैस्तथेष्यते। अप्यल्पहानिः सोढव्या वैरादर्थागमं त्यजेत् ॥ योषितो नावमन्येत न चासां विश्वसेद्बुधः। नोर्ध्वं न तिर्यग्दूरं वा निरीक्षन् पर्यटेद्बुधः। युगमात्रं महीपृष्ठं नरो गच्छेद्विलोकयन् इति।

விஷ்ணு புராணத்தில்:- ஜல ப்ரவாஹத்தின் வேகத்தின் நடுவில் முழுகக் கூடாது. அரசனே! எரியும்

வீட்டில் நுழையக் கூடாது. மரத்தின் உச்சியில் ஏறக் கூடாது. பற்களை ஒன்றுக்கொன்று உரசக் கூடாது. மூக்கினால் சப்தம் செய்யக் கூடாது. வாயை மூடாமல் கொட்டாவி விடக் கூடாது. இருமல், தும்மல் இவைகளை விடவேண்டும். அதிகமாயும், சப்தத்துடனும் சிரிக்கக் கூடாது. மீசையைக் கடிக்கக் கூடாது. எப்பொழுதும் இரவில் துஷ்ட ஸ்த்ரீகளின் ஸமீபத்தை தவிர்க்க வேண்டும். சூன்யமான காட்டில் ஒருவனாய்ச் செல்லக் கூடாது. சூன்யமான வீட்டில் வஸிக்கக் கூடாது. ஸ்நான ஜலத்தால் நனைந்த பூமியைத் தூரத்தில் பரிஹரிக்க வேண்டும். பாம்புகளின் ஸமீபத்திற் செல்லக் கூடாது. எழுந்தவன் வெகுகாலம் நின்றிருக்கக் கூடாது. அதிகமாய் விழிப்பது, அதிகமாய்த் தூங்குவது, அதிகமாய் நிற்பது, அதிகமாய் உட்கார்ந்திருப்பது, அதிகமாய்ப் படுக்கையிலிருப்பது, அதிகமாய் தேஹப்பயிற்சி செய்வது இவைகளையும் தவிர்க்க வேண்டும். பற்களுள்ளதும், கொம்புள்ளதுகளுமான துஷ்ட ப்ராணிகளைத் தூரத்தில் பரிஹரிக்க வேண்டும். இளம் வெயில், பனி, கீழ்காற்று இவைகளை தவிர்க்க வேண்டும். அறிவுடையவன், சிறந்தவருடனும், தாழ்ந்தவருடனும் விரோதிக்கக் கூடாது. விவாஹமும், விவாதமும் தனக்குச் சமமானவருடன் செய்யப்பட வேண்டும். கொஞ்சமும் குறைவானாலும் அதைப் பொறுக்க வேண்டும், விரோதத்தால் பணத்தின் வரவை விடவேண்டும். ஸ்த்ரீகளை அவமதிக்கக் கூடாது. அவர்களை நம்பக் கூடாது. ஆகாசத்தையோ, பக்கங்களையோ, தூரத்திலுள்ள ஸ்தலத்தையோ பார்த்துக் கொண்டு திரியக் கூடாது. நுகத்தடி அளவுள்ள பூமிபாகத்தைப் பார்த்துக் கொண்டு நடக்க வேண்டும்.

स्मृत्यन्तरे — दिगम्बरं मुक्तकच्छं तथा कौपीनधारिणम्। गृहस्थं भजते तावदलक्ष्मीः कलहोत्सुका ॥ दीपच्छाया नरच्छाया वस्त्रकेशनखोदकम्। अजारजः खररजः तथा संमार्जनीरजः ॥ स्त्रीणां

पादरजश्चापि शक्रस्यापि श्रियं हरेत् ।। हविर्गन्धो गवां रेणुः वेदानां ध्वनिरेव च । अपि गोदोहमात्रेण सर्वपापं व्यपोहति ।। द्रव्याणामुत्तमानां च लङ्घने श्रीर्विनश्यति । तथाऽधमानां गृह्णाति तमलक्ष्मीश्च सत्वरम् । यद्गृहे लक्ष्यते नित्यं रङ्गवल्ल्यनुलेपनम् । तद्गृहे वसते लक्ष्मीर्नित्यं पुण्यकलान्विता इति ।

மற்ெருரு ஸ்ம்ருதியில்:- *வஸ்த்ரமில்லாதவனும், கச்சமில்லாதவனும், கௌபீனம் மட்டில் தரித்தவனுமான க்ருஹஸ்தனைக் கலஹத்தில் ப்ரீதியுள்ளவளான மூதேவி அடைகின்ருள். தீபத்தின் நிழல், மனிதன் நிழல், வஸ்த்ரஜலம், கேசஜலம், நகஜலம், ஆட்டின் புழுதி, கழுதையின் புழுதி, துடைப்பத்தின் புழுதி, ஸ்த்ரீகளின் கால்புழுதி இவைகள் இந்த்ரனின் ஸம்பத்தையும் அகற்றும். ஹவிஸ்ஸின் வாஸனை, பசுக்களின் தூளி, வேதங்களின் ஒலி இவை கால்நாழிகையளவு ஸேவிக்கப்பட்டாலும் ஸகல பாபங்களையுமகற்றும். சிறந்த வஸ்துக்களைத் தாண்டிஞல் ஸம்பத்து விலகும். தாழ்ந்த வஸ்துக்களைத் தாண்டிஞல் அவனை மூதேவி சீக்கிரமாய்ப் பிடித்துக் கொள்கிருள். எந்த வீட்டில் நித்யமும் மெழுகுதலும், கோலமும் காணப்படுகிறதோ அந்த வீட்டில் புண்யகலைகளுடன் கூடிய லக்ஷ்மீ எப்பொழுதும் வஸிக்கின்ருள்.*

सङ्ग्रहे— अजखरकरभश्वपादपांसुः तुषकणिका गृहमार्जनीरजश्च । परमुखपरवस्त्रशूर्पजातो मरुदपि देहभृतां करोत्यलक्ष्मीम् ।। अनवधानतया गृहमार्जनी स्पृशति यद्यपि गात्रमथ क्षणात् । शिरसि दीपशिखा च यदा भवेत् कनकयुक्तजलेन विशोधयेत् । अच्छिद्रकुम्भस्रुततोयधारास्नानं नखश्मश्रुशिरोरुहाम्भः । स्नानाम्बु देहाम्बु परस्य पुंसां दारिद्र्य दुःखाजयमृत्युदं स्यात् इति ।

ஸங்க்ரஹத்தில்:- *ஆடு, கழுதை, ஒட்டகம், நாய் இவைகளின் கால் புழுதியும், உமி, தவிடு இவையும்,*

துடைப்பத்தின் தூளியும், பிறரின் வாய், பிறரின் வஸ்த்ரம், முறம் இவைகளின் காற்றும் மனிதரின் தேஹத்தில் ஸம்பந்தித்தால் தாரித்ரியத்தைச் செய்யும். கவனமின்மையால் வீட்டின் துடைப்பம் தேஹத்தில் பட்டாலும், தீபத்தின் ஜ்வாலை தலையில் பட்டாலும் உடனே ஸ்வர்ணத்துடன் கூடிய ஜலத்தால் சுத்தி செய்ய வேண்டும். மூக்கு த்வாரமில்லாத குடத்தினின்றும் வெளிவரும் ஜலத்தால் ஸ்நானம் செய்வதும், நகம், மீசை, தலைமயிர் இவைகளின் ஜலமும், பிறரின் ஸ்நானஜலமும், தேஹ ஜலமும், தேஹத்துடன் ஸம்பந்திப்பதும், மனிதனுக்கு, தரித்ரத்தன்மை, துக்கம், அபஜயம், மரணம் இவைகளைக் கொடுப்பதாகும்.

आपस्तम्बः — पूर्वेण ग्रामान्निष्क्रमणप्रवेशनानि शीलयेदुत्तरेण वा। सर्वान् रागान् वाससि वर्जयेत् कृष्णं च स्वाभाविकम्। दिवा च शिरसः प्रावरणं वर्जयेन्मूत्रपुरीषयोः कर्म परिहाप्य। स्पृहतीं च गां नाचक्षीत संसृष्टां च वत्सेनानिमित्ते। नाधेनुमधेनुरिति ब्रूयाद्धेनुभव्येत्येव ब्रूयात्। न भद्रं भद्रमिति ब्रूयात् पुण्यं प्रशस्तमित्येव ब्रूयात्। वत्सतन्तीं च नोपरि गच्छेत् प्रेङ्खावन्तरेण च नातीयात्। नासौ मे सपत्न इति ब्रूयाद्यद्यसौमे सपत्न इति ब्रूयाद्द्विषन्तं भ्रातृव्यं जनयेत्। नेन्द्रधनुरिति परस्मै प्रब्रूयान्न पततः संचक्षीत इति। स्पृहतीं - सस्यधान्यादिकं भक्षयन्तीं गावं स्वामिने न ब्रूयात्। भविष्यन्ती धेनुर्धेनुभव्या। वत्सानां बन्धनी रज्जुर्वत्सतन्ती। प्रेङ्खौ - डोलास्तम्भौ। तयोर्मध्ये न गच्छेत्। पततः - पक्षिणः सङ्घीभूय स्थितान् न सञ्चक्षीत - इयन्त एत इति न गणयेदित्यर्थः।

ஆபஸ்தம்பர்:- க்ராமத்திலிருந்து வெளியிற் சென்றாலும், வெளியிலிருந்து க்ராமத்திற்குள் ப்ரவேசித்தாலும், கிழக்கு அல்லது வடக்கு வழியாய்ச் செல்ல வேண்டும், நுழைய வேண்டும். வஸ்த்ரத்தில் எவ்விதமான சாயத்தையும் தவிர்க்க வேண்டும்.

இயற்கையால் கறுப்பான கம்பளி முதலியதையும் உடுத்தக் கூடாது. பகலில் வஸ்த்ரம் முதலியதால் தலையைச் சுற்றிக் கொள்ளக் கூடாது. மலமூத்ர விஸர்ஜனத்தைத் தவிர்த்து. பயிர், தான்யம் முதலியதைத் தின்னும் பசுவை உடையவனிடம் சொல்லக் கூடாது. கன்று ஊட்டும்போதும் சொல்லக் கூடாது, காரணமில்லாவிடில். கறவை இல்லாத பசுவை அவ்விதம் சொல்லக் கூடாது. கறக்கப் போகும் பசு என்றே சொல்ல வேண்டும். (பத்ரம் மங்களம்) பத்ரமல்லாததை பத்ரமென்று சொல் வேண்டும். புண்யம், ப்ரசஸ்தம் என்ற பதங்களால் சொல்ல வேண்டும். கன்றின் தும்பைத் தாண்டிச் செல்லக் கூடாது. ஊஞ்சல் ஆடுவதற்காக நிறுத்தப்பட்டுள்ள தூண்களின் நடுவில் போகக் கூடாது. ஒருவனையும், 'இவன் எனக்குச் சத்ரு' என்று சொல்லக் கூடாது. அவ்விதம் சொல்வானாகில், த்வேஷிப்பவனாகிய சத்ருவை உண்டாக்கிக் கொள்வான். 'இதோபார் இந்த்ரதனுஸ்' என்று பிறனுக்குச் சொல்லக் கூடாது. வானத்தில் பறக்கும் பறவைகளை எண்ணக் கூடாது.

स एव — नित्यमुदधानान्यद्भिररिक्तानि स्युर्गृहमेधिनो व्रतम् इति ।। गृहे यावन्त्युदधानानि - उदपात्राणि घटकरकादीनि, तानि सदा अद्भिररिक्तानि स्युरित्यर्थः ।। नगरप्रवेशनानि च वर्जयेत् प्रश्नं च न विब्रूया दथाप्युदाहरन्ति - मूलं तूलं वृहति दुर्विवक्तुः प्रजां पशूनायतनं हिनस्ति । धर्मप्रह्लाद न कुमालनाय रुदन् ह मृत्युर्व्युवाच प्रश्नमिति । गार्दभं यानमारोहणे विषमारोहणावरोहणानि च वर्जयेत् बाहुभ्यां च नदीतरं नावं च सांशयिकीम् इति ।। प्रश्नं - पृष्टं दुर्निरूपमर्थ मिदमित्थमिति विविच्य न ब्रूयात् । अपि च अस्मिन्नर्थे श्लोकमुदाहरन्ति । दुर्विवक्तुः तदेव दुर्वचनं मूलं तूलं च वृहति । मूलं - पित्रादयः । तूलं - आगामिनी संपत् । तदुभयमप्युत्पाटयति । प्रजादिकं च हिनस्ति । अतो दुर्विवचनसम्भवात् प्रश्नमात्रमेव न विब्रूयात् ।

ஆபஸ்தம்பரே:- குடம், சருவம் முதலிய ஜல பாத்ரங்களெல்லாம் ப்ரதிதினம் ஜலத்தால் நிறைந்திருக்க வேண்டும். இது க்ருஹஸ்தரான தம்பதிகளின் வ்ரதமாம். **ஆபஸ்தம்பரே:-** நகரத்தில் அடிக்கடி ப்ரவேசிப்பதை வர்ஜிக்க வேண்டும். கேள்வியை, 'இவ்விதம்தான் இது' என்று நிச்சயமாய்ச் சொல்லக் கூடாது. இவ்விஷயத்தில் ச்லோகத்தை முன்னோர்கள் இவ்விதம் சொல்லுகின்றனர். 'மூலம் தூலம் + ப்ரச்னம்' என்று. இதன் பொருள் - நிர்ணயிக்க முடியாத விஷயத்தை நிர்ணயித்து எவன் மாறுதலாய்ச் சொல்லுகின்றானோ அவனது துஷ்ட நிர்ணயம், அவனது மூலத்தையும் (பிதா முதலியவர்களையும்), தூலத்தையும் (வரப்போகும் ஸம்பத்தையும்), ப்ரஜைகளையும், பசுக்களையும், வீடு முதலியதையும் அழிக்கும். ஆகையால், பிசகான நிர்ணயத்தைச் சொல்ல நேரிடுமாகையால், எவ்வித தர்ம ப்ரச்னத்தையும் நிர்ணயித்துச் சொல்லக் கூடாது.

इतिहासोऽत्र—कस्यचिदृषेः धर्मप्रह्लादः कुमालनश्च द्वौ शिष्यावास्ताम् । तौ कदाचिदरण्यात् महान्तौ समिद्भारावाहृत्य श्रमादाचार्यगृहे प्राक्षिपताम् । तयोरेकेनाचार्यपुत्रः शिशुराक्रान्तो मृतः । ततः शिष्यावाहूयाचार्यः पप्रच्छ केनायं मारित इति । तावुभावपि न मयेत्यूचतुः । ततो मुनिर्मृत्युमाहूय पप्रच्छ । केनायं व्यापादित इति । ततो मृत्युः रुदन्नेव प्रश्नं व्युवाच - विविच्य कथितवान् । हे धर्मप्रह्लाद ! न कुमालनाय- कुमालनस्य नेदं पतनीयमिति । तवास्तीत्यर्थाद्गम्यत इति रुदन् व्युवाचेत्यर्थः ।

இவ்விஷயத்தில் இதிஹாஸம் இவ்விதமுளது - ஒரு ருஷிக்குத் தர்ம ப்ரஹ்லாதன் என்றும், குமாலனன் என்று இரு சிஷ்யர்கள் இருந்தனர். அவ்விருவரும் ஒருநாளில் காட்டினின்றும் பெரிதாகிய இரண்டு ஸமித்துக் கட்டுகளைக் கொண்டு வந்து, ச்ரமத்தால் கண்ணால் கீழே பாராமலே ஆசார்யன் க்ருஹத்தில் எறிந்தனர். ஒரு

கட்டிஞல் ஆக்ரமிக்கப்பட்டு அங்கிருந்த ஆசார்யனின் ஆண் குழந்தை மரித்து விட்டது. பிறகு ஆசார்யன் சிஷ்யர்களை அழைத்து 'எவனுல் இந்தச் சிசு கொல்லப்பட்டது' என்று கேட்டார். அவ்விருவரும் 'என்னுலல்ல' என்றனர். பிறகு பதிதனுன சிஷ்யனைத் தள்ளுவதற்கும், தோஷமில்லாதவனை க்ரஹிப்பதற்கும் முடியாதவராய் அந்த ருஷி, ம்ருத்யு தேவனைக் கூப்பிட்டு 'எவனுல் இக்குழந்தை கொல்லப்பட்டது' என்று கேட்டார். பிறகு தர்ம ஸங்கடத்தில் விழுந்துள்ள ம்ருத்யுதேவன், கண்ணீர் விட்டுக் கொண்டே கேள்வியை விளக்கினுன். எவ்விதமெனில், 'ஹே தர்ம ப்ரஹ்லாத! இந்தப் பதனீயகார்யம் குமாலனுடையதல்ல' என்று 'ஹே தர்ம ப்ரஹ்லாத! உன்னுல் இது செய்யப்பட்டது' என்று சொல்ல வேண்டியதில் அன்யனுக்கு இல்லை என்று சொல்லப்பட்டது. ஆனுலும் மற்றவனுக்கு இருக்கிறது என்பது பொருளால் தோன்றுகிறது என்று நினைத்துக் கண்ணீர் விட்டவனுய்ச் சொன்னுன் ம்ருத்யுதேவன் என்று.

स एव — दिवाऽऽदित्यः सत्वानि गोपायति नक्तं चन्द्रमास्तस्मादमावास्यायां निशायां स्वाधीय आत्मनो गुप्तिमिच्छेत्, प्रायत्यब्रह्मचर्याभ्यां काले चर्यया च सह ह्येतां रात्रिं सूर्याचन्द्रमसौ वसतो न कुसृत्या ग्रामं प्रविशेद्यदि प्रविशेन्नमो रुद्राय वास्तोष्पतय इत्येतामृचं जपेदन्यां वा रौद्रीम् इति ।। स्वाधीयः - भृशतरं आत्मनो गुप्तिं - रक्षामिच्छेत् । केन प्रकारेण ? प्रायत्येन, ब्रह्मचर्येण, काले चर्यया - कालकृतदेवार्चन जपादिकया च । कुसृत्या - कुमार्गेण । अन्यां वा रौद्रीं - इमां रुद्राय तवस इत्यादिकामित्यर्थः ।।

ஆபஸ்தம்பரே:- பகலில் ஸூர்யன் ப்ராணிகளைக் காக்கிருன். ராத்ரியில் சந்த்ரன் காக்கிருன். ஆகையால் அமாவாஸ்யையில் ராத்ரியில் அதிகமாகத் தன்னைக்காக்க விரும்ப வேண்டும், சுத்தியாலும், ப்ரம்ஹசர்யத்தாலும், காலத்தில் செய்யப்படும் தேவார்ச்சனம், ஜபம்

முதலியதாலும். இந்த அமாவாஸ்யையின் ராத்ரி முழுவதும், ஸூர்யனும், சந்த்ரனும் சேர்ந்து வஸிக்கின்றார்கள். குறுக்கான வழியால் க்ராமத்திற்குள் ப்ரவேசிக்கக் கூடாது. ப்ரவேசித்தால் பிறகு 'நமோ ருத்ராய வாஸ்தோஷ்பதயே' என்ற ருக்கை ஜபிக்க வேண்டும். அல்லது ருத்ர தேவதாகமான வேறு ருக்கையாவது ஜபிக்கலாம். 'இமாம் ருத்ராய' என்பது முதலியதை என்பது பொருள்.

अत्र वाजसनेयिनां गृह्ये —— वनं प्रवेक्ष्यन्ननुमन्त्रयते नमो रुद्राय वनसदे स्वस्ति मा संपारयेति पन्थानमारोक्ष्यन्ननुमन्त्रयते नमो रुद्राय पथिषदे स्वस्ति मा संपारयेति, अपः प्रवेक्ष्यन्ननुमन्त्रयते नमो रुद्रायाप्सुषदे स्वस्ति मा संपारयेति, तस्माद्यत् किञ्चन कर्म कुर्वन् स्यात् तत्सर्वं नमो रुद्रायेत्येव कुर्यात् सर्वो ह्येष रुद्र इति श्रुतिः इति।

இதில், வாஜஸநேயிகளின் க்ருஹ்யத்தில்:- வனத்தில் நுழையும் போதும், வழியில் நடக்கும் போதும், ஜலத்தில் இறங்கும் போதும், தனித்தனியே சொல்லப்பட்டுள்ள ருத்ர மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். ஆகையால் எந்தக் கார்யத்தைச் செய்யப் போகிறவனாயினும், 'நமோ ருத்ராய' என்று சொல்லியே செய்ய வேண்டும். எதுவும் இந்த ருத்ரனே என்கின்றது வேதம்.

गौतमः – न रूढश्मश्रुरकस्मान्नाग्निमपश्च युगपद्धारयेत् न भस्मकेश तुषकरीषकपालामेध्यान्यधितिष्ठेन्न म्लेच्छाशुच्यधार्मिकैः सह सम्भाषेत सम्भाष्य पुण्यकृतो मनसा ध्यायेत् ब्राह्मणेन वा सह सम्भाषेत । अधेनुं धेनुभव्येति ब्रूयादभद्रं भद्रमिति । कपालं भगालमिति । मणिधनुरितीन्द्रधनुर्गां धयन्तीं परस्मै नाचक्षीत न चैनां वारयेद्विगृह्य वादं बहिर्गन्धमाल्यधारण पापीयसावलेखन कुद्वारप्रवेशन भार्यासहभोजनाञ्जन्त्यवेक्षण पादपादधावनासन्दीस्थभोजन

नदीबाहुतरण वृक्षविषमारोहणावरोहण प्राणव्यायच्छनानि च वर्जयेन्न सन्दिग्धां नावमधिरोहेत् सर्वत एवात्मानं गोपायेन्न प्रावृत्य शिरोऽहनि पर्यटेत् प्रावृत्य तु रात्रौ मूत्रोच्चारे च इति ।। पापीयसाऽवलेखनम् - अशुचिना काष्ठादिना शिरःप्रभृतेः कण्डूयनम् । अत्र तृतीयाया अलुक्छान्दसः । अञ्जन्त्यवेक्षणम् - तैलाभ्यङ्गं कुर्वन्त्या अवेक्षणम् । पादपादधावनम् - पादेन पादस्य प्रक्षालनम् । आसन्दी पीठिकादिः । प्राणव्यायच्छनम् - प्राणोपरोध्युल्लङ्घनम् । सर्वतः - सर्वेभ्योऽप्य-पायेभ्यः । प्रावृत्य तु रात्राविति, प्रावृत्यैव पर्यटेदित्यर्थः ।

கௌதமர்:- காரணமின்றி மீசையை வளர்த்திருக்கக் கூடாது. நெருப்பையும், ஜலத்தையும் ஒரே ஸமயத்தில் தரிக்கக் கூடாது. சாம்பல், மயிர், உமி, உலர்ந்த சாணம், ஓடு. அசுத்த வஸ்துக்கள் இவைகளில் நிற்கக் கூடாது. ம்லேச்சர், அசுத்தர், பாபிகள் இவருடன் பேசக் கூடாது. பேசினுல் புண்யம் செய்தவர்களை மனதால் த்யானிக்க வேண்டும். அல்லது ப்ராம்ஹணனுடன் பேச வேண்டும். கறவை இல்லாத பசுவைக் கறக்கப் போகும் பசு என்று சொல்லவும். அபத்ரமானதையும் பத்ரமென்று சொல்லவும். கபாலத்தைப் பகாலமென்று சொல்லவும். இந்த்ர தனுஸ்ஸை மணிதனுஸ் என்று சொல்லவும். கன்றினுல் ஊட்டப்படும் பசுவைப் பிறனுக்குக் காட்ட கூடாது. அதைத் தடுக்கவும் கூடாது ஆக்ரஹத்துடன் பேசுதல், வெளியில் சந்தனம், புஷ்பம் இவைகளைத் தரித்தல், அசுத்தமான கட்டை முதலியதால் தலை முதலியதைச் சொரிந்து கொள்வது, குறுக்கு வழியாய் ப்ரவேசித்தல், பார்யையுடன் சேர்ந்து புஜித்தல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் பார்யையைப் பார்ப்பது, காலால் காலைத் தேய்த்து அலம்புதல், பீடம் முதலியதில் வைத்ததைப் புஜித்தல், நதியை நீந்தித் தாண்டுவது, வ்ருக்ஷத்திலும், மேடுபள்ளங்களிலும் ஏறுவது இறங்குவது, மூச்சை அடக்கித் தாண்டுவது

முதலியதைத் தவிர்க்க வேண்டும். ஸந்தேஹத்திற் கிடமான ஓடத்தில் ஏறக் கூடாது. எவ்வித அபாயங்களினின்றும் தன்னைக் காக்க வேண்டும். பகலில் தலையை மறைத்துக் கொண்டு நடக்கக் கூடாது. ராத்ரியில் மறைத்துக் கொண்டே நடக்க வேண்டும். மலமூத்ரவிஸர்ஜனத்திலுமப்படியே.

स एव—सोपानत्कश्चाशनासनाभिवादननमस्कारान् वर्जयेन्न पूर्वाह्णमध्यन्दिनापराह्णानफलान् कुर्याद्यथाशक्ति धर्मार्थकामेभ्य स्तेषु तु धर्मोत्तरः स्यान्न नग्नां परयोषितमीक्षेत न पदाऽऽसनमाकर्षेन्न शिश्नोदरपाणिपादवाक्चक्षुश्चापलानि कुर्याच्छेदन भेदन विलेखन विमर्दनावस्फोटनानि नाकस्मात् कुर्यान्नोपरि वत्सतन्त्रीं गच्छेत् न कुलं कलः स्यान्न यज्ञमवृतो गच्छेत् दर्शनाय तु कामं प्रशस्तमङ्गल्यदेवायतनचतुष्पथान् प्रदक्षिणमावर्तेत मनसा वा तत् समग्रमाचारमनुपालयेदापत्कल्पो यच्चात्मवन्तो वृद्धाः सम्यग्विनीता डम्भलोभमोहवियुक्ता वेदविद आचक्षते तत् समाचरेत् इति ।।

கௌதமரே:- பாதரக்ஷை தரித்தவனாய், போஜனம், உட்காருதல், அபிவாதனம், நமஸ்காரம் இவைகளைச் செய்யக் கூடாது. முன்பகல், நடுப்பகல், பின்பகல் இவைகளை, தர்மார்த்த காமங்களை யதாசக்தி ஸம்பாதிக்காமல் வீணாக்கக் கூடாது. அம்மூன்றிலும் தர்மத்தை அதிகமாய் ஸம்பாதிக்க வேண்டும். வஸ்த்ரமில்லாத அன்ய ஸ்த்ரீயைப் பார்க்கக் கூடாது. காலால் ஆஸனத்தை இழுக்கக் கூடாது. சிச்னம், வயிறு, கைகள், கால்கள், வாய், கண் இவைகளில் சபலத் தன்மையைச் செய்யக் கூடாது. புல் முதலியதைக் கிள்ளுதல், உடைத்தல், நகங்களால் கீறுதல், தூள்செய்தல், சப்தம் செய்தல், அங்கங்களைச் சொடுக்குதல் இவைகளை அகாரணமாய்ச் செய்யக் கூடாது. கன்றின் தும்பைத் தாண்டிச் செல்லக் கூடாது. ஒருகுலத்திலிருந்து மற்றொரு குலத்திற்குப் புத்ரனாய்ப் போகக் கூடாது.

வரிக்கப்படாமல் யாகத்திற்குத் தனுடையால் போகக் கூடாது. தர்சனத்திற்கு மட்டில் போகலாம். பசு முதலிய சிறந்த வஸ்துக்களையும், பூர்ணகும்பம் முதலிய மங்கள வஸ்துக்களையும், தேவாலயங்களையும், நாற்சந்தியையும் ப்ரதக்ஷிணமாய்ச் செல்ல வேண்டும். முடியாவிடில் மனதினுலாவது அந்த ஆசாரத்தை அனுஷ்டிக்க வேண்டு. அது புஷ்கலமாய் ஆகின்றது. இது ஆபத்கல்பம். ஜிதேந்த்ரியரும், குருக்களால் நன்கு சிக்ஷிக்கப்பட்டவரும், வஞ்சனை, பேராசை, தவருன ஜ்ஞானம் இவை இல்லாதவரும், வேதமறிந்தவருமான வ்ருத்தர்கள் எதைச் சொல்லுகின்றனரோ அதைச் செய்ய வேண்டும்.

बोधायनः — वैणवं दण्डं धारयेद्रुक्मकुण्डले च पदा पदस्य प्रक्षालनमधिष्ठानं च वर्जयेच्छुक्ता रूक्षाः परुषवाचो न ब्रूयान्न कूपमवेक्षेत न गर्तमवेक्षेत न तत्रोपविशेद्यत एनमुत्थापयेत् पुररेणु कुण्ठितशरीरस्तत्परिपूर्णनेत्रवदनस्तु नगरे वसन् सुनियतात्मा सिद्धिमवाप्स्यतीति न तदस्ति। रथाश्वगजधान्यानां गवां चैव रजः शुभम्। अप्रशस्तं समूहन्याः श्वाजाविखरवाससाम्। पूज्यान् पूजयेत् इति।

போதாயனர்:- வேணு தண்டத்தையும், ஸ்வர்ண குண்டலங்களையும் தரிக்க வேண்டும். காலால் தேய்த்துக் காலை அலம்பக் கூடாது. காலின்மேல் காலை வைத்துக் கொள்ளக் கூடாது. அசுத்தங்களும், கடினமாயும், இரைச்சலுள்ளதாயுமுள்ள வார்த்தைகளை தவிர்க்க வேண்டும். கிணற்றையும், பள்ளத்தாக்கையும் எட்டிப் பார்க்கக் கூடாது. எங்கு உட்கார்ந்தால் இவனை எழுப்புவானோ அங்கு உட்காரக் கூடாது. பட்டணத்துப் புழுதியால் பூசப்பட்ட சரீரமுடையவனும், அதனுல் நிறைந்த கண், வாய் இவைகளை உடையவனுமாய் நகரத்தில் வஸிப்பவன் சுத்தனுயிருந்தால் ஸித்தியை அடைவான் என்பதில்லை. (ஏனெனில்) தேர், குதிரை,

யானை, தான்யம், பசுக்கள் இவைகளின் புழுதி சுபமாகும். துடைப்பம், நாய், ஆடு, செம்மறி ஆடு, கழுதை, வஸ்த்ரம் இவைகளின் புழுதி அசுத்தமாம். பூஜ்யர்களைப் பூஜிக்க வேண்டும்.

देवलः—आत्मानं न शपेद् दोषा न व्रजेन् न स्वपेद्दिवा। न नक्तं विलिखेद्भूमिं गाश्च रात्रौ तु न स्पृशेत्॥ ब्राह्मणान्नृपतीन् वृद्धान् स्वांश्च शान्तान् यतीनपि। नाक्रोशेन्नावमन्येत पूजयेद् दैवतं तथा॥ यः काष्ठपादुकारूढो गृहात् परगृहं व्रजेत्। तं तु दृष्ट्वा दुराचारं सूर्यश्चैव निमीलति इति। अपरार्के– छाया स्याद्दासवर्गस्तु दुहिता कृपणस्तथा। तस्मादेतैरधिक्षिप्तः सहेत ह्यज्वरः सदा इति॥ मार्कण्डेयः- असत्प्रलापमनृतं वाक्पारुष्यं च वर्जयेत्। असच्छास्त्रमसद्वादम-सत्सेवां च वै नरः इति।

தேவலர்:- குற்றத்தால் தன்னைத் திட்டிக் கொள்ளக் கூடாது. இரவில் வழிநடக்கக் கூடாது. பகலில் தூங்கக் கூடாது. இரவில் பூமியைக் கீறக் கூடாது. பசுக்களையும் தொடக் கூடாது. ப்ராம்ஹணர், அரசர், வ்ருத்தர், பந்துக்கள், சாந்தரான யதிகள் இவர்களை நிந்திக்கக் கூடாது. அவமதிக்கவும் கூடாது. தேவதையைப் போலப் பூஜிக்க வேண்டும். எவன் கட்டையினுல் செய்யப்பட்ட பாதுகைகளிலேறி ஒரு வீட்டிலிருந்து மறு வீட்டிற்குச் செல்கின்றுனே, அந்தச் துராசாரனைக் கண்டு ஸூர்யனும் கண்களை மூடிக்கொள்கிறுன். அபரார்க்கத்தில்:- வேலைக்காரர்களும், பெண்ணும், ஏழையும் தனது நிழலுக்குச் சமமானவர்கள். ஆகையால் அவர்கள் ஒருக்கால் அதிக்ஷேபமாய்ச் சொன்னுலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். தாபத்தை அடையக் கூடாது. **மார்க்கண்டேயர்**:- கெட்ட வார்த்தை, பொய்ப் பேசுதல், வார்த்தையில், கடுமை, கெட்ட சாஸ்த்ரம், கெட்ட விவாதம், அஸத்துக்களைச் சேவித்தல் இவைகளை தவிர்க்க வேண்டும்.

चतुर्विंशतिमते — कृष्णसर्पं द्विजं दुष्टं शूद्रं च प्रतिवादकम्। गर्दभं जारजातं च दूरतः परिवर्जयेत्॥ नोद्यानादावकालेषु प्राज्ञस्तिष्ठेत् कदाचन इति ॥ स्मृतिरत्ने — वासस्तिरोहितं सूर्यमादर्शेऽम्बुनि बिम्बितम्। आयुष्कामो न वीक्षेत न च्छायामात्मनो जले॥ नाञ्जयन्तीं स्त्रियं नेत्रे न चाभ्यक्तामनावृताम्। न पश्येत् प्रस्वपन्तीं च तेजस्कामो द्विजोत्तमः ॥ नासहायो व्रजेद्रात्रावुत्पथे न चतुष्पथे। न यज्ञमवृतो गच्छेदार्त्विज्यार्थं कचिद्द्विजः॥ नमस्कर्तुं व्रजेत् कामं दिदृक्षुर्यज्ञमेव वा। दिवा स्वप्नं तथाऽऽलस्यं पैशुन्यं च तथा मदम्॥ अभियोगमयोगं च श्रेयोऽर्थी परिवर्जयेत् इति।

சதுர்விம்சதிமதத்தில்:- கரும்பாம்பு, துஷ்ட ப்ராம்ஹணன், எதிர்த்துப் பேசும் சூத்ரன், கழுதை, ஜாரனுக்குப் பிறந்தவன் இவர்களைத் தூரத்தில் பரிஹரிக்க வேண்டும். அறிந்தவன் தோட்டம் முதலியவிடங்களில் அகாலங்களில் ஒருகாலும் இருக்கக் கூடாது. ஸ்ம்ருதிரத்னத்தில்:- வஸ்த்ரத்தால் மறைக்கப்பட்டதும், கண்ணாடியிலும், ஜலத்திலும் தோன்றுவதுமான ஸூர்யமண்டலத்தையும், ஜலத்தில் தன் நிழலையும், ஆயுளை விரும்பியவன் பார்க்கக் கூடாது. தேஜஸ்ஸை விரும்பும் ப்ராம்ஹணன், தன் ஸ்த்ரீயை, மை இட்டுக் கொள்ளும் போதும், எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் போதும், வஸ்த்ரமில்லாத போதும், தூங்கும் போதும் பார்க்கக் கூடாது. இரவில் துணையில்லாமல் போகக் கூடாது. வேறு மார்க்கமாய்ச் செல்லக் கூடாது. நாற்சந்தியில் இருக்கக் கூடாது. ப்ராம்ஹணன் ருத்விக் ஆகும் ஆசையால், அழைக்கப்படாமல் யாகத்திற்குப் போகக் கூடாது; யாகத்தைப் பார்ப்பதற்காகவோ, நமஸ்கரிப்பதற்காகவோ இஷ்டப்படி போகலாம். பகலில் நித்ரை, சோம்பல், கோட்சொல்லுதல், மதம், துஷ்டருடன் சேர்க்கை, ஸாதுக்களுடன் சேராதிருத்தல் இவைகளை நன்மையை விரும்புவோன் தவிர்க்க

வேண்டும்.

अपरार्के—निन्दा मृत्युपदं ज्ञेयं निकृतिस्तमसः पदम् । सर्वभूतात्मभूतत्वादार्जवं ब्रह्मणः पदम् ।। द्वौ मासौ पाययेद्वत्सं तृतीये द्विस्तनं दुहेत् । चतुर्थे त्रिस्तनं शेषं यथान्यायं यथाबलम् ।। अन्तःपुरं वित्तगृहं परद्रोहिगृहं तथा । न गच्छेद्बन्धनागारं वध्यभूमिं च गर्हिताम् । गोपयेत् जन्मनक्षत्रं धनमायुर्गृहे बलम् । वेगरोधो न कर्तव्यस्त्वन्यत्र क्रोधवेगतः ।। नोपेक्षितव्यो व्याधिः स्यान्मृदुरल्पोऽपि वा नृणाम् ।। विभीतककपित्थार्कस्नुहिच्छायां न चाश्रयेत् । स्तम्भदीपमनुष्याणामन्येषां प्राणिनां तथा ।। गोगजाश्वाजपुच्छेषु मुखेषु च विशेषतः । यद्धग्रमुदकं तस्य विप्रुषो दूरतस्त्यजेत् इति ।

அபரார்க்கத்தில்:- *பிறரை நிந்திப்பது மரணத்திற்கு அடையாளம், கபடம் பாபத்திற்கு அடையாளம். ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆத்மாவாய் இருப்பதால் ருஜுவாயிருக்கும் தன்மை ப்ரம்ஹப்ராப்திக்கு அடையாளமாம். பசு ஈன்றபிறகு இரண்டு மாதம் வரையில் கன்றையே ஊட்டச் செய்ய வேண்டும். மூன்றுவது மாஸத்தில் இரண்டு முலைகளை மட்டும் கறக்க வேண்டும். நான்காவது மாஸத்தில் மூன்று முலைகளை மட்டும் கறக்க வேண்டும். பிறகு, ந்யாயத்தையும், பலத்தையும் அனுஸரித்துக் கறக்க வேண்டும். அந்த:புரம், பணமிருக்குமிடம், பிறருக்கு த்ரோஹம் செய்பவனின் க்ருஹம், காராக்ருஹம், கொலை செய்யுமிடம் இவ்விடங்களுக்குப் போகக் கூடாது. பிறந்த நக்ஷத்ரம், பணம், ஆயுஸ், வீட்டிலுள்ள பலம் இவைகளை ரஹஸ்யமாய் வைத்துக் கொள்ள வேண்டும். கோபத்தின் வேகத்தைத் தவிர்த்து மற்றவையின் வேகத்தைத் தடுக்கக் கூடாது. மனிதரின் வ்யாதி மெதுவானாலும், அல்பமானாலும் அதை உபேக்ஷிக்கக் கூடாது. தானி, விளா, எருக்கு, கள்ளி இவைகளின் நிழலை அண்டக் கூடாது. தூண், தீபம், மனிதன், மற்ற ப்ராணிகள்*

இவைகளின் நிழலையும் அண்டக் கூடாது. பசு, யானை, குதிரை, ஆடு இவைகளின் வாலினின்றுவது, வாயினின்றுவது, தெறிக்கும் ஜலத்திவலைகளைத் தூரத்தில் தவிர்க்க வேண்டும்.

धर्मसारे— खगवातः शूर्पवातो वातो घ्राणमुखोत्थितः । सुकृतानि निहन्त्यते संस्पृष्टाः पुरुषस्य च इति ।। शातातपः – रेणवः शुचयः सर्वा वायुना समुदीरिताः । अन्यत्र रासभाजाविसमूहाजिन-वाससाम् ।। अजाविरेणुसंस्पर्शादायुर्मर्त्यस्य हीयते । श्वकाकोष्ट्र-खरोलूक सूकरग्रामपक्षिणाम् इति ।।

தர்மஸாரத்தில்:- பக்ஷியின் காற்று, முறத்தின் காற்று, மூக்கு, வாய் இவைகளின் காற்று, இவைகள் ஸ்பர்சிக்கப்பட்டால் மனிதனின் புண்யங்களை அழிக்கின்றன. சாதாதபர்:- காற்றினால் கிளப்பப்பட்ட தூளிகள் எல்லாம் சுத்தங்களே. கழுதை, வெள்ளாடு, செம்மறியாடு, துடைப்பம், தோல், வஸ்த்ரம் இவைகளின் தூளிகளைத் தவிர்த்து, ஆடுகள், நாய், காக்கை, ஒட்டகம், கழுதை, கோட்டான், பன்றி, க்ராமப் பறவைகள் இவைகளின் தூளிகளை ஸ்பர்சித்தால் மனிதன் ஆயுள் குறைகின்றது.

धर्मसारे—गोविप्रयोर्ब्राह्मणाग्न्योर्दम्पत्योर्गुरुशिष्ययोः । अन्तरेण न गच्छेत्तु हरस्य वृषभस्य च इति ।। देवलः— विद्या वित्तं तपश्चेति त्रीणि तेजांसि देहिनः । इह चामुत्र च श्रेयः सदैतैः साध्यते त्रिभिः ।। विद्यया विमलं ज्योतिर्वित्तत्यागात् सुखोदयम् । तपसा विमलां भूतिं प्राप्नुयानन्मानवस्त्रिभिः इति ।। शङ्खलिखितौ — आपत्स्वपि हि कष्टासु परस्वं कामेयत न । नाभक्ष्यं भक्षयेत् किञ्चिन्नापूर्वचरितं चरेत् ।। कर्तव्यं न कर्तव्यं प्राणैः कण्ठगतैरपि ।। कर्तव्यमेव अकर्तव्यं प्राणैः कण्ठगतैरपि इति ।

தர்மஸாரத்தில்:- பசு, ப்ராம்ஹணன் இவரின் நடுவிலும், ப்ராம்ஹணன், அக்னி இவர்களின் நடுவிலும், தம்பதிகளின் நடுவிலும், குருசிஷ்யர்களின் நடுவிலும், சிவன் வ்ருஷபம் இவரின் நடுவிலும் போகக் கூடாது. தேவலர்:- மனிதனுக்கு, வித்யை, பணம், தபஸ் என்ற இம்மூன்றும் தேஜஸ்ஸுகளாம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் நன்மை இவைகளால் எப்பொழுதும் ஸாதிக்கப்படுகிறது. வித்யையால் நிர்மலமான ஒளியையும், பணத்தைக் கொடுப்பதால் ஸுகத்தின் உத்பத்தியையும், தபஸ்ஸினால் நிர்மலமான ஐச்வர்யத்தையும் மனிதன் அடைகிறான். சங்கலிகிதர்கள்:- கஷ்டமான ஆபத்துகளிலும், பிறனின் பொருளை விரும்பக்கூடாது. பக்ஷிக்கக் கூடாததையும் பக்ஷிக்கக் கூடாது. புதிதான நடத்தையை அனுஷ்டிக்கக் கூடாது. உயிர் செல்லும் தருணத்திலும் நிஷித்தமான கார்யத்தைச் செய்யக் கூடாது. சாஸ்த்ர விஹிதமான கார்யத்தையே செய்ய வேண்டும்.

बृहस्पतिः — यथा विद्या यथा कर्म यथा वित्तं यथा वयः । जानंस्तथैव कुर्वीत न वेषादिभिरुद्धतः ।। यद्यपि स्यात्त्रिलोकज्ञस्त्रैलोक्याकर्षणक्षमः । तथाऽपि लौकिकाचारं मनसाऽपि न लङ्घयेत् इति । यमः — परकीयरहस्यानि नैवोपशृणुयात् क्वचित् । दुष्टव्याक्यं न च ब्रूयात् ब्राह्मणानां विशेषतः ।। तूष्णीमासीत निन्दायां न ब्रूयात् किञ्चिदुत्तरम् ।। यानि मिथ्याभिशस्तानां पतन्त्यश्रूणि रोदनात् । तानि मित्रपशून् घ्नन्ति तेषां मिथ्याभिशंसिनाम् । शपता यत् कृतं पुण्यं शप्यमानं तु गच्छति ।। शप्यमानस्य यत् पापं शपन्तमनुगच्छति इति ।

ப்ருஹஸ்பதி:- தன்னுடைய வித்யை எவ்வளவோ, கார்யம் எவ்வளவோ, பணம் எவ்வளவோ, வயது எவ்வளவோ அதற்கு அனுகுணமாகக் கார்யத்தை அறிந்து செய்ய வேண்டும். வேஷம் முதலியதால்

கர்வமுள்ளவனும் இயலாதபடி செய்யக் கூடாது. மூன்று உலகங்களை அறிந்தவனாயினும், மூன்றுலகங்களையும் வசப்படுத்தச் சக்தனாயினும், உலகத்திலுள்ள நல்ல ஆசாரத்தை மனதாலும் தாண்டக்கூடாது. **யமன்:-** பிறருடையதான ரஹஸ்யங்களை ஒருகாலும் கேட்கக் கூடாது. துஷ்ட வார்த்தையைச் சொல்லக் கூடாது. ப்ராம்ஹணர்களின் விஷயத்தில் சொல்லவேகூடாது. நிந்தித்தால் மௌனமாய் இருக்க வேண்டும். பதிலொன்றையும் சொல்லக் கூடாது. பொய்யான பாபம் ஒருவர் மீது ஏற்றப்பட்டுத் தூஷிக்கப்பட்டவர் வருந்தி அழுவதால் எந்தக் கண்ணீர்த் துளிகள் விழுகின்றனவோ அவை, பொய்யான அபவாதத்தைச் சொல்லியவரின் பந்துக்களையும், பசுக்களையும் அழிக்கின்றன. பிறனைத் திட்டினால், திட்டுகிறவன் செய்த புண்யமெல்லாம், திட்டப்படுகிறவனை அடைகின்றது. திட்டப் படுகிறவனின் பாபமெலாம் திட்டுகிறவனை அடைகின்றது.

बृहस्पतिः— उपकाराय यो ब्रूयात् ब्राह्मणार्थे गवामपि । ब्रह्मयोनिशतं प्राप्य देवत्वमधिगच्छति इति । व्यासः— वेदशास्त्रविवादेन कालो गच्छति धीमताम् । व्यसनेनैव मूर्खाणां निद्रया कलहेन वा इति ॥ याज्ञवल्क्यः —वयोबुद्ध्यर्थवाग्वेषश्रुताभिजन-कर्मणाम् । आचरेत् सदृशीं वृत्तिमजिह्मामशठां तथा इति ।

ப்ருஹஸ்பதி:- எவன் ப்ராம்ஹணர்களுக்கும், பசுக்களுக்கும். உபகாரத்திற்காசக நல்வார்த்தையைப் பேசுகின்றானோ, அவன் நூறுமுறை ப்ராம்ஹண ஜன்மத்தை அடைந்து, பிறகு தேவத்தன்மையை அடைகிறான். **வியாஸர்:-** நல்லபுத்தி உள்ளவருக்கு, வேதம், சாஸ்த்ரம் இவைகளை ஆராய்வதால் காலம் செல்லும், மூர்க்கருக்கு வ்யஸனம் (சூதாட்டம், மத்யபானம், ஸ்த்ரீஸங்கம் முதலியது), நித்ரை, கலஹம் இவைகளாலேயே காலம் செல்லும். (வ்யஸனம் -

பொழுதுபோக்கு) **யாக்ஞவல்க்யர்:-** வயது, புத்தி, தனம், வார்த்தை, வேஷம், சாஸ்த்ரம், குலம், தொழில் இவைகளுக்கு அனுகுணமாயும், வக்ரமில்லாததும், மாத்ஸர்யமில்லாததுமான ஆசாரத்தை ஸ்வீகரிக்க வேண்டும்.

स्मृत्यर्णवे—सर्वेषां ब्राह्मणो विद्यावृत्त्याचारान् यथाविधि । प्रब्रूयादितरेभ्यश्च स्वयं चैव तथा भवेत् ।। अहिंसयैव भूतानां कार्यं श्रेयोऽनुशासनम् । वागेव मधुरा श्लक्ष्णा प्रयोज्या धर्ममीप्सता ।। संमानात् ब्राह्मणो नित्यमुद्विजेत भयादिव । अमृतस्येव चाकाङ्क्षेदमवमानस्य सर्वतः ।। अवमानात्तपोवृद्धिः संमानाच्च तपः क्षयः । अर्चितः पूजितो विप्रो दुग्धा गौरिव गच्छति इति ।। व्यासः — प्रथमा गतिरात्मैव द्वितीया गतिरात्मजः । सन्तो गतिस्तृतीयोक्ता चतुर्थी धर्मसङ्ग्रहः इति । दक्षः — पैशुन्यमनृतं मायां कामं क्रोधं तथाऽप्रियम् । द्वेषं सङ्गं परद्रोहं विकर्माणि विवर्जयेत् ।। आयुर्वित्तं गृहच्छिद्रं मन्त्रो मैथुनमौषधम् । आयो दानावमानौ च नव गोप्यानि सर्वदा इति ।

ஸ்ம்ருத்யர்ணவத்தில்:- ப்ராம்ஹணன் மற்ற எல்லோருக்கும், வித்யை, வ்ருத்தி, ஆசாரம் இவைகளை உபதேசிக்க வேண்டும். தானும் அனுஷ்டிக்க வேண்டும். ப்ராணிகளை ஹிம்ஸிக்காத முறையிலேயே நன்மையை உபதேசிக்க வேண்டும். தர்மத்தை அடைய விரும்புவோன், மதுரமாயும், ப்ரியமாயுமுள்ள வார்த்தையையே பேசவேண்டும். ப்ராம்ஹணன், பிறரால் செய்யப்படும் ஸம்மானத்தினின்றும், பயத்தைக் கொடுக்கும் வஸ்துவினின்று போலப் பயப்பட வேண்டும். எவரிடமிருந்தும் அவமானத்தை அம்ருதத்தைப் போல் எதிர்பார்க்க வேண்டும். அவமானத்தினின்றும் தபஸ்ஸிற்கு வ்ருத்தி உண்டாகிறது. ஸம்மானத்தினின்றும் தபஸ்ஸுக்கு நாசமுண்டாகிறது,

புகழப்பட்டும் பூஜிக்கப்பட்டமுள்ள ப்ராம்ஹணன் கறக்கப்பட்ட பசுபோல் (சோர்ந்து) செல்கின்றான். **வ்யாஸர்:-** தன் சரீரமே முதலாவது கதி, இரண்டாவது கதி புத்ரன், மூன்றாவது கதி ஸாதுக்கள், நான்காவது கதி தர்மத்தைச் சேர்ப்பதேயாம். **தக்ஷர்:-** கோட்செல்லுதல், பொய், மாயை, ஆசை, கோபம், அப்ரியம், த்வேஷம், பற்றுதல், பரத்ரோஹம், கெட்ட கார்யங்கள் இவைகளை வர்ஜிக்க வேண்டும். ஆயுள், தனம், க்ருஹச்சித்ரம், (வீட்டினுள் குறை) மந்த்ரம், மைதுனம், ஔஷதம், வரவு, தானம், அவமானம் என்ற ஒன்பதையும் எப்பொழுதும் மறைக்க வேண்டும்.

स्मृतिसारे— रक्तमाल्यं न धार्यं स्याच्छुक्लमाल्यं तु पण्डितैः। वर्जयित्वा तु कमलं तथा कुवलयं विभो। रक्तं शिरस्यधार्यं तु तथाऽनाघ्रेयमित्यपि इति ।। वामनपुराणे — देशानुशिष्टं कुलधर्ममग्र्यं स्वगोत्रधर्मं च न सन्त्यजेत। नानर्थसिद्धिं समुपाचरेत नासत्प्रलापं न च सत्यहीनम् ।। न निष्ठुरं नाम न शास्त्रहीनं वाक्यं वदेत् साधुजनेन येन। निन्द्यो भवेन्नैव च धर्मवेदी सङ्गं न चासत्सु जनेषु कुर्यात् ।। वृथाऽटनं वृथा दानं वृथा च पशुमारणम्। न कर्तव्यं गृहस्थेन वृथा दारपरिग्रहः इति ।। बोधायनः— यद्यौवने चरति विभ्रमेण सद्वाऽसद्वा यादृशं वा यथा वा। उत्तरे चेद्वयसि साधुवृत्तस्तदेवास्य भवति नेतराणि इति।

ஸ்ம்ருதிஸாரத்தில்:- அறிந்தவர்கள் சிவப்புப் புஷ்பங்களையும், வெள்ளைப் புஷ்பங்களையும் தரிக்கக் கூடாது. தாமரை, செங்கழுநீர் இவைகளைத் தவிர்த்து. சிவப்புப் புஷ்பத்தைத் தலையில் தரிக்கக் கூடாது, முகரக் கூடாது. **வாமனபுராணத்தில்:-** தேசத்திலுள்ளவரால் சொல்லப்பட்ட தர்மத்தையும், தன் குலதர்மத்தையும், தனது கோத்ரதர்மத்தையும் விடக்கூடாது. அனர்த்தத்தை விளைவிக்கும் கார்யத்தைச் செய்யக் கூடாது. கெட்ட வார்த்தை, பொய் வார்த்தை, நிஷ்டுரமான வார்த்தை, சாஸ்த்ரமில்லாத வார்த்தை இவைகளைப் பேசக் கூடாது.

எந்த வார்த்தையைப் பேசுவதால் ஸாதுஜனங்களால் நிந்த்யனுவானோ, தர்மக்ஞனுய் ஆவதில்லையோ அந்த வார்த்தையைப் பேசக்கூடாது. அஸஜ்ஜனங்களிடம் சேரக்கூடாது. வீணுய்ச்சுற்றுதல், வீணுய்த் தானம், வீணுய்ப் பசுஹிம்ஸை, வீணுய் விவாஹம் செய்து கொள்ளல் இவைகளை க்ருஹஸ்தன் தவிர்க்க வேண்டும். **போதாயனர்:-** மனிதன் யௌவனகாலத்தில் விசேஷப்ரமத்தால் நல்ல, அல்லது பொல்லாததான கார்யத்தை எதையோ எவ்விதமோ செய்தாலும், பின் வயதில் நல்ல நடத்தையுடையவனுயிருந்தால், அதுவே இவனுக்குப் பலனையளிப்பதாகும். மற்றவை பலனளிப்பதாகாது.

देवलः—अग्नेर्वृषलभुक्तस्य ग्रहणं नास्त्यनापदि । श्वपाको वृषलो भोक्तुं ब्राह्मणाग्निं च नार्हतः ॥ चण्डालाग्नेरमेध्याग्नेः सूतकाग्नेश्च कर्हिचित् । पतिताग्नेश्चिताग्नेश्च न शिष्टैर्ग्रहणं स्मृतम् इति । आश्वमेधिके – पचनाग्निं न गृह्णीयात् परवेश्मनि जातुचित् । तेन पक्केन चान्नेन यत् कर्म कुरुते शुभम् । तच्छुभस्य फलस्यार्धमग्निदस्य भवेद्धुवम् इति ।

தேவலர்:- ஆபத்தில்லாத காலத்தில், ப்ராம்ஹணன் சூத்ராக்னியை உபயோகிக்கக் கூடாது. ஶ்வபாகன், சூத்ரன் இவர்களும் ப்ராம்ஹணுக்னியை உபயோகிக்க அர்ஹல்லர். சண்டாளாக்னி, அசுத்தாக்னி, ஸூதகாக்னி, பதிதாக்னி, சிதா (மயானா)க்னி இவைகளைச் சிஷ்டர்கள் க்ரஹிக்கக் கூடாது. **ஆச்வமேதிகத்தில்:-** பிறர் வீட்டிலிருந்து பாகாக்னியை ஒருகாலும் க்ரஹிக்கக் கூடாது. க்ரஹித்து அதனுல் பக்வமான அன்னத்தால் எந்தச் சுபகர்மத்தைச் செய்கின்றுனோ, அந்தச் சுபகர்மத்தின் பலனின் பாதிப்பாகம் அக்னியைக் கொடுத்தவனைச் சேரும். நிச்சயம்.

दक्षः—मेखलाजिनदण्डेन ब्रह्मचारीति लक्ष्यते । गृहस्थो यष्टिवेदाद्यैर्नखरोम्णा वनाश्रितः ॥ यतिः काषायदण्डाभ्यां लक्षणानि

पृथक् पृथक् । यस्यैतल्लक्षणं नास्ति प्रायश्चित्ती न चाश्रमी ।। कुटुम्बी वर्जयेत् बिम्बं दार्वं शैलं च मृन्मयम् । गृहभित्तिषु संस्थं च योगनिद्रारसोत्सुकम् ।। कुटुम्बिनो विनाऽन्येषां तीर्थयात्रा विशिष्यते । कुटुम्बिनो गृहे सर्वं निर्गतो विकलो भवेत् इति ।

தக்ஷர்:- மேகலை, மான்தோல், தண்டம் இவைகளால் ப்ரம்ஹசாரீ என்று அறியப்படுகிறான். மூங்கில்கழி, வேதம் (தர்ப்பம்) இவைகளால் க்ருஹஸ்தன் என்று அறியப்படுகிறான். வளர்ந்துள்ள நகங்களாலும், ரோமங்களாலும் வானப்ரஸ்தன் என்று அறியப்படுகிறான். காஷாயவஸ்த்ரம், தண்டம் இவைகளால் ஸன்யாஸீ என்று அறியப்படுகிறான். இவர்களுக்கு அடையாளங்கள் தனித்தனியேயாம். எந்த ஆச்ரமிக்கு இந்த அடையாளமில்லையோ அவன் ப்ராயச்சித்தத்திற்கு அர்ஹன். அவன் ஆப்ரமியல்ல. குடும்பமுடையவன் கட்டையினாலும், சிலையினாலும், மண்ணினாலும் செய்யப்பட்ட பிம்பத்தையும், வீட்டின் சுவர்களிலுள்ள பிம்பத்தையும், யோக நித்ரையில் இருக்கும் பிம்பத்தையும் வர்ஜிக்க வேண்டும். குடும்பியைத் தவிர்த்த மற்றவர்க்கே தீர்த்தயாத்ரை ப்லாக்யமாகியது. குடும்பிக்கு ஸகலதீர்த்தமும் வீட்டிலேயே உள்ளது. குடும்பமில்லாதவனே வீட்டை விட்டு வெளியிற் செல்ல வேண்டும்.

सायणीये — पुंसां दीपप्रशमनात् स्त्रीणां कूश्माण्डखण्डनात् । अचिरेणैव कालेन वंशच्छेदो भविष्यति ।। क्षुतस्खलित जृम्भेषु नृणामायुः प्रहीयते । तत्क्षणात् परिहर्तव्यं जीवधूल्यङ्गुलिस्वनैः ।। क्षुते शतं जीवेति । स्खलिते पांसूनादाय ललाटे निधाय परिहार्यम् । जृम्भेण अङ्गुलिस्फोटेन परिहर्तव्यमित्यर्थः । अयोबीजजलान्नाग्निक्षीर-धान्यौषधादिकम् । रात्रौ दातुर्गृहं शून्यं प्रतिसङ्ग्रहणं शुभम् इति ।। किञ्चित् द्रव्यादानेन क्षीरादिदाने नक्तं न दोष इत्यर्थः ।। स्मृत्यन्तरे

— तृतीयमासादारभ्य न कुर्याद्गर्भिणीपतिः । क्षौरं शवानुगमनं दूरयात्रां प्रतिग्रहम् ॥ श्राद्धं च सागरस्नानं प्रे(व्र)तनिर्हरणं तथा । गृहारम्भप्रवेशौ च देवतास्थापनं तथा ॥ केशश्मश्रुनखादींस्तु धारयेद्गर्भिणीपतिः इति ।

ஸாயணீயத்தில்:- புருஷர்கள் விளக்கை அணைத்தாலும், ஸ்த்ரீகள் பூசணிக்காயை உடைத்தாலும், ஸ்வல்பகாலத்திலேயே வம்சக்ஷயம் ஏற்படும். தும்மல், தடுக்கிவிழுதல், கொட்டாவி விடுதல் இவைகள் ஏற்பட்டால், மனிதரின் ஆயுள் குறைகின்றது. ஆகையால், அவைகளை உடனே- பரிஹரிக்க வேண்டும். (எவ்விதமெனில்) தும்மலை, 'சதம்ஜீவ' என்று சொல்வதாலும், தடுக்கிவிழுதலைப் புழுதியை எடுத்து நெற்றியில் இடுவதாலும், கொட்டாவியை விரலைச் சொடுக்குவதாலும் பரிஹரிக்க வேண்டும் என்பது பொருள். இரும்பு, விதை, ஜலம், அன்னம், அக்னி, பால், தான்யம், ஔஷதம் முதலியதை ராத்ரியில் பிறருக்குக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால், கொடுத்தவனின் க்ருஹம் சூன்யமாகும். ஏதாவது த்ரவ்யத்தைக் கொஞ்சம் வாங்கிக் கொண்டு பால் முதலியதைக் கொடுத்தால் ராத்ரியில் தோஷமில்லை என்பது பொருள். மற்றொரு ஸ்ம்ருதியில்:- கர்ப்பிணியின் பதியானவன், மூன்றாவது மாதம் முதற்கொண்டு, க்ஷௌரம், பிணத்தின் பின் போகுதல், தூரதேசயாத்ரை, ப்ரதிக்ரஹம், ச்ராத்த போஜனம், ஸமுத்ர ஸ்நானம், சவத்தை வஹித்தல், க்ருஹாரம்பம், க்ருஹப்ரவேசம், தேவப்ரதிஷ்டை இவைகளைச் செய்யக் கூடாது. கர்ப்பிணியின் பதி, மயிர், மீசை, நகம் இவைகளை நறுக்கக் கூடாது. தரிக்க வேண்டும்.

पुराणे—धर्मो मित्रं प्रमीतस्य विद्या मित्रं प्रवासिनः । भार्या मित्रं गृहस्थस्य दानं मित्रं मरिष्यतः । केशान् मासत्रयादूर्ध्वं गर्भवान् वापयेद्यदि । गर्भध्वंसेन तत्तुल्यं ब्रह्महत्यासमं भवेत् ॥ क्षौरं शवानुगमनं

नखकृन्तनं च श्राद्धं च वास्तुकरणं ह्यतिदूरयानम्। उद्वाहवारिधि-जलस्नपनोपयोगमायुःक्षयं भवति गर्भिणिकापतीनाम् इति ॥ सारसमुच्चये— बीजानां वापनं क्षौरं वास्तुकर्म कृषिं तथा। रात्रौ विप्रो न कुर्वीत कुर्वन् क्षिप्रं विनश्यति। चौलाब्दे च विवाहाब्दे ह्यौपनायनिके तथा॥ मातापित्रोर्मृताब्दे च क्षौरं नैव समाचरेत् इति।

புராணத்தில்:- இறந்தவனுக்குத் தர்மம் மித்ரனும், அன்யதேசம், செல்பவனுக்கு வித்யை மித்ரனும், க்ருஹத்தில் இருப்பவனுக்குப் பார்யை மித்ரனும். இறக்கப் போகிறவனுக்குத் தானம் மித்ரனும். கர்ப்பிணீபதியானவன், மூன்று மாதத்திற்கு மேல் வபனம் செய்து கொண்டால், அது கர்ப்பத்தை அழிப்பதற்குச் சமமாம். ப்ரம்ஹஹத்யைக்கும் ஸமமாகும். க்ஷெளரம், சவானுகமனம், நகங்களைச் சேதித்தல், ச்ராத்த போஜனம், க்ருஹநிர்மாணம், தூரதேசகமனம், விவாஹம், ஸமுத்ரஜலஸ்நானம் இவைகளைச் செய்தால் கர்ப்பிணீ பதிகளுக்கு ஆயுள் குறையும். ஸாரஸமுச்சயத்தில்:- ப்ராம்ஹணன், ராத்ரியில், விதை விதைத்தல், க்ஷெளரம், க்ருஹாரம்பம், க்ருஷி இவைகளைச் செய்யக் கூடாது. செய்தவன் சீக்ரத்தில் நசிப்பான். செளளம் செய்து கொண்ட வர்ஷம், விவாஹம் செய்து கொண்ட வர்ஷம், உபநயனம் செய்து கொண்ட வர்ஷம், மாதாபிதாக்கள் இறந்த வர்ஷம் இவைகளில் க்ஷெளரம் கூடாது.

चन्द्रिकायाम्—नोदन्वदम्भसि स्नायान्नखश्मश्रुनिकृन्तनम्। अन्तर्वत्न्याः पतिः कुर्वन् व्रजेत नरकं ध्रुवम्॥ वापयेन् न कृतोद्वाहो वर्षं वर्षार्धमेव वा। भुञ्जीत पार्वणं नैव श्राद्धं तत्र विशेषतः॥ एकोदराणां पुत्राणां पितुश्चैकदिने तथा। श्राद्धे तु भोजनं नैव क्षुरकर्म च नैव हि॥ पितुः पुत्रस्य चैकस्मिन् दिने क्षौरं कृतं यदि। पुत्रस्य चायुर्हीयेत पितुश्च तदनन्तरम्॥ नित्यं नैमित्तिकं चैव कर्म कुर्वन्नतन्द्रितः। निषिद्धं वर्जयन् धीमा निहामुत्र सुखी भवेत् इति॥

—*—

சந்த்ரிகையில்:- கர்ப்பிணியின் பதி, ஸமுத்ர ஸ்நானம், க்ஷௌரம் இவைகளைச் செய்தால் நரகத்தை அடைவான், நிச்சயம். விவாஹம் செய்து கொண்டவன் ஒரு வர்ஷம், அல்லது அரைவர்ஷம் வரையில் க்ஷௌரம், ச்ராத்த போஜனம் இவைகளைச் செய்யக் கூடாது. ஒரே வயிற்றில் பிறந்த புத்ரர்களுக்கும், பிதாவுக்கும், ஒரே தினத்தில், ச்ராத்த போஜனமும், க்ஷௌரமும் கூடாது. பிதாவும் புத்ரனும் ஒரே நாளில் க்ஷௌரம் செய்து கொண்டால், புத்ரனுக்கும், பிதாவுக்கும் ஆயுள் குறையும். புத்தியுள்ளவன், சோம்பல் இல்லாதவனாய், நித்ய நைமித்திக கர்மங்களை அனுஷ்டிப்பவனும், நிஷித்தத்தை வர்ஜிப்பவனுமானால், அவன் இவ்வுலகிலும், மேலுலகிலும் ஸுகமுடையவனாய் ஆவான்.

आह्निकाण्डे अवशिष्टधर्मप्रकरणं समाप्तम्।

ஆஹ்னிக காண்டத்தில் அவசிஷ்டதர்மம் முற்றிற்று.

—◦—

अनुबन्धः—२

द्रव्यशुद्धिप्रकरणम्

तत्र शुद्धिहेतूनाह पराशरः— कालोऽग्निः कर्म मृद्वायुः मनो ज्ञानं तपो बलम्। पश्चात्तापो निराहारः सर्वेऽमी शुद्धिहेतवः ॥ त्रीणि देवाः पवित्राणि ब्राह्मणानामकल्पयन्। अदृष्टमद्भिर्निर्णिक्तं यच्च वाचा प्रशस्यते ॥ ब्राह्मणो जङ्गमं तीर्थं तीर्थभूता हि साधवः । तेषां वाक्योदकेनैव शुद्ध्यन्ति मलिना जनाः इति।

அநுபந்தம்—2

த்ரவ்ய சுத்திப்ரகரணம்

இனி த்ரவ்யசுத்தி ப்ரகரணம் சொல்லப்படுகிறது. அதில், சுத்திகாரணங்களைச் சொல்லுகிறார் பராசரர்:-

காலம், அக்னி, கர்மம், மண், வாயு, மனது, க்ஞானம், தபஸ், பலம், பச்சாத்தாபம், உபவாஸம் என்ற இவை எல்லாம் சுத்திகாரணங்களாம். தேவர்கள், ப்ராம்ஹணர் களுக்கு, அத்ருஷ்டம், ஜலத்தால் அலம்பியது, வாக்கிஞல் அனுக்ரஹிக்கப்பட்டது என்ற இம்மூன்றையும் சுத்தி காரணங்களாகக் கல்பித்தனர். அத்ருஷ்டம் = (காணுதது) காக்கை முதலியதால் தொடப்பட்ட வஸ்து தன்னுல் பார்க்கப்படவில்லையோ, பிறனுலும் சொல்லப்படவில்லை எனில் அதை உபயோகித்தால் தோஷமில்லை. எந்த இடத்தில் அதற்காகச் சுத்தி சொல்லப்படவில்லையோ. அவ்விடத்தில் அந்த வஸ்து ஜலத்தால் சுத்தமாகிறது. எந்த வஸ்துவில் சொல்லியபடி சுத்தி செய்த பிறகும் மனதிற்கு ஸந்தோஷமில்லாததால் சுத்தியில் ஸந்தேஹமுள்ளதோ அந்த வஸ்து, ப்ராம்ஹணர்களால் 'இது சுத்தமாகியது' என்று சொல்லப்பட்டால் சுத்தமாகின்றது என்பது பொருள். (இது விக்ஞானேச்வரீயத்திலுள்ளது.) ப்ராம்ஹணர்கள் ஜங்கமமான தீர்த்தமாம். அவர்களின் வசனமெனும் ஜலத்தாலேயே மலினரான (அழுக்குள்ள) ஜனங்கள் சுத்தராகின்றனர்.

बोधायनः—कालोऽग्निर्मनसः शुद्धिरुदकाद्युपलेपनम् । अविज्ञातं च भूतानां षड्विधं शौचमुच्यते ।। कालं देशं तथाऽऽत्मानं द्रव्यं द्रव्यप्रयोजनम् । उपपत्तिमवस्थां च ज्ञात्वा शौचं प्रकल्पयेत् ।। पञ्चेन्द्रियस्य देहस्य बुद्धेश्च मनसस्तथा । द्रव्यदेशक्रियाणां च शुद्धिराचार्य इष्यते इति ।। मनुः – ज्ञानं तपोऽग्निराहारो मृन्मनो वार्युपाञ्जनम् । वायुः कर्मार्ककालौ च शुद्धेः कर्तॄणि देहिनाम् इति ।। आहारः - पञ्चगव्यादिः । उपाञ्जनं - गोमयादिकम् ।। स एव — क्षान्त्या शुद्ध्यन्ति विद्वांसो दानेनाकार्यकारिणः प्रच्छन्नपापा जप्येन तपसा वेदवित्तमाः ।। अद्भिर्गात्राणि शुद्ध्यन्ति मनः सत्येन शुध्यति । विद्यातपोभ्यां भूतात्मा बुद्धिर्ज्ञानेन शुद्ध्यति इति ।।

போதாயனர்:- காலம், அக்னி, மனச்சுத்தி, ஜலம் முதலியது, உபலேபனம், அவிக்ஞாதம் என்று ஆறுவிதமுள்ளது பூதங்களின் சுத்தி என்று சொல்லப்படுகிறது. காலம், தேசம், ஆத்மா, த்ரவ்யம், த்ரவ்யப்ரயோஜனம், உபபத்தி, அவஸ்தை என்ற இவைகளை அறிந்து சுத்தியைக் கல்பிக்க வேண்டும். ஐந்து இந்த்ரியங்களுடைய தேஹத்திற்கும், புத்திக்கும், மனதிற்கும், த்ரவ்யம், தேசம், க்ரியை இவைகளுக்கும் சுத்தியே ஆசார்யன் (முக்யன்) எனப்படுகிறது. மனு:- க்ஞானம், தபஸ், அக்னி, ஆஹாரம் (பஞ்சகவ்யம் முதலியது), மண், மனஸ், உபாஞ்ஜனம் (கோமயம் முதலியது), வாயு, கர்மம், ஸூர்யன், காலம் என்ற இவை எல்லாம் ப்ராணிகளுக்கு சுத்திகரங்களாம். மனுவே:- வித்வான்கள் பொறுமையால் சுத்தராகின்றனர். அகார்யத்தைச் செய்தவர்கள் தானத்தாலும், பாபத்தை மறைத்து வைத்திருப்பவர் ஜபத்தாலும், வேதத்தை நன்முய் அறிந்தவர்கள் தபஸ்ஸினுலும் சுத்தராகின்றனர். அங்கங்கள் ஜலத்தினுல் சுத்தங்களாகின்றன. மனது ஸத்யத்தால் சுத்தமாகிறது. ஜீவன் வித்யையாலும் தபஸ்ஸினுலும் சுத்தனுகிருன். புத்தி ஜ்ஞானத்தால் சுத்தமாகிறது.

अशुद्धिहेतवो दर्शिताः स्मृत्यर्थसारे—विण्मूत्रशुक्ररक्तवसा-सुरामद्यादीन्यत्यन्तोपहति कारणानि। नखश्लेष्माश्रुस्वेदादीन्यल्पो-पहतिकारणानि । अल्पकाले अल्पस्पर्शे अल्पोपहतिः । बहुकाले अधिकस्पर्शे अत्यन्तोपहतिः इति ।। मनुः – तैजसानां मणीनां च सर्वस्याश्ममयस्य च। भस्मनाऽद्भिर्मृदा चैव शुद्धिरुक्ता मनीषिभिः ।। निर्लेपं काञ्चनं भाण्डमद्भिरेव विशुध्यति । अब्जमश्ममयं चैव राजतं चानुपस्कृतम् इति । अब्जं - शङ्खमुक्तादि । अनुपस्कृतं - निर्लेपम् । एवं विशेषणात् सलेपविषयः पूर्वश्लोकः ।। ताम्रायःकांस्यरौप्याणां त्रपुणः सीसकस्य च। शौचं यथार्हं कर्तव्यं क्षाराम्लोदकवारिभिः इति।

அசுத்தியின் காரணங்கள் சொல்லப்பட்டுள்ளது, ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- விஷ்டை, மூத்ரம், சுக்லம், ரக்தம், வஸை (ஊன்நீர்), ஸுரை, மத்யம் முதலியவை அதிகமான உபஹதிக்கு (அசுத்திக்கு)க் காரணங்கள். நகம், கோழை, கண்ணீர், வேர்வை முதலியவை ஸ்வல்ப உபஹதிக்குக் காரணங்கள். ஸ்வல்ப்ப காலத்தில் ஸ்வல்ப்ப ஸ்பர்சமேற்பட்டால் அல்ப்போபஹதி. வெகுகாலம் அதிகஸ்பர்சம் ஏற்பட்டால் அத்யந்தோபஹதி எனப்படும். மனு:- உலோகங்களுக்கும், மணிகளுக்கும் (ரத்னங்கள்), கல்லால் உண்டாகிய எல்லாவற்றுக்கும், சாம்பல், ஜலம், மண் இவைகளால் சுத்தியை அறிந்தவர் சொல்லுகின்றனர், அசுத்த வஸ்துவின் பற்றில்லாத ஸ்வர்ணமயமான பாண்டம் ஜலத்தினாலேயே சுத்தமாகிறது. பற்றில்லாத சங்கு முத்து முதலியதும், கல்மயமானதும், வெள்ளிப்பாத்ரம் முதலியதும் ஜலத்தாலேயே சுத்தமாகிறது. 'லேபமில்லாத' என்ற விசேஷணத்தால், முன் ச்லோகம் லேபமுடையதின் விஷயமாகிறது. தாம்ரம், இரும்பு, வெண்கலம், பித்தளை, காரீயம், ஈயம் இவைகளுக்குத் தகுந்தபடி, உப்பு ஜலம், புளி ஜலம் இவைகளால் சுத்தி செய்ய வேண்டும்.

उशनाः—मूत्रपुरीषरेतःकुणपोपहतानामावर्तनमुल्लेखनं भस्मना त्रिः सप्तकृत्वः परिमार्जनमतैजसानामेवं भूतानामुत्सर्गः इति। कण्वः – श्लेष्माद्युपहतानां प्रतिलोमस्पर्शोपहतानामेकविंशतिकृत्वो मार्जनं, रजस्वलोच्छिष्टानामेकदिनं पञ्चगव्यं प्रक्षिप्यैकविंशति कृत्वो मार्जनमस्पृश्योपहतानामावर्तनम् इति। पराशरः – भस्मना शुद्ध्यते कांस्यं ताम्रमाम्लेन शुद्ध्यति। भस्मना शुद्ध्यते कांस्यं सुरया यन्न लिप्यते। सुरामात्रेण संस्पृष्टं शुद्ध्यतेऽग्न्युपलेखनैः ॥ उपलेखनम् - शस्त्रेण उपरिभागस्य तक्षणम्। मूत्रपुरीषलेपेऽप्येषैव शुद्धिः ॥

உசனஸ்:- மூத்ரம், மலம், சுக்லம், பிணம் இவைகளால் அசுத்தமானவைகளுக்குத் தேய்த்தல், கடைதல், சாம்பலினுல் 21- முறை துடைத்தல் இது சுத்திஹேதுவாகும். இது தாதுபாத்ரங்களுக்கு. மற்றவைகளை த்யாகம் செய்ய வேண்டியது. கண்வர்:- கோமை முதலியதால் அசுத்தமானவைகளுக்கும், ப்ரதி லோமஜாதீய ஸ்பர்சத்தால் அசுத்தமானவைக்கும் 21-முறை துடைப்பதால் சுத்தி. ரஜஸ்வலையால் உச்சிஷ்டமானவைக்கு, ஒருநாள் முழுவதும் பஞ்சகவ்யத்தைப் போட்டு 21- தடவை தேய்ப்பது சுத்திகரம், தீண்டக்கூடாதவரால் அசுத்தமானவைக்கு இவை அதிகப்படுத்துதல் சுத்திகாரணம். பராசரர்:- வெண்கலம் சாம்பலினுல் சுத்தமாகிறது. தாம்ரம் புளியினுல் சுத்தமாகிறது. வெண்கலம் கள்ளால் ஸ்பர்சிக்கப்படாமலிருந்தால் மட்டில் சாம்பலினுல் சுத்தமாகும். கள்ளால் ஸ்பர்சிக்கப்பட்டதாகில் அக்னியில் காய்ச்சுவதாலும் சாணியினுல் தேய்ப்பதாலும் சுத்தமாகும். மூத்ரமலங்களால் பற்றப்பட்டாலும் இதே சுத்தி.

गवाघ्रातादीनां दशकृत्वो भस्मकर्षणेन शुद्धिरित्याह स एव – गवाघ्रातानि कांस्यानि श्वकाकोपहतानि च । शुद्ध्यन्ति दशभिः क्षारैः शूद्रोच्छिष्टानि यानि च ॥ (क्षारैः - लवणसहितैस्तोयैः) गण्डूषं पादशौचं च कृत्वा वै कांस्यभाजने । षण्मासान् भुवि निक्षिप्य उद्धृत्य पुनराहरेत् । दन्तमस्थि तथा शृङ्गं रूप्यसौवर्णभाजनम् । मणिपात्राणि शङ्खं चेत्येतान् प्रक्षालयेत् जलैः ॥ आयसेष्वायसानां च सीसस्याग्नौ विशोधनम् । स्नेहो वा गोरसो वाऽपि तत्र शुद्धिः कथं भवेत् ॥ अल्पं परित्यजेत् तत्र स्नेहस्य पचनेन च । अनलज्वालया शुद्धिर्गोरसस्य विधीयते इति ।

பசுவினுல் முகரப்பட்டது முதலியவைக்குப் பத்துத் தடவை சாம்பலினுல் தேய்ப்பதால் சுத்தி என்கிறுர்.

பராசரரே:- பசுவினுல் முகரப்பட்டதும், அல்லது, நாய், காக்கை இவைகளால் அசுத்தமாக்கப்பட்டதும், சூத்ரனுல் உச்சிஷ்டமாகியதுமான வெண்கலங்கள், பத்துத் தடவை உப்பு ஜலங்களால் சுத்தமாகின்றன. வெண்கலத்தில் வாயைக் கொப்புளித்தாலும், கால்களை அலம்பினுலும், அதை ஆறு மாதம் மண்ணிற்குள் வைத்து எடுத்து உபயோகிக்க வேண்டும். ம்ருகங்களின், தந்தம், எலும்பு, கொம்பு, வெள்ளிப்பாத்ரம், ஸ்வர்ண பாத்ரம், ரத்ன பாத்ரங்கள், சங்கு இவைகளுக்கு ஜலத்தால் அலம்புவதால் சுத்தி. இரும்புகளுக்கு இரும்புகளால் தேய்ப்பதால் சுத்தி, ஈயத்திற்கு நெருப்பில் காய்ச்சுவது சுத்திகரமாகும். அதில் எண்ணெய், அல்லது பால் மோர் முதலியது இருந்தால் அதற்கு எப்படி சுத்தி எனில், அது அல்பமாயிருந்தால் பரிஹரிக்கவும், அதிகமாயிருந்தால், எண்ணெய்க்குக் காய்ச்சுவதாலும், மோர் முதலியவைக்கு அக்னி ஜ்வாலையால் சுற்றுவதாலும் சுத்தி விதிக்கப்படுகிறது.

याज्ञवल्क्यः—त्रपुसीसकताम्राणां क्षाराम्लोदकवारिभिः । भस्माद्भिः कांस्यलोहानां शुद्धिः प्लावो द्रवस्य तु इति ॥ एतच्चाम्लोदकादिभिः शुद्धिविधानं न नियमार्थम् । मलं संयोगजं तज्जं यस्य येनोपहन्यते । तस्य तच्छोधनं प्रोक्तं सामान्यं द्रव्यशुद्धिकृत् इत्यविशेषेण स्मरणात् । शुद्धिः प्लावो द्रवस्य तु । द्रवद्रव्यस्य घृतादेः प्रस्थप्रमाणाधिकस्य श्वकाकाद्युपहतस्य अमेध्यसंस्पृष्टस्य च प्लावः - प्लावनम् । शक्तिविषये ततोऽल्पस्य त्याग इत्यर्थः ॥

யாக்ஞவல்க்யர்:- காரீயம்; ஈயம், தாம்ரம் ரீதி, (பித்தளை) இவைகளுக்கு க்ஷாரஜலத்தாலும், புளி ஜலத்தாலும், ஜலத்தாலும் சுத்தி. வெண்கலம் லோஹம் இவைகளுக்குச் சாம்பல் ஜலம் இவைகளால் சுத்தி. த்ரவத்ரவ்யமயமான நெய் முதலியதற்கு அதற்கு ஸமானமான த்ரவ்யத்தால் பூரணம் செய்வது சுத்தி, (அலப்பமாயிருந்தால் பரித்யாகம் செய்ய வேண்டும்.) புளி

ஜலம் முதலியதால் சுத்தி விதிக்கப்பட்டது நியமத்திற்கல்ல. (ஏனெனில்) 'எந்த த்ரவ்யத்தின் மலம், சேர்க்கையால் உண்டாகியதாயினும், அதிலேயே உண்டாகியதாயினும், எந்த வஸ்துவினுல் அகற்றப் படுகின்றதோ, அதற்கு அது சுத்திகரமாகும். இது எல்லா த்ரவ்யங்களின் சுத்தியிலும் ஸாதாரணம்' என்று ஸ்ம்ருதி உள்ளது. த்ரவத்ரவ்யமான நெய் முதலியது ஒரு படிக்கு மேலிருந்தால் நாய் காக்கை முதலியதால் அசுத்தமாயிருந்தால், அல்லது அசுத்த வஸ்துவுடன் கலந்திருந்தால் அதை ஸமான த்ரவ்யத்தால் பூரணம் செய்ய வேண்டும். அதை விட அல்பமாயிருந்தால் சக்தி விஷயத்தில் தவிர்க்க வேண்டும். என்பது பொருள்.

तथा शङ्खः—अभ्यवहार्याणां घृतेनाभिघारितानां पुनः पचनमेवं प्रस्थाधिकानां स्नेहानां स्नेहद्रवरसानाम् इति ॥ कीटाद्युपहतस्य उत्पवनमेव । यथाऽऽह मनुः— द्रवाणां चैव सर्वेषां शुद्धिरुत्पवनं स्मृतम् इति ॥ उत्पवनं - वस्त्राद्यन्तरितपात्रे प्रक्षेपः ॥ मधूदकादेः पात्रान्तरानयनाच्छुद्धिः । मधूदके पयस्तद्विकाराश्च पात्रात् पात्रान्तरनयनाच्छुद्धाः इति बोधायनस्मरणात् ॥ वर्णापशदहस्तात् प्राप्तस्य मधुघृतादेः पात्रान्तरानयनं पुनःपचनं च कार्यम् ।

சங்கர்:- புஜிக்கத் தகுந்த வஸ்துக்களை நெய்யால் அபிகாரம் செய்து மறுபடி பாகம் செய்வதால் சுத்தி. இவ்விதம், ஒரு படிக்கு மேலுள்ள ஸ்நேஹங்களுக்கும் த்ரவத்ரவ்யங்களுக்கும் சுத்தி. புழு முதலியதால் அசுத்தமாகியதற்கு உத்பவனமே, சுத்தி, ஏனெனில், மனு:- த்ரவமான எல்லா வஸ்துக்களுக்கும் உத்பவனமே சுத்தி என்று சொல்லப்பட்டுள்ளது. உத்பவனம் - வஸ்தரம் முதலியதால் மறைக்கப்பட்ட வேறுபாத்ரத்தில் வடிக்கட்டிச் சேர்ப்பது. தேன், ஜலம் முதலியதற்கு, வேறு பாத்ரத்தில் சேர்ப்பதால், சுத்தி. 'தேன், ஜலம், பால், அதன்

விகாரங்கள் இவை பாத்ரத்திலிருந்து மற்ளுெரு பாத்ரத்தில் விடுவதால் சுத்தங்களாகின்றன'' என்று போதாயன ஸ்ம்ருதி. நீசவர்ணத்தானின் கையிலிருந்து கிடைத்த தேன், நெய் முதலியதற்கு வேறு பாத்ரத்தில் சேர்ப்பதும், மறபடி காய்ச்சுதலும் செய்யப்பட வேண்டும்.

बोधायनः—तैजसानामुच्छिष्टानां गोशकृन्मृद्भस्मभिः परिमार्जनमन्यतमेन वा ताम्ररजतसुवर्णानामम्लैः मूत्र पुरीषलोहितरेतःप्रभृत्युपहतानां तैजसानां पात्राणां पुनःकरणं गोमूत्रे वा सप्तरात्रं परिशायनं महानद्यां वा इति ॥ याज्ञवल्क्यः – अमेध्याक्तस्य मृत्तोयैः शुद्धिर्गन्धादिकर्षणात् इति ॥ आदिग्रहणाल्लेपस्यापि ग्रहणम् ॥ यथाऽऽह गौतमः – लेपगन्धापकर्षणे शौचममेध्यलिप्तस्य इति ॥ सर्वशुद्धिषु च प्रथमं मृत्तोयैरेव लेपगन्धापकर्षणं कार्यम् । अशक्तावन्येन । अद्भिः पूर्वं मृदा इति गौतमवचनात् ।

போதாயனர்:- தைஜஸ (உலோக) பாத்ரங்கள் உச்சிஷ்டங்களாளுல் பசுவின் சாணம், மண், சாம்பல் இவைகள், அல்லது ஒன்றிளுல், துடைப்பதால் சுத்தி. தாம்ரம், வெள்ளி, பொன் இவைகளுக்குப் புளிகளால் சுத்தி. மூத்ரம், மலம், ரக்தம், சுக்லம் முதலியவையால் அசுத்தமான தைஜஸபாத்ரங்களுக்கு புன:கரணம் (புதிதாக்குதல்), அல்லது கோமூத்ரத்தில் 7-நாள் வைத்திருப்பது, அல்லது மஹா நதியில் வைத்திருப்பது, சுத்திகரமாம். **யாக்ஞவல்க்யர்:-** அசுத்தங்களால் பற்றப்பட்ட த்ரவ்யத்திற்கு, மண்ணுலும், ஜலத்தாலும், நாற்றம் முதலியதை அகற்றுவதால் சுத்தி. இங்கு ஆதிசப்தத்தால் பற்றுக்கும் க்ரஹணம். அவ்விதமே. **கௌதமர்:-** அசுத்தவஸ்துவிளுல் பூசப்பட்ட த்ரவ்யத்திற்கு, பற்று, நாற்றம் இவைகளை அகற்றுவது சுத்தி. எல்லாச் சுத்திகளிலும், முதலில், மண்ணுலும்

ஜலத்தாலும், பற்று நாற்றம் இவைகளைப் போக்க வேண்டும். முடியாவிடில் மற்றொன்றால். 'முதலில் ஜலத்தாலும், மண்ணாலும்' என்று கௌதமர் சொல்கிறார்.

आपस्तम्बः—परिमृष्टं लौहं प्रयतं निर्लिखितं दारुमयं यथागमं यज्ञे इति ॥ लौहं - कांस्यादि भस्मादिभिः परिमृष्टं प्रयतं भवति । दारुमयं निर्लिखितं - तष्टं प्रयतम् । यज्ञपात्रं तु यथागमं शोधितं प्रयतं भवति ॥ तद्यथा — अग्निहोत्रहवणी दर्भैरद्भिः प्रक्षालिता । सोमपात्राणि मार्जालीये प्रक्षालितानि । आज्यपात्राण्युष्णेन वारिणा ।

ஆபஸ்தம்பர்:- வெண்கலம் முதலிய பாத்ரம் சாம்பல் முதலியதால் தேய்க்கப்பட சுத்தமாகிறது. கட்டையால் செய்யப்பட்ட பாத்ரம் செதுக்கப்பட்டால் சுத்தமாகிறது. யாகத்திலுள்ள பாத்ரம் சாஸ்த்ரப்படி சோதிக்கப்பட்டால் சுத்தமாகிறது. அது எவ்விதமெனில், அக்னிஹோத்ர ஹவணீ, தர்ப்பங்களுடன் ஜலத்தால் அலம்பப்பட்டால் சுத்தமாகிறது. ஸோம பாத்ரங்கள் மார்ஜாலீயத்தில் அலம்பப்பட்டால் சுத்தங்கள். ஆஜ்யபாத்ரங்கள் உஷ்ணோதகத்தால் அலம்பப்பட்டால் சுத்தங்கள்.

स्मृत्यर्थसारे—सौवर्णं राजतं लौहं विण्मूत्रादिस्पृष्टमात्रं निर्लेपं जलप्रक्षालनाच्छुद्ध्येत् । सलेपं भस्मजलाभ्यां शुध्येत् अत्यन्तोपहतं वह्नितप्तं जलप्रक्षालनाच्छुद्ध्येत् । सौवर्णं राजतं ताम्रं चण्डालोक्याद्युच्छिष्टं त्रिःसप्तभस्मभिरम्लोदकेन शुद्ध्यति । कांस्यादेरावर्तनं बहूपघाते सर्वेषामावर्तनं तैजसानां गोमूत्रपरिवासने लेपापगमेऽप्यावर्तनं ताम्रस्य विण्मूत्रादिचण्डालदूषितस्याम्लोदकाभ्यां शुद्धिः । कांस्यपित्तलयोः विण्मूत्रादिगण्डूषपादप्रक्षालनादिचण्डालादिस्पर्शेऽपि त्रिः सप्तकृत्वोऽपि भस्मना परिमृज्य प्रक्षालनाच्छुद्धिः । अल्पकालोपहतौ तापन परिलेखनाभ्यां शुद्धिः । बहुकालोपहतौ आवर्तनम् ।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- தங்கள், வெள்ளி, லோஹம் இவைகள் மலம் மூத்ரம் முதலியதால் ஸ்பர்சிக்கப்பட்ட உடனே பற்றில்லாவிடில் ஜலத்தால் அலம்புவதால் சுத்தங்களாகும். பற்றுடனிருந்தால் சாம்பலாலும் ஜலத்தாலும் சுத்தி. அதிகம் அசுத்தமானல் அக்னியில் காய்ச்சி ஜலத்தினல் அலம்புவதால் சுத்தி. தங்கம், வெள்ளி, தாம்ரம் இவை சண்டாளன் ரஜஸ்வலை முதலியவரால் அசுத்தமானல் 21- தடவை சாம்பலாலும், புளி ஜலத்தாலும் சுத்தியால் சுத்தமாகும். வெண்கலம் முதலியதற்கு அதிக அசுத்தியானல் சுத்தியை ஆவ்ருத்தி செய்யவும். தைஜஸபாத்ரங்கள் எல்லாவற்றிற்கும் அதிக அசுத்தியில் சுத்தியை ஆவ்ருத்தி செய்யவும். கோமூத்ரத்தில் வைத்திருந்தால் பற்று இல்லாவிடினும் சுத்தியைச் செய்யவும். விஷ்டை மூத்ராதிகளாலும் சண்டாள ஸ்பர்சத்தாலும் அசுத்தமான தாம்ரத்திற்குப் புளி ஜலமிவைகளால் சுத்தி. வெண்கலம், பித்தளை இவைகளுக்கு, விஷ்டா மூத்ராதிகளாலும், கண்டூஷத்தாலும், காலலம்பியதாலும், சண்டாளாதி ஸ்பர்சத்தாலும் அசுத்தியானல் 21- தடவை சாம்பலால் துடைத்து அலம்புவதால் சுத்தி. ஸ்வல்பகாலம் அசுத்தியானல், காய்ச்சுவதாலும், உறைப்பதாலும் சுத்தி. வெகுகாலம் அசுத்தமானல் ஆவ்ருத்தி செய்யவும்.

यद्वा—भूमौ निखाय षण्मासे गते परिमार्जनम् कांस्यपित्तलयोः श्वकाकोपस्पर्शे शूद्रस्पर्शे च दशकृत्वो भस्मभिः प्रक्षालनमल्पकालोपहतौ लवणतैलापघर्षणैः शुद्धिः । बहुकाले त्वावर्तनम् । त्रपुसीसायसानां भस्मजलाभ्यां शुद्धिः । सर्वं तैजसं स्वल्पोपहतं गोमूत्रगोमयमृद्भस्माम्लोदकैः शुचि यथार्हं स्यात् । शुक्तिशङ्खपाषाणमणीनामब्जानां विण्मूत्रचण्डालाद्युच्छिष्टस्पर्शनमात्रे जलप्रक्षालनाच्छुद्धिः । सलेपानां भस्मजलाभ्याम् । अत्यन्तोपहतानां सप्ताहं भूमौ निखाय प्रक्षालनाच्छुद्धिः ।

அல்லது, பூமியில் புதைத்து, ஆறு மாதத்திற்குப் பிறகு எடுத்துச் சுத்தி செய்யவும். வெண்கலம், பித்தளை இவைகளுக்கு, நாய், காக்கை, சூத்ரன் இவர்களால் ஸ்பர்சமேற்பட்டால் 10- தடவை சாம்பலால் அலம்பவும். ஸ்வல்பகாலம் அசுத்தியானால் உப்பு, எண்ணெய், உறைத்தல் இவைகளால் சுத்தி. வெகுகாலம் அசுத்தியானால், ஆவ்ருத்தி, காரீயம், ஈயம், இரும்பு இவைகளுக்குச் சாம்பல் ஜலம் இவைகளால் சுத்தி. தைஜஸமான எந்த த்ரவ்யமும் ஸ்வல்ப அசுத்தியுடையதானால், கோமூத்ரம், கோமயம், மண், சாம்பல், புளி, ஜலம் இவைகளால் தகுந்தபடி சுத்தமாகும். சிப்பி, சங்கு, கல், ரத்னம் ஜலத்திலுண்டாகும் வஸ்துக்கள் இவைகளுக்கு மலம் மூத்ரம், சண்டாளாதிகள், உச்சிஷ்டம் இவைகளால் ஸ்பர்சமேற்பட்டால் ஜலத்தால் அலம்புவதால் சுத்தி. பற்றுடனிருந்தால் சாம்பலாலும் ஜலத்தாலும் சுத்தி. மிகவும் அசுத்தங்களாயின், ஏழு நாள் பூமிக்குள். புதைத்துப் பிறகு அலம்புவதால் சுத்தி.

घृतस्य नवनीतस्य वा आढकप्रमाणस्य श्वकाकपिपीलिकादि दुष्टस्य दुष्टांशं समुद्धृत्य वस्त्रेण परिशोध्य तज्जातीयेन तद्भाण्डं पूरयित्वा तत् सर्वमग्नौ प्रताप्य गायत्र्यभिमन्त्रणजलाभ्युक्षणाच्छुद्धिः । तक्रतैलक्षीरदध्नां द्रोणप्रमाणानां काकाद्युपहतौ घृतवच्छुद्धिः । दधिक्षीराणि शूद्रभाण्डस्थानि द्विजभाण्डप्रक्षेपाच्छुद्धानि भवन्ति । नवनीतं घृतं तैलं क्षौद्रं दासादिभाण्डस्थं विप्रभाण्डे क्षिप्तं शुद्ध्येत् । चण्डालेन प्रमादतः स्पृष्टं नवनीतादि जले क्षिप्त्वा उद्धृतं शुद्ध्येत् । आढकप्रमाणान्न्यूनघृतादीनां च द्रोणप्रमाणान्न्यूनतक्रादीनां च पूर्वोक्तापहतौ परित्यागोऽनापदि । आपदि तु पूर्वोक्तविधिभिः शुद्धिः । गुडलवणादीनामिति पर्यग्नि करणम् इति ।

நெய், அல்லது எண்ணெய் குறுணி அளவுள்ளது, நாய், காக்கை, எறும்பு முதலியதால் துஷ்டமானால்,

துஷ்டமான பாகத்தை எடுத்துவிட்டு மீதியை வஸ்திரத்தால் வடிகட்டி, அந்த வஸ்துவை வேறு கொண்டு வந்து அந்தப் பாத்ரத்தை நிரப்பி, அது முழுவதையும் அக்னியில் காய்ச்சி, காயத்ரியால் அபிமந்த்ரித்து ஜலத்தால் ப்ரோக்ஷிப்பதால் சுத்தி. மோர், எண்ணெய், பால், தயிர் இவை பதக்கு அளவுள்ளவையானுல், காக்கை முதலியதால் அசுத்தி ஏற்பட்டால், நெய்யைப் போல் சுத்தி செய்யவும். தயிர், பால் இவை சூத்ரனின் பாத்ரத்திலிருந்தால், ப்ராம்ஹணனின் பாத்ரத்தில் போடப்படுவதால் சுத்தங்களாகின்றனர். வெண்ணெய், நெய், எண்ணெய், தேன் இவை தாஸன் முதலியவரின் பாண்டத்திலிருந்தால் ப்ராம்ஹணனின் பாண்டத்தில் போடப்பட்டால் சுத்தமாகின்றன. சண்டாளனுல் கவனமில்லாமல் தொடப்பட்ட வெண்ணெய் முதலியது ஜலத்தில் வைத்து எடுக்கப்பட்டால் சுத்தமாகும். குறுணி அளவுக்குக் குறைந்த நெய் முதலியவைக்கும், பதக்குக்குக் குறைந்த மோர் முதலியதற்கும் முன் சொல்லிய அசுத்தி ஏற்பட்டால், ஆபத்தில்லாவிடில் பரித்யாகம் செய்ய வேண்டும். ஆபத்திலானுல் முன் சொல்லிய ப்ரகாரங்களால் சுத்தி. வெல்லம், உப்பு முதலியவைக்கு பர்யக்னி கரணம் (அக்னிஜ்வாலையால் சுற்றுவது) செய்ய வேண்டும்.

मनुः—प्रोक्षणं संहतानां च दारवाणां च तक्षणम् इति । संहतानां पृथक् द्रव्यसमवायरूपाणाम् ।। तथा चाङ्गिराः – शयनासनयानानि रोमबद्धानि यानि च । वस्त्राणि तानि सर्वाणि संहतानि प्रचक्षत इति ।। मनुः – अद्भिस्तु प्रोक्षणं शौचं बहूनां धान्यवाससाम् । प्रक्षालनेन त्वल्पानामद्भिः शौचं विधीयते इति ।। संहतानां धान्यवाससां मध्ये बहूनां चण्डालादि स्पर्शे प्रोक्षणम् । स्पृष्टानामल्पत्वे तेषां स्पृष्टानां प्रक्षालनमित्यर्थः ।

மனு:- ஸம்ஹதங்களான வஸ்துக்களுக்கு ப்ரோக்ஷணம் சுத்திகரம். மரத்தால் செய்யப்பட்ட வஸ்துக்களுக்குச் செதுக்குவது சுத்திகரம். ஸம்ஹதங்கள் - தனியான த்ரவ்யங்கள் சேர்ந்து ஒன்ருய் இருப்பவை. அவ்விதமே, அங்கிரஸ்:- படுக்கை, ஆஸனம், வாஹனம் முதலியவை மயிரால் செய்யப்பட்ட (கம்பளம் முதலிய)வை, வஸ்திரங்கள் இவைகளையெலாம் 'ஸம்ஹதம்' என்கின்றனர். மனு:- வெகுவான தான்யங்கள், வஸ்தரங்கள் இவைகளுக்கு, ஜலத்தால் ப்ரோக்ஷிப்பதால் சுத்தி அவை அல்பமாளுல் ஜலத்தால் அலம்புவதால் சுத்தி ஸம்ஹதங்களான தான்யங்கள், வஸ்த்ரங்கள் இவைகளுள், அதிகங்களானவைக்குச் சண்டாளாதி ஸ்பர்ச மேற்பட்டால் ப்ரோக்ஷணத்தால் சுத்தி. ஸ்வல்பங்களுக்காளுல் தொடப்பட்டவைகளை அலம்புவதால் சுத்தி.

स्मृत्यन्तरे— वस्त्राधान्यादिराशीनामेकदेशस्य दूषणे । तावन्मात्रं समुद्धृत्य शेषं प्रोक्षणमर्हति ।। स्पृष्टास्पृष्टसमत्वे च सर्वं प्रोक्षणमर्हति इति ।। इयत् स्पृष्टं इयदस्पृष्टमित्यविवेके तु प्रक्षालनमेव ।। स्पृष्टानां बहुत्वे सर्वेषां क्षालनमुक्तं विज्ञानेश्वरेण ।। अनेकपुरुषैर्धार्यमाणानां धान्यवासःप्रभृतीनां स्पृष्टानामस्पृष्टानां च प्रोक्षणमेवेति निबन्धकृतः इति ।

மற்ருெரு ஸ்ம்ருதியில்:- வஸ்த்ரம், தான்யம் முதலியவையின் குவியல்களின் ஸ்வல்பபாகத்திற்குத் தோஷமேற்பட்டால், அந்தத் துஷ்ட பாகத்தை மட்டில் எடுத்து விட்டு, மீதியுள்ளதை ப்ரோக்ஷித்தால் அது சுத்தமாகும். தொடப்பட்ட பாகமும், தொடப்படாத பாகமும் ஸமமாயிருந்தால் முழுவதும் ப்ரோக்ஷணத் தாலேயே சுத்தமாகிறது. இவ்வளவு தொடப்பட்டது; இவ்வளவு தொடப்படாதது என்று அறியமுடியாவிடில், எல்லாவற்றிற்கும் அலம்புவதாலேயே சுத்தி. தொடப்பட்ட பாகம் அதிகமாளுல், எல்லாவற்றிற்கும்

ப்ரக்ஷாளனம் சொல்லப்பட்டுள்ளது, விக்ஞானேச்வரரால் "அனேக மனிதர்களால் சுமக்கப்படும் தான்யம் வஸ்த்ரம் முதலியவைகள் தொடப்பட்டாலும் தொடப்படா விட்டாலும் அவைகளுக்கு ப்ரோக்ஷணம் மட்டுமே என்கின்றனர் நிபந்தனக் காரர்கள்" என்று விக்ஞானேச்வரர்

याज्ञवल्क्यः — प्रोक्षणं संहतानां च बहूनां धान्यवाससाम्। तक्षणं दारुशृङ्गास्थ्नां गोवालैः फलसंभुवाम्॥ मार्जनं यज्ञपात्राणां पाणिना यज्ञकर्मणि इति॥ दारूणां मूत्रपुरीषादिना दृढवासितौ गन्धलेपौ यदि मृज्जलप्रक्षालने नापगच्छेताम्, तदा वाश्यादिना तक्षणम्। तक्षणेनाप्यनपगमे परित्यागः। यज्ञपात्राणां स्रुगादीनां दक्षिणेन हस्तेन दर्भादिना वा यथाशास्त्रं मार्जनमित्यर्थः।

யாக்ஞவல்க்யர்:- ஸம்ஹதங்களான அநேகம் தான்யம் வஸ்த்ரம் இவைகளுக்கு ப்ரோக்ஷணம் சுத்திஹேதுவாகும். கட்டை, கொம்பு, எலும்பு இவைகளுக்குச் செதுக்குவது சுத்தி, பில்வம் முதலிய பழங்களால் செய்யப்பட்ட பாத்ரங்களுக்கு கோவாலஙகளால் தேய்ப்பது சுத்தி. யாககார்யங்களில் உபயோகிக்கப்படும் யக்ஞபாத்ரங்களுக்கு கையால் துடைப்பது சுத்தி. கட்டையால் செய்யப்பட்டவைகளுக்கு மல மூத்ராதிகளால் ஏற்பட்ட நாற்றமும் பற்றும் மண்ணாலும் ஜலத்தாலும் போகாவிடில், அப்பொழுது வாச்சி முதலியதால் அந்த இடத்தைச் செதுக்கவும். செதுக்கியும் போகாவிடில் பாத்ரங்களை தவிர்க்கவும். யக்ஞ பாத்ரங்களான ஸ்ருக் முதலியவைக்கு வலது கையாலாவது தர்ப்பம் முதலியதாலாவது சாஸ்த்ரப்படி துடைப்பது சுத்தி என்பது பொருள்.

सलेपानामेव केषाञ्चिल्लेपापकर्षणे विशेष हेतूनाह स एव— सोषैरुदकगोमूत्रैः शुद्ध्यत्याविककौशिकम्। सश्रीफलैरंशुपट्टं सारिष्टैः

कुतपं तथा ।। सगौरसर्षपैः क्षौमं पुनः पाकेन मृन्मयम् इति ।। सोषैः ऊषमृत्तिकासहितेन गोमूत्रेण उदकेन वा । लेपापेक्षया आविकं - ऊर्णामयं, कौशिकं - कोशप्रभवं पट्टादि प्रक्षालितं शुध्यति । अंशुपट्टं - वल्कलतन्तुकृतं, सश्रीफलैः - बिल्वफलसहितैः, कुतपः - पार्वतीयच्छागरोमनिर्मितः कम्बलः सारिष्टैः - अरिष्टफलसहितैः उदकगोमूत्रैः शुद्ध्यतीत्यर्थः ।

பற்றுள்ள சிலவற்றிற்குப் பற்றை அகற்றுவதற்கு விசேஷ காரணங்களைச் சொல்லுகிறார். யாக்ஞவல்க்யரே:- ஆட்டு மயிராலுண்டாகிய கம்பளி, பட்டு இவை உழவு மண்ணுடன் கூடிய ஜலம், கோமூத்ரம் இவைகளால் அலம்புவதால் சுத்தமாகும். நார்மடி, வில்வப்பழத்துடன் கூடிய ஜலகோமூத்ரங்களால் அலம்புவதால் சுத்தமாகும். மலையிலுள்ள ஆடுகளின் ரோமத்தால் நெய்யப்பட் கம்பளம் அரிஷ்டமெனும் (வேம்பு) பழத்துடன் கூடிய ஜலகோமூத்ரங்களால் அலம்புவதால் சுத்தமாகும். க்ஷுமையின் நாரினால் உண்டாகிய வஸ்தரம் வெண்கடுகுடன் கூடிய ஜலகோமூத்ரங்களால் அலம்புவதால் சுத்தமாகும். மண்பாத்ரம் அக்னியில் மறுபடி பாகத்தால் சுத்தமாகும்.

अल्पोपघाते प्रोक्षणादिना शुद्धिमाह देवलः — और्णकौशेयकुतपपट्ट क्षौमदुकूलजाः । अल्पशौचा भवन्त्येते शोषणप्रोक्षणादिभिः ।। तान्येवामेध्ययुक्तानि क्षालयेच्छोधनैः स्वकैः । धान्यकल्कैस्तु फलजै रसैः क्षारानुगैरपि ।। तूलिकामुपधानं च पुष्परक्ताम्बरं तथा । शोषयित्वाऽऽतपे किञ्चित् करैः संमार्जयेन्मुहुः । पश्चाः च वारिणा प्रोक्ष्य विनियुञ्जीत कर्मणि । तान्यप्यतिमलिष्ठानि यथावत्परिशोधयेत् इति ।। पुष्परक्तानि - कुङ्कुमकुसुम्भादि रक्तानि ।

ஸ்வல்பமான அசுத்தி விஷயத்தில் ப்ரோக்ஷணம் முதலியதால் சுத்தியைச் சொல்லுகிறுர், தேவலர்:- கம்பளி, வெண்பட்டு, குதபம், பட்டு, நார்மடி, துகூலம் இவைகளுக்கு வெயிலில் காய்ச்சுவது ப்ரோக்ஷிப்பது முதலியதால் ஸ்வல்பசுத்தியே போதுமானது. அவைகளே அசுத்த வஸ்துக்களுடன் ஸம்பந்தித்திருந்தால், அவைகளுக்கு உசிதமான சோதக வஸ்துக்களால் அலம்ப வேண்டும். தான்யத்தின் கல்கங்கள், பழங்களில் உண்டாகும் ரஸங்கள், உப்பு இவை முதலியவை சோதகங்கள். மெத்தை, தலையணை, குங்குமம் குஸூம்பம் முதலிய புஷ்பச்சாயமேற்றிய வஸ்த்ரம் இவைகளை வெயிலில் கொஞ்சம் உலர்த்தி, கையால் அடிக்கடி துடைக்க வேண்டும். பிறகு ஜலத்தால் ப்ரோக்ஷித்து, கார்யத்தில் உபயோகிக்க வேண்டும். அவைகளே மிகவும் அசுத்தமாளுல் சொல்லியபடி சுத்தி செய்ய வேண்டியது.

शङ्खः – रागद्रव्याणि प्रोक्षितानि शुचीनि इति ।। पराशरः – वेणुवल्कलचीराणां क्षौमकार्पासिवाससाम् । और्णनेत्रपटानां च प्रोक्षणाच्छुद्धिरिष्यते इति ।। वेणुशब्देन तत्कार्याणि कटव्यजनादीनि गृह्यन्ते । नेत्रपटाः - भूर्जत्वगादयः ।। स एव – तूलिकाद्युपधानानि रक्तवस्त्रादिकानि च । शोषयित्वाऽऽतपेनैव प्रोक्षणाच्छुचितामियुः इति ।। तूलेन निर्मिता शय्या तूलिका । आदिशब्देन आसनोपाश्रयादीनि गृह्यन्ते । उपधानम् - उच्छीर्षकम् । तूलिकादीनि च उपधानानि च तूलिकाद्युपधानानीत्यर्थः ।।

சங்கர்:- சாயத்ரவ்யங்கள், ப்ரோக்ஷிப்பதால் சுத்தங்களாகின்றன. பராசரர்:- மூங்கிலால் செய்யப்பட்ட பாய், விசிறி முதலியவை, மரப்பட்டை, மரவுரி, நார்ப்பட்டு, பஞ்சு வஸ்தரம், கம்பளி, பூர்ஜ மரப்பட்டை இவைகளுக்கு ப்ரோக்ஷணத்தாலேயே சுத்தி சொல்லப்படுகிறது. பராசரரே:- மெத்தை முதலியதும், தலையணைகளும், சாயமுள்ள வஸ்த்ரம் முதலியவையும்,

வெயிலில் உலர்த்தி ப்ரோக்ஷிப்பதாலேயே சுத்தியை அடைகின்றன. ஆதிசப்தத்தால், ஆஸனம், சாய்வதற்கான திண்டு முதலியவை சொல்லப்படுகின்றன.

स एव—मुञ्जोपस्करशूर्पाणां शणस्य फलचर्मणाम्। तृणकाष्ठस्य रज्जूनामुदकाभ्युक्षणं मतम्।। मृन्मये दहनाच्छुद्धिर्धान्यानां मार्जनादपि इति ।। मृन्मये दहनादित्येतत् उच्छिष्टाद्युपहतिविषयम् । चण्डालादिस्पर्शे त्याग एव। यथाह पराशरः – चण्डालाद्यैस्तु संस्पृष्टं धान्यं वस्त्रमथापि वा। प्रक्षालनेन शुद्ध्येत परित्यागान्महीमयम् इति।

பராசரரே:- முஞ்சப்புல்லினுல் செய்யப்பட்ட ஆஸனம் முதலியவை, முறம், சணலால் செய்யப்பட்டவை, பழங்கள், தோல், புல், கட்டை, கயிறு இவைகளுக்கு ப்ரோக்ஷணத்தால் சுத்தி. மண் பாத்ரத்திற்குப் பொசுக்குவதால் சுத்தி. தான்யங்களுக்குத் துடைப்பதால் சுத்தி. மண் பாத்ரத்திற்குப் சொல்லிய சுத்தி உச்சிஷ்டம் முதலிய அசுத்தி விஷயம். சண்டாளாதிகளின் ஸ்பர்ச மேற்பட்டால் விலக்க வேண்டியதே. ஏனெனில், பராசரர்:- 'சண்டாளர் முதலியவரால் தொடப்பட்ட தான்யம், வஸ்த்ரம் இவை அலம்புவதால் சுத்தமாகும், மண்ணினுலுள்ளவைகளை விட்டுவிட வேண்டியது' என்று சொல்லியிருக்கிறுர்.

स्मृत्यन्तरेऽपि — अङ्गारेण भवेत् छुद्धिस्ताम्राणां काञ्चनस्य च। जलशौचं च वस्त्राणां परित्यागेन मृन्मयम्।। मार्जनं यज्ञपात्राणां पाणिना यज्ञकर्मणि। चमसानां ग्रहाणां च शुद्धिः प्रक्षालनेन तु।। चरूणां स्रुक्स्रुवाणां च शुद्धिरुष्णेन वारिणा । स्फ्यशूर्पशकटानां च मुसलोलूखलस्य च ।। चेलवच्चर्मणां शुद्धिर्वैदलानां तथैव च । शाकमूलफलानां च धान्यवच्छुद्धिरिष्यते ।। वैदलानां - वेणुदलनिर्मितानाम्। कौशेयाविकयोरूषैः कुतपानामरिष्टकैः। श्रीफलै रंशुपट्टानां क्षौमाणां गौरसर्षपैः ।। क्षौमवच्छङ्खशृङ्गाणा

मस्थिदन्तमयस्य च । शुद्धिर्विजानता कार्या गोमूत्रेणोदकेन वा ।। प्रोक्षणात् तृणकाष्ठानि पलालं च विशुध्यति । मार्जनोपाञ्जनैर्वेश्म परित्यागेन मृन्मयम् इति ।। उपाञ्जनं - उपलेपनम् ।।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- தாம்ர பாத்ரங்களுக்கும், தங்கத்திற்கும் நெருப்பினால் சுத்தி. வஸ்த்ரங்களுக்கு ஜலத்தால் சுத்தி. மண் பாத்ரத்தை கைவிட வேண்டும். யாகத்தில் உபயோகிக்கப்படும் யக்ஞபாத்ரங்களுக்குக் கையால் அலம்புவதால் சுத்தி. சமஸபாத்ரங்கள், க்ரஹபாத்ரங்கள் இவைகளுக்கு அலம்புவதால் சுத்தி. சருக்களுக்கும், ஸ்ருக், ஸ்ருவம் இவைகளுக்கும் உஷ்ணோதகத்தால் சுத்தி. ஸ்ப்யம், சூர்ப்பம், சகடம், உலக்கை, உரல் முதலிய வைக்கும் உஷ்ணோதகத்தால் சுத்தி. தோல்களுக்கும், மூங்கிலால் முடையப் பட்டவைக்கும் வஸ்த்ரத்திற்குப் போல் சுத்தி. கீரை, வேர், பழம் இவைகளுக்கு, தான்யத்திற்குப் போல் சுத்தி. வெண்பட்டு, ஆட்டுமயிர்க் கம்பளி இவைகளுக்கு உவர்மண்ணாலும், குதபங்களுக்கு (நேபாள கம்பளம்) அரிஷ்டங்களாலும், அம்சுபட்டங்களுக்கு வில்வப் பழங்களாலும், க்ஷௌமங்களுக்கு வெண் கடுகுகளாலும் சுத்தி. சங்கு, கொம்பு, எலும்பு, தந்தம் இவைகளால் செய்யப்பட்டவைக்கும் க்ஷௌமத்திற்குப் போல் சுத்தி. கோமூத்ரம், ஜலம் இவைகளாலாவது அசுத்திக்குத் தகுந்த படி அறிந்தவன் சுத்தியைச் செய்ய வேண்டும். புல், கட்டை, வைக்கோல் இவை ப்ரோக்ஷணத்தால் சுத்தமாகின்றன. வீடு, மெழுகுதல் மண்பூசுதல் இவைகளால் சுத்தமாகும். மண்பாத்ரம் முதலியதை தவிர்க்க வேண்டும்.

बोधायनः—मृन्मयानां पात्राणा मुच्छिष्टसमन्वारब्धाना मवकूलनमुच्छिष्टलेपोपहतानां पुनर्दहनं, मूत्रपुरीषलोहितरेतः प्रभृत्युपहतानामुत्सर्गः, फलमयानामलाबुबिल्वनालिकेराणां गोवालैः परिमार्जनं, नलवेणुशरकुशव्यूतानां गोमयेनाद्भिः प्रक्षालनं,

व्रीहीणामुपघाते प्रक्षालनं, बहूनां तु प्रोक्षणं, तण्डुलानामुत्सर्गः । असंस्कृतानयां भूमौ न्यस्तानां तृणानां प्रक्षालनं परोक्षोपहतानामभ्युक्षणं, एवं क्षुद्रसमिधां, महतां काष्ठानामुपघाते प्रक्षाल्यावशोषणं दारुमयाणां पात्राणा मुच्छिष्टसमन्वारब्धाना मवलेखन मुच्छिष्टलेपोपहतानामवतक्षणं, मूत्रपुरीषलोहितरेतः प्रभृत्युपहतानामुत्सर्गः तदेतदन्यत्र निर्देशाद्यथैतदग्निहोत्रे घर्मोच्छिष्टे ब्रह्मौदनेषु च तेषु सर्वेषु दर्भैरद्भिः प्रक्षालनं सर्वेष्वेव सोमभक्षेष्वद्भिरेव मार्जालीये प्रक्षालनं मूत्रपुरीषलोहितरेतःप्रभृत्युपहतानामुत्सर्गः इति ।

போதாயனர்:- மண்மயமான பாத்ரங்கள் உச்சிஷ்டத்தால் தொடப்பட்டிருந்தால் அவைக்குக் தேய்ப்பதால் சுத்தி. உச்சிஷ்டத்தின் பற்றுதலால் அசுத்தமானால் நெருப்பில் மறுபடி தஹிப்பதால் சுத்தி. மூத்ரம், மலம், சுக்லம், முதலியதால் அசுத்தமானால் த்யாகம் செய்யவும். பழங்காளாலாகிய பாத்ரங்களுக்கும், சுரை, பில்வம், தென்னை இவைகளின் பழங்களுக்கும் கோவாலங்களால் துடைப்பதால் சுத்தி. நளமென்னும் புல், மூங்கில், நாணல், குசம் இவைகளால் பின்னப்பட்டவைகளுக்குக் கோமூத்ரத்தாலும் ஜலத்தாலும் அலம்புவதால் சுத்தி. நெல்களுக்கு அசுத்தியானால் அலம்புவதால் சுத்தி. அதிகமான நெல்களுக்கு ப்ரோக்ஷணத்தால் சுத்தி. அரிசிக்கு அசுத்தியானல் தள்ள வேண்டியது. சுத்தி செய்யாத பூமியில் வைக்கப்பட்ட புல்களுக்கு ப்ரோக்ஷணத்தால் சுத்தி. காணாத இடத்தில் அசுத்தியானால் ப்ரோக்ஷணத்தால் சுத்தி. இவ்விதமே சிறிய ஸமித்துக்களுக்கு. பெரிய கட்டைகளுக்கு அசுத்தியானால் அலம்பிக் காயவைப்பதால் சுத்தி. மரப்பாத்ரங்களுக்கு உச்சிஷ்ட ஸம்பர்க்கமானால் தேய்ப்பதால் சுத்தி. உச்சிஷ்டத்தின் பற்றுடையவையானால் செதுக்குவதால் சுத்தி. மூத்ரம், மலம், ரக்தம், சுக்லம் முதலியதால் அசுத்தியானால்

கைவிட வேண்டியது. இவ்விதம் சொல்லியது, சொல்லப் போகும் விஷயத்தைத் தவிர்த்து மற்ற இடத்தில். எவ்விதமெனில், அக்னிஹோத்ரம், கர்மோச்சிஷ்டம் இவைகளில் தர்ப்பங்களுடன் ஜலத்தால் அலம்புவதால் சுத்தி. ஸோமபக்ஷணங்கள் எல்லாவற்றிலும் ஜலத்தினால் மார்ஜாலீயத்தில் அலம்புவதால் சுத்தி. மூத்ரம், மலம், ரக்தம், சுக்லம் முதலியதால் அசுத்தமானவைகளை தவிர்க்க வேண்டும் என்று.

गौतमः—परिमार्जनप्रवाहतक्षणनिर्णेजनानि तैजसमार्तिकदारवतान्तवानां तैजसवदुपलमणि शङ्खशुक्तीनां दारुवदस्थिभूम्योरावपनं च भूमेश्चेलवद्रज्जुविदलचर्मणामुत्सर्गो वाऽत्यन्तोपहतानाम् इति ॥ आवपनं - अन्यदानीय पूरणम् ।

கௌதமர்:- தேய்ப்பது, தஹிப்பது, செதுக்குவது, துவைப்பது என்ற இவைகள், முறையே, தைஜஸங்களுக்கும், மண்பாத்ரங்களுக்கும், மரப்பாத்ரங்களுக்கும், நூலால் உண்டாகியவைகளுக்கும் சுத்தி காரணங்கள். கல், ரத்னம், சங்கு, சிப்பி இவைகளுக்குத் தைஜஸங்களுக்கு போலும், எலும்பு, பூமி இவைகளுக்கு மரத்திற்குப் போலும் சுத்தி. பூமிக்கு ஆவபனம் அதிகம். ஆவபனம் - மண்ணை எடுத்துப் புதிய மண்ணால் நிரப்புவது. கயிறு, மூங்கிலாலாகிய கூடை முதலியது, தோல் இவைகளுக்குக் கயிறுக்குப் போலும் சுத்தி. அதிக அசுத்தி உடையவவைகளுக்குப் பரித்யாகமே செய்யப்பட வேண்டும்.

स्मृत्यर्थसारे—मृन्मयानां पात्राणा मीषदुपहतौ पुनर्दाहाच्छुद्धिः । विण्मूत्राद्युपहतानां चण्डालसूतिकाशवोदक्यास्पृष्टानां त्याग एव । आविककम्बलस्य अल्पदोषे सूर्यरश्मिभिः शुद्धिः । विण्मूत्रादिदोषे वल्मीकमृत्तिकया प्रक्षालनाच्छुद्धिः । नीलसंयुक्तवस्त्रं स्वरूपेण त्याज्यम् । कुसुम्भादिरञ्जितं वस्त्रमुपहतं चेच्छोषणाच्छुद्ध्यति ।

विण्मूत्रादिसंस्पृष्टौ तदंशं संशोध्य संशोषणाच्छुद्ध्यति। ऊर्णाकार्पास तूलकुसुम्भकुङ्कुमकर्पूर निर्यासादीनां चैवम्। श्वेतवस्त्रं चण्डालादि स्पृष्टं प्रक्षालनाच्छुध्येत्। धान्यमशुद्धमृत्तिकायुक्तं तण्डुलीकरणाच्छुध्येत्। धान्यराशौ मूत्रादियुक्ते तमंशमपास्य शिष्टमभ्युक्षणाच्छुध्येत्। धान्ये गृहेस्थिते गृहदाहे सति तत्र पशुमरणे तद्धान्यं त्याज्यमेव। भूमिगर्भस्थं कुसूलस्थं च धान्यमभ्युक्षणाच्छुध्येत्। मुद्गमाषादिधान्यानामल्पोप-हतौ प्रोक्षणाच्छुद्धिः। अत्युपहतौ त्यागः। चण्डालपतितादिसंस्पृष्टं पुस्तकं प्रोक्षयेत् इति।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- *மண் பாத்ரங்களுக்கு ஸ்வல்ப அசுத்தியில் மறுபடி பொசுக்குவதால் சுத்தி. விஷ்டாமூத்ராதிகளால் அசுத்தங்களானாலும், சண்டாளன், ஸூதிகா, சவம், ரஜஸ்வலை இவர்களால் தொடப்பட்டாலும் அவைகளை த்யஜிக்க வேண்டும். ஆட்டுமயிர்க் கம்பளிக்கு ஸ்வல்ப அசுத்தி யானால் வெயிலால் சுத்தி. விஷ்டா மூத்ராதிகளால் தோஷமானால் புற்றின் மண்ணால் அலம்புவதால் சுத்தி. நீலிச்சாயமுள்ள வஸ்த்ரத்தையே தவிர்க்க வேண்டும். குஸூம்பம் முதலிய சாயமுடைய வஸ்த்ரம் அசுத்தமானால் உலர்த்துவதால் சுத்தமாகும். மலமூத்ராதிஸ்பருஷ்டமானால் அந்தப் பாகத்தைச் சோதித்து உலர்த்துவதால் சுத்தமாகும். கம்பளம், பருத்தி, பஞ்சு, குஸூம்பம், குங்குமம், கர்ப்பூரம், பிசின் இவைகளுக்கும் இவ்விதமே. வெளுப்பு வஸ்த்ரம் சண்டாளாதிகளால் தொடப்பட்டால் அலம்புவதால் சுத்தமாகும். தான்யம் அசுத்த மண்ணுடன் கலந்திருந்தால் அரிசியாக்குவதால் சுத்தமாகிறது. தான்யக்குவியல் மூத்ராதிகளுடன் சேர்ந்தால் அந்தப் பாகத்தை எடுத்துவிட்டு, மீதியுள்ளதை ப்ரோக்ஷித்தால் சுத்தமாகிறது. வீட்டில் தான்யமிருக்கும் பொழுது, வீடு பற்றியெரிந்தால், அதில் பசு இறந்தால் அந்தத் தான்யம் த்யஜிக்கத் தகுந்ததே, பூமிக்குள், அல்லது*

குதிரினுள்ளிருந்தாலும் அந்தத் தான்யம் ப்ரோக்ஷணத்தால் சுத்தமாகும். பயறு, உளுந்து முதலிய தான்யங்களுக்கு ஸ்வல்பமான அசுத்தியானுல் ப்ரோக்ஷணத்தால் சுத்தி. அதிக அசுத்தியானுல் த்யஜிக்க வேண்டும். சண்டாளாதிகளால் தொடப்பட்ட புஸ்தகத்தைப் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

विष्णुः — मृत्पिण्ड तृणकाष्ठानां श्वभिश्चण्डालवायसैः । स्पर्शेन विहितं शौचं सोमसूर्यांशुमारुतैः इति ।। भूमिशुद्धिमाह याज्ञवल्क्यः – भूशुद्धिर्मार्जनाद्दाहात् कालाद्गोक्रमणात् तथा । सेकादुल्लेखनाल्लेपाद्गृहं मार्जनलेपनात् इति ।। मार्जन्या पांसु तृणादीनां प्रोत्सारणं मार्जनम् । दाहः - तृणकाष्ठाद्यैः । कालः - यावता कालेन लेपादिक्षयो भवति तावान् । गोक्रमणं - गवां पादपरिघट्टनम् । सेकः - गोमूत्रादिभिः । क्षीरगोमूत्रगोमयवारिभिः प्रवर्षणाद्वा । उल्लेखनं - तक्षणं खननं वा । लेपः गोमयादिभिः । गृहं मार्जनानुलेपाभ्यां शुध्यति । गृहस्य पृथगुपादानं संमार्जनानुलेपयोः प्रतिदिवसप्राप्त्यर्थम् ।

விஷ்ணு:- மண்கட்டி, புல், கட்டை இவைகளுக்கு நாய், சண்டாளன், காக்கை இவர்களால் ஸ்பர்சமேற்பட்டால், சந்த்ர, ஸூர்ய கிரணங்களாலும், காற்றினுலும் சுத்தி விதிக்கப்பட்டுள்ளது. பூமிக்குச் சுத்தியைச் சொல்லுகிறுர் யாக்ஞவல்க்யர்:- அசுத்தமான பூமிக்கு, துடைப்பத்தால் பெருக்குவதாலும், நெருப்பினுல் தஹிப்பதாலும், அசுத்தி விலகும். காலத்தாலும், பசுக்களின் காலால் நடப்பதாலும், க்ஷீர கோமூத்ர கோமய ஜலங்களால், அல்லது மழையால், நனைவதாலும், செதுக்குவது, அல்லது வெட்டுவதாலும், சாணி முதலியதால் மெழுகுவதாலும் சுத்தி உண்டாகும். வீடானது, பெருக்குவதாலும், மெழுகுவதாலும் சுத்தமாகிறது. க்ருஹத்தைத் தனியாய்ச் சொல்லியது, ப்ரதிதினமும் செய்ய வேண்டும் என்பதற்காம்.

स्मृत्यन्तरे — प्रातः प्रतिदिनं गेहं सिञ्चेद्गोमयवारिभिः । मार्जयेच्च तथा सायं दीपैरुज्ज्वालयेद्गृहम् इति ॥ मनुरपि — संमार्जनेनाञ्जनेन सेकेनोल्लेखनेन च । गवां च परिवासेन भूमिः शुध्यति पञ्चभिः इति ॥ बोधायनः – भूमेस्तु संमार्जनप्रोक्षणोपलेपना-वत्सरणोल्लेखनैर्यथास्थानं दोषविशेषात् प्रायत्यमथाप्युदाहरन्ति - गोचर्ममात्रमब्बिन्दुर्भूमौ शुध्यति पातितः । समूढमसमूढं वा यत्रामेध्यं न लक्ष्यते इति ।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- *ப்ரதிதினமும் காலையில் வீட்டைச் சாணி ஜலங்களால் நனைக்க வேண்டும், பெருக்கவும் வேண்டும். மாலையில் தீபங்களால் ப்ரகாசப்படுத்த வேண்டும்.* மனுவும்:- *பெருக்குவது, மெழுகுவது, கோமயாதிகளால் நனைப்பது, பறித்துப் புதியமண் போடுவது, பசுக்களை ஒருநாள் முழுவதும் வஸிக்கச் செய்வது என்ற இந்த ஐந்து கார்யங்களாலும், அசுத்தமான பூமி சுத்தமாகிறது. அசுத்திக்குத் தக்கபடி ஒன்றையோ, சிலவற்றையோ, எல்லாவற்றையுமோ உபயோகிக்கவும்.* போதாயனர்:- *பூமிக்குப் பெருக்குவது, ப்ரோக்ஷிப்பது, மெழுகுவது, மண்பூசுவது, (அவஸ்தரணம்,) மண்ணைச் சுரண்டுவது என்றவைகளால், ஸ்தலத்திற்குத் தக்கபடி, தோஷத்தை அனுஸரித்துச் சுத்தி உண்டாகிறது. முன்னோர் இவ்விதமும் சொல்லுகின்றனர் - 'பெருக்கப்பட்டதாயினும், பெருக்கப்படாததாயினும், அசுத்தவஸ்து காணப்படாத பூமியில் ஜலத்தின் ஒருதுளி விழுந்தாலும், அது கோசர்ம ப்ரமாணமுள்ள ஸ்தலத்தைச் சுத்தமாக்குகிறது' என்று.*

वसिष्ठः— खननाद्दहनादद्भिर्घर्षणाद्गोभिराक्रमात् । चतुर्भिः शुध्यते भूमिः पञ्चमाच्चोपलेपनात् इति ॥ याज्ञवल्क्योनाभिहितैः मार्जनादिभिः समस्तैर्व्यस्तैर्वा अमेध्या दुष्टा मलिना च भूमिः शुध्यति । तथा देवलः – यत्र प्रसूयते नारी म्रियते दह्यतेऽपि वा ।

चाण्डालाध्युषितं यत्र यत्र विष्ठादिसङ्गतिः ॥ एवं कश्मलभूयिष्ठा भूरमेध्या प्रकीर्तिता । श्वसूकरखरोष्ट्रादि संस्पृष्टा दुष्टतां व्रजेत् ॥ अङ्गारतुषकेशास्थि भस्माद्यैर्मलिना भवेत् । पञ्चधा वा चतुर्धा वा भूरमेध्या विशुध्यति ॥ दुष्टान्विता त्रिधा द्वेधा शुध्यते मलिनैकधा इति ।

வஸிஷ்டர்:- பறிப்பது, தஹிப்பது, ஜலத்தாலலம்புவது, பசுக்களை வஸிக்கச் செய்வது, என்ற நான்காலும், மெழுகுவதான ஐந்தாவதாலும் பூமி சுத்தமாகிறது. யாக்ஞவல்க்யர் சொல்லிய மார்ஜனம் முதலிய எல்லாவற்றினுலுமோ, சிலவற்றினுலோ, அமேத்யா, துஷ்டா, மலினு என்று மூன்றுவிதமான பூமி சுத்தமாகின்றது. அவ்விதமே, தேவலர்:- எந்த இடத்தில், ஸ்த்ரீ ப்ரஸவித்தாளோ, மனிதன் இறந்தானே, தஹிக்கப்பட்டானே, சண்டாளன் வஸித்தானே, மலம் முதலிய வஸ்து இருந்ததோ இவ்விதம் கச்மலமதிகமான அந்தப் பூமி 'அமேத்யா' எனப்படுகிறது. நாய், பன்றி, கழுதை, ஒட்டகை முதலியதுடன் சேர்ந்த பூமி 'துஷ்டா' எனப்படுகிறது. கரி, உமி, மயிர், எலும்பு, சாம்பல் முதலியதுடன் கூடிய பூமி 'மலினு' எனப்படும். அமேத்யையான பூமி, ஐந்து அல்லது நான்கு ப்ரகாரங்களால் சுத்தமாகிறது. துஷ்டையான பூமி மூன்று அல்லது இரண்டு ப்ரகாரங்களால் சுத்தமாகிறது. மலினையான பூமி ஒரு ப்ரகாரத்தால் சுத்தமாகிறது.

अत्र विज्ञानेश्वरः — यत्र मनुष्या दह्यन्ते, यत्र चाण्डालैरध्युषितं, तयोः पञ्चभिः दाहकालगोक्रमणसेकोल्लेखनैः शुद्धिः । यत्र मनुष्या जायन्ते, यत्र वा म्रियन्ते, यत्र चात्यन्तं विष्ठादिसङ्गतिः, तासां दाहवर्जितैस्तैरेव चतुर्भिः । श्वसूकरखरैश्चिर-कालमध्युषितायाः गोक्रमणसेकोल्लेखनैस्त्रिभिः । उष्ट्रग्रामकु-क्कुटादिभिश्चिरकालमधिवासितायाः सेकोल्लेखनाभ्यां शुद्धिः । अङ्गार तुषादिभिश्चिरकालमधिवासिताया मलिनाया उल्लेखनेन शुद्धिः । मार्जनानुलेपने तु सर्वत्र समुच्चीयेते इति ॥

விக்ஞானேச்வரர்:- எந்த இடத்தில் மனிதர் தஹிக்கப் படுகின்றனரோ, எந்த இடத்தில் சண்டாளர் வஸித்தனரோ, அவ்விரண்டுக்கும் ஐந்துகளால் - தஹித்தல், காலம், பசுவை இருக்கச் செய்தல், கோமயாதிகளால் நனைத்தல், மண்ணை எடுத்தல் இவைகளால் - சுத்தி. எந்த இடத்தில் மனிதர் பிறந்தனரோ, எங்கு இறந்தனரோ, எங்கு அதிகமாய் மலமூத்ராதிகளின் சேர்க்கையோ அந்த இடங்களுக்குத் தாஹம் ஒன்றில்லாத மற்ற நான்கினாலும் சுத்தி. நாய், பன்றி, கழுதை இவைகளால் வெகுகாலம் வஸிக்கப்பட்ட இடத்திற்கு, பசுவை வஸிக்கச் செய்தல், கோமயாதிகளால் நனைத்தல், பூமியைப் பறித்தல் என்ற மூன்றினாலும் சுத்தி. ஒட்டகை, ஊர்க்கோழி முதலியதால் வெகுகாலம் வஸிக்கப்பட்ட இடத்திற்கு, கோமயாதிகளால் நனைத்தல், மண்ணைப் பறித்தல், என்ற இரண்டினாலும் சுத்தி. கரி, உமி முதலியதுடன் வெகுகாலம் இருக்கப்பட்ட மலின பூமிக்குச் சுரண்டுவதால் சுத்தி. பெருக்குவதும், மெழுகுவதும் எல்லாச் சுத்திகளிலும் சேர்க்கப் படுகின்றன.

वृद्धगौतमः —— सेचनान्मार्जनाद्वेश्म शुध्येत्सूतिगृहं पुनः । खननोल्लेखमृल्लेपपुण्याहैर्विंशतेः परम् इति ॥ स्मृत्यर्थसारे – भूतलं नारीप्रसवदूषितं चेत् तत्स्थानान्मृत्तिकामुद्धृत्य अन्यां मृत्तिकामापूर्य गवाक्रमणमार्जनाभ्युक्षणैः पुण्याहवाचनाच्च शुध्यति । अत्यन्तोपहतौ तृणाग्निना दाहश्च । भूतलस्य चिरकालं विण्मूत्रादिवासितस्य श्मशानत्वं गतस्य अतिवृष्टिप्रक्षालनात्पश्चात् पूर्वोक्तविधानाच्छुद्धिः। आरामे क्षेत्रे वा श्मशानत्वं गते, अत्यन्तवृष्टेरूर्ध्वं हलकर्षणाच्छुद्धिः । गृहे विप्रक्षत्रियविशां मरणे तत्रत्यं मृन्मयं भाण्डं पक्कमन्नं च सन्त्यजेत् । मृतदेशं गोमयेनोपलिप्य अजाघृतेन वा पुण्याहवाचनैर्वा कुशसुवर्णमिश्रोदकैः प्रोक्षणाद्वा शोधयेत् । गृहे जनने मरणे वा जाते

आशौचादूर्ध्वं मेध्यमृत्तिकाप्रक्षेपात् पुण्याहवाचनाच्च शुद्धिः । गृहे दग्धे तत्र मार्जारादिमृतौ तद्गृहस्य कर्षणात् प्रोक्षणाच्च शुद्धिः इति ।

வ்ருத்த கௌதமர்:- வீடு தண்ணீர் தெளிப்பதாலும், பெருக்குவதாலும் சுத்தமாகும். ப்ரஸவித்த இடமானது, பறிப்பது, பசுவின் குளம்பினுல் சுறண்டுவது, புதியமண் பூசுவது, புண்யாஹவாசனம் இவைகளாலும் இருபது நாட்களுக்குப் பிறகு சுத்தமாகும். **ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:-** பூமி, ஸ்த்ரீயின் ப்ரஸவத்தால் அசுத்தமாயிருந்தால், அந்த இடத்திலிருந்து மண்ணை எடுத்து விட்டு, புதிய மண்ணை நிரப்பி, பசுவை இருக்கச் செய்து, பெருக்கி, ப்ரோக்ஷித்துப் புண்யாகவாசனமும் செய்தால் சுத்தமாகிறது. அதிக அசுத்தியானுல் புல்களின் நெருப்பால் தஹித்தலுமதிகம். பூதலமானது வெகுகாலம் மல மூத்ராதிகளில் அசுத்தமாயிருந்தால், ச்மசானத்தன்மையை அடைந்திருந்தால், அதிக மழையினுல் அலம்பப்பட்ட பிறகு, முன் சொல்லிய விதியால் சுத்தி செய்யவும். பூந்தோட்டம், அல்லது நெல்வயல் ச்மசானத்தன்மையை அடைந்திருந்தால். பெரும் மழைக்குப் பிறகு கலப்பையால் உழுவதால் சுத்தி. வீட்டில், ப்ராம்ஹணன், க்ஷத்ரியன், வைச்யன் இவருள் யாராவது மரித்தால், அங்குள்ள மட்பாண்டத்தையும், பக்குவமான அன்னத்தையும் பரிஹரிக்க வேண்டும். இறந்த இடத்தைப் பசுவின் சாணத்தால் மெழுகி, ஆட்டின் நெய்யாலாவது, புண்யாஹ ஜலத்தாலாவது, குசத்துடனும், ஸ்வர்ணத்துடனும் கூடிய ஜலத்தாலாவது ப்ரோக்ஷிப்பதால் சுத்தி செய்ய வேண்டும். வீட்டில் ஜனனமாவது, மரணமாவது ஏற்பட்டால், ஆசௌசத்திற்குப் பிறகு, சுத்த மண்ணைப் போடுவதாலும், புண்யாஹவாசனத்தாலும் சுத்தி. வீடு நெருப்பினுல் தஹிக்கப்பட்டு, அதில் பூனை முதலியன இறந்தால், அந்த வீட்டிற்கு, உழுவதாலும், ப்ரோக்ஷணத்தாலும் சுத்தி.

चण्डालस्य सकृद्गृहप्रवेशे कर्तव्यां शुद्धिमाह पराशरः— गृहस्याभ्यन्तरं गच्छेच्चण्डालो यदि कस्यचित्। तमगाराद्विनिर्वास्य मृद्भाण्डं तु विसर्जयेत्॥ रसपूर्णं गृहे भाण्डं न त्यजेत्तु कदाचन। गोमयेन तु संमिश्रैर्जलैः प्रोक्षेद्गृहं तथा॥ प्रवेशयेत्ततः पश्चात् गृहे गां चाप्यजामपि इति॥ कश्चित् कालमेकस्मिन् सहवासेऽपि स एव – अविज्ञातस्तु चण्डालो यत्र वेश्मनि तिष्ठति। विज्ञाते तूपसन्नस्य द्विजाः कुर्वन्त्यनुग्रहम् इति।

சண்டாளன் ஒருமுறை வீட்டின் நுழைந்தால் செய்ய வேண்டிய சுத்தியைச் சொல்லுகிறார் பராசரர்:- சண்டாளன் ஒருவனின் க்ருஹத்தினுள் நுழைந்தால், அவனை வீட்டினின்றும் வெளியேற்றி, மண்பாண்டங்களைப் பரிஹரிக்க வேண்டும். ரஸ வஸ்துவால் நிரம்பிய பாண்டத்தை ஒருகாலும் த்யஜிக்க வேண்டியதில்லை. கோமயத்துடன் கூடிய ஜலத்தால் வீடுமுழுவதும் ப்ரோக்ஷிக்க வேண்டும். பிறகு வீட்டில் பசுவையும், வெள்ளாட்டையும் நுழையச் செய்ய வேண்டும். கொஞ்சகாலம் ஒரு வீட்டின் சண்டாளனின் ஸஹவாஸமேற்பட்டால், அது விஷயத்தில், பராசரரே:- சண்டாளன் அறியப்படாமல் எந்த வீட்டிலாவது இருந்தால், பிறகு தெரிந்தால், ப்ராம்ஹணர்களிடம் சென்று ப்ராயச் சித்தத்தைக் கேட்க வேண்டும். அவர்கள் ப்ராயச்சித்தத்தை உபதேசித்து அனுக்ரஹிப்பார்கள்.

परिषदा विधेयं व्रतविशेषं दर्शयति स एव — दध्ना च सर्पिषा चैव क्षीरगोमूत्रयावकम्। भुञ्जीत सह भृत्यैश्च त्रिसन्ध्यमवगाहनम्॥ त्र्यहं भुञ्जीत दध्ना च त्र्यहं भुञ्जीत सर्पिषा। त्र्यहं क्षीरेण भुञ्जीत एकैकेन दिनत्रयम्॥ दध्ना संयुक्तं गोमूत्रयावकं दिनत्रयम्। घृतक्षीरयोरप्येवम्। पुनरप्येकैकेन युक्तमेकस्मिन् दिने। मिलित्वा द्वादशरात्रम्॥ दध्यादीनां परिमाणमाह स एव — दधिक्षीरस्य त्रिपलं पलमेकं घृतस्य तु। यावकस्य परीमाणं ग्रासमात्रमिति स्मृतम् इति।

பரிஷத்து விதிக்க வேண்டிய வ்ரதத்தையும் சொல்லுகிறார். பராசரரே:- தயிருடன் கூடிய கோமூத்ர யாவகத்தை மூன்று நாள் புஜிக்க வேண்டும். நெய்யுடன் சேர்ந்த ஷை யாவகத்தை மூன்று நாளும், க்ஷீரத்துடன் கூடிய ஷை யாவகத்தை மூன்று நாளும் புஜிக்க வேண்டும். பிறகு, ஒவ்வொன்றுடன் கூடிய ஷை யாவகத்தை ஒவ்வொரு நாளும் உபயோகிக்க வேண்டும். மொத்தம் 12-நாள் வ்ரதம். தயிர் முதலியவைக்கு அளவைச் சொல்லுகிறார். பராசரரே:- தயிரும், பாலும் மும்மூன்று பலம், நெய் ஒரு பலம், கோமூத்ர யாவகம் ஒரு கபள மாத்ரம்.

एवं चेतनानां शुद्धिमभिधाय अचेतनानामप्याह स एव– भस्मना तु भवेच्छुद्धिरुभयोस्ताम्रकांस्ययोः । जलशौचेन वस्त्राणां परित्यागेन मृन्मयम् । कुसुम्भगुडकार्पासलवणं तैलसर्पिषी । द्वारे कृत्वा तु धान्यानि दद्याद्वेश्मनि पावकम् ॥ एवं शुद्धास्ततः पश्चात् कुर्यात् ब्राह्मणतर्पणम् । त्रिशतं गोवृषं चैकं दद्याद्विप्रेषु दक्षिणाम् ॥ पुनर्लेपनखाताभ्यां होमजप्येन शुध्यति । आधारेण च विप्राणां भूमिदोषो न विद्यते इति ।

இவ்விதம் சேதனங்களுக்குச் சுத்திசை சொல்லி, அசேதனங்களுக்கும் சுத்தியைச் சொல்லுகிறார், பராசரரே:- தாம்ரம், வெண்கலம் இவைகளுக்குச் சாம்பலினால் சுத்தி. வஸ்த்ரங்களுக்கு ஜலத்தினால் சுத்தி. மண் பாத்ரங்களைப் பரிஹரிக்கவும். குஸும்பம், வெல்லம், பஞ்சு, உப்பு, எண்ணெய், நெய், தான்யங்கள் இவைகளை வெளியில் வைத்து, வீட்டில் நெருப்பை வைக்க வேண்டும். இவ்விதம் செய்வதால் அசேதன பதார்த்தங்கள் சுத்தங்களாகின்றன. பிறகு ப்ராம்ஹணர்களைப் புஜிப்பிக்க வேண்டும். 300 - பசுக்களையும், ஒரு எருதையும், ப்ராம்ஹணர்களுக்குத் தக்ஷிணை கொடுக்க வேண்டும். மறுபடி மண்ணைப் பறித்து, புதிய மண் போடுவதாலும், சுவற்றில் புதிய மண்

பூசுவதாலும், ஹோமத்தாலும், ஜபத்தாலும், ப்ராம்ஹணர்கள் இருப்பதாலும் பூமி சுத்தமாகிறது. அதற்குத் தோஷமில்லை.

रजक्यादिभिः सह संवासेऽप्याह स एव – रजकी चर्मकारी च लुब्धकी वेणुजीवनी । चातुर्वर्ण्यस्य तु गृहे ह्यविज्ञाता तु तिष्ठति ॥ ज्ञात्वा तु निष्कृतिं कुर्यात् पूर्वोक्तस्यार्धमेव च । गृहदाहं न कुर्वीत शेषं सर्वं च कारयेत् इति ॥ क्षेत्रारामादौ अज्ञानेन चण्डालसहवासेऽप्याह स एव – चण्डालैः सह संपर्कं मासं मासार्धमेव वा । गोमूत्रयावकाहारो मासार्धेन विशुध्यति इति ॥ मासं च अर्धमासं च मासार्धम् । माससङ्करे मासव्रतेन शुद्धिः । अर्धमाससङ्करे अर्धमासेन शुद्धिरित्यर्थः ।

ரஜகீ (வண்ணாத்தி) முதலியவருடன் ஸஹவாஸம் ஏற்பட்ட விஷயத்திலும் சொல்லுகிறார், பராசரரே:- *ரஜகீ (வண்ணாத்தி), சர்மகாரீ (சக்கிலியஸ்த்ரீ), லுப்தகீ (வேடஸ்த்ரீ), வேணுஜீவநீ (குறத்தி), இவர்களுள் எவளாவது, நான்கு வர்ணத்தாரின் வீட்டில் அறியப்படாதவளாய் வஸித்துப் பிறகு அறியப்பட்டால், முன் சொல்லிய ப்ராயச்சித்தத்தில் பாதியை அனுஷ்டிக்க வேண்டும். வீட்டை மட்டில் தஹிக்க வேண்டியதில்லை. மற்றது எல்லாவற்றையும் அனுஷ்டிக்க வேண்டும். வயல், பூந்தோட்டம் முதலியதில் அறியாமல், சண்டாளனுடன் ஸஹவாஸம் ஏற்பட்டால் அது விஷயத்திலும்,* பராசரரே :- *சண்டாளருடன் ஸம்பர்க்கத்தை, ஒரு மாதம், அல்லது அரை மாதம் செய்தால், கோமூத்ர யாவகத்தைப் புஜித்துச் சுத்தனாகிறான். ஒரு மாதம் ஸம்பர்க்கம் செய்திருந்தால் ஒரு மாதம் வ்ரதம். அரைமாதம் ஸம்பர்க்கம் செய்திருந்தால் அரை மாதம் வ்ரதம் என்பது பொருள்.*

माधवीये–ग्रामाद्दण्डशतं त्यक्त्वा नगराच्च चतुर्गुणम् । भूमिः सर्वत्र शुद्धा स्यात् यत्र लेपो न विद्यते इति ॥ मनुः – आपः शुद्धा भूमिगता वैतृष्ण्यं यासु गोर्भवेत् । अव्याप्ताश्चेदमेध्येन

गन्धवर्णरसान्विताः इति । याज्ञवल्क्यः – शुचि गोतृप्तिकृत्तोयं प्रकृतिस्थं महीगतम् । तथा मांसं श्वचण्डालक्रव्यादादिनिपातितम् इति । प्रकृतिस्थं - रूपरसगन्धान्तरमनापन्नमुच्छिष्टाद्यनुपहतं, शुचि आचमनयोग्यं भवति ।। एतच्च युगान्तरविषयम् । गोतृप्तिशिष्टे पयसि कलौ नाचमनक्रिया इति कलौ निषेधस्मरणात् ।।

மாதவீயத்தில் :- க்ராமத்திற்கு வெளியில் நூறுகோல் தூரத்திற்கு அப்புறமும், நகரத்திற்கு வெளியில் நானூறுகோல் தூரத்திற்கு அப்புறமும் பூமி எங்கும் சுத்தமேயாம், அசுத்த வஸ்துக்களின் பற்றுதல் இல்லாத இடத்தில். **மனு** :- எவ்வளவு அளவுள்ள ஜலத்தில் ஒரு பசுவுக்குத் தாஹம் அடங்குமோ அவ்வளவு ஜலம் சுத்தமான பூமியிலிருந்து, ஸ்வாபாவிகமான கந்தம், வர்ணம், ரஸம் இவைகளுடன் கூடியிருந்தால், அசுத்த வஸ்துடன் சேராதிருந்தால் அது சுத்தமாகும். **யாக்ஞவல்க்யர்** :- பசுவுக்குத் திருப்தி செய்விக்கக் கூடிய ஜலம், இயற்கையிலிருந்து, பூமியிலிருந்தால் சுத்தமாகும். அவ்விதமே, நாய், சண்டாளன், புலி முதலிய ஜந்துக்கள் இவர்களால் தள்ளப்பட்ட மாம்ஸமும் சுத்தமாகும். ஜலமானது, ரூபம், ரஸம், கந்தம் இவை மாறாமல், அசுத்த வஸ்துக்கள் முதலியவையால் கெடுக்கப்படாமலிருந்தால், அது சுத்தம் - ஆசமனாதிகளுக்கு யோக்யம் ஆகிறது என்பது பொருள். இவ்விதம் சொல்லியது மற்ற யுகங்களைப் பற்றியது. ஏனெனில், 'பசு குடித்து மீந்த ஜலத்தில் சிஷ்டர்கள் ஆசமனம் செய்வது கலியில் இல்லை' என்று கலியில் நிஷேதிக்கும் ஸ்ம்ருதியிருக்கிறது.

यमः– तथाऽक्षोभ्यतटाकादि नदी वापी सरांसि च । चण्डालाद्यशुचिस्पर्शे तीर्थतः परिवर्जयेत् ।। अन्त्यजैः स्वीकृते तीर्थे तटाकेषु नदीषु च । शुध्यते पञ्चगव्येन पीत्वा तोयमकामतः ।। तीर्थमत्र अवतरणप्रदेशः । अक्षुद्राणामपां नास्ति प्रभूतानां च दूषणम् । स्तोकानामुद्धृतानां च कश्मले दूषणं भवेत् इति ।। देवलः –

उद्धृताश्चापि शुद्ध्यन्ति शुद्धैः पात्रैः समुद्धृताः । एकरात्रोषिता आपस्त्याज्याः शुद्धा अपि स्वयम् इति ॥ पराशरः – नदी वेगेन शुध्येत लेपो यदि न दृश्यते । वापी कूपतटाकेषु दूषितेषु कथञ्चन ॥ उद्धृत्य वै कुम्भशतं पञ्चगव्येन शुध्यति इति ॥ श्वमार्जारादीनां तत्र पतितानां मरणमात्रे इयं शुद्धिः ।

யமன் :- கலக்க முடியாத தடாகம் முதலியவை, நதீ, வாபீ, ஸரஸ்ஸு இவைகளுக்குச் சண்டாளாதிகளான அசுத்தர்களின் ஸ்பர்சமேற்பட்டால், அவர்கள் இறங்கும் துறையைப் பரிஹரிக்க வேண்டும். சண்டாளாதிகளால் ஸ்வீகரிக்கப்பட்ட துறையில் தடாகங்களிலோ, நதிகளிலோ அறியாமல் ஜலத்தைப் பருகினால், பஞ்சகவ்ய பானத்தால் சுத்தனாகிறான். அதிகமான ஜலங்களுக்குத் தோஷமில்லை. ஸ்வல்பமாய் உள்ளதும், எடுக்கப்பட்டதுமான ஜலத்திற்குத்தான் தோஷமுண்டு. தேவலர் :- சுத்தமான பாத்ரங்களால் எடுக்கப்பட்டால், உத்த்ருத ஜலமும் சுத்தமேயாம். சுத்த ஜலமாயினும், ஒரு ராத்ரி அதிக்ரமித்தால் அதைப் பரிஹரிக்க வேண்டும். பராசரர் :- அசுத்த வஸ்துவின் பற்றுக் காணப்பட்டால் நதீ ஜலம் வேகத்தால் சுத்தமாகும். வாபீ, கூபம், தடாகம் இவைகள் அசுத்தங்களானால், நூறு குடம் ஜலத்தை இறைத்து விட்டுப் பஞ்சகவ்யத்தைச் சேர்த்துச் சுத்தி செய்யவும். நாய், பூனை முதலியவை விழுந்து இறந்தது மட்டிலானால் இது சுத்தி.

मृतशरीरक्षरणकृतायामत्यन्तोपहतौ विष्णुराह– मृतपञ्चनखात् सर्वाः शेषं शास्त्रेण शोधयेत् ॥ वह्निं प्रज्वलनं कृत्वा कूपे पक्वेष्टकाचिते । पञ्चगव्यं न्यसेत्तत्र नवतोयसमुद्भवे इति ।

இறந்த சரீரம் ஊறியதால் அதி அசுத்தி ஏற்பட்ட விஷயத்தில் சொல்லுகிறார், விஷ்ணு :- பஞ்சநக ப்ராணி ஏதாவது விழுந்து, இறந்து, அதிகம் அசுத்தமாகிய கிணற்றினின்றும் ஜலம் முழுவதையும் இறைத்து

விடவேண்டும். மற்றதைச் சாஸ்த்ரப்படி சுத்தம் செய்ய வேண்டும். சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட கிணருனல் அதில் நெருப்பை எரியச் செய்து, புது ஜலம் ஊறியபின் பஞ்சகவ்யத்தைப் போடவேண்டும்.

मनुष्यशरीरक्षरणेऽप्येषैव शुद्धिः। महत्सु तटाकादिषु नास्ति दोषः। वापी कूपतटाकानामेवं शुद्धिर्विधीयते। अ ल्पानामेव पयसां महत्सु न तु दूषणम् इति स्मरणात्॥ जातुकर्णिः – मूत्रपुरीषाद्युपहता आपः सोमसूर्यांशुस्पर्शेन शुध्यन्ति इति॥ देवलः – क्लिन्नं भिन्नं शवं चैव कूपस्थं यदि दृश्यते। पयः पिबेत्त्रिरात्रं तु मानुषं द्विगुणं व्रतम् इति॥ एतदापद्विषयम्। 'क्लिन्ने भिन्ने शवे तोये तत्रस्थं यदि तत् पिबेत्। शुध्यै चान्द्रायणं कुर्यात् तप्तकृच्छ्रमथापि वा इति हारीतस्मरणात्।

மனுஷ்ய தேஹம் விழுந்து இறந்து ஊறி அசுத்தமாளுலும் இதேதான் சுத்தி. பெரிய தடாகங்களில் தோஷமில்லை. 'அல்பஜலமுள்ள வாபீ கூப தடாகங்களுக்கு இவ்விதம் சுத்தி விதிக்கப்படுகிறது. பெரிய தடாகாதிகளுக்குத் தோஷமில்லை' என்று ஸ்ம்ருதி உள்ளது. **ஜாதுகர்ணி** :- மூத்ரம், மலம் முதலியவையால் அசுத்தமான ஜலம், சந்த்ரன், ஸூர்யன் இவர்களின் கிரண ஸ்பர்சத்தால் சுத்தமாகின்றது. **தேவலர்** :- கிணற்றில், சவமானது நனைந்து ஊறி, பின்னமாய்க் காணப்பட்டால், அறியாமல் அந்த ஜலத்தைப் பருகியவன், மூன்று நாள் க்ஷீரபானம் செய்து உபவாஸமிருக்க வேண்டும். மனிதனின் சவமாளுல் இரண்டு மடங்கு வ்ரதமனுஷ்டிக்க வேண்டும். இது ஆபத்விஷயம். ஏனெனில், 'கிணற்றில் சவம் சின்னமாய் இருந்து, அதிலுள்ள ஜலத்தைப் பருகிளுல், அவன் சுத்திக்காகச் சாந்த்ராயணத்தையாவது, தப்த க்ருச்ரத்தையாவது அனுஷ்டிக்க வேண்டும்' என்று **ஹாரீத ஸ்ம்ருதி** உள்ளது.

शातातपः – अन्त्यैरपि कृते कूपे सरोवाप्यादिके तथा । तत्र स्नात्वा च पीत्वा च प्रायश्चित्तं न विद्यते इति । एतदापद्विषयम् । चण्डालखातवापीषु पीत्वा सलिलमग्रजः । अज्ञानाच्चैकभक्तेन त्वहोरात्रेण शुध्यति इति पराशरस्मरणात् । विज्ञानेश्वरः – प्रपास्वरण्ये घटके च सैरे द्रोण्यां जलं केशविनिःसृतं च । श्वपाकचण्डालपरिग्रहेषु पीत्वा जलं पञ्चगव्येन शुध्येत् इति ।

சாதாதபர் :- 'அந்த்ய ஜாதிகள் ஏற்படுத்திய கிணறு, குளம், வாபீ முதலியவைவயில் ஸ்நானம் பானம் இவைகளைச் செய்தாலும் ப்ராயச்சித்தமில்லை' என்றார். இது ஆபத் விஷயமாகும். ஏனெனில், 'சண்டாளன் வெட்டிய வாபிகளில் ப்ராம்ஹணன் ஜலத்தைப் பருகினால், அறியாமையினாலானால், ஒரு நாள் ஏகபக்த (ஒரு வேளை உணவு) நியமத்துடனிருந்தால் சுத்தனாகிறான்' என்று பராசர ஸ்ம்ருதி உள்ளது. விக்ஞாநேச்வரர்:- தண்ணீர்ப் பந்தலிலும், காட்டிலும், சிறிய குடத்திலும், கலப்பைப் பள்ளத்திலும், குழாயிலும், பயிர்களிலும், ச்வபாகன் சண்டாளன் இவர்கள் பரிக்ரஹித்துள்ள ஜலாசயத்திலும் உள்ள ஜலத்தைப் பருகினால், பஞ்சகவ்யத்தால் சுத்தனாவான்.

संवर्तः– सीरखातप्रपातोयं पीत्वा नावगतं जलम् । अहोरात्रोप वासेन पञ्चगव्येन शुध्यति इति ।। सीरखात प्रपातोयपाने प्रायश्चित्त-मेतदापद्विषयम् । अनापदि तु चान्द्रायणम् । सीरखातप्रपातोयं पीत्वा चान्द्रायणं चरेत् इति पराशरस्मृतेः । संवर्तः – वापी कूपतटाकानां दूषितानां विशुद्धये । अपां घटशतोद्धारः पञ्चगव्यं च निक्षिपेत् इति ।। कृम्युपहतदेहस्य शुद्धिमाह पराशरः – ब्राह्मणस्य व्रणद्वारे पूयशोणितसम्भवे । कृमिरुत्पद्यते तत्र प्रायश्चित्तं कथं भवेत् ।। गवां मूत्र पुरीषेण दधिक्षीरेण सर्पिषा । त्र्यहं स्नात्वा च पीत्वा च कृमिदष्टः शुचिर्भवेत्-इति ।

ஸம்வர்த்தர்:- கலப்பை உழுத இடத்திலும், தண்ணீர்ப் பந்தலிலும் செய்த ஜலபானத்திற்கு விதித்த இந்த ப்ராயச்சித்தம் ஆபத்விஷயம். மற்றக் காலத்திலானுல் சாந்த்ராயணம் ப்ராயச்சித்தம். 'கலப்பை உழுத இடத்திலும், தண்ணீர்ப் பந்தலிலுமுள்ள ஜலத்தைப் பருகிஞல் சாந்தத்ராயணம் அனுஷ்டிக்க வேண்டும்' என்று பராசரஸ்ம்ருதி உள்ளது. ஸம்வர்த்தர்:- வாபீ, கூபம், தடாகம் இவைகள் அசுத்தங்களானுல் சுத்திக்காக, நூறு குடம் ஜலத்தை இறைத்துப் பஞ்ச கவ்யத்தையும் போட வேண்டும். புழுக்களால் அசுத்தமான தேஹத்திற்குச் சுத்தியைச் சொல்லுகிருர் பராசரர்:- 'ப்ராம்ஹணனுக்குச் சிரங்கின் த்வாரத்தில், சீழ், ரக்தம் உண்டாகி, புழுவும் உண்டாகின்றது. அதில் ப்ராயச்சித்தம் எப்படி எனில், பசுக்களின் மூத்ரம், சாணம், தயிர், பால், நெய் இவைகளால் மூன்று நாள் ஸ்நானமும், பானமும் செய்தால் அவன் சுத்தனுவான்' என்று.

एतच्च नाभेरधोभागे द्रष्टव्यम् । उपरिभागे तु भानुराह— नाभिकण्ठान्तरोद्भूते व्रणे चोत्पद्यते कृमिः । षड्रात्रं तु तदा प्रोक्तं प्राजापत्यं शिरोव्रणे इति । बोधायनः — यथैव सोमसंयोगात् चमसा मेध्य उच्यते । अपां तथैव संयोगान्नित्यं मेध्यः कमण्डलुः ।। ततः शौचं ततः पानं सन्ध्योपासनमेव च । निर्विशङ्केन कर्तव्यं यदीच्छेच्छ्रेय आत्मनः इति ।

இது நாபிக்குக் கீழுள்ள பாகத்திலேற்பட்டதைப் பற்றியது. நாபிக்கு மேற்பட்ட பாகத்திலானுல் சொல்லுகிருர் பானு:- நாபிக்கும், கழுத்துக்கும் நடுவிலுள்ள வ்ரணத்தில் புழு உண்டானுல், ஆறு நாள் வ்ரதம் சொல்லப்பட்டுள்ளது. சிரஸ்ஸில் வ்ரணமானுல் ப்ராஜாபத்யம் சொல்லப்பட்டுள்ளது. போதாயனர்:- ஸோமரஸம் சேர்ந்திருப்பதால், சமஸம் சுத்தம் என்று சொல்லப்படுவது போல், ஜல ஸம்பந்தத்தால் கமண்டலு நித்யமும் சுத்தமாகும். அதனுலேயே சௌசத்தையும்,

அதனுலேயே பானத்தையும், அதனுலேயே ஸந்த்யோபாஸனத்தையும் சங்கையில்லாமல், ச்ரேயஸ்ஸை விரும்புவோன் அனுஷ்டிக்கலாம்.

अत्र कमण्डलुशब्देन ताम्रादिपात्रमुच्यते । न तु नालिकेरफलादि । दीर्घकालब्रह्मचर्यं धारणं च कमण्डलोरिति कलौ तस्य निषेधात् । यतिपात्राणि मृद्वेणुदार्वलाबुमयानि (फलानि च) इति सन्न्यासिविषयत्वस्मरणाच्च ।। स एव – प्रायश्चित्तैरपैत्येनो याजनाध्यापनैः कृतम् । प्रतिग्रहनिमिवं तु त्यागेन तपसाऽपि च इति । तन्न केवलं तपसा शुध्यति, किं तु 'षष्ठांशं कर्षको दद्यात् पञ्चमांशं तथा वणिक् । प्रतिगृह्य चतुर्थांशं दत्वा पापैः प्रमुच्यते इत्युक्ततुरीयांशदानेन तपसा कृच्छ्रचान्द्रायणादिना च शुध्यति ।

இங்கு, கமண்டலு சப்தத்தால், தாம்ரம் முதலிய பாத்ரம் சொல்லப்படுகிறது. தேங்காய்ப் பாத்ரம் முதலியதல்ல. ''தீர்க்ககால ப்ரம்ஹசர்யமும், கமண்டலு தாரணமும் கூடாது'' என்று கலியில் அது நிஷேதிக்கப்பட்டுள்ளது, ''மண், மூங்கில், மரம், சுரைக்காய், பழம் இவைகளாலுண்டாகிய பாத்ரங்கள் யதிகளுக்குரிய பாத்ரங்கள்'' என்று ஸன்யாஸி விஷயத்வத்தைச் சொல்லியுள்ளது. போதாயனரே:- யாகம் செய்விப்பதாலும், அத்யயனம் செய்விப்பதாலும் செய்யப்பட்ட பாபம், ப்ராயச் சித்தங்களால் விலகும். ப்ரதிக்ரஹத்தால் செய்யப்பட்ட பாபமோவெனில், தானத்தாலும், தபஸ்ஸினுலும் விலகும். அது தபஸ்ஸினுல் மட்டும் விலகாது. ஆனுல், ''உழுது பயிரிடுபவன் ஆறிலொரு பாகத்தையும், வ்யாபாரம் செய்பவன் ஐந்திலொரு பாகத்தையும், ப்ரதிக்ரஹம் செய்தவன் நாலிலொரு பாகத்தையும் தானம் செய்தால் பாபங்களால் விடுபடுவான்'' என்று சொல்லப்பட நாலிலொரு பாகத்தின் தானத்தினுலும், க்ருச்ரம், சாந்த்ராயணம் முதலிய தபஸ்ஸினுலும் ப்ரதிக்ரஹம் செய்தவன் சுத்தனுகிறுன்.

तथा च मनुः – यद्गर्हितेनार्जयन्ति कर्मणा ब्राह्मणा धनम्। तस्योत्सर्गेण शुध्यन्ति जप्येन तपसैव च इति ।। याज्ञवल्क्यः – सोमः शौचं ददौ स्त्रीणां गन्धर्वश्च शुभां गिरम्। पावकः सर्वमेध्यत्वं मेध्या वै योषितो ह्यतः ।। विप्रस्तु पादतो मेध्यो गावो मेध्यास्तु पृष्ठतः ।। अजाश्वा मुखतो मेध्याः स्त्रियो मेध्यास्तु सर्वतः इति ।। शातातपः – गोकुले यज्ञशालायां तिलयन्त्रेक्षुयन्त्रयोः । न मीमांस्यानि शौचानि स्त्रीषु बालातुरेष्वपि इति ।

மனு:- ப்ராம்ஹணர்கள் நிஷித்தமான கர்மத்தினுல் எந்தத் தனத்தை ஸம்பாதிக்கின்றனரோ, அந்தத் தனத்தைத் தானம் செய்வதாலும், ஜபத்தினுலும், தபஸ்ஸினுலும் சுத்தராகின்றனர். யாக்ஞவல்க்யர்:- ஸ்த்ரீகளுக்கு சந்த்ரன் சுத்தியையும், கந்தர்வன் சுபமான வாக்கையும், அக்னி எல்லாவற்றிலும் சுத்தியையும் கொடுத்தார்கள். ஆகையால் ஸ்த்ரீகள் சுத்தைகள். ப்ராம்ஹணன் பாதத்தில் சுத்தன். பசுக்கள் முதுகில் சுத்தங்கள். ஆடு, குதிரை இவைகள் வாயில் சுத்தங்கள். ஸ்த்ரீகள் எல்லா இடத்திலும் சுத்தைகளாவர். சாதாதபர்:- மாட்டுக் கூட்டத்திலும், யாகசாலையிலும், எள்ளுச் செக்கிலும், கரும்பு ஆலையிலும், ஸ்த்ரீகளிடத்திலும், குழந்தைகளிடத்திலும், பிணியாளரிடத்திலும் சுத்திகளை விசாரிக்க வேண்டாம்.

पराशरः – रथ्याकर्दमतोयानि नावः पन्थास्तृणानि च । मारुतार्केण शुध्यन्ति पक्वेष्टकचितानि च ।। अदुष्टाः सन्तता धारा वातोद्धूताश्च रेणवः ।। स्त्रियो वृद्धाश्च बालाश्च न दुष्यन्ति कदाचन इति। उदकपानगता धाराः शुद्धाः । अशुचिप्रदेशात् वायुनोत्थापिता अपि रेणवः स्पर्शार्हाः । पुरुषवत् प्रातःस्नानाद्यभावेऽपि योषिदादयः शुद्धा इत्यर्थः ।। वैखानसे –आतुरे बाले महानसे स्त्रीषु शौचं न विचारणीयम् इति ।। बृहस्पतिः – पादौ शुची ब्राह्मणानामजाश्वस्य मुखं शुचि । गवां पृष्ठानि मेध्यानि सर्वगात्राणि योषिताम् इति ।

பராசரர் :- தெருவிலுள்ள சேறுடன் கூடிய ஜலம், ஓடம், வழி, புல்கள், சுட்ட செங்கல்களால் கட்டப்பட்டவை இவைகள் காற்றினாலும், ஸூர்யனாலும் சுத்தமாகின்றன. தொடர்ந்து விழும் ஜலத்தின் தாரைகளும், காற்றினால் கிளப்பப்பட்ட புழுதிகளும், ஸ்த்ரீகளும், கிழவர்களும், சிறுவர்களும் ஒருகாலம் அசுத்தராவதில்லை. ஜலத்தைப் பருகும் போது தொடர்ந்திருக்கும் ஜலத்தின் தாரைகள் சுத்தங்களே. அசுத்த ப்ரதேசத்தினின்றும் காற்றினால் கிளப்பப்பட்டவைகளாயினும் புழுதிகள் ஸ்பர்சத்திற்கு அர்ஹங்கள்தான். புருஷர்கள் போல் ப்ராத: ஸ்நானம் முதலியவை இல்லாவிடினும் ஸ்த்ரீகள் முதலியவர்கள் சுத்தர்கள் என்பது பொருள். **வைகாநஸத்தில்:-** பிணியாளன், குழந்தை, சமையல் செய்யுமிடம், ஸ்த்ரீகள் இவர்களிடத்தில் சுத்தி விசாரிக்கத்தக்கதல்ல. **ப்ருஹஸ்பதி:-** ப்ராம்ஹணர்களின் பாதங்கள் சுத்தங்கள். ஆடு, குதிரை, இவற்றின் முகம் சுத்தம். பசுக்களின் முதுகு சுத்தம். ஸ்த்ரீகளின் எல்லா அங்கங்களும் சுத்தமாம்.

मनुः— नित्यं शुद्धः कारुहस्तः पण्यं यच्च प्रसारितम् । ब्रह्मचारिगतं भैक्षं नित्यं मेध्यमिति स्थितिः ॥ नित्यमास्यं शुचि स्त्रीणां शकुनिः फलपातने । प्रस्रवे च शुचिर्वत्सः श्वा मृगग्रहणे शुचिः इति ॥ याज्ञवल्क्यः – कारुहस्तः शुचिः पण्यं भैक्षं योषिन्मुखं तथा इति ॥ योषिन्मुखं संभोगकाले शुचि ॥ तथा, पैठीनसिः – स्त्रीमुखं रतिसंसर्गे इति ॥ वसिष्ठात्रि बोधायन शातातप – स्त्रियश्वाः रतिसंसर्गे श्वा मृगग्रहणे शुचिः इति ।

மனு:- சில்பியின் கை எப்பொழுதும் சுத்தம். கடையில் வ்யாபாரத்திற்காக வைக்கப்பட்ட வஸ்து சுத்தம். ப்ரம்ஹசாரியை அடைந்த பிக்ஷாவஸ்து எப்பொழுதும் சுத்தமென்பது மர்யாதை. ஸ்த்ரீகளின் முகம் எப்பொழுதும் சுத்தம். பழத்தைக் கொத்தி

விழுத்துவதில் பக்ஷியும், பால் கறக்கும் போது கன்றும், ம்ருகத்தைப் பிடிப்பதில் நாயும் சுத்தம். யாக்ஞவல்க்யர்:- சில்பியின் கை சுத்தம். கடையிலுள்ள வஸ்து சுத்தம். பிக்ஷான்னம் சுத்தம். ஸ்த்ரீயின் முகம் சுத்தம். ஸ்த்ரீயின் முகம் ஸம்போக காலத்தில் சுத்தம். அவ்விதமே - பைடீநஸி:- ரதி ஸம்ஸர்க்கத்தில் ஸ்த்ரீயின் முகம் சுத்தம். வஸிஷ்டர், அத்ரி, போதாயனர், சாதாதபர்:- ஸ்த்ரீகள், ரதிஸம்ஸர்க்கத்திலும், நாய் ம்ருகங்களைப் பிடிப்பதிலும் சுத்தமாகியவர்கள்.

मनुः – मृत्तोयैः शोध्यते शोध्यं नदी वेगेन शुध्यति। रजसा स्त्री मनोदुष्टा सन्न्यासेन द्विजोत्तमः इति।। पराशरः– रजसा शुध्यते नारी विकलं या न गच्छति इति। विकलं - गर्भधारणम्।। चतुर्विंशतिमते – रजसा शुद्ध्यते नारी परं पुंसाभिगामिनी। तथाऽपि मुनिना प्रोक्तं प्रायश्चित्तं समाचरेत्।। कृच्छ्रार्धं ब्राह्मणी कुर्याद्विप्रस्य गमने सति इति। एतदनभ्यासविषयम्। स्मृत्यन्तरे – स्त्रीशुद्धिरर्थशुद्धिश्च यस्य नास्त्यपि कर्मवान्। स एव नरकं याति शीर्षच्छेदे कुतो भिषक् इति।

மனு:- அசுத்தமான த்ரவ்யம், மண்ணாலும், ஜலத்தாலும் சுத்தமாகிறது, நதீஜலம் வேகத்தால் சுத்தமாகிறது. மனதில் தோஷத்தை அடைந்த ஸ்த்ரீ ரஜஸ்ஸினால் சுத்தையாகிறாள். ப்ராம்ஹணன் ஸன்யாஸத்தால் சுத்தனாகிறான். பராசரர்:- எந்த ஸ்த்ரீ கர்ப்பதாரணமடையவில்லையோ அவள் ரஜஸ்ஸினால் சுத்தையாகிறாள். சதுர்விம்சதிமதத்தில்:- பர புருஷனைச் சேர்ந்த ஸ்த்ரீ, ரஜஸ்ஸினால் சுத்தையாவாள். ஆனாலும், ருஷி ப்ரோக்தமான ப்ராயச்சித்தத்தைச் செய்ய வேண்டும். ப்ராம்ஹண ஸ்த்ரீ, பரபுருஷனான ப்ராம்ஹணனைச் சேர்ந்தால் அரை க்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டும். இது ஒரு தடவை செய்த விஷயம். மற்றொரு ஸ்ம்ருதியில்:- ஸ்த்ரீ விஷயத்திலும், பண விஷயத்திலும் எவனுக்குச் சுத்தியில்லையோ, அவன் நற்கர்மங்களைச்

செய்பவனுயினும் நரகத்தை அவச்யம் அடைவான். தலையை வெட்டிய பிறகு, வைத்யன் எதற்கு!

मनुः—मक्षिका विप्रुषश्छाया गौरश्वः सूर्यरश्मयः । रजो भूर्वायुरग्निश्च स्पर्शे मेध्यानि सर्वदा ॥ मार्जारश्चैव दर्वी च मारुतश्च सदा शुचिः इति ॥ बोधायनः – आसनं शयनं यानं नावः पन्थास्तृणानि च । चण्डालपतितस्पृष्टं मारुतेनैव शुध्यति इति ॥ स्मृत्यर्थसारे– प्रतिमा लोहजाऽल्पोपहतिदूषिता भस्मनोद्धर्षणात् पञ्चगव्येन शुध्येत् । प्रतिमा पाषाणजाऽल्पोपहतिदूषिता वल्मीकमृत्तिकाजलैः प्रक्षालिता पञ्चगव्येन शुध्येत् । प्रतिमा विण्मूत्रश्वादिदूषिता चेत् पञ्चगव्यैः पञ्चाहमधिवास्य आप्लाव्य गोमूत्र गोमयवल्मीकमृत्तिकादिभिः सम्यक् प्रक्षाल्य पुनः प्रतिष्ठया शुद्ध्येत् । रत्नजानां पञ्चगव्यैः प्रक्षाल्य पुनः प्रक्षालनं कुर्यात् इति ।

மனு:- ஈக்கள், ஜலத்துளிகள், நிழல், பசு, குதிரை, ஸூர்யனின் கிரணங்கள், தூசி, பூமி, வாயு, அக்னி இவைகள் ஸ்பர்சத்தில் எப்பொழுதும் சுத்தங்களாம். பூனை, கரண்டி, காற்று இவைகள் எப்பொழுதும் சுத்தங்களேயாம். **போதாயனர்:**- ஆஸனம், படுக்கை, வாஹனம், ஓடங்கள், வழி, புற்கள் இவை சண்டாளர் பதிதர் இவர்களால் ஸ்பர்சிக்கப்பட்டாலும், காற்றினுலேயே சுத்தமாகின்றன. ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில் :- லோஹத்தாலுண்டாகிய தேவதா ப்ரதிமை ஸ்வல்ப அசுத்தியினுல் துஷ்டமானுல் சாம்பலினுல் தேய்த்து, பஞ்சகவ்யத்தால் அலம்பினுல் சுத்தமாகும். பாராங்கல்லால் உண்டாகிய ப்ரதிமை ஸ்வல்ப அசுத்தியால் துஷ்டமானுல் புற்றுமண், ஜலம் இவைகளால் அலம்பி பஞ்சகவ்யத்தால் சுத்தி செய்தால் சுத்தமாகும். ப்ரதிமை, மலம், மூத்ரம், நாய் இவைகளால் அசுத்தமானுல் ஐந்து நாள் முழுவதும், பஞ்சகவ்யத்தில் முழுகச் செய்து, ஸ்நானம் செய்வித்து, கோமூத்ரம்,

கோமயம், புற்றுமண் முதலியவைகளால் நன்றாய் அலம்பி, மறுபடி ப்ரதிஷ்டை செய்தால் சுத்தமாகும். ரத்னத்தாலுண்டாகியவைகளுக்குப் பஞ்சகவ்யங்களால் அலம்பி, மறுபடி அலம்புவதால் சுத்தி.

तत्रैव— बाल उपनयनादर्वाक् सदा शुद्धः । स्त्री च विवाहादर्वाक्, मूषिक मशक पतङ्ग मक्षिकाधान्यकीटगोहस्त्यश्वच्छागशुका जलस्थाः सर्वे जीवाः स्वभावशुद्धाः इति ।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலேயே:- சிறுவன் உபநயனத்திற்கு முன் எப்பொழுதும் சுத்தன். பெண் விவாஹத்திற்கு முன் எப்பொழுதும் சுத்தை. எலி, கொசு, விட்டில்பூச்சி, ஈ, தான்யத்திலுள்ள புழு, பசு, யானை, குதிரை, ஆடு, கிளி, ஜலத்தில் வாழும் ஜந்துக்கள் இவை எல்லாம் இயற்கையாலேயே சுத்தங்களாம்.

आह्निककाण्डः समाप्तः

ஆஹ்னிககாண்டம் முற்றிற்று.

வெளியிடுபவர் :

வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை

(கும்பகோணம்) சார்பில்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

1, சாலைத் தெரு, காஞ்சீபுரம் - 631 502.

விக்ருதி - 2010

Lasertypeset & Printed at :
V.K.N. ENTERPRISES
164, R.H. ROAD, MYLAPORE, CHENNAI-4, 9840217036